உ

வைத்யநாத தீக்ஷிதர் அவர்களால் இயற்றப்பட்ட

## ஸ்ம்ருதி முக்தாபலம்

என்னும் தர்ம சாஸ்த்ர க்ரந்தத்தின்

ஆருவது பரிச்சேதமாகிய

# ப்ராயச்சித்த காண்டம்

தமிழுரையுடன் கூடியது.

இஃது

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி அவர்களின்

ஆஜ்ஞையை முன்னிட்டு

வேத தர்மசாஸ்த்ர பரிபாலன ஸபையால்

கும்பகோணம்

சாரதா விலாஸ பிரஸ்ஸில்

அச்சிடப்பட்டு கும்பகோணத்தில் வெளியிடப்பட்டது.

விலை ] 1955 [ ரூ. ௬-0-0.

Copyright Registered.

# 𑌉𑌪𑍋𑌦𑍍𑌘𑌾𑌤.

॥ 𑌶𑍍𑌰𑍀𑌃 ॥

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍍𑌪𑌰𑌮𑌹𑌂𑌸𑌪𑌰𑌿𑌵𑍍𑌰𑌾𑌜𑌕𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌵𑌰𑍍𑌯
𑌶𑍍𑌰𑍀𑌮𑌚𑍍𑌛𑌂𑌕𑌰𑌭𑌗𑌵𑌤𑍍𑌪𑌾𑌦𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤
𑌶𑍍𑌰𑍀𑌕𑌾𑌞𑍍𑌚𑍀𑌕𑌾𑌮𑌕𑍋𑌟𑌿𑌪𑍀𑌠𑌾𑌧𑌿𑌪 𑌜𑌗𑌦𑍍𑌗𑍁𑌰𑍁
𑌶𑍍𑌰𑍀𑌮𑌚𑍍𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌶𑍇𑌖𑌰𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀𑌶𑍍𑌰𑍀𑌪𑌾𑌦𑍈𑌃
𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍇 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌃 ॥

𑌵𑍇𑌦𑌾𑌦𑌿𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍 𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑍍 𑌸𑍍𑌮𑍃𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌷𑍁 𑌅𑌨𑍇𑌕𑌧𑌾 𑌪𑍍𑌰𑌤𑍀𑌯𑌮𑌾𑌨𑌾𑌨𑍍 𑌅𑌧𑌿𑌕𑌾𑌰𑌿𑌭𑍇𑌦𑍇𑌨 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌨𑌿𑌰𑍂𑌪𑌣𑌪𑍂𑌰𑍍𑌵𑌸𑌰𑌂 𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑌿𑌤𑍁𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌫𑌲𑌾𑌖𑍍𑌯𑌂 𑌨𑌿𑌬𑌨𑍍𑌧𑌂 𑌕𑌾𑌣𑍍𑌡𑌷𑌟𑍍𑌕𑌾𑌤𑍍𑌮𑌕𑌂 𑌰𑌚𑌯𑌾𑌮𑌾𑌸𑍁𑌃 𑌶𑍍𑌰𑍀𑌵𑍈𑌦𑍍𑌯𑌨𑌾𑌥𑌦𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾 𑌇𑌤𑌿 𑌵𑌿𑌦𑌿𑌤𑌮𑍇𑌵 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌮𑌾𑌸𑍍𑌤𑌿𑌕𑌾𑌨𑌾𑌮𑍍 । 𑌤𑌤𑍍𑌰 𑌚 𑌚𑌰𑌮𑌂 𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑌾𑌦𑌿𑌨𑌾 𑌕𑍍𑌵𑌚𑌿𑌤𑍍 𑌵𑌿𑌹𑌿𑌤𑌾𑌕𑌰𑌣𑌨𑌿𑌷𑌿𑌦𑍍𑌧𑌾𑌚𑌰𑌣𑌾𑌦𑌿𑌜𑌨𑍍𑌯𑌪𑌾𑌪𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌕𑍇𑌨 𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌯𑌾 𑌵𑌿𑌹𑌿𑌤𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑍍 𑌬𑍋𑌧𑌯𑌚𑍍𑌚 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌕𑌾𑌣𑍍𑌡𑌂 𑌦𑍇𑌵𑌵𑌰𑍍𑌣𑌵𑌾𑌣𑍀𑌪𑌰𑌿𑌚𑌯𑌰𑌹𑌿𑌤𑌾𑌨𑌾𑌮𑌪𑌿 𑌸𑍌𑌹𑍃𑌦𑌤𑌯𑌾 𑌬𑍋𑌧𑌨𑌾𑌯𑌚 𑌦𑍍𑌰𑌾𑌵𑌿𑌡𑌭𑌾𑌷𑌾𑌨𑍁𑌵𑌾𑌦𑌸𑌨𑌾𑌥𑌂 𑌵𑍇𑌦𑌧𑌰𑍍𑌮𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌪𑌰𑌿𑌪𑌾𑌲𑌨𑌸𑌭𑌯𑌾 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌿𑌤 𑌮𑌸𑍍𑌤𑌕𑌣𑌿𑌯𑌾 𑌚𑌾𑌵𑌹𑍃𑌤𑌂 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍𑌕𑍃𑌤𑍍𑌯 𑌸𑌨𑍍𑌤𑍋𑌷𑌨𑌿𑌰𑍍𑌭𑌰𑌾𑌃 𑌸𑍍𑌮𑌃 ॥

𑌏𑌤𑌦𑍍𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌪𑌰𑌿𑌶𑍀𑌲𑌨𑍇𑌨 𑌸𑌮𑌵𑌗𑌤𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌃 𑌆𑌸𑍍𑌤𑌿𑌕𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌿𑌣 𑌏𑌵𑌂 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑍍𑌯𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌯 𑌚𑌿𑌤𑍍𑌤𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌸𑌂𑌪𑌾𑌦𑌨𑍇𑌨 𑌸𑌰𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌪𑌰𑌾𑌯𑌣𑌾𑌃 𑌤𑌸𑍍𑌯 𑌶𑍍𑌰𑍀𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑍌𑌲𑍀𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯 𑌕𑍃𑌪𑌯𑌾 𑌶𑍍𑌰𑍇𑌯𑌾𑌂𑌸𑌿 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍁𑌵𑌨𑍍𑌤𑍍𑌵𑌿𑌤𑍍𑌯𑌾𑌶𑌾𑌸𑍍𑌮𑌹𑍇 ॥

𑌵𑌿𑌜𑌯𑌾𑌬𑍍𑌦𑌸𑍍𑌥𑌾𑌨𑍇,
𑌶𑍍𑌰𑍀 𑌕𑌾𑌞𑍍𑌚𑍀𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑍇,
𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌸𑍍𑌯 𑌬𑌹𑍁𑌲𑌤𑍃𑌤𑍀𑌯𑌾.

𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌃.

முத்ரை.

ஸ்ரீ,

## ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய, ஸ்ரீமச்சங்கர பகவத்பாத ப்ரதிஷ்டித, ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீமச் சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்வாமிகளால் நாராயணஸ்மரணம் செய்யப்படுகிறது.

வேதம் முதலிய ப்ரமாணங்களால் ஸித்தித்துள்ளவைகளும், ஸ்ம்ருதி முதலியவைகளில் பல ப்ரகாரங்களால் தோன்றுகின்றவைகளுமான தர்மங்களை அதிகாரிகளுக்குத் தகுந்தபடி ப்ரமாணங்களை முன்னிட்டு நிர்ணயம் செய்வதற்கு ஸ்ம்ருதிமுக்தாபலம் என்னும் சிறந்த நிபந்த க்ரந்தத்தை ஆறு காண்டங்கள் (பிரிவு) உள்ளதாக ஸ்ரீ வைத்யநாத தீக்ஷிதரவர்கள் இயற்றினர் என்பது ஆஸ்திகர்களான எல்லோருக்கும் தெரிந்ததே. இதற்குள்ளடங்கிய, அறியாமையால் நேர்ந்துள்ள விதிக்கப்பட்ட கர்மங்களைச் செய்யாததாலும், மறுக்கப்பட்ட கர்மங்களைச்செய்வது முதலியதாலும் உண்டாகிய பாபங்களைப் போக்கும் தன்மையால், கட்டுப்பாட்டுடன் விதிக்கப்பட்ட தர்மங்களைத் தெரிவிக்கின்றதுமான ப்ராயச்சித்த காண்டத்தை ஸம்ஸ்க்ருத பாஷாபரிசயமில்லாதவர்களும் எளிதாக அறிந்துகொள்வதற்காகத் தமிழுரையுடன் கூடியதாய் வேத தர்மசாஸ்த்ர பரிபாலன ஸபையால் வெளியிடப்பட்டு நம் முன்னில் அளிக்கப்பட்டதைப் பார்த்து ஸந்தோஷமுள்ளவராகிறோம்.

இந்த க்ரந்தத்தைப் பரிசீலனம் செய்வதால் ப்ராயச்சித்தத்தின் உண்மைகளை அறிந்தவர்களாயுள்ள ஆஸ்திகர்கள் அவரவர்கள் அதிகாரத்திற்குரியபடி ப்ராயச்சித்த கர்மங்களை அனுஷ்டித்துச் சித்த சுத்தியை ஸம்பாதித்துக்கொள்வதால் ஸர்வேச்வரனை ஸ்ரீ சந்த்ர மௌளீச்வரனை ஆராதித்து, அவனது க்ருபையால் நன்மைகளை அடைய வேண்டுமென்று அநுக்ரஹிக்கின்றோம்.

முகாம்–ஸ்ரீகாஞ்சீ நகரம்,
ஜய ஸம், பங்குனி
க்ருஷ்ண த்ருதீயா.

நாராயண ஸ்மரணம்.

# முகவுரை

மிக ப்ரஸித்த வைதிக ச்ரேஷ்டராகிய ஸ்ரீ வை[illegible]தா அருளிச் செய்த "ஸ்ம்ருதி முக்தாபலம்" என்ற தர்மசாஸ்த்ர க்ரந்தத்தின் உயர்வு பற்றி ச்ராத்தகாண்ட முகவுரையில் விவரிக்கப்பட்டுள்ளது. இப்போது அந்த க்ரந்தத்தில் ஒருபாகமாகிய "ப்ராயச்சித்த காண்டம்" என்கிற பாகமானது வேத தர்மசாஸ்த்ர பரிபாலன ஸபையால் தமிழ் மொழி பெயர்ப்புடன் ப்ரசுரிக்கப் பட்டிருப்பதை ஆஸ்திக ஸமூஹத்தினர் ஸந்தோஷத்துடன் வரவேற்கிறார்கள். தற்காலம் நமது தர்ம தேசத்தில் ஸநாதன வைதிக தர்மங்களான வர்ணாச்ரம ஆசாரங்களுக்கு, விபரீதமான காலதேசாதி பலவித அஸந்தர்ப்பங்களால் பரம ஆஸ்திகர்களாலும் யதாவத்தாக அநுஷ்டிக்கமுடியாத, தவிர்க்கமுடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சாஸ்த்ர விதிகளையோ, நிஷேதங்களையோ யதாவத்தாக அநுஸரிக்க முடியாத ஆஸ்திகர்களுக்கு ப்ராயச்சித்தந்தான் பரிஹாரமாக அமைந்து அவர்களைக் காப்பாற்றி, சாஸ்த்ர வரம்பை மீறாதவர்களாகச் செய்கிறது. அந்தந்தத் தோஷங்களுக்கு விதிக்கப்பட்ட ப்ராயச்சித்தங்களைச் செய்து கொண்டுவிட்டால், அதனால் அவன் சுத்தனாகி பூர்ணாநுஷ்டானியாயும் ஆகி விடுகிறான். ப்ராயச்சித்தங்களின் கருணை நிறைந்த கார்யம் இதுவேயாகும். இந்த அநுக்ரஹ புத்தியுடன்தான் நமது ச்ருதி ஸ்ம்ருதிகள் ப்ராயச்சித்த உபதேசம் செய்ய முன்வந்தன.

## லௌகிக தண்டனை உதாஹரணம்.

வைதிக மதமானது ப்ராயச்சித்தங்களைக் காட்டியும், பயமுறுத்தியும், நிர்ப்பந்தித்தும் தர்மங்களை அநுஷ்டிக்க வற்புறுத்துவதால் அந்த மதத்தின் பல ஹீனமே வெளிப்படுவதாயும், மதத்தில் உயர்வும், ஸாரமும், ஹிதமும் இருந்தால் ஜனங்கள் தாமாகவே அதைப் பின்பற்றமாட்டார்களா? ப்ராயச்சித்த பீதி எதற்கு? என்று சிலர் வாதிப்பதை அறிவோம். உலக தத்துவத்தை அறியாத பாலிசவாதமே இது. வைதிக மதத்தில் ஸகல ப்ராணிகளும் க்ஷேமம் பெறக் கூடிய தத்வ ஹித புருஷார்த்தங்கள் அடங்கியிருப்பதால் யாவரும் தாமாகவே விரும்பி அதன் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்படுகிறார்களேயல்லது நிர்ப்பந்தமோ, பயமுறுத்தலோ காரணமில்லை.

உலகில் எந்த மத ஸ்தாபனங்களிலும், ராஜாங்கத்திலும், லௌகிக ஸ்தாபனங்களிலும், அவைகளில் சேர்ந்துள்ளவர்கள் அதனதன் சட்டதிட்டங்களுக்கும், வரையறைகளுக்கும் கட்டுப்பட்டே நடக்கவேண்டுமென்ற நியமம் இருக்கிறது. நியமத்தை மீறுகிறவர்களுக்கு அபராதம், தண்டனை, அல்லது பஹிஷ்காராதிகள் விதிக்கப்படுகின்றன.

## தண்ட நீதி பற்றி மநு.

ராஜாங்க உத்யோகங்களில் உறுதிமொழி கொடுத்துச் சேர்ந்திருப்பவர்கள் அதன் சட்டதிட்டங்களை மீறினால் தண்டனை விதிக்கப்படுகிறது. போலீஸிலோ, ராணுவத்திலோ சேர்ந்தவர்களுக்குத் தம் கடமைகளைச் செய்யாவிட்டாலும்,

சட்டதிட்டங்களை மீறினாலும் தண்டனையுண்டு. இன்னுமிதுபோல் தொழிற்சாலை, பாங்கு, பள்ளிக்கூடங்கள், ஸங்கங்கள், ஸமாஜங்கள் போன்ற ஸகல லௌகிக ஸ்தாபனங்களிலும் கட்டுப்பாட்டை மீறியவர்களுக்கும், கடமையைச் செய்யாதவர்களுக்கும் அந்தந்தக் குற்றங்களுடைய தன்மையை அனுஸரித்துத் தண்டனைகள் ராஜ நீதிகளில் விதிக்கப்படுகின்றன. தண்டனை பயமிருப்பதால் அவரவர்கள் தங்கள் தங்கள் கடமைகளை ஊக்கத்துடன் செய்கிறார்கள். மனு, தண்ட நீதியின் ஆவச்யகதையை வெகுவாக வற்புறுத்தியுள்ளார். தண்ட நீதியை ப்ரயோகிக்காவிடில் ராஜ்யம் வ்யவஸ்தையற்று அழிந்துவிடுமென்று 7-வது அத்யாயத்தில் விரிவாகச் சொல்லியுள்ளார்.

துர்லபோ ஹி ஶுசிர்நர: என்பதால் மனித ஸ்வபாவத்தில் சுத்தனாயிருப்பவன் துர்லபனென்றும், ஆதலால் அந்யாய வழியிலிருப்பவர்கள் மீது தண்டத்தை அவச்யம் ப்ரயோகிக்கவேண்டுமென்றும், அப்படிச் செய்தால் தண்ட பயத்தால் ப்ரஜைகள் ஸ்வதர்மாந் ந சலந்தி ச என்று ஸ்வதர்மத்திலிருந்து நழுவத் துணியமாட்டார்களென்றும் மனு கூறுகிறார். தண்ட பயத்தால் எல்லாம் அமைதியாக நடக்குமென்றும், தண்டத்தை ப்ரயோகிக்காவிடில் ராஜ்யத்தில் கீழ், மேல் என்ற வ்யவஸ்தை அழிந்துவிடுமென்றும் கூறுகிறார். பித்யேரந் ஸர்வஸேதவ: ||

இந்த 20-வது நாகரிக நூற்றாண்டில்கூட ஸகல தேசங்களும் பற்பலவித தண்டோபாயத்தின் பலத்தாலேயே ராஜ்யம் நடத்துவதைக் காண்கிறோம். ராஜாங்கம்மட்டுமல்ல, எல்லாவித ஸங்கங்களும், ஸமாஜங்களும் இந்த தண்ட உபாயத்தினாலேயே நடக்கின்றன. இந்தப் பாதுகாப்பு மிக அவச்யமாகிறது. ராஜாங்கத்திலும், ஸங்கங்களிலும் அங்கத்தினர்களாகச் சேருகிறவர்கள் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்படாமல் அவரவர் தம்தம் மனப்போக்கின்படி நடந்து வந்தால் அந்த ஸ்தாபனம் ஒரு க்ஷணம்கூட ஜீவித்திருக்கமுடியாதல்லவா!

## ப்ராயச்சித்தம் வைதிக தண்டனை.

இவ்வாறு மனித ஸங்கேதத்தால் ஏற்பட்ட ஸ்தாபனங்களிலேயே கட்டுப்பாட்டை மீறியவர்களுக்குத் தண்டனைவிதியிருக்கையில், பகவானாலேயே நியமிக்கப்பட்டவைகளாயும், ச்ருதி ஸ்ம்ருதி போன்ற உத்தம ப்ரமாணங்களால் விதிக்கப்பட்டவையாயுமுள்ள தர்மங்களையும், ஆசாரங்களையும் மீறுவோர்களுக்கு சாஸ்த்ரீயமான ப்ராயச்சித்த தண்டனை விதிக்கப்படுவது ந்யாயமே. பரம்பரையாக இன்ன வேதத்தை அநுஸரிப்பேனென்றும், இன்ன ருஷிகளின் கோத்ர ஸூத்ர தர்மங்களின்படி நடப்பேன் என்றும், தேவ, ப்ராம்ஹண, அக்னி ஸன்னிதியில் ப்ரதிஜ்ஞை செய்து உறுதியளித்த வைதிகன் அவைகளை மீறி, அந்தத் தர்மங்களைக் கைவிட்டால், அது தெய்வ ஆஜ்ஞையையும், சாஸ்த்ர ஆஜ்ஞையையும் மீறிய தோஷமாகிறது. இம்மாதிரி ஒவ்வொருவரும் தர்ம ஆசாரங்களை மீறி நடந்தால் அந்த மதம் எப்படி நிலைத்திருக்கும்! அந்த மதத்தில் ஸன்மார்க்க நெறி எப்படி நிலைக்கமுடியும்? ஆகையால் கட்டளையை மீறிய தோஷத்திற்காக வைதிக தண்டனையான ப்ராயச்சித்தத்தைச் செய்துகொள்ளும்படி சாஸ்த்ரங்கள் உபதேசித்தன. இது ந்யாயமே.

சாஸ்த்ரமென்று நியமங்களை மீறும் தோஷமானது பகவானுடைய ஆஜ்ஞையை மீறும் தோஷமென்று வைதிகமத ஸித்தாந்தமாகும் ஆகையால் அந்தத் தோஷங்களுக்குப் பரலோகத்தில் தண்டனை விதிப்பவன் பகவானே. ப்ராயச்சித்தங்களால் த்ருப்தியடைந்து பிறகு அநுக்ரஹிப்பவனும் பகவான்தான் என்று மனு முதலிய மஹர்ஷிகளின் நிர்ணயமாயிருக்கிறது.

## ப்ராயச்சித்தம் செய்துகொள்ளாவிட்டால் தோஷம்.

யாஜ்ஞவல்க்யர் கூறுகிறார்:—

விஹிதஸ்யாநநுஷ்டாநாந் நிந்திதஸ்ய ச ஸேவநாத் ।
நர: பதநம்ருச்சதி ।

"சாஸ்த்ர விஹிதத்தைச் செய்யாததாலும், சாஸ்த்ரத்தால் நிஷேதிக்கப்பட்ட அதர்மங்களைச் செய்வதாலும் மனிதன் ப்ரஷ்டனாகிறான்" அதாவது சாஸ்த்ர வழியிலிருந்து நழுவியவனாகிறான். ஆகையால் அந்தத் தோஷத்திற்காக அவன் ப்ராயச்சித்தத்தைக் கட்டாயமாகச் செய்துகொண்டு சுத்தியடையவேண்டும்.

சரிதவ்யமதோ நித்யம் ப்ராயச்சித்தம் விசுத்தயே ।

இங்கு "நித்யம்" என்று ஸ்ம்ருதி கூறுவதால் ப்ராயச்சித்தாநுஷ்டானம் கட்டாயமானதென்று ஞாபிக்கப்படுகிறது. இதை மிதாக்ஷரையில் விஜ்ஞானேச்வரர் தெளிவுபடுத்தியுள்ளார்.

'ப்ராயச்சித்தமகுர்வாணா: பாபேஷு நிரதா நரா:'

என்ற வசனத்தில் யாஜ்ஞவல்க்யர், பாபம் செய்யும் மனிதர்கள் ப்ராயச்சித்தம் செய்துகொள்ளாவிடில் பற்பல நரகங்களை அடைவதுடன் திர்யக் ப்ராணி ஜந்மத்தையும் அடைவதாக தோஷம் சொல்லியுள்ளார். ஆகையால் அந்தந்தத் தோஷங்களுக்கு விதிக்கப்பட்ட ப்ராய்ச்சித்தத்தைச் செய்துகொண்டால் தோஷியானவன் சுத்தனாகி, பரலோகத்தில் நரகாதிகளிலிருந்து மீளுவதுடன் பகவத் க்ருபையையும் பெற்று இஹலோகத்திலும் சிஷ்ட ஜனங்களால் கொண்டாடப்படுகிறான். ஸ்தேயம் அதாவது திருட்டு முதலிய பாபம் செய்தவர்கள் அந்தத் தோஷத்திற்காக அரசனால் தண்டிக்கப்பட்டுவிட்டால் அந்த ராஜ தண்டனையாலேயே அவர்கள் திருட்டு தோஷத்திலிருந்து விடுபட்டு பரிசுத்தராகி விடுகிறதாக நமது ராஜ தர்ம நீதி கூறுகிறது.

ராஜபி: த்ருததண்டாஸ்து க்ருத்வா பாபாநி மாநவா: ।
நிர்மலா: ஸ்வர்கமாயாந்தி,

இந்தத் தர்ம தத்வத்தை ஸ்ரீ ராகவன் வாலிக்கு உபதேசித்தார். இந்த உதாஹரணம் கொண்டே வைதிக ப்ராயச்சித்த தண்டனையின் தத்வத்தை அறியலாம். இதையெல்லாம் அறிந்து ஆஸ்திகர்கள் சீர்திருந்தவும், ஜாக்கிரதையாயிருக்கவும் இந்தப் புஸ்தகமும் இதன் மொழிபெயர்ப்பும் மிகுந்த ப்ரயோஜனம் உள்ளதாகும்.

## பாப ஸமூஹங்கள்.

மனிதன் தனது வாழ்க்கையில், தெரிந்தும், தெரியாமலும் செய்யும் குற்றங்கள், அதாவது தோஷங்கள் அபரிமிதமானவை. அவைகளனைத்தையும் குறிப்பிடுவதோ, அவைகளுக்கு ப்ராயச்சித்தம் விதிப்பதோ ஸாத்யமல்ல. ஆயினும் ஸ்ம்ருதிகள் பெரும்பாலும் இந்தக் கார்யத்தைச் செய்திருக்கின்றன. நிபந்தன காரர்களும் விரிவுக்கு அஞ்சாமல் உலக க்ஷேமார்த்தமாக அவைகளைப்பற்றி விசார, நிர்ணயாதிகள் பெரும்பாலும் செய்திருக்கிறார்கள். ப்ரம்ஹஹத்யை முதலாக, ஈ, எறும்பு, கிருமி வரையிலுள்ள ப்ராணி வதங்கள், ஹிம்ஸைகள், அவைகளிலுள்ள அநேக பிரிவுகள், உள் பிரிவுகளான தோஷங்கள், ஸுராபானம் முதல் வெகு சிறிய வஸ்து வரையில் பான, ஆஹார தோஷங்கள், ஸ்வர்ண ஸ்தேயம் முதலாக பற்பலவித திருட்டுக் குற்றங்கள், மாத்ருகமனம் முதலாக கணக்கற்ற வ்யபிசார தோஷங்கள், வாங்கக்கூடாதவைகளை வாங்குதல், விற்கக் கூடாதவைகளை விற்பது, சாப்பிடக்கூடாதவைகளைச் சாப்பிடுதல் போன்ற அபரிமிதமான தோஷங்களைக் குறிப்பிட்டு அவைகளுக்காக ப்ராயச்சித்த விதிகளையும் சுத்திகளையும் சாஸ்த்ரம் விதித்துள்ளது. 'ஸத்யம் வத', 'தர்மம் சர', 'அஹரஹ: ஸந்த்யாமுபாஸீத' இத்யாதி விதிகளை அதிக்ரமித்ததற்கும் விரிவாக ப்ராயச்சித்தம் கூறப்பட்டுள்ளது.

## பாபங்களின் பிரிவும், பலாபலமும்.

இந்தப் பாபங்கள் அல்லது தோஷங்களில் சில வெகு ப்ரபலமாயும், சில நடுத்தரமாயும், சில சிறியவையாயுமிருப்பதால் அததற்கு ஏற்றபடி ப்ராயச்சித்தங்களிலும், குரு, லகு என்ற விபாகம் செய்து ப்ரயோகிக்க விதி காணப்படுகிறது. பாபங்களில் மஹாபாதகம், அதிபாதகம், பாதகம், உபபாதகம், ஸாதாரண பாபம் என்று பிரிவினை செய்யப்பட்டிருக்கிறது. மஹாபாதகங்கள் என்பவை ப்ரம்ஹஹத்யா, ஸுராபான, ஸ்வர்ணஸ்தேய, குருதல்பகமனாதிகள் இவைகளுடன் சில ப்ரபல பாபங்கள். "ஸமபாதகம்" என்ற பெயரால் ப்ரம்ஹஹத்யைக்கு ஸமமமாக சிலவும், ஸுராபானாதிகளுக்கு ஸமமாக சிலவும் பொறுக்கப்பட்டு அவைகளும் மஹாபாதகப் பிரிவில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அதிபாதகமும் பெரிய தோஷத்தில் சேர்ந்ததே. பாதகம் சிறிது குறைவான தோஷமுள்ளது. உபபாதகம், ஸாதாரண பாபம் இவை வெகு சிறியவை. தோஷமும் ஸ்வல்பமானதே. இந்த மஹாபாதகாதிகளில் எந்தெந்தத் தோஷம் எந்தெந்தப் பிரிவில் சேர்ந்ததென்பதை சாஸ்த்ரங்களே பாகுபாடு செய்து விட்டன. நாமாக கல்பிக்க முடியாது.

இவைகளில் பஞ்சமஹாபாதகம், ஸமபாதகம், அதிபாதகம் என்ற பிரிவில் சேர்ந்த பாபங்களைச் செய்தவர்கள் "பதிதர்கள்" அதாவது ப்ரஷ்டர்களாகிறார்கள். அவர்கள் ஸந்த்யாதி தர்மங்களை அநுஷ்டிக்க அர்ஹதையற்றவராவதுடன் பரலோகத்தில் நரகத்தையும் அடைகிறார்கள். இவர்களுடன் போஜனாதி கலப்புக்கள் செய்துகொள்ளக்கூடாது. இதைக் கௌதமாதிகள்

த்விஜாதிகர்மப்யோ ஹாநி: பதநம், பரத்ர சாஸித்தி: ।

என்ற ஸூத்ரங்களால் தெளிவாக்கியுள்ளனர். ஆதலால் மஹாபாதகியாயும் அதிபாதகியாயுமுள்ளவர்கள் பதிதர்களாகையால் சாஸ்த்ரீய ப்ராயச்சித்த சுத்தி

ஏற்படும் வரையில் விலக்கத்தக்கவர்கள். ஆனால் பாதகம், உபபாதகம் ஆகிய பிரிவுகளில்* சேர்ந்த பாபங்களைச் செய்தவர்களுக்குப் பாதித்யம், அதாவது ப்ரஷ்டத்வம் ஏற்படுகிறதில்லை. 'நரகமோ, பஹிஷ்காரமோ கிடையாதென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ப்ராயச்சித்தம் மாத்ரம் செய்துகொள்ளவேண்டும்.

## ஸம்ஸர்க்க தோஷம் கலியில் இல்லை.

ப்ரம்ஹஹத்யாதி பஞ்சமஹா பாதகங்களைச் செய்தவனுடன் ஒருவன் கலப்புச் செய்தால் அந்த ஸம்ஸர்க்க பாபத்திற்கும் ப்ரம்ஹஹத்யா ப்ராயச்சித்தமே சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கலியுகத்தில் ஸம்ஸர்க்க தோஷம் கிடையாதென்றும் அதாவது பாபம் செய்தவனுக்குப் போல் ஸம்ஸர்க்கிக்கு ஸமமான ப்ராயச்சித்தம் வேண்டியதில்லையென்றும், லகுவான வேறுவித சுத்தி ப்ராயச்சித்தமே போதுமென்றும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

ஸம்ஸர்க்க தோஷ: பாபேஷு

என்பதால், பாபங்களில் ஸம்ஸர்க்க தோஷம் கலியில் கிடையாதென்று வசனம் கூறுகிறது.

கர்த்தாரம் த்யஜேத் கலௌ யுகே என்பதால் நேரிடையாகப் பாபம் செய்தவனையே விலக்கவேண்டுமென்றும், அவனுடன் கலப்பு செய்துகொண்டவனை விலக்கவேண்டியதில்லை யென்றும் நிர்ணயம். கலப்பு செய்துகொண்டவனுக்கு அதேமாதிரி தோஷம் கிடையாதென்று தாத்பர்யமேயல்லது, இவனும் வேறு லகுவான ப்ராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டியதுதான் என்று தீக்ஷிதீயத்தில் நிர்ணயிக்கப்படுவதை அறியவும்.

## புத்திபூர்வகம், அபுத்தி பூர்வகம்.

இந்தப் பாபங்கள் புத்திபூர்வகம், அபுத்தி பூர்வகம் என்று இருவகைப்பட்டவை. பாபத்தை நன்றாக அறிந்து, அதைச் செய்யவேண்டுமென்கிற இச்சையுடன் செய்யப்படும் தோஷமானது புத்திபூர்வகமாகும். அதாவது நன்கு தெரிந்து, வேண்டுமென்றே செய்யப்படுகிற பாபங்களாகும். தெரியாத்தனத்தாலும், தவறுதலாகவும் செய்யப்படுகிற பாபங்கள் அபுத்தி பூர்வகங்கள். இதை மிதாக்ஷரீ தெளிவாக்கியுள்ளது.

ஸ்வதந்த்ர ப்ரவ்ருத்தி: விஷயஜ்ஞானகாமநாப்யாம் நியதா ।
தயோரந்யதராபாவேபி தஸ்யா அஸம்பவாத் ॥ என்று.

பாபத்தைச் செய்கையில் அதில் ஸ்வதந்த்ரமாக ப்ரவ்ருத்திப்பதில், புத்தி பூர்வகமாகச் செய்கையில் விஷயஞானமும், இச்சையும் சேர்ந்திருக்கவேண்டும். இவ்விரண்டில் ஒன்று இல்லாவிட்டால்கூட அது புத்திபூர்வகமாகாது.

இருட்டில் கம்பம் அல்லது மரம் என்ற ப்ராந்தியால் ஒரு ப்ராம்ஹணனை ஒருவன் வதம் செய்துவிடுவதாக வைத்துக்கொள்ளுவோம். இது புத்திபூர்வக பாபமாகாது. ப்ராம்ஹணனைக் கொல்லுகிறோம் என்ற விஷயஞானம் அவனுக்கு இல்லை. காமனையும் இல்லை. ப்ராம்ஹணனைக் கொல்லவேண்டுமென்ற இச்சை

யும் அவனுக்கு இல்லை. ஆகையால் இது புத்திபூர்வகமானதன்று. ம்லேச்சாதிகளால் பலாத்காரமாகக் கோவதம் செய்யும்படி தூண்டப்படுகிறான். அல்லது பலாத்காரமாக ஸுராபானம் செய்யும்படி நிர்ப்பந்திக்கப்படுகிறான். இதுவும் புத்திபூர்வக பாபமில்லை. ஸுராபானம் செய்கிறோம், கோவதம் செய்கிறோம் என்ற விஷயஞானம் இருந்தபோதிலும் இங்கு காமனை அல்லது இச்சை இல்லை. ஸுராபானம் செய்யவேண்டுமென்கிற இச்சை அவனுக்கு இல்லை. ஆதலால் இதுவும் புத்திபூர்வகமில்லை. அபுத்தி பூர்வகம்தான்.

## அபுத்தி பூர்வகம், லகு தோஷம்.

ஆகையால் மஹாபாதகாதிகளில் சொல்லப்பட்ட ப்ரபல ப்ராயச்சித்தங்கள் முற்றிலும் புத்திபூர்வக விஷயத்தில்தான் விதிக்கப்பட்டதாகும். புத்திபூர்வகமல்லாத ப்ரம்ஹஹத்யா, ஸுராபானாதிகளில் தோஷம் ப்ரபலமில்லை. அந்தப் பாபங்களில் ப்ரஷ்டத்வம், நரகம், ஸமூஹவிலக்கு முதலியவைகள் ஏற்படுவதில்லை என்று ஸித்தாந்தம். அபுத்தி பூர்வக பாபங்களில் தோஷமும், ப்ராயச்சித்தமும் லகுவானதே என்பது தர்மசாஸ்த்ர நிர்ணயமாயிருக்கிறது. இங்கு தீக்ஷிதீயத்தில் இது விசாரிக்கப்பட்டிருக்கிறது.

## ரஹஸ்ய பாப ப்ராயச்சித்தம்.

மேற்கண்ட மஹாபாதகாதி, சிறிய பாபம் வரையில் உள்ளவைகளில் ஒருவன் ரஹஸ்யமாக ஒருவருக்கும் தெரியாமல் ஒன்றைச் செய்திருந்தால், அவன் ப்ராயச்சித்தத்தையும் ரஹஸ்யமாகவே செய்துகொள்ளலாமென்று அநுமதிக்கப் பட்டிருக்கிறது. பரிஷத் கூட்டி அனுமதி கேட்கவேண்டியதில்லை. இந்த ரஹஸ்ய ப்ராயச்சித்தத்தால் அவன் சுத்தனாகிவிடுகிறான்.

𑌯𑌶𑍍𑌚𑌾𑌪𑌂 𑌕𑍃𑌤𑌵𑌾𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌕𑍇𑌨 𑌕𑍇𑌨 𑌵𑌿𑌦𑌿𑌤𑌂 𑌨 𑌜𑌾𑌤𑌂
𑌤𑌚𑍍𑌚 𑌰𑌹𑌸𑍍𑌯𑌂 । 𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌰𑌹𑌸𑍍𑌯𑍇𑌵 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 ॥

என்று தீக்ஷிதர் நிர்ணயிக்கிறார். ப்ரமாணவச்யர்களான ஆஸ்திகர்களுக்கு இது பெரிய உபகாரமாகும்.

## ப்ராயச்சித்தங்களின் தன்மையும், ஸமூஹக் கலப்பும்.

இனி ப்ராயச்சித்தங்களின் தன்மையையும், ப்ராயச்சித்த ப்ரயோஜனங்களைப் பற்றியும், சாஸ்த்ராபிப்ராயத்தையும், தீக்ஷிதர் நிர்ணயத்தையும் சுருக்கி இங்கு எடுத்துரைப்பது ஆவச்யகமாகும். பாபங்களுக்கு இரண்டு சக்தியுள்ளது. ஒன்று பரலோகத்தில் நரகாதிகளைக் கொடுப்பது. மற்றொன்று இஹலோகத்தில் சிஷ்ட ஜனங்களுடன் கலப்பு செய்வதைத் தடுப்பது. இதுபோல் ப்ராயச்சித்தங்களுக்கும் இரண்டு சக்தியிருக்கிறது. ஒன்று பரலோகத்தில் நரகாதிகள் ஏற்படாமல் தடுப்பது. மற்றொன்று இஹலோகத்தில் பஹிஷ்காரத்தைத் தடுத்து கலப்பு ஏற்படச் செய்வது. ஸாதாரண சிறிய பாபங்கள், உபபாதக பாபங்கள் முதலியவைகளுக்கு அவையவைகளுக்கான ப்ராயச்சித்தத்தைச்செய்து கொண்டுவிட்டால் அதனால் இஹ-பர சுத்தி உடனேயே ஏற்பட்டுவிடுகிறது.

உபபாதகாதிகள் புத்திபூர்வகங்களாகச் செய்யப்பட்டாலும் ப்ராயச்சித்தத்தால் தோஷம் நீங்கிவிடுவதாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. மஹாபாதக அதிபாதகங்களில் சிறிது சர்ச்சையிருக்கிறது.

## எந்தப் பாபத்திற்கும் ப்ராயச்சித்தமுண்டு.

அபுத்தி பூர்வகமாகத் தவறுதலால் செய்யப்பட்ட ப்ரம்ஹஹத்யா, ஸுராபானுதிகளில் பாதித்யம் (ப்ரஷ்டத்வம்) கிடையாதாகையால் ப்ராயச்சித்தம் செய்துகொண்டவுடன் சுத்தி ஏற்பட்டு கலப்பு முதலியவைகளும் ஸந்தேஹமின்றி ஏற்பட்டுவிடுகின்றன.

ஆனால் புத்திபூர்வகமாகச் செய்யப்படும் ப்ரம்ஹஹத்யா, ஸுராபான, ஸ்வர்ணஸ்தேயாதி பாபங்களைச் செய்தவன் பதிதனுகிருன். அவனுக்கு ப்ராயச்சித்தம் உண்டா? செய்துவைக்கலாமா?

இவ்வளவு பெரிய பாபிக்கு ப்ராயச்சித்தமே கிடையாது. அர்ஹதையில்லை என்று சில ருஷிகள் கூறினர்கள். வேறு சில ருஷிகள் புத்திபூர்வக மஹாபாதகங்களுக்கும் ப்ராயச்சித்தம் உண்டென்றும், செய்துவைக்கலாமென்றும் அபிப்பிராயப்பட்டார்கள். இதில் வ்யவஸ்தை செய்யப்பட்டது. ப்ராயச்சித்தமே கிடையாதென்று சொன்ன ருஷிகளுக்கு ப்ராயச்சித்தத்தால் பரலோக நன்மை ஏற்படாதென்பதில் நோக்கமென்று சொல்லப்பட்டது. அதாவது ப்ராயச்சித்தம் செய்துகொண்டாலும் நரகம் போகாதென்று கருத்து. ஆதலால் எவ்வளவு பெரிய புத்திபூர்வக மஹா பாபங்களிலும் ப்ராயச்சித்தம் உண்டு என்பது ஸித்தாந்தம். தன் மட்டில் அவன் சுத்தனுகிருன்.

## ப்ராயச்சித்தம் செய்துகொண்டபிறகும் கலப்பு செய்யக்கூடாதவை.

சில பாபங்களில் ப்ராயச்சித்தம் செய்துகொண்டாலும் அதனுல் அவனுக்கு சிஷ்ட ஜனக் கலப்பு இல்லாமல் விலக்கியே வைக்கவேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

பாலஹத்தி செய்தவன், க்ருதக்னன், சரணுகதனைக் கொன்றவன், ஸ்த்ரீ ஹத்தி செய்தவன் ஆகிய பாபிகளுக்கு ப்ராயச்சித்தம் செய்தாலும் பிறகு அவர்களுடன் கலக்காமல் விலக்கியே வைக்கவேண்டும். ஸன்யாஸி, நைஷ்டிகன் முதலியவர்கள் ஸ்த்ரீ ஸம்ஸர்க்காதி பாபம் செய்துவிட்டால் ப்ராயச்சித்தம் மட்டும் செய்துவைக்கலாமேயல்லது வேறு கலப்பு செய்துகொள்ளக்கூடாது என்று ப்ரம்ஹ ஸூத்ரத்திலும், பாஷ்யங்களிலும் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. இம்மாதிரி இன்னும் பல உண்டு.

## குரு-லகு ப்ராயச்சித்தங்கள்.

இந்த ப்ராயச்சித்தங்கள் ப்ராஜாபத்யாதி க்ருச்ரங்களெனவும், சாந்த்ராயணம், உபவாஸம், பஞ்சகவ்யம், கூச்மாண்ட ஹோமம், வேதபாராயணம், ப்ராணுயாமம், காயத்ரீ ஜபம் போன்ற பலவிதங்கள், அந்தந்தப் பாபங்களுக்கு

இன்ன ப்ராயச்சித்தமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. ப்ராயச்சித்தம் விதிக்கப்படாத தோஷங்களுக்கு பரிஷத் அதைக் கல்பனை செய்து விதிக்க அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

प्रायश्चित्तं प्रकल्प्यं स्यात् यत्र चोक्ता न निष्कृतिः ॥

தோஷிகளுக்கு இந்த ப்ராயச்சித்தங்களை ப்ரயோகிக்கையில் குரு-லகு என்ற பாகுபாடு செய்தும், தேசம், காலம், வயது, சக்தி முதலிய ஸந்தர்ப்பங்களைக் கவனித்தும் ப்ரயோகிக்க வேண்டுமென்று ஸ்ம்ருதிகாரர்கள் நியமித்துள்ளார்கள். சரீர பலத்தினாலோ, தேச கால அஸந்தர்ப்பத்தினாலோ, சாந்த்ராயணாதி தபஸ்ஸுகளைச் செய்யச் சக்தியற்றவன்மீது அவைகளைத் திணிக்காமல், அதற்கு அடுத்தபடியுள்ள கௌண கல்பங்களை நியமித்து ப்ராயச்சித்தம் செய்து வைக்கவேண்டுமென்று கருணை மிகுதியால் மஹர்ஷிகள் வழிவிட்டிருக்கிறார்கள். அதுவும் இக் க்ரந்தத்தில் ஆங்காங்கு கூறப்பட்டிருக்கிறது.

## ப்ராயச்சித்த ப்ரதிநிதிகள்

பாபங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள ப்ராயச்சித்தங்களை இந்தக் கலியுகத்தில் யதாவத்தாக ஒருவன் அநுஷ்டிப்பது ஸாத்யமில்லை இதனால் மஹர்ஷி பராசரர் கலியுகத்திற்கென்றே லகுவான ப்ராயச்சித்தங்களை உபதேசித்துள்ளார். மனு-யாஜ்ஞவல்க்யாதி மற்ற ஸ்ம்ருதிகாரர்களும் கடின ப்ராயச்சித்தங்களை விதித்து விட்டு அசக்தர்கள் விஷயத்தில், கௌண கல்பங்களையும், ஆபத்கல்பங்களையும் விதித்துள்ளார்கள். இக்காலத்தில் அவைகளை அநுஷ்டித்து சுத்திபெறலாம். சாந்த்ராயணம் ஒரு மாஸம் வரையில் செய்யவேண்டிய ப்ரயோகமாகும். இது போல் மற்ற க்ருச்ரங்களும் பலநாள் வ்ரதமிருந்து செய்யக்கூடியவை. க்ருச்ரங்களுள் லகுவாக நினைக்கப்படும் ப்ராஜாபத்யமே 12 நாள் வ்ரதம் இருக்க வேண்டியது. இவைகளையெல்லாம் இக்காலத்தில் யதாவத்தாக அநுஷ்டிக்கும் அதிகாரி ஒருவன்கூட இருக்க ஸாத்யமில்லை.

ஆகையால் மஹர்ஷிகள் கருணை நிறைந்த ஹ்ருதயத்துடன் இக்கால ஸாத்யமும், அநுஷ்டான ஸாத்யமுமான வழிகளையும் உபதேசித்தார்கள். ப்ராயச்சித்த தபஸ்ஸுகளில், த்ரவ்ய தானத்தை (பணத்தைக் கொடுப்பது) ஓர் ப்ரதிநிதியாக சாஸ்த்ரகாரர்கள் சேர்த்திருப்பது மிகுந்த உபகாரமானது. தன் கைப் பணத்தைத் தானம் செய்வது ஓர் தபஸ் என்றே ச்ருதியும் கூறுகிறது.

एतद्वै [illegible] तप उग्रतरं यः स्वं ददातीति ॥

லௌகிக ராஜநீதி தண்டனைகளிலும் பண அபராதம் விதிப்பது இக்காலத்தில் எல்லாத் தேசங்களிலும் நடந்துவருகிறது.

இக்காலத்தில் பலநாள் ஸாத்யமான தபஸ்ஸுகளை ப்ராயச்சித்தமாக அநுஷ்டிக்க முடியாதாகையால், ஜபம், ஹோமம், உபவாஸம், ப்ராணாயாமம், த்ரவ்ய தானம் போன்ற லகு வழிகளைச் செய்து சுத்தியடையலாமென்று சாஸ்த்ரம் இருக்கிறது.

## எதற்கும் ப்ராஜாபத்யம் ப்ரயோகிக்கலாம்.

ப்ராஜாபத்யம் என்ற க்ருச்ரத்தை ஸகல ப்ராயச்சித்தங்களுக்கும் ப்ரதிநிதியாக (பதிலாக) அநுஷ்டிக்கும்படி சாஸ்த்ரம் அநுக்ரஹித்திருக்கிறது. உசநஸ் கூறுகிருர்.

> யத்யுக்ரம் யச்ச வா நோக்ரம் மஹாபாதக நாஶநம் ।
> ப்ராஜாபத்யேந க்ருச்ச்ரேண ஶுத்யதே நாத்ர ஸம்ஶய: ॥

மஹாபாதகாதி பாபங்களில்கூட ப்ராயச்சித்தம் விதிக்கப்பட்டிருந்தாலும் ப்ராயச்சித்தமே விதிக்கப்படாத இடங்களிலும் ப்ராஜாபத்ய க்ருச்ரத்தை அநுஷ்டித்து சுத்தியடையலாமென்று இதில் கூறப்படுகிறது. வேறு சில ருஷிகளும் இதை அநுமதித்துள்ளார்கள். இது மிதாக்ஷரையில் ஸ்பஷ்டம்.

ஆகையால் ப்ரம்ஹஹத்யா, ஸுராபாநாதிகளான மஹா பாபங்களில் ப்ரபல ப்ராயச்சித்தங்கள் விதிக்கப்பட்டிருந்தாலும் அவைகளுக்குப் பதிலாக ப்ராஜாபத்ய க்ருச்ரத்தை அநுஷ்டிக்கலாமென்று இதில் விதிக்கப்படுகிறது. அந்த மஹாபாதக ப்ராயச்சித்தம் எவ்வளவு பெரிதோ அதற்கு ஸமமாயிருக்கும்படி ப்ராஜாபத்யத்தைக் கணக்கு செய்து பெருக்கி அநுஷ்டிக்கலாமென்று மிதாக்ஷரையில் விஜ்ஞாநேச்வரர் விரிவாகக் கூறியுள்ளதைப் பார்க்கலாம். ஆகையால் எவ்வளவு பெரிய ப்ராயச்சித்தத்திலும் ப்ராஜாபத்யம் ப்ரதிநிதியாக விதிக்கப்பட்டிருப்பது இக்காலத்தில் விசேஷ உபகாரமாகும்.

## ப்ராஜாபத்யத்திற்கும் ப்ரதிநிதிகள்.

ப்ராஜாபத்ய க்ருச்ரமும் இக்காலத்தில் முக்ய கல்பமாக அநுஷ்டிக்க முடியாததே. ஆகையால் அதற்கும் ப்ரதிநிதியாக ருஷிகள் சில அநுகல்பங்களை உபதேசித்திருக்கிருர்கள்.

> ப்ராஜாபத்யக்ரியாஶக்தௌ தேநும் தத்யாத் விசக்ஷண: ।
> தேநோரபாவே தாதவ்யம் தத்துல்யம் வாபிவா ॥

என்பதால் ப்ராஜாபத்யத்திற்குப் பதிலாக ஒரு கோ (பசு) கொடுக்கலாம். பசு கொடுக்க சக்தியில்லாவிட்டால் அதன் மூல்யமாக ஒரு நிஷ்கம் அளவுள்ள ஸ்வர்ணம் கொடுக்கவும்.

கோமூல்யம் வ யதாஶக்தி தேயம் என்று தீக்ஷிதீயம். ஒரு நிஷ்க அளவு கொடுக்க சக்தியில்லாவிட்டால், அதில் பாதியாவது, அதற்கும் சக்தியில்லையாகில் கால்பங்காவது கோமூல்ய ப்ரதிநிதியாகக் கொடுத்தால் போதும். இதனுல் ப்ராஜாபத்யம் முக்ய கல்பமாக அநுஷ்டித்த பலன் கிடைத்துவிடுகிறது. சாஸ்த்ரம் இதைப் பூர்ணமாக அங்கீகரித்துவிட்டது. இந்த அநுகல்ப ப்ராஜாபத்யம் இக்காலத்தில் ஸகல சிஷ்டர்களாலும் அநுஷ்டிக்கப்படுகிறது. ப்ராஜாபத்ய ப்ரதிநிதியாக இன்னும் சில அநுகல்பங்களும் சொல்லப்படுகின்றன. தீக்ஷிதரும் அவைகளைக் கடைசியில் நிரூபித்துள்ளார்.

பத்தாயிரம் காயத்ரீ ஜபம், பனிரெண்டு ப்ராம்ஹண போஜனம், ஸமுத்ர காமினியான நதியில் ஸ்நானம் இவைகளும் ப்ராஜாபத்ய ப்ரதிநிதிகள். இவைகளில் ஒன்றை அநுஷ்டிக்கலாம். வேறு சில ருஷிகள் இருநூறு ப்ராணாயாமம், திலஹோமம் ஆயிரம் காயத்ரியால் செய்வது, உபவாஸம், வேதபாராயணம் முதலியவைகளையும் ப்ராஜாபத்ய ப்ரதிநிதியாகச் சொன்னார்கள்.

இவைகளில் ஏதாவது ஒன்றைக் கால தேச ஸந்தர்ப்பத்திற்கும், தோஷத்திற்கும் ஏற்றபடி செய்யவேண்டும்.

## ஸாதாரண பாப ப்ராயச்சித்தங்கள்.

தெரிந்தும் தெரியாமலும் செய்யப்படும் பற்பல தோஷங்களுக்கு லகுவான சுத்திமுறைகளைச் செய்துகொண்டு பரிசுத்தியடையலாம். ஸ்நானம், ஸந்த்யோபாஸனம், ப்ராணாயாமம், உபவாஸம், பஞ்சகவ்ய ப்ராசனம் இவைகளை மனஸ் த்ருப்திக்காக ப்ராயச்சித்த ரூபமாக அடிக்கடி செய்துகொண்டால் பாபங்கள் நீங்கும்.

இரவில் செய்த பாபம் காலை ஸந்த்யாவந்தனத்தாலும், பகலில் செய்த பாபங்கள் ஸாயம் ஸந்த்யாவந்தனத்தாலும் நீங்கிவிடுவதாக சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. ஆகையால் ஸ்நான, ஸந்த்யா, ப்ராணாயாமாதிகளை அநுஷ்டித்து வந்தால் பற்பல பாபங்கள் விலகுகின்றன.

யத³ஹ்நா பாபமகார்ஷம், யத்³ராத்ர்யா என்று மந்த்ரம்.

## பஞ்சகவ்ய மஹிமை.

பொதுவாக அநேக பாபங்களுக்கு, முக்யமாக அபோஜ்ய போஜனாதிகளுக்கும் பஞ்சகவ்யம் உயர்ந்த ப்ராயச்சித்தமாக விதிக்கப்படுகிறது. பஞ்சகவ்யத்தில், கோமயம், கோமூத்ரம் இரண்டும் ப்ரபல சுத்திகர வஸ்துக்கள். ஆயுர்வேத க்ரந்தங்கள் கோமய கோமூத்ரங்களாலாகிய உயர்ந்த ஔஷதங்களைப் போதிக்கின்றன. கோமய, கோமூத்ரங்களுக்கு விஷக்ருமி நாசகர சக்தி இருப்பதாக நவீன விஞ்ஞானிகளும் சொல்லத் தொடங்கியிருக்கிறார்கள். மேற்குத் திசை ஆங்கிலாதி தேசங்களில் சிலவற்றில் டாக்டர்கள் கோமயத்தைச் சில ரோகங்களுக்கு மருந்தாக உபயோகிக்கிறார்களென்று பத்திரிகையில் பலரும் படித்திருக்கலாம். நமது ருஷிகளும் பஞ்சகவ்ய மஹிமையைப்பற்றி வெகுவாகப் புகழ்ந்துள்ளார்கள். அடிக்கடி பஞ்சகவ்யத்தை உபயோகிப்பது ஸகல பாப நிவ்ருத்தி ஹேதுவாகிறது.

## முக்யாதிகாரி லகுவை அநுஷ்டிக்கக்கூடாது.

சாஸ்த்ரங்களில் ருஷிகள் பரம கருணையால் இக்காலத்திய அசக்த அதிகாரிகளைக் குறித்து ப்ராயச்சித்த விதிகளில் லகு கல்பங்களையும் ப்ரதிநிதி கல்பங்களையும் உபதேசித்துள்ளார்கள். ஆனால் முக்ய கல்பமாக அநுஷ்டிக்க சக்தியுள்ள அதிகாரிகள் அந்த லகு வழியில் போவதை சாஸ்த்ரம் அனுமதிக்கவில்லை.

ப்ரபு⁴: ப்ரத²மகல்பஸ்ய யோ(அ)நுகல்பேந வர்ததே ।
ந ஸாம்பராயிகம் தஸ்ய து³ர்மதே: வித்³யதே ப²லம் ॥

என்பதால் சக்தாதிகாரிகள் அசக்த கல்பத்தில் போனால் தோஷம் கூறப்படுகிறது. ஆகையால் தெய்வ வஞ்சனையும், ஆத்ம வஞ்சனையும் செய்யாமல் ஒவ்வொருவனும் தான் அசக்தாதிகாரிதானா என்பதை நிர்ணயித்துக்கொள்ளவேண்டும். பரிஷத்தும் இதை நிர்ணயிக்கவேண்டும்.

## பச்சாத்தாபம் வேண்டும்.

தோஷம் செய்தவனுக்கு ப்ராயச்சித்தம் செய்துகொள்ளுமுன் தனது அகார்யத்தில் அநுதாபம், பச்சாதாபம் மன: பூர்வகமாக உண்டாகவேண்டும். இரண்டாவதாக ப்ராயச்சித்தம் செய்துகொள்ளஎண்ணம் வேண்டும். மறுபடியும் அத்தகைய பாபங்களைச் செய்வதில்லையென்ற ஒழிவும், உறுதியும் வேண்டும். பிறகுதான் அவன் ப்ராயச்சித்தாதிகாரியாவான். தான் பாபம் செய்துவிட்டதாக மனம் நொந்து பகவானிடம் மன்னிப்புக் கேட்டு இனி இம்மாதிரி செய்வதில்லையென்று உறுதி கொடுத்து சரணாகதி செய்கிறவனே உண்மையான ப்ராயச்சித்தாதிகாரி என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

## க்ரியா ப்ராயச்சித்தங்கள்.

ப்ராயச்சித்தத்தில் க்ரியா ப்ராயச்சித்தமென்று ஒரு பிரிவு உண்டு. அதாவது நாம் செய்யும் ச்ரௌத, ஸ்மார்த்த, விவாஹ, உபநயன, ச்ராத்தாதி கர்மாக்களில் மந்த்ர, தந்த்ர, லோபாதி தோஷங்களுக்காகச் செய்யவேண்டிய ப்ராயச்சித்தங்களாகும். இந்த ப்ராயச்சித்த பிரிவு பெரிது. ஆவச்யகமானது. ஆனால் இந்தப் பொது நிபந்தனக் க்ரந்தங்களில் பெரும்பாலும் அவைகள் குறிப்பிடப்படவில்லை. அவைகளை அந்தந்த ஸூத்ராதிகளிலிருந்து அறிந்து கொள்ளவேண்டும்.

## தீக்ஷிதீயத்தின் விசேஷம்.

இவ்வாறு பாபங்கள், ப்ராயச்சித்தங்கள் இவைகளின் ஸ்வரூபத்தைப்பற்றிப் பொதுவாக வைதிகமத ஸித்தாந்தங்களையும் ஸ்ரீ தீக்ஷிதர் அவைகளைப்பற்றிச் செய்துள்ள நிர்ணயங்களையும் ஆஸ்திகர்கள் அறிந்துகொள்ள அவை இங்கு ஸங்க்ரஹித்துக் கூறப்பட்டன. ப்ராயச்சித்த விதிகள் பற்றி ஹேமாத்ரி போன்ற ப்ரபல நிபந்தனங்கள் பல இருந்தபோதிலும் தீக்ஷிதர் கடைசியான நிபந்தனக்காரராகையால் எல்லா நிபந்தனங்களின் அபிப்ராயங்களையும் விசாரித்து நிர்ணயிக்க ஸௌகர்யம் பெற்றிருந்ததால் இந்த நிபந்தனம் விசேஷத் தன்மை வாய்ந்தது. வைதிக மதத்திலுள்ள ஆஸ்திகர்கள் விஷயத்தில் நமது சாஸ்த்ரமும் முன்னோர்களும் எவ்வளவு கருணை வைத்து ப்ராயச்சித்தங்களை உபதேசித்துள்ளார்களென்பதை ஒவ்வொருவரும் அறியவேண்டும் அநுஷ்டான சீலர்களான ஆஸ்திகர்களுக்கு ப்ராயச்சித்த ஞானம் மிகவும் ஆவச்யகமானது. ஆதலால் ஒவ்வொருவரும் இக் க்ரந்தத்தைப் படித்து பூர்ணாநுஷ்டானிகளாக விளங்கி தெய்விக வாழ்க்கை நடத்தி பகவத் ப்ரீதியை அடையும்படி ப்ரார்த்திக்கப்படுகிறது.

அக்னிஹோத்ரம்,
**கோபாலதேசிகாசார்யார்.**

# ப்ராயச்சித்த காண்டம்.

## விஷய ஸூசிகை.


| | | |
|---|---|---|
| | | பக்கம். |
| ப்ராயஶ்சித்த சப்தத்தின் பொருள் | ... | 2 |
| ப்ராயஶ்சித்தத்திற்கு அதிகாரியின் நிரூபணம் | .... | 3 |
| ப்ராயஶ்சித்தம் செய்துகொள்ளாவிடில் இருபத்தொரு நரகங்கள் | .... | 4 |
| ரஹஸ்யமாகச் செய்யப்பட்ட பாபத்தின் பலன் | .... | 6 |
| நரகத்தை யநுபவித்த பிறகு பசு பக்ஷி முதலிய ஜந்மங்கள் | .... | 6 |
| ஒன்பதுவித பாபங்கள் | .... | 17 |
| ப்ரம்ஹஹத்யை முதலிய மஹாபாதகங்கள் | ... | 18 |
| ப்ரயோஜகன் முதலியவர்க்குப் பலனில் தாரதம்யம் | ... | 19 |
| உபகாரத்திற்காக ப்ரவ்ருத்தித்த விஷயத்தில் தோஷமில்லை | ... | 22 |
| அதிபாதகங்கள் | .... | 24 |
| ப்ரம்ஹஹத்யைக்கு ஸமமான பாதகங்கள் | .... | 28 |
| ஸுராபானத்திற்கு ஸமமான பாதகங்கள் | ... | 30 |
| பொன்னைத் திருடுவதற்கு ஸமமான பாதகங்கள் | ... | 32 |
| குருதல்பத்துக்கு ஸமமான பாதகங்கள் | ... | 33 |
| உபபாதகங்கள் | ... | 34 |
| ஸங்கரீகரணம் முதலியவை | ... | 39 |
| புத்திபூர்வமாயும், அபுத்திபூர்வமாயும் செய்த பாபங்களைப்பற்றிய விசாரம் | ... | 41 |
| ப்ரகாசமாயும், ரஹஸ்யமாயும் செய்யப்பட்ட பாபத்தின் ப்ராயஶ்சித்த விசாரம் | .... | 48 |
| பரிஷத் (ஸபை) தின் லக்ஷணம் | .... | 50 |
| பரிஷத்திற்கு யோக்யரல்லாதவர் | .... | 55 |
| ப்ராயஶ்சித்தம் விதிக்கும் இடம் | .... | 57 |
| ப்ரம்ஹஹத்தியின் ப்ராயஶ்சித்தம் | ... | 59 |
| கொல்வதற்காக முயன்றால் | ... | 67 |
| க்ஷத்ரியன் முதலியவரால் செய்யப்பட்ட ப்ரம்ஹஹத்திக்கு | .... | 72 |

| | | |
|---|---|---|
| ஆயுதம் தரிப்பதைப்பற்றி விசாரம் | .... | 77 |
| பசுவைக் கொன்றதற்கு ப்ராயஸ்சித்தம் | ... | 79 |
| மற்ற ப்ராணிகளைக் கொன்ருல் | .... | 91 |
| ஸுராபானம் முதலியவைகளுக்கு | ... | 98 |
| விஷ்டை, மூத்ரம் முதலியவைகளைப் பக்ஷித்ததற்கு | ... | 108 |
| சண்டாளனின் குடத்தில் உள்ள ஜலத்தைப் பருகினுல் | .... | 110 |
| சண்டாளனின் குட்டை முதலியவைகளின் ஜலத்தைப் பருகுவதில் | .... | 111 |
| உச்சிஷ்டத்தைப்பற்றியதும், அதன் மறுப்பும் | ... | 112 |
| விலக்கப்பட்ட பாலைப் பருகுவதில் ப்ராயஸ்சித்தம் | .... | 114 |
| தங்கம் முதலியதைத் திருடியதற்கு | ... | 117 |
| க்ஷத்ரியர் முதலியவர்களுக்குத் திருட்டில் | ... | 123 |
| வெள்ளியைத் திருடியதற்கு | ... | 124 |
| தாம்ரத்தைத் திருடியதற்கு | ... | 125 |
| வெண்கலம் முதலியவைகளைத் திருடியதற்கு | ... | 126 |
| தனம், தான்யம் முதலியவைகளைத் திருடியதற்கு | ... | 126 |
| பூமியை அபஹரிப்பதில் | ... | 128 |
| வஸ்த்ரம் முதலியவைகளைத் திருடியதற்கு | ... | 129 |
| ஆடு முதலியவைகளைத் திருடியதற்கு | ... | 129 |
| ஸாளக்ராமம் முதலியவைகளையும் பூஜை ஸாமான்களையும் அபஹரிப்பதில் | ... | 131 |
| மாத்யஸ்தம் செய்து தனத்தை க்ரஹித்தால் | ... | 132 |
| குருதல்பகமனத்தில் | ... | 135 |
| ஸவர்ணையான ஸ்திரீயைச் சேர்ந்த விஷயத்தில் | ... | 141 |
| ஸம்பந்தி முதலியவரின் ஸ்த்ரீகமனத்தில் | ... | 143 |
| பூ[illegible]சயாய் இருப்பவள் கமனத்தில் | ... | 144 |
| ஜ[illegible] பதத்தால் கர்ப்போத்பாதன விஷயத்தில் | ... | 145 |
| சண்டாளீ முதலியவர்களைச் சேர்ந்தால் | ... | 146 |
| துருஷ்கீ புல்கஸீ கமனத்தில் | ... | 148 |
| நடி முதலியவர்களைச் சேர்ந்தால் | ... | 149 |
| பதினுறுவிதமான க்ராம சண்டாளீ கமனத்தில் | ... | 151 |
| ப்ராம்ஹ சண்டாளீ கமனத்தில் | ... | 154 |
| ரஜஸ்வலையைச் சேர்ந்தால் | ... | 155 |
| விதவையைச் சேர்ந்தால் | ... | 157 |
| தாஸீ முதலியவர்களைச் சேர்ந்தால் | ... | 159 |

முக மைதுனம் செய்தால் ... 161
பசு முதலியவைகளைச் சேர்ந்தால் ... 161
ரேதஸ்ஸை வெளியிட்டால் ... 162
ப்ராம்ஹசாரிக்கு ரேத:ஸ்கலநத்தில் .... 164
ருதுகாலத்தை அதிக்ரமித்தால் ... 166
ஸ்த்ரீ, பாலன், வ்யாதிஸ்தன் இவர்களுக்குப் பாதி ... 16.
சபதத்தை மீறினால் ... 167
க்ஷத்ரியன் முதலியவர் ப்ராம்ஹண ஸ்த்ரீயைச் சேர்ந்த விஷயத்தில் ... 169
ஸ்த்ரீக்குப் பர புருஷனைச் சேருவதில் ... 171
கர்ப்ப பாதத்தில் ப்ராம்ஹண ஸ்த்ரீக்கு ... 173
வ்யபசாரிணீயான ஸ்த்ரீகளை த்யாகம் செய்வதைப் பற்றியது ... 174
காரணமில்லாமல் பர்த்தா பார்யை இவர்கள் ஒருவரையொருவர் பரித்யாகம் செய்தால் .... 176
ஆபத்தை யடைந்தவளுக்குப் பலாத்காரமாய் சூத்ரன் முதலியவர்களுடன் சேர்க்கை நேர்ந்தால் ... 177
விதவைக்கு கர்ப்பம் உண்டானால் த்யாகமே ... 177
ஸந்தேஹப்பட்டுள்ள வ்யபிசார விஷயத்தில் ஸ்த்ரீகளுக்குச் செய்யவேண்டிய முறை .... 178
பந்துக்கள் இல்லாததால் சென்றாலும் த்யாகத்திற்கு மறுப்பு .... 180
திரும்பி வருவதற்கு எதிர்பார்க்கவேண்டிய காலவரையறை ... 181
ஸ்வதந்த்ரமாகச் சென்றவளை த்யாகம் செய்யாவிடில் பர்த்தா முதலியவர்க்கு .... 182
அடி முதலியதால் வெளியேறியவளுக்கு த்யாகத்தைப் பற்றிய விசாரம் .... 183
வ்யபிசாரிணீ வீட்டில் ப்ரவேசித்தால் சுத்தியின் ப்rகாரம் ... 184
ப்ராம்ஹண ஸ்த்ரீக்கு சண்டாளன் முதலியவர்களைச் சேர்ந்த விஷயத்தில் ... 186
ப்ராம்ஹணிக்கு ம்லேச்சன், ரஜகன் முதலியவருடன் சேருவதில் ... 189
சேர்க்கைக்கு மஹாபாதகத் தன்மையைப்பற்றிய விசாரம் .... 190

பாபகர்மத்திற்கே பதிதத் தன்மைக்குக் காரணத் தன்மையை நிரூபித்தல் ... 191
கலியுகத்தில் மஹாபாதகி ஸம்ஸர்க்கத்திற்குப் பாபத்திற்கு மட்டில் காரணத்தன்மை ... 192
கோசர்மக்ஷேத்ரலக்ஷணம் .... 196
பொய்யான அபவாதத்தில் ... 196
ப்ராம்ஹணனைத் தடி முதலியதால் ஓங்கினல் .... 200
ப்ராம்ஹணனை அவமதித்தால் .... 201
ப்ராம்ஹணனை அடிப்பது முதலியதில் ... 202
குரு, பிதா முதலியவர்களை அதிக்ஷேபம் செய்வதில் ... 203
பதனீயமான ஸமுத்ரயாத்ரை முதலியதில் .... 205
துஷ்டர்களை ஸேவிப்பதில் ... 206
சூத்ர ஸேவையில் ... 206
அசுத்திகரங்களான பாபங்களுக்கு ... 207
அபிசாரம், சாபம் முதலியவைகளில் .... 208
கூலியால் அத்யயனம் செய்வித்தல், அத்யயனத்தைப் பெறுதல் இவைகளில் ... 211
கற்ற வேதத்தை மறந்தவனுக்கு .... 213
ஆச்ரமம் இல்லாமல் இருப்பதில் .... 214
ஐம்பதுவயதுக்குமேல் விவாஹத்தின் நிஷேதம் ... 215
விவாஹம் ஆனவனுக்கு மறுபடி விவாஹமானல் .... 215
ஸகோத்ரை முதலியவர்களின் விவாஹத்தில் .... 216
பரிவித்தி முதலியவர்களுக்கு .... 218
ஒட்டகை முதலியதுடன் கூடிய வாஹனத்தில் ஏறியதற்கு .... 220
கழுதை முதலியதில் ஏறினல் .... 221
சிறைச்சாலையில் வஸித்ததற்கு ... 222
குக்ராமத்தில் வஸிப்பதற்கு .... 223
துர்த்தேசங்களுக்குச் சென்றல் ... 223
நாய், நரி முதலியவை கடித்தால் ... 224
சரீரத்தில் புழு உண்டானல் .... 230
துர்ப்ராம்ஹணரின் வீட்டில் புஜிப்பதில் .... 232
பாபாக நிவ்ருத்தன் முதலியவரின் லக்ஷணங்கள் ... 233
அரசன் முதலியவரின் அன்னத்தைப்புஜித்தால் .... 235
புளித்தது முதலியவைகளைப் பக்ஷிப்பதில் ... 240

வ்யதீபாதம் முதலியதில் புஜிப்பதில் ... 241
பதினாயிரம், ஆயிரம் இந்தப்போஜனங்களில் .... 242
தீர்க்க ஸத்ர போஜனத்தில் .... 243
சூத்ர ஸத்ரத்தில் புஜித்தால் .... 243
சூத்ரன் வேசீ முதலியவர்களின் வீட்டில் தானாகப் பாகம் முதலியதைச் செய்து சாப்பிடுவதில் .... 244
கூட்டத்தாரின் போஜனத்தில் ... 244
விலைக்கு வாங்கிய அன்னத்தைப் புஜிப்பதில் .... 245
யாகத்தில் அன்னத்தைப் புஜிப்பதில் .... 246
ஸ்நானம் செய்யாமல் புஜித்தால் ... 247
அசுத்தனாயுள்ள காலத்தில் புஜிப்பதில் .... 248
பழமையான அன்னத்தைப் புஜிப்பதில் .... 249
சோற்றுவடாம், உளுந்துவடாம் முதலியவைகளைப் புஜித்தால் ... 250
பாயஸம், எள் சேர்ந்த பதார்த்தம் இவைகளைப் புஜிப்பதில் கால நியமம் .... 251
வ்ராத்யன், குஷ்டரோகி முதலியவர்களின் அன்னத்தைப் புஜித்தால் ... 252
சவம் உள்ளிருக்கும் க்ராமத்தில் புஜித்தால் ... 254
சந்த்ர ஸூர்ய க்ரஹணத்தில் புஜிப்பதில் ... 254
உடைந்த பாத்ரத்தில் புஜிப்பதில் ... 255
ரஜஸ்வலை சமைத்த அன்னத்தைப் புஜிப்பதில் .... 256
நிஷித்ததினத்தில், இருமுறை புஜிப்பதிலும், ப்ரம்ஹ யஜ்ஞம் முதலியதைச் செய்யாவிடினும் .... 257
அதனதன் காலத்தில் கர்ப்பாதானம் முதலியதைச் செய்யாவிடில் ... 258
வெந்நீரில் ஸ்நானம் செய்வதில் ... 260
யஜ்ஞோபவீதம் இல்லாமல் போஜனம் செய்தால் .... 261
சிகை, யஜ்ஞோபவீதம் இவைகள் தவறினால் ... 261
போஜனகாலத்தில் தும்மல், கொட்டாவி, அபானவாயு விடுதல் இவைகளில் ... 262
சிவ நிர்மால்யத்தைப் புஜிப்பதில் .... 263
ஸாளக்ராமம் முதலியதுடன் சேர்ந்திருந்தால் ப்ராயஶ்சித்தம் இல்லை ... 264
பத்னீ, புத்ரன், தம்பி இவர்களுடன் சேர்ந்து புஜிப்பதில் ... 265

நீலவஸ்த்ரத்தைத் தரிப்பதற்கு நிஷேதம் .... 266
நீலவஸ்த்ரம் தரித்துப் புஜிப்பதில் .... 267
பராந்ந போஜனத்திலும், பக்ஷபாதமாய்
பரிமாறுவதிலும் ... 268
நவச்ராத்தம் முதலியவைகளில் புஜிப்பதில் .... 269
ப்ராம்ஹசாரி ச்ராத்தம் புஜித்தால் ... 272
க்ஷத்ரியன் முதலியவரின் ச்ராத்தத்தில் புஜிப்பதில் ... 273
ஸம்ஸ்காரத்திற்கு அங்கமான நாந்தீ ச்ராத்தத்தில்
புஜிப்பதற்கு ... 274
ச்ராத்த சேஷ அந்நத்தைப் புஜிப்பதில் நிஷேதம் .... 275
சௌளம் முதலியதில் அந்நத்தைப் புஜிப்பதில்
நிஷேதம் .... 277
விற்கக்கூடாததை விற்பது, சக்ரவட்டி முதலியதால்
ஜீவிப்பதில் ... 279
கடன் முதலியதைச்செய்து வ்ரதம் முதலியதைச்
செய்வதின் நிஷேதம் ... 285
ப்ராம்ஹணன் முதலியவரை விற்பது, புத்ரன், பத்னீ,
கன்யகை, வேலைக்காரி நித்யகர்மம் முதலியது
இவைகளை விற்பதில் .... 286
வேதம், ஸ்ம்ருதி முதலியவைகளையும், ஸாளிக்ராமம்
முதலியவைகளையும் விற்பதில் ... 289
ஜலம், அக்னி முதலியவைகளில் மரிப்பதற்காக
முயற்சித்துப் பிறகு திரும்பினால் ... 290
ஸந்யாஸத்திலிருந்து நழுவுவதில் .... 295
தற்கொலை செய்துகொண்டவனின் சவத்தைச்
சுமப்பது முதலியதில் ... 298
பொய் சொல்லுவதில் ... 301
பொய்பாக நான்கு வர்ணத்தாரை வதம் செய்வதாக
ஆணையிட்டால் ... 302
ச்ரௌதாக்னியை விடுவதில் .... 306
நாஸ்திகத்தன்மைக்கு .... 309
ஒரே பங்க்தியில் பேதமாகப் பரிமாறுவதில் .... 310
பங்க்திக்கு அர்ஹரல்லாதவரின் பங்க்தியில் புஜிப்பது,
பதிதன் முதலியவருடன் பேசுவது, ஜலத்தில்
மூத்ரமல த்யாகம் செய்வது, இவைகளில் ... 311

யஜ்ஞோபவீதம் இல்லாமல் மல மூத்ரம் விஸர்க்கம்
செய்வது, ஆசமனம் செய்யாமல் ஜலபானம் செய்வது .... 312
புரசு மரத்தின் பலகையில் படுப்பது ... 313
ச்ராத்தத்தில் வரிக்கப்பட்டவன் காலத்தை
அதிக்ரமித்தால் ... 314
க்ஷத்ரியர் முதலியவரை அபிவாதனம் செய்தால் .... 314
சூத்ரன் வேதவாக்யத்தைக் கேட்பது முதலியதில் ... 315
ப்ரதிக்ரஹத்தைப்பற்றிய விசாரம் ... 315
ஸ்வல்பமான த்ரவ்யத்தையும், ரத்னம், வஸ்த்ரம், பசு
முதலியவைகளை ப்ரதிக்ரஹித்தால் ... 320
துலாபுருஷன் முதலியதை ப்ரதிக்ரஹித்தால் ... 321
ஹிரண்யகர்ப்ப ப்ரதிக்ரஹத்தில் ... 326
ப்ரம்ஹாண்டகட ப்ரதிக்ரஹத்தில் .... 329
...ல்பதருப்ரதிக்ரஹத்தில் .... 331
...பசுக்களை ப்ரதிக்ரஹிப்பதில் ... 334
...செய்யப்பட்ட காமதேனுவை
ப்ரதிக்ரஹிப்பதில் .... 336
...யப்பட்ட குதிரையை ப்ரதிக்ரஹிப்பதில் 338
...ப்பட்ட குதிரையுள்ள ரதத்தை
ப்ரதிக்ரஹிப்பதில் ... 339
...சய்யப்பட்ட யானையை ப்ரதிக்ரஹிப்பதில் 340
...யை ப்ரதிக்ரஹிப்பதில் .... 342
...ரதிக்ரஹிப்பதில் .... 344
...சக்ர ப்ரதிக்ரஹத்தில் ... 345
...பகக்கொடி ப்ரதிக்ரஹத்தில் ... 346
ஸப்தஸாகர ப்ரதிக்ரஹத்தில் .... 347
தோலினால் செய்யப்பட்ட பசுவின் ப்ரதிக்ரஹத்தில் .... 347
மஹாபூத கட ப்ரதிக்ரஹத்தில் .... 349
அதிபாதகிகளுக்கு ... 353
உபபாதகிகளுக்கு ... 353
ஸங்கரீகரணம் முதலியதற்கு ... 354
சொல்லப்படாத ஸாதாரணமான எல்லாப்
பாபங்களுக்கும் ... 355

ரஹஸ்ய பாபத்திற்கு ... 358

ரஹஸ்ய பாபங்களுக்கு ஸாதாரணமான ப்ராயஶ்சித்தம் ... 359

ரஹஸ்யத்தில் செய்த ப்ரம்ஹஹத்யை முதலிய பாபங்களுக்குத் தனியாகச் சொல்லப்பட்ட ப்ராயஶ்சித்தம் .... 368

ரஹஸ்ய ஸுராபானம் முதலியவைகளில் ... 372

உபபாதகங்களில் ரஹஸ்ய விஷய ப்ராயஶ்சித்தம் ... 375

ப்ராஜாபத்ய க்ருச்ர லக்ஷணம் ... 375

பாத க்ருச்ரங்களுக்கு வர்ணபேதத்தைக் கொண்டு வ்யவஸ்தை .... 379

பாதிக்ருச்ரமும், முக்கால் க்ருச்ரமும் ... 379

அதி க்ருச்ர லக்ஷணம் ... 383

க்ருச்ராதி க்ருச்ரத்தின் லக்ஷணம் .... 385

தப்த க்ருச்ர லக்ஷணம் ... 385

ஸாந்தபன க்ருச்ர லக்ஷணம் ... 386

மூன்று விதமான மஹாஸாந்தபன க்ருச்ர லக்ஷ... .... 387

பராக க்ருச்ர லக்ஷணம் .... 388

பர்ண க்ருச்ர லக்ஷணம் .... 388

பலக்ருச்ரம் முதலியதின் லக்ஷணம் ... 389

வாருண ஸ்த்ரீ, ஸௌம்ய க்ருச்ரங்களின் லக்ஷணம் ... 390

துலாபுருஷ க்ருச்ர லக்ஷணம் ... 392

அகமர்ஷண க்ருச்ர லக்ஷணம் .... 393

தைவத க்ருச்ர லக்ஷணம் ... 393

யாவக க்ருச்ர லக்ஷணம் ... 395

ப்ரஸ்ருதி யாவக க்ருச்ர லக்ஷணம் ... 395

சாந்த்ராயண க்ருச்ர லக்ஷணம் ... 397

வபனம் முதலிய நியமங்களின் க்ரமம் ... 399

வேறு விதமாய் சாந்த்ராயணம் மூன்று விதம் ... 401

ஐந்து விதமான சாந்த்ராயணங்கள் .... 401

சாந்த்ராயணத்தில் கபளத்தின் பரிமாணம் .... 402

சாந்த்ராயண பலத்தின் நிரூபணம் .... 403
வ்ரதத்தை ஆரம்பிக்கும் ப்ரகாரம் ... 403
ஸங்கல்பிக்கப்பட்ட நியமத்தை அனுஷ்டிக்காவிடில்
பாபம் ... 404
ப்ரம்ஹ கூர்ச்சத்தின் ஸ்வரூபமும் அதன்
ப்ரமாணமும் ... 405
கோமூத்ரம் முதலியவைகளுக்கு மற்றொரு அளவு .... 407
ப்ரம்ஹ கூர்ச்சவிதியில் காலவிசேஷமும்
தேசவிசேஷமும் ... 408
ப்ராஜாபத்ய க்ருச்ரம் முதலியதற்கு ஸமமாயுள்ளவை ... 409
சாந்த்ராயணம் முதலியதற்கு ஸமமானவைகள் ... 412
மஹாநதிகளின் எண்ணிக்கை ... 413
வேதபாராயணம் முதலியதற்குப் புருஷர்களை
அனுஸரித்து வ்யவஸ்தை ... 415

உ

𑌶𑍍𑌰𑍀𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑍇 𑌨𑌮𑌃 ॥

𑌵𑍈𑌦𑍍𑌯𑌨𑌾𑌥𑌦𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑌵𑌿𑌰𑌚𑌿𑌤𑍇 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌫𑌲𑍇

𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌕𑌾𑌣𑍍𑌡𑌃 ॥

* 𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌚𑌰𑌣𑌾𑌮𑍍𑌭𑍋𑌜𑌮𑌿𑌲𑌿𑌨𑍍𑌦𑌮𑌨𑌸𑌷𑍍𑌟𑍁𑌤𑌃 ।
𑌵𑍈𑌦𑍍𑌯𑌨𑌾𑌥𑌾𑌸𑍂𑌰𑌿𑌃 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌸𑌂𑌗𑍃𑌹𑍍𑌯 𑌭𑌾𑌷𑌤𑍇 ॥

---

உ

ஸ்ரீ பரமாத்மனே நம:

# வைத்யநாத தீக்ஷிதரால் இயற்றப்பட்ட ஸ்ம்ருதிமுக்தாபலத்தில்

# ப்ராயச்சித்த காண்டம்.

ஸ்ரீ ராமனின் திருவடித் தாமரைகளில் லயித்துள்ள மனமாகிய வண்டையுடைய வைத்யநாத தீக்ஷிதர் என்பவர் ப்ராயஸ்சித்தத்தைச் சுருக்கிச் சொல்லுகிறார்.

𑌅𑌥 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌕𑌾𑌣𑍍𑌡𑌮𑌾𑌰𑌭𑍍𑌯𑌤𑍇 ॥

இனி ப்ராயஸ்சித்த காண்டம் ஆரம்பிக்கப்படுகிறது. [இதற்கு முன் ஐந்து காண்டங்களால் சொல்லப்பட்ட விஷயங்கள் வர்ணாச்ரமிகளுக்கு ஆவச்யகமே யாகும். ஆதலால் அவைகள் சொல்லப்பட்டன. முற் காண்டங்களில் சொல்லியபடி தர்மங்களை அனுஷ்டிப்பவர்க்கு ப்ரதிஷித்த கர்மங்கள் ஏற்பட்டால், அவைகளால் ஏற்படும் தோஷங்களைப் பரிஹரித்துக்கொள்ளாத வரையில் அவர்களது ச்ரேயஸ்ஸுகள் தடைப்படுமாகையால், அவைகளுக்குப் பரிஹாரம் செய்யவேண்டியதும் ஆவச்யகமாக உள்ளது. அவைகளைப் பரிஹரிக்கும் விதிகளை மஹர்ஷிகள் ஆங்காங்கு விவரித்துள்ளனர். அவைகளை ஒரேயிடத்தில் அறிந்துகொள்வதற்கு ஸுலபமான வழியாகும்படி ஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள் பற்பல

---

* 𑌅𑌯𑌂 𑌶𑍍𑌲𑍋𑌕𑌃 𑌬𑌹𑍁𑌷𑍁 𑌕𑍋𑌶𑍇𑌷𑍁 𑌨 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 ॥

𑌪𑍍𑌰𑌾𑌯𑍋 𑌨𑌾𑌮 = 𑌤𑌪𑌃, 𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 = 𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌃 । 𑌅𑌨𑍁𑌷𑍍𑌠𑌿𑌤𑍇𑌨 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌵𑌾𑌰𑍍𑌷𑌿𑌕𑌾𑌦𑌿𑌨𑌾 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌪𑌾𑌪𑌂 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌤 𑌇𑌤𑌿 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌸𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌵𑍍𑌰𑌤𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌤𑌪𑌃 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍍 ॥

𑌤𑌥𑌾𑌽𑌙𑍍𑌗𑌿𑌰𑌾𑌃—

'𑌪𑍍𑌰𑌾𑌯𑍋 𑌨𑌾𑌮 𑌤𑌪𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌨𑌿𑌶𑍍𑌚𑌯 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌤𑌪𑍋𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑌿𑌹𑍋𑌚𑍍𑌯𑌤𑍇' 𑌇𑌤𑌿 ॥ 𑌤𑌚𑍍𑌚 𑌵𑌿𑌹𑌿𑌤𑌾𑌕𑌰𑌣𑌾𑌦𑌿𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌵𑌨𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿 𑌚𑍋𑌦𑌨𑌾𑌨𑍍𑌨𑍈𑌮𑌿𑌤𑍍𑌤𑌿𑌕𑌮𑍍 ॥

𑌤𑌥𑌾 𑌚 𑌬𑍃𑌹𑌸𑍍𑌪𑌤𑌿𑌃—

'𑌵𑌿𑌹𑌿𑌤𑌸𑍍𑌯𑌾𑌨𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌾𑌨𑍍𑌨𑌿𑌨𑍍𑌦𑌿𑌤𑌸𑍍𑌯 𑌚 𑌸𑍇𑌵𑌨𑌾𑌤𑍍 । 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌯𑌤𑍍 𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍇 𑌤𑌨𑍍𑌨𑍈𑌮𑌿𑌤𑍍𑌤𑌿𑌕𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇' 𑌇𑌤𑌿 ॥

---

ஸ்ம்ருதிகளிலிருந்தும் பலவித ப்ராயஸ்சித்தங்களை இந்த க்ரந்தம் மூலமாய் வெளியிடுகிறார்.]

## ப்ராயஸ்சித்த சப்தத்தின் பொருள்.

ப்ராய: என்பதற்குத் தபஸ் என்று பொருள். சித்தம் என்பதற்கு நிஸ்சயம் என்று பொருள். அனுஷ்டிக்கப்பட்ட, பன்னிரண்டு வர்ஷம் அனுஷ்டிக்கக்கூடிய கர்மத்தினால் நிச்சயமாய்ப் பாபம் ஒழிகின்றது, என்று நம்பிக்கையுடன் கூடியதும், வ்ரதானுஷ்டான ரூபமுமாகிய தபஸ் ப்ராயஸ்சித்தம் எனப்படுகிறது. அதைச் சொல்லுகிறார்,

அங்கிரஸ்:— " 'ப்ராய:' என்பது தபஸ் எனப்படுகிறது. 'சித்தம்' என்பது நிச்சயம் எனப்படுகிறது. நிச்சயத்துடன் கூடிய தபஸ்ஸு 'ப்ராயஸ்சித்தம்' எனப்படுகிறது," என்று. அது, விதிக்கப்பட்ட தர்மத்தைச் செய்யாதது முதலிய காரணத்தையுடையவனைக் குறித்துச் சொல்லப்படுவதால் நைமித்திகம் ஆகும். அவ்விதமே,

ப்ருஹஸ்பதி:— விதிக்கப்பட்டுள்ள கர்மத்தைச் செய்யாததாலும், நிஷேதிக்கப்பட்ட கர்மத்தை அனுஷ்டிப்பதாலும் எந்த ப்ராயஸ்சித்தம் செய்யப்படுகிறதோ அது நைமித்திகம் எனப்படுகிறது. இவ் விஷயத்தில்,

𑌅𑌤𑍍𑌰 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌶𑍍𑌵𑌰𑌃—

'𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌶𑌬𑍍𑌦𑌃 𑌪𑌾𑌪𑌕𑍍𑌷𑌯𑌾𑌰𑍍𑌥𑍇 𑌨𑍈𑌮𑌿𑌤𑍍𑌤𑌿𑌕𑍇 𑌕𑌰𑍍𑌮𑌵𑌿𑌶𑍇𑌷𑍇 𑌰𑍂𑌢𑌃' 𑌇𑌤𑌿 ॥ 𑌤𑌦𑍇𑌵𑌂 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌶𑌬𑍍𑌦𑍋 𑌯𑍋𑌗𑍇𑌨 𑌰𑍂𑌢𑍍𑌯𑌾 𑌚 𑌪𑌾𑌪𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌨𑌕𑍍𑌷𑌮𑌂 𑌕𑌰𑍍𑌮𑌵𑌿𑌶𑍇𑌷𑌮𑌾𑌚𑌷𑍍𑌟𑍇 ॥

## 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌿𑌨𑌿𑌰𑍂𑌪𑌣𑌮𑍍 ॥

𑌤𑌤𑍍𑌰𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌿𑌣𑌂 𑌦𑌰𑍍𑌶𑌯𑌤𑌿 𑌮𑌨𑍁𑌃—

'𑌅𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌵𑌿𑌹𑌿𑌤𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌨𑌿𑌨𑍍𑌦𑌿𑌤𑌂 𑌚 𑌸𑌮𑌾𑌚𑌰𑌨𑍍 । 𑌪𑍍𑌰𑌸𑌕𑍍𑌤𑌶𑍍𑌚𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌰𑍍𑌥𑍇𑌷𑍁 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑍀𑌯𑌤𑍇 𑌨𑌰𑌃' 𑌇𑌤𑌿 ॥

𑌯𑌾𑌜𑍍𑌞𑌵𑌲𑍍𑌕𑍍𑌯𑍋𑌽𑌪𑌿—

'𑌵𑌿𑌹𑌿𑌤𑌸𑍍𑌯𑌾𑌨𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌾𑌨𑍍𑌨𑌿𑌨𑍍𑌦𑌿𑌤𑌸𑍍𑌯 𑌚 𑌸𑍇𑌵𑌨𑌾𑌤𑍍 । 𑌅𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌾𑌚𑍍𑌚𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾𑌂 𑌨𑌰𑌃 𑌪𑌤𑌨𑌮𑍃𑌚𑍍𑌛𑌤𑌿 ॥ 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌵𑌾𑌯𑍀 𑌭𑌵𑌤𑌿 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑍇𑌨𑍇𑌹 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌯𑍇 । 𑌏𑌵𑌮𑍍

---

**விஜ்ஞானேச்வரர்:**— "ப்ராயஸ்சித்தம் என்ற சப்தமானது பாபக்ஷயத்தை ப்ரயோஜன முடையதும், நைமித்திகமுமான கர்ம விசேஷத்தில் ரூடமாயுள்ளது," என்று.

ஆகையால், இவ்விதம் ப்ராயஸ்சித்தம் என்ற சப்தமானது யோகத்தினாலும் ரூடியாலும் பாபத்தைப் போக்குவதில் சக்தியுள்ள ஓர் தர்மத்தைச் சொல்லுகிறது.

## ப்ராயஸ்சித்தத்துக்கு அதிகாரியின் நிரூபணம்.

அதில் அதிகாரியைச் சொல்லுகிறார்,

**மனு:**— விதிக்கப்பட்டுள்ள கர்மத்தைச் செய்யாதவனும், நிஷித்த கர்மத்தைச் செய்பவனும், இந்த்ரியங்களின் விஷயங்களில் (சப்த ஸ்பர்ச ரூப ரஸ கந்தங்கள்) ஆஸக்தியுள்ளவனுமாகிய மனிதன் ப்ராயஸ்சித்தத்துக்கு அர்ஹனாகிறான்.

**யாஜ்ஞவல்க்யரும்:**— "விதிக்கப்பட்டுள்ள கர்மத்தைச் செய்யாததாலும், நிஷேதிக்கப்பட்ட கர்மத்தை அனுஷ்டிப்பதாலும், இந்த்ரியங்களை அடக்காததாலும் மனிதன் பதிதனாகிறான். பாப முடையவனாகிறான். ஆகையால் அவன் சுத்திக்காக ப்ராயஸ்சித்தத்தைச் செய்யவேண்டும். இவ்விதம் செய்வதால் இவனது அந்தராத்

स्यादन्तरात्मा च लोकश्चैव प्रसीदति' इति ॥ एवं प्रायश्चित्ते कृते अस्यान्तरात्मा शुद्ध्या प्रसीदति । लोकश्च संव्यवहारार्थं प्रसीदतीत्यर्थः ॥

प्रायश्चित्ताकरणे एकविंशति नरकाः ॥

---

प्रायश्चित्ताकरणे दोषमाह स एव—

'प्रायश्चित्तमकुर्वाणाः पापेषु निरता नराः । अपश्चात्तापिनः कष्टान् नरकान् यान्ति दारुणान् ॥ तामिस्रं लोहशङ्कुं च महानिरयशाल्मली । रौरवं कु(ड्म)लं पूतिमृत्तिकं कालसूत्रकम् ॥ संघातं लोहितोदं च सविषं संप्रतापनम् । महानरककाकोलं सञ्जीवनमहापथम् ॥ अवीचिमन्धतामिस्रं कुम्भीपाकं तथैव च । असिपत्रवनं चैव तपनं चैकविंशकम् ॥ महापातकजैर्घोरैरुपपातकजैस्तथा । अन्विता यान्त्यचरितप्रायश्चित्ता नराधमाः' इति ॥

---

மாவும், உலகமும் சுத்தமாகிறது," என்று. இவ்விதம் ப்ராயஶ்சித்தம் செய்யப்பட்டால் இவனது அந்தராத்மா சுத்தனுவதால் தோஷமற்றதாகிறது. உலகமும் வ்யவஹாரத்திற்காகச் சுத்தமாகிறது (இவனை ஒப்புக்கொள்ளுகிறது), என்பது பொருள்.

## ப்ராயஶ்சித்தம் செய்துகொள்ளாவிடில் இருபத்தொரு நரகங்கள்.

ப்ராயஶ்சித்தம் செய்துகொள்ளாவிடில் தோஷத்தைச் சொல்லுகிருர்,

**யாஜ்ஞவல்க்யரே:—** ப்ராயஶ்சித்தத்தைச் செய்யாதவர்களும், பாபத்தில் ஈடுபட்டிருப்பவர்களும், பஶ்சாத்தாபம் இல்லாதவர்களுமாகிய மனிதர்கள் கஷ்டமானவும், பயங்கரங்களுமான நரகங்களையடைகின்றனர். தாமிஸ்ரம், லோஹசங்கு, மஹாநிரயம், சால்மலீ, ரௌரவம், கும்பளம், பூதிம்ருத்திகம், காலஸூத்ரம், ஸங்காதம், லோஹிதோதம், ஸவிஷம், ஸம்ப்ரதாபனம், மஹாநரகம், காகோலம், ஸஞ்ஜீவநம், மஹாபதம், அவீசி, அந்ததாமிஸ்ரம், கும்பீபாகம், அஸிபத்ரவனம், தபனம்

ஏகவிம்ஶதிரித்யுக்தா: ப்ராயாந் நரகாவேக்ஷயோக்ஷ: ।
மஹாபாதகயோகீதி ச பாபகோத்ராபலக்ஷண: ॥

ததா ச பாபதாரதம்யாத் பலதாரதம்யம் உசிதம்

விஷ்ணுதர்மோத்தரே —

'அஷ்டாவிம்ஶதிகோட்யஸ்து கோராணி நரகாணி வை ।
மஹாபாதகிநஸ்தத்ர ஸர்வேஷு நரகாஸ்வபி ॥ சந்த்ர தாரகம் யாவச்ச பீட்யந்தே விவிதைர்வதை: । அதிபாதகிந ஸ்தேந்த்ர நிரயாணாம் ச கோடிஷு ॥ ஏகவிம்ஶதிஸங்க்யேஷு பாதோநப்ரஹ்மகல்பகம் । ஸமபாதகிநஸ்த்வர்தம் பச்யந்தே கல்பார்தம் ஸபாபிந: ॥ உபபாதகிநஸ்சாபி பாதம் யாந்தி ச நாரகா: । ஶேஷா: பாபேஷ்வஷ்டமம் ச காலகஸ்த்ரியம் ஸ்ம்ருதா'
இதி ॥

---

இந்த இருபத்தொரு நரகங்களை மஹாபாதகங்கள் உபபாதகங்கள் இவைகளுடன் கூடிய மனிதர்கள் ப்ராயஶ்சித்தம் அனுஷ்டிக்காதவர்களாகில் அடைகின்றனர்.

இருபத்தொன்று என்று சொல்லியது முக்யமான நரகங்களைப் பற்றிச் சொல்லியது. மஹாபாதகங்கள் என்றதும் எல்லாப் பாபங்களையும் சொல்லும். அவ்விதமிருப்பதால் பாபத்தின் தாரதம்யத்தை அனுஸரித்து, பலனின் தாரதம்யமும் சொல்லப் பட்டது,

**விஷ்ணுதர்மோத்தரத்தில்:**—கொடிய நரகங்கள் இருபத்தெட்டுக் கோடிகளாகும். மஹாபாதகம் செய்தவர்கள் இந்த எல்லா நரக ஸமுத்ரங்களில் சந்த்ரனும், நக்ஷத்ரங்களும் உள்ள வரையில் பல தொந்தரைகளால் வருத்தப்படுகின்றனர். மற்ற அதிபாதகம செய்தவர்கள் இருபத்தொரு என்ற கணக்குள்ள ஸமுத்ரம் போன்ற கோடி நரகங்களில் முக்கால் ப்ராம்ஹ கல்பம் வரையில் வருத்தப்படுகின்றனர். ஸமபாதகம் செய்தவர்கள் பாதி கல்பம் வரையில் வருத்தப்படுகின்றனர். உபபாதகிகளும் கால் கல்பம் வரையில் நரகங்களையடைகின்றனர். மற்றப் பாபங்களுடன் கூடியவர்கள் அரைக்கால் கல்பம் வரையில் வருத்தப்படுகின்றனர். இவ்விதம் காலத்தின் கணக்கு சொல்லப்பட்டது.

𑌰𑌹𑌸𑍍𑌯𑌕𑍃𑌤𑌪𑌾𑌪𑌫𑌲𑌨𑌿𑌰𑍂𑌪𑌣𑌮𑍍 ॥

---

𑌰𑌹𑌸𑍍𑌯𑌕𑍃𑌤𑌪𑌾𑌪𑌫𑌲𑍇 𑌪𑌰𑌾𑌶𑌰𑌃—

‘𑌪𑌾𑌤𑌕𑍇𑌷𑍁 𑌸𑌹𑌸𑍍𑌰𑌂 𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌮𑌹𑌤𑌿 𑌦𑍍𑌵𑌿𑌗𑍁𑌣𑌂 𑌤𑌥𑌾 ।
𑌉𑌪𑌪𑌾𑌤𑌕𑍇 𑌤𑍁𑌰𑍀𑌯𑌂 𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌨𑌰𑌕𑌂 𑌵𑌰𑍍𑌷𑌸𑌂𑌖𑍍𑌯𑌯𑌾’ 𑌇𑌤𑌿 ॥

𑌨𑌰𑌕𑌾𑌨𑍁𑌭𑌵𑌾𑌨𑌨𑍍𑌤𑌰𑌂 𑌤𑌿𑌰𑍍𑌯𑌗𑌾𑌦𑌿𑌜𑌨𑌨𑌾𑌦𑌿 𑌨𑌿𑌰𑍂𑌪𑌣𑌮𑍍 ॥

---

𑌏𑌵𑌂 𑌨𑌰𑌕𑌦𑍁𑌃𑌖𑌮𑌨𑍁𑌭𑍂𑌯 𑌕𑌰𑍍𑌮𑌶𑍇𑌷𑌾𑌤𑍍 𑌪𑍁𑌨𑌰𑌿𑌹 𑌸𑌂𑌸𑌾𑌰𑍇 𑌦𑍁𑌃𑌖𑌬𑌹𑍁𑌲𑍇 𑌤𑌿𑌰𑍍𑌯𑌗𑌾𑌦𑌿𑌯𑍋𑌨𑌿𑌷𑍁 𑌜𑌾𑌯𑌨𑍍𑌤𑍇 ॥

𑌤𑌥𑌾𑌹 𑌯𑌾𑌜𑍍𑌞𑌵𑌲𑍍𑌕𑍍𑌯𑌃—

‘𑌮𑌹𑌾𑌪𑌾𑌤𑌕𑌜𑌾𑌨𑍍 𑌘𑍋𑌰𑌾𑌨𑍍𑌨𑌰𑌕𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌦𑌾𑌰𑍁𑌣𑌾𑌨𑍍 ।
𑌕𑌰𑍍𑌮𑌕𑍍𑌷𑌯𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌜𑌾𑌯𑌨𑍍𑌤𑍇 𑌮𑌹𑌾𑌪𑌾𑌤𑌕𑌿𑌨𑌸𑍍𑌤𑍍𑌵𑌿𑌹 ॥ 𑌮𑍃𑌗𑌶𑍍𑌵𑌸𑍂𑌕𑌰𑍋𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌹𑌾 𑌯𑍋𑌨𑌿𑌮𑍃𑌚𑍍𑌛𑌤𑌿 । 𑌖𑌰𑌪𑍁𑌕𑍍𑌕𑌸𑌵𑍇

---

## *ரஹஸ்யமாய்ச் செய்யப்பட்ட பாபத்தின் பலன்.*

*ரஹஸ்யத்தில் செய்யப்பட்ட பாபத்தின் பலனைச் சொல்லு கிறார்,*

**பராசரர்:—** *பாதகங்களில் ஆயிரம் வர்ஷம் நரக அனுபவம். மஹாபாதகங்களில் இரண்டு மடங்கு. உபபாதகங்களில் நாலில் ஒருபங்கு வர்ஷங்கள்.*

## *நரகத்தை அனுபவித்த பிறகு பசு பக்ஷி முதலிய ஜன்மங்கள்.*

*இவ்விதம், நரக துக்கத்தையனுபவித்து மீதியுள்ள கர்மத்தால் மறுபடி இந்த ஸம்ஸாரத்தில் துக்கம் அதிகமாயுள்ள பசு பக்ஷி முதலிய ஜாதிகளில் பிறக்கின்றனர். அதைச் சொல்லுகிறார்,*

**யாஜ்ஞவல்க்யர்:—** *“மஹாபாதகம் செய்தவர்கள் மஹாபாதகங்களாலுண்டாகிய பயங்கரமான நரகங்களை அடைந்து, பாபம் குறைந்தபிறகு இவ்வுலகில் பிறக்கின்றனர். ப்ரம்ஹஹத்தி செய்தவன் ம்ருகம், நாய், பன்றி, ஒட்டகை இவைகளின் பிறப்பையடைகிறான். ஸுராபானம் செய்த ப்ராம்ஹணன் கழுதை, சண்டாளன், வேனன் இவர்களின் பிறப்பையடைகிறான். ஸ்வர்*

𑌨𑌾𑌨𑌾𑌂 𑌸𑌹𑌸𑍍𑌰𑌶𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌵𑍍𑌰𑌜𑍇𑌤𑍍 || 𑌕𑍃𑌮𑌿𑌕𑍀𑌟𑌪𑌤𑌙𑍍𑌗𑌤𑍍𑌵𑌂 𑌸𑍍𑌵𑌰𑍍𑌣𑌹𑌾𑌰𑍀 𑌸𑌮𑌾𑌪𑍍𑌨𑍁𑌯𑌾𑌤𑍍 | 𑌤𑍃𑌣𑌗𑍁𑌲𑍍𑌮𑌲𑌤𑌾𑌤𑍍𑌵𑌂 𑌚 𑌕𑍍𑌰𑌮𑌶𑍋 𑌗𑍁𑌰𑍁𑌤𑌲𑍍𑌪𑌗𑌃' 𑌇𑌤𑌿 ||

𑌤𑌦𑌜𑍍𑌞𑌾𑌨𑌕𑍃𑌤𑌵𑌿𑌷𑌯𑌮𑍍 | 𑌜𑍍𑌞𑌾𑌨𑌕𑍃𑌤𑍇 𑌤𑍍𑌵𑌧𑌿𑌕𑌦𑍁𑌃𑌖𑌯𑍋𑌨𑌿𑌷𑍁 𑌸𑌂𑌸𑌰𑌤𑌿 | 𑌯𑌥𑌾𑌽𑌽𑌹 𑌮𑌨𑍁𑌃—

'𑌬𑌹𑍂𑌨𑍍 𑌵𑌰𑍍𑌷𑌗𑌣𑌾𑌨𑍍 𑌘𑍋𑌰𑌾𑌨𑍍 𑌨𑌰𑌕𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌤𑌤𑍍𑌕𑍍𑌷𑌯𑌾𑌤𑍍 | 𑌸𑌂𑌸𑌾𑌰𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌮𑌹𑌾𑌪𑌾𑌤𑌕𑌿𑌨𑌸𑍍𑌤𑍍𑌵𑌿𑌹 || 𑌶𑍍𑌵𑌸𑍂𑌕𑌰𑌖𑌰𑍋𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌗𑍋𑌽𑌜𑌾𑌵𑌿𑌮𑍃𑌗𑌪𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌮𑍍 || 𑌚𑌣𑍍𑌡𑌾𑌲𑌪𑍁𑌲𑍍𑌕𑌸𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌹𑌾 𑌯𑍋𑌨𑌿𑌮𑍃𑌚𑍍𑌛𑌤𑌿 || 𑌕𑍃𑌮𑌿𑌕𑍀𑌟𑌪𑌤𑌙𑍍𑌗𑌾𑌨𑌾𑌂 𑌵𑌿𑌡𑍍𑌭𑍁𑌜𑌾𑌂 𑌚𑍈𑌵 𑌪𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌮𑍍 | 𑌹𑌿𑌂𑌸𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌚𑍈𑌵 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌨𑌾𑌂 𑌸𑍁𑌰𑌾𑌪𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋𑌽𑌸𑌕𑍃𑌤𑍍 || 𑌲𑍂𑌤𑌾𑌹𑌿𑌸𑌰𑌟𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌤𑌿𑌰𑌶𑍍𑌚𑌾𑌂 𑌚𑌾𑌮𑍍𑌬𑍁𑌚𑌾𑌰𑌿𑌣𑌾𑌮𑍍 | 𑌹𑌿𑌂𑌸𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌚 𑌪𑌿𑌶𑌾𑌚𑌾𑌨𑌾𑌂 𑌸𑍍𑌤𑍇𑌨𑍋 𑌵𑌿𑌪𑍍𑌰𑌃 𑌸𑌹𑌸𑍍𑌰𑌶𑌃 || 𑌤𑍃𑌣𑌗𑍁𑌲𑍍𑌮𑌲𑌤𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌕𑍍𑌰𑌵𑍍𑌯𑌾𑌦𑌾𑌂 𑌦𑌂𑌷𑍍𑌟𑍍𑌰𑌿𑌣𑌾𑌮𑌪𑌿 | 𑌕𑍍𑌰𑍂𑌰𑌕𑌰𑍍𑌮𑌕𑍃𑌤𑌾𑌂 𑌚𑍈𑌵 𑌶𑌤𑌶𑍋 𑌗𑍁𑌰𑍁𑌤𑌲𑍍𑌪𑌗𑌃' 𑌇𑌤𑌿 || 𑌲𑍂𑌤𑌾 = 𑌊𑌰𑍍𑌣𑌨𑌾𑌭𑌃, 𑌸𑌰𑌟𑌃 = 𑌕𑍃𑌕𑌲𑌾𑌸𑌃 ||

---

ணத்தைத் திருடியவன் புழு, பூச்சி, விட்டில் இவைகளின் ஜாதியை யடைவான். குரு பத்னியைச் சேர்ந்தவன் புல், புதர், கொடி இவைகளின் ஜாதியை முறையேயடைவான்" என்று.

இவ்விதம் சொல்லியது, அஜ்ஞானத்தால் செய்ததைப்பற்றியது. ஞான பூர்வமாய்ச் செய்த விஷயத்திலோவெனில் மற்ற அதிக துக்கமுள்ள ஜாதிகளில் பிறப்பான். அவ்விதம் சொல்லுகிறார்,

**மனு:—** மஹாபாதகிகள் அநேக வர்ஷங்கள் கோரமான நரகங்களையடைந்து பாபம் க்ஷயித்த பிறகு இவ்வுலகில் பிறப்பை யடைகின்றனர். ப்ரம்ஹஹத்தி செய்தவன் நாய், பன்றி, கழுதை, ஒட்டகை, நரி, மான், பக்ஷி, சண்டாளன், புல்கஸன் இவர்களுடைய ஜன்மத்தையடைகிறான். மத்ய பானத்தை அடிக்கடி செய்த ப்ராம்ஹணன் புழு, பூச்சி, விட்டில், பன்றி, பக்ஷி, கொல்லும் ஸ்வபாவமுடைய ஜந்துக்கள் இவைகளின் பிறப்பையடைகிறான். ஸ்வர்ணத்தைத் திருடிய ப்ராம்ஹணன் சிலந்தி, பாம்பு, ஓணான், ஜலத்தில் ஸஞ்சரிக்கும் மீன் முதலியவைகள், கொல்லும் ஸ்வபாவ

𑌏𑌵𑌂 𑌰𑍌𑌰𑌵𑌾𑌦𑌿𑌨𑌰𑌕𑍇𑌷𑍁 𑌶𑍍𑌵𑌸𑍂𑌕𑌰𑌾𑌦𑌿𑌯𑍋𑌨𑌿𑌷𑍁 𑌚 𑌦𑌾𑌰𑍁𑌣𑌂 𑌦𑍁𑌃𑌖𑌮𑌨𑍁𑌭𑍂𑌯𑌾𑌨𑌨𑍍𑌤𑌰𑌂 𑌦𑍁𑌰𑌿𑌤𑌶𑍇𑌷𑍇𑌣 𑌜𑌨𑌨𑌸𑌮𑌯 𑌏𑌵 𑌕𑍍𑌷𑌯𑌰𑍋𑌗𑌾𑌦𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌦𑍁𑌃𑌖𑌬𑌹𑍁𑌲𑍇𑌷𑍁 𑌮𑌾𑌨𑍁𑌷𑌶𑌰𑍀𑌰𑍇𑌷𑍁 𑌸𑌂𑌸𑌰𑌤𑌿 ॥

𑌤𑌥𑌾 𑌚 𑌯𑌾𑌜𑍍𑌞𑌵𑌲𑍍𑌕𑍍𑌯𑌃—

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌹𑌾 𑌕𑍍𑌷𑌯𑌰𑍋𑌗𑍀 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑍁𑌰𑌾𑌪𑌃 𑌶𑍍𑌯𑌾𑌵𑌦𑌨𑍍𑌤𑌕𑌃 । 𑌹𑍇𑌮𑌹𑌾𑌰𑍀 𑌤𑍁 𑌕𑍁𑌨𑌖𑍀 𑌦𑍁𑌶𑍍𑌚𑌰𑍍𑌮𑌾 𑌗𑍁𑌰𑍁𑌤𑌲𑍍𑌪𑌗𑌃 ॥ 𑌯𑍋 𑌯𑍇𑌨 𑌸𑌂𑌵𑌸𑍇𑌤𑍍𑌤𑍇𑌷𑌾𑌂 𑌸 𑌤𑌲𑍍𑌲𑌿𑌙𑍍𑌗𑍋𑌽𑌭𑌿𑌜𑌾𑌯𑌤𑍇' 𑌇𑌤𑌿 ॥ 𑌶𑍍𑌯𑌾𑌵𑌦𑌨𑍍𑌤𑌃 = 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌤𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣𑌦𑌨𑍍𑌤𑌃, 𑌦𑍁𑌶𑍍𑌚𑌰𑍍𑌮𑌾 = 𑌕𑍁𑌷𑍍𑌠𑍀, 𑌏𑌤𑍇𑌷𑌾𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌹𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌯𑍇𑌨 𑌪𑌤𑌿𑌤𑍇𑌨 𑌸𑌹 𑌯𑌃 𑌪𑍁𑌮𑌾𑌨𑍍 𑌸𑌂𑌵𑌸𑌤𑌿, 𑌸 𑌤𑌲𑍍𑌲𑌿𑌙𑍍𑌗𑍋𑌽𑌭𑌿𑌜𑌾𑌯𑌤 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥

𑌏𑌵𑌂 𑌮𑌹𑌾𑌪𑌾𑌤𑌕𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑌿𑌕𑍍𑌤𑍇𑌷𑍍𑌵𑌪𑌿 𑌪𑌾𑌤𑌕𑍇𑌷𑍁 𑌅𑌕𑍃𑌤𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌨𑌰𑌕𑌾𑌨𑍁𑌭𑌵𑌾𑌨𑌨𑍍𑌤𑌰𑌂 𑌤𑌿𑌰𑍍𑌯𑌗𑌾𑌦𑌿𑌷𑍁 𑌜𑌨𑌨𑌾𑌨𑍍𑌯𑌾𑌹 𑌸 𑌏𑌵—

---

முடைய பிசாசங்கள் இவைகளின் பிறப்பையடைகிறுன். குரு பத்னியைச் சேர்ந்தவன் புல், புதர், கொடி முதலியவைகள், மாம்ஸத்தைப் புஜிக்கும் புலி முதலியவைகள், கொடிய கார்யம் செய்பவர்கள் இவர்களுடைய பிறப்பை பலதடவையடைவான்.

இவ்விதம் ரௌரவம் முதலிய நரகங்களிலும், நாய், பன்றி முதலிய பிறப்புக்களிலும், கொடிய துக்கத்தையனுபவித்து, பிறகு பாபத்தின் மீதியால் பிறக்கும்பொழுதே க்ஷயரோகம் முதலிய அடையாளங் கூடியவனுய் அதிக துக்கமுள்ள மனித சரீரங்களில் பிறக்கிறுன். அவ்விதமே,

**யாஜ்ஞவல்க்யர்:—** *ப்ரம்ஹஹத்தி செய்தவன் க்ஷயரோக முடையவனுய்ப் பிறப்பான். ஸுராபானம் செய்தவன் பிறப்பிலேயே கறுத்த பல்லுடையவனுவான். ஸ்வர்ணத்தைத் திருடியவன் சொத்தை நகமுடையவனுவான். குருபத்னியைச் சேர்ந்தவன் குஷ்டரோகமுடையவனுவான். இந்த நாலு பாதகிகளுள் எந்தப் பாதகியுடன் எவன் ஸம்ஸர்க்கத்தைச் செய்கிறுனே, அவன் அவனுடைய அடையாளத்தை யுடையவனுய்ப் பிறப்பான்.*

இவ்விதம், மஹாபாதகம் தவிர்த்த மற்ற பாபங்களிலும் ப்ராயச்சித்தம் செய்துகொள்ளாதவர்க்கு நரகங்களை அனுபவித்த பிறகு பசு பக்ஷி ஜாதிகளில் பிறப்பைச் சொல்லுகிறுர்.

‘𑌯𑌥𑌾𑌕𑌰𑍍𑌮 𑌫𑌲𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌤𑌿𑌰𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌂 𑌕𑌾𑌲𑌪𑌰𑍍𑌯𑌯𑌾𑌤𑍍 । 𑌜𑌾𑌯𑌨𑍍𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑌣𑌭𑍍𑌰𑌷𑍍𑌟𑌾 𑌦𑌰𑌿𑌦𑍍𑌰𑌾𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌧𑌮𑌾𑌃’ 𑌇𑌤𑌿 ॥

𑌤𑌥𑌾𑌽𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 —

‘𑌚𑌰𑌿𑌤𑌵𑍍𑌯𑌮𑌤𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌯𑍇 । 𑌨𑌿𑌨𑍍𑌦𑍍𑌯𑍈𑌰𑍍𑌹𑌿 𑌲𑌕𑍍𑌷𑌣𑍈𑌰𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌾 𑌜𑌾𑌯𑌨𑍍𑌤𑍇𑌽𑌨𑌿𑌷𑍍𑌕𑍃𑌤𑍈𑌨𑌸𑌃’ 𑌇𑌤𑌿 ॥

𑌮𑌨𑍁𑌰𑌪𑌿 —

‘𑌇𑌹 𑌦𑍁𑌶𑍍𑌚𑌰𑌿𑌤𑍈𑌃 𑌕𑍇𑌚𑌿𑌤𑍍 𑌕𑍇𑌚𑌿𑌤𑍍 𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑍃𑌤𑍈𑌸𑍍𑌤𑌥𑌾 । 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍁𑌵𑌨𑍍𑌤𑌿 𑌦𑍁𑌰𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑍋 𑌨𑌰𑌾 𑌰𑍂𑌪𑌵𑌿𑌪𑌰𑍍𑌯𑌯𑌮𑍍’ 𑌇𑌤𑌿 ॥ 𑌇𑌹 𑌦𑍁𑌶𑍍𑌚𑌰𑌿𑌤𑍈𑌃 = 𑌅𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌜𑌨𑍍𑌮𑌨𑍍𑌯𑌾𑌚𑌰𑌿𑌤𑍈𑌰𑌤𑍍𑌯𑍁𑌤𑍍𑌕𑌟𑍈𑌃 𑌪𑌾𑌪𑍈𑌰𑌿𑌹 𑌤𑌤𑍍𑌫𑌲𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑌨𑍁𑌭𑍂𑌯 𑌪𑌶𑍍𑌚𑌾𑌨𑍍𑌨𑌰𑌕𑌾𑌦𑌿𑌕𑌮𑌨𑍁𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 । ‘𑌅𑌤𑍍𑌯𑍁𑌤𑍍𑌕𑌟𑍈𑌃 𑌪𑍁𑌣𑍍𑌯𑌪𑌾𑌪𑍈𑌰𑌿𑌹𑍈𑌵 𑌫𑌲𑌮𑌶𑍍𑌨𑍁𑌤𑍇 । 𑌤𑍍𑌰𑌿𑌭𑌿𑌰𑍍𑌵𑌰𑍍𑌷𑍈𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌭𑌿𑌰𑍍𑌮𑌾𑌸𑍈𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌭𑌿𑌃 𑌪𑌕𑍍𑌷𑍈𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌭𑌿𑌰𑍍𑌦𑌿𑌨𑍈𑌃’ 𑌇𑌤𑌿 𑌸𑍍𑌮𑍃𑌤𑍇𑌃 ॥ 𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑍃𑌤𑍈𑌸𑍍𑌤𑍁 𑌪𑌾𑌪𑍈𑌰𑍍𑌨𑌰𑌕𑌾𑌦𑍍𑌯𑌨𑍁𑌭𑌵𑌾𑌨𑌨𑍍𑌤𑌰𑌂 𑌰𑍂𑌪𑌵𑌿𑌪𑌰𑍍𑌯𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍁𑌵𑌨𑍍𑌤𑍀𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥

---

**யாஜ்ஞவல்க்யரே:—** அவரவர் கர்ம பலனுக்குத் தகுந்தபடி திர்யக்ஜாதிகளில் பிறந்து, சில காலத்திற்குப் பிறகு லக்ஷணங்களற்றவரும் தரித்ரருமான இழிந்த மனிதர்களாய்ப் பிறக்கின்றனர். அவ்விதம்,

**மற்றோர் க்ரந்தத்தில்:—** ஆகையால், சுத்திக்காக ப்ராயச்சித்தத்தை அவச்யம் செய்யவேண்டும். ப்ராயச்சித்தம் செய்து கொள்ளாதவர்கள் பழிக்கக்கூடிய அடையாளங்களுடன் கூடியவராய்ப் பிறக்கின்றனர்.

**மனுவும்:—** “சிலர் இப்பிறப்பில் செய்த பாபங்களாலும், சிலர் முன் ஜன்மத்தில் செய்த பாபங்களாலும் குரூபத்தை யடைகின்றனர்,” என்று. இப்பிறவியில் செய்யப்பட்டதும் மிகக் கொடியதுமாகிய பாபங்களால் இந்த ஜன்மத்தில் இந்தப் பாபத்தின் பலனை முன்பு அனுபவித்து, பிறகு நரகம் முதலியதையும் அனுபவிக்கின்றனர். “மிகக் கொடிய புண்ய பாபங்களால் இந்த ஜன்மத்திலேயே பலனையனுபவிக்கிறான். மூன்று வர்ஷங்களால், மூன்று மாஸங்களால், மூன்று பக்ஷங்களால், மூன்று தினங்களால் (அனுபவிக்கிறான்),” என்று ஸ்ம்ருதியிருப்பதால். முன் ஜன்

ஸ ஏவ —

ஸம்யோகம் பதிதைர்கத்வா பரஸ்யைவ ச யோஷிதம் । ப்ரஹ்மஸ்வமேவ ஹ்ருத்வா ச பவந்தி ப்ரஹ்மராக்ஷஸா: ॥ பிஶுந: பூதிநாஸத்வம் ஸூசக: பூதிவக்த்ரதாம் । தாந்யசௌரோ(அ)ங்கஹீநத்வம் ஆதிரேக்யம் து மிஶ்ரக: ॥ அந்நஹர்தா(அ)மயாவித்வம் மௌக்யம் வாகபஹாரக: । வஸ்த்ராபஹாரக: ஶ்வைத்ர்யம் பங்குதா(அ)ஶ்வாபஹாரக: । ஏவம் கர்மவிஶேஷேண ஜாயந்தே ஸத்விகர்ஹிதா: ॥ ஜடமூகாந்தபதிரா விக்ருதாக்ருதயஸ்ததா ॥ மணிமுக்தாப்ரவாலாநி ஹ்ருத்வா லோபேந மாநவா: । விவிதாநி ச ரத்நாநி ஜாயந்தே ஹேமகர்த்ருஷு ॥ தாந்யம் ஹ்ருத்வா பவத்யாகு: காம்ஸ்யம் ஹம்ஸோ ஜலம் ப்லவ: । மது தம்ஶ: பய: காகோ ரஸம் ஶ்வா நகுலோ க்ருதம் ॥ மாம்

---

மத்தில் செய்யப்பட்ட பாபங்களாலானுல், நரகம் முதலியவைகளை அனுபவித்தபிறகு குரூபத்தையடைகிருர்கள், என்பது பொருள்.

𑌗𑍋𑌵𑌧𑌸𑍍𑌯 𑌸𑍇𑌤𑌿𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌤𑌾𑌕𑌂 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌯𑌤𑌿 𑌪𑌰𑌾𑌶𑌰𑌃—

'𑌸𑌶𑌿𑌖𑌂 𑌵𑌪𑌨𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌤𑍍𑌰𑌿𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌮𑌵𑌗𑌾𑌹𑌨𑌮𑍍 । 𑌗𑌵𑌾𑌂 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌵𑌸𑍇𑌦𑍍𑌰𑌾𑌤𑍍𑌰𑍌 𑌦𑌿𑌵𑌾 𑌗𑌾𑌶𑍍𑌚𑌾𑌪𑍍𑌯𑌨𑍁𑌵𑍍𑌰𑌜𑍇𑌤𑍍 ॥ 𑌉𑌷𑍍𑌣𑍇 𑌵𑌰𑍍𑌷𑌤𑌿 𑌶𑍀𑌤𑍇 𑌵𑌾 𑌮𑌾𑌰𑍁𑌤𑍇 𑌵𑌾𑌤𑌿 𑌵𑌾 𑌭𑍃𑌶𑌮𑍍 । 𑌨 𑌕𑍁𑌰𑍍𑌵𑍀𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑌂 𑌗𑍋𑌰𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌤𑍁 𑌶𑌕𑍍𑌤𑌿𑌤𑌃 ॥ 𑌆𑌤𑍍𑌮𑌨𑍋 𑌯𑌦𑌿 𑌵𑌾𑌨𑍍𑌯𑍇𑌷𑌾𑌂 𑌗𑍃𑌹𑍇 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑍇 𑌖𑌲𑍇𑌽𑌥𑌵𑌾 । 𑌭𑌕𑍍𑌷𑌯𑌨𑍍𑌤𑍀𑌂 𑌨 𑌕𑌥𑌯𑍇𑌤𑍍 𑌪𑌿𑌬𑌨𑍍𑌤𑌂 𑌚𑍈𑌵 𑌵𑌤𑍍𑌸𑌕𑌮𑍍 ॥ 𑌪𑌿𑌬𑌨𑍍𑌤𑍀𑌷𑍁 𑌪𑌿𑌬𑍇𑌤𑍍𑌤𑍋𑌯𑌂 𑌸𑌂𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑍀𑌷𑍁 𑌸𑌂𑌵𑌿𑌶𑍇𑌤𑍍 । 𑌪𑌤𑌿𑌤𑌾𑌂 𑌪𑌙𑍍𑌕𑌮𑌗𑍍𑌨𑌾𑌂 𑌵𑌾 𑌸𑌰𑍍𑌵-

---

அபஹரித்தவனும், பத்னியை அபஹரித்தவனும், ஆகிய இவ்வாறு பேர்களும் ஆததாயிகள் எனப்படுகின்றனர். கொல்வதற்கு வருகிறவன் வேதாந்தத்தின் முடிவை யடைந்தவனாயினும் கொல்வதற்கு விரும்பியவனாயின் அவனைக் கொல்லவேண்டும். அதனால் ப்ரூணஹத்தி செய்தவனாகான்.

## பசுவைக் கொன்றதற்கு ப்ராயஸ்சித்தம்.

கோ வதத்திற்கு ப்ராயஸ்சித்தத்தை முறைகளுடன் கூடியதாய்ச் சொல்லுகிறார்,

**பராசரர்:**— "சிகையுடன் வபநம் செய்து கொண்டு, மூன்று காலங்களிலும் ஸ்நானம் செய்யவேண்டும். ராத்ரியில் பசுக்களின் மத்தியில் வஸிக்கவேண்டும். பகலில் பசுக்களைப் பின்தொடர்ந்து செல்லவேண்டும். அதிகமான வெயிலிலும், மழையிலும், குளிரிலும், காற்றிலும் பசுவுக்குச் சக்திக்கியன்றபடி ரக்ஷணம் செய்யாமல் தன்னை மட்டில் காப்பாற்றிக்கொள்ளக் கூடாது. தன்னுடைய அல்லது பிறருடைய வீட்டிலாவது, வயலிலாவது, களத்திலாவது மேய்ந்தால் சொல்லக்கூடாது. கன்று ஊட்டினாலும் சொல்லக்கூடாது. பசுக்கள் நீரைக் குடிக்கும்பொழுது குடிக்கலாம், படுக்கும்பொழுது படுக்கலாம். பசு கீழே விழுந்தாலும், சேற்றில்

𑌪𑍍𑌰𑌾𑌣𑍈𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑍈𑌰𑍁𑌦𑍍𑌧𑌰𑍇𑌤𑍍 । 𑌗𑍋𑌵𑌧𑌸𑍍𑌯𑌾𑌨𑍁𑌰𑍂𑌪𑍇𑌣 𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌂 𑌵𑌿𑌨𑌿𑌰𑍍𑌦𑌿𑌶𑍇𑌤𑍍 । 𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌂 𑌤𑌤𑌃 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌂 𑌵𑌿𑌭𑌜𑍇𑌤 𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌧𑌮𑍍 ॥ 𑌏𑌕𑌾𑌹𑌮𑍇𑌕𑌭𑌕𑍍𑌤𑌾𑌶𑍀 𑌏𑌕𑌾𑌹𑌂 𑌨𑌕𑍍𑌤𑌭𑍋𑌜𑌨𑌃 । 𑌅𑌯𑌾𑌚𑌿𑌤𑌾𑌶𑍍𑌯𑍇𑌕𑌮𑌹𑌰𑍇𑌕𑌾𑌹𑌂 𑌮𑌾𑌰𑍁𑌤𑌾𑌶𑌨𑌃 ॥ 𑌦𑌿𑌨𑌦𑍍𑌵𑌯𑌂 𑌚𑍈𑌕𑌭𑌕𑍍𑌤𑍋 𑌦𑍍𑌵𑌿𑌦𑌿𑌨𑌂 𑌨𑌕𑍍𑌤𑌭𑍋𑌜𑌨𑌃 । 𑌦𑌿𑌨𑌦𑍍𑌵𑌯𑌮𑌯𑌾𑌚𑍀 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌦𑍍𑌵𑌿𑌦𑌿𑌨𑌂 𑌮𑌾𑌰𑍁𑌤𑌾𑌶𑌨𑌃 ॥ 𑌤𑍍𑌰𑌿𑌦𑌿𑌨𑌂 𑌚𑍈𑌕𑌭𑌕𑍍𑌤𑌾𑌶𑍀 𑌤𑍍𑌰𑌿𑌦𑌿𑌨𑌂 𑌨𑌕𑍍𑌤𑌭𑍋𑌜𑌨𑌃 । 𑌦𑌿𑌨𑌤𑍍𑌰𑌯𑌮𑌯𑌾𑌚𑍀 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌤𑍍𑌰𑌿𑌦𑌿𑌨𑌂 𑌮𑌾𑌰𑍁𑌤𑌾𑌶𑌨𑌃 ॥ 𑌚𑌤𑍁𑌰𑌹𑌂 𑌚𑍈𑌕𑌭𑌕𑍍𑌤𑌾𑌶𑍀 𑌚𑌤𑍁𑌰𑌹𑌂 𑌨𑌕𑍍𑌤𑌭𑍋𑌜𑌨𑌃 । 𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌿𑌨𑌮𑌯𑌾𑌚𑍀 𑌸𑍍𑌯𑌾𑌚𑍍𑌚𑌤𑍁𑌰𑌹𑌂 𑌮𑌾𑌰𑍁𑌤𑌾𑌶𑌨𑌃' 𑌇𑌤𑌿 ॥

𑌤𑌤𑍍𑌰 𑌵𑌤𑍍𑌸𑍇 𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑌃 𑌕𑌲𑍍𑌪𑌾 𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌯𑌾 𑌯𑍋𑌜𑌨𑍀𑌯𑌾𑌃 ॥ 𑌤𑌦𑍍𑌯𑌥𑌾— 𑌏𑌕𑌹𑌾𑌯𑌨𑌸𑍍𑌯 𑌵𑌧𑍇 𑌪𑍍𑌰𑌥𑌮𑌃 । 𑌦𑍍𑌵𑌿𑌹𑌾𑌯𑌨𑌸𑍍𑌯 𑌵𑌧𑍇

---

ஆழ்ந்தினுலும், அதைத் தனது முழுப் பலத்தாலும் வெளியேற்ற வேண்டும். கோ வதத்திற்குத் தகுந்தபடி ப்ராஜாபத்ய க்ருச்ரத்தை விதிக்கவேண்டும். பிறகு ப்ராஜாபத்ய க்ருச்ரத்தை நான்குவிதமாய்ப் பிரிக்கவேண்டும். ஒரு நாள் பகலில் புஜிப்பவனும், ஒரு நாள் இரவில் மட்டில் புஜிப்பவனும், ஒரு நாள் யாசிக்காமல் கிடைத்ததைப் புஜிப்பவனும், ஒரு நாள் காற்றைப் புஜிப்பவனும், இருக்கவேண்டும். பிறகு இரண்டு நாள் பகலில் மட்டில் புஜிப்பவனும், இரண்டு நாள் இரவில் மட்டில் புஜிப்பவனும், இரண்டு நாள் யாசிக்காமல் கிடைத்ததைப் புஜிப்பவனும், இரண்டு நாள் காற்றை மட்டில் புஜிப்பவனும் இருக்கவேண்டும். பிறகு, மூன்று நாள் பகலில் மட்டில் புஜிப்பவனும், மூன்று நாள் இரவில் மட்டில் புஜிப்பவனும், மூன்று நாள் யாசிக்காமல் கிடைத்ததைப் புஜிப்பவனும், மூன்று நாள் காற்றை மட்டும் புஜிப்பவனுமிருக்க வேண்டும். பிறகு, நான்கு நாள் பகலில் மட்டில் புஜிப்பவனும், நான்கு நாள் இரவில் மட்டில் புஜிப்பவனும், நான்கு நாள் யாசிக்காமல் கிடைத்ததைப் புஜிப்பவனும், நான்கு நாள் காற்றை மட்டும் புஜிப்பவனு மிருக்கவேண்டும்."

இவ்விதம் சொல்லப்பட்ட நான்கு விதிகளும் கொல்லப்பட்ட பசுவின் பேதத்தை யனுஸரித்து விதிக்கப்படவேண்டும். அது எவ்விதமெனில், ஒரு வயது சென்ற கன்றின் வதத்தில் முதல் விதி. இரண்டு வயது சென்ற கன்றின் வதத்தில் இரண்டாவது விதி.

𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌃 । 𑌤𑍍𑌰𑌿𑌹𑌾𑌯𑌨𑌸𑍍𑌯 𑌵𑌧𑍇 𑌤𑍃𑌤𑍀𑌯𑌃 । 𑌉𑌪𑌰𑌿𑌤𑌨𑌵𑌯𑌸𑍍𑌕𑌸𑍍𑌯 𑌵𑌧𑍇 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑌃 ॥

𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌵𑍍𑌰𑌤𑌚𑌰𑌣𑌾𑌨𑌨𑍍𑌤𑌰𑌕𑍃𑌤𑍍𑌯𑌮𑌾𑌹 𑌸 𑌏𑌵 —

'𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑍇 𑌤𑌤𑌶𑍍𑌚𑍀𑌰𑍍𑌣𑍇 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑍍𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌭𑍋𑌜𑌨𑌮𑍍 ।
𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌂 𑌦𑌦𑍍𑌯𑌾𑌤𑍍 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌜𑌪𑍇𑌦𑍍 𑌦𑍍𑌵𑌿𑌜𑌃 ॥
𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌨𑍍 𑌭𑍋𑌜𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌤𑍁 𑌗𑍋𑌘𑍍𑌨𑌃 𑌶𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌤𑍍𑌯𑌸𑌂𑌶𑌯𑌃' 𑌇𑌤𑌿 ॥

𑌯𑌾𑌜𑍍𑌞𑌵𑌲𑍍𑌕𑍍𑌯𑌃 —

'𑌪𑌞𑍍𑌚𑌗𑌵𑍍𑌯𑌂 𑌪𑌿𑌬𑍇𑌦𑍍𑌗𑍋𑌘𑍍𑌨𑍋 𑌮𑌾𑌸𑌮𑌾𑌸𑍀𑌤 𑌸𑌂𑌯𑌤𑌃 ।
𑌗𑍋𑌷𑍍𑌠𑍇𑌶𑌯𑍋 𑌗𑍋𑌽𑌨𑍁𑌗𑌾𑌮𑍀 𑌗𑍋𑌪𑍍𑌰𑌦𑌾𑌨𑍇𑌨 𑌶𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌤𑌿 ॥
𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌂 𑌚𑍈𑌵𑌾𑌤𑌿𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌂 𑌚 𑌚𑌰𑍇𑌦𑍍𑌵𑌾𑌪𑌿 𑌸𑌮𑌾𑌹𑌿𑌤𑌃 । 𑌦𑌦𑍍𑌯𑌾𑌤𑍍
𑌤𑍍𑌰𑌿𑌰𑌾𑌤𑍍𑌰𑌂 𑌚𑍋𑌪𑍋𑌷𑍍𑌯 𑌵𑍃𑌷𑌭𑍈𑌕𑌾𑌦𑌶𑌾𑌸𑍍𑌤𑍁 𑌗𑌾𑌃' 𑌇𑌤𑌿 ॥

---

மூன்று வயது சென்ற பசுவின் வதத்தில் மூன்ருவது விதி. அதற்கு மேலான வயதுள்ள பசுவின் வதத்தில் நான்காவது விதி என்பதாம்.

இவ்விதம் சொல்லப்பட்டுள்ள வ்ரதத்தை யனுஷ்டித்த பிறகு செய்யவேண்டியதைச் சொல்லுகிருர், **பராசரர்:**— ப்ராயப்சித்தம் செய்யப்பட்ட பிறகு ப்ராம்ஹணர்களுக்குப் போஜனம் செய்விக்க வேண்டும். ப்ராம்ஹணர்களுக்குத் தக்ஷிணையைக் கொடுக்க வேண்டும். சுத்தமான (பவமான ஸூக்தம் முதலான) மந்த்ரங்களை ஜபிக்கவேண்டும். ப்ராம்ஹணர்களையும் போஜனம் செய்வித்தால் பசுவைக் கொன்றவன் சுத்தனுகிருன். ஸம்சயமில்லை.

**யாஜ்ஞவல்க்யர்:**— பசுவைக் கொன்றவன் பஞ்சகவ்யத்தையே பருகவேண்டும். போஜனம் செய்யக்கூடாது. ஒரு மாஸம் முழுவதும் நியமமுடையவனுயிருக்கவேண்டும். மாட்டுக்கொட்டிலிலேயே படுக்கவேண்டும். பசுக்களைத் தொடர்ந்து செல்லவேண்டும். ஒரு பசுவைத் தானம் செய்தால் சுத்தனுகிருன். அல்லது ப்ராஜாபத்ய க்ருச்ரம், அதிக்ருச்ரம் இவைகளையாவது நியமத்துடன் அனுஷ்டிக்க வேண்டும். அல்லது மூன்று நாள் உபவாஸமிருந்து ஒரு எருது, பத்துப் பசுக்கள் இவைகளையாவது கொடுக்கவேண்டும்.

𑌗𑍋𑌵𑌧𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌾𑌨𑍍𑌯𑌾𑌹 𑌪𑌰𑌾𑌶𑌰𑌃—

‘𑌰𑍋𑌧𑌬𑌨𑍍𑌧𑌨𑌯𑍋𑌕𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌘𑌾𑌤𑌶𑍍𑌚𑍇𑌤𑌿 𑌵𑌧𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌧𑌃’ 𑌇𑌤𑌿॥ 𑌵𑌧𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌮𑌿𑌤𑌿 𑌶𑍇𑌷𑌃॥

𑌤𑍇𑌷𑍁 𑌵𑌧𑍇𑌷𑍁 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌨𑍍𑌯𑌾𑌹 𑌸 𑌏𑌵—

‘𑌪𑌾𑌦𑌂 𑌰𑍋𑌧𑍇 𑌚𑌰𑍇𑌤𑍍𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌂 𑌪𑌾𑌦𑌮𑍇𑌕𑌂 𑌤𑍁 𑌬𑌨𑍍𑌧𑌨𑍇। 𑌯𑍋𑌕𑍍𑌤𑍍𑌰𑍇𑌷𑍁 𑌪𑌾𑌦𑌹𑍀𑌨𑌂 𑌸𑍍𑌯𑌾𑌚𑍍𑌚𑌰𑍇𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂 𑌨𑌿𑌪𑌾𑌤𑌨𑍇’ 𑌇𑌤𑌿॥

𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌕𑍍𑌤𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌵𑍍𑌰𑌤𑌸𑍍𑌯 𑌪𑌾𑌦𑌾𑌦𑌿𑌭𑍇𑌦𑍇𑌨 𑌰𑍋𑌧𑌾𑌦𑌿𑌵𑌧𑍇𑌷𑍁 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌨𑍍𑌯𑌵𑌗𑌨𑍍𑌤𑌵𑍍𑌯𑌾𑌨𑌿॥

𑌰𑍋𑌧𑌬𑌨𑍍𑌧𑌨𑍇 𑌹𑌿𑌤𑍇 𑌅𑌹𑌿𑌤𑍇 𑌚। 𑌤𑌤𑍍𑌰𑌾𑌹𑌿𑌤𑌸𑍍𑌯 𑌵𑌧𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌰𑍋𑌧𑌾𑌦𑍇𑌃 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑌾𑌹 𑌪𑌰𑌾𑌶𑌰𑌃—

‘𑌗𑍋𑌵𑌾𑌟𑍇 𑌵𑌾 𑌗𑍃𑌹𑍇 𑌵𑌾𑌽𑌪𑌿 𑌦𑍁𑌰𑍍𑌗𑍇𑌷𑍍𑌵𑌪𑍍𑌯𑌸𑌮𑍇𑌷𑍁 𑌚। 𑌨𑌦𑍀𑌷𑍍𑌵𑌥 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑍇𑌷𑍁 𑌤𑍍𑌵𑌨𑍍𑌯𑍇𑌷𑍁 𑌚 𑌨𑌦𑍀𑌮𑍁𑌖𑍇॥ 𑌦𑌗𑍍𑌧𑌦𑍇𑌶𑍇

---

கோ வதத்திற்குக் காரணங்களைச் சொல்லுகிறார், **பராசரர்**:— அடைத்தல், கட்டிவைத்தல், கயிறு, அடித்தல் என்று நான்குவிதம் வதத்தின் காரணம்.

அந்த வத காரணங்களில் ப்ராயஶ்சித்தத்தைச் சொல்லுகிறார்,

**பராசரரே**:— அடைத்தலில்-நாலில் ஒரு பங்கு க்ருச்ரத்தையும், கட்டிவைத்தலில்—இரண்டில் ஒரு பங்கு க்ருச்ரத்தையும், கயிறுகளில்-முக்கால் க்ருச்ரத்தையும், அடிப்பதில்-முழு க்ருச்ரத்தையும் அனுஷ்டிக்கவேண்டும்.

முன் சொல்லப்பட்ட ப்ராஜாபத்ய வ்ரதத்தின் கால் பாகம் முதலிய பேதத்தால் அடைப்பது முதலியதால் உண்டாகிய வதங்களில் ப்ராயஶ்சித்தங்கள் அறியத்தகுந்தவை.

அடைத்தல், கட்டிவைத்தல் என்ற இரண்டும் ஹிதங்களும் அஹிதங்களுமாய் உள்ளன. அவைகளுள் அஹிதமான வத காரணமான அடைத்துவைத்தல் முதலியதின் ஸ்வரூபத்தைச் சொல்லுகிறார்,

**பராசரர்**:— "பசுக்கொட்டிலிலாவது, வீட்டிலாவது, போக முடியாத இடங்களிலாவது, மேடு பள்ளமுள்ள இடத்திலாவது, நதிகளிலாவது, ஸமுத்ரத்திலாவது, மற்ற இடங்களிலாவது,

ரோதா காவ: ஸூத்ரேணாத்ர உச்யதே। யோக்த்ராபிகாதேனோத்ஸ்ய
கண்டாஹாரணபூஷணை:॥ க்ருஹே வாபி வநே வாபி
பத்தா ஸம்யக்ம்ருதா யதி। ததேவ பந்தநம் வித்யாத் காமா
காமக்ருதம் யதி॥ ஹலே வா சகடே பங்க்தௌ ப்ருஷ்டே வா
பீடிதோ நரை:। ஶரவிர்ம்ருத்யுமாப்நோதி யோக்த்ரோ
பவதி தத்வத:॥ மத்த: ப்ரமத்த உந்மத்தஶ்சேதநோ வாப்யசேதந:।
காமாகாமக்ருதக்ரோதோ தண்டைர்ஹந்யாதுபலைஸ்ததா॥
ப்ரஹ்ருதா வா ம்ருதா வாபி தத்தி ஹேதுர்நிபாதநே இதி॥
அந்யேஷு = வாபீகூபாதிஷு।

நதீ ஸமுத்ர ஸங்கம ஸ்தலத்திலாவது, காட்டுத் தீயினால் பொசுக்கப்பட்ட இடத்திலாவது, அடைக்கப்பட்டுப் பசுக்கள் இறப்பது "ரோதம்" எனப்படுகிறது. தும்பு, தாவணி, கயிறு, கழுத்து ஆபரணம், மற்ற ஆபரணம், இவைகளால் வீட்டிலாவது வனத்திலாவது, கட்டப்பட்ட பசு இறந்தால் அதை, "பந்தனம்" என்று அறியவும். அது காமத்தால் செய்யப்பட்டாலும், அகாமத்தால் செய்யப்பட்டாலும். கலப்பையிலோ, வண்டியிலோ, வரிசையிலோ பின்பக்கத்தில் மனிதர்களால் குத்தப்பட்டுப் பெரிய எருதானது மரணமடைந்தால் அது "யோக்த்ரம்" எனப்படுகிறது. மத்தனுகவாவது, ப்ரமத்தனுகவாவது, உன்மத்தனுகவாவது, புத்தியுள்ளவனுகவாவது, புத்தியில்லாதவனுகவாவது, விரும்பியாவது, விரும்பாமலாவது, கோபமுள்ளவனுய், கழிகளாலாவது கற்களாலாவது அடித்தால், அடிக்கப்பட்டபசு மரித்தால் அது "காதம்" எனப்படுகிறது" என்று. மற்ற இடங்கள் = குட்டை, கிணறு முதலியவைகள். "தக்ததேசம்" என்பது காட்டுத் தீயினுல் எரிக்கப்பட்டு உஷ்ணமான சாம்பலுள்ள ப்ரதேசம். இந்த ஸ்தலங்களில் அடைத்து வைப்பதால் பசுக்கள் இறக்கின்றன. ஆகையால் அவ்விதமான அடைத்தல் "ரோதம்" எனப்படுகிறது. யோக்த்ரம் = வண்டியின் நுகத்தடியின் இரண்டு த்வாரங்களில் கட்டப்பட்டுள்ள கயிறு. தாமகம் = கறவைமாட்டைக் கட்டும் கயிறு. "தோரம்" = ஸாதாரணக்

𑌹𑍇𑌤𑍁𑌂 𑌪𑌾𑌶𑌃 । 𑌦𑍋𑌰𑌂 = 𑌰𑌜𑍍𑌜𑍁𑌮𑌾𑌤𑍍𑌰𑌮𑍍 । 𑌕𑌣𑍍𑌠𑌾𑌭𑌰𑌣𑌂 = 𑌕𑌿𑌙𑍍𑌕𑌿𑌣𑍍𑌯𑌾𑌦𑌿𑌃 । 𑌭𑍂𑌷𑌣𑌂 = 𑌲𑌲𑌾𑌟𑌾𑌦𑍌 𑌬𑌦𑍍𑌧𑌵𑌰𑌾𑌟𑌿𑌕𑌾𑌦𑌿 । 𑌪𑌙𑍍𑌕𑍍𑌤𑌿𑌃 = 𑌖𑌲𑍇 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌨𑌿𑌖𑌾𑌤𑌸𑍍𑌥𑌾𑌣𑍁𑌃 । 𑌗𑍋𑌪𑌤𑌿𑌃 = 𑌬𑌲𑍀𑌵𑌰𑍍𑌦𑌃 । 𑌮𑌤𑍍𑌤𑌃 = 𑌧𑌨𑌾𑌦𑌿𑌨𑌾 𑌦𑍃𑌪𑍍𑌤𑌃 । 𑌪𑍍𑌰𑌮𑌤𑍍𑌤𑌃 = 𑌮𑌦𑍍𑌯𑌪𑌾𑌨𑌾𑌦𑌿𑌨𑌾 𑌪𑌰𑌵𑌶𑌃 । 𑌉𑌨𑍍𑌮𑌤𑍍𑌤𑌃 = 𑌵𑍍𑌯𑌾𑌧𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾 𑌵𑌿𑌭𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌃 । 𑌚𑍇𑌤𑌨𑌃 = 𑌲𑍋𑌕𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑌕𑍍𑌷𑌮𑌃 । 𑌅𑌚𑍇𑌤𑌨𑌃 = 𑌮𑍂𑌢𑌃 । 𑌮𑌾𑌰𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑍀𑌤𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 = 𑌕𑌾𑌮𑌃 । 𑌵𑍍𑌯𑌰𑍍𑌥𑌚𑍇𑌷𑍍𑌟𑌾𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 = 𑌅𑌕𑌾𑌮𑌃 । 𑌤𑌾𑌭𑍍𑌯𑌾𑌮𑍁𑌤𑍍𑌪𑌾𑌦𑌿𑌤𑌃 𑌕𑍍𑌰𑍋𑌧𑍋 𑌯𑌸𑍍𑌯𑌾𑌸𑍌 । 𑌦𑌣𑍍𑌡𑌾𑌦𑌿𑌭𑌿𑌰𑍍𑌯𑌦𑌿 𑌹𑌨𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑌦𑌾 𑌮𑌰𑌣𑌾𑌭𑌾𑌵𑍇𑌨 𑌕𑍇𑌵𑌲𑌂 𑌪𑍍𑌰𑌹𑍃𑌤𑌾 𑌸𑍍𑌯𑌾𑌚𑍍𑌚, 𑌸 𑌕𑌾𑌮𑌕𑍃𑌤𑌸𑌂𑌪𑍍𑌰𑌹𑌾𑌰𑍋 𑌘𑌾𑌤𑌃 । 𑌅𑌕𑌾𑌮𑌕𑍃𑌤𑌂 𑌤𑍁 𑌮𑌾𑌰𑌣𑌂 𑌘𑌾𑌤 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥

𑌦𑌣𑍍𑌡𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍁𑌕𑍍𑌤𑌂 𑌤𑌤𑍍𑌰𑍈𑌵 —

‘𑌅𑌙𑍍𑌗𑍁𑌷𑍍𑌠𑌮𑌾𑌤𑍍𑌰𑌸𑍍𑌥𑍂𑌲𑌸𑍍𑌤𑍁 𑌬𑌾𑌹𑍁𑌮𑌾𑌤𑍍𑌰𑌃 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌤𑌃 ।
𑌆𑌰𑍍𑌦𑍍𑌰𑌸𑍍𑌤𑍁 𑌸𑌪𑌲𑌾𑌶𑌶𑍍𑌚 𑌦𑌣𑍍𑌡 𑌇𑌤𑍍𑌯𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇’ 𑌇𑌤𑌿 ॥

---

கயிறு. கண்டாபரணம் = சலங்கை முதலியது. பூஷணம் = நெற்றி முதலியதில் கட்டப்பட்ட சோழி முதலியது. பங்க்தி: = களத்தில் நடுவில் புதைக்கப்பட்டிருக்கும் கட்டை. மத்தன் = தனம் முதலியதால் மதமுள்ளவன். ப்ரமத்தன் = மத்யபானம் முதலியதால் பரவசனாயிருப்பவன். உன்மத்தன் = வ்யாதி முதலியதால் புத்தியில்லாதவன். சேதனன் = லோக வ்யவஹாரமறிந்தவன். அசேதனன் = மூடன். காம: = கொல்வேன் என்று புத்தி. அகாம: = பயனற்ற சேஷ்டை மட்டில். அவைகளால் உண்டாக்கப்பட்ட கோபத்தையுடையவன்—காமாகாம க்ருதக்ரோதன். கழி முதலியவைகளால் எப்பொழுது அடிப்பானோ அப்பொழுது மரணமில்லாமல் அடிக்கப்பட்டதாய்மட்டில் ஆகும். அந்த இச்சையால் செய்யப்பட்ட அடியானது “காதம்”. இச்சையில்லாமல் செய்யப்பட்ட கொலையோ எனில் அது “காதம்” எனப்படுகிறது.

தண்டத்தின் லக்ஷணம் சொல்லப்பட்டுள்ளது,

பராசரராலேயே:— பெருவிரல் அளவு பருமனுடையதும், கையளவு நீளமுள்ளதும், ஈரமுள்ளதும், இலைகளுடன் கூடியதுமாகியது “தண்டம்” எனப்படுகிறது.

अधिकप्रमाणदण्डादिभिर्मरणे तु प्रायश्चित्तस्य द्विगुणत्वमाह स एव—

"दण्डादूर्ध्वं यदान्येन प्रहारादभिपातयेत् । प्रायश्चित्तं तदा प्रोक्तं द्विगुणं गोवधे चरेत्" इति ॥ दण्डादूर्ध्वमधिकप्रमाणेनान्येन लगुडादिना पातयेत् = मारयेत् । अकामकृतेऽपि वधे द्विगुणमेव चरितव्यमित्यर्थः ॥

द्विगुणप्रायश्चित्तस्य निमित्तान्तरमाह स एव—

"व्याधितानां बहूनां च बन्धने रोधनेऽपि वा । द्विगुणं तु व्रतस्यास्य प्रायश्चित्तं विशुद्धये" इति ॥

कामकृतगोवधे निमित्तविशेषानुबन्धेन प्रायश्चित्तविशेषान् दक्षिणासहितानाह स एव—

"काष्ठे लोष्टके पाषाणे शस्त्रेणैवोद्धतो

இதைவிட அதிக அளவுள்ள தண்டம் முதலியதால் கொன்ருல் ப்ராயஶ்சித்தம் இரண்டு மடங்கு என்ருர்,

பராசரர்:— "தண்டத்திற்கு மேற்பட்ட அதிக அளவுள்ள கழி முதலியதால் கொன்ருல், அப்பொழுது கோவதத்தைவிட இரண்டு மடங்கு அதிகமான ப்ராயஶ்சித்தத்தை யனுஷ்டிக்க வேண்டும்" என்று. தண்டத்துக்குமேல் அதிக அளவுள்ள பெருந் தடி முதலியதால் அடித்துக் கொன்ருல் இச்சையுடன் செய்யப் படாதிருந்தாலும் அந்த வதத்தில் இரண்டு மடங்கு ப்ராயஶ்சித் தத்தை யனுஷ்டிக்கப்படவேண்டும், என்று பொருள்.

இரண்டு மடங்கு ப்ராயஶ்சித்தத்திற்கு மற்ருெரு காரணத் தையும் சொல்லுகிருர்,

பராசரர்:— வ்யாதியுள்ள அநேகம் பசுக்களைக் கட்டிவைத் தாலும், அடைத்து வைத்தாலும் சொல்லிய வ்ரதத்தை இரண்டு மடங்காகச் சுத்திக்காக அனுஷ்டிக்கவேண்டும்.

புத்திபூர்வமாய்ச் செய்யப்பட்ட கோவதத்தில் காரணபேதங் களுக்குத் தகுந்தபடி ப்ராயஶ்சித்தபேதங்களைத் தக்ஷிணைகளுடன் கூடியதாய்ச் சொல்லுகிருர்,

பராசரர்:— கட்டை, மண்கட்டி, பாராங்கல், ஆயுதம் இவை

பலாத் । வ்யாபாதயதி யோ காம் து தஸ்ய ஶுத்திம் விநிர்திஶேத் ॥ சரேத் ஸாந்தபனம் காஷ்டே ப்ராஜாபத்யம் து லோஷ்டகே । தப்தக்ருச்ச்ரம் து பாஷாணே ஶஸ்த்ரேணாப்யதிக்ருச்ச்ரகம் । பஞ்ச ஸாந்தபனே காவ: ப்ராஜாபத்யே ததா த்ரய: । தப்தக்ருச்ச்ரே பவந்த்யஷ்டாவதிக்ருச்ச்ரே த்ரயோதஶ' இதி ॥

ஸாந்தபனாதீனாம் ஸ்வரூபமுபரிஷ்டாத் வக்ஷ்யதே ॥ க்ருஹே பத்தஸ்ய கோ: பந்தநிமித்தமரணே ப்ராயஶ்சித்தமாஹ ஸ ஏவ —

'பந்தபாஶநிரோதேன ம்ரியதே யதி கோபஶு: ।
பவேத் தத்ர பாபீ ஸ்யாத் ப்ராயஶ்சித்தார்தமர்ஹதி' இதி ॥

ஶ்ருங்கபங்காதௌ ப்ராயஶ்சித்தமாஹ ஸ ஏவ —

'பாஷாணேனாபி தண்டேன காவோ யேனாபிகாதிதா: ।
ஶ்ருங்கபங்கே சரேத் பாதம் த்வௌ பாதௌ நேத்ரபாதனே ॥

களால் பலமாய் அடித்து, பசுவை எவன் கொல்லுகின்றானோ அவனுக்கு ப்ராயஶ்சித்தத்தை (இவ்விதம்) விதிக்கவேண்டும். கட்டையினாலானால் ஸாந்தபன க்ருச்ரத்தையும், மண்கட்டியினாலானால் ப்ராஜாபத்யத்தையும், பாராங்கல்லினாலானால் தப்த க்ருச்ரத்தையும், ஆயுதத்தாலானால் அதிக்ருச்ரத்தையும் ப்ராயஶ்சித்தமாய் விதிக்கவேண்டும். ஸாந்தபன க்ருச்ரத்தின் முடிவில் ஐந்து பசுக்களையும், ப்ராஜாபத்ய க்ருச்ரத்தின் முடிவில் மூன்று பசுக்களையும், தப்தக்ருச்ரத்தின் முடிவில் எட்டுப் பசுக்களையும், அதிக்ருச்ரத்தின் முடிவில் பதின்மூன்று பசுக்களையும் தானம் கொடுக்கவேண்டும்.

ஸாந்தபனம் முதலியவைகளின் ஸ்வரூபம் மேலே சொல்லப்படும். வீட்டில் கட்டப்பட்ட பசுவுக்குக் கட்டுவதினால் உண்டாகிய மாரண விஷயத்தில் ப்ராயஶ்சித்தத்தைச் சொல்லுகிறார்,

பராசரரே:— வீட்டில் கட்டி, கயிறினால் நெருக்கப்பட்ட பசுவானது மரித்தால், கட்டினவன் பாபியாவான். கோவத ப்ராயஶ்சித்தத்தில் பாதி ப்ராயஶ்சித்தத்தை அவன் அனுஷ்டிக்கவேண்டும்.

கொம்பை ஒடிப்பது முதலியவைகளில் ப்ராயஶ்சித்தத்தைச் சொல்லுகிறார், பராசரரே:— கல்லினாலாவது, தண்டத்தினாலாவது, எவன் பசுக்களை அடிக்கின்றானோ, அவன் பசுவின் கொம்பை

ஶ்ருங்கபங்கே பாதக்ருச்ச்ரம் து அர்த்தம் பாதாவஶிஷ்டகே । த்ரிபாதம் சைவ கர்ணே து சரேத் ஸர்வம் நிபாதனே ॥ அதிதோஹே சரேத் பாதம் அர்த்தம் பாராதிவாஹனே । நாஸிக்யே பாதஹீனம் து சரேத் ஸர்வம் நிபாதனே ॥ ஶகா வேத்ரஹஸ்தை: காஷ்டைர்வா அஸ்த்ரைர்வா நிஹதா யதி । பாதம் பாதம் து ஹத்யாயாஶ்சரேயுஸ்தே ப்ருதக் ப்ருதக் ॥ தஹநாத்து விபத்யேத கோ பத்தா வா யோக்த்ரயந்த்ரித: । உக்தம் பராஶரேணைவ ஹ்யேகம் பாதம் யதா விதி ॥ கூபேஷு கட்டவாடேஷு வ்ருக்ஷச்சேதேஷு பாதயன் । கவாஶனேஷு விக்ரீணன் தத: ப்ராப்னோதி கோவதம்' இதி ॥

அங்குஷ்டமாத்ர ஸ்தூலஶ்ச இத்யுக்த ப்ரமாணோக்தேன லக்ஷணாயுக்தம் ப்ரஹாரே க்வசித் ப்ராயஶ்சித்தாபாவமாஹ ஸ ஏவ —

ஒடித்திருந்தால் நாலில் ஒருபங்கு ப்ராயஶ்சித்தத்தை அனுஷ்டிக்க வேண்டும். கண்ணை அடித்திருந்தால் பாதி ப்ராயஶ்சித்தத்தை யனுஷ்டிக்கவேண்டும். வாலை ஒடித்தால் கால் பாகம் ப்ராயஶ்சித்தத்தையும், எலும்பை ஒடித்தால் பாதி ப்ராயஶ்சித்தத்தையும், காதை ஒடித்தால் முக்கால் ப்ராயஶ்சித்தத்தையும், வதைத்தால் முழு ப்ராயஶ்சித்தத்தையும் அனுஷ்டிக்கவேண்டும். அதிகமாய்ச் சூடினால் கால் ப்ராயஶ்சித்தத்தையும், அதிகமாய்ச் சுமக்கச்செய் தால் பாதி ப்ராயஶ்சித்தத்தையும், மூக்கின் உபத்ரவத்தினாலானால் முக்கால் ப்ராயஶ்சித்தத்தையும், கொலையில் முழு ப்ராயஶ்சித்தத் தையும் அனுஷ்டிக்கவேண்டும். பலர்கள் கூடி ஒரு பசுவைத் தெய்வா தீனமாய்க் கொல்லநேர்ந்தால், அவர்களெல்லோரும் ப்ரம்ஹஹத்யா வ்ரதத்தின் நாலில் ஒரு பாகத்தைத் தனித்தனியே அனுஷ்டிக்க வேண்டும். கட்டப்பட்ட எருது நெருப்பினுல் இறந்தால், அவன் நாலில் ஒரு பாகம் ப்ராயஶ்சித்தத்தை அனுஷ்டிக்கவேண்டு மென்றார் பராசரர். கிணறுகளிலும், குட்டைகளிலும், மரம் வெட்டுமிடங்களிலும் போகும்படி செலுத்தியவனும், பசுவைத் தின்னும் புலையர்களிடம் விற்பவனும், பசுவைக் கொன்ற பாபத் தையே அடைவான்.

பெருவிரல் பருமனுள்ளது என்று சொல்லப்பட்ட லக்ஷண முள்ள தண்டத்தினுல் மேய்ப்பதற்காக அடித்தால் சில காலத்தில் ப்ராய்யஶ்சித்தம் இல்லை என்கிறார்,

'மூர்ச்சித: பதிதோ வாபி தண்டேநாபிஹதஸ்து ய: | உத்தாய யதி கச்சேத் பஞ்ச ஸப்த தசைவ வா || க்ராஸம் வா யதி க்ருஹ்ணீயாத் தோயம் வாபி பிபேத்யதி | பூர்வவ்யாதி ப்ரநஷ்டஸ்ய ப்ராயஶ்சித்தம் ந வித்யதே' இதி ||

அந்யத்ராபி க்வசித் ப்ராயஶ்சித்தாபாவமாஹாங்கிரா:—

'ஸாயம் ஸங்கோபநார்தம் து ந துஷ்யேத் ரோதபந்தயோ:' இதி ||

பராஶரோऽபி—

'கவாம் ஸம்ரக்ஷணார்தாய ந துஷ்யேத் ரோதபந்தயோ: | தத்வதம் து ந தம் வித்யாத் காமாகாமக்ருதம் ததா || கூபகாதே தடாகாதே நதீகாதே ததைவ ச | அந்யேஷு தர்மகாதேஷு ப்ராயஶ்சித்தம் ந வித்யதே || வேஶ்மத்வாரே நிவாஸேஷு யோ நர: காதமிச்சதி | ஸ்வகார்யக்ருஹகாதேஷு ப்ராயஶ்சித்தம் விநிர்திசேத் || நிஶிபந்தநிரோதேஷு ஸர்பவ்யாக்ரஹதே

**பராசரர்:-** தண்டத்தினுல் அடிக்கப்பட்ட பசு மூர்ச்சையடைந்தாலும், விழுந்தாலும் எப்பொழுது எழுந்து ஐந்து அல்லது ஏழு அல்லது பத்து அடிகள் நடந்தாலும், மறுபடி புல்லைத் தின்றாலும், தண்ணீரைக் குடித்தாலும், அது முன்பே வ்யாதியுள்ளதாகில் அவ் விஷயத்தில் பராயஶ்சித்தம் இல்லை.

மற்றும் ஒரு விஷயத்தில் ப்ராயஶ்சித்தம் இல்லை என்பதைச் சொல்லுகிறார்,

**அங்கிரஸ்:—** ஸாயங்காலத்தில் காப்பதற்காக அடைப்பதிலும், கட்டுவதிலும் தோஷமில்லை.

**பராசரரும்:—** பசுக்களைக் காப்பதற்காக அடைத்துவைப்பதிலும், கட்டுவதிலும் பாபம் இல்லை. அதனுல் பசு இறந்தால், அது எவ்வித வதமுமாகாது. கிணற்றிலும், குளத்திலும், நதியின் பள்ளத்திலும், மற்ற தர்மத்திற்கான பள்ளங்களிலும் விழுந்து மரித்தால் ப்ராயஶ்சித்தம் இல்லை. வீட்டின் வாசற்படியிலும், வஸிக்குமிடத்திலும், செய்யப்பட்ட பள்ளங்களிலும், தன் கார்யத்திற்காக வீட்டில் செய்யப்பட்ட பள்ளங்களிலும், பசு விழுந்து மரித்தால் ப்ராயஶ்சித்தம் உண்டு. இரவில் அடைத்திருந்தாலும், கட்டியிருந்தாலும், அப்பொழுது ஸர்ப்பம், புலி இவைகளால் கொல்லப்

ஷ்டே வா । அக்3நிவித்3யுத்3விபந்நேஷு ப்ராயஶ்சித்தம் ந வித்3யதே ॥ ஸங்க்3ராமே ப்ரஹதா யே ச யே த3க்3தா4 வேஶ்மகேஷு வா । தா3வாக்3நி க்3ராமகா4தேஷு ப்ராயஶ்சித்தம் ந வித்3யதே ॥ க்3ராமகா4தே ஶரௌகே4 ச வேஶ்மப4ங்கே3 நிபாதநே । அதிவ்ருஷ்டி ஹதாநாம் ச ப்ராயஶ்சித்தம் ந வித்3யதே ॥ யந்த்ரிதா கோ3ஶ்சிகித்ஸார்த்த2ம் க3ர்ப4மோக்ஷவிமோசநே । யத்நே க்ருதே விபத்3யேத ப்ராயஶ்சித்தம் ந வித்3யதே ॥

கேஶாநாம் ரக்ஷணார்த்தா2ய த்3விகு3ணம் வ்ரதமாசரேத் । த்3விகு3ணே வ்ரத ஆதி3ஷ்டே த3க்ஷிணா த்3விகு3ணா ப4வேத் ॥ ராஜா வா ராஜபுத்ரோ வா ப்3ராஹ்மணோ வா ப3ஹுஶ்ருத: । அக்ருத்வா வபநம் தஸ்ய ப்ராயஶ்சித்தம் விநிர்தி3ஶேத் ॥ ஸர்வாந் கேஶாந் ஸமுத்3த்4ருத்ய சே2த3யேத3ங்கு3லத்3வயம் । ஏவம் நாரீகுமாரீணாம் ஶிரஸோ முண்ட3நம் ஸ்ம்ருதம் ॥ ந ஸ்த்ரியா: கேஶவபநம் ந தூ3ரே ஶயநாஸநம் । க்3ருஹேஷு ஸததம்

---

பட்டாலும், நெருப்பு, இடி இவைகளால் இறந்தாலும் ப்ராயஸ்சித்தம் இல்லை. யுத்தத்தில் கொல்லப்பட்டாலும், வீடுகளில் பொசுக்கப்பட்டாலும், காட்டுத்தீ, க்ராமத்தில் நெருப்பு முதலியவைகளால் இறந்தாலும் ப்ராயஸ்சித்தம் இல்லை. பாணங்களால் க்ராமத்திற்குத் தொந்திரவினும், வீடு இடிந்து இறந்தாலும், அதிக மழையில் இறந்தாலும் ப்ராயஸ்சித்தம் இல்லை. வெளிவராத கர்ப்பத்தை வெளியாக்குவதற்காகக் கட்டப்பட்ட பசுவும், சிகித்ஸைக்காகக் கட்டப்பட்ட பசுவும் இறந்தால் ப்ராயஸ்சித்தமில்லை.

கேசங்களை ரக்ஷிக்க வேண்டுமானால், வ்ரதத்தை இரண்டு மடங்கு அனுஷ்டிக்கவேண்டும். வ்ரதம் இரண்டு மடங்கு விதிக்கப்பட்டால் தக்ஷிணையும் இரண்டு மடங்காகக் கொடுக்கப்படவேண்டும். அரசனாயினும், அரசனின்புத்ரனாயினும், அதிகமாகவேதசாஸ்த்ரம் கற்ற ப்ராம்ஹணனாயினும் அவர்களுக்கு வபனம் இல்லாமலே ப்ராயஸ்சித்தத்தை விதிக்கலாம். எல்லாக் கேசங்களையும் சேர்த்து நுனியில் இரண்டு விரல் அளவு கேசங்களைச் சேதிக்கவும். இவ்விதம் செய்வது ஸ்த்ரீகளுக்கும் பெண்களுக்கும் முண்டனம் என்று சொல்லப்படுகிறது. ஸ்த்ரீக்குக் கேசவபனமில்லை. தூரதேசத்தில் படுப்பது, இருப்பது என்பது இல்லை. வீட்டிலேயே நியமத்துடன்

𑌤𑌿𑌷𑍍𑌠𑍇𑌚𑍍𑌛𑍁𑌚𑌿𑌰𑍍𑌨𑌿𑌯𑌮𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 ॥ 𑌇𑌹 𑌯𑍋 𑌗𑍋𑌵𑌧𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌚𑍍𑌛𑌾𑌦𑌯𑌿𑌤𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌤𑌿 ॥ 𑌸 𑌯𑌾𑌤𑌿 𑌨𑌰𑌕𑌂 𑌘𑍋𑌰𑌂 𑌕𑌾𑌲𑌸𑍂𑌤𑍍𑌰𑌮𑌸𑌂𑌶𑌯𑌮𑍍 । 𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑍋 𑌨𑌰𑌕𑌾𑌤𑍍𑌤𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌲𑍋𑌕𑍇𑌷𑍁 𑌜𑌾𑌯𑌤𑍇 । 𑌕𑍍𑌲𑍀𑌬𑍋 𑌦𑍁𑌃𑌖𑍀 𑌚 𑌕𑍁𑌷𑍍𑌠𑍀 𑌚 𑌸𑌪𑍍𑌤 𑌜𑌨𑍍𑌮𑌾𑌨𑌿 𑌵𑍈 𑌨𑌰𑌃 ॥ 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌯𑍇𑌤𑍍 𑌪𑌾𑌪𑌂 𑌨𑌿𑌰𑍍𑌦𑌿𑌷𑍍𑌟𑌂 𑌵𑍍𑌰𑌤𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 । 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌬𑌾𑌲𑌨𑍃𑌪𑌗𑍋𑌵𑌿𑌪𑍍𑌰𑍇𑌷𑍍𑌵𑌤𑌿𑌕𑍋𑌪𑌂 𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌯𑍇𑌤𑍍’ 𑌇𑌤𑌿 ॥

𑌹𑍇𑌮𑌾𑌦𑍍𑌰𑍌—

‘𑌯𑍋 𑌵𑌿𑌪𑍍𑌰𑍋 𑌵𑍃𑌷𑌭𑌂 𑌹𑌨𑍍𑌯𑌾𑌚𑍍𑌛𑌿𑌵𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌙𑍍𑌕𑌿𑌤𑌂 𑌤𑌨𑍌 । 𑌤𑍍𑌰𑌿𑌵𑌾𑌰𑌂 𑌕𑍍𑌷𑍍𑌮𑌾𑌂 𑌪𑌰𑌿𑌕𑍍𑌰𑌮𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌵𑍍𑌰𑌤𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ॥ 𑌧𑌨𑍁𑌷𑍍𑌕𑍋𑌟𑌿𑌂 𑌤𑌤𑍋 𑌗𑌤𑍍𑌵𑌾 𑌗𑌨𑍍𑌧𑌮𑌾𑌦𑌨𑌪𑌰𑍍𑌵𑌤𑍇 । 𑌤𑌤𑍍𑌰 𑌸𑍍𑌨𑌾𑌤𑍍𑌵𑌾 𑌤𑍍𑌰𑌿𑌰𑌾𑌤𑍍𑌰𑌂 𑌚 𑌰𑌾𑌮𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌨𑌿𑌰𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌚 ॥ 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌂 𑌦𑌤𑍍𑌵𑌾 𑌗𑌾𑌂 𑌚 𑌶𑍁𑌧𑍍𑌯𑍇𑌨𑍍𑌨 𑌸𑌂𑌶𑌯𑌃’ 𑌇𑌤𑌿 ॥

𑌹𑍇𑌮𑌾𑌦𑍍𑌰𑍌—

‘[illegible] 𑌹𑌨𑍍𑌯𑌤𑍇 𑌵𑌿𑌪𑍍𑌰𑍈𑌰𑍍𑌲𑍋𑌷𑍍𑌟𑌦𑌣𑍍𑌡𑌶𑌿𑌲𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 । 𑌤𑌤𑍍𑌰

---

இருக்கவேண்டும். சுத்தையாய் வ்ரதத்தை யனுஷ்டிக்கவேண்டும். இவ்வுலகில் கோவதத்தைச் செய்துவிட்டு எவன் அதை மறைப்பதற்கு விரும்புகின்றானோ அவன் கோரமான காலஸூத்ர மெனும் நரகத்தை யடைகின்றான். ஸம்சயமில்லை. அந்த நரகத்தை யனுபவித்து அங்கிருந்து திரும்பியவனாய் மனித உலகில் நபும்ஸகனாயும், துக்கமுடையவனாயும், குஷ்டரோகமுடையவனாயும், ஏழு ஜன்மங்களை அடைவான். ஆகையால் பாபத்தை வெளிப்படுத்த வேண்டும். எப்பொழுதும் ப்ராயச்சித்தத்தை யனுஷ்டிக்க வேண்டும். ஸ்த்ரீ, பாலர், அரசன், பசு, ப்ராம்ஹணன் இவர்களிடத்தில் அதிக கோபத்தை வர்ஜிக்கவேண்டும்.

**ஹேமாத்ரியில்:—** சரீரத்தில் சிவலிங்கத்தால் அடையாளமிடப்பட்ட வ்ருஷபத்தை எவன் கொல்வானோ, அவன் பூமியை மூன்று தடவை ப்ரதக்ஷிணம் செய்து, ப்ரம்ஹசர்ய வ்ரதத்திலிருப்பவனாய், தனுஷ்கோடிக்குச் சென்று, கந்தமாதன பர்வதம் சென்று, அங்கு மூன்று நாள் ஸ்நானம் செய்து, ஸ்ரீராமநாதரைத் தர்சித்து, சாந்த்ராயண வ்ரதத்தை யனுஷ்டித்து, கோதானம் செய்தால் சுத்தனாவான். ஸம்சயமில்லை.

**ஹேமாத்ரியில்:—** ப்ராம்ஹணர்கள் கல், தண்டம், சிலை முதலிய

𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌤𑍍𑌰𑌯𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌪𑌿𑌬𑍇𑌯𑍁𑌃 𑌪𑌞𑍍𑌚𑌗𑌵𑍍𑌯𑌕𑌮𑍍 ॥ 𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌪𑍍𑌨𑍁𑌯𑍁𑌰𑍇𑌤𑍇𑌨 𑌨𑌾𑌨𑍍𑌯𑌥𑌾 𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑍇' 𑌇𑌤𑌿 ॥

## 𑌪𑍍𑌰𑌾𑌣𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌵𑌧𑍇 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍍 ।

𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌾𑌣𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌵𑌧𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇—
𑌤𑌤𑍍𑌰 𑌮𑌨𑍁𑌃—

'𑌮𑌾𑌰𑍍𑌜𑌾𑌰𑌨𑌕𑍁𑌲𑍌 𑌹𑌤𑍍𑌵𑌾 𑌚𑌾𑌷𑌂 𑌮𑌣𑍍𑌡𑍂𑌕𑌮𑍇𑌵 𑌚 । 𑌶𑍍𑌵𑌗𑍋𑌧𑍋𑌲𑍂𑌕𑌕𑌾𑌕𑌾𑌂𑌶𑍍𑌚 𑌶𑍂𑌦𑍍𑌰𑌹𑌤𑍍𑌯𑌾𑌵𑍍𑌰𑌤𑌂 𑌚𑌰𑍇𑌤𑍍 ॥ 𑌪𑌯𑌃 𑌪𑌿𑌬𑍇𑌤𑍍𑌤𑍍𑌰𑌿𑌰𑌾𑌤𑍍𑌰𑌂 𑌵𑌾 𑌯𑍋𑌜𑌨𑌂 𑌵𑌾𑌽𑌧𑍍𑌵𑌨𑍋 𑌵𑍍𑌰𑌜𑍇𑌤𑍍 । 𑌉𑌪𑌸𑍍𑌪𑍃𑌶𑍇𑌤𑍍𑌸𑍍𑌰𑌵𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌂 𑌵𑌾 𑌸𑍂𑌕𑍍𑌤𑌂 𑌵𑌾𑌽𑌬𑍍𑌦𑍈𑌵𑌤𑌂 𑌜𑌪𑍇𑌤𑍍 ॥ 𑌅𑌸𑍍𑌥𑌿𑌮𑌤𑌾𑌂 𑌤𑍁 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌨𑌾𑌂 𑌸𑌹𑌸𑍍𑌰𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌮𑌾𑌪𑌣𑍇 । 𑌪𑍂𑌰𑍍𑌣𑍇 𑌚𑌾𑌨𑌸𑍍𑌯𑌨𑌸𑍍𑌥𑍍𑌨𑌾𑌂 𑌤𑍁 𑌶𑍂𑌦𑍍𑌰𑌹𑌤𑍍𑌯𑌾𑌵𑍍𑌰𑌤𑌂 𑌚𑌰𑍇𑌤𑍍' 𑌇𑌤𑌿 ॥
𑌪𑌕𑍍𑌷𑌿𑌷𑍁 𑌕𑍃𑌮𑍍𑌯𑌾𑌦𑌿𑌷𑍁 𑌚 𑌅𑌸𑍍𑌥𑌿𑌮𑌤𑍍𑌸𑌹𑌸𑍍𑌰𑌵𑌧𑍇 𑌶𑌕𑌟𑌪𑍂𑌰𑌿𑌤𑌾𑌨𑌸𑍍𑌥𑌿𑌵𑌧𑍇 𑌚 𑌶𑍂𑌦𑍍𑌰𑌹𑌤𑍍𑌯𑌾𑌵𑍍𑌰𑌤𑌂 𑌚𑌰𑍇𑌦𑌿𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥

---

வைகளால் எருதை அடித்துக் கொன்றால் மூன்று தப்தக்ருச்ரங்களைச் செய்து, பஞ்சகவ்யப்ராசனம் செய்யவேண்டும். இதனால் சுத்தியையடைவார்கள். இவ்விதம் செய்யாவிடில் சுத்தியில்லை.

## மற்ற ப்ராணிகளைக் கொன்றால் ப்ராயஸ்சித்தம்.

ப்ரஸங்க வசத்தால் மற்ற ப்ராணிகளைக் கொல்வதற்கும் ப்ராயஸ்சித்தம் சொல்லப்படுகிறது. அதில்,

மனு:- "பூனை, கீரி, காடை, தவளை, நாய், உடும்பு, கோட்டான், காக்கை, இவைகளைக் கொன்றால் சூத்ரனைக் கொன்றதற்கு விதிக்கப்பட்ட ப்ராயஸ்சித்தத்தை யனுஷ்டிக்கவேண்டும். மூன்று நாள் முழுவதும் பாலைமட்டில் பருகவேண்டும். ஒரு யோஜனை தூரமுள்ள வழியையாவது நடக்கவேண்டும். நதியில் ஸ்நானமாவது செய்ய வேண்டும். ஜலதேவதாகமான ஸூக்தத்தையாவது ஜபிக்க வேண்டும். எலும்புள்ள ப்ராணிகளை ஆயிரக்கணக்காகக் கொன்றால், எலும்பில்லாத ப்ராணிகளை ஒரு வண்டிக்கணக்காய்க் கொன்றால் சூத்ரனைக் கொன்றதற்கு விதிக்கப்பட்ட ப்ராயஸ்சித்தத்தை யனுஷ்டிக்கவேண்டும்," என்று. பக்ஷிகளிலும், புழு முதலியவைகளிலும், எலும்புள்ளவைகளை ஆயிரக்கணக்கில் கொன்றாலும்,

आपस्तम्बः—

'वायसप्रचलाकबर्हिणचक्रवाकहंसभासमण्डूकनकुलडेरिकाश्वहिंसायां शूद्रवत् प्रायश्चित्तम्' इति॥

प्रत्येकवधे तु स एव —

'किञ्चिद्देयं तु विप्राय दद्यादस्थिमतां वधे। अनस्थ्नां चैव हिंसायां प्राणायामेन शुध्यति' इति॥

पराशरः—

'हत्वा मूषिकमार्जारसर्पाजगरडुण्डुभान्। कृसरं भोजयेद्विप्रान् लोहदण्डश्च दक्षिणा' इति॥ कृसरं = तिलमुद्गमिश्रौदनः। लोहशब्देन कार्ष्णायस उच्यते॥

याज्ञवल्क्यः—

'मार्जारगोधानकुलमण्डूकश्वपतत्रिणः। हत्वा त्र्यहं पिबेत्क्षीरं कृच्छ्रं वा पादिकं चरेत्॥ गजे

---

எலும்பில்லாதவைகளை ஒரு வண்டியளவு கொன்றாலும் சூத்ரனைக் கொன்றதற்காக உள்ள வ்ரதத்தை யனுஷ்டிக்கவேண்டும், என்று பொருள்.

**ஆபஸ்தம்பர்:**— காக்கை, கழுகு, மயில், சக்ரவாகம், ஹம்ஸம், தண்ணீர்க்காக்கை, தவளை, நரி, மூஞ்ஜூறு, குதிரை இவைகளில் ஒன்றைக் கொன்றால் சூத்ரனுடைய வதத்தில் சொல்லிய ப்ராயச்சித்தத்தை யனுஷ்டிக்கவேண்டும்.

தனித்தனியே வதஞ்செய்தால் **ஆபஸ்தம்பரே:**— எலும்புள்ள ப்ராணிகளைக் கொன்றால், ப்ராம்ஹணனுக்கு ஸ்வல்ப த்ரவ்யத்தைக் கொடுக்கவேண்டும். எலும்பில்லாத ஒன்றைக் கொன்றால் ப்ராணாயாமத்தால் சுத்தனுவான்.

**பராசரர்:**- எலி, பூனை, ஸர்ப்பம், மலைப்பாம்பு, இருதலைப்பாம்பு, இவைகளைக் கொன்றால், ப்ராம்ஹணர்களுக்கு எள்ளுடனும் பயறுடனும் சேர்ந்த அன்னத்தைப் புஜிப்பிக்கவேண்டும். இரும்புத் தடியும் தக்ஷிணையாகக் கொடுக்கப்படவேண்டும்.

**யாஜ்ஞவல்க்யர்:**— பூனை, உடும்பு, கீரி, தவளை, நாய், பக்ஷி இவைகளைக் கொன்றால் மூன்று நாள் பாலை மட்டில் பருகவேண்

𑌨𑍀𑌲𑌵𑍃𑌷𑌾𑌃 𑌪𑌞𑍍𑌚 𑌶𑍁𑌕𑍇 𑌵𑌤𑍍𑌸𑍋 𑌦𑍍𑌵𑌿𑌹𑌾𑌯𑌨𑌃 । 𑌖𑌰𑌾𑌜𑌮𑍇𑌷𑍇
𑌷𑍁 𑌵𑍃𑌷𑍋 𑌦𑍇𑌯𑌃 𑌕𑍍𑌰𑍌𑌞𑍍𑌚𑍇 𑌤𑍍𑌰𑌿𑌹𑌾𑌯𑌨𑌃 ॥ 𑌹𑌂𑌸𑌶𑍍𑌯𑍇𑌨
𑌕𑌪𑌿𑌕𑍍𑌰𑌵𑍍𑌯𑌾𑌜𑍍𑌜𑌲𑌸𑍍𑌥𑌲𑌶𑌿𑌖𑌣𑍍𑌡𑌿𑌨𑌃 । 𑌭𑌾𑌸𑌂 𑌚 𑌹𑌤𑍍𑌵𑌾 𑌦𑌦𑍍𑌯𑌾𑌦𑍍𑌗𑌾
𑌮𑌕𑍍𑌰𑌵𑍍𑌯𑌾𑌦𑌸𑍍𑌤𑍁 𑌵𑌤𑍍𑌸𑌿𑌕𑌾𑌮𑍍 ॥ 𑌉𑌰𑌗𑍇𑌷𑍍𑌵𑌾𑌯𑌸𑍋 𑌦𑌣𑍍𑌡𑌃 𑌪𑌣𑍍𑌡𑌕𑍇 𑌤𑍍𑌰𑌪𑍁
𑌸𑍀𑌸𑌕𑌮𑍍 । 𑌕𑍋𑌲𑍇 𑌘𑍃𑌤𑌘𑌟𑍋 𑌦𑍇𑌯 𑌉𑌷𑍍𑌟𑍍𑌰𑍇 𑌗𑍁𑌞𑍍𑌜𑌾 𑌹𑌯𑍇
𑌽𑌂𑌶𑍁𑌕𑌮𑍍 ॥ 𑌤𑌿𑌤𑍍𑌤𑌿𑌰𑍌 𑌤𑍁 𑌤𑌿𑌲𑌦𑍍𑌰𑍋𑌣𑌂 𑌗𑌜𑌾𑌦𑍀𑌨𑌾𑌮𑌶𑌕𑍍𑌨𑍁𑌵𑌨𑍍 ।
𑌦𑌾𑌨𑌂 𑌦𑌾𑌤𑍁𑌂 𑌚𑌰𑍇𑌤𑍍𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌮𑍇𑌕𑍈𑌕𑌸𑍍𑌯 𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌯𑍇 ॥ 𑌫𑌲
𑌪𑍁𑌷𑍍𑌪𑌾𑌨𑍍𑌨𑌰𑌸𑌜𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌘𑌾𑌤𑍇 𑌘𑍃𑌤𑌾𑌶𑌨𑌮𑍍 । 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍𑌸𑌾𑌸𑍍𑌥𑌿
𑌵𑌧𑍇 𑌦𑍇𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌯𑌾𑌮𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑌸𑍍𑌥𑌿𑌕𑍇 । 𑌵𑍃𑌕𑍍𑌷𑌗𑍁𑌲𑍍𑌮𑌲𑌤𑌾𑌵𑍀𑌰𑍁
𑌚𑍍𑌛𑍇𑌦𑌨𑍇 𑌜𑌪𑍍𑌯𑌮𑍃𑌕𑍍𑌶𑌤𑌮𑍍 ॥ 𑌸𑍍𑌯𑌾𑌦𑍋𑌷𑌧𑌿𑌵𑍃𑌥𑌾𑌚𑍍𑌛𑍇𑌦𑍇 𑌕𑍍𑌷𑍀𑌰𑌾𑌶𑍀
𑌗𑍋𑌨𑍁𑌗𑍋 𑌦𑌿𑌨𑌮𑍍' 𑌇𑌤𑌿 ॥

---

டும். அல்லது நாலில் ஒரு பங்கு க்ருச்ரத்தை யனுஷ்டிக்கவேண்டும். யானையைக் கொன்றால் ஐந்து கறுப்புக் காளைகளைக் கொடுக்க வேண்டும். கிளியைக் கொன்றால் இரண்டு வயதுள்ளகன்றைக் கொடுக்கவேண்டும். கழுதை, ஆடு, மேஷம், க்ரௌஞ்சமிவைகளின் வதத்தில் மூன்று வயதுள்ள வ்ருஷபத்தைக் கொடுக்கவேண்டும். ஹம்ஸம், பருந்து, குரங்கு, மாம்ஸத்தைப் புஜிக்கும் பக்ஷி, நீர் மயில், மயில், தண்ணீர்க்காக்கை இவைகளைக் கொன்றால், பசுவைக் கொடுக்கவேண்டும். மாம்ஸம் புஜிக்காத பக்ஷிகளைக் கொன்றால் சிறிய பெண்ணான பசுக்கன்றை (கிடாரியை)க் கொடுக்கவேண்டும். பாம்புகளைக் கொன்றால் இரும்புத்தடி தக்ஷிணை. நபும்ஸகவதத்தில் பித்தளை, ஈயம் இவைகளைக் கொடுக்கவும். பன்றியைக் கொன்றால் நெய்க்குடத்தைக் கொடுக்கவும். ஒட்டகையானால் குன்றிமணி தங்கம் கொடுக்கவும். குதிரையானால் வஸ்த்ரம் கொடுக்கவும். தித்திரி பக்ஷியைக் கொன்றால் பதக்கு எள் கொடுக்கவும். யானை முதலியதைக் கொடுக்க சக்தியற்றவன் ஒவ்வொரு தானத்திற்கும் ஒவ்வொரு க்ருச்ரத்தை யனுஷ்டிக்கவும். பழம், புஷ்பம், அன்னம், ரஸவஸ்து இவைகளில் உண்டாகும் ப்ராணியைக் கொன்றால் நெய்யை ப்ராசனம் செய்யவேண்டும். எலும்புடன் கூடிய ஜந்துவைக் கொன்றால் யாதாவது ஒன்றைத் தானம் செய்ய வேண்டும். எலும்பு இல்லாத ஜந்துவின் வதத்தில் ப்ராணாயாமம் செய்யப்படவேண்டும். மரம், புதர், கொடி, கொடிகள் நிறைந்த புதர் இவைகளை வெட்டினால் நூறு வேதருக்குகளை ஜபிக்கவேண்டும்.

பராசர:—

கஜஸ்ய ச துரங்கஸ்ய மஹிஷோஷ்ட்ரநிபாதநே । ப்ராயச்சித்தமஹோராத்ரம் த்ரிஸந்த்யமவகாஹநம் ॥ குரங்கம் வாநரம் ஸிம்ஹம் சித்ரம் வ்யாக்ரம் து காதயந் । ஶுத்த்யதே ஸ த்ரிராத்ரேண விப்ராணாம் தர்ப்பணேந ச ॥ வ்ருகஜம்பூகருக்ஷாணாம் தரக்ஷுச்வாநகாதக: । திலப்ரஸ்தம் த்விஜே தத்யாத் வாயுபக்ஷோ திநத்ரயம் ॥ ம்ருகரோஹிவராஹாணாமவேர்பஸ்தஸ்ய காதக: । அபாலக்ருஷ்டமஶ்நீயாதஹோராத்ரமுபோஷ்ய ஸ: । ஶிம்ஶுமாரம் ததா கோதாம் ஹத்வா கூர்மம் ச ஶல்யகம் । வ்ருந்தாகபலபக்ஷீ வாப்யஹோராத்ரேண ஶுத்த்யதி ॥ ஏவம் சதுஷ்பதாநாம் ச ஸர்வேஷாம் வநசாரிணாம் । அஹோராத்ரோஷிதஸ்திஷ்டேஜ்ஜபேத்வா ஜாதவேதஸம் ॥ க்ரௌஞ்சஸாரஸஹம்ஸாம்ஶ்ச சக்ரவாகம் ச குக்குடம் । ஜாலபாதம் ச ஶரபம் அஹோரா

---

ஓஷதிகளை வீணாக வெட்டினால் ஒரு நாள் முழுவதும் பாலை மட்டில் பருகி, பசுவைத் தொடர்ந்து செல்பவனா யிருக்கவேண்டும்.

**பராசரர்:—** யானையையாவது, குதிரையையாவது, எருமைக் கடாவையாவது, ஒட்டகையையாவது கொன்றால், ஒரு நாள் முழுவதும் உபவாஸம் ப்ராயச்சித்தம். மூன்று காலமும் ஸ்நானம் செய்யவேண்டும். மான், குரங்கு, ஸிம்ஹம், புலி, சித்ரம் இவைகளைக் கொன்றால் மூன்று நாள் ப்ராயச்சித்தத்தால் சுத்தனாகிறான். ப்ராம்ஹண போஜனமும் செய்விக்கவேண்டும். செந்நாய், நரி, கரடி, சிவிங்கி, நாய் இவைகளைக் கொன்றவன் மூன்று நாள் வாயுவை மட்டில் பக்ஷித்து உபவாஸமிருந்து ஒரு படி எள்ளை ப்ராம்ஹணனுக்குக் கொடுக்கவேண்டும். பெண் மான், பன்றி, செம்மறியாடு, வெள்ளாடு இவைகளைக் கொன்றவன் உழப்படாத பூமியில் உண்டாகிய தான்யத்தை மட்டில் புஜிக்கவேண்டும். ஒரு நாள் முழுவதும் உபவாஸமிருக்கவேண்டும். முதலை, உடும்பு, ஆமை, முட்பன்றி இவைகளைக் கொன்றால், வ்ருந்தாக பழத்தை மட்டில் பக்ஷிப்பவனாய் ஒரு நாள் உபவாஸமிருந்தால் சுத்தனாவான். இவ்விதம் காட்டில் ஸஞ்சரிக்கும் நாற்கால் ப்ராணிகளுள் எதைக் கொன்றாலும், ஒரு நாள் முழுவதும் உபவாஸத்துடன் ஜாதவேதஸ மந்த்ரத்தை ஜபிப்பவனாய் இருக்கவேண்டும். க்ரௌஞ்சம், ஸாரஸம், ஹம்ஸம், சக்ரவாகம், கோழி, வாத்து முதலியது, சரபம் இவை

घ्नन् शुध्यति ॥ बलाका टिट्टिभौ वापि शुकपारावतावपि । अहिनकुलविडालांश्च शुध्यते नक्तभोजनात् ॥ वृककाककपोतानां शारीतित्तिरिघातकः । अन्तर्जले उभे सन्ध्ये प्राणायामेन शुध्यति ॥ गृध्रश्येनशशादानां उलूकस्य च घातकः । अपक्वाशी दिनं तिष्ठेत् त्रिकालं मारुताशनः ॥ वल्गुलीटिट्टिभानां च कोकिलावञ्जुलीपके । लाविका रक्तपक्षेषु शुध्यते नक्तभोजनात् ॥ कारण्डवचकोराणां पिङ्गलाकुररस्य च । भारद्वाजादिकं हत्वा शिवं सम्पूज्य शुध्यति ॥ भेरुण्डचाषभासांश्च पारावतकपिञ्जलौ । पक्षिणां चैव सर्वेषां अहोरात्रमभोजनम्' इति ॥

हेमाद्रौ —

'महिषीहनने विप्रो महासान्तपनं चरेत् । सा चेद्गर्भवती हत्वा महासान्तपनद्वयम्' इति ॥

---

களைக் கொன்றால் ஒரு நாள் உபவாஸத்தால் சுத்தனாகிறான். நாரை, சிறு குருவி, கிளி, புறா, பாம்பு, முதலே இவைகளைக் கொன்றால், பகலில் உபவாஸமிருந்து இரவில் புஜிப்பதால் சுத்தனாகிறான். செந்நாய், காக்கை, புறா, சாரி, தித்திரி இவைகளைக் கொன்றால், இரண்டு ஸந்த்யா காலங்களிலும் ஜலத்திற்குள் மூழ்கி ப்ராணாயாமத்தைச் செய்வதால் சுத்தனாகிறான். கழுகு, பருந்து, சசாதம், கோட்டான் இவைகளைக் கொன்றவன் ஒரு நாள் முழுவதும் பக்வாந்நத்தைப் புஜிக்காதவனாயிருக்கவேண்டும். மூன்று வேளை காற்றை மட்டும் புஜிப்பவனாயிருக்கவேண்டும். வல்குலீ, சிறு குருவி, குயில், வலியன், லாவிகா, சிவப்பு இறக்கையுடைய பக்ஷி, இவைகளைக் கொன்றால், பகலில் உபவாஸமிருந்து இரவில் புஜிப்பதால் சுத்தனாவான். காரண்டவம், சகோரம், பிங்களா, குரரம், பாரத்வாஜம் முதலியது இவைகளைக் கொன்றால் சிவனைப் பூஜிப்பதால் சுத்தனாவான். பேருண்டம், காடை, நீர்க்காக்கை, புறா, கபிஞ்ஜலம், எல்லாப் பக்ஷிகள் இவைகளைக் கொன்றால் ஒரு நாள் முழுவதும் உபவாஸமிருக்கவேண்டும்.

**ஹேமாத்ரியில்:—** ப்ராம்ஹணன், எருமையைக் கொன்றால் மஹாசாந்தபன க்ருச்ரத்தை யனுஷ்டிக்கவேண்டும். அந்த எருமை

## वृक्षच्छेदादिप्रायश्चित्तम् ॥

हेमाद्रौ —

इन्धनार्थं द्रुमच्छेत्ता तद्दोषस्यापनुत्तये । प्राजापत्यं सकृत् कृत्वा शुद्धिमाप्नोत्यनुत्तमाम् ॥ कृष्यर्थमिन्धनार्थं वा यज्ञवृक्षविछेदने । पराकं तत्र चीर्त्वा शुद्धो भवति वृक्षहा ॥ बिल्वाश्वत्थौ यदा छिन्द्यात्तदा चान्द्रायणं चरेत् । पुष्पारामस्य विच्छेत्ता वनद्रोहीति कथ्यते ॥ तद्दोषपरिहारार्थं गायत्र्या लक्षमभ्यसेत् ॥ तिन्त्रिणीचूततरवो बहूजन्तूपकारकाः । कपित्थामलकच्छेत्ता सम्यक् चान्द्रायणं चरेत् ॥ कोविदारतरौ निम्बे प्राजापत्यं विशोधनम् । खर्जूरे नारिकेले च तालहिन्तालयोस्तथा ॥ तप्तकृच्छ्रं चरेच्छित्वा श्लेष्मादोषापनुत्तये । जम्बीरमातु-

---

சிறு கன்றுடையதும் கறக்கக்கூடியதுமாக இருந்தால் மஹா ஸாந்தபனம் இரண்டு முறை யனுஷ்டிக்கவேண்டும்.

### மரம் வெட்டுவது முதலியதற்கு ப்ராயஸ்சித்தம்.

ஹேமாத்ரியே:— விறகுக்காக மரங்களை வெட்டுபவன் அந்தத் தோஷத்தைப் போக்குவதற்காக ஒரு முறை ப்ராஜாபத்ய க்ருச்ரத்தை யனுஷ்டித்துச் சிறந்த சுத்தியை அடைகிறான். பயிரிடுவதற்காகவாவது, விறகுக்காகவாவது யஜ்ஞார்ஹமான மரத்தை வெட்டினால் பராக க்ருச்ரத்தை அனுஷ்டிக்கவேண்டும். வ்ருக்ஷத்தை வெட்டியவன் சுத்தனாவான். பில்வம், அரசு, இவைகளை வெட்டினால் சாந்த்ராயணத்தை யனுஷ்டிக்கவேண்டும், பூந்தோட்டத்தை வெட்டியவன் வனத்ரோஹீ எனப்படுகிறான். அந்தப் பாபத்தைப் போக்குவதற்கு காயத்ரியை லக்ஷம் முறை ஜபிக்கவேண்டும். அநேக ஜந்துக்களுக்கு உபகாரமாயுள்ள புளி, மா இந்த வ்ருக்ஷங்களை வெட்டினாலும், விளா, நெல்லி இவைகளை வெட்டினாலும் சாந்த்ராயண க்ருச்ரத்தை விதிப்படி அனுஷ்டிக்கவேண்டும். மலையத்தி, வேம்பு, இவைகளை வெட்டினால் ப்ராஜாபத்ய க்ருச்ரம் ப்ராயஸ்சித்தம். பேரீச்சை, தென்னை, பனை, கூந்தல்பனை இவைகளை வெட்டினால் தப்தக்ருச்ரத்தை யனுஷ்டிக்கவேண்டும். எலுமிச்சை, மாதுளை முதலியது இவைகளை

ஶாகாதீந்து சி2த்வா பாபவிஶாந்தயே ॥ ஸம்யக் ஸ்நாத்வா ஶுசிர் பூ4த்வா கீ3தாஶாஸ்த்ரம் படே2த் க்ரமாத் । தடாககூபகாஸார பே4தே3 விப்ரஸ்து ஸ: ॥ பூர்வவத்தம் த்3ருட4ம் க்ருத்வா ப்ராஜாபத்யம் ஸமாசரேத் । விஷ்ண்வாலயாதி3பே4தே3 து தது3த்3த்4ருத்ய ஸமாசரேத் ॥ ஶூந்யாலயஸ்ய பே4தே3 பராகம் த்3விஜஸத்தம:' இதி ॥

யாஜ்ஞவல்க்ய:—

'வ்ருக்ஷகு3ல்மலதாவீருச்சே2த3நே ஜப்யம்ருக்ஶதம் । ஸ்யாதோ3ஷதி4வ்ருதா2ச்சே2தே3 க்ஷீராஶீ கோ3(அ)நுகோ3 தி3நம்' இதி ॥ அத்ர வ்ருதா2ச்சே2தீ3தி விஶேஷணாத்3யஜ்ஞாத்3யர்த2ச்சே2த3நே ந தோ3ஷ: ॥

யத்து ஶங்க2வசநம்—

'ஸம்வத்ஸரம் வ்ரதம் குர்யாச்சி2த்த்வா வ்ருக்ஷம் ப2லப்ரத3ம்' இதி, தச்சே2த3நாவ்ருத்திவிஷயம் । ஐஹிகார்த2மேவமபி கர்ஷணாங்க3ஹலாத்3யர்த2மேவ ந தோ3ஷ: । 'ப2லபுஷ்போபக3

---

வெட்டினால் விதிப்படி ஸ்நானம் செய்து, சுத்தனாயிருந்து, கீதா சாஸ்த்ரத்தை க்ரமப்படி படிக்கவேண்டும். ப்ராம்ஹணன் தடாகம், கிணறு, குட்டை இவைகளை நாசம் செய்தால் முன்போலவே அவைகளைத் திடப்படுத்தி, பிறகு ப்ராஜாபத்ய க்ருச்ரத்தை யனுஷ்டிக்கவேண்டும். விஷ்ணுவின் ஆலயம் முதலியதைக் கெடுத்தால் அதைப் புதிப்பித்து சாந்த்ராயணத்தை யனுஷ்டிக்கவேண்டும். பாழுங்கோயிலை இடித்தால் பராக க்ருச்ரத்தை யனுஷ்டிக்க வேண்டும்.

**யாஜ்ஞவல்க்யர்:**— "மரம், புதர், கொடி, கொடிகள் அடர்ந்த புதர் இவைகளை வெட்டினால் நூறு வேதருக்குகளை ஜபிக்க வேண்டும். ஓஷதிகளை வீணாக வெட்டினால் ஒரு நாள் பாலைமட்டில் பருகி மாடுகளைத் தொடர்ந்து செல்பவனாயிருக்கவேண்டும்," என்று. இங்கு வீணாய் என்று விசேஷணமிருப்பதால் யாகம் முதலியதற்காகச் சேதிப்பதில் தோஷமில்லை. ஆனால்,

**சங்கரின்** வசனம்:— "பழத்தைக் கொடுக்கும் மரத்தை வெட்டினால் ஒரு வர்ஷம் வ்ரதத்தை யனுஷ்டிக்கவேண்டும்" என்றுள்ளதே யெனில், அது அடிக்கடி வெட்டுவதைப்பற்றியது. இவ்வுலகில் வேண்டியதற்காகினும் உழுவதற்கு அங்கமாகிய கலப்பை முதலியவைகளைச் செய்வதற்காகில் தோஷமில்லை. "பழம், புஷ்பம் இவை

हिंस्राणां पादपानां कर्षणकार्याय च्छेदनम्' इति स्मृतेः ॥

तटाकभेदे विशेषमाह देवलः—

'बहुधान्योपजीव्यस्य तटाकस्य विभेदने । ब्रह्महत्याव्रतं कृत्वा कपालध्वजवर्जितम् ॥ पुनस्संस्कारकृच्छुद्धिमाप्नोत्यसंशयम्' इति ॥

सुरापानादिप्रायश्चित्तम् ॥

---

अथ सुरापानादेः प्रायश्चित्तमुच्यते । पिष्टादिजन्या द्रव्यविशेषस्सुरा ॥

तथा च मनुः —

'गौडी पैष्टी च माध्वी च विज्ञेया त्रिविधा सुरा । यथैवैका न पातव्या तथा सर्वा द्विजोत्तमैः ॥

---

களுடன் கூடிய வ்ருக்ஷங்களை வெட்டக்கூடாது. உழுவதற்காக வாகில் வெட்டலாம்" என்று ஸம்ருதியிருப்பதால்,

பெரிய ஏரியை உடைத்துவிட்டால் விசேஷ ப்ராயஶ்சித்தத்தைச் சொல்லுகிறார்,

**தேவலர்:**— அதிக தான்யம் விளைய ஸாதனமாகிய ஏரியை உடைத்தால் கபாலம் கொடி இவைகள் இல்லாமல் ப்ரம்ஹஹத்திக்குச் சொல்லிய ப்ராயஶ்சித்தத்தை அனுஷ்டித்து, புனஸ்ஸம்ஸ்காரம் செய்து கொண்டால் சுத்தியடைவான். ஸம்சயமில்லை.

## ஸுராபானம் முதலியதின் ப்ராயஶ்சித்தம்.

இனி ஸுராபானம் முதலியதற்கு ப்ராயஶ்சித்தம் சொல்லப்படுகிறது. மாவு முதலியதிலிருந்து உண்டாகிய ஓர் த்ரவ்யம் ஸுரா எனப்படுகிறது. அவ்விதமே,

**மனு:**— "கௌடீ, பைஷ்டீ, மாத்வீ என்று மூன்றுவிதம் ஸுரை என்று அறியத்தக்கது. எப்படி ஒரு ஸுரையைப் பானம் பண்ணக்கூடாதோ அவ்விதமே மூன்று ஸுரைகளையும் ப்ராம்ஹணர்கள் பானம் செய்யக்கூடாது. ஸுரை என்பது அந்நங்களின்

सुरा वै मलमन्नानां पाप्मा च मलमुच्यते । तस्मात् ब्राह्मणराजन्यौ वैश्यश्च न सुरां पिबेत् ॥ यक्षरक्षःपिशाचान्नं मद्यं मांसं सुरासवम् । तद्ब्राह्मणेन नात्तव्यं देवानामश्नता हविः' इति ॥

राजन्यवैश्ययोः सुरापाननिषेधः पैष्टीविषयः । गौडीमाध्व्योरेकादशमद्येष्वन्तर्भावात् तत्पाने तयोर्दोषाभावात् । अत एव 'सुरासवं सुरारूपं मद्यं ब्राह्मणेन नात्तव्यम्' इति ब्राह्मणस्यैव तन्निषेधः । पैष्ट्या अकामकृते सकृत्पाने गौडीमाध्व्योरसकृत्पाने कामकृते च ब्राह्मणस्य प्रायश्चित्तं तुल्यम् ॥

श्रुतिरपि—

'न सुरां पिबेत् । न कलञ्जं भक्षयेत् । न तस्य

---

மலம் ஆகும். மலம் என்பது பாபம் எனப்படுகிறது. ஆகையால் ப்ராம்ஹணன், க்ஷத்ரியன், வைச்யன் இவர்கள் ஸுரையைப் பானம் செய்யக்கூடாது. மத்யம், மாம்ஸம், ஸுரை, ஆஸவம் இவைகள் யக்ஷர்கள், ராக்ஷஸர்கள், பிசாசர்கள் இவர்களுக்கு அன்னமாகும். ஆகையால், தேவர்களுடைய ஹவிஸ்ஸைப் புஜிப்பவனான ப்ராம்ஹணன் அதைச் சாப்பிடக்கூடாது," என்று.

க்ஷத்ரிய வைச்யர்களுக்கு ஸுராபானத்தை நிஷேதித்தது பைஷ்டீமத்யத்தைப் பற்றியது. கௌடீ, மாத்வீ என்ற மத்யங்களைப் பதினொரு மத்யங்களுள் சேர்த்திருப்பதால் அதைப் பானம் பண்ணுவதில் அவ்விருவருக்கும் தோஷமில்லையாதலால். ஆகையாலேயே, "ஸுரா ஆஸவமும், ஸுரா ரூபமும் ஆகிய மத்யம் ப்ராம்ஹணனால் பருகத் தகுந்ததல்ல" என்று ப்ராம்ஹணனுக்கு மட்டில் நிஷேதம். பைஷ்டீமத்யத்தை அபுத்தி பூர்வமாக ஒரு தடவை உபயோகித்ததிலும், கௌடீ, மாத்வீ இவைகளைப் புத்தி பூர்வமாய்ப் பல தடவை உபயோகித்ததிலும் ப்ராம்ஹணனுக்கு ப்ராயஶ்சித்தம் ஸமானமாகும்.

**வேதமும்:—** "ஸுரையைப் பானம் பண்ணக்கூடாது. களஞ்சத்தைப் பக்ஷிக்கக்கூடாது. அவனுக்குப் ப்ராயஶ்சித்தம்

𑌨𑍈 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌮𑌰𑌣𑌾𑌨𑍍𑌤𑌮𑍇𑌵' 𑌇𑌤𑌿 ॥ 𑌮𑌰𑌣𑌾𑌨𑍍𑌤𑌮𑍇𑌵 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌅𑌨𑍍𑌯𑌤𑍍 𑌨𑌾𑌸𑍍𑌤𑍀𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥

𑌆𑌪𑌸𑍍𑌤𑌂𑌬𑌃—

'𑌸𑍁𑌰𑌾𑌪𑍋𑌽𑌗𑍍𑌨𑌿𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌾𑌂 𑌸𑍁𑌰𑌾𑌂 𑌪𑌿𑌬𑍇𑌤𑍍 𑌮𑍃𑌤𑌃 𑌶𑍁𑌦𑍍𑌧𑍋 𑌭𑌵𑌤𑌿' 𑌇𑌤𑌿 ॥

𑌪𑌰𑌾𑌶𑌰𑍋𑌽𑌪𑌿—

'𑌸𑍁𑌰𑌾𑌪𑌾𑌨𑌂 𑌸𑌕𑍃𑌤𑍍 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌅𑌗𑍍𑌨𑌿𑌵𑌰𑍍𑌣𑌾𑌂 𑌸𑍁𑌰𑌾𑌂 𑌪𑌿𑌬𑍇𑌤𑍍 । 𑌸 𑌪𑌾𑌵𑌯𑍇𑌦𑌥𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌿𑌹 𑌲𑍋𑌕𑍇 𑌪𑌰𑌤𑍍𑌰 𑌚' 𑌇𑌤𑌿 ॥

𑌮𑌨𑍁𑌃—

'𑌸𑍁𑌰𑌾𑌂 𑌪𑍀𑌤𑍍𑌵𑌾 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋 𑌮𑍋𑌹𑌾𑌦𑌗𑍍𑌨𑌿𑌵𑌰𑍍𑌣𑌾𑌂 𑌸𑍁𑌰𑌾𑌂 𑌪𑌿𑌬𑍇𑌤𑍍 । 𑌤𑌯𑌾 𑌸 𑌕𑌾𑌯𑍇 𑌨𑌿𑌰𑍍𑌦𑌗𑍍𑌧𑍇 𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌕𑌿𑌲𑍍𑌬𑌿𑌷𑌾𑌤𑍍𑌤𑌤𑌃 ॥ 𑌗𑍋𑌮𑍂𑌤𑍍𑌰𑌮𑌗𑍍𑌨𑌿𑌵𑌰𑍍𑌣𑌂 𑌵𑌾 𑌪𑌿𑌬𑍇𑌦𑍁𑌦𑌕𑌮𑍇𑌵 𑌵𑌾 । 𑌪𑌯𑍋 𑌘𑍃𑌤𑌂 𑌵𑌾𑌽𑌽𑌮𑌰𑌣𑌾𑌦𑍍𑌗𑍋𑌶𑌕𑍃𑌦𑍍𑌰𑌸𑌮𑍇𑌵 𑌵𑌾' 𑌇𑌤𑌿 ॥

𑌕𑌲𑍌 𑌮𑌰𑌣𑌾𑌨𑍍𑌤𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌨𑌿𑌷𑌿𑌦𑍍𑌧𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌤𑌦𑌭𑌿𑌪𑍍𑌰𑌾𑌯𑍇𑌣 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌨𑍍𑌤𑌰𑌮𑌾𑌹 𑌸 𑌏𑌵—

---

இல்லை. மரணாந்தமே ப்ராயஶ்சித்தம்" என்று. மரணாந்தமே அவனுக்கு ப்ராயஶ்சித்தம், வேறு ப்ராயஶ்சித்தம் இல்லை, என்பது பொருள். அவ்விதமே,

**ஆபஸ்தம்பர்:—** ஸுரையைப் பானம் செய்தவன் அக்னி போல் கொதிக்கும் ஸுரையைப் பானம் செய்யவேண்டும். அவன் இறந்தால் சுத்தனாகிறான்.

**பராசரரும்:-** ஒருமுறை ஸுராபானம் செய்தால் அக்னிபோல் கொதிக்கும் ஸுரையைப் பானம் செய்யவேண்டும். அவன் இவ்வுலகத்திலும் பரலோகத்திலும் தன்னைச் சுத்தனாக்கிக் கொள்ளுகிறான்.

**மனு:—** ப்ராம்ஹணன் மோஹத்தால் ஸுரையைப் பானம் பண்ணினால் அக்னிபோல் உள்ள ஸுரையைப் பானம் செய்ய வேண்டும். அதனால் சரீரம் பொசுக்கப்பட்டால் அந்தப் பாபத்தினின்றும் அவன் விடுபடுவான். அக்னிபோல் உள்ள கோமூத்ரத்தையாவது, ஜலத்தையாவது பருகவேண்டும். பாலையாவது, நெய்யையாவது, சாணிப்பாலையாவது சாகும் வரையில் பருகவேண்டும்.

கலியில் மரணாந்த ப்ராயஶ்சித்தம் நிஷித்தமாகையால், அந்த அபிப்ராயத்துடன் வேறு ப்ராயஶ்சித்தத்தைச் சொல்லுகிறார்,

'𑌕𑌣𑌾𑌨𑍍 𑌵𑌾 𑌭𑌕𑍍𑌷𑌯𑍇𑌦𑌬𑍍𑌦𑌂 𑌪𑌿𑌣𑍍𑌯𑌾𑌕𑌂 𑌵𑌾 𑌸𑌕𑍃𑌨𑍍𑌨𑌿𑌶𑌿 । 𑌸𑍁𑌰𑌾𑌪𑌾𑌨𑌾𑌪𑌨𑍁𑌤𑍍𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌂 𑌵𑌾𑌲𑌵𑌾𑌸𑌾 𑌧𑍍𑌵𑌜𑍀 𑌜𑌟𑍀' 𑌇𑌤𑌿 ॥ 𑌏𑌤𑌤𑍍 𑌜𑌿𑌹𑍍𑌵𑌾𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌵𑌿𑌷𑌯𑌮𑌿𑌤𑍍𑌯𑌨𑍍𑌯𑍇 ॥

𑌯𑌾𑌜𑍍𑌞𑌵𑌲𑍍𑌕𑍍𑌯𑌃—

'𑌸𑍁𑌰𑌾𑌮𑍍𑌬𑍁𑌘𑍃𑌤𑌗𑍋𑌮𑍂𑌤𑍍𑌰𑌪𑌯𑌸𑌾𑌮𑌗𑍍𑌨𑌿𑌸𑌨𑍍𑌨𑌿𑌭𑌮𑍍 । 𑌸𑍁𑌰𑌾𑌪𑍋𑌽𑌨𑍍𑌯𑌤𑌮𑌂 𑌪𑍀𑌤𑍍𑌵𑌾 𑌮𑌰𑌣𑌾𑌚𑍍𑌛𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑍃𑌚𑍍𑌛𑌤𑌿 ॥ 𑌵𑌾𑌲𑌵𑌾𑌸𑌾 𑌜𑌟𑍀 𑌵𑌾𑌽𑌪𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌹𑌤𑍍𑌯𑌾𑌵𑍍𑌰𑌤𑌂 𑌚𑌰𑍇𑌤𑍍 । 𑌪𑌿𑌣𑍍𑌯𑌾𑌕𑌂 𑌵𑌾 𑌕𑌣𑌾𑌨𑍍 𑌵𑌾𑌽𑌪𑌿 𑌭𑌕𑍍𑌷𑌯𑍇𑌤𑍍𑌤𑍍𑌰𑌿𑌸𑌮𑌾 𑌨𑌿𑌶𑌿 ॥ 𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌤𑍍𑌤𑍁 𑌸𑍁𑌰𑌾𑌂 𑌪𑍀𑌤𑍍𑌵𑌾 𑌰𑍇𑌤𑍋 𑌵𑌿𑌣𑍍𑌮𑍂𑌤𑍍𑌰𑌮𑍇𑌵 𑌵𑌾 । 𑌪𑍁𑌨𑌃𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌮𑌰𑍍𑌹𑌨𑍍𑌤𑌿 𑌤𑍍𑌰𑌯𑍋 𑌵𑌰𑍍𑌣𑌾 𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌤𑌯𑌃 ॥ 𑌪𑌤𑌿𑌲𑍋𑌕𑌂 𑌨 𑌸𑌾 𑌯𑌾𑌤𑌿 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍀 𑌯𑌾 𑌸𑍁𑌰𑌾𑌂 𑌪𑌿𑌬𑍇𑌤𑍍 । 𑌇𑌹𑍈𑌵 𑌸𑌾 𑌶𑍁𑌨𑍀 𑌗𑍃𑌧𑍍𑌰𑍀 𑌸𑍂𑌕𑌰𑍀 𑌚𑍋𑌪𑌜𑌾𑌯𑌤𑍇' 𑌇𑌤𑌿 ॥

---

**மனு:**— "ப்ராம்ஹணன் ஸுராபான ப்ராயச்சித்தத்திற்காக ஒரு வர்ஷம் வரையில் இரவில் ஒரு முறை அரிசி நொய்களையாவது, எள்ளுப்பிண்ணாக்கையாவது பக்ஷிக்கவேண்டும். பசுவின் ரோமம் முதலியதால செய்யப்பட்ட ஆடையுடையவனாயும், கள் பாத்ரத்தை அடையாளமுடையவனாயும், சடையுடையவனாயும் இருக்கவேண்டும்," என்று. இது நாக்கினால் ஸ்பர்சிக்கப்பட்டதைப் பற்றியது மட்டில் என்று சிலர்.

**யாஜ்ஞவல்க்யர்:**— ஸுராபானம் செய்தவன், ஸுரை, ஜலம், நெய், கோமூத்ரம், பால், இவைகளுள் ஒன்றை நெருப்புக்குச் சமமாய்க் காய்ச்சி, பானம் செய்தால் சுத்தியை யடைவான். அல்லது பசுவின் ரோமம் முதலியதால் செய்யப்பட்ட ஆடையுடையவனாயும், சடை தரித்தவனாயும் ப்ரம்ஹஹத்திக்கு விதிக்கப்பட்ட ப்ராயச்சித்தத்தை யனுஷ்டிக்கவேண்டும். மூன்று வர்ஷம் வரையில் இரவில் மட்டில் எள்ளுப்பிண்ணாக்கையாவது, அரிசி நொய்யையாவது பக்ஷிக்கவேண்டும். முந்திய மூன்று வர்ணத்தார்களும் அஜ்ஞானத்தால் ஸுராபானம் செய்தால், அல்லது ரேதஸ், மலம், மூத்ரம் இவைகளைப் பானம் செய்தாலும் மறுபடி ஸம்ஸ்காரத்திற்கு உரியவராகின்றனர். எந்த ப்ராம்ஹண ஸ்த்ரீ ஸுராபானம் செய்தவளோ அவள் பதிலோகத்தை யடைவதில்லை. அவள் இவ்வுலகிலேயே பெண் நாயாயும், பெண் கழுகாயும், பெண் பன்றியாயும் பிறப்பாள்.

𑌗𑍌𑌤𑌮𑌃—

'𑌸𑍁𑌰𑌾𑌪𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌯𑍋𑌷𑍍𑌣𑌾𑌮𑌾𑌸𑌿𑌞𑍍𑌚𑍇𑌯𑍁𑌃 𑌸𑍁𑌰𑌾𑌮𑌾𑌸𑍍𑌯𑍇 𑌮𑍃𑌤𑌶𑍍𑌶𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑍇𑌤𑍍 𑌅𑌮𑌤𑍍𑌯𑌾 𑌪𑌾𑌨𑍇 𑌪𑌯𑍋 𑌘𑍃𑌤𑌮𑍁𑌦𑌕𑌮𑍍' 𑌇𑌤𑌿, '𑌤𑌤𑍋𑌽𑌸𑍍𑌯 𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑍋 𑌮𑍂𑌤𑍍𑌰𑌪𑍁𑌰𑍀𑌷𑌰𑍇𑌤𑌸𑌾𑌂 𑌚 𑌪𑍍𑌰𑌾𑌶𑌨𑍇' 𑌇𑌤𑌿 𑌚 ॥

𑌅𑌙𑍍𑌗𑌿𑌰𑍋𑌵𑌚𑌨𑌮𑍍—

'𑌭𑍂𑌮𑌿𑌦𑌾𑌨𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑍁 𑌸𑍁𑌰𑌾𑌂 𑌪𑍀𑌤𑍍𑌵𑌾 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋𑌤𑍍𑌤𑌮𑌃 ।
𑌪𑍁𑌨𑌰𑍍𑌨 𑌚 𑌪𑌿𑌬𑍇𑌜𑍍𑌜𑌾𑌤𑍁 𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑌸𑍍𑌸 𑌤𑍁 𑌶𑍁𑌧𑍍𑌯𑌤𑌿' 𑌇𑌤𑌿, 𑌤𑌦𑍍𑌗𑍌𑌡𑍀𑌮𑌾𑌧𑍍𑌵𑍀𑌸𑌕𑍃𑌤𑍍𑌪𑌾𑌨𑌵𑌿𑌷𑌯𑌮𑌿𑌤𑌿 𑌮𑌾𑌧𑌵𑍀𑌯𑍇 ॥

𑌯𑌤𑍍𑌤𑍁 𑌪𑍈𑌠𑍀𑌨𑌸𑌿𑌨𑍋𑌕𑍍𑌤𑌮𑍍—

'𑌗𑍌𑌡𑍀𑌂 𑌮𑌾𑌧𑍍𑌵𑍀𑌂 𑌸𑍁𑌰𑌾𑌂 𑌪𑍈𑌷𑍍𑌟𑍀𑌂 𑌪𑍀𑌤𑍍𑌵𑌾 𑌵𑌿𑌪𑍍𑌰𑌸𑍍𑌸𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 ।
𑌤𑌪𑍍𑌤𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌂 𑌪𑌰𑌾𑌕𑌂 𑌚 𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌮𑌨𑍁𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍' 𑌇𑌤𑌿, 𑌤𑌤𑍍𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌮𑌾𑌤𑍍𑌰𑌵𑌿𑌷𑌯𑌮𑍍 ॥

---

**கௌதமர்:**— "புத்திபூர்வமாக ஸுராபானம் செய்த ப்ராம்ஹணனின் வாயில் கொதிக்கிற ஸுரையை விடவேண்டும். அதனால் அவன் இறந்தால் சுத்தனாகிறான். அஜ்ஞானத்தால் பருகிய விஷயத்தில் பால், நெய், ஜலம் இவைகளை முன்போல் பருகவேண்டும்," என்று. "பிறகு அவனுக்குப் புனருபநயனம் செய்யவேண்டும். மூத்ரம், மலம், ரேதஸ் இவைகளைப் புத்திபூர்வமாகச் சாப்பிட்டால் புனருபநயனம் ப்ராயச்சித்தம்" என்றும். ஆனால்,

**அங்கிரஸ்ஸின் வசனம்:**— ப்ராம்ஹணன் ஸுராபானம் செய்தால் பூதானம் செய்யவேண்டும். மறுபடி ஒருகாலும் ஸுராபானம் செய்யக்கூடாது. புனருபநயனமானபின் அவன் சுத்தனாகிறான்" என்றுள்ளதேயெனில், அது கௌடீ, மாத்வீ இவைகளை ஒரு முறை பானம் செய்ததைப்பற்றியது, என்று மாதவீயத்தில் உள்ளது. ஆனால்,

**ப்ருஹஸ்பதியினால்:**— "கௌடீ, மாத்வீ, பைஷ்டீ என்ற ஸுரைகளை ப்ராம்ஹணன் பானம் செய்தால், தப்தக்ருச்ரம், பராகக்ருச்ரம், சாந்த்ராயணக்ருச்ரம் இவைகளை முறையே அனுஷ்டிக்கவேண்டும்," என்று சொல்லப்பட்டுள்ளதேயெனில், அது ஸங்கல்பத்தை மட்டில் பற்றியது.

प्रायश्चित्ताकरणे दण्डनमुक्तं हेमाद्रौ —

सुरापं दण्डयेद्राजा मरणं यदि नेच्छति । ब्रह्मसूत्रं शिखां सम्यक् क्षुरिका वापयेच्छिरः ॥ सुराभाण्डं ललाटे तु तापयित्वाऽङ्कयेत्सुधीः । आनीय पूर्णं भाण्डं सुरापूरितदारकः ॥ बद्ध्वा कण्ठे खरं यानमारोप्य नगरं ततः । निस्साणं ध्वनयन् भृत्यैर्भ्रामयित्वा नगराद्बहिः ॥ प्रोत्सार्य सहसा राज्ञा न दोषेण स कथ्यते । स पापी द्वादशाब्दं तु कपालध्वजवर्जितः ब्रह्महत्याव्रतं कृत्वा शुद्धिमाप्नोति नान्यथे'ति ॥

तत्रैव —

यदि रोगनिवृत्त्यर्थमौषधार्थं सुरां पिबेत् । तस्योपनयनं भूयश्चान्द्रायणद्वयं विदुः ॥ उपोष्य रजनीमेकां पञ्चगव्येन शुद्ध्यती'ति ॥

---

ப்ராயஶ்சித்தம் செய்துகொள்ளாவிடில் தண்டனை மட்டில் சொல்லப்பட்டுள்ளது,

**ஹேமாத்ரியில்:—** ஸுராபானம் செய்தவன் மாணத்தை விரும்பாவிடில் அவனை அரசன் தண்டிக்கவேண்டும். யஜ்ஞோபவீதத்தை யறுத்து, சிரஸ்ஸை நன்றாக முண்டனம் செய்வித்து, கள் பாண்டத்தை நெற்றியில் சூடவேண்டும். ஸுரை நிறைந்த மட்பாத்ரத்தைக் கொண்டுவந்து அவன் கழுத்தில் கட்டி, கழுதை வாகனத்தின்மேல் ஏற்றிவைத்து, வாத்யத்தைக் கோஷிக்கச் செய்து, வேலைக்காரர்களால் நகரத்தைச் சுற்றுவித்து, நகரத்துக்கு வெளியில் அப்புறப்படுத்த வேண்டும். இவ்விதம் செய்தால் அவன் தோஷமுள்ளவனாகான். அந்தப் பாபி பன்னிரண்டு வர்ஷம் வரையில் கபாலம் த்வஜம் இல்லாமல் ப்ரம்ஹஹத்திக்கு விதித்த ப்ராயஶ்சித்தத்தை யனுஷ்டித்தால் சுத்தனாகிறான். வேறு விதத்தால் சுத்தியில்லை.

**ஹேமாத்ரியிலேயே:—** ரோகம் நிவ்ருத்தியாவதற்காக மருந்துக்காக ஸுரையைப் பானம் செய்தால், அவனுக்கு மறுபடி உபநயனம் செய்யப்படவேண்டும். இரண்டு சாந்த்ராயண க்ருச்ரம் அனுஷ்டிக்கவேண்டும். ஒரு நாள் உபவாஸமிருந்து, பஞ்சகவ்ய ப்ராசனம் செய்தால் சுத்தனாகிறான்.

𑌪𑌰𑌾𑌶𑌰𑌃—

"𑌪𑌤𑌤𑍍𑌯𑌰𑍍𑌧𑌂 𑌶𑌰𑍀𑌰𑌸𑍍𑌯 𑌯𑌸𑍍𑌯 𑌭𑌾𑌰𑍍𑌯𑌾 𑌸𑍁𑌰𑌾𑌂 𑌪𑌿𑌬𑍇𑌤𑍍 । 𑌪𑌤𑌿𑌤𑌾𑌰𑍍𑌧𑌶𑌰𑍀𑌰𑌸𑍍𑌯 𑌨𑌿𑌷𑍍𑌕𑍃𑌤𑌿𑌰𑍍𑌨 𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑍇" 𑌇𑌤𑌿 ॥ 𑌉𑌕𑍍𑌤𑌵𑍍𑌰𑌤𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑌿𑌕𑍍𑌤𑍇𑌨 𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌨𑌾𑌸𑍍𑌤𑍀𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥

𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑌾𑌹 𑌸 𑌏𑌵—

𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍀𑌂 𑌜𑌪𑌮𑌾𑌨𑌸𑍍𑌤𑍁 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌂 𑌸𑌾𑌨𑍍𑌤𑌪𑌨𑌂 𑌚𑌰𑍇𑌤𑍍 । 𑌗𑍋𑌮𑍂𑌤𑍍𑌰𑌂 𑌗𑍋𑌮𑌯𑌂 𑌕𑍍𑌷𑍀𑌰𑌂 𑌦𑌧𑌿 𑌸𑌰𑍍𑌪𑌿𑌃 𑌕𑍁𑌶𑍋𑌦𑌕𑌮𑍍 ॥ 𑌏𑌕𑌰𑌾𑌤𑍍𑌰𑍋𑌪𑌵𑌾𑌸𑌶𑍍𑌚 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌂 𑌸𑌾𑌨𑍍𑌤𑌪𑌨𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍' 𑌇𑌤𑌿॥ 𑌏𑌤𑌤𑍍𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌸𑍁𑌰𑌾𑌪𑌾𑌨𑌵𑌿𑌷𑌯𑌮𑍍 ॥

𑌮𑌦𑍍𑌯𑌪𑌾𑌨𑍇 𑌤𑍁 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑌾𑌹 𑌬𑍃𑌹𑌸𑍍𑌪𑌤𑌿𑌃—

"𑌪𑍀𑌤𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑌤𑍋 𑌮𑌦𑍍𑌯𑌮𑌤𑌿𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌂 𑌚𑌰𑍇𑌦𑍍 𑌦𑍍𑌵𑌿𑌜𑌃 । 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌂 𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌂𑌶𑍍𑌚 𑌭𑍋𑌜𑌯𑍇𑌤𑍍' 𑌇𑌤𑌿 ॥

---

**பராசரர்:**— "எவனது பார்யை ஸுராபானம் செய்கிறாளோ அவனது சரீரத்தின் பாதி பாகம் பாபமுள்ளதாகிறது. பாபமுள்ள பாதி சரீரமுடையவனுக்கு ப்ராயஸ்சித்தம் விதிக்கப்படுவதில்லை," என்று. சொல்லிய ப்ராயஸ்சித்தத்தைத் தவிர்த்து மற்றதனால் சுத்தியில்லை, என்பது பொருள்.

ப்ராயஸ்சித்தத்தைச் சொல்லுகிறார், **பராசரரே:**— "காயத்ரியை ஜபிப்பவனாயிருந்து, ஸாந்தபனம் என்கிற க்ருச்ரத்தை யனுஷ்டிக்க வேண்டும். கோமூத்ரம், கோமயம், பால், தயிர், நெய், குசத்தின் ஜலம் இவைகளை மட்டில் ஒவ்வொரு நாளிலும் பருகவேண்டும். ஒரு நாள் முழுவதும் உபவாஸமிருக்க வேண்டும். இவ்விதம் ஆறு நாள் செய்வது ஸாந்தபனம் எனப்படும்," என்று. இது மூன்று விதமான ஸுரையைப் பானம் பண்ணிய விஷயத்தைப்பற்றியது.

மத்யபானத்திலோவெனில் ப்ராயஸ்சித்தத்தைச் சொல்லுகிறார்,

**ப்ருஹஸ்பதி:**— ப்ராம்ஹணன் அறியாமையால் மத்யத்தைப் பானம் செய்தால், அதிக்ருச்ரத்தை அனுஷ்டிக்க வேண்டும். அவனுக்குப் புனருபநயனம் செய்யவேண்டும். யதாசக்தி ப்ராம்ஹணர்களையும் புஜிப்பிக்கவேண்டும்.

𑌕𑌾𑌮𑌕𑌾𑌰𑍇 𑌤𑍁 𑌪𑌰𑌾𑌶𑌰𑌃—

'𑌮𑌦𑍍𑌯𑌪𑌸𑍍𑌤𑍁 𑌦𑍍𑌵𑌿𑌜𑌃 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌨𑌦𑍀𑌂 𑌗𑌤𑍍𑌵𑌾 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌗𑌾𑌮𑍍 ।
𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑍇 𑌤𑌤𑌶𑍍𑌚𑍀𑌰𑍍𑌣𑍇 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑍍𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌭𑍋𑌜𑌨𑌮𑍍 ॥
𑌅𑌨𑌡𑍁𑌤𑍍𑌸𑌹𑌿𑌤𑌾𑌂 𑌗𑌾𑌂 𑌚 𑌦𑌦𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌿𑌪𑍍𑌰𑍇𑌷𑍁 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌮𑍍' 𑌇𑌤𑌿 ॥
𑌮𑌦𑍍𑌯𑌂 = 𑌪𑌨𑌸𑌾𑌦𑌿𑌜𑌨𑍍𑌯𑌂 𑌮𑌦𑌕𑌾𑌰𑌣𑌂 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌮𑍍 ॥

𑌤𑌦𑌾𑌹 𑌪𑍁𑌲𑌸𑍍𑌤𑍍𑌯𑌃—

'𑌪𑌾𑌨𑌸𑌂 𑌦𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌮𑌾𑌧𑍂𑌕𑌂 𑌖𑌾𑌰𑍍𑌜𑍂𑌰𑌂 𑌤𑌾𑌲𑌮𑍈𑌕𑍍𑌷𑌵𑌮𑍍 ।
𑌮𑌧𑍂𑌤𑍍𑌥𑌂 𑌸𑍈𑌰𑌮𑌾𑌰𑌿𑌷𑍍𑌟𑌂 𑌮𑍈𑌰𑍇𑌯𑌂 𑌨𑌾𑌰𑌿𑌕𑍇𑌲𑌜𑌮𑍍 ॥ 𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌾𑌨𑌿 𑌵𑌿𑌜𑌾𑌨𑍀𑌯𑌾𑌨𑍍𑌮𑌦𑍍𑌯𑌾𑌨𑍍𑌯𑍇𑌕𑌾𑌦𑌶𑍈𑌵 𑌤𑍁' 𑌇𑌤𑌿 ॥ 𑌦𑍍𑌵𑌿𑌜𑌃 = 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌃 ॥

'𑌕𑌾𑌮𑌾𑌦𑌪𑌿 𑌚 𑌰𑌾𑌜𑌨𑍍𑌯𑍋 𑌵𑍈𑌶𑍍𑌯𑍋 𑌵𑌾𑌪𑌿 𑌕𑌥𑌞𑍍𑌚𑌨 ।
𑌮𑌦𑍍𑌯𑌮𑍇𑌵 𑌸𑍁𑌰𑌾𑌂 𑌪𑍀𑌤𑍍𑌵𑌾 𑌨 𑌦𑍋𑌷𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑍍𑌯𑌤𑍇' 𑌇𑌤𑌿 𑌬𑍃𑌹𑌦𑍍𑌯𑌾𑌜𑍍𑌞𑌵𑌲𑍍𑌕𑍍𑌯𑌸𑍍𑌮𑌰𑌣𑌾𑌤𑍍 ॥ 𑌮𑌦𑍍𑌯𑌂 𑌸𑍁𑌰𑌾 𑌮𑌾𑌧𑍍𑌵𑍀 𑌗𑍌𑌡𑍀 𑌚 𑌪𑍈𑌷𑍍𑌟𑍀 𑌨𑌿𑌷𑌿𑌦𑍍𑌧𑌮𑍇𑌵 । 𑌏𑌕𑌾𑌦𑌶𑌾𑌨𑌾𑌮𑌨𑍍𑌯𑌤𑌮𑌸𑍍𑌯 𑌪𑌾𑌨𑍇 𑌮𑌹𑌾𑌨𑌦𑍀𑌤𑍀𑌰𑍇

---

புத்திபூர்வமாகச் செய்த விஷயத்தில், **பராசரர்**:— மத்யபானம் செய்த ப்ராம்ஹணன், ஸமுத்ரத்தை யடையும் நதியை யடைந்து, சாந்த்ராயணத்தைச் செய்து, பிறகு ப்ராம்ஹண போஜனத்தைச் செய்விக்கவும். எருதுடன் கூடிய ஒரு பசுவை ப்ராம்ஹணர்களுக்குத் தானம் செய்யவேண்டும்.

மத்யம் என்பதற்குப் பலாப்பழம் முதலியதிலிருந்து உண்டாகிய மதத்தைக் கொடுக்கும் வஸ்து என்பது பொருள். அதைச் சொல்லுகிறார்,

**புலஸ்த்யர்**:— பலா, த்ராக்ஷை, இலுப்பை, பேரீச்சை, பனை, கரும்பு, தேன், ஸைரம், பூவத்தி, மைரேயம், தென்னை என்ற இந்தப் பதினொரு இடங்களிலிருந்து உண்டாகிய பதினொரு மத்யங்களும் ஸமமானவை.

"க்ஷத்ரியனாவது, வைச்யனாவது புத்திபூர்வமாகவே மத்யம் ஸுரை இவைகளைப் பானம் செய்தால், அவனுக்குத் தோஷமில்லை" என்று ப்ருஹத்யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதி யிருப்பதால், த்விஜ: என்பது ப்ராம்ஹணனையே சொல்லுகிறது. மத்யம், ஸுரை, கௌடீ, மாத்வீ, பைஷ்டீ இவைகள் நிஷித்தமே. இந்தப் பதினொன்றில் ஏதாவது ஒன்றைப் பானம் செய்தாலும் மஹாநதி

चान्द्रायणं चरित्वा ब्राह्मणभोजनं कृत्वा दक्षिणां दद्यात् ॥

हेमाद्रौ —

'माधूकं सैरमारिष्टं मैरेयं नारिकेलजम् । तालं हिन्तालजं चैव द्राक्षाखर्जूरसम्भवम् ॥ वृक्षेभ्यो दशविधं मद्यं नवधा परिकीर्तितम् । एतेष्वन्यतमं पातव्यं विप्रेणैव न कदाचन ॥ एतेष्वन्यतमं यस्तु पिबेदज्ञानतो द्विजः । तस्यापनयनं भूयस्तप्तकृच्छ्रत्रयं चरेत् ॥ सुरापस्पृष्टमन्नं च सुराभाण्डोदकं तथा । सुरापानसमं प्राहुस्तु चान्द्रस्य भक्षणम् ॥ तस्यापनयनं भूयः पञ्चगव्यस्य सेवनम्' इति ॥

मनुः—

'यस्य कायगतं ब्रह्म मद्येनाप्लाव्यते सकृत् । तस्य व्यपैति ब्राह्मण्यं शूद्रत्वं च स गच्छति ॥ अज्ञानात् वारुणीं पीत्वा संस्कारेणैव शुध्यति । मतिपू

---

யின் கரையில் சாந்த்ராயணத்தை யனுஷ்டித்து, ப்ராம்ஹண போஜனம் செய்வித்து, தக்ஷிணையைக் கொடுக்கவேண்டும்.

**ஹேமாத்ரியில்:—** இலுப்பை, ஸைரம், பூவத்தி, மைரேயம், தென்னை, பனை, கூந்தல்பனை, த்ராக்ஷை, பேரீச்சை இந்த ஒன்பது வ்ருக்ஷங்களிலிருந்து உண்டாகிய மத்யங்களுள் ஒன்றையும் ப்ராம்ஹணன் ஒருகாலும் குடிக்கக்கூடாது. எந்த ப்ராம்ஹணன் இவைகளுள் ஒன்றை அறியாமையால் பானம் செய்கின்றனோ அவனுக்கு மறுபடி உபநயனம் செய்யவேண்டும். மூன்று தப்த க்ருச்ரங்களை யனுஷ்டிக்கவேண்டும். கட்குடிப்பவனால் தொடப் பட்ட அன்னத்தைப் புஜிப்பதும், கட்பானையில் உள்ள ஜலத்தைக் குடிப்பதும் ஸுராபானத்துக்கு ஸமமாகச் சொல்லுகின்றனர். சாந்த்ராயணத்தை யனுஷ்டிக்கவேண்டும். மறுபடி உபநயனம் செய்விக்கவேண்டும். பஞ்சகவ்ய பானம் செய்யவேண்டும்.

**மனு:—** எவனுடைய சரீரத்திலுள்ள வேதம் மத்யத்தினால் ஒரு தடவையாவது மூழ்கப்படுகிறதோ, அவனுடைய ப்ராம்ஹண்யம் போய்விடுகிறது. அவனும் சூத்ரனாகிறான். அறியாமையால் மத்யபானம் செய்தால் புனருபநயனத்தாலேயே சுத்தனாகிறான்.

புத்திபூர்வம் ப்ராணாந்திகமிதி ஸ்திதி: || ஸுராபாத்ரஜ
லஸ்ய மத்யபாண்டஸ்திதஸ்ய வா | பானாத்ரம் பிபேத் க்ஷீர
ஶங்கபுஷ்பீஶ்ருதம் பய: || ஸ்ப்ருஷ்ட்வா தத்வா ச மதிராம் விதிவச்ச
ப்ரதிக்ருஹ்ய ச | ஶூத்ரோச்சிஷ்டாஶ்ச பீத்வாப: குஶவாரி
பிபேத்த்ர்யஹம் || ப்ராஹ்மணஸ்து ஸுராபஸ்ய கந்தமாக்ராய
ஸோமப: | அப்ஸு ப்ராணாயாமம் த்ரி: க்ருத்வா க்ருதம் ப்ராஶ்ய விஶு
த்யதி || அஜ்ஞாநாத் ப்ராஶ்ய விண்மூத்ரம் ஸுராஸம்ஸ்ப்ருஷ்
டமேவ ச | புனஸ்ஸம்ஸ்காரமர்ஹந்தி த்ரயோ வர்ணா த்விஜாதய:'
இதி ||

தேவல:—

'ஹிந்தாலதாலபனஸநாரிகேலோத்பவம் | மத்யம்
வாயுவஶாத் ப்ராணம் ப்ராப்ய விப்ரஸ்ய தக்ஷிணம் || ஸ்ப்ருஶே
த்ராய ஸஹஸா ஶுத்திமாப்னோதி தத்க்ஷணாத் | அபாவே ஸூர்யம்
த்ருஷ்ட்வா ஸ்ப்ருஷ்ட்வா கர்ணம் ஸ்மரேத்தரிம்' இதி ||

---

புத்திபூர்வமாகப் பானம் செய்தால் ப்ராயஶ்சித்தம் சொல்லப்படுவதில்லை. மரணாந்த ப்ராயஶ்சித்தமேதான் என்பது நிர்ணயம். ஸுராபாத்ரத்திலுள்ள ஜலத்தை அல்லது மத்ய பாண்டத்திலுள்ள ஜலத்தைக் குடித்தால், சங்க புஷ்பியுடன் காய்ச்சப்பட்ட ஜலத்தை ஐந்துநாள் பருகவேண்டும். மத்யத்தைத் தொட்டாலும், கொடுத்தாலும், வாங்கிக்கொண்டாலும், சூத்ரன் குடித்து மீதியான ஜலத்தைக் குடித்தாலும், மூன்றுநாள் குசத்துடன் சேர்த்துக் காய்ச்சப்பட்ட ஜலத்தைப் பருகவேண்டும். ஸோமபானம் செய்த ப்ராம்ஹணன் ஸுராபானம் செய்தவனுடைய வாஸனையை மோந்தால், ஜலத்தில் மூழ்கி, மூன்று ப்ராணாயாமம் செய்து, நெய்யைப் பருகினால் சுத்தனாவான். அறியாமையால் விஷ்டை, மூத்ரம், ஸுரையுடன் சேர்ந்த வஸ்து இவைகளை உட்கொண்டால் முன் மூன்று வர்ணத்தாரும் புனருபநயனத்துக்கு உரியவராகின்றனர்.

**தேவலர்:**—கூந்தல்பனை, பனை, பேரீச்சை, தென்னை, இவைகளின் மத்தியத்திலிருந்து உண்டாகிய வாஸனையைக் காற்றினால் வந்ததை மோந்தால் உடனே ப்ராம்ஹணனின் வலது கையை மோந்தால் அப்பொழுதே சுத்தியடைகிறான். ப்ராம்ஹணன் கிடைக்காவிடில் ஸூர்யனைப் பார்த்து, வலது காதைத் தொட்டு, ஹரியை ஸ்மரிக்க வேண்டும்.

विण्मूत्रादि भक्षणप्रायश्चित्तम् ॥

पराशरः—

"अज्ञानात् प्राश्य विण्मूत्रं सुरासंस्पृष्टमेव च । पुनःसंस्कारमर्हन्ति त्रयो वर्णा द्विजातयः ॥ अजिनं मेखला दण्डो भैक्षचर्याव्रतानि च । निवर्तन्ते द्विजातीनां पुनःसंस्कारकर्मणि ॥ विण्मूत्रस्य विशुद्ध्यर्थं प्राजापत्यं समाचरेत् । पञ्चगव्यं प्रकुर्वीत स्नात्वा पीत्वा शुचिर्भवेत्" इति ॥ स्नात्वा पञ्चगव्येन । अत्र पञ्चगव्यस्नानं प्रागेव कर्तव्यम् ॥

कामकारे तु स एव—

"अमेध्यरेतो गोमांसं चण्डालान्नमथापि वा । यदि भुक्तं तु विप्रेण कृच्छ्रं चान्द्रायणं चरेत्" इति ॥ अमेध्यं = विण्मूत्रादि ॥

## விஷ்டை, மூத்ரம் முதலியதைப் பக்ஷித்ததற்கு ப்ராயஸ்சித்தம்.

பராசரர்:—"அறியாமையால் முதல் மூன்று வர்ணத்தாரும் விஷ்டை, மூத்ரம், ஸுரையுடன் கலந்த வஸ்து இவைகளை உட்கொண்டால் புனருபநயனத்திற்கு அர்ஹராகின்றனர். த்விஜர்களுக்குப் புனருபநயனத்தில் க்ருஷ்ணாஜினம், மேகலை, தண்டம், பிக்ஷாசரணம், வ்ரதங்கள் இவைகள் நிவ்ருத்திக்கப்படுகின்றன. விஷ்டை, மூத்ரம் இவைகளைப் பக்ஷித்தால் ப்ராயஸ்சித்தத்திற்காக ப்ராஜாபத்ய க்ருச்ரத்தை யனுஷ்டிக்கவேண்டும். பஞ்சகவ்யத்தால் ஸ்நானம் செய்து, பஞ்சகவ்யத்தைப் பருகி, சுத்தனாகிறான்" என்று. பஞ்சகவ்ய ஸ்நானத்தை ப்ராயஸ்சித்தத்திற்கு முன்பே செய்ய வேண்டும்.

புத்திபூர்வமாய்ச் செய்த விஷயத்தில், பராசரரே:— விஷ்டை, மூத்ரம் முதலியது, ரேதஸ், கோமாம்ஸம், சண்டாளனின் அந்நம் இவை ப்ராம்ஹணனால் புஜிக்கப்பட்டால், சாந்த்ராயண க்ருச்ரத்தை யனுஷ்டிக்கவேண்டும். அவ்விதமே,

ததா ச மநு:

'ப்ராஶ்ய மூத்ரபுரீஷாணி த்விஜஶ்சாந்த்ராயணம் சரேத்' இதி ||

* யத்து சதுர்விம்ஶதிமதேऽபிஹிதம்—

விண்மூத்ரபக்ஷணே விப்ரஶ்சரேச்சாந்த்ராயணத்வயம் | ஶ்வாதீநாம் சைவ விண்மூத்ரே சரேச்சாந்த்ராயணத்ரயம்' இதி, ததேததப்யாஸவிஷயமிதி மாதவீயே ||

யம:—

'த்விஜோऽஜ்ஞாநாத் விண்மூத்ரம் கரமாநுஷயோ: கபே: | மயூரஹம்ஸக்ருத்ராணாம் ஸக்ருஜ்ஜக்த்வா து பாதகீ || புந: ஸம்ஸ்காரமர்ஹேத தப்தக்ருச்ச்ரம் விஶோதநம் | ரோகிணோ ந புந: ஸம்ஸ்கார: க்ருச்ச்ரமாத்ரமுதீரிதம் || ஸ்வஸ்தீபூதே பிபேத் பஞ்சகவ்யம் நாரீணாமர்தமீரிதம்' இதி ||

---

மனு:— ப்ராம்ஹணன் மூத்ரம், விஷ்டை இவைகளை உட்கொண்டால் சாந்த்ராயணத்தை யனுஷ்டிக்கவேண்டும்.

சதுர்விம்சதி மதத்தில்:— "மல மூத்ரங்களை ப்ராம்ஹணன் பக்ஷித்தால் . இரண்டு சாந்த்ராயணங்களை யனுஷ்டிக்கவேண்டும். நாய் முதலியதின் மல மூத்ரங்களை உட்கொண்டால் மூன்று சாந்த்ராயணங்களை யனுஷ்டிக்கவேண்டும்" என்று சொல்லப் பட்ட வசனமோவெனில், அது அடிக்கடி செய்வதைப்பற்றியது, என்று மாதவீயத்தில் உள்ளது.

யமன்:— ப்ராம்ஹணன் அறியாமையால் கழுதை, மனிதன், குரங்கு, மயில், ஹம்ஸம், கழுகு இவைகளின் மல மூத்ரங்களை ஒரு தடவை உட்கொண்டால் பாபியாவான். அவனுக்குப் புனருபநயனம் செய்யவேண்டும். தப்தக்ருச்ரம் ப்ராயஶ்சித்தம். ரோகமுள்ளவனுகில் அவனுக்குப் புனருபநயனம் இல்லை. க்ருச்ரம் மட்டில் விதிக்கப்பட்டுள்ளது. ரோக நிவ்ருத்திக்குப் பிறகு பஞ்சகவ்யத்தைப் பருகவேண்டும். சொல்லிய ப்ராயஶ்சித்தத்தில் ஸ்த்ரீகளுக்குப் பாதி ப்ராயஶ்சித்தம் விதிக்கப்படுகிறது.

### 𑌚𑌣𑍍𑌡𑌾𑌲𑌘𑌟𑌸𑍍𑌥𑌜𑌲𑌪𑌾𑌨𑍇 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍍 ॥

𑌪𑌰𑌾𑌶𑌰𑌃—

‘𑌚𑌣𑍍𑌡𑌾𑌲𑌘𑌟𑌸𑌂𑌸𑍍𑌥𑌂 𑌤𑍁 𑌯𑌤𑍍𑌤𑍋𑌯𑌂 𑌪𑌿𑌬𑌤𑌿 𑌦𑍍𑌵𑌿𑌜𑌃 । 𑌤𑌤𑍍𑌕𑍍𑌷𑌣𑌾𑌤𑍍 𑌕𑍍𑌷𑌿𑌪𑌤𑍇 𑌯𑌸𑍍𑌤𑍁 𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌂 𑌸𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 ॥ 𑌯𑌦𑌿 𑌨 𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌯𑌤𑍇 𑌤𑍋𑌯𑌂 𑌶𑌰𑍀𑌰𑍇 𑌯𑌸𑍍𑌯 𑌜𑍀𑌰𑍍𑌯𑌤𑍇 । 𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌂 𑌨 𑌦𑌾𑌤𑌵𑍍𑌯𑌂 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌂 𑌸𑌾𑌨𑍍𑌤𑌪𑌨𑌂 𑌚𑌰𑍇𑌤𑍍’ 𑌇𑌤𑌿 ॥ 𑌪𑍍𑌰𑌥𑌮𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌤𑍍 𑌸𑍍𑌵𑍀𑌕𑌾𑌰𑌾 𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍𑌤𑌦𑌾𑌨𑍀𑌮𑍇𑌵 𑌯𑌦𑌿 𑌵𑌮𑍇𑌤𑍍, 𑌤𑌦𑌾 𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌮𑍍 । 𑌤𑌜𑍍𑌜𑌰𑌣𑍇 𑌸𑌾𑌨𑍍𑌤𑌪𑌨𑌂 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌂 𑌪𑌰𑌿𑌷𑌦𑌾 𑌦𑌾𑌤𑌵𑍍𑌯𑌮𑍍 । 𑌨 𑌤𑍁 𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌮𑍍 ॥

𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌂 𑌤𑌤𑍍𑌪𑌾𑌨𑍇 𑌵𑌰𑍍𑌣𑌭𑍇𑌦𑍇𑌨 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌭𑍇𑌦𑌮𑌾𑌹 𑌸 𑌏𑌵—

‘𑌚𑌰𑍇𑌤𑍍 𑌸𑌾𑌨𑍍𑌤𑌪𑌨𑌂 𑌵𑌿𑌪𑍍𑌰𑌃 𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌮𑌨𑌨𑍍𑌤𑌰𑌃 । 𑌤𑌦𑌰𑍍𑌧𑌂 𑌤𑍁 𑌚𑌰𑍇𑌦𑍍𑌵𑍈𑌶𑍍𑌯𑌃 𑌪𑌾𑌦𑌂 𑌶𑍂𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌦𑌾𑌪𑌯𑍇𑌤𑍍’ 𑌇𑌤𑌿 ॥

---

## சண்டாளனின் குடத்திலுள்ள ஜலத்தைப் பருகினால் ப்ராயஶ்சித்தம்.

பராஶரர்:— "சண்டாளனின் குடத்திலுள்ள ஜலத்தை ப்ராம்ஹணன் பருகினால், உடனே அந்த ஜலத்தை வெளியாக்கிவிட்டால் ப்ராஜாபத்ய க்ருச்ரத்தை யனுஷ்டிக்கவேண்டும். அவ்விதம் வெளியிடாமல் அவனது சரீரத்திலேயே அந்த ஜலம் ஜீர்ணமானால் ப்ராஜாபாத்யத்தை விதிக்கக் கூடாது. ஸாந்தபன க்ருச்ரத்தை அவன் அனுஷ்டிக்கவேண்டும்," என்று. முதலில் அறியாமையால் பருகி, பிறகு அப்பொழுதே வாந்தி செய்துவிட்டால், அப்பொழுது ப்ராஜாபத்யம், அந்த ஜலம் ஜீர்ணமாகிவிட்டால், ஸாந்தபன க்ருச்ரத்தைப் பரிஷத் விதிக்கவேண்டும். ப்ராஜாபத்யத்தை விதிக்கக்கூடாது.

புத்திபூர்வமாய் அந்த ஜலத்தைப் பருகினால், வர்ணத்துக்குத் தகுந்தபடி ப்ராயஶ்சித்த பேதத்தைச் சொல்லுகிறார்,

பராஶரரே:— ப்ராம்ஹணன் ஸாந்தபன க்ருச்ரத்தை யனுஷ்டிக்கவேண்டும். க்ஷத்ரியன் ப்ராஜாபத்ய க்ருச்ரத்தை யனுஷ்டிக்க

𑌰𑌜𑌕𑌾𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍍𑌯𑌜𑌭𑌾𑌣𑍍𑌡𑌸𑍍𑌥𑍋𑌦𑌕𑌾𑌦𑌿𑌪𑌾𑌨𑍇 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑌾𑌹 𑌸 𑌏𑌵—

'𑌭𑌾𑌣𑍍𑌡𑌸𑍍𑌥𑌮𑌨𑍍𑌤𑍍𑌯𑌜𑌾𑌨𑌾𑌂 𑌤𑍁 𑌜𑌲𑌂 𑌦𑌧𑌿 𑌪𑌯𑌃 𑌪𑌿𑌬𑍇𑌤𑍍 । 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌃 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑍋 𑌵𑍈𑌶𑍍𑌯𑌶𑍍𑌶𑍂𑌦𑍍𑌰𑌶𑍍𑌚𑍈𑌵 𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑌤𑌃 ॥ 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌕𑍂𑌰𑍍𑌚𑍋𑌪𑌵𑌾𑌸𑍇𑌨 𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌤𑍀𑌨𑌾𑌂 𑌤𑍁 𑌨𑌿𑌷𑍍𑌕𑍃𑌤𑌿𑌃 । 𑌶𑍂𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌚𑍋𑌪𑌵𑌾𑌸𑍇𑌨 𑌤𑌥𑌾 𑌦𑌾𑌨𑍇𑌨 𑌶𑌕𑍍𑌤𑌿𑌤𑌃' 𑌇𑌤𑌿 ॥ 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌕𑍂𑌰𑍍𑌚𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑍁𑌪𑌰𑌿𑌷𑍍𑌟𑌾𑌦𑍍𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 । 𑌤𑌤𑍍𑌸𑌹𑌿𑌤 𑌉𑌪𑌵𑌾𑌸𑌸𑍍𑌤𑍍𑌰𑍈𑌵𑌰𑍍𑌣𑌿𑌕𑌸𑍍𑌯 । 𑌉𑌪𑌵𑌾𑌸𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌕𑍂𑌰𑍍𑌚𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌦𑌾𑌨𑌂 𑌶𑍂𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 ॥

### 𑌚𑌣𑍍𑌡𑌾𑌲𑌵𑌾𑌪𑍍𑌯𑌾𑌦𑌿𑌜𑌲𑌪𑌾𑌨𑍇 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍍 ॥

---

𑌪𑌰𑌾𑌶𑌰𑌃—

'𑌚𑌣𑍍𑌡𑌾𑌲𑌖𑌾𑌤𑌵𑌾𑌪𑍀𑌷𑍁 𑌪𑍀𑌤𑍍𑌵𑌾 𑌸𑌲𑌿𑌲𑌮𑌗𑍍𑌰𑌜𑌃 । 𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑍇𑌕𑌭𑌕𑍍𑌤𑍇𑌨 𑌤𑍍𑌵𑌹𑍋𑌰𑌾𑌤𑍍𑌰𑍇𑌣 𑌶𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌤𑌿 ॥ 𑌚𑌣𑍍𑌡𑌾𑌲𑌭𑌾𑌣𑍍𑌡

---

வேண்டும். வைச்யன் ப்ராஜாபத்ய க்ருச்ரத்தின் பாதியை யனுஷ்டிக்கவேண்டும். சூத்ரன் கால் ப்ராஜாபத்ய க்ருச்ரத்தை யனுஷ்டிக்க வேண்டும்.

வண்ணான் முதலியவரின் பானையிலுள்ள ஜலம் முதலியதைப் பருகினால், ப்ராயச்சித்தத்தைச் சொல்லுகிறார்,

**பராசரர்:—** "அந்த்யஜர்களுடைய பாத்ரத்திலுள்ள ஜலம், தயிர், பால் இவைகளை நான்கு வர்ணத்தாரும் அறியாமையால் பருகினால், ப்ரம்ஹகூர்ச்ச பஞ்சகவ்ய ப்ராசனம், உபவாஸம் இவைகளால் முதல் மூன்று வர்ணத்தாருக்கும் சுத்தி. சூத்ரனுக்கு உபவாஸத்தாலும், யதாசக்தி தானத்தாலும் சுத்தி," என்று. ப்ரம்ஹ கூர்ச்சத்தின் ஸ்வரூபம் மேலே சொல்லப்படப்போகிறது. அத்துடன் கூடிய உபவாஸம் முதல் மூன்று வர்ணத்தாருக்கு. சூத்ரனுக்கு ப்ரம்ஹகூர்ச்சத்துக்குப் பதிலாகத் தானம் என்றறியவும்.

### சண்டாளனின் குட்டை முதலியதின் ஜலத்தைப் பருகுவதில் ப்ராயச்சித்தம்.

**பராசரர்:—** "சண்டாளன் வெட்டிய குட்டைகளில் உள்ள ஜலத்தை ப்ராம்ஹணன் அறியாமல் குடித்தால்; ஒருவேளை போஜனத்தாலும், உபவாஸத்தாலும் சுத்தியடைகிறான். சண்டாள

𑌸𑌂𑌸𑍍𑌪𑍃𑌷𑍍𑌟𑌂 𑌪𑍀𑌤𑍍𑌵𑌾 𑌕𑍂𑌪𑌗𑌤𑌂 𑌜𑌲𑌮𑍍 । 𑌗𑍋𑌮𑍂𑌤𑍍𑌰𑌯𑌾𑌵𑌕𑌾𑌹𑌾𑌰𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌰𑌾𑌤𑍍𑌰𑌾𑌚𑍍𑌛𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌪𑍍𑌨𑍁𑌯𑌾𑌤𑍍' 𑌇𑌤𑌿 ॥

𑌚𑌣𑍍𑌡𑌾𑌲𑌸𑌮𑍍𑌬𑌨𑍍𑌧𑌿𑌕𑍂𑌪𑌾𑌦𑍍𑌯𑍁𑌦𑌕𑌪𑌾𑌨𑍇 𑌏𑌕𑌭𑌕𑍍𑌤𑌮𑍍 । 𑌕𑌾𑌮𑍇 𑌤𑍂𑌪𑌵𑌾𑌸𑌃 । 𑌚𑌣𑍍𑌡𑌾𑌲𑌭𑌾𑌣𑍍𑌡𑌸𑌂𑌸𑍍𑌪𑍃𑌷𑍍𑌟𑌕𑍂𑌪𑌸𑍍𑌥𑌜𑌲𑌪𑌾𑌨𑍇 𑌗𑍋𑌮𑍂𑌤𑍍𑌰𑌸𑌹𑌿𑌤𑌯𑌵𑌪𑌿𑌷𑍍𑌟𑌾𑌦𑌿𑌕𑌂 𑌤𑍍𑌰𑌿𑌰𑌾𑌤𑍍𑌰𑌮𑌾𑌹𑌾𑌰𑌤𑍍𑌵𑍇𑌨 𑌸𑍍𑌵𑍀𑌕𑌾𑌰𑍍𑌯𑌮𑌿𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥

𑌉𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌟𑌵𑌿𑌷𑌯𑌤𑌦𑍍𑌬𑌾𑌧𑍌 ॥

---

𑌦𑍇𑌵𑌲𑌃—

'𑌵𑌿𑌪𑍍𑌰𑌸𑍍𑌯 𑌪𑍀𑌤𑌶𑍇𑌷𑌂 𑌯𑌤𑍍𑌤𑍋𑌯𑌮𑌨𑍍𑌯𑌃 𑌪𑌿𑌬𑍇𑌦𑍍𑌯𑌦𑌿 । 𑌮𑌦𑍍𑌯𑌪𑌾𑌨𑌸𑌮𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌤𑌤𑍍𑌤𑍋𑌯𑌂 𑌮𑍁𑌨𑌿𑌪𑍁𑌙𑍍𑌗𑌵𑍈𑌃 ॥ 𑌪𑍀𑌤𑍍𑌵𑌾𑌽𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌤𑍍 𑌦𑍍𑌵𑌿𑌜𑌃 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌂 𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌯𑍇' 𑌇𑌤𑌿 ॥

---

பாத்ரத்தால் தொடப்பட்ட கிணற்றிலுள்ள ஜலத்தைக் குடித்தால், மூன்றுநாள் கோமூத்ரத்துடன் கூடிய யவையைப் புஜிப்பதால் சுத்தனுகிறுன்," என்று.

சண்டாளனுக்குச் சொந்தமாகிய குட்டையின் ஜலத்தைக் குடித்தால், ஒருவேளை போஜனம் ப்ராயஶ்சித்தம். புத்திபூர்வமானுல் உபவாஸம். சண்டாளனுடைய பாத்ரத்தால் தொடப்பட்ட கிணற்றிலுள்ள ஜலத்தைக் குடித்தால், கோமூத்ரத்துடன் கூடிய யவையின் மாவு முதலியதை மூன்று நாள் முழுவதும் ஆஹாரமாய் க்ரஹிக்கவேண்டும், என்பது பொருள்.

## உச்சிஷ்டத்தைப் பற்றியதும், அதன் மறுப்பும்.

**தேவலர்:**— ப்ராம்ஹணன் குடித்து மீந்த ஜலத்தை மற்றொருவன் குடித்தால், அது மத்யபானத்துக்கு ஸமம், என்று முனிவர்களால் சொல்லப்பட்டுள்ளது. அதை ப்ராம்ஹணன் அறியாமையால் குடித்தால், ப்ராஜாபத்ய க்ருச்ரத்தைச் சுத்திக்காக அனுஷ்டிக்க வேண்டும்.

𑌪𑌾𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌭𑌾𑌵𑍇 𑌤𑍁 𑌮𑌾𑌰𑍍𑌕𑌣𑍍𑌡𑍇𑌯𑌃—

'𑌪𑌾𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌭𑌾𑌵𑍇 𑌤𑍃𑌷𑌾𑌰𑍍𑌤𑌸𑍍𑌤𑍁 𑌪𑍀𑌤𑌶𑍇𑌷𑌂 𑌪𑌿𑌬𑍇𑌦𑍍𑌦𑍍𑌵𑌿𑌜𑌃 । 𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌦𑍍𑌭𑍁𑌵𑌿 𑌪𑌾𑌤𑍍𑌰𑍍𑌯𑌾𑌯 𑌪𑍀𑌤𑍍𑌵𑌾 𑌵𑌿𑌪𑍍𑌰𑍋 𑌨 𑌦𑍋𑌷𑌭𑌾𑌕𑍍' 𑌇𑌤𑌿 ॥

𑌵𑍃𑌦𑍍𑌧𑌶𑌾𑌤𑌾𑌤𑌪𑌃—

'𑌪𑍀𑌤𑌶𑍇𑌷𑌂 𑌤𑍁 𑌯𑌤𑍍 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍 𑌭𑌾𑌜𑌨𑍇 𑌚𑌾𑌵𑌶𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 । 𑌅𑌭𑍋𑌜𑍍𑌯𑌂 𑌤𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌨𑍀𑌯𑌾𑌦𑍍𑌭𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌂 𑌚𑌰𑍇𑌤𑍍 ॥ 𑌪𑍀𑌤𑌾𑌵𑌶𑌿𑌷𑍍𑌟𑌂 𑌚 𑌪𑌾𑌨𑍀𑌯𑌂 𑌪𑍀𑌤𑍍𑌵𑌾 𑌤𑍁 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌃 𑌕𑍍𑌵𑌚𑌿𑌤𑍍 । 𑌤𑍍𑌰𑌿𑌰𑌾𑌤𑍍𑌰𑌂 𑌤𑍁 𑌵𑍍𑌰𑌤𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌾𑌮𑌹𑌸𑍍𑌤𑍇𑌨 𑌵𑌾 𑌪𑍁𑌨𑌃' 𑌇𑌤𑌿 ॥ 𑌏𑌤𑌤𑍍 𑌸𑍍𑌵𑍋𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌟𑌵𑌿𑌷𑌯𑌮𑍍 ॥

𑌹𑌾𑌰𑍀𑌤𑌃—

'பும்ஶ்சலீ யதி க்ருஹம் கச்சேத் தத³ஶுத்தம் க்ருஹம் பவேத் । பதிமாத்ருக்ருஹம் யச்ச ஜாரவேஶ்ம ததா யத்க்ருஹம் ॥ உல்லிக்ய தத்க்ருஹம் பஶ்சாத் பஞ்சகவ்யேந ஸேசயேத் । த்யஜேச்ச ம்ருண்மயம் பாத்ரம் வஸ்த்ரம் காஷ்டம் ச ஶோதயேத் ॥ ஸம்பாராந் ஶோதயேத் ஸர்வாந் கோகேஶைஶ்ச பலோத்பவாந் । தாம்ராணி பஞ்சகவ்யேந காம்ஸ்யாநி தஶ பஸ்மபி: ॥ ப்ராயஶ்சித்தம் சரேத் விப்ரோ ப்ராஹ்மணைருபபாதிதம் । கோத்வயம் தக்ஷிணாம் தத்யாத் ப்ராஜாபத்யத்வயம் சரேத் ॥ இதரேஷாமஹோராத்ரம்

---

சேருகிறுளோ அவள் வ்யபிசாரிணீ என்றும், ப்ரத்யக்ஷவேசீ என்றும் அறியத்தக்கவள்.

## வ்யபிசாரிணீ வீட்டில் ப்ரவேசித்தால் சுத்தியின் ப்ரகாரம்.

முன் சொல்லப்பட்ட ப்ராம்ஹண ஸ்த்ரீ வ்யபசாரிணீ வீட்டில் நுழையும் விஷயத்தில் வீட்டிற்குச் சுத்தியின் ப்ரகாரத்தைச் சொல்லுகிறுர்,

**பராசரர்:—** வ்யபிசாரிணி ஸ்த்ரீ மற்ற புருஷர்களின் வீட்டை யடைந்தால் அந்த வீடு அசுத்தமாகும். பதியினுடைய வீடு, தாயாரின் வீடு, ஜாரனுடைய வீடு இவைகளில் சென்றுலும் அவைகளும் அசுத்தங்களாகும். அந்த வீட்டைக் கிளறி, பிறகு பஞ்சகவ்யத்தால் நனைக்கவேண்டும். மண்பாத்ரங்களை த்யஜிக்கவேண்டும். வஸ்த்ரங்களையும் கட்டைகளையும் சுத்தி செய்யவேண்டும். பழத்தினுல் உண்டாகிய ஸாமான்களைப் பசுவின் வால் மயிர்களால் சுத்தி செய்யவேண்டும். தாம்ர பாத்ரங்களைப் பஞ்சகவ்யத்தாலும், வெண்கலப்பாத்ரங்களைப் பத்துத் தடவை சாம்பலினுலும் சுத்தி செய்யவேண்டும். ப்ராம்ஹணர்களால் விதிக்கப்பட்ட ப்ராயச்சித்தத்தை ப்ராம்ஹணன் அனுஷ்டிக்கவேண்டும். இரண்டு பசுக்களைத் தக்ஷிணையாகக்கொடுக்கவேண்டும். இரண்டு ப்ராஜாபத்ய

𑌪𑌞𑍍𑌚𑌗𑌵𑍍𑌯𑍇𑌨 𑌶𑍋𑌧𑌨𑌮𑍍 । 𑌉𑌪𑌵𑌾𑌸𑍈𑌰𑍍𑌵𑍍𑌰𑌤𑍈𑌃 𑌪𑍁𑌣𑍍𑌯𑍈𑌃 𑌸𑍍𑌨𑌾𑌨𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌰𑍍𑌚𑌨𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 ॥ 𑌜𑌪𑌹𑍋𑌮𑌦𑌯𑌾𑌦𑌾𑌨𑍈𑌃 𑌶𑍁𑌧𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌦𑌯𑌃 । 𑌆𑌕𑌾𑌶𑍋 𑌵𑌾𑌯𑍁𑌰𑌗𑍍𑌨𑌿𑌶𑍍𑌚 𑌮𑍇𑌧𑍍𑌯𑌂 𑌭𑍂𑌮𑌿𑌗𑌤𑌂 𑌜𑌲𑌮𑍍 ॥ 𑌨 𑌦𑍁𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑍀𑌹 𑌦𑌰𑍍𑌭𑌾𑌶𑍍𑌚 𑌯𑌜𑍍𑌞𑍇𑌷𑍁 𑌚𑌮𑌸𑌾 𑌯𑌥𑌾' 𑌇𑌤𑌿 ॥

𑌏𑌵𑌮𑍁𑌕𑍍𑌤𑌾 𑌵𑍍𑌯𑌭𑌿𑌚𑌾𑌰𑌿𑌣𑍀 𑌸𑍍𑌵𑌨𑌿𑌵𑌾𑌸𑌾𑌯 𑌪𑌤𑍍𑌯𑍁𑌰𑍍𑌮𑌾𑌤𑍁𑌰𑍍𑌜𑌾𑌰𑌸𑍍𑌯 𑌵𑌾𑌽𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌵𑌾 𑌦𑌾𑌕𑍍𑌷𑌿𑌣𑍍𑌯𑌵𑌿𑌷𑌯𑌸𑍍𑌯 𑌯𑌸𑍍𑌯 𑌕𑌸𑍍𑌯𑌚𑌿𑌦𑍍𑌗𑍃𑌹𑌂 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑌤𑌿, 𑌤𑌦𑍍𑌗𑍃𑌹𑌂 𑌚𑌣𑍍𑌡𑌾𑌲𑌾𑌧𑍍𑌯𑍁𑌷𑌿𑌤𑌗𑍃𑌹𑌵𑌦𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌮𑌶𑍁𑌚𑌿 𑌭𑌵𑌤𑌿 । 𑌤𑌤𑍍𑌰 𑌉𑌲𑍍𑌲𑍇𑌖𑌨𑌂 𑌭𑍂𑌮𑍇𑌃 । 𑌤𑍇𑌨 𑌕𑍁𑌡𑍍𑌯𑌾𑌦𑌿𑌲𑍇𑌪𑌨𑌾𑌦𑌿𑌕𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌕𑌾𑌷𑍍𑌠𑌧𑌾𑌨𑍍𑌯𑌾𑌦𑌿𑌸𑌂𑌭𑌾𑌰𑌾𑌣𑌾𑌂 𑌚 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌶𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌂 𑌶𑍋𑌧𑌨𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌮𑍍 । 𑌨𑌾𑌰𑌿𑌕𑍇𑌲𑌾𑌦𑌿𑌫𑌲𑌸𑌂𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌪𑌾𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌗𑍋𑌵𑌾𑌲𑍈𑌰𑍍𑌮𑌾𑌰𑍍𑌜𑌨𑌮𑍍 । 𑌤𑌾𑌮𑍍𑌰𑌸𑍍𑌯𑌾𑌮𑍍𑌲𑌾𑌦𑌿𑌨𑌾 𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍁𑌕𑍍𑌤𑌾 । 𑌅𑌤𑍍𑌰 𑌤𑍁 𑌪𑌞𑍍𑌚𑌗𑌵𑍍𑌯𑍇𑌨𑍇𑌤𑌿 𑌵𑌿𑌶𑍇𑌷𑌃 । 𑌕𑌾𑌂𑌸𑍍𑌯𑌸𑍍𑌯

---

க்ருச்ரங்களை யனுஷ்டிக்கவேண்டும். மற்றவைகளுக்கு ஒரு நாள் முழுவதும் பஞ்சகவ்யத்தால் சுத்தி. ப்ராம்ஹணர் முதலிய வர்ணத்தார், உபவாஸம், வ்ரதம், புண்யமான ஸ்நானம், ஸந்த்யோபாஸனம், தேவ பூஜை முதலியவைகள், ஜபம், ஹோமம், தயை, தானம் இவைகளால் சுத்தராகின்றனர். ஆகாசம், வாயு, அக்னி, பூமியில் உள்ள ஜலம் இவைகள் சுத்தங்களே. தர்ப்பங்களும் தோஷத்தை யடைவதில்லை. யாகங்களில் சமஸபாத்ரங்கள்போல்.

சொல்லப்பட்ட வ்யபிசாரிணீ தான் வஸிப்பதற்காகப் புருஷன், தாயார், ஜாரன், தாக்ஷிண்யத்திற்குப் பாத்ரமான மற்றவன் இவர்களுள் யாராவது ஒருவனுடைய வீட்டில் நுழைந்தால், அந்த வீடு சண்டாளனால் வஸிக்கப்பட்ட வீடு போல் மிகவும் அசுத்தமாக ஆகிறது. அவ்விஷயத்தில் பூமியைக் கிளறவேண்டும் அதனால், சுவர் முதலியதை மெழுகுவது முதலியது சொல்லப்படுகிறது. வஸ்த்ரம், கட்டை இவைகளுக்கும், தான்யம் முதலிய வஸ்துக்களுக்கும் த்ரவ்ய சுத்திப்ரகரணத்தில் சொல்லியபடி சுத்தி செய்யவேண்டும். தென்னை முதலியதின் பழங்களால் உண்டாகிய பாத்ரங்களைப் பசுவின் வால் மயிர்களால் சுத்தி செய்யவேண்டும். தாம்ரத்திற்குப் புளி முதலியதால் சுத்தியென்பது முன்பு சொல்லப்பட்டது. இவ்விடத்தில் பஞ்சகவ்யத்தினுல் சுத்தி என்றது விசேஷம்.

த்ராணாம் தஶக்ருத்வோ பஸ்மநா பரிமார்ஜநம் | க்ருஹஸ்வாமீ து
பரிஷத்விநிர்திஷ்டம் ஸதக்ஷிணம் ப்ராஜாபத்யத்வயம் சரேத் |
அந்யேஷாம் து தத்க்ருஹவாஸிநாம் ஏகோபவாஸ: பஞ்சகவ்யப்ரா
ஶநம் ச | தத்க்ருஹவாஸிபிஸ்ஸஹ ஸம்வாஸகர்த்ரூணாம் க்ருஹாந்தர
வாஸிநாம் ப்ராஹ்மணாதீநாம் நிர்திஷ்டோபவாஸாதீநாமேக
தமேந ஶுத்தி: | தத்க்ருஹஸம்பந்திநாமாகாஶாதீநாம் நிர்தோ
ஷத்வாத் ந ப்ரயத்நஸாத்யா ஶுத்திரஸ்தி | தத்ர த்ருஷ்டாந்தோ
யஜ்ஞேஷ்விதி | சிரகாலவாஸவிஷயமிதம் பரிஶோதநம் | ஸக்ருத்
ப்ரவேஶே து உபலேபநாதிபிஶ்ஶுத்திரிதி மாதவீயே ||

ப்ராஹ்மண்யா: ஶ்வபாகாதிஸங்கமே ப்ராயஶ்சித்தம் ||

அகாமதோ சண்டாலஸம்ஸர்கே ப்ராஹ்மண்யா: ப்ராய
ஶ்சித்தமாஹ பராஶர:—

---

வெண்கலப் பாத்ரங்களைப் பத்துத் தடவை சாம்பலால் தேய்க்க வேண்டும். வீட்டிற்குடையவன் பரிஷத்தால் விதிக்கப்பட்ட தக்ஷிணையுடன் கூடிய இரண்டு ப்ராஜாபத்ய க்ருச்ரத்தை யனுஷ்டிக்கவேண்டும். அவ்வீட்டிலிருக்கும் மற்றவர்களுக்கு ஒரு நாள் முழுவதும் உபவாஸமும், பஞ்சகவ்ய ப்ராசனமும். அந்த வீட்டிலிருப்பவருடன் ஸஹவாஸம் செய்த வேறுக்ருஹத்திலுள்ள ப்ராம்ஹணர் முதலியவர்க்கும் சொல்லப்பட்ட உபவாஸம் முதலியவைகளுள் ஏதாவது ஒன்றினல் சுத்தி. அந்த வீட்டைச் சேர்ந்த ஆகாசம் முதலியவைகளுக்குத் தோஷமில்லாததால் புருஷப்ரயத்னத்தால் ஸம்பாதிக்கக்கூடிய சுத்தி என்பதில்லை. அதில் உதாஹரணம் யஜ்ஞேஷு என்பது. இவ்விதம் சொல்லிய சுத்தி வெகுகாலம் வஸித்ததைப்பற்றியது. ஒரு தடவை அவள் ப்ரவேசித்த விஷயத்தில் மெழுகுவது முதலியதால் சுத்தி, என்றுள்ளது மாதவீயத்தில்.

## ப்ராம்ஹண ஸ்த்ரீக்குச் சண்டாளன் முதலியவர்களைச் சேர்ந்த விஷயத்தில் ப்ராயஸ்சித்தம்.

அபுத்திபூர்வமாய்ச் சண்டாளனின் ஸம்பர்க்கத்தில் ப்ராம்ஹணஸ்த்ரீக்கு ப்ராயஸ்சித்தத்தைச் சொல்லுகிறார்,

𑌚𑌣𑍍𑌡𑌾𑌲𑍈𑌸𑍍𑌸𑌹 𑌸𑌂𑌪𑌰𑍍𑌕𑌂 𑌯𑌾 𑌨𑌾𑌰𑍀 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌤𑌤𑌃 । 𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌨𑍍 𑌦𑌶𑌾𑌵𑌰𑌾𑌨𑍍 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌸𑍍𑌵𑌕𑌂 𑌦𑍋𑌷𑌂 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌯𑍇𑌤𑍍 ॥ 𑌆𑌕𑌣𑍍𑌠𑌸𑌂𑌮𑌿𑌤𑍇 𑌕𑍂𑌪𑍇 𑌗𑍋𑌮𑌯𑍋𑌦𑌕𑌕𑌰𑍍𑌦𑌮𑍇 । 𑌤𑌤𑍍𑌰 𑌸𑍍𑌥𑌿𑌤𑍍𑌵𑌾 𑌨𑌿𑌰𑌾𑌹𑌾𑌰𑌾 𑌤𑍍𑌵𑌹𑍋𑌰𑌾𑌤𑍍𑌰𑍇𑌣 𑌨𑌿𑌷𑍍𑌕𑍍𑌰𑌮𑍇𑌤𑍍 ॥ 𑌸𑌶𑌿𑌖𑌂 𑌵𑌪𑌨𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌭𑍁𑌞𑍍𑌜𑍀𑌯𑌾𑌦𑍍𑌯𑌾𑌵𑌕𑍌𑌦𑌨𑌮𑍍 । 𑌤𑍍𑌰𑌿𑌰𑌾𑌤𑍍𑌰𑌮𑍁𑌪𑌵𑌾𑌸𑌿𑌤𑍍𑌵𑌾 𑌤𑍍𑌵𑍇𑌕𑌰𑌾𑌤𑍍𑌰𑌂 𑌜𑌲𑍇 𑌵𑌸𑍇𑌤𑍍 ॥ 𑌶𑌙𑍍𑌖𑌪𑍁𑌷𑍍𑌪𑍀𑌲𑌤𑌾𑌮𑍂𑌲𑌂 𑌪𑌤𑍍𑌰𑌂 𑌵𑌾 𑌕𑍁𑌸𑍁𑌮𑌂 𑌫𑌲𑌮𑍍 । 𑌸𑍁𑌵𑌰𑍍𑌣𑌂 𑌪𑌞𑍍𑌚𑌗𑌵𑍍𑌯𑌂 𑌚 𑌕𑍍𑌵𑌾𑌥𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌪𑌿𑌬𑍇𑌜𑍍𑌜𑌲𑌮𑍍 ॥ 𑌏𑌕𑌭𑌕𑍍𑌤𑌂 𑌚𑌰𑍇𑌤𑍍 𑌪𑌶𑍍𑌚𑌾𑌦𑍍𑌯𑌾𑌵𑌤𑍍 𑌪𑍁𑌷𑍍𑌪𑌵𑌤𑍀 𑌭𑌵𑍇𑌤𑍍 । 𑌵𑍍𑌰𑌤𑌂 𑌚𑌰𑌤𑌿 𑌤𑌦𑍍𑌯𑌾𑌵𑌤𑍍 𑌤𑌾𑌵𑌤𑍍 𑌸𑌂𑌵𑌸𑌤𑍇 𑌬𑌹𑌿𑌃 ॥ 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑍇 𑌤𑌤𑌶𑍍𑌚𑍀𑌰𑍍𑌣𑍇 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌭𑍋𑌜𑌨𑌮𑍍 । 𑌗𑍋𑌦𑍍𑌵𑌯𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌂 𑌦𑌦𑍍𑌯𑌾𑌤𑍍 𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌂 𑌪𑌾𑌰𑌾𑌶𑌰𑍋𑌽𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍' 𑌇𑌤𑌿 ॥

𑌕𑌾𑌮𑌕𑍃𑌤𑍇 𑌸𑌕𑍃𑌦𑍍𑌗𑌮𑌨𑍇 𑌅𑌬𑍍𑌦𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌮𑍍 । 𑌅𑌸𑌕𑍃𑌦𑍍𑌗𑌮𑌨𑍇 𑌅𑌗𑍍𑌨𑌿𑌪𑍍𑌰𑌵𑍇𑌶𑌃 । 𑌸𑌕𑍃𑌦𑌜𑍍𑌞𑌾𑌨𑌗𑌮𑌨𑍇 𑌕𑌾𑌮𑌤𑌸𑍍𑌤𑍁 𑌕𑍃𑌤𑍇 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌃 ।

---

**பராசரர்:—** எவள் சண்டாளனேடு ஸம்பர்க்கத்தைச் செய்கின்ருளோ, அவள் பத்துப் பேர்களுக்குக் குறையாத பரிஷத்தைச் சேர்த்து, தன்னுடைய பாபத்தைத் தெரிவிக்கவேண்டும். கழுத்தளவுள்ள கிணற்றில் பசுவின் சாணத்தால் கூடிய சேற்றில் அவள் ஒரு நாள் முழுவதும் ஆஹாரம் இல்லாமலிருந்து வெளியேறவேண்டும். சிகையுடன் வபனம் செய்துகொண்டு யாவகான்னத்தைப் புஜிக்க வேண்டும். மூன்று நாள் உபவாஸமிருந்து, ஒரு நாள் முழுவதும் ஜலத்தில் வஸிக்கவேண்டும். சங்கபுஷ்பக் கொடியின் வேர், இலை, பூ, பழம், தங்கம், பஞ்சகவ்யம் இவைகளைக் கொதிக்கச்செய்து அந்த ஜலத்தைக் குடிக்கவேண்டும். பிறகு ரஜஸ்வலையாய் ஆகும் வரையில் ஒருவேளை புஜிக்கவேண்டும். இந்த ப்ராயச்சித்தத்தை அனுஷ்டிக்கும் வரையில் அவள் வெளியில் வஸிக்கவேண்டும். ப்ராயச்சித்தம் அனுஷ்டித்த பிறகு ப்ராம்ஹணர்களைப் புஜிப்பிக்க வேண்டும். இரண்டு பசுக்களைத் தக்ஷிணையாக கொடுக்கவேண்டும். இவ்விதம் சுத்தியைப் பராசரர் சொன்னர்.

புத்திபூர்வமாய் ஒரு தடவைசெய்த ஸம்பர்க்கத்தில் அப்த க்ருச்ரம் ப்ராயச்சித்தம். அடிக்கடி செய்தால் அக்னி ப்ரவேசம்

𑌅𑌬𑍍𑌦𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌂 𑌤𑌸𑍍𑌯𑌾 𑌅𑌭𑍍𑌯𑌾𑌸𑍇𑌽𑌗𑍍𑌨𑌿𑌪𑍍𑌰𑌵𑍇𑌶𑌨𑌮𑍍' 𑌇𑌤𑌿 𑌸𑍍𑌮𑍃𑌤𑍇𑌃 ॥

𑌰𑍇𑌤𑌸𑍍𑌸𑍇𑌕𑌾𑌨𑍍𑌤𑌚𑌣𑍍𑌡𑌾𑌲𑌸𑌙𑍍𑌗𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑌭𑌿𑌧𑌾𑌯 𑌰𑍇𑌤𑌸𑍍𑌸𑍇𑌕𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌾𑌙𑍍𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑍌 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑌾𑌹 𑌪𑌰𑌾𑌶𑌰𑌃—

'𑌚𑌾𑌤𑍁𑌰𑍍𑌵𑌰𑍍𑌣𑍍𑌯𑌸𑍍𑌯 𑌨𑌾𑌰𑍀𑌣𑌾𑌂 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌂 𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍 । 𑌯𑌥𑌾 𑌭𑍂𑌮𑌿𑌸𑍍𑌤𑌥𑌾 𑌨𑌾𑌰𑍀 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑌾𑌂 𑌨 𑌤𑍁 𑌦𑍂𑌷𑌯𑍇𑌤𑍍' 𑌇𑌤𑌿 ॥ 𑌨 𑌦𑍂𑌷𑌯𑍇𑌤𑍍 = 𑌨 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍇𑌦𑌿𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥

𑌚𑌾𑌤𑍁𑌰𑍍𑌵𑌰𑍍𑌣𑍍𑌯𑌸𑍍𑌯𑍇𑌤𑌿 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍀𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑌿𑌕𑍍𑌤𑌵𑌿𑌷𑌯𑍇 𑌸𑌙𑍍𑌕𑍋𑌚𑌨𑍀𑌯𑌮𑍍, '𑌰𑍇𑌤𑌸𑍍𑌸𑍇𑌕𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌾𑌙𑍍𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑍌 𑌚𑌣𑍍𑌡𑌾𑌲𑌸𑌙𑍍𑌗𑍇 𑌸𑌤𑌿 । 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍀 𑌨𑌿𑌷𑍍𑌕𑍃𑌤𑌿𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌚𑍍𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌚𑌤𑍁𑌷𑍍𑌟𑌯𑌮𑍍' 𑌇𑌤𑌿 𑌸𑍍𑌮𑍃𑌤𑍇𑌃 ॥

---

*ப்ராயஶ்சித்தம். "ப்ராம்ஹண ஸ்த்ரீக்குப் புத்திபூர்வமாய் ஒரு தடவை சண்டாள ஸம்பர்க்கம் ஏற்பட்டால் அப்த க்ருச்ரம் ப்ராயஶ்சித்தம் எனச் சொல்லப்பட்டுள்ளது. அடிக்கடியானால், அக்னிப்ரவேசம் ப்ராயஶ்சித்தம்," என்று ஸ்ம்ருதியிருப்பதால்,*

*ரேதஸ்ஸேகாந்தமான ஸம்பர்க்கத்தில் ப்ராயஶ்சித்தத்தைச் சொல்லி அதற்குமுன் நிவ்ருத்தியானால், அவ்விஷயத்தில் ப்ராயஶ்சித்தத்தைச் சொல்லுகிறார்,*

**பராசரர்**:—*நான்கு வர்ணத்தாருடைய ஸ்த்ரீகளுக்கும் ப்ராயஶ்சித்தம் சாந்த்ராயணம் என்று சொல்லப்பட்டுள்ளது. பூமி எப்படியோ அதுபோல் உள்ளவள் ஸ்த்ரீயும். ஆகையால் அவளைத் தூஷிக்கக்கூடாது (தள்ளக்கூடாது.)*

*நான்கு வர்ணத்தாருடைய என்றதில் ப்ராம்ஹணஸ்த்ரீயைத் தவிர்த்த மூன்று வர்ண ஸ்த்ரீகளுக்கு என்று சுருக்கிக்கொள்ள வேண்டும். "ப்ராம்ஹண ஸ்த்ரீ சண்டாள ஸம்பர்க்கத்தில் ரேதஸ்ஸேகத்திற்கு முன்பே நிவ்ருத்தியடைந்தால் நான்கு சாந்த்ராயணங்களை யனுஷ்டிக்கவேண்டும்" என்று ஸ்ம்ருதியிருப்பதால்,*

ब्राह्मण्याः म्लेच्छरजकादिसंसर्गे प्रायश्चित्तम् ॥

संवर्तः—

'चण्डालं पुल्कसं म्लेच्छं श्वपाकं पतितं तथा । ब्राह्मणी कामतो गत्वा चान्द्रायणचतुष्टयम् ॥ रजकव्याधशैलूषवेणुचर्मोपजीविनः । ब्राह्मण्यज्ञानतो गत्वा चरेच्चान्द्रायणद्वयम्' इति ॥

गर्भधारणे तु जाबालिः—

'विप्रा ज्ञानाच्चण्डालगर्भिणीं तां दण्डयेन्नृपः । निकृत्य कर्णनासं तु निर्वास्या पत्तनाद्बहिः ॥ राज्ञा कार्यः स्त्रियामेवं न वधः स्त्रीषु संमतः । क्षत्रवैश्यस्त्रियो राजा कारीषवह्निना दहेत्' इति ॥

तदेवं ब्रह्महत्यासुरापानस्वर्णस्तेयगुरुतल्पगामिनां महापातकिनां प्रायश्चित्तानि निरूपि

## ப்ராம்ஹணிக்கு ம்லேச்சன், ரஜகன் முதலியவருடன் ஸம்பர்க்கத்தில் ப்ராயஸ்சித்தம்.

**ஸம்வர்த்தரோவெனில்:**— சண்டாளன், புல்கஸன், ம்லேச்சன், ச்வபாகன், பதிதன் இவர்களை ப்ராம்ஹண ஸ்த்ரீ புத்திபூர்வமாய்ச் சேர்ந்தால், நான்கு சாந்த்ராயண க்ருச்ரங்களை யனுஷ்டிக்க வேண்டும். ரஜகன், வ்யாதன், சைலூஷன், வேணுஜீவி, சர்மஜீவி இவர்களை ப்ராம்ஹண ஸ்த்ரீ அறியாமல் சேர்ந்தால் இரண்டு சாந்த்ராயணங்களை யனுஷ்டிக்கவேண்டும்.

கர்ப்பந் தரித்தாலோ, **ஜாபாலி:**— ப்ராம்ஹண ஸ்த்ரீ சண்டாளனைச் சேர்ந்து கர்ப்பம் தரித்தால், அவளை அரசன் தண்டிக்க வேண்டும். காதையும் மூக்கையும் துண்டித்து அவளைப் பட்டணத்துக்கு வெளியில் துரத்தவேண்டும். அரசன் இவ்விதம் வெளியேற்றுவதை மட்டில் செய்யவேண்டும். ஸ்த்ரீகள் விஷயத்தில் கொலை என்பது விதிக்கப்படவில்லை. க்ஷத்ரிய வைச்ய ஸ்த்ரீகளுக்கு அரசன் எரிமுட்டையால் எரிப்பதை விதிக்கவேண்டும்.

இவ்விதம் ப்ரம்ஹஹத்யை, ஸுராபானம், ஸ்வர்ணஸ்தேயம், குருதல்பகமனம் என்ற மஹாபாதகங்களுக்கு ப்ராயஸ்சித்தங்

𑌤𑌾𑌨𑌿 । 𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌾𑌦𑌿𑌤𑌰𑌹𑌨𑌨𑌸𑍍𑌯 𑌅𑌪𑍇𑌯𑌪𑌾𑌨𑌸𑍍𑌯 𑌸𑍍𑌤𑍇𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑌸𑍍𑌯 𑌅𑌗𑌮𑍍𑌯𑌾𑌗𑌮𑌨𑌸𑍍𑌯 𑌚 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌨𑍍𑌯𑌭𑌿𑌹𑌿𑌤𑌾𑌨𑌿 ॥

### 𑌸𑌂𑌸𑌰𑍍𑌗𑌸𑍍𑌯 𑌮𑌹𑌾𑌪𑌾𑌤𑌕𑌤𑍍𑌵𑌵𑌿𑌚𑌾𑌰𑌃 ॥

𑌅𑌥 𑌮𑌹𑌾𑌪𑌾𑌤𑌕𑌿𑌸𑌂𑌸𑌰𑍍𑌗𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌨𑌿𑌰𑍂𑌪𑍍𑌯𑌤𑍇 । 𑌤𑌸𑍍𑌯 𑌚 𑌮𑌹𑌾𑌪𑌾𑌤𑌕𑌿𑌤𑍍𑌵𑌮𑍁𑌕𑍍𑌤𑌂 𑌮𑌨𑍁𑌯𑌾𑌜𑍍𑌞𑌵𑌲𑍍𑌕𑍍𑌯𑌾𑌦𑌿𑌭𑌿𑌃—

'𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌹𑌤𑍍𑌯𑌾 𑌸𑍁𑌰𑌾𑌪𑌾𑌨𑌂 𑌸𑍍𑌤𑍇𑌯𑌂 𑌗𑍁𑌰𑍍𑌵𑌙𑍍𑌗𑌨𑌾𑌗𑌮𑌃 । 𑌮𑌹𑌾𑌨𑍍𑌤𑌿 𑌪𑌾𑌤𑌕𑌾𑌨𑍍𑌯𑌾𑌹𑍁𑌃 𑌸𑌂𑌸𑌰𑍍𑌗𑌶𑍍𑌚𑌾𑌪𑌿 𑌤𑍈𑌃 𑌸𑌹 ॥ 𑌸𑌂𑌵𑌤𑍍𑌸𑌰𑍇𑌣 𑌪𑌤𑌤𑌿 𑌪𑌤𑌿𑌤𑍇𑌨 𑌸𑌹𑌾𑌚𑌰𑌨𑍍 । 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌹𑌾 𑌮𑌦𑍍𑌯𑌪𑌃 𑌸𑍍𑌤𑍇𑌨𑌸𑍍𑌤𑌥𑍈𑌵 𑌗𑍁𑌰𑍁𑌤𑌲𑍍𑌪𑌗𑌃 ॥ 𑌏𑌤𑍇 𑌮𑌹𑌾𑌪𑌾𑌤𑌕𑌿𑌨𑍋 𑌯𑌶𑍍𑌚 𑌤𑍈𑌃 𑌸𑌹 𑌸𑌂𑌵𑌸𑍇𑌤𑍍' 𑌇𑌤𑌿 ॥

𑌤𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌚 𑌸𑌂𑌸𑌰𑍍𑌗𑌿𑌣 𑌉𑌕𑍍𑌤𑌮𑍍, '𑌯𑍋 𑌯𑍇𑌨 𑌪𑌤𑌿𑌤𑍇𑌨𑍈𑌷𑌾𑌂 𑌸𑌂𑌸𑌰𑍍𑌗𑌂 𑌯𑌾𑌤𑌿 𑌮𑌾𑌨𑌵𑌃 । 𑌸 𑌤𑌸𑍍𑌯𑍈𑌵 𑌵𑍍𑌰𑌤𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍𑌸𑌂𑌸𑌰𑍍𑌗𑌸𑍍𑌯 𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌯𑍇' 𑌇𑌤𑌿 ॥

---

கள் சொல்லப்பட்டன. ப்ரஸங்க வசத்தால் மற்ற வதத்திற்கும், குடிக்கக்கூடாதவைகளைக் குடித்ததிற்கும், மற்ற திருட்டுக்கும், சேரக்கூடாத ஸ்த்ரீகளைச் சேர்ந்ததற்கும் ப்ராயஶ்சித்தங்கள் சொல்லப்பட்டன.

### சேர்க்கைக்கு மஹாபாதகத் தன்மையைப்பற்றிய விசாரம்.

இனி, மஹாபாதகிகளுடன் சேருவதற்கு ப்ராயஶ்சித்தம் சொல்லப்படுகிறது. மஹாபாதகிகளுடன் சேர்ந்தவனுக்கு மஹாபாதகியின் தன்மை சொல்லப்பட்டுள்ளது,

**மனு யாஜ்ஞவல்க்யர்** முதலியவர்களால்:- "ப்ரம்ஹஹத்யை, ஸுராபானம், ஸ்வர்ணஸ்தேயம், குருதல்பகமனம் இவைகளை மஹாபாதகங்கள் என்கின்றனர். அவர்களுடன் சேர்வதும் மஹாபாதகம் என்கின்றனர். பதிதனோடுகூட ஒரு வர்ஷம் சேர்பவன் பதிதனாகிறான். ப்ரம்ஹஹத்தி செய்தவன், மத்யபானம் செய்தவன், ஸ்வர்ணஸ்தேயம் செய்தவன், குருதல்பகாமீ இவர்கள் மஹாபாதகிகளாவர். அவர்களுடன் எவன் கூடியிருப்பவனோ அவனும் மஹாபாதகி," என்று.

ஸம்ஸர்க்கம் செய்தவனுக்கும் அந்தந்தப் பாதகிக்குச் சொல்லப்பட்ட ப்ராயஶ்சித்தம் விதிக்கப்பட்டுள்ளது. "இந்த மஹாபாதகி

𑌏𑌤𑌦𑍍𑌯𑍁𑌗𑌾𑌨𑍍𑌤𑌰𑌵𑌿𑌷𑌯𑌮𑍍 । 𑌅𑌤 𑌏𑌵 𑌕𑌲𑌿𑌯𑍁𑌗𑌧𑌰𑍍𑌮𑌾𑌭𑌿𑌧𑌾𑌨𑍇 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌃 𑌪𑌰𑌾𑌶𑌰𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌹𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌮𑌹𑌾𑌪𑌾𑌤𑌕𑌚𑌤𑍁𑌷𑍍𑌟𑌯𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌨𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌵𑌾𑌨𑍍 । 𑌕𑌲𑌿𑌯𑍁𑌗𑍇 𑌸𑌂𑌸𑌰𑍍𑌗𑌦𑍋𑌷𑌾𑌭𑌾𑌵𑌂 𑌵𑌿𑌵𑌕𑍍𑌷𑌿𑌤𑍍𑌵𑌾 𑌸𑌂𑌸𑌰𑍍𑌗𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌨𑌾𑌭𑍍𑌯𑌧𑌾𑌤𑍍 ॥

### 𑌕𑌰𑍍𑌮𑌣𑍈𑌵 𑌪𑌤𑌿𑌤𑍍𑌵𑌹𑍇𑌤𑍁𑌤𑍍𑌵𑌨𑌿𑌰𑍂𑌪𑌣𑌮𑍍 ॥

𑌤𑌥𑌾 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌪𑌤𑌿𑌤𑍍𑌵𑌂 𑌕𑌣𑍍𑌠𑌰𑌵𑍇𑌣𑌾𑌹 𑌪𑌰𑌾𑌶𑌰𑌃—

'𑌕𑍃𑌤𑍇 𑌸𑌂𑌭𑌾𑌷𑌣𑌾𑌦𑍇𑌵 𑌤𑍍𑌰𑍇𑌤𑌾𑌯𑌾𑌂 𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌨𑍇𑌨 𑌚 । 𑌦𑍍𑌵𑌾𑌪𑌰𑍇 𑌤𑍍𑌵𑌨𑍍𑌨𑌮𑌾𑌦𑌾𑌯 𑌕𑌲𑍌 𑌪𑌤𑌤𑌿 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 । 𑌤𑍍𑌯𑌜𑍇𑌦𑍍𑌦𑍇𑌶𑌂 𑌕𑍃𑌤𑌯𑍁𑌗𑍇 𑌤𑍍𑌰𑍇𑌤𑌾𑌯𑌾𑌂 𑌗𑍍𑌰𑌾𑌮𑌮𑍁𑌤𑍍𑌸𑍃𑌜𑍇𑌤𑍍 ॥ 𑌦𑍍𑌵𑌾𑌪𑌰𑍇 𑌕𑍁𑌲𑌮𑍇𑌕𑌂 𑌤𑍁 𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌂 𑌤𑍁 𑌕𑌲𑍌 𑌯𑍁𑌗𑍇' 𑌇𑌤𑌿 ॥

---

களுள் எந்தப் பாதகியுடன் எந்த மனிதன் ஸம்ஸர்க்கத்தையடைகின்ருனே, அவன் அந்த மஹாபாதகிக்குச் சொல்லப்பட்ட ப்ராயஶ்சித்தத்தை யனுஷ்டிக்கவேண்டும், ஸம்ஸர்க்க பாபத்தைப் போக்குவதற்கு," என்று.

இது மற்ற யுகங்களைப் பற்றியது. ஆகையாலேயே கலியுக தர்மங்களைச் சொல்லுவதில் ப்ரவ்ருத்தித்துள்ள பராசரர், ப்ரம்ஹஹத்யை முதலிய நான்கு மஹாபாதகங்களுக்கும் ப்ராயஶ்சித்தங்களைச் சொன்னார். கலியுகத்தில் ஸம்ஸர்க்கத்திற்குத் தோஷமில்லை என்று அபிப்ராயப்பட்டு ஸம்ஸர்க்கத்திற்கு ப்ராயஶ்சித்தத்தைச் சொல்லவில்லை.

## பாப கர்மத்திற்கே பதிதத் தன்மைக்குக் காரணத் தன்மையை நிரூபித்தல்.

அவ்விதம் செய்கையால் பதிதத் தன்மையை ஸ்பஷ்டமாகச் சொல்லுகிருர்,

**பராசரர்:-** க்ருதயுகத்தில் பதிதனுடன் ஸம்பாஷிப்பதாலேயே பதிதனுவான். த்ரேதாயுகத்தில் தொடுவதினுலும் பதிதனுவான். த்வாபரயுகத்திலோவெனில் அவனுடைய அன்னத்தைப் புஜித்தால் பதிதனுவான். கலியுகத்தில் பாபகர்மத்தைச் செய்தால் பதிதனுவான். க்ருதயுகத்தில் பாபியிருக்கும் தேசத்தைப் பரிஹரிக்க வேண்டும், த்ரேதாயுகத்தில் அவனிருக்கும் க்ராமத்தைப் பரிஹரிக்க வேண்டும். த்வாபர யுகத்தில் பாபியின் குலம் ஒன்றைமட்டில்

𑌸𑍁𑌮𑌨𑍍𑌤𑍁𑌃—

'𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌹𑌤𑍍𑌯𑌾 𑌸𑍁𑌰𑌾𑌪𑌾𑌨𑌂 𑌸𑍍𑌤𑍇𑌯𑌂 𑌗𑍁𑌰𑍍𑌵𑌙𑍍𑌗𑌨𑌾𑌗𑌮𑌃 । 𑌮𑌹𑌾𑌪𑌾𑌤𑌕𑌸𑌂𑌜𑍍𑌞𑌾𑌨𑌿 𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑍍𑌯𑍇𑌵 𑌕𑌲𑍌 𑌯𑍁𑌗𑍇' 𑌇𑌤𑌿 ॥ 𑌅𑌤𑍍𑌰 𑌚𑌤𑍁𑌰𑍍𑌗𑍍𑌰𑌹𑌣𑌾𑌦𑍇𑌵𑌕𑌾𑌰𑌾𑌚𑍍𑌚 𑌸𑌂𑌸𑌰𑍍𑌗𑌿𑌣𑍋 𑌨 𑌮𑌹𑌾𑌪𑌾𑌤𑌕𑌿𑌤𑍍𑌵𑌮𑍍 ॥

𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌕𑌾𑌮𑌧𑍇𑌨𑍌—

'𑌸𑌂𑌸𑌰𑍍𑌗𑌦𑍋𑌷𑍋 𑌨𑍈𑌵 𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌮𑌹𑌾𑌪𑌾𑌤𑌕𑌿𑌭𑌿𑌃 𑌕𑌲𑍌 । 𑌸𑌂𑌸𑌰𑍍𑌗𑌦𑍋𑌷𑌃 𑌸𑍍𑌤𑍇𑌨𑌾𑌦𑍍𑌯𑍈𑌰𑍍𑌮𑌹𑌾𑌪𑌾𑌪𑌨𑌿𑌷𑍍𑌕𑍃𑌤𑌿𑌃' 𑌇𑌤𑌿 ॥

𑌤𑌥𑌾 𑌸𑍍𑌮𑍃𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑍇—

𑌕𑌲𑍌 𑌵𑌰𑍍𑌜𑌨𑍀𑌯𑌾𑌨𑌾𑌮𑌨𑍁𑌕𑍍𑌰𑌮𑌣𑍇 '𑌸𑌂𑌸𑌰𑍍𑌗𑌦𑍋𑌷𑌃 𑌪𑌾𑌪𑍇𑌷𑍁' 𑌇𑌤𑌿 𑌪𑌠𑌿𑌤𑌮𑍍 ॥

𑌕𑌲𑍌 𑌸𑌂𑌸𑌰𑍍𑌗𑌸𑍍𑌯 𑌪𑌾𑌪𑌮𑌾𑌤𑍍𑌰𑌹𑍇𑌤𑍁𑌤𑌾 ॥

𑌸𑌂𑌸𑌰𑍍𑌗𑌦𑍋𑌷𑌸𑍍𑌯 𑌪𑌤𑌿𑌤𑍍𑌵𑌾𑌹𑍇𑌤𑍁𑌤𑍍𑌵𑍇𑌽𑌪𑌿 𑌪𑌾𑌪𑌮𑌾𑌤𑍍𑌰𑌹𑍇𑌤𑍁𑌤𑍍𑌵𑌮𑌾𑌹 𑌪𑌰𑌾𑌶𑌰𑌃—

---

பரிஹரிக்கவேண்டும். கலியுகத்தில் பாபம் செய்தவனை மட்டில் பரிஹரிக்கவேண்டும்.

**ஸுமந்து:—** "ப்ரம்ஹஹத்யை, ஸுராபானம் ஸ்வர்ணஸ்தேயம், குருதல்பகமனம் என்ற இந்த நான்கே கலியுகத்தில் மஹா பாதகங்களெனப்படுகின்றன," என்று. இந்த வசனத்தில் நான்கு என்றதாலும், 'ஏவ' என்றதாலும், மஹாபாதகி ஸம்ஸர்க்கம் செய்தவனுக்கு மஹாபாதகித்வம் இல்லை.

**ஸம்ருதிகாமதேனுவில்:—** கலியுகத்தில் மஹாபாதகிகளுடன் ஸம்ஸர்க்கம் செய்வது தோஷமாகாது. "ஸ்வர்ணஸ்தேயம் செய்தவன் முதலியவருடன் ஸம்ஸர்க்க தோஷமும், மஹா பாபத்திற்கு ப்ராயஶ்சித்தமும் இல்லை," என்று.

அவ்விதமே **ஓர் ஸம்ருதியில்:-** கலியுகத்தில் வர்ஜிக்கவேண்டியவைகளைப் படிக்குமிடத்தில் "மஹா பாதகிகளிடம் சேருவதில் தோஷமும்" என்று படிக்கப்பட்டுள்ளது.

### கலியுகத்தில் மஹாபாதகி ஸம்ஸர்க்கத்திற்குப் பாபத்திற்கு மட்டில் காரணத்தன்மை.

ஸம்ஸர்க்கதோஷத்திற்குப் பதிதத் தன்மைக்குக் காரணம் என்பது இல்லாவிடினும், பாபத்திற்கு மட்டில் காரணத்தன்மை இருக்கின்றது என்கிறார்,

ஆஸநாச்சயநாத்யாநாத் ஸம்பாஷாத் ஸஹபோஜநாத் ।
ஸங்க்ராமந்தி ஹி பாபாநி தைலபிந்துரிவாம்பஸி' இதி ॥

தத்ர ப்ராயஶ்சித்தமாஹ ஸ ஏவ—

ஸம்ஸர்க்கமாசரேத்விப்ர: பதிதாதிஷ்வகாமத: । பஞ்சாஹம் வா தசாஹம் வா த்வாதசாஹமதாபி வா ॥ மாஸார்த்தம் மாஸமேகம் வா மாஸத்வயமதாபி வா । அப்தார்த்தமப்தமேகம் வா தத ஊர்த்வம் சைவ தத்ஸம: ॥ த்ரிராத்ரம் ப்ரதமே பக்ஷே த்விதீயே க்ருச்ச்ரமாசரேத் । த்ருதீயே சைவ பக்ஷே து க்ருச்ச்ரம் ஸாந்தபநம் சரேத் ॥ சதுர்த்தே தசராத்ரம் ஸ்யாத் பராக: பஞ்சமே மத: । குர்யாச்சாந்த்ராயணம் ஷஷ்டே ஸப்தமே த்வைந்தவத்வயம் ॥ ஶுத்த்யர்த்தமஷ்டமே சைவ ஷண்மாஸாந் க்ருச்ச்ரமாசரேத் । பக்ஷஸங்க்யாப்ரமாணேந ஸுவர்ணாந்யபி தக்ஷிணா' இதி ॥

---

**பராசரர்:**—சேர்ந்து உட்காருவதாலும், படுப்பதாலும், போவதாலும், பேசுவதாலும், சேர்ந்து சாப்பிடுவதாலும் பாபியின் பாபங்கள் சேருபவனிடத்தில் சேருகின்றன. ஜலத்தில் எண்ணெயின் துளிபோல். அவ்விஷயத்தில் ப்ராயஶ்சித்தத்தைச் சொல்லுகிறார்,

**பராசரரே:**— "ப்ராம்ஹணன் பதிதன் முதலியவர்களிடத்தில் ஐந்து நாளாவது, பத்து நாளாவது, பன்னிரண்டு நாளாவது, பாதி மாஸமாவது, ஒரு மாஸமாவது, இரண்டு மாஸமாவது, ஆறு மாஸமாவது, ஒரு வர்ஷமாவது, அதற்கு மேலாவது அறியாமையால் ஸம்ஸர்க்கம் செய்வானாகில் அவனுக்கு ஸமனாவான். ஐந்து நாளானால், மூன்று நாள் உபவாஸம். பத்து நாளானால், ஒரு ப்ராஜாபத்ய க்ருச்ரம். பன்னிரண்டு நாளானால், ஏழு நாள் ஸாந்தபன க்ருச்ரம். பதினைந்து நாளானால், பத்துநாள் உபவாஸம். ஒரு மாஸமானால், பராக க்ருச்ரம். இரண்டு மாஸமானால், சாந்த்ராயண க்ருச்ரம். ஆறு மாஸமானால், இரண்டு சாந்த்ராயண க்ருச்ரம். ஒரு வர்ஷத்துக்குக் கொஞ்சம் குறைவானால், ஆறு மாஸம் க்ருச்ரங்கள் (இது பதினைந்து ப்ராஜாபத்ய க்ருச்ரங்களாகும்) என்று ப்ராயஶ்சித்தம். இத்துடன் ஒன்று முதல் சொல்லப்பட்டப் எட்டுப் பக்ஷங்களிலும் முறையே ஒன்று இரண்டு முதலிய ஸ்வர்ணங்களையும் தக்ஷிணையாய்க் கொடுக்கவேண்டும்." (ஸ்வர்ணத்தின் நிறை முன்பே சொல்லப்பட்டுள்ளது.)

𑌸𑌮𑌾𑌚𑌰𑌣𑌂 = 𑌸𑌹𑌶𑌯𑌨𑌾𑌦𑌿, '𑌏𑌕𑌶𑌯𑍍𑌯𑌾𑌸𑌨𑌂 𑌪𑌙𑍍𑌕𑍍𑌤𑌿𑌰𑍍𑌭𑌾𑌣𑍍𑌡𑌪𑌕𑍍𑌵𑌾𑌨𑍍𑌨𑌮𑌿𑌶𑍍𑌰𑌣𑌮𑍍। 𑌯𑌾𑌜𑌨𑌾𑌧𑍍𑌯𑌾𑌪𑌨𑍇 𑌯𑍋𑌨𑌿𑌸𑍍𑌤𑌥𑌾 𑌚 𑌸𑌹𑌭𑍋𑌜𑌨𑌮𑍍॥ 𑌨𑌵𑌧𑌾 𑌸𑌙𑍍𑌕𑌰𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑍋 𑌨 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑍋𑌽𑌧𑌮𑍈𑌸𑍍𑌸𑌹' 𑌇𑌤𑌿 𑌬𑍃𑌹𑌸𑍍𑌪𑌤𑌿𑌸𑍍𑌮𑌰𑌣𑌾𑌤𑍍॥ 𑌪𑌤𑌿𑌤𑌾𑌦𑌿𑌷𑍍𑌵𑌿𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌶𑌬𑍍𑌦𑍇𑌨 𑌤𑌤𑍍𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌦𑌯𑍋 𑌗𑍃𑌹𑍍𑌯𑌨𑍍𑌤𑍇, '𑌪𑌤𑌿𑌤𑍋𑌤𑍍𑌪𑌨𑍍𑌨𑌃 𑌪𑌤𑌿𑌤𑍋 𑌭𑌵𑌤𑌿' 𑌇𑌤𑌿 𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑍇𑌨 𑌤𑌨𑍍𑌨𑌿𑌨𑍍𑌦𑌨𑌾𑌤𑍍॥

𑌪𑍍𑌰𑌥𑌮𑌃 𑌪𑌕𑍍𑌷𑌃 𑌪𑌞𑍍𑌚𑌾𑌹𑌸𑌂𑌸𑌰𑍍𑌗𑌃। 𑌤𑌤𑍍𑌰 𑌤𑍍𑌰𑌿𑌰𑌾𑌤𑍍𑌰𑍋𑌪𑌵𑌾𑌸𑌂 𑌚𑌰𑍇𑌤𑍍। 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌪𑌕𑍍𑌷𑍇 𑌤𑍁 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌮𑍍। 𑌤𑍃𑌤𑍀𑌯𑌪𑌕𑍍𑌷𑍇 𑌤𑍁 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌂 𑌸𑌾𑌨𑍍𑌤𑌪𑌨𑌮𑍍। 𑌅𑌤𑍍𑌰 𑌸𑌾𑌨𑍍𑌤𑌪𑌨𑌂 𑌸𑌪𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌰𑌂 𑌗𑍃𑌹𑍍𑌯𑌤𑍇। 𑌅𑌰𑍍𑌧𑌮𑌾𑌸𑌸𑌂𑌸𑌰𑍍𑌗𑌰𑍂𑌪𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑌃 𑌪𑌕𑍍𑌷𑌃 𑌤𑌤𑍍𑌰 𑌦𑌶𑌰𑌾𑌤𑍍𑌰𑍋𑌪𑌵𑌾𑌸𑌂 𑌚𑌰𑍇𑌤𑍍। 𑌐𑌨𑍍𑌦𑌵𑌦𑍍𑌵𑌯𑌮𑍍 = 𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌦𑍍𑌵𑌯𑌮𑍍। 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌨𑍍𑌨𑍍𑌯𑍂𑌨𑌸𑌂𑌵𑌤𑍍𑌸𑌰𑌸𑌂𑌸𑌰𑍍𑌗𑌰𑍂𑌪𑌷𑍍𑌷𑌷𑍍𑌠𑌃 𑌪𑌕𑍍𑌷𑌃।

---

ஸமாசரணம் என்பது சேர்ந்து படுப்பது முதலியது. "ஒரே படுக்கையில் படுப்பது, ஒரே ஆஸனத்தில் உட்காருவது, ஒரு பங்க்தியில் உட்காருவது, ஒரு பாத்ரத்தில் பக்குவம் செய்வது, ஒரு பங்க்தியில் சேர்ந்து அன்னத்தைப் புஜிப்பது, யாகம் செய்விப்பது, வேதத்தைக் கற்பிப்பது, விவாஹாதிகள் செய்வது, சேர்ந்து புஜிப்பது என்று ஒன்பது விதமாய் ஸங்கரம் என்பது சொல்லப்பட்டுள்ளது. இந்த ஸங்கரத்தைப் பாபிகளுடன் செய்யக் கூடாது" என்று ப்ருஹஸ்பதி சொல்லியிருப்பதால். 'பதிதாதிஷு' என்பதிலுள்ள 'ஆதி' என்ற சப்தத்தால் பதிதனின் புத்ரன் முதலியவர்கள் சொல்லப்படுகின்றனர். "பதிதனிடத்தினின்று உண்டானவன் பதிதனாகிறான்" என்று அவனை வஸிஷ்டர் நிந்தித்திருப்பதால்.

முதல்பக்ஷம் ஐந்துநாள் ஸம்ஸர்க்கம் செய்வது. அது விஷயத்தில் மூன்றுநாள் உபவாஸத்தை அனுஷ்டிக்கவேண்டும். இரண்டாவது பக்ஷத்திலோவெனில், ப்ராஜாபத்ய க்ருச்ரம். மூன்றாவது பக்ஷத்திலோவானால், ஸாந்தபன க்ருச்ரம். இவ் விஷயத்தில் ஸாந்தபனம் என்பது ஏழு நாள் என்று சொல்லப்படுகிறது. அரைமாஸம் ஸம்ஸர்க்கம் செய்வது நான்காவது பக்ஷம். அதில் பத்து நாள் உபவாஸத்தை அனுஷ்டிக்கவேண்டும். ஐந்தவ த்வயம் என்பது இரண்டு சாந்த்ராயணம். கொஞ்சம் குறைந்த வர்ஷம்

अत्र षण्मासात् कृच्छ्रमाचरेत् । षट्सु मासेषु प्राजापत्यकृच्छ्राणि पञ्चदश सम्पद्यन्ते ॥

वर्षादूर्ध्वसंसर्गे तु 'समं पातकिनः स्या'दिति वचनात् तस्य प्रायश्चित्तार्धं द्रष्टव्यम् ॥ सर्वेष्वपि पक्षेषु यथोक्तं प्रायश्चित्तमनुष्ठाय तदङ्गत्वेन दक्षिणा दातव्या । तत्र पञ्चरात्रसंसर्गे प्रथमे पक्षे सुवर्णमेकम्, दशरात्रसंसर्गे सुवर्णद्वयम् । एवमेवेतरेष्वपि पक्षेषूहनीयम् ॥

कूर्मपुराणेऽपि—

'पक्षसंसर्गे तु उपवासान् दशाचरेत् । पराकं माससंसर्गे चान्द्रं मासत्रये व्रतम् ॥ षाण्माससंसर्गे चान्द्रायणद्वयम् । किञ्चिदूनाब्दसंसर्गे षाण्मासं कृच्छ्रमाचरे'दिति ॥

---

வரை ஸம்ஸர்க்கம் செய்வது எட்டாவது பக்ஷம். இவ் விஷயத்தில் ஆறு மாஸம் வரை க்ருச்ரத்தை யனுஷ்டிக்கவேண்டும். ஆறு மாதங்களில் ப்ராஜாபத்ய க்ருச்ரங்கள் பதினைந்து ஆகின்றன.

ஸம்ஸர்க்கம் ஒரு வர்ஷத்துக்குமேல் ஆனால், "ஸம பாதகத்தில் பாதகியின் பாதி ப்ராயஶ்சித்தம்" என்று வசனமிருப்பதால், அவனுக்கு அந்தப் பாதகியின் ப்ராயஶ்சித்தத்தின் பாதி ப்ராயஶ்சித்தம் என்றறியவேண்டும். எல்லாப் பக்ஷங்களிலும் அதற்கு விதிக்கப்பட்ட ப்ராயஶ்சித்தத்தை யனுஷ்டித்து, அதற்கு அங்கமாகத் தக்ஷிணையையும் கொடுக்கவேண்டும். அதில், ஐந்து நாள் ஸம்ஸர்க்கமானால், ஒரு ஸ்வர்ணம். பத்து நாள் ஸம்ஸர்க்கமானால், இரண்டு ஸ்வர்ணம். இவ்விதம் மற்ற பக்ஷங்களிலு மறியவேண்டும்.

**கூர்மபுராணத்திலும்:—** பதிதனுடன் பதினைந்து நாள் சேர்ந்தால், பத்து நாள் உபவாஸம். ஒரு மாஸமானால், பராக க்ருச்ரம். மூன்று மாஸமானால், சாந்த்ராயண க்ருச்ரம். ஆறு மாஸமானால், இரண்டு சாந்த்ராயணம். கொஞ்சம் குறைந்த ஒரு வர்ஷமானால், ஆறு மாஸம் க்ருச்ரம் அனுஷ்டிக்கப்படவேண்டும்.

𑌗𑍋𑌚𑌰𑍍𑌮𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

𑌮𑌹𑌾𑌪𑌾𑌤𑌕𑌾𑌨𑌾𑌂 𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑌾𑌹 𑌪𑌰𑌾𑌶𑌰𑌃-

'𑌗𑌵𑌾𑌂 𑌶𑌤𑌂 𑌸𑍈𑌕𑌵𑍃𑌷𑌂 𑌯𑌤𑍍𑌰 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍍𑌯𑌯𑌨𑍍𑌤𑍍𑌰𑌿𑌤𑌮𑍍 । 𑌤𑌤𑍍𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌂 𑌦𑌶𑌗𑍁𑌣𑌿𑌤𑌂 𑌗𑍋𑌚𑌰𑍍𑌮𑌪𑌰𑌿𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌮𑍍 ॥ 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌹𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌭𑌿𑌰𑍍𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑍋 𑌮𑌨𑍋𑌵𑌾𑌕𑍍𑌕𑌾𑌯𑌕𑌰𑍍𑌮𑌜𑍈𑌃 । 𑌏𑌤𑌦𑍍𑌗𑍋𑌚𑌰𑍍𑌮𑌦𑌾𑌨𑍇𑌨 𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌕𑌿𑌲𑍍𑌬𑌿𑌷𑍈𑌃' 𑌇𑌤𑌿 ॥

𑌏𑌕𑌵𑍃𑌷𑍇𑌣 𑌸𑌹𑌿𑌤𑌂 𑌗𑍋𑌶𑌤𑌂 𑌨𑌿𑌯𑌨𑍍𑌤𑍍𑌰𑌣𑌾𑌰𑌹𑌿𑌤𑌂 𑌵𑌿𑌚𑌰𑌣𑌾𑌯 𑌯𑌾𑌵𑌨𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌦𑍇𑌶𑌮𑌾𑌕𑍍𑌰𑌮𑍍𑌯 𑌵𑍍𑌯𑌵𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍇, 𑌤𑌾𑌵𑌾𑌨𑍍 𑌭𑍂𑌪𑍍𑌰𑌦𑍇𑌶𑍋 𑌦𑌶𑌗𑍁𑌣𑌿𑌤𑌶𑍍𑌚𑍇𑌤𑍍 𑌗𑍋𑌚𑌰𑍍𑌮𑌶𑌬𑍍𑌦𑍇𑌨𑌾𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ॥

𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌭𑌿𑌶𑌂𑌸𑌨𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍍 ॥

𑌅𑌭𑌿𑌶𑌂𑌸𑌨𑍇 𑌦𑍋𑌷𑌂 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌚 𑌦𑌰𑍍𑌶𑌯𑌤𑌿 𑌯𑌾𑌜𑍍𑌞𑌵𑌲𑍍𑌕𑍍𑌯𑌃-

'𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌭𑌿𑌶𑌂𑌸𑌿𑌨𑍋 𑌦𑍋𑌷𑍋 𑌦𑍍𑌵𑌿𑌃 𑌸𑌮𑍋 𑌭𑍂𑌤𑌵𑌾𑌦𑌿𑌨𑌃 ।

---

## கோசர்ம க்ஷேத்ர லக்ஷணம்.

மஹாபாதகங்களுக்கு ஸாமான்யமான ப்ராயஶ்சித்தத்தைச் சொல்லுகிறார், **பராசரர்**:— "ஒரு காளையுடன் கூடிய நூறு பசுக்கள் எந்த இடத்தில் கட்டப்படாமல் நிற்கக்கூடுமோ, அந்த இடம் பத்து மடங்காக்கப்பட்டால் எவ்வளவோ அவ்வளவு ஸ்தலம் கோசர்மம் என்று சொல்லப்பட்டுள்ளது. இந்த கோசர்ம மாத்ரமுள்ள பூமியைத் தானம் செய்பவன் ப்ரம்ஹஹத்யாதி பாபங்களுடன் கூடியவனாயினும், மனஸ் வாக் தேஹம் இவைகளின் கார்யங்களாலுண்டாகிய எல்லாப் பாபங்களாலும் விடுபடுவான்" என்று.

ஒரு காளையுடன் கூடிய நூறு பசுக்கள் கட்டப்படாமல் இளைப்பாறுவதற்கு எவ்வளவு இடத்தை ஆக்ரமித்து இருக்குமோ, அவ்வளவு உள்ள பூமியின் ப்ரதேசம் பத்து மடங்கானால் கோசர்மம் என்ற சப்தத்தால் சொல்லப்படுகிறது.

## பொய்யான அபவாதத்தில் ப்ராயஶ்சித்தம்.

அபவாதத்தில் பாபத்தையும் ப்ராயஶ்சித்தத்தையும் சொல்லுகிறார்,

**யாஜ்ஞவல்க்யர்**:— பொய்யாகப் பிறரிடம் அபவாதம் சொல்பவ

மித்யாபிஶஸ்ததோஷம் ச ஸமாதத்தே ம்ருஷா வதந் ॥ மஹாபாபோபபாபாப்யாம் யோऽபிஶம்ஸேந்ம்ருஷா பரம் । அப்பக்ஷோ மாஸமாஸீத ஸ ஜாபீ நியதேந்த்ரிய: ॥ அபிஶஸ்தோ ம்ருஷா க்ருச்ச்ரம் சரேதாக்நேயமேவ வா । நிர்வபேத்து புரோடாஶம் வாயவ்யம் பஶுமேவ வா' இதி ॥

அத்ரி:—

'பதிதம் பதிதேத்யுக்த்வா சோரம் சோரேதி வா புந: । வசநாத்துல்யதோஷ: ஸ்யாந்மித்யா த்விர்தோஷதாம் வ்ரஜேத்' இதி ॥

கௌதம:—

'ப்ராஹ்மணஸ்யாபிஶம்ஸநே தோஷஸ்தாவாந் த்விரநேநஸி துர்பலஹிம்ஸாயாம் சாவிமோசநே ஶக்தஶ்சேத்' இதி ॥

போதாயந:—

'மித்யாபிஶம்ஸநே க்ருச்ச்ர: தத்வதேவாபிஶம்ஸித:' இதி ॥

---

னுக்குப் பாபம் இரண்டு மடங்காகும். உண்மையானல், ஸமமான பாபமுண்டாகும். பொய்யாக அபவாதம் சொல்பவன் பொய்யாகக் குற்றம் சொல்லப்பட்டவனுடைய பாபத்தையும் ஏற்றுக்கொள்ளுகிறான். எவன் பிறனை மஹாபாபம் அல்லது உபபாபம் இவைகளால் பொய்யாகத் தூஷிக்கின்றானோ, அவன் ஒரு மாஸம் முழுவதும் ஜலத்தைமட்டில் உட்கொள்பவனாய், இந்த்ரியங்களை யடக்கியவனாய், சுத்தவதீமந்த்ர ஜபசீலனாய், இருக்கவேண்டும். பொய்யாகத் தோஷம் சொல்லப்பட்டவன் ப்ராஜாபத்ய க்ருச்ரத்தை யனுஷ்டிக்கவேண்டும். அல்லது ஆக்னேயமான புரோடாசத்தாலாவது, வாயவ்ய புரோடாசத்தாலாவது யஜிக்கவேண்டும். அல்லது வாயவ்ய பசுவினாலாவது யஜிக்கவேண்டும்.

**மனு:—** பதிதனைக் குறித்து "பதிதா" என்று சொன்னலாவது, திருடனை, "திருடா" என்று சொன்னலாவது, அவனுக்கு ஸமமான பாபத்தை அடைபவனாவான். பொய்யானல் இரண்டு மடங்கு பாபமுடையவனாவான்.

**கௌதமர்:—** ப்ராம்ஹணனைப் பாபி என்று நிந்தித்தால் அவனுக்கு ஸமபாதகனாவான். அவன் பாபியல்லாதவனாகில் இரண்டு மடங்கு பாபத்தையடைவான். துர்ப்பலனைப் பிறன் ஹிம்ஸிக்கும் பொழுது சக்தியுள்ளவன் அவனை விடுவிக்காவிடில் பாபியாவான்.

**போதாயனர்:—** பொய்யாய் அபவாதம் சொன்னல் ப்ராஜாபத்ய

मरीचिः—

'स्तेयं वा व्यभिचारो वा ब्रह्महत्या वाऽपवादस्तु सर्वथा । इति यो वदते साधून् स मिथ्यापवादवान् द्विजः ॥ देवकार्येषु पित्र्येषु ह्यनर्हो मिथ्यया वदन् । सत्ये तु पापी स्यान्मिथ्या द्विगुणं भवेत् ॥ तस्य पापविशुद्ध्यर्थं प्रायश्चित्तं महत्तरम् । विप्रेषु तप्तकृच्छ्रं स्यादङ्गनासु च कायिकम् ॥ बालवृद्धातुरेष्वेवं वदन् पराकमेव च । क्षत्रियादिषु सर्वेषु प्राजापत्यमुदीरितम्' इति ॥

गालवः—

'मिथ्यापवादे नावद्धो ह्यभिशस्त इतीरितः । पापे सति न वा लोके वादस्सर्वैस्तु मन्यते ॥ सर्वदा

---

க்ருச்ரம் ப்ராயஶ்சித்தம். உண்மையானல் பாதி ப்ராஜாபத்ய க்ருச்ரம்.

**மரீசி:—** ஸ்வர்ணஸ்தேயம், வ்யபிசாரம், ப்ராம்ஹஹத்தி, இவை இருக்கின்றன என்று எவன் ஸாதுக்களைத் தூஷிக்கின்றானே அவன் பொய் சொல்பவனுவான். அவன் தேவ பித்ரு கார்யங்களில் அர்ஹனல்லாதவனுவான். அபவாதம் உண்மையானல் அவன் பாபிக்கு ஸமனுவான். அபவாதம் பொய்யாக இருந்தால் இரண்டு மடங்கு பாபமுடையவனுவான். அந்தப் பாபத்தைப் போக்குவதற்குப் பெரிய ப்ராயச்சித்தம் அனுஷ்டிக்கப்படவேண்டும். ப்ராம்ஹணர்கள் விஷயத்தில் அபவாதம் சொன்னல் தப்த க்ருச்ரம் ப்ராயஶ்சித்தம். ஸ்த்ரீகள் விஷயத்திலானல் ப்ராஜாபத்ய க்ருச்ரம். பாலர், வ்ருத்தர், வ்யாதியுள்ளவர் இவர்கள் விஷயத்திலானல், பராக க்ருச்ரம் ப்ராயஶ்சித்தம். க்ஷத்ரியர் முதலிய மற்ற எல்லோரிடத்திலுமானல் ப்ராஜாபத்ய க்ருச்ரம் ப்ராயஶ்சித்தமாகச் சொல்லப்பட்டுள்ளது.

**காலவர்:—** பொய்யான பாபத்திலானல் கட்டப்பட்டவன் அபிசஸ்தன் எனப்படுகிறான். பாபம் இருக்கின்றதோ இல்லையோ உலகில் வார்த்தை எல்லோராலும் மதிக்கப்படுகிறது. ஜனங்களால் எப்பொழுதும் நிந்திக்கப்பட்டவன் ஹவ்யகவ்யங்களில் (தேவபித்ரு கார்யங்களில்) அர்ஹனல்லாதவனுகிறான். ஆகையால்

ஹவ்யகவ்யேஷு நிந்திதஸ்ஸர்வதா ஜநை: । தஸ்ய தேஹவிஶுத்த்யர்த்தம் ப்ராஜாபத்யம் சரேத் த்விஜ: ॥ ததஶ்ஶுத்தோ பவேத்ஸத்ய மித்யாரோபே விப்ரவாஜ்ஞவ: । தோஷஸ்து விஷயே யத்ர தத்ரோக்தாம் நிஷ்க்ருதிம் சரேத்' இதி ॥ தோஷஸ்ய ஸத்யே ஶாஸ்த்ரோக்தம் ப்ராயஶ்சித்தம் கார்யமித்யர்த: ॥

அஸக்ருதபிஶம்ஸநே து ஶங்க:—

'நாஸ்திகோ நாஸ்திகவ்ருத்தி: க்ருதக்ந: கூடவ்யவஹாரீ மித்யாபிஶம்ஸீத்யேதே பஞ்சவர்ஷாணி ப்ராஹ்மணக்ருஹே பைக்ஷம் சரேயு:' இதி ॥

யத்து நாஸ்திகவிஷயே வஸிஷ்டவசநம்—

'நாஸ்திக: க்ருச்ச்ரம் த்வாதஶராத்ரம் சரித்வா விரமேந்நாஸ்திக்யாத் நாஸ்திகவ்ருத்திரதிக்ருச்ச்ரம்' இதி, தத் ஸக்ருத்கரணவிஷயமிதி மாதவீயே ॥

---

அவன் தேஹ சுத்திக்காக ப்ராஜாபத்ய க்ருச்ரத்தை யனுஷ்டிக்க வேண்டும். அபவாதம் பொய்யானால் இந்த ப்ராயச்சித்தத்திற்குப் பிறகு சுத்தனுவான். தோஷம் உண்மையானால் சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டபடி ப்ராயச்சித்தத்தை யனுஷ்டிக்கவேண்டும்.

அடிக்கடி தோஷம் சொன்னால்,

**சங்கர்:**— நாஸ்திகன், நாஸ்திக வ்ருத்தியுடையவன், நன்றியை மறந்தவன், பொய்யாய் வ்யாபாரம் செய்பவன், பொய்யாய் அபவாதம் சொல்பவன் என்ற இவர்கள் ஐந்து வர்ஷம் வரையில் ப்ராம்ஹணரின் க்ருஹத்தில் பிக்ஷை வாங்கவேண்டும்.

ஆனால் நாஸ்திகன் விஷயத்தில்,

**வஸிஷ்டர்:**— "நாஸ்திகன் பன்னிரண்டு நாள் க்ருச்ரத்தை யனுஷ்டித்து, நாஸ்திகத் தன்மையை விடவேண்டும். நாஸ்திக வ்ருத்தியையுடையவனேயெனில் அதிக்ருச்ரத்தை யனுஷ்டித்து அதை விடவேண்டும்" என்று உள்ளதேயெனில், அது ஒரு தடவை செய்ததைப் பற்றியது, என்றுள்ளது மாதவீயத்தில்.

## ब्राह्मणावगोरणादौ प्रायश्चित्तम् ॥

ब्राह्मणावगोरणादौ प्रायश्चित्तमाह पराशरः—

'अवगूर्य त्वहोरात्रं त्रिरात्रं क्षितिपातने । अतिकृच्छ्रं च रुधिरे कृच्छ्रोऽभ्यन्तरशोणिते' इति ॥

अवगूर्य = वधायोद्यम्य दण्डमुष्ट्यादिनेति शेषः । भूमौ निपात्य त्रिरात्रमिति शेषः । प्रहारेण रुधिरे निर्गते अतिकृच्छ्रं चरेत् । अनिर्गतं रुधिरमन्तरेव स्थित्वा विष्व नीलीभूतं चेत् कृच्छ्रम् इत्यर्थः ॥

एतच्च कलियुगाभिप्रायम्, 'कलौ पाराशराः स्मृताः' इति स्मरणात् ॥

युगान्तरे तु मनुः—

'अवगूर्य त्वब्दशतं सहस्रमभिहत्य तु । जिघांसया ब्राह्मणस्य नरकं प्रतिपद्यते ॥ शोणितं यावतः पांसून् संगृह्णाति द्विजन्मनः । तावन्त्यब्दसहस्राणि

---

## ப்ராம்ஹணனைத் தடி முதலியதால் ஓங்கினால் ப்ராயஶ்சித்தம்.

ப்ராம்ஹணனைக் குறித்து, தடி முதலியதால் ஓங்குவது முதலியதில் ப்ராயஶ்சித்தம் சொல்லுகிறார்,

**பராசரர்:—** ப்ராம்ஹணனைக் குறித்து அடிப்பதற்காகக் கழி முதலியதை ஓங்கினால், ஒரு நாள் முழுவதும் உபவாஸம் ப்ராயஶ்சித்தம். அடித்து பூமியில் தள்ளினால், மூன்று நாள் உபவாஸம் ப்ராயஶ்சித்தம். அடித்ததால் ரக்தம் வெளிவந்தால் அதிக்ருச்ரம் ப்ராயஶ்சித்தம். ரக்தம் வெளி வராமல் உள்ளேயே கட்டப் பட்டிருந்தால் ப்ராஜாபத்ய க்ருச்ரம் ப்ராயஶ்சித்தம்.

இவ்விதம் சொல்லியது கலியுகத்தைப் பற்றியது. "கலியில் பராசரர் சொல்லிய தர்மங்கள் முக்யங்கள்" என்று ஸ்ம்ருதியிருப்பதால். மற்ற யுகத்திலோவெனில்,

**மனு:—** ப்ராம்ஹணனை அடிப்பதற்காகத் தண்டத்தை ஓங்கினால் நூறு வர்ஷங்களும், அடித்தால் ஆயிரம் வர்ஷங்களும் நரகத்தை யடைவான். அடிக்கப்பட்ட ப்ராம்ஹணனின் ரக்தம் பூமியில் வீழ்ந்து எவ்வளவு பூமி துளிகளை க்ரஹிக்கின்றதோ அவ்

𑌤𑌤𑍍𑌕𑌰𑍍𑌤𑌾 𑌨𑌰𑌕𑍇 𑌵𑌸𑍇𑌤𑍍 ॥ 𑌅𑌵𑌗𑍂𑌰𑍍𑌯 𑌚𑌰𑍇𑌤𑍍𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌮𑌤𑌿𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌂 𑌨𑌿𑌪𑌾𑌤𑌨𑍇 । 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌾𑌤𑌿𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑍌 𑌕𑍁𑌰𑍍𑌵𑍀𑌤 𑌵𑌿𑌪𑍍𑌰𑌸𑍍𑌯𑍋𑌤𑍍𑌪𑌾𑌦𑍍𑌯 𑌶𑍋𑌣𑌿𑌤𑌮𑍍' 𑌇𑌤𑌿 ॥

𑌯𑌾𑌜𑍍𑌞𑌵𑌲𑍍𑌕𑍍𑌯𑍋𑌽𑌪𑌿—

'𑌵𑌿𑌪𑍍𑌰𑍋𑌦𑍍𑌗𑍂𑌰𑍍𑌣𑍇 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌸𑍍𑌤𑍍𑌵𑌤𑌿𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑍋 𑌨𑌿𑌪𑌾𑌤𑌨𑍇 । 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌾𑌤𑌿𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑍋𑌽𑌸𑍃𑌕𑍍𑌪𑌾𑌤𑍇 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑍋𑌽𑌭𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌶𑍋𑌣𑌿𑌤𑍇' 𑌇𑌤𑌿 ॥

𑌬𑍋𑌧𑌾𑌯𑌨𑍋𑌽𑌪𑌿—

'𑌅𑌵𑌗𑍂𑌰𑍍𑌯 𑌚𑌰𑍇𑌤𑍍𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌮𑌤𑌿𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌂 𑌨𑌿𑌪𑌾𑌤𑌨𑍇 । 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌂 𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌂 𑌚𑍈𑌵 𑌲𑍋𑌹𑌿𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌨𑍇 ॥ 𑌤𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌨𑍈𑌵𑌾𑌵𑌗𑍁𑌰𑍍𑌵𑍀𑌤 𑌨 𑌚 𑌕𑍁𑌰𑍍𑌵𑍀𑌤 𑌶𑍋𑌣𑌿𑌤𑌮𑍍' 𑌇𑌤𑌿 ॥

## 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌤𑌿𑌰𑌸𑍍𑌕𑌾𑌰𑍇 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍍 ॥

𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌤𑌿𑌰𑌸𑍍𑌕𑌾𑌰𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑌾𑌹 𑌪𑌰𑌾𑌶𑌰𑌃—

'𑌹𑍁𑌙𑍍𑌕𑌾𑌰𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌯𑍋𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌤𑍍𑌵𑌙𑍍𑌕𑌾𑌰𑌂 𑌚 𑌗𑌰𑍀𑌯𑌸𑌃 । 𑌸𑍍𑌨𑌾𑌤𑍍𑌵𑌾 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌨𑌹𑌶𑍍𑌶𑍇𑌷𑌮𑌭𑌿𑌵𑌾𑌦𑍍𑌯 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌯𑍇𑌤𑍍' 𑌇𑌤𑌿 ॥

---

வளவு ஆயிரம் வர்ஷங்கள் வரையில் நரகத்தையடைவான். ஓங்கினால் ப்ராஜாபத்ய க்ருச்ரத்தையும், அடித்துக் கீழே தள்ளினால் அதி க்ருச்ரத்தையும், ப்ராம்ஹணனின் தேகத்தில் ரக்தத்தை வெளியாக்கினால் ப்ராஜாபத்யக்ருச்ரம், அதிக்ருச்ரம் இவைகளை யனுஷ்டிக்கவேண்டும்.

**யாஜ்ஞவல்க்யரும்:—** ப்ராம்ஹணனைக் குறித்துக் கழியை ஓங்கினால் ப்ராஜாபத்ய க்ருச்ரமும், கீழே தள்ளினால், அதிக்ருச்ரமும், ரக்தத்தை வெளியாக்கினால் க்ருச்ராதிக்ருச்ரமும், ரக்தம் வெளிவராமல் உள்ளேயே கட்டப்பட்டிருந்தால் ப்ராஜாபத்ய க்ருச்ரமும் ப்ராயச்சித்தமாகும்.

**போதாயனரும்:-** ப்ராம்ஹணனைக் குறித்துக் கழியை ஓங்கினால் ப்ராஜாபத்ய க்ருச்ரமும், கீழே தள்ளினால் அதிக்ருச்ரமும், ரக்தத்தை வெளிவரச் செய்தால் சாந்த்ராயணமும் ப்ராயச்சித்தமாகும். ஆகையால் கழியை ஓங்கக்கூடாது. ரக்தத்தையும் வெளியாக்கக் கூடாது.

## ப்ராம்ஹணனை அவமதித்தால் ப்ராயச்சித்தம்.

**பராசரர்:—** ப்ராம்ஹணன் விஷயத்தில் ஹுங்காரத்தைச்

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿 𑌹𑍁𑌙𑍍𑌕𑌾𑌰𑌂 𑌯𑌃 𑌪𑍍𑌰𑌯𑍁𑌙𑍍𑌕𑍍𑌤𑍇 𑌯𑌶𑍍𑌚 𑌵𑌯𑌸𑌾 𑌵𑌿𑌦𑍍𑌯𑌯𑌾 𑌵𑌾 𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿 𑌤𑍍𑌵𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌕𑌵𑌚𑌨𑌂 𑌪𑍍𑌰𑌯𑍁𑌙𑍍𑌕𑍍𑌤𑍇 𑌤𑌾𑌵𑍁𑌭𑍌 𑌸𑍍𑌨𑌾𑌤𑍍𑌵𑌾 𑌯𑌾𑌵𑌦𑌸𑍍𑌤𑌮𑌯𑌂 𑌨𑌿𑌰𑌾𑌹𑌾𑌰𑍌 𑌸𑍍𑌥𑌿𑌤𑍍𑌵𑌾 𑌰𑌾𑌤𑍍𑌰𑍌 𑌅𑌭𑌿𑌵𑌾𑌦𑌨𑍇𑌨 𑌤𑌂 𑌕𑍍𑌷𑌮𑌾𑌪𑌯𑍇𑌤𑌾𑌮𑌿𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥

𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌤𑌾𑌡𑌨𑍇 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍍 ॥

𑌤𑌾𑌡𑌨𑍇 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑌾𑌹 𑌪𑌰𑌾𑌶𑌰𑌃—

"𑌤𑌾𑌡𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌤𑍃𑌣𑍇𑌨𑌾𑌪𑌿 𑌕𑌣𑍍𑌠𑌂 𑌬𑌦𑍍𑌧𑍍𑌵𑌾𑌽𑌪𑌿 𑌵𑌾𑌸𑌸𑌾 । 𑌵𑌿𑌵𑌾𑌦𑍇𑌨 𑌵𑌿𑌨𑌿𑌰𑍍𑌜𑌿𑌤𑍍𑌯 𑌪𑍍𑌰𑌣𑌿𑌪𑌤𑍍𑌯 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌯𑍇𑌤𑍍" 𑌇𑌤𑌿 ॥ 𑌪𑍍𑌰𑌣𑌿𑌪𑌾𑌤𑍇𑌨𑍋𑌪𑌵𑌾𑌸𑍋𑌽𑌪𑍍𑌯𑍁𑌪𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 ॥

𑌤𑌥𑌾 𑌚 𑌮𑌨𑍁𑌃—

𑌹𑍁𑌙𑍍𑌕𑌾𑌰𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌯𑍋𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌤𑍍𑌵𑌙𑍍𑌕𑌾𑌰𑌂 𑌚 𑌗𑌰𑍀𑌯𑌸𑌃 ।

---

சொன்னாலும், பெரியவனுக்கு நீ என்ற சப்தத்தைச் சொன்னாலும், ஸ்நானம் செய்து, மீதியுள்ள பகல் முழுவதும் நின்றுகொண்டிருந்து அவமதிக்கப்பட்டவனை நமஸ்கரித்துப் ப்ரார்த்தித்துத் தெளிவிக்க வேண்டும்.

வேதம் அறிந்த ப்ராம்ஹணனைக் குறித்து எவன் ஹுங்காரத்தை உபயோகிக்கின்றானோ, எவன் வயதினாலோ, வித்யையினாலோ பெரியவனாய் உள்ளவனைக் குறித்து, ஏக வசனத்தை (நீ என்ற பதத்தை) உபயோகிக்கின்றானோ, அவ்விருவரும் ஸ்நானம் செய்து அஸ்தமயம் வரையில் ஆஹாரமில்லாமலிருந்து, ராத்ரியில் நமஸ்காரத்தால் அவனை மன்னிக்கும்படி கோரவேண்டும், என்பது பொருள்.

## ப்ராம்ஹணனை அடிப்பது முதலியதில் ப்ராயஶ்சித்தம்.

**பராசரர்:**— "ப்ராம்ஹணனைப் புல்லினாலாலும் அடித்தாலும், வஸ்த்ரத்தால் கழுத்தில் கட்டினாலும், வாதத்தால் ஜயித்தாலும் அவனை நமஸ்கரித்து மன்னிப்பைக் கோரவேண்டும்", என்று. நமஸ்கரித்து என்பதால் உபவாஸமும் சொல்லப்படுகிறது. அவ்விதமே,

**மனு:**—ப்ராம்ஹணன் விஷயத்தில் ஹுங்காரத்தைச் சொன்னாலும், பெரியவர் விஷயத்தில் நீ என்று சொன்னாலும், ஸ்நானம்

ஸாஷ்டாங்கம் ப்ரணம்யைஷ அபிவாத்ய ப்ரஸாதயேத் ॥ தாடயித்வா த்ருணேநாபி கண்டே வா பத்த்வா வாஸஸா । விவாதே வா விநிர்ஜித்ய ப்ரணிபத்ய ப்ரஸாதயேத்' இதி ॥

யாஜ்ஞவல்க்யோऽபி —

'த்வங்காரம் க்ருத்வா ஹுங்காரம் க்ருத்வா விப்ரம் நிர்ஜித்ய வாததஃ । பத்த்வா வா வாஸஸா க்ஷிப்ரம் ப்ரஸாத்யோபவஸேத்திநம்' இதி ॥

த்வங்காரவிப்ராத்யதிக்ஷேபே ப்ராயச்சித்தம் ॥

அஸக்ருத் பித்ராத்யதிக்ஷேபே ப்ராயச்சித்தம் ஸ்காந்தே —

'பித்ராதிஜநகம் ஜ்யேஷ்டம் த்வங்காரம் வாऽபி ந பீடயேத் । ஏகவசநேந நாம்நா வா த்வங்காரம் ஹுங்க்ருதிம் ச வா ॥ தத்தோஷபரிஹாரார்த்தம் நாசிகேதவ்ரதம் சரேத் । நாசிகேதஃ புரா ராஜந் த்வங்காரோத்தாலகம் ப்ரதி ॥ பரிஹாஸ்ய

செய்து மீதியுள்ள பகலில் போஜனம் செய்யாமலிருந்து, அவனை நமஸ்கரித்து, மன்னிக்கும்படி கோரவேண்டும். புல்லினாலாவது அடித்தாலும், வஸ்த்ரத்தால் கழுத்தில் கட்டினாலும், வாதத்தில் ஜயித்தாலும், அவனை நமஸ்கரித்து, மன்னிப்புக் கோரவேண்டும்.

**யாஜ்ஞவல்க்யரும்:—** குருவை நீ என்று சொன்னாலும், ஹூம் என்று சொன்னாலும், ப்ராம்ஹணனை வாதத்தால் ஜயித்தாலும், வஸ்த்ரத்தால் கழுத்தில் கட்டினாலும், உடனே மன்னிப்புக் கேட்டுக்கொண்டு அந்தப்பகல் முழுவதும் உபவாஸமிருக்க வேண்டும்.

## குரு, பிதா முதலியவரை அதிக்ஷேபம் செய்வதில் ப்ராயச்சித்தம்.

பல தடவை பிதா முதலியவரை அதிக்ஷேபம் செய்தால் (அவமதித்துப் பேசினால்) ப்ராயச்சித்தம் சொல்லப்பட்டுள்ளது,

**ஸ்காந்தத்தில்:—** பிள்ளை முதலியவன் தகப்பன், தமையன், குரு இவர்களை ஏக வசனத்தாலும், பெயரைச் சொல்வதாலும், நீ என்று சொல்லுவதாலும், ஹூங்காரத்தாலும் வருத்தக் கூடாது. அப்படிச் செய்தால், அந்தப் பாபத்தைப் பரிஹரிப்பதற்காக நாசிகேத வ்ரதத்தை யனுஷ்டிக்கவேண்டும். ஓ அரசனே! முற்காலத்தில் நாசிகேதர் என்பவர் உத்தாலகர் என்ற குருவை

𑌤𑌤𑍋 𑌗𑌤𑍍𑌵𑌾 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌯𑌮𑌪𑍁𑌰𑌂 𑌮𑌹𑌤𑍍 । 𑌪𑍁𑌨𑌰𑌾𑌗𑌤𑍍𑌵𑌾 𑌭𑍂𑌮𑍇𑌃 𑌪𑍍𑌰𑌦𑍇𑌶𑌂 𑌵𑌿𑌤𑌤𑌂 𑌪𑍍𑌰𑌣𑌿𑌪𑌤𑍍𑌯 𑌚 ॥ 𑌤𑌦𑍍𑌵𑌾𑌕𑍍𑌯𑍇𑌨 𑌤𑌤𑌃 𑌪𑌶𑍍𑌚𑌾𑌦𑍍𑌦𑍇𑌹𑌶𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌰𑍍𑌥𑌮𑌾𑌦𑌰𑌾𑌤𑍍 । 𑌕𑌪𑌿𑌲𑌾𑌨𑌾𑌂 𑌤𑍁 𑌗𑌵𑌾𑌂 𑌕𑍍𑌷𑍀𑌰𑌂 𑌦𑌿𑌨𑍇 𑌦𑌿𑌨𑍇 ॥ 𑌪𑍀𑌤𑍍𑌵𑌾 𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌵𑌾𑌪𑍍𑌤𑍋 𑌮𑌣𑍍𑌡𑌲𑌾𑌦𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌤𑌃 । 𑌅𑌸𑌕𑍃𑌦𑍍𑌗𑍁𑌰𑍁𑌵𑌿𑌕𑍍𑌷𑍇𑌪𑍇 𑌵𑍍𑌰𑌤𑌮𑍇𑌤𑌤𑍍𑌸𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 ॥ 𑌅𑌥𑌵𑌾 𑌦𑍇𑌹𑌶𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌰𑍍𑌥𑌂 𑌷𑌡𑌬𑍍𑌦𑌂 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍’ 𑌇𑌤𑌿 ॥

𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑌃—

‘𑌗𑍁𑌰𑍋𑌰𑌲𑍀𑌕𑌨𑌿𑌰𑍍𑌬𑌨𑍍𑌧𑍇 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌂 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌰𑌾𑌤𑍍𑌰𑌂 𑌚𑌰𑌿𑌤𑍍𑌵𑌾 𑌸𑌚𑍈𑌲𑌸𑍍𑌨𑌾𑌤𑍋 𑌗𑍁𑌰𑍁𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌨𑌾𑌚𑍍𑌛𑍁𑌦𑍍𑌧𑍋 𑌭𑌵𑌤𑌿’ 𑌇𑌤𑌿 ॥ 𑌤𑌦𑍇𑌤𑌦𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌿𑌷𑌯𑍇 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌿𑌷𑌯𑍇 𑌸𑌕𑍃𑌦𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑍇 𑌵𑍇𑌦𑌿𑌤𑌵𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌮𑌾𑌧𑌵𑍀𑌯𑍇 ॥

𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃—

‘𑌸𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌗𑍌𑌰𑌵𑌾𑌨𑍃𑌤𑍇 𑌗𑍁𑌰𑍋𑌰𑌲𑍀𑌕𑌨𑌿𑌰𑍍𑌬𑌨𑍍𑌧𑍇 𑌚 𑌕𑍍𑌷𑍀𑌰𑍇𑌣 𑌮𑌾𑌸𑌂 𑌪𑌯𑌸𑌾 𑌵𑌾 𑌵𑌰𑍍𑌤𑍇𑌤’ 𑌇𑌤𑌿 ॥

---

நோக்கி அவமதிப்பாய்ப் பேசி, பிறகு பெரிய யமபட்டணத்தை யடைந்து அதைப் பார்த்து மறுபடி பூமியின் ப்ரதேசத்தை யடைந்து, தகப்பனை நமஸ்கரித்து, அவருடைய வாக்யத்தால் தேகம் சுத்தமாவதற்காக ஆதரவுடன் ஒரு மண்டலம் வரையில் ஒவ்வொரு தினத்திலும் பசுவின் பாலை மட்டில் பருகினர். பிறகு சுத்தியையடைந்தார். ஒரு மண்டலத்திற்குப் பிறகு சுத்தியை யடைந்தார். பல தடவை குருவை அதிக்ஷேபம் செய்தால் இந்த வ்ரதத்தை யனுஷ்டிக்கவேண்டும். அல்லது, தேஹ சுத்திக்காக ஷட்ப்த க்ருச்ரத்தை யனுஷ்டிக்கவேண்டும்.

**வஸிஷ்டர்:**— “குருவைப் பொய்யாய் நிர்ப்பந்தித்தால் பன்னிரண்டுநாள் க்ருச்ரத்தை யனுஷ்டித்து, ஸசேல ஸ்நானம் செய்து, குரு மன்னித்ததால் சுத்தனுவான்,” என்று. இவ்விதம் சொல்லியது அறியாமையால் செய்த விஷயத்திலும், அறிந்து ஒரு தடவை செய்த விஷயத்திலும் என்றறியவும், என்று மாதவீயத்தில் உள்ளது.

**விஷ்ணு:**— தன் விஷயமாய் கௌரவத்திற்காகப் பொய் சொன்னுலும், குருவைப் பொய்யாய் நிர்ப்பந்தித்தாலும், ஒரு மாஸம் வரையில் பாலைப் பருகியாவது, ஜலத்தையாவது பருகி, வ்ரதம் அனுஷ்டிக்கவேண்டும்.

𑌪𑌤𑌨𑍀𑌯𑍇 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌯𑌾𑌨𑌾𑌦𑍌 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍍 ॥

𑌪𑌤𑌨𑍀𑌯𑌾𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑌾𑌹 𑌬𑍋𑌧𑌾𑌯𑌨𑌃—

‘𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌯𑌾𑌨𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑍍𑌵𑌨𑍍𑌯𑌾𑌸𑌾𑌪𑌹𑌰𑌣𑌂 𑌭𑍂𑌮𑍍𑌯𑌨𑍃𑌤𑌵𑌚𑌨𑌂 𑌸𑌰𑍍𑌵𑌪𑌣𑍍𑌯𑍈𑌰𑍍𑌵𑍍𑌯𑌵𑌹𑌰𑌣𑌂 𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌭𑌿𑌗𑌮𑌨𑌂 𑌯𑌚𑍍𑌚 𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌯𑌾𑌮𑌭𑌿𑌜𑌾𑌯𑌤𑍇 𑌤𑌦𑌪𑌤𑍍𑌯𑌂 𑌚 𑌭𑌵𑌤𑌿 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌤𑍁 𑌨𑌿𑌰𑍍𑌵𑍇𑌶𑌃 । 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑌕𑌾𑌲𑌾 𑌮𑌿𑌤𑌭𑍋𑌜𑌿𑌨𑌸𑍍𑌸𑍍𑌯𑍁𑌰𑌪𑍋𑌽𑌭𑍍𑌯𑌵𑍇𑌯𑍁𑌸𑍍𑌸𑌵𑌨𑌾𑌨𑍁𑌕𑌲𑍍𑌪𑌮𑍍 । 𑌸𑍍𑌥𑌾𑌨𑌾𑌸𑌨𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌵𑌿𑌹𑌰𑌨𑍍𑌤 𑌏𑌤𑍇 𑌤𑍍𑌰𑌿𑌭𑌿𑌰𑍍𑌵𑌰𑍍𑌷𑍈𑌸𑍍𑌤𑌦𑌪𑌹𑌨𑍍𑌤𑌿 𑌪𑌾𑌪𑌮𑍍’ 𑌇𑌤𑌿 ॥ 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑌃 𑌕𑌾𑌲𑍋 𑌯𑍇𑌷𑌾𑌮𑍍 । 𑌯𑌥𑌾 — 𑌅𑌦𑍍𑌯 𑌸𑍍𑌥𑌿𑌤𑍍𑌵𑌾 𑌭𑍁𑌞𑍍𑌜𑌤𑍇 𑌶𑍍𑌵𑍋 𑌰𑌾𑌤𑍍𑌰𑍌 𑌤𑍇 𑌤𑌥𑍋𑌕𑍍𑌤𑌾𑌃 । 𑌤𑌥𑌾 𑌮𑌿𑌤𑌭𑍋𑌜𑌿𑌨𑌃 = 𑌅𑌲𑍍𑌪𑌾𑌶𑌿𑌨𑌃 । 𑌅𑌪𑍋𑌽𑌭𑍍𑌯𑌵𑍇𑌯𑍁𑌃 = 𑌭𑍂𑌮𑌿𑌗𑌤𑌾𑌸𑍍𑌵𑌪𑍍𑌸𑍁 𑌸𑍍𑌨𑌾𑌨𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑍁𑌃 । 𑌸𑌵𑌨𑌾𑌨𑍁𑌕𑌲𑍍𑌪𑌂 = 𑌤𑍍𑌰𑌿𑌷𑌵𑌣𑌮𑍍 । 𑌸𑍍𑌥𑌾𑌨𑌾𑌸𑌨𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 = 𑌦𑌿𑌵𑌾 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌤𑌃, 𑌰𑌾𑌤𑍍𑌰𑍌 𑌚𑌾𑌸𑍀𑌨𑌾𑌃 । 𑌏𑌵𑌂 𑌵𑌿𑌹𑌰𑌨𑍍𑌤𑌃 = 𑌕𑌾𑌲𑌂 𑌕𑍍𑌷𑌿𑌪𑌨𑍍𑌤𑌃 𑌏𑌤𑍇 𑌤𑍍𑌰𑌿𑌭𑌿𑌰𑍍𑌵𑌰𑍍𑌷𑍈𑌸𑍍𑌤𑌤𑍍𑌪𑌾𑌪𑌮𑌪𑌘𑍍𑌨𑌨𑍍𑌤𑍀𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ 𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌭𑌿

## பதனீயமான ஸமுத்ர யாத்ரை முதலியதில் ப்ராயஶ்சித்தம்.

*பதனீயங்களுக்கு ப்ராயஶ்சித்தத்தைச் சொல்லுகிறார்,*

**போதாயனர்:**— “ஸமுத்ரத்தில் யாத்ரை, ப்ராம்ஹணனின் ஸ்வத்தையும் அடைக்கலமான ஸ்வத்தையும் அபஹரிப்பது, பூமி விஷயமாய்ப் பொய் சொல்வது, நிஷித்தமான பண்டங்களை வ்யாபாரம் செய்வது, ஶூத்ரியிடம் சேருவது, அவளிடத்தில் ப்ரஜோத்பத்தி செய்வது, அவளுக்குப் பிள்ளையாயிருப்பது, இவைகளில் ஒன்றைச் செய்தவர்கள் ப்ராயஶ்சித்தம் செய்துகொள்ள வேண்டும். அவர்கள் இரண்டு காலங்கள் உபவாஸமிருந்து நான்காவது போஜன காலத்தில் அல்பமாய்ப் புஜிப்பவர்களாய் மூன்று காலங்களிலும் பூமியில் உள்ள ஜலத்தில் ஸ்நானம் செய்யவேண்டும். பகலில் நிற்பவர்களாய் இரவில் உட்காருகிறவர்களாயும் மூன்று வர்ஷம் இருந்தால் அந்தப் பாபத்தைப் போக்கிக் கொள்வார்கள்,” என்று. ஶூத்ர ஸ்த்ரீயினிடம் சேர்ந்ததற்குச் சொல்லிய இந்தப் பெரிய ப்ராயஶ்சித்தம், ருது காலத்தில் சேர்ந்து ப்ரஜை உண்டாகியதைப்பற்றியது. “ஶூத்ர ஸ்த்ரீயைச் சேர்ந்தவனுக்கும், அவளிடம்

ஶூத்³ரே இத³ம் ஜநகஸ் ப்ராயஶ்சித்தம் நாஸ்தி ஏவம் ஶூத்³ரே ப்ரஜோத்பத்தௌ த்³ரஷ்டவ்யம், 'வ்ருஷலீபே²நபீதஸ்ய நி:ஶ்வாஸோபஹதஸ்ய ச । தஸ்யாம் சைவ ப்ரஸூதஸ்ய நிஷ்க்ருதிர்ந விதீ⁴யதே' இதி ஸ்ம்ருதே: ॥

**து³ர்ஜநஸேவாப்ராயஶ்சித்தம் ॥**

---

து³ர்ஜநஸேவாப்ராயஶ்சித்தமாஹ தே³வல: —

'பிஶுநஸ்ய மத்³யபஸ்ய த்³யூதக: கிதவஸ்ய வா । ஸ்தேயி ச து³ர்ஜநாநாம் ச ஸேவாமேஷாம் கரோதி ய: ॥ பராகமேக தி³வஸே பக்ஷே தப்தக்ருச்ச்ரிதம் । ப்ராஜாபத்யம் ததா² மாஸே வர்ஷே சாந்த்³ரஸ்ய லக்ஷணம் ॥ க்ருத்வா ஶுத்³தி⁴மவாப்நோதி வர்ஷாதூ³ர்த்⁴வம் பதத்யஸௌ' இதி ॥

**ஶூத்³ரஸேவா ப்ராயஶ்சித்தம் ॥**

---

ஶூத்³ரஸேவாயாம் ப்ராயஶ்சித்தமாஹது: போ³தா⁴யநாபஸ்தம்பௌ³ —

'யதே³கராத்ரேண கரோதி பாபம் க்ருஷ்ணம் வர்ணம் ப்³ராஹ்மணஸ்ஸேவமாந: । சதுர்த²காலம் உத³காப்⁴யவாயீ த்ரிஷவணம்

---

ப்ரஜோத்பத்தியைச் செய்தவனுக்கும் ப்ராயஶ்சித்தம் இல்லை," என்று ஸ்ம்ருதியிருப்பதால்,

## துஷ்டர்களை ஸேவிப்பதில் ப்ராயஶ்சித்தம்.

**தேவலர்:—** கோட் சொல்பவன், துஷ்டன், மத்யபானம் செய்பவன், சூதாடுபவன், ஸ்வர்ணஸ்தேயி, துர்ஜனன், இவர்களை எவன் ஸேவிக்கின்றானோ அவனுக்கு ஒரு நாள் ஸேவித்தால், பராக க்ருச்ரம் ப்ராயஶ்சித்தம். ஒரு பக்ஷம் (பதினைந்து நாள்) ஆனால், தப்தக்ருச்ரம். ஒரு மாஸமானால், ப்ராஜாபத்ய க்ருச்ரம். ஒரு வர்ஷமானால், சாந்த்ராயணம் ப்ராயஶ்சித்தம். இவ்விதம் செய்தால் சுத்தனாவான். ஒரு வர்ஷத்திற்கு மேலானால், பதிதனாவான்.

## சூத்ர ஸேவையில் ப்ராயஶ்சித்தம்.

**போதாயனரும் ஆபஸ்தம்பரும்:—** சூத்ரனைப் பிழைப்புக்காக வேலைக்காரனாயிருந்து ஸேவிக்கும ப்ராம்ஹணன், ஒரு நாளில்

𑌶𑍈𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌹𑌤𑌿 𑌪𑌾𑌪𑌮𑍍' 𑌇𑌤𑌿 ॥ 𑌕𑍃𑌷𑍍𑌣𑌵𑌰𑍍𑌣𑌃 𑌶𑍂𑌦𑍍𑌰𑌃, 𑌤𑌥𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌕𑌰𑍋 𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌾 𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌂 𑌸𑍇𑌵𑌮𑌾𑌨𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌃 𑌵𑌰𑍍𑌷𑌤𑍍𑌰𑌯𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑌕𑌾𑌲𑍇 𑌮𑌿𑌤𑌭𑍋𑌜𑍀 𑌤𑍍𑌰𑌿𑌷𑌵𑌣𑌸𑍍𑌨𑌾𑌯𑍀 𑌅𑌨𑌕𑍍𑌷𑌿𑌨𑌸𑍇𑌵𑌾𑌕𑍃𑌤𑌂 𑌪𑌾𑌪𑌂 𑌹𑌨𑍍𑌤𑍀𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥

𑌬𑍋𑌧𑌾𑌯𑌨𑌃—

𑌭𑍈𑌷𑌜𑍍𑌯𑌕𑌰𑌣𑌂 𑌗𑍍𑌰𑌾𑌮𑌯𑌾𑌜𑌨𑌂 𑌰𑌙𑍍𑌗𑍋𑌪𑌜𑍀𑌵𑌨𑌂 𑌨𑌾𑌟𑍍𑌯𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌤𑌾 𑌗𑍋𑌮𑌹𑌿𑌷𑍀𑌰𑌕𑍍𑌷𑌣𑌂 𑌯𑌚𑍍𑌚𑌾𑌨𑍍𑌯𑌦𑌪𑍍𑌯𑍇𑌵𑌂 𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌕𑌨𑍍𑌯𑌾𑌦𑍂𑌷𑌣𑌮𑌿𑌤𑌿 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌤𑍁 𑌨𑌿𑌵𑍇𑌶𑌃 𑌪𑌤𑌿𑌤𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍍𑌦𑍍𑌵𑍌 𑌸𑌂𑌵𑌤𑍍𑌸𑌰𑍌' 𑌇𑌤𑌿 ॥ 𑌅𑌨𑍍𑌯𑌦𑌪𑍍𑌯𑍇𑌵𑌂 𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍍 𑌇𑌤𑌿— 𑌅𑌨𑍍𑌯𑌦𑌪𑍍𑌯𑍇𑌵𑌮𑍁𑌪𑌪𑌾𑌤𑌕𑌮𑌿𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥

𑌅𑌶𑍁𑌚𑌿𑌕𑌰𑌾𑌣𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍍 ॥

---

𑌸 𑌏𑌵—

𑌅𑌥𑌾𑌶𑍁𑌚𑌿𑌕𑌰𑌾𑌣𑌿 𑌦𑍍𑌯𑍂𑌤𑌮𑌭𑌿𑌚𑌾𑌰𑍋𑌽𑌨𑌾𑌹𑌿𑌤𑌾𑌗𑍍𑌨𑍇𑌰𑍁𑌞𑍍𑌛𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌤𑌾 𑌸𑌮𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌭𑍈𑌕𑍍𑌷𑌚𑌰𑍍𑌯𑌾 𑌤𑌸𑍍𑌯 𑌚𑍈𑌵 𑌗𑍁𑌰𑍋𑌃 𑌕𑍁𑌲𑍇 𑌵𑌾𑌸 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍍𑌯𑍋 𑌮𑌾𑌸𑍇𑌭𑍍𑌯𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌯𑌾𑌜𑍍𑌯𑌾

---

செய்த பாபத்தை, மூன்று வர்ஷம் வரையில் நான்காவது காலத்தில் புஜிப்பவனும், மூன்று வேளை ஸ்நானம் செய்பவனும், நியமத்துடன் இருந்தால் போக்கிக்கொள்வான்.

**போதாயனர்:—** (ஜீவனார்த்தமாக) வைத்யம் செய்தல், கூட்டத்துக்கு யஜனம் செய்வித்தல், நாடகத்தால் ஜீவனம், நாட்டியத்தை உபதேசித்தல், பசு எருமை இவைகளைப் பிழைப்புக்காக ரக்ஷிப்பது, இவை போன்ற மற்றவை, கன்யகையைத் தூஷிப்பது, (இவைகள் உபபாதகங்கள்.) அவைகளுக்கு ப்ராயச்சித்தம் பதிதனுக்குச் சொல்லிய ப்ராயச்சித்தத்தை இரண்டு வர்ஷம் அனுஷ்டிப்பது.

## அசுத்திகரங்களான பாபங்களுக்கு ப்ராயச்சித்தம்.

**போதாயனர்:—** இனி அசுத்திகரங்களான தோஷங்கள் சொல்லப்படுகின்றன. சூதாட்டம், அபிசார கர்மாக்கள், ஆஹிதாக்னியில்லாதவன் உஞ்சவ்ருத்தி செய்வது, க்ருஹஸ்தன் பிக்ஷாசரணம் செய்வது, க்ருஹஸ்தனை பிறகு நாலு மாதத்திற்கு அதிக

𑌵𑌚𑌨𑌂 𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌨𑌿𑌰𑍍𑌦𑍇𑌶𑌶𑍍𑌚𑍇𑌤𑌿 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌤𑍁 𑌨𑌿𑌰𑍍𑌵𑍇𑌶𑍋 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶 𑌮𑌾𑌸𑌾𑌨𑍍 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌰𑍍𑌧𑌮𑌾𑌸𑌾𑌨𑍍 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌹𑌾𑌨𑍍 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶 𑌷𑌡𑌹𑌾𑌨𑍍 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶 𑌤𑍍𑌰𑍍𑌯𑌹𑌾𑌨𑍍 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌹𑌂 𑌷𑌡𑌹𑌂 𑌤𑍍𑌰𑍍𑌯𑌹𑌮𑌹𑍋𑌰𑌾𑌤𑍍𑌰𑌮𑍇𑌕𑌾𑌹𑌮𑌿𑌤𑌿 𑌯𑌥𑌾 𑌕𑌰𑍍𑌮𑌾𑌭𑍍𑌯𑌾𑌸' 𑌇𑌤𑌿 ॥

𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌮𑌾𑌸𑌾𑌦𑍍𑌯𑍇𑌕𑌾𑌹𑌾𑌨𑍍𑌤𑌕𑌾𑌲𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌃 𑌯𑌥𑌾𑌕𑌰𑍍𑌮𑌾𑌭𑍍𑌯𑌾𑌸𑌾𑌵𑌸𑍍𑌥𑌯𑌾 𑌵𑍇𑌦𑌿𑌤𑌵𑍍𑌯𑌃 । 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑍇 𑌸𑌾𑌨𑍁𑌬𑌨𑍍𑌧𑍇𑌽𑌭𑍍𑌯𑌾𑌸𑍇 𑌚 𑌭𑍂𑌯𑌾𑌂𑌸𑌂 𑌕𑌾𑌲𑌂 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌮𑍍 । 𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑍇 𑌵𑌿𑌪𑌰𑍍𑌯𑌯 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥

𑌅𑌭𑌿𑌚𑌾𑌰𑌶𑌾𑌪𑌾𑌦𑌿𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍍 ॥

---

𑌆𑌪𑌸𑍍𑌤𑌮𑍍𑌬𑌃—

‘𑌅𑌭𑌿𑌚𑌾𑌰𑌾𑌨𑍁𑌵𑍍𑌯𑌾𑌹𑌾𑌰𑌾𑌵𑌶𑍁𑌚𑌿𑌕𑌰𑌾𑌵𑌪𑌤𑌨𑍀𑌯𑍌 𑌪𑌤𑌨𑍀𑌯𑌾𑌵𑌿𑌤𑌿 𑌹𑌾𑌰𑍀𑌤𑌃' 𑌇𑌤𑌿 ॥ 𑌅𑌭𑌿𑌚𑌾𑌰𑌃 = 𑌶𑍍𑌯𑍇𑌨𑌯𑌾𑌗𑌾𑌦𑌿𑌃 । 𑌅𑌨𑍁𑌵𑍍𑌯𑌾𑌹𑌾𑌰𑌃 = 𑌶𑌾𑌪𑌃 । 𑌤𑍌 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌵𑌿𑌷𑌯𑍇 𑌕𑍍𑌰𑌿𑌯𑌮𑌾𑌣𑍌 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥

---

மாகக் குருகுலத்தில் வஸிப்பது, ஸமாவ்ருத்தனுக்கு அத்யயனம் செய்துவைப்பது, ஜ்யோதிஷம் சொல்லுவது இவைகள் அசுசி கரங்கள். இவைகளுக்கு ப்ராயஶ்சித்தமாவது:— பன்னிரண்டு மாஸம், பன்னிரண்டு பக்ஷம், நூற்று நாற்பத்து நான்கு நாட்கள், எழுபத்திரண்டு நாட்கள், முப்பத்தாறு நாட்கள், பன்னிரண்டு நாட்கள், ஆறு நாட்கள், மூன்று நாட்கள், ஒரு நாள், ஒரு பகல் என்று உபவாஸம். தோஷ பலாபலங்களுக்கும் அடிக்கடி செய்வதற்கும் ஏற்றபடி அதிகம் குறைவுகளின் வ்யவஸ்தையை அறியவும்.

பன்னிரண்டு மாஸம் முதல் ஒரு பகல் வரையில் விதிக்கப் பட்ட காலத்தின் விகல்பம், பாபத்தைப் பலமுறை செய்ததற்குத் தகுந்தபடி அறியத்தக்கது. புத்திபூர்வமாயும், அடிக்கடி செய்த தாயும், உள்ள விஷயத்தில் அதிக காலம் வரையில் ப்ராயஶ்சித்தத் தைச் செய்யவேண்டும்; குறைந்தால் குறைந்த காலத்தில் செய்யலாம், என்பது பொருள்.

## அபிசாரம், சாபம் முதலியவைகளில் ப்ராயஶ்சித்தம்.

**ஆபஸ்தம்பர்:—** ச்யேன யாகம் முதலிய அபிசாரம், சாபம் இவ்விரண்டும் அபதனீயங்களான அசுசிகரங்களாம். இவைகளைப் பதனீயங்களென்கிறார் ஹாரீதர்.

ஆபஸ்தம்ப:—

'பதநீயவ்ருத்திரஶுசிகராணாம் த்வாதஶமாஸாந் த்வாதஶார்தமாஸாந் த்வாதஶ த்வாதஶாஹாந் த்வாதஶ ஸப்தாஹாந் த்வாதஶ த்ர்யஹாந் த்வாதஶ த்வ்யஹாந் த்வாதஶாஹம் ஸப்தாஹம் த்ர்யஹம் த்வ்யஹமேகாஹம்' இதி ॥

அஶுசிகராணாமபி கர்மணாம் ப்ராதிஸ்விகம் யேஷாம் ப்ராயஶ்சித்தம் நோக்தம், தேஷாமபி பதநீயேஷு கர்மஸு யா வ்ருத்தி: = ப்ராயஶ்சித்தம், ஸைவ ப்ராயஶ்சித்தி: । ஶிஷ்டம் வ்யாக்யாதம் । அஶுசிகராணி தேநோக்தானி । 'அதாஶுசிகராணி ஶூத்ரகமநமார்யஸ்த்ரீணாம் ப்ரதிஷித்தாநாம் மாம்ஸபக்ஷணம் ஶுநோ மநுஷ்யஸ்ய ச குக்குடஸூகராணாம் க்ராம்யாணாம் க்ரவ்யாதஸாம் மநுஷ்யாணாம் மூத்ரபுரீஷப்ராஶநம் ஶூத்ரோச்சிஷ்டமபபாத்ராகமநம் சார்யாணாம்' இதி ॥ 'ஏதாந்யபி பதநீயாநீத்யேகே' இதி । க்ரவ்யாதஸ: = க்ருத்ராதய: । ஶூத்ரோச்சிஷ்டம் ஸாக்ஷாதஶுசிகரம் । அபபாத்ரா: = ப்ரதிலோமஸ்த்ரிய: ॥

ஆபஸ்தம்பரே:— "அசுசிகர பாபங்களுக்குப் பதனீயத்துக்குச் சொல்லியது போல் ப்ராயஶ்சித்தம். பன்னிரண்டு மாஸம், ஆறு மாஸம், நூற்றுநாற்பத்துநான்கு நாள், எண்பத்து நான்கு நாள், மூப்பாத்தாறு நாள், இருபத்துநான்கு நாள், பன்னிரண்டு நாள், ஏழு நாள், மூன்று நாள், இரண்டு நாள், ஒரு நாள் என்று (ப்ராயஶ்சித்தம்.)"

அசுசிகரங்களான எந்தப் பாபங்களுக்கும் குறிப்பிட்டதாய் ப்ராயஶ்சித்தம் சொல்லப்படவில்லையோ அவைகளுக்கும் பதநீய கர்மங்களில் எந்த ப்ராயஶ்சித்தமோ அதே ப்ராயஶ்சித்தம், என்பது பொருள். மற்றவை வ்யாக்யானம் செய்யப்பட்டுள்ளது. அசுசிகர பாபங்கள் அவராலேயே சொல்லப்பட்டுள்ளன. "இனி அசுசிகரங்கள் சொல்லப்படுகின்றன. ப்ராம்ஹணுதி மூன்று வர்ண ஸ்த்ரீகள் சூத்ரகமனம் செய்வது, விலக்கப்பட்டவைகளின் மாம்ஸத்தைப் புஜிப்பது, அதாவது நாய், மனுஷ்யன், கோழி, க்ராமப் பன்றி, மாம்ஸத்தைப் புஜிக்கும் கழுகு இவைகளின் மாம்ஸத்தைப் புஜிப்பது, மனுஷ்யர்களின் மல மூத்ரங்களை உட்

𑌮𑌨𑍁𑌃—

'𑌵𑍍𑌰𑌾𑌤𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌯𑌾𑌜𑌨𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌪𑌰𑍇𑌷𑌾𑌮𑌨𑍍𑌤𑍍𑌯𑌕𑌰𑍍𑌮 𑌚 । 𑌅𑌭𑌿𑌚𑌾𑌰𑌮𑌹𑍀𑌨𑌂 𑌚 𑌤𑍍𑌰𑌿𑌭𑌿𑌃 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑍈𑌰𑍍𑌵𑍍𑌯𑌪𑍋𑌹𑌤𑌿 ॥ 𑌶𑌰𑌣𑌾𑌗𑌤𑌂 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌯 𑌵𑍇𑌦𑌂 𑌵𑌿𑌪𑍍𑌲𑌾𑌵𑍍𑌯 𑌚 𑌦𑍍𑌵𑌿𑌜𑌃 । 𑌸𑌂𑌵𑌤𑍍𑌸𑌰𑌂 𑌯𑌵𑌾𑌹𑌾𑌰𑌃 𑌤𑌤𑍍𑌪𑌾𑌪𑌮𑌪𑌸𑍇𑌧𑌤𑌿 ॥ 𑌯𑍇𑌷𑌾𑌂 𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌨𑌾𑌂 𑌸𑌾𑌵𑌿𑌤𑍍𑌰𑍀 𑌨𑌾𑌨𑍂𑌚𑍍𑌯𑍇𑌤 𑌯𑌥𑌾𑌵𑌿𑌧𑌿 । 𑌤𑌾𑌂𑌶𑍍𑌚𑌾𑌰𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌤𑍍𑌰𑍀𑌨𑍍 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌾𑌨𑍍 𑌯𑌥𑌾𑌵𑌿𑌧𑍍𑌯𑍁𑌪𑌨𑌾𑌯𑌯𑍇𑌤𑍍' 𑌇𑌤𑌿 ॥

𑌯𑌾𑌜𑍍𑌞𑌵𑌲𑍍𑌕𑍍𑌯𑌃—

'𑌤𑍍𑌰𑍀𑌨𑍍 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌾𑌨𑌾𑌚𑌰𑍇𑌦𑍍𑌵𑍍𑌰𑌾𑌤𑍍𑌯𑌯𑌾𑌜𑌕𑍋𑌽𑌭𑌿𑌚𑌰𑌨𑍍𑌨𑌪𑌿 । 𑌵𑍇𑌦𑌪𑍍𑌲𑌾𑌵𑍀 𑌯𑌵𑌾𑌶𑍍𑌯𑌬𑍍𑌦𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌚 𑌶𑌰𑌣𑌾𑌗𑌤𑌮𑍍' 𑌇𑌤𑌿 ॥

𑌪𑍈𑌠𑍀𑌨𑌸𑌿𑌃—

'𑌶𑍂𑌦𑍍𑌰𑌯𑌾𑌜𑌕𑌸𑍍𑌤𑌦𑍍𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌾𑌗𑌾𑌤𑍍 𑌪𑍂𑌤𑍋 𑌭𑌵𑌤𑌿 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌯𑍋𑌪𑌹𑌰𑍇𑌦𑍇𑌷 𑌦𑌶𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑍋𑌽𑌸𑍍𑌯𑍈𑌷' 𑌇𑌤𑌿 ॥

---

கொள்வது, ஆர்யர்கள் சூத்ரர்களின் உச்சிஷ்டத்தைப் புஜிப்பது, ப்ரதிலோம ஸ்த்ரீகளைச் சேருவது இவைகளையும் பதனீயங்கள் என்கின்றனர் சிலர்."

**மநு:**— ஸம்ஸ்காரம் இல்லாதவர்களுக்கு யாகம் செய்வித்தாலும், பிறருக்கு ப்ரேதகர்மம் செய்தாலும், அபிசாரயாகம் செய்தாலும், அஹீநயாகம் செய்தாலும் மூன்று க்ருச்ரங்களால் சுத்தனாவான். சரணமடைந்தவனை த்யாகம் செய்தாலும், வேதத்தைக் கெடுத்தாலும் (அத்யயனம் செய்விக்கக் கூடாதவனுக்கு அத்யயனம் செய்வித்தாலும்,) ப்ராம்ஹணன் ஒரு வர்ஷம் வரையில் யவத்தை மட்டில் புஜித்தால் அந்தப் பாபத்தைப் போக்கிக்கொள்வான். எந்த ப்ராம்ஹணர்களுக்கு விதிப்படி காயத்ரீ உபதேசிக்கப்படவில்லையோ அவர்களை மூன்று க்ருச்ரங்கள் அனுஷ்டிக்கச்செய்து விதிப்படி உபநயனம் செய்விக்கவேண்டும்.

**யாஜ்ஞவல்க்யர்:**— வ்ராத்யனுக்கு யாகம் செய்வித்தாலும், அபிசாரயாகம் செய்தாலும், வேதத்தை அத்யயனம் செய்ய யோக்யதை இல்லாதவனுக்குக் கற்பித்தாலும், சரணமடைந்தவனைக் கைவிட்டாலும் ஒரு வர்ஷம் வரையில் யவத்தை மட்டில் புஜிப்பவனாய் மூன்று க்ருச்ரங்களை யனுஷ்டிக்கவேண்டும்.

**பைடீநஸி:**— சூத்ரனுக்கு யாகம் செய்வித்தவன் அவனிட

யதாஹ நாரத:—

'வார்துஷ்யாச்சூத்ரஸேவாயா: ... ப்ராஹ்மணோ ய: ஶுத்த்யதே | ஸஹஸ்ரப்ராணாயாமாந் க்ருத்வா ...' இதி ||
தத்ர ஶக்தவிஷயம் ||

பராஶர:—

'க்ருஹீத்வா தக்ஷிணாம் யஸ்து ஶூத்ரஸ்ய ஜுஹுயாத்தவி: | ப்ராஹ்மணஸ்து பவேச்சூத்ர: ஶூத்ரஸ்து ப்ராஹ்மணோ பவேத்' இதி || ஜுஹுயாத் = வேதமந்த்ரை: | ஶூத்ரஸ்து ப்ராஹ்மணோ பவேதிதி தத்கர்மபலபோக்த்ருத்வம் ||

ப்ருதகாத்யாபநாத்யயநப்ராயஶ்சித்தம் ||

ப்ருதகாத்யாபநம் நிந்ததி ஶௌநக:—

'வேதாக்ஷராணி யாவந்தி நியுஞ்ஜ்யாதர்த்தகாரணாத் | தாவதீர் ப்ரூணஹத்யா வை வஹதே நாத்ர ஸம்ஶய:' இதி ||

---

மிருந்து பெற்ற த்ரவ்யத்தைத் தானம் செய்து, பதினாயிரம் ப்ராணாயாமங்களைச் செய்தால் பிறகு சுத்தனாவான். ஆனால்,

**நாரதர்:**— "எந்த ப்ராம்ஹணன் சூத்ரனுக்கு ஸ்நேஹத்தாலோ, பணத்தாசையாலோ புரோகிதனாய் ஆகின்றானோ அவனுக்குத் தப்தக்ருச்ரம் ப்ராயஶ்சித்தம்," என்று சொல்லியுள்ளாரே எனில், அது அசக்தனைப்பற்றியது.

**பராசரர்:**— "எந்த ப்ராம்ஹணன் தக்ஷிணையைப் பெற்றுக் கொண்டு, சூத்ரனுக்கு வேதமந்த்ரங்களால் ஹவிஸ்ஸை ஹோமம் செய்கின்றானோ அந்த ப்ராம்ஹணன் சூத்ரனாவான். சூத்ரன் ப்ராம்ஹணனாவான், என்றார்". சூத்ரன் ப்ராம்ஹணனாவான், என்பதற்குச் சூத்ரன் அக்கர்மபலனையடைவான், என்பது பொருள்.

## கூலியால் அத்யயனம் செய்வித்தல், அத்யயனத்தைப் பெறுதல் இவைகளில் ப்ராயஶ்சித்தம்.

கூலியால் அத்யயனம் செய்விப்பதை நிந்திக்கிறார்,

**சௌனகர்:**— பணத்திற்காக எவ்வளவு வேதாக்ஷரங்களை விற்கின்றானோ அவ்வளவு ப்ரூணஹத்திகளை அடைகின்றான். இவ் விஷயத்தில் ஸம்ஶயமில்லை.

व्यासोऽपि—

'यो विप्रो भृतकं भृत्वा मासि मासि प्रचोदितम् । शिष्यानध्यापयेद्वेदं साक्षान्नारायणात्मकम् ॥ स वै नारायणद्रोही सर्वदा सोऽशुचिर्भवेत् । अयोग्यो दैवपित्र्येषु सर्वदा तं विवर्जयेत्' इति ॥

तस्य प्रायश्चित्तमाह जाबालिः—

'अब्दं यो भृतकं भृत्वा वेदपाठं द्विजातये । तस्य चान्द्रद्वयं प्रायश्चित्तं प्रचक्षते ॥ अब्दद्वयं वसेद्यस्तु भृत्वा शिष्यं द्विजन्मने । तस्य चान्द्रायणाख्यं प्रोक्तं चान्द्रचतुष्टयम् ॥ अब्दत्रये चान्द्रषट्कं कृच्छ्रमेव विशोधये । अत ऊर्ध्वं ब्रह्महा ज्ञेयो ललाटे तालवर्जितः । ब्रह्महत्याव्रतं कुर्यात् कपालध्वजवर्जितः' इति ॥

**வ்யாஸரும்:—** எந்த ப்ராம்ஹணன் ஒவ்வொரு மாஸத்திலும் ஏற்பட்டதான கூலியைக் கேட்டுக்கொண்டு சிஷ்யர்களுக்கு நாராயணஸ்வரூபமாகிய வேதத்தைக் கற்பிக்கின்றானோ, அவன் நாராயணனுக்கு த்ரோஹம் செய்தவனாயும், எப்பொழுதும் அசுத்தனாகவும் ஆவான். அவன் எப்பொழுதும் தேவபித்ருகார்யங்களில் யோக்யனல்லாதவன், அவனைத் தள்ளவேண்டும்.

அவனுக்கு ப்ராயஶ்சித்தத்தைச் சொல்லுகிறார் **ஜாபாலி:—** ஒரு வர்ஷம் வரையில் கூலியைப் பெற்று எந்த ப்ராம்ஹணன் வேதத்தைக் கற்பித்தவனோ அவனுக்கு இரண்டு சாந்த்ராயண க்ருச்ரம் ப்ராயஶ்சித்தமாய் விதிக்கப்பட்டுள்ளது. இரண்டு வர்ஷம் கூலியைப்பெற்று வேதத்தைக் கற்பித்தால், அவனுக்கு நான்கு சாந்த்ராயணம் ப்ராயஶ்சித்தம் என்று சொல்லப்பட்டுள்ளது. மூன்று வர்ஷமானால், ஆறு சாந்த்ராயண க்ருச்ரத்தை அனுஷ்டிக்க வேண்டும். மூன்று வர்ஷத்திற்கு மேல் கற்பித்தால், ப்ரம்ஹஹத்தி செய்தவனாவான். அவன் நெற்றியில் சூடுவது இல்லாமலும், கபாலம், கொடி இவைகளில்லாமலும் ப்ரம்ஹஹத்யா வ்ரதத்தையனுஷ்டிக்க வேண்டும்.

𑌭𑍃𑌤𑌕𑌾𑌧𑍍𑌯𑌯𑌨𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑌾𑌹 𑌵𑍍𑌯𑌾𑌸𑌃—

[‘𑌭𑍃𑌤𑌕𑌾𑌧𑍍𑌯𑌯𑌨𑌂 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑍁 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋 𑌯𑌶𑍍𑌚 𑌧𑌨𑍇𑌚𑍍𑌛𑌯𑌾 । 𑌶𑌾𑌖𑌾𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌤𑌦𑌰𑍍𑌧𑌂 𑌵𑌾 𑌚𑌣𑍍𑌡𑌾𑌲𑌤𑍍𑌵𑌮𑌵𑌾𑌪𑍍𑌨𑍁𑌯𑌾𑌤𑍍 ॥ 𑌮𑌾𑌸𑌂 𑌪𑌠𑌿𑌤𑍍𑌵𑌾 𑌭𑍃𑌤𑌕𑌂 𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌂 𑌸𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 । 𑌅𑌬𑍍𑌦𑌦𑍍𑌵𑌯𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌹𑌤𑍍𑌯𑌾𑌵𑍍𑌰𑌤𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍𑌸𑌮𑌾𑌹𑌿𑌤𑌃 ॥ 𑌅𑌥𑌵𑌾 𑌤𑍍𑌰𑌿𑌃 𑌪𑌰𑌿𑌕𑍍𑌰𑌮𑍍𑌯 𑌪𑌞𑍍𑌚𑌾𑌶𑌤𑍍𑌕𑍋𑌟𑌿𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑌾𑌮𑍍 । 𑌤𑌤𑌶𑍍𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌵𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌭𑍃𑌤𑌕𑌾𑌧𑍍𑌯𑌯𑌨𑍇 𑌦𑍍𑌵𑌿𑌜𑌃’ 𑌇𑌤𑌿 ॥ ]

𑌹𑌾𑌰𑍀𑌤𑌃—

‘𑌭𑍃𑌤𑌕𑌾𑌧𑍍𑌯𑌾𑌪𑌿𑌤𑍋 𑌯𑌶𑍍𑌚 𑌭𑍃𑌤𑌕𑌾𑌧𑍍𑌯𑌾𑌪𑌕𑌶𑍍𑌚 𑌯𑌃 । 𑌉𑌭𑍌 𑌪𑌯𑍋𑌵𑍍𑌰𑌤𑍇𑌨 𑌤𑍍𑌰𑍀𑌨𑍍𑌤𑍁 𑌪𑌕𑍍𑌷𑌾𑌂𑌸𑍍𑌤𑍁 𑌪𑌯𑌃 𑌪𑌿𑌬𑍇𑌤𑍍’ 𑌇𑌤𑌿 ॥

## 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍋𑌜𑍍𑌝𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍍 ॥

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍋𑌜𑍍𑌝𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑌾𑌹 𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑌃—

‘𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍋𑌜𑍍𑌝𑌃 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌂 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌰𑌾𑌤𑍍𑌰𑌂 𑌚𑌰𑌿𑌤𑍍𑌵𑌾 𑌪𑍁𑌨𑌰𑌧𑍀𑌯𑍀𑌤 𑌵𑍇𑌦𑌮𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌾𑌤𑍍’ 𑌇𑌤𑌿 ॥

---

கூலியால் அத்யயனம் செய்தால் ப்ராயஶ்சித்தத்தைச் சொல்லுகிறார்:—

**வ்யாஸர்:**—[எந்த ப்ராம்ஹணன் பணத்தாசையால் கூலியைக் கொடுத்து வேதத்தை ஒரு சாகையையாவது, அதில் பாதியை யாவது கற்றுக்கொள்கிறானோ அவன் சண்டாளத்தன்மையையடை கிறான். ஒருமாஸம் முழுவதும் கூலியால் படித்தால் ப்ராஜாபத்ய க்ருச்ரத்தை அனுஷ்டிக்கவேண்டும். இரண்டு வர்ஷமானால் கவன முடையவனாய் ப்ரம்ஹஹத்யாப்ராயஶ்சித்தத்தை யனுஷ்டிக்க வேண்டும். அல்லது ஐம்பது கோடி விஸ்தாரமுள்ள பூமியை மூன்று தடவை வலம் வந்தால் பிறகு சுத்தியை அடைவான்.]

**ஹாரீதர்:**— கூலியைக் கேட்பது கொடுப்பது இவைகளால் அத்யயனம் செய்விக்கப்பட்டவனும், அத்யயனம் செய்வித்தவனும் மூன்று பக்ஷம் வரையில் பாலைமட்டில் பருகவேண்டும்.

## கற்ற வேதத்தை மறந்தவனுக்கு ப்ராயஶ்சித்தம்.

**வஸிஷ்டர்:**— "கற்ற வேதத்தை மறந்தவன் பன்னிரண்டு நாள் வரையில் (ப்ராஜாபத்ய) க்ருச்ரத்தை யனுஷ்டித்து ஆசார்ய னிடமிருந்து மறுபடி கற்றுக்கொள்ளவேண்டும்" என்று.

ஏதத் ப்ராமாதிகாத்யயநத்யாகவிஷயம் । நாஸ்திக்யதயா த்யாகே ஸுராபாநஸமமிதி மநோருக்தம் ॥

அநாச்ரமவாஸே ப்ராயச்சித்தம் ॥

---

அநாச்ரமவாஸே ப்ராயச்சித்தமாஹ ஹாரீதः—

‘அநாச்ரமீ ஸம்வத்ஸரம் ப்ராஜாபத்யக்ருச்ச்ரம் சரித்வாऽऽச்ரமம் உபேயாத் । த்விதீயேऽதிக்ருச்ச்ரம் த்ருதீயே க்ருச்ச்ராதிக்ருச்ச்ரம் அத ஊர்த்வம் சாந்த்ராயணம்’ இதி ॥

கௌதமः—

‘அக்நிஹோத்ரஸோமாப்யாம் க்ருஹஸ்தோ ஹி விசுத்த்யதி । தயோரப்யக்ருதே பத்நீ ம்ருதா யஸ்ய தஜ்ஜந்ம விபலம் பவேத் ॥ அநாச்ரமீ த்விஜோ யஸ்து யாவஜ்ஜீவதி ஸம்மதே । மாஸி மாஸி ஸ குர்வீத ப்ராஜாபத்யம் விசுத்தயே ॥ அசக்தச்சேத்ததா க்ருச்ச்ரம் குர்யாதூர்த்வம் ம்ருதஸ்ய து । மாஸி மாஸீஹ தாவந்தி ம்ருதஸ்ய பிதுராத்மஜः ॥ ததச்சுத்திமவாப்நோதி பரலோகஞ்ச விந்ததி’ இதி ॥

---

இது கவனமின்மையால் வேதத்தை மறந்ததைப் பற்றியது. நாஸ்திகத்தன்மையால் வேதத்தை மறந்தால் அது ஸுராபானத்துக்கு ஸமம் என்றார் மனு.

## ஆச்ரமம் இல்லாமலிருப்பதில் ப்ராயச்சித்தம்.

**ஹாரீதர்:—** ஒரு வர்ஷம் முழுவதும் ஆச்ரமம் இல்லாதவனாயிருந்தால், ப்ராஜாபத்ய க்ருச்ரத்தை யனுஷ்டித்து, ஆச்ரமத்தை அடையவேண்டும். இரண்டு வர்ஷம் இருந்தால், அதிக்ருச்ரம், மூன்று வர்ஷம் இருந்தால், க்ருச்ராதிக்ருச்ரம். அதற்குமேலானால், சாந்த்ராயணம் ப்ராயச்சித்தம்.

**கௌதமர்:—** க்ருஹஸ்தன் அக்ன்யாதானத்தாலும், ஸோமபானத்தாலும் சுத்தனாய் இருக்கவேண்டும். அவைகளைச் செய்வதற்குள் பார்யை இறந்தால், அவனது ஜந்மம் பயனற்றதாகும். எந்த ப்ராம்ஹணன் ஆச்ரமமில்லாமல் பூமியில் எவ்வளவு நாள் இருக்கின்றானோ, அவன் ஒவ்வொரு மாஸமும் சுத்திக்காக ப்ராஜாபத்யக்ருச்ரத்தை யனுஷ்டிக்கவேண்டும். அவ்விதம் செய்வதற்குச் சக்தியற்றவனாகில், அவன் இறந்த பிறகு செய்யவேண்டும். இறந்தவனின் புத்ரன் அனாச்ரமியாயிருந்த பிதாவின் காலத்தின் மாஸங்

பஞ்சாஶதூர்த்வம் விவாஹ நிஷேத: ॥

ஸ கௌதம:—

பஞ்சாஶதூர்த்வம் வர்ஷாணாம் ந குர்யாத் பாணிபீடநம் । கலியுகஸ்ய து தோஷத்வாத்தந்நிஷித்தம் மநீஷிண: ॥ யௌவநம் ப்ரேக்ஷதே நாரீ வ்ருத்தம் ஜீர்ணம் பதிம் ஸதா । வ்யபிசாராத் குலம் நஶ்யேத் குலநாஶாத் குலஸ்த்ரிய: ॥ ப்ரணஶ்யந்தி வர்ணஸங்கரோ ஸங்கராத் ஸங்கரோ நரகாய ச இதி ॥

யஸ்து ஸம்யக் க்ருஹஸ்தாஶ்ரமம் வாநப்ரஸ்தோ ந ஜாயதே । பரிவ்ராஜகோ(அ)பி மைத்ரேய ஸ நக்ந: பரிகீர்த்தித:' இதி விஷ்ணுபுராணவசநமதிகாரிவிஷயம் ॥

உத்வாஹிதாயா: புநருத்வாஹே ப்ராயஶ்சித்தம் ॥

உத்வாஹிதாயா: புநருத்வாஹே ப்ராயஶ்சித்தமாஹ ஜாபாலி:—

பூர்வமுத்வாஹிதாம் கந்யாம் பிதா ப்ராதா யதேச்சயா ।

---

களைக் கணக்கிட்டு அவ்வளவு ப்ராஜாபத்ய க்ருச்ரங்களை யனுஷ்டிக்கவேண்டும். பிறகு அவன் சுத்தனாகிறான், சிறந்த லோகங்களையும் அடைகிறான்.

## ஐம்பது வயதுக்குமேல் விவாஹத்தின் நிஷேதம்.

**கௌதமர்:—** ஐம்பது வர்ஷத்துக்கு மேல் விவாஹம் செய்து கொள்ளக்கூடாது. கலியுகம் துஷ்டமாகையால் அந்த விவாஹத்தை நிஷித்தமாகப் புத்திமான்கள் சொல்லுகின்றனர். ஸ்த்ரீ தான் கிழவியானாலும் எப்பொழுதும் வாலிபனையே பார்க்கிறாள். வ்யபிசாரத்தால் குலம் கெடும். குலம் நசித்தால் குலஸ்த்ரீகள் கெடுவார்கள். அதனால் வர்ணஸங்கரம் உண்டாகும். வர்ணஸங்கரத்தால் நரகம் உண்டாகும்.

"ஆனால், எவன் க்ருஹஸ்தாஶ்ரமத்தை விட்டபிறகு வானப்ரஸ்தனாக ஆகவில்லையோ, அல்லது ஸந்யாஸியாக ஆகவில்லையோ, அவன் 'நக்னன்' எனப்படுகிறான், ஓ! மைத்ரேய!" என்ற விஷ்ணு புராணவசனம் அதிகாரியைப்பற்றியது.

## விவாஹம் ஆகியவளுக்கு மறுபடி விவாஹமானால் ப்ராயஶ்சித்தம்.

**ஜாபாலி:—** முதலில் விவாஹம் செய்விக்கப்பட்ட பெண்ணை,

கந்யாமேவம் வேத தநலுப்த்யாஸ் பிதரோ யாந்த்யதோகதிம் ||
ஸா கந்யா பாம்ஸுலா ஜ்ஞேயா தத்புத்ரா: குண்டஸம்ஜ்ஞகா: |
தத்தோஷவிஶுத்த்யர்த்தம் ப்ராயஶ்சித்தம் ஸமாசரேத் || தாதா ராமதநுஷ்கோட்யாம் ப்ரத்யஹம் ஸ்நாநமாசரேத் | வர்ஷமாத்ரேண ஸ ஶுத்தோ நாந்யதா ஶுத்திரிஷ்யதே || தத்பர்தா தாம் பரித்யஜ்ய சாந்த்ராயணத்ரயம் சரேத் | தஸ்யோபநயநம் க்ருத்வா புந: ஸம்ஸ்காரமேவ ஶுத்திமாப்நுயாத் || ஸா கந்யா பூர்வபர்தாரம் சாந்யம் த்யக்த்வா சாந்த்ராயணம் சரேத் | புத்ரோத்பத்தௌ புத்ராணாம் தஸ்யாஶ்ச த்யாக இஷ்யதே' இதி ||

ஸகோத்ராதிவிவாஹே ப்ராயஶ்சித்தம் ||

---

ஸகோத்ராவிவாஹே ப்ராயஶ்சித்தமாஹ போதாயந:—
'ஸகோத்ராம் சேதமத்யோபயச்சேந்மாத்ருவதேநாம் பிப்ருயாத்

---

பிதா, அல்லது ப்ராதா பணத்தாசையால் மற்ருெருவனுக்குக் கொடுத்துவிட்டால், அவனது பித்ருக்கள் நரகத்தை யடைகின்றனர். அந்தப் பெண் வ்யபிசாரிணீ என்று சொல்லப்படுகிருள். அவளுக்குப் பிறந்த பிள்ளைகள் "குண்டர்" எனப்படுகின்றனர். இந்தப் பாபத்தைப் போக்குவதற்காக ப்ராயஶ்சித்தத்தைச் செய்யவேண்டும். பெண்ணைக் கொடுத்தவன் ஸ்ரீராமதனுஷ்கோடியில் ப்ரதிதினம் ஸ்நானம் செய்யவேண்டும். ஒரு வர்ஷம் முழுவதும் செய்தால் சுத்தனுவான். மற்ற விதத்தால் சுத்தியில்லை. அவளின் பர்த்தா அவளைத் தள்ளி மூன்று சாந்த்ராயணத்தை அனுஷ்டிக்கவேண்டும். அவனுக்குப் புநருபநயனம் செய்யவேண்டும். அவன் முன்போல் சுத்தியை யடைவான். அந்தப் பெண் முன் பர்த்தாவையும், பிந்திய பர்த்தாவையும் விட்டுவிட்டுச் சாந்த்ராயணக்ருச்ரத்தை யனுஷ்டிக்கவேண்டும். புத்ரனுண்டாகிவிட்டால், அந்தப் புத்ரர்களையும் அவளையும் த்யாகம் செய்யவேண்டும்.

## ஸகோத்ரை முதலியவர்களின் விவாஹத்தில் ப்ராயஶ்சித்தம்.

**போதாயனர்:**— ஸகோத்ரையான பெண்ணை அறியாமையால் விவாஹம் செய்துகொண்டால், அந்தப் பெண்ணை மாதாவைப்

यात् । प्रजाता चेत् कृच्छ्राब्दपादं चरित्वा 'यन्म आत्मनो मिन्दाऽभूत्', 'पुनरग्निश्चक्षुरदात्' इत्येताभ्यां जुहुयात्' इति ॥

कल्पसारे —

'सगोत्रां समोढ्वा चेन्मातृवत्परिपालयेत्ताम् । चान्द्रायणं चरित्वाऽन्यामुद्वहेत कन्यकाम् ॥ कृच्छ्राब्दपादं कुर्वीत प्रजाता यदि सा भवेत् । मिन्दाहुती च जुहुयात्तस्यामेव चरितव्रतः ॥ तस्यां प्रसूतो निर्दोषः काश्यपो गोत्रतः स्मृतः । ज्ञात्वा चेदुद्वहेत्तां तु गुरुतल्पव्रतं चरेत् ॥ तस्यां प्रसूतश्चण्डालः सर्वकर्मबहिष्कृतः' इति ॥

स्मृत्यर्थसारे —

'यदि कश्चिज्ज्ञानतस्तां कन्यामुद्वहति । गुरुतल्पव्रताच्छुध्येत् । सहैव तज्जातं व्रजेत् । सोमत

போல் போஷிக்கவேண்டும். அவள் புத்ரனைப் பெற்றால், அப்த க்ருச்ரத்தின் நாலில் ஒரு பாகத்தை யனுஷ்டித்து, 'யந்ம ஆத்மந:'. 'புநரக்நி:' என்ற இந்த இரண்டு மந்த்ரங்களால் ஹோமம் செய்ய வேண்டும்.

**கல்பஸாரத்தில்:—** ஸகோத்ரையான பெண் அறியாமையால் விவாஹம் செய்யப்பட்டால், அவளைத் தாயைப்போல் போஷிக்க வேண்டும். சாந்த்ராயண க்ருச்ரத்தை யனுஷ்டித்து வேறு பெண்ணை மணக்கவேண்டும். அந்த ஸகோத்ரை புத்ரனைப் பெற்றிருந்தால், அப்தக்ருச்ரத்தின் கால்பாகத்தை யனுஷ்டிக்கவேண்டும். ப்ராயச்சித்தத்தை யனுஷ்டித்த பிறகு இரண்டு மிந்தாஹுதிகளைச் செய்யவேண்டும். அவளிடம் பிறந்த பிள்ளை தோஷமற்றவன். அவன் காச்யபகோத்ரன் என்று சொல்லப்படுகிறான். அறிந்தே விவாஹம் செய்யப்பட்டால், அதுவிஷயத்தில் குருதல்ப ப்ராயச்சித்தத்தை யனுஷ்டிக்கவேண்டும். அவளிடத்தில் பிறந்தவன் சண்டாளனாவான். எல்லாக் கர்மங்களுக்கும் அனர்ஹனாவான்.

**ஸ்ம்ருத்யர்த்த ஸாரத்தில்:—** புத்தி பூர்வமாய் ஸகோத்ரையை மணந்து, அவளிடம் ஸம்பர்க்கம் செய்தால், அவன் குருதல்ப கமனப்ராயச்சித்தத்தால் சுத்தனாவான். அவனுக்குப் பிறந்த ப்ரஜை

𑌸𑍍𑌤𑌾𑌂 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌯 𑌪𑌾𑌲𑌯𑍇𑌜𑍍𑌜𑌨𑌨𑍀𑌮𑌿𑌵 । 𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑍍𑌗𑌚𑍍𑌛𑍇𑌤𑍍𑌤𑍁 𑌚𑍇𑌨 𑌶𑌾𑌨𑍍𑌤𑌂 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑍇𑌣 𑌕𑌾𑌶𑍍𑌯𑌪𑌃' 𑌇𑌤𑌿 ॥

𑌶𑌾𑌤𑌾𑌤𑌪𑌃—

'𑌸𑌮𑌾𑌨𑌪𑍍𑌰𑌵𑌰𑌾𑌂 𑌕𑌨𑍍𑌯𑌾𑌂 𑌸𑌗𑍋𑌤𑍍𑌰𑌾𑌂 𑌚𑍈𑌵𑌮𑍁𑌦𑍍𑌵𑌹𑍇𑌤𑍍 । 𑌉𑌤𑍍𑌸𑍃𑌜𑍍𑌯 𑌤𑌾𑌂 𑌤𑌤𑍋 𑌭𑌾𑌰𑍍𑌯𑌾𑌂 𑌮𑌾𑌤𑍃𑌵𑌤𑍍 𑌪𑌰𑌿𑌪𑌾𑌲𑌯𑍇𑌤𑍍 ॥ 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌤𑌸𑍍𑌯𑌾𑌂 𑌸𑌂𑌗𑌮𑍇𑌽𑌤𑌿𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌂 𑌵𑌿𑌶𑍋𑌧𑌨𑌮𑍍' 𑌇𑌤𑌿 ॥

𑌦𑍇𑌵𑌲𑌃—

'𑌸𑌮𑌾𑌨𑌗𑍋𑌤𑍍𑌰𑌜𑌾𑌂 𑌚𑍈𑌵 𑌸𑌮𑌾𑌨𑌪𑍍𑌰𑌵𑌰𑌾𑌂 𑌤𑌥𑌾 । 𑌯𑌦𑌿 𑌪𑍁𑌷𑍍𑌪𑌵𑌤𑍀𑌂 𑌗𑌚𑍍𑌛𑍇𑌨𑍍𑌮𑍋𑌹𑌾𑌤𑍍 𑌕𑌾𑌮𑌾𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌸𑌃 ॥ 𑌮𑌾𑌤𑍃𑌗𑌾𑌮𑍀 𑌸 𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌬𑌹𑌿𑌷𑍍𑌕𑍃𑌤𑌃 । 𑌗𑍁𑌰𑍁𑌤𑌲𑍍𑌪𑌵𑍍𑌰𑌤𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌶𑌿𑌶𑍍𑌨𑌚𑍍𑌛𑍇𑌦𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌮𑍍 ॥ 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾 𑌜𑌾𑌤𑌾𑌸𑍍𑌤𑌯𑍋𑌃 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌶𑍍𑌚𑌾𑌣𑍍𑌡𑌾𑌲𑌤𑍍𑌵𑌮𑌵𑌾𑌪𑍍𑌨𑍁𑌯𑍁𑌃' 𑌇𑌤𑌿 ॥

𑌪𑌰𑌿𑌵𑌿𑌤𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑍇𑌃 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍍 ॥

𑌪𑌰𑌿𑌵𑌿𑌤𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑍇𑌃 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑌾𑌹 𑌪𑌰𑌾𑌶𑌰𑌃—

---

சண்டாளனாவான். ஆகையால் அவளைப் போகவிஷயத்தில் தள்ளி மாதாவைப்போல் காப்பாற்றவேண்டும். அறியாமையால் நேர்ந்தால் சாந்த்ராயணத்தால் சுத்தனாவான். அவளுக்குப் பிறந்த பிள்ளை காச்யபகோத்ரனாவான்.

**சாதாதபர்:—** ஸமான ப்ரவரமுடையவளையும், ஸகோத்ரை யையும் விவாகம் செய்துகொண்டால், அவளை விட்டு விட்டு, அவளைத் தாயைப்போல் காப்பாற்றவேண்டும். அவளிடத்தில் சேர்ந்தால் அதிக்ருச்ரம் ப்ராயச்சித்தம்.

**தேவலர்:—** ஸகோத்ரையையும், ஸமானப்ரவரமுள்ளவளையும் விவாஹம் செய்துகொண்டால், அவள் புஷ்பவதியான பிறகு அவ ளுடன் ஒரு தடவை சேர்ந்தால், அவன் மாதாவைச் சேர்ந்தவன், என்று அறியத்தகுந்தவன். அவன் எல்லாக்கர்மங்களின்றும் வெளி யாக்கப்பட்டவன். ஆண் குறியைச் சேதிப்பதைத் தவிர்த்து, குருதல்ப கமன ப்ராயச்சித்தத்தை யனுஷ்டிக்கவேண்டும். புத்ரர் கள் பிறந்தால் அவர்கள் சண்டாளத்தன்மையை யடைவார்கள்.

**பரிவித்தி முதலியவர்களுக்கு ப்ராயச்சித்தம்.**

**பராசரர்:—**"பரிவித்தி, பரிவேத்தா, அந்தப் பெண், பெண்ணைக்

"𑌪𑌰𑌿𑌵𑌿𑌤𑍍𑌤𑌿𑌃 𑌪𑌰𑌿𑌵𑍇𑌤𑍍𑌤𑌾 𑌯𑌯𑌾 𑌚 𑌪𑌰𑌿𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 । 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌤𑍇 𑌨𑌰𑌕𑌂 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌦𑌾𑌤𑍃𑌯𑌾𑌜𑌕𑌪𑌞𑍍𑌚𑌮𑌾𑌃 ॥ 𑌅𑌤𑍍𑌰 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌂 𑌪𑌰𑌿𑌵𑌿𑌤𑍍𑌤𑍇𑌃 𑌕𑌨𑍍𑌯𑌾𑌯𑌾𑌃 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰 𑌏𑌵 𑌚 । 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌾𑌤𑌿𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑍌 𑌦𑌾𑌤𑍁𑌶𑍍𑌚 𑌹𑍋𑌤𑌾 𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌂 𑌚𑌰𑍇𑌤𑍍" 𑌇𑌤𑌿 ॥ 𑌯𑌤𑍍𑌰 𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑍋 𑌨𑍋𑌦𑍍𑌵𑌹𑌤𑌿, 𑌕𑌨𑌿𑌷𑍍𑌠𑌶𑍍𑌚𑍋𑌦𑍍𑌵𑌹𑌤𑌿, 𑌤𑌤𑍍𑌰 𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌃 𑌪𑌰𑌿𑌵𑌿𑌤𑍍𑌤𑌿𑌃 । 𑌕𑌨𑌿𑌷𑍍𑌠𑌃 𑌪𑌰𑌿𑌵𑍇𑌤𑍍𑌤𑌾, 𑌕𑌨𑍍𑌯𑌾 𑌪𑌰𑌿𑌵𑍇𑌦𑌿𑌨𑍀 । 𑌤𑌸𑍍𑌯𑌾𑌃 𑌪𑌿𑌤𑍍𑌰𑌾𑌦𑌿𑌃 𑌦𑌾𑌤𑌾, 𑌯𑌾𑌜𑌕𑌃 = 𑌵𑌿𑌵𑌾𑌹𑌹𑍋𑌮𑌸𑍍𑌯 𑌕𑌾𑌰𑌯𑌿𑌤𑌾 । 𑌅𑌤𑍍𑌰 𑌪𑌰𑌿𑌵𑌿𑌤𑍍𑌤𑍇𑌃 𑌪𑌰𑌿𑌵𑍇𑌤𑍍𑌤𑍁𑌶𑍍𑌚 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍍 । 𑌯𑌤𑍍𑌰 𑌕𑍁𑌬𑍍𑌜𑌾𑌦𑌿𑌵𑌿𑌷𑌯𑌵𑌿𑌶𑍇𑌷𑍇 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑍍𑌰𑌸𑌵𑌵𑌾𑌦𑌾 𑌉𑌕𑍍𑌤𑌾𑌃, 𑌨 𑌤𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌪𑍇𑌕𑍍𑌷𑌾 ॥

𑌬𑍋𑌧𑌾𑌯𑌨𑌃 --

"𑌪𑌰𑌿𑌵𑌿𑌤𑍍𑌤𑌿𑌃 𑌪𑌰𑌿𑌵𑍇𑌤𑍍𑌤𑌾 𑌦𑌾𑌤𑌾 𑌯𑌶𑍍𑌚𑌾𑌪𑌿 𑌯𑌾𑌜𑌕𑌃 । 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌰𑌾𑌤𑍍𑌰𑍇𑌣 𑌤𑍍𑌰𑌿𑌰𑌾𑌤𑍍𑌰𑍇𑌣 𑌵𑌿𑌶𑍁𑌧𑍍𑌯𑌤𑌿" 𑌇𑌤𑌿 ॥

---

கொடுத்தவன், ஹோமத்தைச் செய்வித்தவன் இவ்வைந்துபேரும் நரகத்தையடைகின்றனர். பரிவித்தி பரிவேத்தா இருவருக்கும் இரண்டு க்ருச்ரம் ப்ராயச்சித்தம். கந்யகைக்கு ஒரு க்ருச்ரம். பெண்ணைக் கொடுத்தவனுக்கு க்ருச்ராதி க்ருச்ரம். ஹோமம் செய்வித்தவனுக்குச் சாந்த்ராயணம் ப்ராயச்சித்தம்," என்று. தமயனுக்கு விவாஹமாகாமலிருக்க, கனிஷ்டன் விவாஹம் செய்து கொண்டால், அவர்களுள் மூத்தவன் பரிவித்தி, கனிஷ்டன் பரிவேத்தா. அந்தப் பெண் பரிவேதினீ. கொடுத்தவன் என்பது அந்தப்பெண்ணைத் தானம் செய்த பிதா முதலியவன். யாஜகன் = விவாஹ ஹோமத்தைச் செய்வித்தவன். இவ்விஷயத்தில் ஜ்யேஷ்டனுக்கும் கனிஷ்டனுக்கும் இரண்டு க்ருச்ரங்கள். எந்த விஷயத்தில் கூனன் முதலியவரின் விஷயத்தில் விசேஷம் சொல்லி மறுப்புச் சொல்லப்பட்டுள்ளதோ அவ்விஷயத்தில் ப்ராயச்சித்தம் வேண்டுவதில்லை.

**போதாயனரோ** வெனில்:— பரிவித்தி, பரிவேத்தா, பெண்ணைக்கொடுத்தவன், ஹோமம் செய்வித்தவன் இவர்கள் பன்னிரண்டுநாள் அனுஷ்டிக்கவேண்டிய ப்ராஜாபத்ய க்ருச்ரத்தாலும், மூன்று நாள் க்ருச்ரத்தாலும் சுத்தராகின்றனர்.

ஶங்கலிகிதௌ —

'பரிவித்தி: பரிவேத்தா ச ஸம்வத்ஸரம் ப்ராஹ்மணக்ருஹேஷு பைக்ஷம் சரேயாதாம்' இதி ॥ அத்ர ஜ்ஞாதாஜ்ஞாதபேதேந ப்ராயஶ்சித்ததாரதம்யவ்யவஸ்தா ॥

ப்ராயஶ்சித்தாநந்தரம் பரிவேத்து: கர்தவ்யமாஹ வஸிஷ்ட: —

'பரிவிவிதாந: க்ருச்ச்ராதிக்ருச்ச்ரௌ சரித்வா தஸ்மை தத்வா புநஸ்தாமேவோபயச்சேத' இதி ॥

தஸ்மை ஜ்யேஷ்டாய நிவேத்ய புநஸ்தாமேவோத்வஹேதித்யர்த்த: ॥ அயமேவ ந்யாயோ வ்யத்யாஸக்ருதே ஆதாநே பகிநீவிவாஹவ்யத்யாஸக்ருதே ச போத்தவ்ய இதி மாதவீயே ॥

உஷ்ட்ராதியுக்தயாநாரோஹணே ப்ராயஶ்சித்தம் ॥

---

உஷ்ட்ராதியுக்தஶகடாத்யாரோஹணே ப்ராயஶ்சித்தமாஹ மநு: —

---

**சங்கலிகிதர்கள்:—** "பரிவித்தி, பரிவேத்தா இருவரும் ஒரு வர்ஷம் முழுவதும் ப்ராஹ்மணர்களுடைய வீட்டில் பிக்ஷை வாங்க வேண்டும்," என்று.

இவ்விஷயத்தில் அறிந்து செய்தது, அறியாமல் செய்தது என்ற பேதத்தைக்கொண்டு ப்ராயச்சித்தங்களின் தாரதம்யத்துக்கு வ்யவஸ்தை யறியத்தக்கது.

ப்ராயச்சித்தம் செய்துகொண்ட பிறகு பரிவேத்தா செய்ய வேண்டியதைச் சொல்லுகிறார்,

**வஸிஷ்டர்:—** "பரிவேத்தா க்ருச்ராதி க்ருச்ரத்தை யனுஷ்டித்து ஜ்யேஷ்டனுக்குக் கொடுத்து, மறுபடியும் அந்தப் பெண்ணையே விவாஹம் செய்துகொள்ளவேண்டும்," என்று,

ஜ்யேஷ்டனுக்குத் தெரிவித்து, மறுபடி அவளையே விவாஹம் செய்து கொள்ளவேண்டும்," என்பது பொருள். இந்த ந்யாயமே மாற்றிச் செய்யப்பட்ட ஆதானத்திலும், தங்கை தமக்கைகளுக்கு மாறிச் செய்த விவாஹ விஷயத்திலும் அறியத்தக்கது, என்று மாதவீயத்திலுள்ளது.

## ஒட்டகை முதலியதுடன் கூடிய வாஹனத்தில் ஏறியதற்கு ப்ராயஸ்சித்தம்.

ஒட்டகை முதலியதுடன் கூடிய வண்டி முதலியதில் ஏறியதற்கு ப்ராயஸ்சித்தம் சொல்லுகிறார்,

"उष्ट्रयानं समारुह्य खरयानं च कामतः। स्नात्वा च विप्रो दिग्वासाः प्राणायामेन शुध्यति" इति ॥

याज्ञवल्क्यः—

"प्राणायामी जले स्नात्वा खरयानोष्ट्रयानगः। नग्नः स्नात्वा च सुप्त्वा च गत्वा चैव दिवा स्त्रियम्" इति ॥

खराद्यारोहणे प्रायश्चित्तम् ॥

---

खराद्यारोहणे प्रायश्चित्तमाह मार्कण्डेयः—

"खरमारुह्य विप्रस्तु योजनं यदि गच्छति । तप्तकृच्छ्रत्रयं कृत्वा शुद्धिमाप्नोति वै द्विजः ॥ उष्ट्रं च महिषं चैव ह्यनड्वाहं द्विजस्सकृत् । आरुह्य योजनं गच्छेत् प्राजापत्यमुदीरितम् ॥ अजं मेषं तथाऽऽरुह्य योजनं यदि गच्छति । तत्र सान्तपनं कृच्छ्रं शरीरस्य विशोधनम् ॥ पादः कृच्छ्रं प्रकुर्वीत तेन शुध्येन्न संशयः" इति ॥ पादःकृच्छ्रं = पादप्राजापत्यम् ॥

---

**மனு:—** ஒட்டகையுடன் கூடிய வாஹனத்திலும், கழுதையுடன் கூடிய வாஹனத்திலும், ப்ராம்ஹணன் புத்தி பூர்வமாய் ஏறினாலும், வஸ்த்ரமில்லாமல் ஸ்நானம் செய்தாலும், ப்ராணாயாமத்தால் சுத்தனாகிறான்.

**யாஜ்ஞவல்க்யர்:—** கழுதை ஒட்டகை கூடிய வண்டிகளில் ஏறினாலும், வஸ்த்ரமில்லாமல் ஸ்நானம் போஜனம் செய்தாலும், பகலில் ஸ்த்ரீ ஸங்கம் செய்தாலும், ப்ராணாயாமத்துடன் ஜலத்தில் ஸ்நானம் செய்து சுத்தனாகிறான்.

## கழுதை முதலியதில் ஏறினால் பிராயஸ்ச்சித்தம்.

**மார்க்கண்டேயர்:—** ப்ராம்ஹணன் கழுதையின்மேலேறி ஒரு யோஜனை தூரம் சென்றால், மூன்று தப்த க்ருச்ரத்தைச் செய்தால் சுத்தனாவான். ப்ராம்ஹணன் ஒட்டகை, எருமைக்கடா, எருது இவைகளில் ஒரு முறை ஏறி ஒரு யோஜனை தூரம் சென்றால், ப்ராஜாபத்ய க்ருச்ரம் ப்ராயச்சித்தமாகச் சொல்லப்பட்டுள்ளது. வெள்ளாடு செம்மறியாடு இவைகளில் ஏறி ஒரு யோஜனை தூரம் சென்றால், அவ்விஷயத்தில சரீர சுத்திக்காக ஸாந்தபன க்ருச்ரம்

## 𑌕𑌾𑌰𑌾𑌗𑍃𑌹𑌵𑌾𑌸𑍇 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍍 ॥

𑌕𑌾𑌰𑌾𑌗𑍃𑌹𑌵𑌾𑌸𑍇 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑌾𑌹 𑌗𑍌𑌤𑌮𑌃—

'𑌬𑌲𑌾𑌨𑍍𑌮𑍍𑌲𑍇𑌚𑍍𑌛𑌚𑌣𑍍𑌡𑌾𑌲𑌤𑌸𑍍𑌕𑌰𑍈𑌃 । 𑌕𑌾𑌰𑌾𑌗𑍃𑌹𑍇 𑌮𑌾𑌸𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌉𑌷𑌿𑌤𑍍𑌵𑌾 𑌕𑌾𑌯𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 ॥ 𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌂 𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌚 𑌸𑌂𑌵𑌤𑍍𑌸𑌰𑍋𑌷𑌿𑌤𑌃' 𑌇𑌤𑌿 ॥

𑌯𑌮𑌃—

𑌕𑌾𑌰𑌾𑌗𑍃𑌹𑌾𑌦𑍍𑌵𑌿𑌨𑌿𑌰𑍍𑌮𑍁𑌕𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌯𑌥𑍋𑌦𑌿𑌤𑌮𑍍 । 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌵𑌿𑌪𑍍𑌰𑌃 𑌪𑍁𑌨𑌃 𑌕𑌰𑍍𑌮 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌵𑌾𑌪𑍍𑌨𑍁𑌯𑌾𑌤𑍍 ॥ 𑌬𑌲𑌾𑌤𑍍𑌬𑌨𑍍𑌦𑍀𑌕𑍃𑌤𑌾 𑌨𑌾𑌰𑍀 𑌤𑌤𑍍𑌰𑍈𑌵 𑌨𑌿𑌵𑌸𑍇𑌦𑍍𑌯𑌦𑌿 । 𑌪𑌕𑍍𑌷𑌂 𑌮𑌾𑌸𑌮𑍃𑌤𑍁𑌂 𑌵𑌾𑌪𑌿 𑌸𑌂𑌵𑌤𑍍𑌸𑌰𑌮𑌥𑌾𑌪𑌿 𑌵𑌾 ॥ 𑌷𑌷𑍍𑌟𑌿𑌭𑌿𑌰𑍍𑌮𑍃𑌤𑍍𑌤𑌿𑌕𑌾𑌭𑌿𑌶𑍍𑌚 𑌕𑍃𑌤𑌶𑍌𑌚𑌂 𑌸𑌮𑌾𑌹𑌿𑌤𑌮𑍍 । 𑌕𑌾𑌰𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌵𑌿𑌧𑌾𑌨𑍇𑌨 𑌸𑍍𑌨𑌾𑌪𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌨𑌦𑍀𑌜𑌲𑍈𑌃 ॥ 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑌦𑍍𑌵𑌿𑌪𑍍𑌰𑌃 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑌨𑍁𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 । 𑌅𑌰𑍍𑌧𑍋𑌕𑍍𑌤𑌂 𑌤𑍁 𑌤𑌤𑍍𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌣𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌯

---

ப்ராயச்சித்தமாகச் சொல்லப்பட்டுள்ளது. புனருபநயனமும் செய்து கொள்ள வேண்டும். அதனால் சுத்தனுவான். ஸம்சயமில்லை.

### சிறைச்சாலையில் வஸித்ததற்கு ப்ராயச்சித்தம்.

**கௌதமர்:—** எவன் பலாத்காரமாய் ம்லேச்சன், சண்டாளன், திருடன் இவர்களால் பிடிக்கப்பட்டு, சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு, ஒரு மாஸம் வரையில் வஸித்தானே, அவன் ஒரு ப்ராஜாபத்யக்ருச்ரத்தை யனுஷ்டிக்கவேண்டும். ஒரு வர்ஷம் இருந்தால், ப்ராஜாபத்ய க்ருச்ரமும், சாந்த்ராயணமும் அனுஷ்டிக்கவேண்டும்.

**யமன்:—** சிறைச்சாலையிலிருந்து வெளிவந்து விதிப்படி ப்ராயச்சித்தத்தைச் செய்துகொண்டு, மறுபடி உபநயனம் செய்து கொண்டால் ப்ராம்ஹணன் சுத்தனாகிறான். பலாத்காரமாய்ச் சிறைச்சாலையிலடைக்கப்பட்ட ஸ்த்ரீ அங்கேயே வஸித்தால், ஒரு பக்ஷம், ஒரு மாஸம், ஒரு ருது (இரண்டு மாஸம்), ஒரு வர்ஷம் வரையில் இருந்தால், அப்பொழுது அவளின் புருஷன் அறுபது தடவை மண்களால் க்ருதசௌசம் செய்வித்து, விதிப்படி நதீ ஜலங்களால் ஸ்நானம் செய்வித்து, முன்போல் க்ரமமாய் ப்ராயச்சித்தத்தைச் செய்விக்கவேண்டும். இவ்விஷயத்தில் ஸ்த்ரீகளுக்கு

𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ॥ 𑌤𑌸𑍍𑌯𑌾 𑌦𑍋𑌷𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌸𑍍𑌸𑍍𑌯𑌾𑌜𑍍𑌜𑌨𑌵𑌾𑌦𑍋 𑌨 𑌹𑍀𑌯𑌤𑍇 । 𑌅𑌤𑌸𑍍𑌤𑌾𑌂 𑌰𑌕𑍍𑌷𑌣𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌸𑌂𑌸𑌰𑍍𑌗𑌾𑌦𑍀𑌨𑍍 𑌨 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 ॥ 𑌤𑌤𑍍𑌰𑍈𑌵 𑌗𑌰𑍍𑌭𑌸𑌂𑌭𑍂𑌤𑍌 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌾𑌗𑍋 𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑍇' 𑌇𑌤𑌿 ॥

𑌕𑍁𑌗𑍍𑌰𑌾𑌮𑌵𑌾𑌸𑍇 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍍 ॥

𑌕𑍁𑌗𑍍𑌰𑌾𑌮𑌵𑌾𑌸𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑍇 𑌆𑌹 𑌮𑌰𑍀𑌚𑌿𑌃—

'𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌿𑌯𑌸𑍍 𑌤𑌟𑌾𑌕𑌾𑌦𑌿𑌸𑍍𑌤𑍃𑌣𑌂 𑌪𑌰𑍍𑌣𑌂 𑌤𑌥𑍇𑌨𑍍𑌧𑌨𑌮𑍍 । 𑌬𑌾𑌨𑍍𑌧𑌵𑌾𑌃 𑌸𑌕𑍁𑌲𑍀𑌨𑌾𑌶𑍍𑌚 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌚𑍈𑌵𑍋𑌪𑌕𑌾𑌰𑌿𑌣𑍀 ॥ 𑌨 𑌸𑌨𑍍𑌤𑌿 𑌯𑌤𑍍𑌰 𑌗𑍍𑌰𑌾𑌮𑍇 𑌤𑍁 𑌸 𑌕𑍁𑌗𑍍𑌰𑌾𑌮 𑌇𑌤𑌿 𑌸𑍍𑌮𑍃𑌤𑌃 । 𑌤𑌤𑍍𑌰 𑌗𑍍𑌰𑌾𑌮𑍇 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋 𑌯𑌸𑍍𑌤𑍁 𑌹𑌵𑍍𑌯𑌕𑌵𑍍𑌯𑌪𑌰𑌾𑌙𑍍𑌮𑍁𑌖𑌃 ॥ 𑌏𑌕𑌤𑍍𑌰 𑌦𑌿𑌵𑌸𑍇 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌮𑌹𑌾𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌂 𑌚𑌰𑍇𑌤𑍍' 𑌇𑌤𑌿 ॥

𑌦𑍁𑌰𑍍𑌦𑍇𑌶𑌗𑌮𑌨𑍇 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍍 ॥

𑌦𑍁𑌰𑍍𑌦𑍇𑌶𑌗𑌮𑌨𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑍇 𑌆𑌹 𑌬𑍋𑌧𑌾𑌯𑌨𑌃—

'𑌸𑌿𑌨𑍍𑌧𑍁𑌸𑍌𑌵𑍀𑌰𑌸𑍌𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌂𑌸𑍍𑌤𑌥𑌾 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌵𑌾𑌸𑌿𑌨𑌃 ।

---

முன் சொல்லிய ப்ராயஶ்சித்தத்தில் பாதி ப்ராயஶ்சித்தம் என்று சொல்லப்பட்டுள்ளது. அவளுக்குப் பாபம் விலகும். ஆனாலும் ஜனங்களின் அபவாதம் குறையாது. ஆகையால் அவளைக் காப்பாற்ற வேண்டும். அவளுடன் சேர்க்கை முதலியதைச் செய்யக்கூடாது. அங்கேயே கர்ப்பம் உண்டாகிவிட்டால் அவளைப் பரித்யாகம் செய்ய வேண்டும்.

## குக்ராமத்தில் வஸிப்பதற்கு ப்ராயஶ்சித்தம்.

**மரீசி:—** வேதாத்யயனம் செய்தவன், குளம் முதலியது, புல், இலை, விறகு, பந்துக்கள், தன் குலத்தில் பிறந்தவர்கள், உபகரிக்கும் வித்யை என்ற இவைகள் எந்த க்ராமத்தில் இல்லையோ, அந்த க்ராமம் குக்ராமம் எனப்படுகிறது. அந்த க்ராமத்தில் எந்த ப்ராம்ஹணன் தேவ பித்ரு கார்யங்களில் நோக்கமில்லாதவனாக ஒரு நாள் வஸிக்கிறானோ அவன் மஹாசாந்த்ராயணத்தை யனுஷ்டிக்கவேண்டும்.

## துர்தேசங்களுக்குச் சென்றால் ப்ராயஶ்சித்தம்.

**போதாயனர்:—** ஸிந்து, ஸௌவீரம், ஸௌராஷ்ட்ரம்,

अङ्गवङ्गकलिङ्गांश्च गत्वा संस्कारमर्हति' इति ॥ प्रत्यन्तवासिनः = चण्डालादि वासप्रदेशान् ॥

बोधायनः—

'पद्भ्यां स कुरुते पापं यः कलिङ्गान् प्रपद्यते । ऋषयो निष्कृतिं तस्य प्राहुर्वैश्वानरं हविः' इति ॥

श्वसृगालादिदंशने प्रायश्चित्तम् ॥

श्वादिदंशे प्रायश्चित्तमाह याज्ञवल्क्यः—

'पुंश्चली वानरखरैर्दष्टश्चोष्ट्रादिवायसैः । प्राणायामं जले कृत्वा घृतं प्राश्य विशुध्यति' इति ॥

मनुः—

'श्वसृगालखरैर्दष्टो ग्राम्यैः क्रव्याद्भिरेव च । नराश्वोष्ट्रवराहैश्च प्राणायामेन शुध्यति' इति ॥ अत्र नदीस्नानादेरप्युपलक्षणम् ॥

---

சண்டாளாதிகள் வஸிக்கும் ப்ரதேசங்கள், அங்கம், வங்கம், களிங்கம், இந்தத் தேசங்களுக்குச் சென்றால் புனருபநயனம் செய்துகொள்ள வேண்டும்.

**போதாயனர்:**— எவன் களிங்கதேசத்தை யடைகின்றானோ அவன் கால்களால் பாபம் செய்கிறான். அவனுக்கு வைச்வாநர ஹவிஸ்ஸினால் செய்யும் யாகத்தை ப்ராயஸ்சித்தமாக ருஷிகள் சொல்லுகின்றனர்.

## நாய் நரி முதலியவை கடித்தால் ப்ராயஸ்சித்தம்.

**யாஜ்ஞவல்க்யர்:**— வ்யபிசாரிணீ, குரங்கு, கழுதை, நாய், ஒட்டகை முதலியது, காக்கை இவைகளால் கடிக்கப்பட்டவன் ஜலத்தில் மூழ்கி, ப்ராணாயாமம் செய்து, நெய்யைப் பருகினால் சுத்தனாகிறான்.

**மனு:**— நாய், நரி, கழுதை க்ராமத்தில் உள்ள மாம்ஸத்தைப் பக்ஷிக்கும் பக்ஷிகள், மனிதன், குதிரை, ஒட்டகை, பன்றி இவைகளால் கடிக்கப்பட்டவன் ப்ராணாயாமம் செய்வதால் சுத்தனாகிறான்.

ப்ராணாயாமம் என்றது நதீ ஸ்நானம் முதலியதையும் சொல்லுகின்றது. அவ்விதமே,

𑌤𑌥𑌾 𑌚 𑌬𑍋𑌧𑌾𑌯𑌨𑌃—

'𑌶𑍁𑌨𑌾 𑌦𑌷𑍍𑌟𑌸𑍍𑌤𑍁 𑌯𑍋 𑌵𑌿𑌪𑍍𑌰𑍋 𑌨𑌦𑍀𑌂 𑌗𑌤𑍍𑌵𑌾 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌗𑌾𑌮𑍍 । 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌯𑌾𑌮𑌶𑌤𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌘𑍃𑌤𑌂 𑌪𑍍𑌰𑌾𑌶𑍍𑌯 𑌵𑌿𑌶𑍁𑌧𑍍𑌯𑌤𑌿 ॥ 𑌸𑍁𑌵𑌰𑍍𑌣𑌰𑌜𑌤𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌵𑌾 𑌗𑌵𑌾𑌂 𑌶𑍃𑌙𑍍𑌗𑍋𑌦𑌕𑍇𑌨 𑌵𑌾 । 𑌨𑌵𑍈𑌰𑍍𑌵𑌾 𑌕𑌲𑌶𑍈𑌃 𑌸𑍍𑌨𑌾𑌤𑍍𑌵𑌾 𑌸𑌦𑍍𑌯𑌶𑍍𑌶𑍁𑌚𑌿𑌰𑍍𑌭𑌵𑍇𑌤𑍍' 𑌇𑌤𑌿 ॥

𑌹𑌾𑌰𑍀𑌤𑌃—

'𑌶𑍍𑌵𑌾𑌨𑍋 𑌵𑌾 𑌕𑍍𑌰𑍋𑌷𑍍𑌟𑍁𑌕𑍋 𑌵𑌾𑌪𑌿 𑌨𑌾𑌰𑍀 𑌵𑌾 𑌯𑌦𑌿 𑌵𑌾 𑌨𑌰𑌃 । 𑌆𑌖𑍁 𑌨𑌕𑍁𑌲𑌮𑌾𑌰𑍍𑌜𑌾𑌰 𑌵𑌾𑌯𑌸 𑌗𑍍𑌰𑌾𑌮𑍍𑌯 𑌸𑍂𑌕𑌰𑌾𑌃 ॥ 𑌸𑌨𑍍𑌦𑌷𑍍𑌟𑍇 𑌦𑍍𑌵𑌿𑌜𑌸𑍍𑌯𑌾𑌙𑍍𑌗𑍇 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌕𑌥𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 । 𑌸𑍍𑌨𑌾𑌨𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌸𑌚𑍇𑌲𑌂 𑌤𑍁 𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌮𑌨𑍁𑌶𑌾𑌸𑌨𑌾𑌤𑍍 ॥ 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌷𑌣𑍀𑌭𑌿𑌸𑍍𑌤𑌿𑌸𑍃𑌭𑌿𑌃 𑌕𑌾𑌰𑌯𑍇𑌨𑍍𑌮𑌾𑌰𑍍𑌜𑌨𑌂 𑌦𑍍𑌵𑌿𑌜𑌃 । 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌯𑌾𑌮𑌤𑍍𑌰𑌯𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑍍𑌦𑌦𑍍𑌯𑌾𑌦𑍍𑌗𑍋𑌭𑍍𑌯𑌸𑍍𑌤𑍃𑌣𑌂 𑌨𑌰𑌃 ॥ 𑌸𑌹 𑌵𑌿𑌪𑍍𑌰𑍈𑌸𑍍𑌤𑍁 𑌭𑍁𑌕𑍍𑌤𑍇𑌨 𑌶𑍁𑌧𑍍𑌯𑌤𑍇 𑌨𑌾𑌤𑍍𑌰 𑌸𑌂𑌶𑌯𑌃' 𑌇𑌤𑌿 ॥

𑌅𑌙𑍍𑌗𑌿𑌰𑌾𑌃—

'𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌾𑌰𑍀 𑌶𑍁𑌨𑌾 𑌦𑌷𑍍𑌟𑌸𑍍𑌤𑍍𑌰𑍍𑌯𑌹𑌂 𑌸𑌾𑌯𑌂 𑌪𑌯𑌃 𑌪𑌿𑌬𑍇𑌤𑍍 ।

---

**போதாயனர்:**—எந்த ப்ராம்ஹணன் நாயால் கடிக்கப்பட்டானே அவன் ஸமுத்ரகாமினியான நதியை யடைந்து, (ஸ்நானம் செய்து) நூறு ப்ராணாயாமம் செய்து, நெய்யைப் பருகினல் சுத்தனுகிறுன். அல்லது தங்கம் வெள்ளி இவைகளுடன் கூடிய ஜலத்தினுலாவது, பசுக்களின் கொம்பிலிருந்து விழும் ஜலத்தினுலாவது, புதிதான கலசங்களினுல் விடப்பட்ட ஜலத்தினுலாவது ஸ்நானம் செய்தால் அப்பொழுதே சுத்தனுகிறுன்.

**ஹாரீதர்:**— நாய், நரி, ஸ்த்ரீ, மனிதன், எலி, கீரி, பூனே, காக்கை, க்ராமப் பன்றி, இவைகளால் ப்ராம்ஹணனின் தேஹம் கடிக்கப்பட்டால் அவனுக்கு ப்ராயஶ்சித்தம் எப்படி? அவன் ப்ராம்ஹணர்களின் அனுஜ்ஞையினுல் ஸசேல ஸ்நானம் செய்து, மூன்று ப்ரோக்ஷணீ மந்த்ரங்களால் ப்ரோக்ஷணம் செய்து கொள்ள வேண்டும். மூன்று ப்ராணுயாமம் செய்யவேண்டும். பசுக்களுக்குப் புல்லைக் கொடுக்கவேண்டும். ப்ராம்ஹணர்களுடன் புஜித்தால் சுத்தனுகிறுன். ஸம்ஶயமில்லை.

**அங்கிரஸ்:**— ப்ரம்ஹசாரீ நாயால் கடிக்கப்பட்டால் மூன்று நாள் வரையில் இரவில் பாலைமட்டில் பருகவேண்டும். க்ருஹஸ்த

𑌗𑍃𑌹𑌸𑍍𑌥𑌸𑍍𑌯 𑌦𑍍𑌵𑌿𑌰𑌾𑌤𑍍𑌰𑌂 𑌵𑌾𑌽𑌪𑍍𑌯𑍇𑌕𑌾𑌹𑌂 𑌵𑌾𑌽𑌗𑍍𑌨𑌿𑌹𑍋𑌤𑍍𑌰𑌵𑌾𑌨𑍍 ॥ 𑌨𑌾𑌭𑍇𑌰𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌂 𑌤𑍁 𑌦𑌷𑍍𑌟𑌸𑍍𑌯 𑌤𑌦𑍇𑌵 𑌦𑍍𑌵𑌿𑌗𑍁𑌣𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 । 𑌸𑍍𑌯𑌾𑌦𑍇𑌤𑌤𑍍𑌤𑍍𑌰𑌿𑌗𑍁𑌣𑌂 𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑍇 𑌶𑍀𑌰𑍍𑌷𑌕𑍇 𑌤𑍁 𑌚𑌤𑍁𑌰𑍍𑌗𑍁𑌣𑌮𑍍 ॥ 𑌅𑌵𑍍𑌰𑌤𑌸𑍍𑌸𑌵𑍍𑌰𑌤𑍋 𑌵𑌾𑌽𑌪𑌿 𑌶𑍁𑌨𑌾 𑌦𑌷𑍍𑌟𑌸𑍍𑌤𑌥𑌾 𑌦𑍍𑌵𑌿𑌜𑌃 । 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾𑌗𑍍𑌨𑍀𑌨𑍍 𑌹𑍂𑌯𑌮𑌾𑌨𑌾𑌂𑌸𑍍𑌤𑍁 𑌸𑌦𑍍𑌯 𑌏𑌵 𑌶𑍁𑌚𑌿𑌰𑍍𑌭𑌵𑍇𑌤𑍍' 𑌇𑌤𑌿 ॥

𑌪𑌰𑌾𑌶𑌰𑌃—

'𑌵𑍃𑌕𑌶𑍍𑌵𑌾𑌨𑌸𑍃𑌗𑌾𑌲𑌾𑌦𑍍𑌯𑍈𑌰𑍍𑌦𑌷𑍍𑌟𑍋 𑌯𑌸𑍍𑌤𑍁 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋𑌤𑍍𑌤𑌮𑌃 । 𑌸𑍍𑌨𑌾𑌤𑍍𑌵𑌾 𑌜𑌪𑍇𑌤𑍍𑌸 𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍀𑌂 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌾𑌂 𑌵𑍇𑌦𑌮𑌾𑌤𑌰𑌮𑍍 ॥ 𑌗𑌵𑌾𑌂 𑌶𑍃𑌙𑍍𑌗𑍋𑌦𑌕𑍇 𑌸𑍍𑌨𑌾𑌨𑌂 𑌮𑌹𑌾𑌨𑌦𑍍𑌯𑍋𑌸𑍍𑌤𑍁 𑌸𑌙𑍍𑌗𑌮𑍇 । 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌦𑍍𑌵𑌾𑌽𑌪𑌿 𑌶𑍁𑌨𑌾 𑌦𑌷𑍍𑌟𑌃 𑌶𑍁𑌚𑌿𑌰𑍍𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ 𑌵𑍇𑌦𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑍍𑌰𑌤𑌸𑍍𑌨𑌾𑌤𑌃 𑌶𑍁𑌨𑌾 𑌦𑌷𑍍𑌟𑍋 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋 𑌯𑌦𑌿 । 𑌸 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑍋𑌦𑌕𑍇 𑌸𑍍𑌨𑌾𑌤𑍍𑌵𑌾 𑌘𑍃𑌤𑌂 𑌪𑍍𑌰𑌾𑌶𑍍𑌯 𑌵𑌿𑌶𑍁𑌧𑍍𑌯𑌤𑌿 ॥ 𑌸𑌵𑍍𑌰𑌤𑌸𑍍𑌤𑍁 𑌶𑍁𑌨𑌾 𑌦𑌷𑍍𑌟𑍋 𑌯𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌰𑌾𑌤𑍍𑌰𑌮𑍁𑌪𑌾𑌵𑌸𑍇𑌤𑍍 । 𑌘𑍃𑌤𑌂 𑌕𑍁𑌶𑍋𑌦𑌕𑌂 𑌪𑍀𑌤𑍍𑌵𑌾 𑌵𑍍𑌰𑌤𑌶𑍇𑌷𑌂 𑌸𑌮𑌾𑌪𑌯𑍇𑌤𑍍 ॥ 𑌅𑌵𑍍𑌰𑌤𑌸𑍍𑌸𑌵𑍍𑌰𑌤𑍋 𑌵𑌾𑌽𑌪𑌿 𑌶𑍁𑌨𑌾

---

னால் இரண்டு நாள் மட்டில். அக்னிஹோத்ரியானால் ஒரு நாள் மட்டில். நாபிக்குமேல் கடிக்கப்பட்டவனுக்கு முன் சொன்ன ப்ராயஸ்சித்தமே இரண்டு மடங்காகும். முகத்தில் கடிக்கப்பட்டால் மூன்று மடங்காகும். தலையில் கடிக்கப்பட்டால் நான்கு மடங்காகும். ப்ராம்ஹணன் ப்ரம்ஹசாரியானாலும் மற்றவனானாலும் நாயினால் கடிக்கப்பட்டால் ஹோமம் செய்யப்படும் அக்னிகளைத் தர்சித்தால் அப்பொழுதே சுத்தனாகிறான்.

பராசரர்:— செந்நாய், நாய், நரி முதலியவைகளால் கடிக்கப்பட்ட ப்ராம்ஹணன் ஸ்நானம்செய்து, வேதமாதாவும் பரிசுத்தையுமான காயத்ரியை ஜபிக்கவேண்டும். பசுக்களின் கொம்பிலிருந்து விழும் ஜலத்தினால் ஸ்நானம், மஹாநதிகள் சேருமிடத்தில் ஸ்நானம், ஸமுத்ர தர்சனம் இவைகளுள் ஒன்றினால் நாயால் கடிக்கப்பட்டவன் சுத்தனாவான். வேத வித்யை, வ்ரதம் இவைகளைச் செய்து ஸ்நானம் செய்த ப்ராம்ஹணன் நாயால் கடிக்கப்பட்டால், அவன் தங்கத்துடன் கூடிய ஜலங்களால் ஸ்நானம் செய்து நெய்யைப் பருகினால் சுத்தனாகிறான். வ்ரதத்தை யனுஷ்டிக்கும் பொழுது கடிக்கப்பட்டவன் மூன்று நாள் உபவாஸம் இருக்க வேண்டும். பிறகு நெய், தர்ப்பையுடன்கூடிய ஜலம் இவைகளைப் பருகி, பிறகு வ்ரதத்தின் மீதியை முடிக்கவேண்டும். வ்ரதம்

தஷ்டோ பவேத் த்விஜ: । ப்ரணிபாதாத் பவேத் பூதோ விப்ரைஶ்சக்ஷுர்நிரீக்ஷித: ॥ ஶுநா க்ராதாவலீடஸ்ய நகைர் விலிகிதஸ்ய ச । அத்பி: ப்ரக்ஷாலநம் ப்ரோக்தம் அக்நிநா சோபசூலநம் ॥ ஶுநா து ப்ராஹ்மணீ தஷ்டா ஜம்புகேந வ்ருகேண வா । உதிதம் க்ரஹநக்ஷத்ரம் த்ருஷ்ட்வா ஸத்ய: ஶுசிர்பவேத் ॥ க்ருஷ்ணபக்ஷே யதா ஸோமோ ந த்ருஶ்யேத கதாசந । யாம் திஶம் வ்ரஜதே ஸோமஸ்தாம் திஶம் அவலோகயேத் ॥ அஸத்ப்ராஹ்மணகே க்ராமே ஶுநா தஷ்டோ த்விஜோத்தம: । வ்ருஷம் ப்ரதக்ஷிணீக்ருத்ய ஸத்ய: ஸ்நாத்வா விஶுத்யதி' இதி ॥

வ்ருகஶ்வாநாவாரண்யகக்ராம்யாம் பேத: । ஸ்ருகால: = ஜம்புக: । ஆதிஶப்தேந வராஹாதயோ க்ருஹ்யந்தே । தைர்தஷ்ட: ஸ்நாத்வா காயத்ர்யஷ்டஶதம் ஜபேத் ॥

---

அனுஷ்டிக்காதவனாயினும், வ்ரதம் அனுஷ்டிப்பவனாயினும் ப்ராம்ஹணன் நாயால் கடிக்கப்பட்டால், அவன் ப்ராம்ஹணர்களை நமஸ்கரித்து, அவர்களால் கண்களால் பார்க்கப்பட்டால் சுத்தனாகிறான். நாயினால் மோக்கப்பட்டு நக்கப்பட்டாலும், நகங்களால் கீறப்பட்டாலும், அந்த இடத்தை ஜலத்தால் அலம்பவேண்டும். அக்னியினால் அந்த இடத்தை தபிக்கச் செய்வதும் ப்ராயச்சித்தம். எந்த ப்ராம்ஹண ஸ்த்ரீ நாயாலாவது, நரியாலாவது, செந்நாயாலாவது கடிக்கப்பட்டவளோ, அவள் இரவில் உதயமாகிய க்ரஹங்கள், நக்ஷத்ரங்கள் இவைகளைப் பார்த்தால் அப்பொழுதே சுத்தையாகிறாள். க்ருஷ்ண பக்ஷத்தில் சந்த்ரன் எப்பொழுது காணப்படவில்லையோ அப்பொழுது சந்த்ரன் எந்தத் திக்கில் இருக்கக்கூடுமோ அந்தத் திக்கையாவது பார்க்கவேண்டும். ப்ராம்ஹணர்கள் இல்லாத க்ராமத்தில் ப்ராம்ஹணன் நாயால் கடிக்கப்பட்டால், காளைமாட்டை ப்ரதக்ஷிணம் செய்து, ஸ்நானம் செய்தால் அப்பொழுதே சுத்தனாகிறான்,” என்று.

வ்ருகம் என்பது காட்டு நாய் (செந்நாய்); ச்வா என்பது க்ராமத்தில் உள்ள நாய் என்று பேதம். ஆதி யென்றதால் பன்றி முதலியவை சொல்லப்படுகின்றன. அவைகளால் கடிக்கப்பட்டவன் ஸ்நானம் செய்து, நூற்றெட்டு முறை காயத்ரியை ஜபிக்கவேண்டும்.

जपे सङ्ख्याविशेषमाहोशनाः —

'दंष्ट्रिभिर्दष्टो गायत्र्यष्टशतं प्राणायामशतं वा' इति ॥

तदशक्तविषयम्। शक्तस्तु गोशृङ्गोदकस्नानादिकमाचरेत्। तत्र गोशृङ्गस्नानं नाम शृङ्गोदकमभिमन्त्र्य गायत्र्या शतवारमभिषिच्य तेन मज्जनम्, 'गोशृङ्गेण शतं स्नानं गायत्र्या' इति हारीतस्मरणात्। गोशृङ्गोदकस्नानसङ्गमस्नानसमुद्रदर्शनानामधस्तनमध्योत्तमाङ्गभेदेन वा दंशतारतम्येन वा व्यवस्था। वेदाध्ययनं वा सौम्यप्राजापत्यादिव्रतानि वा समाप्य स्नातः = वेदविद्याव्रतस्नातः। स यदि शुना दष्टस्तदा हिरण्योदके निधाय तेनोदकेन स्नात्वा घृतं प्राश्य विशुध्यति। तत्रापि ब्राह्मणश्चेद्गायत्रीं शतकृत्वो जपेत्॥

---

ஜபத்தில் கணக்குப் பேதத்தைச் சொல்லுகிறார்,

**உசனஸ்:**— *பல் உள்ள ஜந்துக்கள் முதலியவைகளால் கடிக்கப் பட்டவன், காயத்ரியை நூற்றெட்டுமுறை ஜபிக்கவும். அல்லது ப்ராணாயாமத்தை நூறு தடவை செய்யவும்.*

இது அசக்தனைப் பற்றியது. சக்தனாயெவெனில், பசுவின் கொம்பு ஜலத்தினால் ஸ்நானம் செய்வது என்பது முதலியதைச் செய்யவேண்டும். அவைகளுள் கோச்ருங்கோதக ஸ்நானம் என்பது கொம்பில் நிரப்பப்பட்ட ஜலத்தை நூறு முறை காயத்ரியால் அபிமந்த்ரித்து, அதனால் முழுகுவது. "நூறு தடவை காயத்ரியைச் சொல்லிப் பசுவின் கொம்பின் ஜலத்தால் ஸ்நானம்" என்று ஹாரீதரின் ஸ்ம்ருதியால். பசுவின் கொம்பு ஜலத்தால் ஸ்நானம், நதீ ஸங்கம ஸ்நானம், ஸமுத்ர தர்சனம் என்ற இவைகளுக்குக் கீழ்ப் பட்ட அங்கம், நடுவாகிய அங்கம், மேலாகிய அங்கம் இவைகளின் பேதத்தாலாவது, கடித்ததின் தாரதம்யத்தாலாவது வ்யவஸ்தையை யறியவேண்டும். வேதவித்யாவ்ரதஸ்நாதன் = வேதாத்யயனத்தையாவது, ஸௌம்யம் ப்ராஜாபத்யம் முதலிய வ்ரதங்களையாவது முடித்து ஸ்நானம் செய்தவன். அவன் நாயால் கடிக்கப்பட்டானாகில், அப்பொழுது ஸ்வர்ணத்தை ஜலத்தில் போட்டு, அந்த ஜலத்தினால் ஸ்நானம் செய்து, நெய்யைப் பருகினால் சுத்தனாகிறான்.

तथाह बोधायनः—

'वेदविद्याव्रतस्नातः शुना दष्टस्तु ब्राह्मणः ।
शतवारमावृत्य गायत्रीं शुद्धिमवाप्नुयात्' इति ॥

चान्द्रायणादिव्रतेन सहितः सव्रतः । स त्रिरात्रमुपोष्य चतुर्थेऽह्नि घृतं प्राश्य कुशोदकं च पीत्वा व्रतशेषं समापयेत् । सव्रतावव्रतावपि विप्रान् प्रणिपत्य तैर्निरीक्षितौ यथोक्तप्रायश्चित्ताचरणेन शुद्धौ भवतः । यदा ब्राह्मणी श्वादिभिर्दष्टा तदा सा रात्रावुदितान् चन्द्राङ्गारकादीन् नक्षत्राणि कृत्तिकादीन्यवलोक्य शुद्धा भवति । चन्द्रदर्शनासंभवे तदवस्थितिप्रदेशं दिशं वा चक्षुषावलोकयेत् । तत्रावलोकनं पञ्चगव्यप्राशनस्योपलक्षणम् ॥

---

அதிலும் கடிக்கப்பட்டவன் ப்ராம்ஹணனுகில் காயத்ரியை நூறு முறை ஜபிக்கவேண்டும்.

அதைச் சொல்லுகிறுர், போதாயனர்:— வேதவித்யாவ்ரத ஸ்நாதனுன ப்ராம்ஹணன் நாயால் கடிக்கப்பட்டால், நூறுமுறை காயத்ரியை ஜபித்தால் சுத்தியையடைவான்.

சாந்த்ராயணம் முதலிய வ்ரதத்துடன் கூடியவன் ஸவ்ரதன். அவன் மூன்றுநாள் உபவாஸமிருந்து, நான்காவது நாளில் நெய்யைப் பருகி, தர்ப்பை ஜலத்தையும் பருகி, பிறகு வ்ரதத்தின் மீதியை முடிக்கவேண்டும். ஸவ்ரதன், அவ்ரதன் என்ற அவ்விருவரும் ப்ராம்ஹணர்களை நமஸ்கரித்து, அவர்களால் பார்க்கப்பட்டால், முன்சொல்லிய ப்ராயஶ்சித்தத்தை யனுஷ்டித்ததினுல் சுத்தராயாகின்றனர். எப்பொழுது ப்ராம்ஹண ஸ்த்ரீ நாய் முதலியவைகளால் கடிக்கப்பட்டாளோ, அப்பொழுது அவள் இரவில் உதித்த சந்த்ரன், செவ்வாய் முதலிய க்ரஹங்களையும், க்ருத்திகை முதலிய நக்ஷத்ரங்களையும் பார்த்தால் சுத்தையாகிறுள். சந்த்ரனைப் பார்க்க முடியாவிடில், அவன் இருக்கக்கூடிய திக்கையாவது கண்ணுல் பார்க்கவேண்டும். அதில், பார்க்கவேண்டும் என்றது பஞ்சகவ்ய ப்ராசனத்தையும் சொல்லுகிறது. ஆகையாற்றுன்,

அத ஆங்கிரா:—

ப்ராஹ்மணீ து ஶுநா தஷ்டா ஸோமே த்ருஷ்டிம் நிபாதயேத் । ஸமுத்ரதர்ஶநாத்வாபி ஶுநா தஷ்டா ஶுசிர்பவேத் ॥ ஸோமமார்கேண வா பஶ்யேத் பஞ்சகவ்யேந ஶுத்த்யதி’ இதி ॥

ஸோமதர்ஶநாஸம்பவே ஸமுத்ரதர்ஶநாதிரவமேகநா ஆ ஶுத்தீத்யர்த: । யஸ்மிந்து க்ராமே ப்ராஹ்மணா ந ஸந்தி, தத்ர ப்ராஹ்மணப்ரணிபாதநிரீக்ஷணயோ: ஸ்தாநே வ்ருஷப ப்ரதக்ஷிணம் த்ரஷ்டவ்யம் । ஏதேஷு வசநேஷு யத்ர யத்ர ப்ராயஶ்சித்தபாஹுல்யம், தத்ர தத்ரோத்தமாங்கவிஷயத்வம் தம்ஶநாவ்ருத்திவிஷயத்வம் சோஹநீயம் ॥ ப்ரஹ்மசாரிக்ருஹஸ்தாக்நிஹோத்ரிஷூத்தரோத்தரம் தபோபாஹுல்யாத் ப்ராயஶ்சித்தஹ்ராஸ இதி மாதவீயே ॥

## ஶரீரே க்ரும்யுத்பத்தௌ ப்ராயஶ்சித்தம் ॥

ஶரீரே க்ரும்யுத்பத்தௌ ப்ராயஶ்சித்தமாஹ ஶாதாதப:—

ப்ராஹ்மணஸ்ய வ்ரணத்வாரே யதா ஸம்பத்யதே க்ருமி: ।

---

**அங்கிரஸ்:—** *ப்ராம்ஹண ஸ்த்ரீ நாயால் கடிக்கப்பட்டால், சந்த்ரனிடத்தில் பார்வையைச் செலுத்தவேண்டும். ஸமுத்ரத்தைத் தர்சித்தாலாவது சுத்தையாவாள். அல்லது சந்த்ரன் இருக்கக் கூடிய திக்கையாவது பார்த்து, பஞ்சகவ்ய ப்ராசனம செய்தால் சுத்தையாவாள்.*

*சந்த்ரனைப் பார்க்கமுடியாவிடில், ஸமுத்ரத்தைப் பார்ப்பதாலாவது, சந்த்ரன் உள்ள திக்கைப் பார்ப்பதாலாவது சுத்தையாகிருள், என்பது பொருள். எந்த க்ராமத்தில் ப்ராம்ஹணர்கள் இல்லையோ, அவ்விடத்தில் ப்ராம்ஹணர்களின் நமஸ்காரம் தர்சனம் இவைகளுக்குப் பதிலாக வ்ருஷபத்தின் ப்ரதக்ஷிணம் அறியத் தக்கது. இந்த வசனங்களில் எந்த எந்த இடத்தில் ப்ராயஶ்சித்தம் அதிகமாயுள்ளதோ, அங்கங்கு, சிறந்த அங்கங்களைப்பற்றியதென்பதும், கடித்ததின் ஆவ்ருத்தியைப் பற்றியதென்பதும் ஊஹிக்கப் படவேண்டும். ப்ரம்ஹசாரீ, க்ருஹஸ்தன், அக்னிஹோத்ரீ என்ற இவர்களுள் மேல் மேல் உள்ளவன் அதிக தபஸ் உள்ளவனுகையால் ப்ராயஶ்சித்தத்தின் குறைவு என்பது மாதவீயத்தில் உள்ளது.*

## சரீரத்தில் புழு உண்டானுல் ப்ராயஶ்சித்தம்.

**சாதாதபர்:—** *ப்ராம்ஹணனுடைய சரீரத்தில் வ்ரணத்தின்*

ப்ராயஶ்சித்தம் ததா கார்யமிதி ஶாதாதபோऽப்ரவீத் ॥ கோமூத்ரம் கோமயம் க்ஷீரம் ததி ஸர்பிः குஶோதகம் । த்ர்யஹம் ஸ்நாத்வா ச பீத்வா ச க்ருமிதஷ்டः ஶுசிர்பவேத்' இதி ॥

போதாயனः—

ப்ராஹ்மணஸ்ய வ்ரணத்வாரே பூயஶோணிதஸம்பவே । க்ருமிருத்பத்யதே தஸ்ய ப்ராயஶ்சித்தம் கதம் பவேத் ॥ கோமூத்ரம் கோமயம் க்ஷீரம் ததி ஸர்பிः குஶோதகம் । த்ர்யஹம் ஸ்நாத்வா ச பீத்வா ச க்ருமிதஷ்டः ஶுசிர்பவேத்' இதி ॥

ஏதத்து நாபேரதோபாகே த்ரஷ்டவ்யம் । உபரிபாகே து பானுராஹ—

'நாபிகண்டாந்தரோத்பூதே வ்ரணே ஜாதே க்ருமிः । ஷட்ராத்ரம் து ததா ப்ரோக்தம் ப்ராஜாபத்யம் ஶிரோவ்ரணே' இதி ॥

---

முகத்தில் எப்பொழுது புழு உண்டாகிறதோ அப்பொழுது ப்ராயஶ்சித்தம் செய்யப்படவேண்டும் என்றார் சாதாதபர். புழுவினல் கடிக்கப்பட்டவன், பசுவின் மூத்ரம், சாணி, பால், தயிர், நெய், தர்ப்பையின் ஜலம் இவைகளால் மூன்று நாள் ஸ்நானம் செய்து, அவைகளைப் பருகினல் சுத்தனுவான்.

**போதாயனர்:**— ப்ராம்ஹணனுடைய வ்ரணத்தின் முகத்தில் துர்நீர் ரக்தம் இவைகள் உண்டாகி புழு உண்டாகிறது. அதில் ப்ராயஶ்சித்தம் எப்படி? எனில், புழுவினல் கடிக்கப்பட்டவன் பஞ்சகவ்யத்தால் மூன்று நாள் ஸ்நானம் செய்து அதைப் பருகினல் சுத்தனுவான்.

இது கொப்பூழுக்குக் கீழ்பாகத்தில் உண்டாகியதைப் பற்றியது என்று அறியவும். கொப்பூழுக்கு மேல் பாகத்திலானல் சொல்லுகிறார்.

**பானு:**— நாபிக்கும் கழுத்திற்கும் நடுவில் உள்ள ப்ரதேசத்தில் வ்ரணத்தில் புழு உண்டானல் அப்பொழுது ஆறு நாள் ப்ராஜாபத்யம் ப்ராயஶ்சித்தம். தலையிலானல் ஒரு ப்ராஜாபத்ய க்ருச்ரம் ப்ராயஶ்சித்தம்.

𑌦𑍁𑌰𑍍𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌗𑍃𑌹𑌭𑍋𑌜𑌨𑍇 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍍 ॥

𑌅𑌭𑍋𑌜𑍍𑌯𑌭𑍋𑌜𑌨𑍇 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌤𑌤𑍍𑌰 𑌦𑍁𑌰𑍍𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌗𑍃𑌹𑍇 𑌭𑍋𑌜𑌨𑍇 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑌾𑌹 𑌭𑌾𑌰𑌦𑍍𑌵𑌾𑌜𑌃—

'𑌨𑌿𑌰𑌾𑌚𑌾𑌰𑌸𑍍𑌯 𑌵𑌿𑌪𑍍𑌰𑌸𑍍𑌯 𑌨𑌿𑌷𑌿𑌦𑍍𑌧𑌾𑌚𑌰𑌣𑌸𑍍𑌯 𑌚 । 𑌅𑌨𑍍𑌨𑌂 𑌭𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌦𑍍𑌵𑌿𑌜𑌃 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑍍𑌦𑌿𑌨𑌮𑍇𑌕𑌮𑌭𑍋𑌜𑌨𑌮𑍍' 𑌇𑌤𑌿 ॥

𑌤𑌦𑌶𑌕𑍍𑌤𑍌 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌨𑍍𑌤𑌰𑌮𑌾𑌹 𑌪𑌰𑌾𑌶𑌰𑌃—

'𑌸𑌦𑌾𑌚𑌾𑌰𑌸𑍍𑌯 𑌵𑌿𑌪𑍍𑌰𑌸𑍍𑌯 𑌤𑌥𑌾 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌵𑍇𑌦𑌿𑌨𑌃 । 𑌭𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾𑌨𑍍𑌨𑌂 𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌪𑌾𑌪𑌾𑌦𑌹𑍋𑌰𑌾𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌨𑍍𑌨𑌰𑌃' 𑌇𑌤𑌿 ॥

𑌏𑌤𑌦𑌨𑌭𑍍𑌯𑌾𑌸𑌵𑌿𑌷𑌯𑌮𑍍 । 𑌅𑌭𑍍𑌯𑌾𑌸𑍇 𑌤𑍍𑌵𑌾𑌹 𑌸 𑌏𑌵—

'𑌪𑌰𑌪𑌾𑌕𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌪𑌰𑌪𑌾𑌕𑌰𑌤𑌸𑍍𑌯 𑌚 । 𑌅𑌪𑌚𑌸𑍍𑌯 𑌚 𑌭𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾𑌨𑍍𑌨𑌂 𑌦𑍍𑌵𑌿𑌜𑌶𑍍𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌂 𑌚𑌰𑍇𑌤𑍍' 𑌇𑌤𑌿 ॥

---

## துர் ப்ராம்ஹணரின் வீட்டில் புஜிப்பதில் ப்ராயஶ்சித்தம்.

புஜிக்கக் கூடாத அன்னத்தைப் புஜிப்பதில் ப்ராயஶ்சித்தம் சொல்லப்படுகிறது. அதில் துர் ப்ராம்ஹணனின் வீட்டில் போஜனம் செய்தால் ப்ராயஶ்சித்தத்தைச் சொல்லுகிறார்,

**பாரத்வாஜர்:-** ஆசாரமற்றவனும், விலக்கப்பட்ட ஆசாரத்தை உடையவனுமான ப்ராம்ஹணனின் அன்னத்தைப் புஜித்தால் ஒரு நாள் முழுவதும் உபவாஸம் செய்யவேண்டும்.

அதைச் செய்ய முடியாவிடில் வேறு ப்ராயஶ்சித்தத்தைச் சொல்லுகிறார்,

**பராசரர்:—** நல்ல ஆசாரமுடையவனும், வேதம் வேதாந்தம் இவைகளை அறிந்தவனுமான ப்ராம்ஹணனின் அன்னத்தைப் புஜித்தால் ஒரு நாளுக்குள் பாபத்தினின்றும் விடுபடுவான்.

இது பலதடவை செய்யாததைப்பற்றியது. பல தடவையானால் சொல்லுகிறார், **பராசரரே:—** பரபாக நிவ்ருத்தன், பரபாக ரதன், அபசன் இவர்களின் அன்னத்தைப் புஜித்தால் ப்ராம்ஹணன் சாந்த்ராயணத்தை யனுஷ்டிக்கவேண்டும்.

பரபாகநிவ்ருத்தாதிலக்ஷணாநி ॥

தேஷாம் லக்ஷணமாஹ ஸ ஏவ—

'க்ருஹீத்வாக்நிம் ஸமாரோப்ய பஞ்சயஜ்ஞாந்ந நிர்வபேத் । பரபாகநிவ்ருத்தோ஽ஸௌ முநிபி: பரிகீர்தித: ॥ பஞ்சயஜ்ஞாந் ஸ்வயம் க்ருத்வா பராந்நேநோபஜீவதி । ஸததம் ப்ராதருத்தாய பரபாகரதஸ்து ஸ: ॥ க்ருஹஸ்த஧ர்மோ யோ விப்ரோ ததாதி பரிவர்ஜித: । ருஷிபிர்தர்மதத்த்வஜ்ஞைரபச: பரிகீர்தித:' இதி ॥ ததாதி பரிவர்ஜித: = அந்நதாநவர்ஜித: கேவலம் ஸ்வயமேவ புங்க்தே ஸோऽயமபச இத்யுச்யதே । தஸ்ய நிந்தா ஶ்ருத்யைவம் ப்ரதர்ஶ்யதே— 'நார்யமணம் புஷ்யதி நோ ஸகாயம் । கேவலாகோ பவதி கேவலாதீ' இதி ॥

ஶாதாதபப்ருஹஸ்பதீ—

'யோ ஹி ஹித்வா விவாஹாக்நிம் க்ருஹஸ்த இதி மந்யதே । அந்நம் தஸ்ய ந போக்தவ்யம் வ்ருதாபாகோ ஹி ஸ ஸ்ம்ருத: ॥

---

## பரபாக நிவ்ருத்தன் முதலியவரின் லக்ஷணங்கள்.

அவர்களின் லக்ஷணத்தைச் சொல்லுகிறூர் பராசரர்:— அக்னியை க்ரஹித்து, ஸமாரோபணம் செய்து, பஞ்சமஹாயஜ்ஞங்களைச் செய்யாதவன் பரபாக நிவ்ருத்தன், என்று முனிவர்களால் சொல்லப்பட்டுள்ளான். எப்பொழுதும் காலையிலெழுந்து, பஞ்சமஹாயஜ்ஞங்களைத் தான் செய்து, பரான்னத்தினுல் ஜீவிப்பவன் பரபாகரதன் எனப்படுகிறுன். க்ருஹஸ்த தர்மமுள்ள எந்த ப்ராம் ஹணன் அன்னதானம் செய்யாமலிருக்கின்றுனே அவன் தர்மம் அறிந்த ருஷிகளால் அபசன் எனச் சொல்லப்பட்டுள்ளான்.

எவன் தான் மட்டில் புஜிப்பவனுய் இருக்கின்றுனே அவன் அபசன் என்று சொல்லப்படுகிறுன். அவனைப்பற்றிய நிந்தை வேதத்தில் ஸ்பஷ்டமாய்ச் சொல்லப்படுகிறது:— "பெரியோரைப் போஷிக்காமலும் மித்ரனைப் போஷிக்காமலும் தான் மட்டில் புஜிப்பவன் பாபத்தையே படைபவனுகிறுன்".

**சாதாதபரும் ப்ருஹஸ்பதியும்:**— எவன் ஔபாஸனத்தைவிட்டு க்ருஹஸ்தனென்று தன்னை நினைத்துள்ளானே, அவனது அன்னத்

𑌵𑍃𑌥𑌾𑌪𑌾𑌕𑌸𑍍𑌯 𑌭𑍁𑌞𑍍𑌜𑌾𑌨𑌃 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌚𑌰𑍇𑌦𑍍 𑌦𑍍𑌵𑌿𑌜𑌃 । 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌯𑌾𑌮𑌶𑌤𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌘𑍃𑌤𑌂 𑌪𑍍𑌰𑌾𑌶𑍍𑌯 𑌵𑌿𑌶𑍁𑌧𑍍𑌯𑌤𑌿' 𑌇𑌤𑌿 ॥

𑌵𑍃𑌥𑌾𑌪𑌾𑌕𑍇 𑌯𑌤𑍍 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌤𑌦𑍇𑌵 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌨𑌿𑌨𑍍𑌦𑌕𑌾𑌦𑌾𑌵𑌪𑌿 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌮𑍍 । 𑌨𑌿𑌨𑍍𑌦𑌾𑌵𑌚𑌨𑍇𑌨 𑌸𑌹 𑌪𑌾𑌠𑌾𑌤𑍍 ॥

𑌤𑌥𑌾 𑌚 𑌵𑍍𑌯𑌾𑌸𑌃—

'𑌪𑌙𑍍𑌕𑍍𑌤𑌿𑌭𑍇𑌦𑍀 𑌵𑍃𑌥𑌾𑌪𑌾𑌕𑍀 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌨𑌿𑌨𑍍𑌦𑌕𑌃 । 𑌆𑌦𑍇𑌶𑍀 𑌵𑍇𑌦𑌵𑌿𑌕𑍍𑌰𑍇𑌤𑌾 𑌪𑌞𑍍𑌚𑍈𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌘𑌾𑌤𑌕𑌾𑌃' 𑌇𑌤𑌿 ॥

𑌶𑍌𑌨𑌕𑌃—

'𑌕𑌨𑌿𑌕𑍍𑌰𑌦𑌂 𑌜𑌪𑍇𑌨𑍍𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌂 𑌦𑌶𑌵𑌾𑌰𑌂 𑌯𑌦𑌾 𑌤𑌦𑌾 । 𑌵𑍇𑌦𑌵𑌿𑌕𑍍𑌰𑌯𑌿𑌣𑍋 𑌗𑍇𑌹𑍇 𑌭𑍁𑌙𑍍𑌕𑍍𑌤𑍇 𑌪𑌾𑌪𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇' 𑌇𑌤𑌿 ॥

𑌹𑌾𑌰𑍀𑌤𑌃—

'𑌯𑌦𑌨𑍍𑌨𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌲𑍋𑌮𑌸𑍍𑌯 𑌶𑍂𑌦𑍍𑌰𑌜𑌸𑍍𑌯𑌾𑌗𑍍𑌰𑌜𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌮𑍍 । 𑌮𑌹𑌾𑌪𑌾𑌤𑌕𑌿𑌨𑌶𑍍𑌚𑍈𑌵 𑌯𑌦𑌨𑍍𑌨𑌂 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌕𑍃𑌤𑌘𑍍𑌨𑌯𑍋𑌃 ॥ 𑌆𑌰𑍂𑌢𑌪𑌤𑌿𑌤𑌸𑍍𑌯𑍈𑌵 𑌸𑌹𑍋𑌦𑍍𑌵𑌾𑌹𑌕𑍃𑌤𑌸𑍍𑌯 𑌚 । 𑌪𑌾𑌷𑌣𑍍𑌡𑌾𑌨𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌨𑌾𑌂

---

*தைப் புஜிக்கக்கூடாது. அவன் வ்ருதாபாகன் என்று சொல்லப் பட்டுள்ளான். வ்ருதாபாகனின் அன்னத்தைப் புஜித்த ப்ராம்ஹணன் ப்ராயஶ்சித்தம் அனுஷ்டிக்கவேண்டும். நூறு ப்ராணாயாமங்கள் செய்து, நெய்யைப் பருகினால் சுத்தனுவான்.*

*வ்ருதாபாகனுக்குச் சொல்லிய ப்ராயஶ்சித்தம் எதுவோ, அதுவே ப்ராம்ஹணனை நிந்திப்பவன் முதலியவருக்கும் ப்ராயஶ்சித்தம் என்றறியவும். நிந்தாவசனத்துடன் சேர்த்துப் படித்திருப்பதால். அவ்விதமே,*

**வ்யாஸர்:**— *பங்க்திபேதம் செய்பவன், வ்ருதாபாகன், எப்பொழுதும் ப்ராம்ஹணர்களை நிந்திப்பவன், ஆதேசீ, வேதத்தை விற்பவன், இவ்வைவரும் ப்ரம்ஹகாதகர்களாவர்.*

**ஶௌனகர்:**— *வேதவிக்ரயம் செய்தவன். வீட்டில் புஜித்தால் கனிக்ரதம் என்ற மந்த்ரத்தைப் பத்துமுறை ஜபித்தால் பாபத்தினின்றும் விடுபடுவான்.*

**ஹாரீதர்:**— *ப்ராம்ஹண ஸ்த்ரீயினிடம் சூத்ரனால் பிறந்த ப்ரதிலோமன், மஹா பாதகம் செய்தவன், ஸ்த்ரீ, நன்றிமறந்தவன் ஆரூட பதிதன், ஸஹோத்ரையை விவாஹம் செய்துகொண்டவன், பாஷண்டன், அனாஶ்ரிதன் (சக்தியிருந்தும் ஒரு ஆச்ரமத்தையும்*

च यदेतेष्वेव तथैव च ॥ अतिकृच्छ्रं चरेत् स्वाका प्रमादाद्ब्राह्मणस्सकृत् । बुद्ध्या चान्द्रायणं कार्यमामं चेद्गृह्य चैव च ॥ तद्धस्तभोजने चापि त्रिगुणं सहभोजने । चतुर्गुणं तदुच्छिष्टे पानीये चार्धमेव च ॥ कृच्छ्रपादोऽभ्यासे बहुशोऽज्ञानभोजने । बुद्ध्याऽभ्यासे तथा कार्या त्रिंशत्कृच्छ्रं विजानतः' इति ॥

उत्तमस्त्री = ब्राह्मणी । तस्यां प्रातिलोम्येन शूद्राज्जातश्चण्डालः । सत्यपि सामर्थ्ये नास्तिक्येन विहितदेवपित्रादिकर्मत्यागी कृतान्तः ॥

राजाद्यन्नभोजनशमनानि ॥

---

सुमन्तुः—

'राजान्नं तेज आदत्ते शूद्रान्नं ब्रह्मवर्चसम् । आयुस्सुवर्णकारान्नं यशश्चर्मावकर्तिनः ॥ कारुकान्नं प्रजां हन्ति बलं निर्णेजकस्य च । गणान्नं गणिकान्नं

---

அடையாயலிருப்பவன்.) ஸந்யாஸீ, இவர்களின் அன்னத்தை அறியாமையால் ப்ராம்ஹணன் ஒரு தடவை புஜித்தால், அதிக்ருச்ரத்தையனுஷ்டிக்கவேண்டும். புத்திபூர்வமாய்ப் புஜித்தால், சாந்த்ராயணத்தை யனுஷ்டிக்கவேண்டும். ஆமத்தை க்ரஹித்தால், பாதி ப்ராயஸ்சித்தம். அவர்கள் கையால் புஜித்தால், மூன்று மடங்கு ப்ராயஸ்சித்தம். சேர்ந்து புஜித்தால் நான்குமடங்கு, அவர்கள் குடித்த மீதி ஜலத்தைக் குடித்தால், பாதி ப்ராயஸ்சித்தம். அறியாமையால் பலதடவை புஜித்தால், அப்த க்ருச்ரத்தின் கால்பாகம். புத்தி பூர்வமாய்ப் பலதடவை புஜித்தால், முப்பது க்ருச்ரம்.

## அரசன் முதலியவரின் அன்னத்தைப் புஜித்தால் ப்ராயஸ்சித்தம்.

**ஸுமந்து:—** அரசனின் அன்னம் தேஜஸ்ஸை அபஹரிக்கும், சூத்ரனின் அன்னம் ப்ரம்ஹ தேஜஸ்ஸையும், தட்டானுடைய அந்நம் ஆயுஸ்ஸையும், சக்கிலியனுடைய அன்னம் கீர்த்தியையும், சிற்பியின் அன்னம் ப்ரஜையையும், வண்ணானுடைய அன்னம் பலத்தையும், கூட்டத்தின் அன்னமும் வேசியின் அன்னமும் நல்ல உலகங்களை

च पौनर्भवः परिकीर्तितः ॥ पूयं चिकित्सकस्यान्नं पुंश्चल्यास्त्वन्नमिन्द्रियम् । विष्ठा वार्धुषिकस्यान्नं शस्त्रविक्रयिणो मलम् ॥ एवमेते ह्यभोज्यान्नाः क्रमशः परिकीर्तिताः ॥ एषामन्यतमस्यान्नममत्या क्षपणं त्र्यहम् । मत्या ह्याचरेत् कृच्छ्रं रेतोविण्मूत्रमेव च इति ॥

विष्णुः —

गणकगणिकाचोरनटगायकानामन्नं भुक्त्वा सप्तरात्रं पयसा वर्तेत तक्षचर्मकारश्वपाकवार्धुषिककदर्यदीक्षितबद्धनिगडाभिशस्तषण्ढानां च पुंश्चलीदाम्भिकचिकित्सकलुब्धकक्रूरोच्छिष्टभोजिनां च अवीरस्त्रीस्वर्णकारसपत्नपतितानां च पिशुनानृतवादिधर्मविक्रयिसोमविक्रयिणां च शैलूषतुन्नवायकृतघ्ननिषाद

---

யும், வைத்தியனின் அன்னம் ரூபத்தையும், வ்யபிசாரிணியின் அந்நம் இந்திரியத்தையும், அபஹரிக்கும். வட்டியால் ஜீவிப்பவனின் அன்னம் விஷ்டைக்கு ஸமமாகும். ஆயுதத்தை விற்பவனின் அன்னம் மலத்திக்கு ஸமமாகும். இவ்விதம் இந்தப் புஜிக்கக் கூடாத அன்ன முடையவர்கள் வரிசையாகச் சொல்லப்பட்டனர். இவர்களுள் யாராவது ஒருவனின் அன்னத்தை அறியாமையால் புஜித்தால், மூன்று நாள் உபவாஸம் ப்ராயஸ்சித்தம். புத்திபூர்வமாய்ப் புஜித்தால், ப்ராஜாபத்ய க்ருச்ரத்தை யனுஷ்டிக்கவேண்டும். சுக்லம், மலம், மூத்ரம் இவைகளை உட்கொண்டாலும், ப்ராஜாபத்யம் ப்ராயஸ்சித்தம்.

விஷ்ணு:— கணக்கன், வேசி, திருடன், பாடகன், இவர்களின் அன்னத்தைப் புஜித்தால், ஏழு நாள் வரையில் பாலை மட்டில் பருகி இருக்கவேண்டும். தச்சன், சக்கிலியன், ச்வபாகன், வட்டியால் ஜீவிப்பவன், க்ருபணன், தீக்ஷிதன், விலங்கிடப்பட்டவன், அபவாதம் அடைந்தவன், நபும்ஸகன், வ்யபிசாரிணீ, டம்பன், வைத்யன், லோபி, கொடியவன், உச்சிஷ்டத்தைப் புஜிப்பவன், பர்த்தா புத்ரன் இல்லாத ஸ்த்ரீ, தட்டான், சத்ரு, பதிதன், கோள் சொல்லுபவன், பொய் சொல்லுபவன், தர்மத்தை விற்பவன், ஸோமத்தை விற்பவன், நடிப்பவன், தையற்காரன், நன்றி மறந்தவன், வேடன், நாடகத்தில் நடிப்பவன், வேதம் விற்பவன்,

𑌰𑌜𑌾𑌯𑌤𑌾𑌶𑍍𑌚𑍈𑌵 𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌕𑍍𑌰𑌯𑌿𑌣𑌾𑌂 𑌚 𑌶𑍍𑌵𑌜𑍀𑌵𑌿𑌶𑍌𑌣𑍍𑌡𑌿𑌕𑌤𑍈𑌲𑌿𑌕𑌚𑍈𑌲𑌨𑌿𑌰𑍍𑌣𑍇𑌜𑌕𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌰𑌜𑌸𑍍𑌵𑌲𑌾𑌜𑌾𑌰𑌵𑌦𑍍𑌵𑍇𑌶𑍍𑌮𑌨𑌾𑌂 𑌚 𑌭𑍍𑌰𑍂𑌣𑌹𑌾𑌵𑍇𑌕𑍍𑌷𑌿𑌤𑌮𑍁𑌦𑌕𑍍𑌯𑌾 𑌸𑌂𑌸𑍍𑌪𑍃𑌷𑍍𑌟𑌂 𑌪𑌤𑌤𑍍𑌰𑌿𑌣𑌾𑌽𑌵𑌲𑍀𑌢𑌂 𑌶𑍁𑌨𑌾 𑌸𑍍𑌪𑍃𑌷𑍍𑌟𑌂 𑌗𑌵𑌾𑌘𑍍𑌰𑌾𑌤𑌂 𑌚 𑌕𑌾𑌮𑌤𑌃 𑌵𑌾𑌯𑌸𑌾 𑌸𑍍𑌪𑍃𑌷𑍍𑌟𑌮𑌵𑌕𑍍𑌷𑍁𑌤𑌂 𑌚 𑌮𑌤𑍍𑌤𑌕𑍍𑌰𑍁𑌦𑍍𑌧𑌾𑌤𑍁𑌰𑌾𑌣𑌾𑌂 𑌚𑌾𑌨𑌰𑍍𑌚𑌿𑌤𑌂 𑌵𑍃𑌥𑌾 𑌮𑌾𑌂𑌸𑌂 𑌚 𑌤𑍍𑌰𑌿𑌰𑌾𑌤𑍍𑌰𑌮𑍁𑌪𑌵𑌸𑍇𑌤𑍍' 𑌇𑌤𑌿 ||

𑌤𑍍𑌰𑌿𑌰𑌾𑌤𑍍𑌰𑍋𑌪𑌵𑌾𑌸𑌃 𑌅𑌕𑌾𑌮𑌕𑍃𑌤𑌸𑌕𑍃𑌦𑍍𑌭𑍋𑌜𑌨𑌵𑌿𑌷𑌯𑌃 | 𑌅𑌤𑍍𑌰𑍈𑌵 𑌵𑌿𑌷𑌯𑍇 𑌲𑌿𑌖𑌿𑌤𑍋𑌽𑌪𑌿—

'𑌭𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌵𑌾𑌰𑍍𑌧𑍁𑌷𑌿𑌕𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌨𑌂 𑌵𑍍𑌰𑌤𑌸𑍍𑌯𑌾𑌵𑍍𑌰𑌤𑌸𑍍𑌯 𑌵𑌾 |
𑌶𑍂𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌚 𑌤𑌥𑌾 𑌭𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌤𑍍𑌰𑌿𑌰𑌾𑌤𑍍𑌰𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑌭𑍋𑌜𑌨𑌃' 𑌇𑌤𑌿 ||

𑌅𑌤𑍍𑌰𑍈𑌵 𑌵𑌿𑌷𑌯𑍇 𑌅𑌶𑌕𑍍𑌤𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌕𑍂𑌰𑍍𑌚𑌪𑌞𑍍𑌚𑌗𑌵𑍍𑌯𑌪𑍍𑌰𑌾𑌶𑌨𑌮𑌾𑌹 𑌪𑌰𑌾𑌶𑌰𑌃—

'𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌨𑍍𑌨𑌂 𑌸𑍂𑌤𑌕𑌾𑌨𑍍𑌨𑌂 𑌵𑌾𑌪𑍍𑌯𑌭𑍋𑌜𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌨𑌮𑍇𑌵 𑌚 |

---

ஆயுதம் விற்பவன், நாய்களால் பிழைப்பவன், கள் விற்பவன், எண்ணெய் விற்பவன், வஸ்த்ரத்தை வெளுப்பவன், ரஜஸ்வலை, ஜாரனை வீட்டில் வைத்திருப்பவள் இவர்களின் அன்னத்தையும், கர்ப்பஹத்தி செய்தவனால் பார்க்கப்பட்டதும், ரஜஸ்வலையால் தொடப்பட்டதும், பக்ஷியினால் கொத்தப்பட்டதும், நாயால் தொடப்பட்டதும், பசுவினால் மோக்கப் பட்டதும், புத்திபூர்வமாய்க் காகினால் தொடப்பட்டதும், தும்மலால் கெடுக்கப்பட்டதும், ஆகிய அன்னத்தையும், மதமுள்ளவன், கோபமுடையவன், வ்யாதிஸ்தன், இவர்களுடைய அன்னத்தையும், புகழப்படாத அன்னத்தையும், தேவபித்ரு சேஷமல்லாத மாம்ஸத்தையும் புஜித்தால், மூன்று நாள் உபவாஸமாயிருக்கவேண்டும்.

மூன்று நாள் உபவாஸம் என்றது அறியாமையால் ஒருமுறை புஜித்ததைப்பற்றியது. இதேவிஷயத்தில்,

**லிகிதரும்:**— வட்டியால் ஜீவிப்பவன், வ்ரதத்தையனுஷ்டிக்கிறவன், வ்ரதத்தை யனுஷ்டிக்காதவன், சூத்ரன் இவர்களின் அன்னத்தைப் புஜித்தால், மூன்று நாள் உபவாஸமிருக்கவேண்டும்.

இதே விஷயத்தில் சக்தியற்றவனுக்கு ப்ரம்ஹகூர்ச்ச பஞ்சகவ்ய ப்ராசனத்தைச் சொல்லுகிறார்,

**பராசரர்:**— சூத்ரன், ஆசௌசமுடையவன், எவனுடைய

𑌶𑌙𑍍𑌕𑌿𑌤𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌨𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌟𑌂 𑌤𑌥𑍈𑌵 𑌚 ॥ 𑌯𑌦𑌿 𑌭𑍁𑌕𑍍𑌤𑌂 𑌤𑍁 𑌵𑌿𑌪𑍍𑌰𑍇𑌣 𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑌾𑌪𑌦𑍋𑌽𑌪𑌿 𑌵𑌾 । 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌸𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌕𑍂𑌰𑍍𑌚𑌂 𑌤𑍁 𑌪𑌾𑌵𑌨𑌮𑍍' 𑌇𑌤𑌿 । 𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑌾𑌪𑌤𑍍𑌕𑌾𑌲𑍇 𑌵𑌾 𑌯𑍋 𑌵𑌿𑌪𑍍𑌰𑍋 𑌭𑍁𑌙𑍍𑌕𑍍𑌤𑍇, 𑌸 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌕𑍂𑌰𑍍𑌚𑌂 𑌸𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 । 𑌯𑌸𑍍𑌤𑍁 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌭𑍁𑌙𑍍𑌕𑍍𑌤𑍇 𑌸 𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌂 𑌸𑌮𑌾𑌚𑌰𑍇𑌦𑌿𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥

𑌅𑌕𑌾𑌮𑌕𑍃𑌤𑌸𑌕𑍃𑌦𑍍𑌭𑍋𑌜𑌨𑌵𑌿𑌷𑌯𑍇 𑌅𑌶𑌕𑍍𑌤𑌸𑍍𑌯 𑌹𑌾𑌰𑍀𑌤𑌸𑍍𑌤𑍂𑌪𑌵𑌾𑌸𑌮𑌾𑌹—

'𑌮𑍃𑌤𑌸𑍂𑌤𑌕𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌅𑌶𑍌𑌚𑍇𑌨𑌾𑌪𑌿 𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑌮𑍍 । 𑌶𑌙𑍍𑌕𑌿𑌤𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑌾𑌂 𑌵𑌿𑌦𑍍𑌵𑌿𑌷𑍋𑌽𑌨𑍍𑌨𑌯𑍋𑌰𑌪𑌿 𑌵𑌾 ॥ 𑌯𑌦𑌿 𑌭𑍁𑌞𑍍𑌜𑍀𑌤 𑌵𑌿𑌪𑍍𑌰𑍋 𑌯𑌃 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌕𑌥𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 । 𑌏𑌕𑌰𑌾𑌤𑍍𑌰𑍋𑌪𑌵𑌾𑌸𑌶𑍍𑌚 𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍍𑌯𑌷𑍍𑌟𑌶𑌤𑌂 𑌜𑌪𑍇𑌤𑍍 ॥ 𑌪𑍍𑌰𑌾𑌶𑌯𑍇𑌤𑍍 𑌪𑌞𑍍𑌚𑌭𑌿𑌰𑍍𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍈𑌃 𑌪𑌞𑍍𑌚𑌗𑌵𑍍𑌯𑌂 𑌪𑍃𑌥𑌕𑍍 𑌪𑍃𑌥𑌕𑍍 । 𑌏𑌤𑍇𑌨 𑌪𑍂𑌯𑌤𑍇 𑌵𑌿𑌪𑍍𑌰𑍋 𑌹𑍍𑌯𑌭𑍋𑌜𑍍𑌯𑌾𑌨𑍍𑌨𑌭𑍋𑌜𑌨𑌾𑌤𑍍' 𑌇𑌤𑌿 । 𑌅𑌕𑌾𑌮𑌕𑍃𑌤𑌾𑌭𑍍𑌯𑌾𑌸𑍇 𑌤𑍁 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌨𑍋𑌕𑍍𑌤𑌂 𑌸𑌪𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌰𑌵𑍍𑌰𑌤𑌂 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌮𑍍 ॥

---

ஆன்னம் நிஷேதிக்கப்பட்டுள்ளதோ அவன் இவர்களின் அன்னம், ஸந்தேஹிக்கப்பட்டது, விலக்கப்பட்டது, முன்னால் உச்சிஷ்டமாக்கப்பட்டது, இந்த அன்னங்கள் ப்ராம்ஹணனால் அறியாமையாலாவது, ஆபத்தாலாவது புஜிக்கப்பட்டால் ப்ரம்ஹகூர்ச்ச பஞ்சகவ்ய ப்ராசனம் செய்யவேண்டும். அறிந்து புஜிக்கப்பட்டால் ப்ராஜாபத்ய க்ருச்ரத்தை யனுஷ்டிக்கவேண்டும்.

அறியாமையால் ஒருமுறை புஜித்த விஷயத்தில், சக்தியற்றவனுக்கு உபவாஸத்தைச் சொல்லுகிறார்,

**ஹாரீதர்:—** ம்ருதாசௌசி, ஜனனாசௌசி, சூத்ரன் இவர்களின் அன்னம், அசுத்தனால் சமைக்கப்பட்ட அன்னம், ஸந்தேகப்பட்ட அன்னம், விலக்கப்பட்ட அன்னம், சத்ருவின் அன்னம் இவைகளை ப்ராம்ஹணன் புஜித்தால், அவனுக்கு ப்ராயஶ்சித்தம் எப்படி? ஒருநாள் உபவாஸமும் நூற்றெட்டுமுறை காயத்ரீ ஜபமும் ப்ராயஶ்சித்தம். ஐந்து மந்த்ரங்களால் பஞ்சகவ்யத்தைத் தனித்தனியாய் ப்ராசனம் செய்விக்கவேண்டும். இவைகளால் ப்ராம்

𑌶𑌙𑍍𑌖𑌸𑍍𑌤𑍁 𑌯𑌵𑌯𑌵𑌾𑌗𑍂𑌪𑌾𑌨𑌮𑌾𑌹—

'𑌅𑌭𑍋𑌜𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌤𑍁 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌶𑍂𑌦𑍍𑌰𑍋𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌟𑌮𑍇𑌵 𑌚 ।
𑌜𑌗𑍍𑌧𑍍𑌵𑌾 𑌮𑌾𑌂𑌸𑌮𑌭𑌕𑍍𑌷𑍍𑌯𑌂 𑌚 𑌸𑌪𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌰𑌂 𑌯𑌵𑌾𑌨𑍍 𑌪𑌿𑌬𑍇𑌤𑍍' 𑌇𑌤𑌿 ॥

𑌕𑌾𑌮𑌕𑍃𑌤𑌾𑌭𑍍𑌯𑌾𑌸𑍇 𑌹𑌾𑌰𑍀𑌤𑍋𑌕𑍍𑌤𑌂 𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌮𑍍 ॥

𑌤𑌥𑌾 𑌶𑌙𑍍𑌖𑍋𑌽𑌪𑌿—

'𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌭𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌤𑌥𑌾 𑌰𑌙𑍍𑌗𑌾𑌵𑌤𑌾𑌰𑌿𑌣𑌃 । 𑌚𑌿𑌕𑌿𑌤𑍍𑌸𑌕𑌸𑍍𑌯 𑌕𑍍𑌰𑍂𑌰𑌸𑍍𑌯 𑌤𑌥𑌾 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌮𑍃𑌗𑌜𑍀𑌵𑌿𑌨𑌃 ॥ 𑌅𑌭𑌿𑌶𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌚𑍋𑌰𑌸𑍍𑌯 𑌅𑌵𑍀𑌰𑌾𑌯𑌾𑌃 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌸𑍍𑌤𑌥𑌾 । 𑌚𑌰𑍍𑌮𑌕𑌾𑌰𑌸𑍍𑌯 𑌵𑍇𑌣𑌸𑍍𑌯 𑌕𑍍𑌲𑍀𑌬𑌸𑍍𑌯 𑌪𑌤𑌿𑌤𑌸𑍍𑌯 𑌚 ॥ 𑌰𑍁𑌕𑍍𑌮𑌕𑌾𑌰𑌸𑍍𑌯 𑌤𑌕𑍍𑌷𑍍𑌣𑌶𑍍𑌚 𑌰𑌜𑌕𑌸𑍍𑌯 𑌚 𑌵𑌾𑌰𑍍𑌧𑍁𑌷𑍇𑌃 । 𑌕𑌦𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌨𑍃𑌶𑌂𑌸𑌸𑍍𑌯 𑌵𑍇𑌶𑍍𑌯𑌾𑌯𑌾𑌃 𑌕𑌿𑌤𑌵𑌸𑍍𑌯 𑌚 ॥ 𑌗𑌣𑌾𑌨𑌾𑌂 𑌕𑍍𑌷𑌿𑌤𑌿𑌪𑌾𑌲𑌾𑌨𑌾𑌂 𑌮𑍃𑌗𑌜𑍀𑌵𑌿𑌶𑍍𑌵𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌨𑌾𑌮𑍍 । 𑌸𑍌𑌨𑌿𑌕𑌾𑌨𑌾𑌂 𑌸𑍂𑌤𑌕𑌾𑌨𑌾𑌂 𑌭𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌸𑌪𑍍𑌤𑌵𑍍𑌰𑌤𑌂 𑌚𑌰𑍇𑌤𑍍' 𑌇𑌤𑌿 ॥ 𑌸𑌪𑍍𑌤𑌵𑍍𑌰𑌤𑌂 = 𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌮𑍍 ॥

---

ஹ்மணன் சுத்தனாகிறான். அபோஜ்ய போஜனத்திலும் இதே ப்ராயச்சித்தம்.

அறியாமையால் பலமுறை செய்யப்பட்ட விஷயத்தில் விஷ்ணுவால் சொல்லப்பட்ட ஏழுநாள் உபவாஸம் ப்ராயச்சித்தம் என்று அறியத்தக்கது.

**மனு**வோவெனில், யவைக் கஞ்சியின் பானத்தை விதிக்கின்றார்:— அபோஜ்யான்னர்களின் அன்னத்தையும், ஸ்த்ரீ சூத்ர உச்சிஷ்டத்தையும் நிஷித்தமான மாம்ஸத்தையும், புஜித்தால், ஏழுநாள் முழுவதும் யவைக் கஞ்சியை மட்டில் குடிக்கவேண்டும்.

புத்திபூர்வமாய் அடிக்கடி புஜித்தால், ஹாரீதரால் சொல்லப்பட்ட சாந்த்ராயணம் ப்ராயச்சித்தம். அவ்விதம்,

**சங்கரும்**:— சூத்ரன், நாடகத்தில் நடிப்பவன், வைத்யன், கொடியவன், ஸ்த்ரீகளால் பிழைப்பவன், ம்ருகத்தால் பிழைப்பவன், அபவாதமுள்ளவன், திருடன், பதி புத்ரன் இல்லாத ஸ்த்ரீ, சக்கிலியன், மூங்கிலால் ஜீவிப்பவன், நபும்ஸகன், பதிதன், தட்டான், தச்சன், வண்ணான், வட்டியால் ஜீவிப்பவன், லோபி, ஹிம்ஸிப்பவன், வேசி, சூதாடுபவன், இவர்களின் அன்னத்தையும், கூட்டம், அரசன், ம்ருகங்களால் ஜீவிப்பவன், நாயால் பிழைப்பவன்,

𑌶𑍁𑌕𑍍𑌤𑌾𑌦𑌿𑌭𑌕𑍍𑌷𑌣𑍇 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍍 ॥

𑌶𑍁𑌕𑍍𑌤𑌾𑌦𑌿𑌭𑌕𑍍𑌷𑌣𑍇 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑌾𑌹 𑌮𑌨𑍁𑌃—

'𑌶𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌿 𑌚 𑌕𑌷𑌾𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌪𑍀𑌤𑍍𑌵𑌾𑌽𑌮𑍇𑌧𑍍𑌯𑌾𑌨𑍍𑌯𑌪𑌿 𑌦𑍍𑌵𑌿𑌜𑌃 ।
𑌤𑌾𑌵𑌦𑍍𑌭𑌵𑌤𑍍𑌯𑌪𑍍𑌰𑌯𑌤𑍋 𑌯𑌾𑌵𑌤𑍍𑌤𑌨𑍍𑌨 𑌵𑍍𑌰𑌜𑌤𑍍𑌯𑌧𑌃' 𑌇𑌤𑌿 ॥

𑌆𑌪𑌸𑍍𑌤𑌮𑍍𑌬𑌃—

'𑌅𑌭𑍋𑌜𑍍𑌯𑌂 𑌭𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌨𑍈𑌷𑍍𑌪𑍁𑌰𑍀𑌷𑍍𑌯𑌂 𑌤𑌤𑍍 𑌸𑌪𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌰𑍇𑌣𑌾𑌵𑌾𑌪𑍍𑌯𑌤𑍇' 𑌇𑌤𑌿 ॥

𑌅𑌭𑍋𑌜𑍍𑌯𑌾𑌶𑌨𑌾𑌦𑌿𑌭𑌕𑍍𑌷𑌣𑍇 𑌨𑌿𑌷𑍍𑌪𑍁𑌰𑍀𑌷𑌭𑌾𑌵𑌃 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌃 । 𑌯𑌾𑌵𑌦𑍁𑌦𑌰𑌂 𑌨𑌿𑌷𑍍𑌪𑍁𑌰𑍀𑌷𑌂 𑌭𑌵𑌤𑌿, 𑌤𑌾𑌵𑌦𑍁𑌪𑌵𑌸𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑍍 । 𑌤𑌤𑍍 𑌸𑌪𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌰𑍇𑌣𑌾𑌵𑌾𑌪𑍍𑌯𑌤𑍇 । 𑌯𑍇𑌷𑌾𑌂 𑌤𑍍𑌰𑌿𑌰𑌾𑌤𑍍𑌰𑍇𑌣𑍈𑌵 𑌨𑍈𑌷𑍍𑌪𑍁𑌰𑍀𑌷𑍍𑌯𑌮𑌵𑌾𑌪𑍍𑌯𑌤𑍇, 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌤𑌾𑌵𑌤𑍈𑌵 𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 ॥

---

மாம்ஸம் விற்கிறவன், ஆசௌச முடையவன் இவர்களின் அன்னத்தையும் ப்ராம்ஹணன் புஜித்தால், சாந்த்ராயண க்ருச்ரத்தை யனுஷ்டிக்கவேண்டும்.

## புளித்தது முதலியதைப் பக்ஷிப்பதில் ப்ராயஶ்சித்தம்.

மனு:— புளித்த வஸ்துக்களேயும், கஷாயங்களேயும், அசுத்த வஸ்துக்களேயும் ப்ராம்ஹணன் குடித்தால், அவை ஜீர்ணமாகும் வரையில் அசுத்தனுவான்.

ஆபஸ்தம்பர்:— "நிஷித்தமான மாம்ஸம் முதலியதைப் புஜித்தால், வயிற்றில் மலமில்லாமலிருப்பது ப்ராயஶ்சித்தம், அது ஏழு நாளால் அடையப்படும்," என்று.

நிஷித்தமான மாம்ஸம் முதலியதைப் புஜித்தால், வயிற்றில் மலமில்லாமை செய்யத்தகுந்தது. வயிற்றில் மலம் என்பது எது வரையில் இல்லாமலிருக்குமோ அது வரையில் உபவாஸம் இருக்க வேண்டும். அது (மலமின்மை யென்பது) ஏழு நாளில் அடையக் கூடியது. எவர்களுக்கு மூன்று நாட்களாலேயே மலமில்லாமை ஏற்படுமோ, அவர்களுக்கு மூன்று நாளாலேயே சுத்தி. அவ்விதமே,

तथा च गौतमः—

'अभोज्यभोजने निष्पुरीषभावस्त्रिरात्रम् अभोजनं सप्तरात्रं वा' इति ॥

## व्यतीपातादिभोजने प्रायश्चित्तम् ॥

व्यतीपातादिभोजने प्रायश्चित्तमाह देवलः—

'व्यतीपाते यदन्नं च महापुरुषभोजनम् । कर्मान्ने रिपुजे चैव दशाहे बलिभोजनम् ॥ भूतप्रेतपिशाचानां यदन्नं परिकल्पितम् । दुष्टं वर्जनीयं तद् ब्रह्मराक्षसभोजनम् ॥ धनतृष्णया यो विप्रो भोजनपरायणः । तदानीं मृत्युमाप्नोति जीवेद्वा पापकारकः ॥ तस्य दोषापनोदार्थं प्रायश्चित्तमिदं स्मृतम् । प्राजापत्यद्वयं कृत्वा पुनःसंस्कारमर्हति ॥ पञ्चगव्यं पिबेत्पश्चाद् भुवि शुद्धो भवति मानवः' इति ॥

கௌதமர்:— நிஷித்தமான வஸ்துவைப் புஜித்தால், வயிற்றில் மலமில்லாமலிருக்கும் தன்மை ப்ராயஶ்சித்தம். அத் தன்மை மூன்று நாட்களால் அடையக்கூடும். அல்லது ஏழு நாட்களால்.

## வ்யதீபாதம் முதலியதில் புஜிப்பதில் ப்ராயஶ்சித்தம்.

தேவலர்:— வ்யதீபாதான்னம், மஹாபுருஷான்னம், கர்மான்னம், சத்ருவின் அன்னம், தசாஹத்தில் பலி, பூதம், ப்ரேதம், பிசாசம், ப்ரம்ஹராக்ஷஸம் இவைகளைக் குறித்து வைக்கப்பட்ட அன்னம், இவைகள் பாபப்ரதங்கள். அவைகளை வர்ஜிக்க வேண்டும். எந்த ப்ராம்ஹணன் பணத்தாசையால் இந்த அன்னங்களைப் புஜிக்கின்றானோ அவன் அப்பொழுதே மரணத்தை யடைவான். பாபச்செயலுடைய இவன் பிழைத்தாலும் அந்தப் பாபத்தைப் போக்குவதற்கு ப்ராயச்சித்தம் இவ்விதம் விதிக்கப்பட்டுள்ளது. இரண்டு ப்ராஜாபத்ய க்ருச்ரம் அனுஷ்டித்து, புநருபனயனம் செய்துகொண்டு, பஞ்சகவ்ய ப்ராசனம் செய்யவேண்டும். பிறகு இப்புவியில் சுத்தனாவான்.

𑌅𑌯𑍁𑌤𑌸𑌹𑌸𑍍𑌰𑌭𑍋𑌜𑌨𑍇 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍍 ॥

𑌅𑌯𑍁𑌤𑌸𑌹𑌸𑍍𑌰𑌭𑍋𑌜𑌨𑍇 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑌾𑌹 𑌮𑌾𑌰𑍍𑌕𑌣𑍍𑌡𑍇𑌯𑌃—

'𑌅𑌯𑍁𑌤𑍇 𑌵𑌾 𑌸𑌹𑌸𑍍𑌰𑍇 𑌵𑌾 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌭𑍋𑌜𑌨𑍇 । 𑌜𑌿𑌹𑍍𑌵𑌾𑌚𑌾𑌪𑌲𑍍𑌯𑌤𑌃 𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌂 𑌭𑍁𑌞𑍍𑌜𑍀𑌤𑌾𑌪𑌃 𑌪𑌿𑌬𑍇𑌤𑍍𑌤𑍁 𑌵𑌾 ॥ 𑌪𑌕𑍍𑌷𑌂 𑌵𑌾 𑌮𑌾𑌸𑌮𑍇𑌵 𑌵𑌾 𑌭𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌵𑌿𑌪𑍍𑌰𑍋 𑌨𑌿𑌰𑌨𑍍𑌤𑌰𑌮𑍍 । 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌂 𑌪𑌰𑌾𑌕𑌂 𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌚 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌵𑌾𑌪𑍍𑌨𑍁𑌯𑌾𑌤𑍍 ॥ 𑌵𑌰𑍍𑌷𑌾𑌦𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌮𑌿𑌹 𑌶𑍂𑌦𑍍𑌰𑌤𑍍𑌵𑌮𑌵𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑍀𑌹 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌮𑍍' 𑌇𑌤𑌿 ॥

𑌦𑍇𑌵𑌲𑌃—

'𑌅𑌯𑍁𑌤𑍇 𑌵𑌾 𑌸𑌹𑌸𑍍𑌰𑍇 𑌵𑌾 𑌨𑌾𑌨𑌾𑌵𑌰𑍍𑌣𑌸𑌮𑌾𑌕𑍁𑌲𑍇 । 𑌪𑌤𑌿𑌤𑌕𑍍𑌲𑍀𑌬𑌪𑍈𑌡𑌾𑌲 𑌵𑍍𑌰𑌾𑌤𑍍𑌯𑌤𑌸𑍍𑌕𑌰𑌪𑍂𑌰𑌿𑌤𑍇 ॥ 𑌕𑍁𑌣𑍍𑌡𑌗𑍋𑌲𑌕𑌸𑌂𑌕𑍀𑌰𑍍𑌣𑍇 𑌨𑌟𑌗𑌾𑌯𑌕𑌸𑌂𑌕𑍁𑌲𑍇 । 𑌪𑌾𑌷𑌣𑍍𑌡𑌜𑌨𑌸𑌂𑌸𑌰𑍍𑌗𑍇 𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌤𑌕𑌿𑌸𑌙𑍍𑌕𑍁𑌲𑍇 ॥ 𑌭𑌾𑌣𑍍𑌡𑍋𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌟𑌸𑌂𑌪𑌾𑌕𑍇 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌜𑌨𑍇𑌨 𑌰𑍂𑌪𑌶𑍋𑌭𑌿𑌤𑍇 । 𑌯𑍋 𑌵𑌿𑌪𑍍𑌰𑍋 𑌲𑍋𑌭𑌮𑍋𑌹𑍇𑌨 𑌭𑍁𑌞𑍍𑌜𑍀𑌯𑌾𑌤𑍍 𑌕𑌦𑌾𑌚𑌨' 𑌇𑌤𑌿 ॥ 𑌸𑌤𑍍𑌰𑌭𑍋𑌜𑌨𑍇𑌽𑌪𑍍𑌯𑍇𑌵𑌮𑍍 ॥

## பதிணாயிரம், ஆயிரம் இந்தப் போஜனங்களில் ப்ராயஶ்சித்தம்.

**மார்க்கண்டேயர்:—** அயுத (பதிணாயிரம்) ப்ராம்ஹண போஜனத்திலாவது, ஸஹஸ்ர (ஆயிரம்) ப்ராம்ஹண போஜனத்திலாவது ப்ராம்ஹணன் நாக்கின் சபலத்தால் புஜித்தாலும், ஜலபானம் செய்தாலும், ஒரு பக்ஷம் அல்லது ஒரு மாஸம் இடைவிடாது புஜித்தால் முறையே பராக க்ருச்ரத்தையும், சாந்த்ராயண க்ருச்ரத்தையும் அனுஷ்டித்தால் சுத்தனாவான். ஒரு வர்ஷத்திற்கு மேல் புஜித்தால் சூத்ரத்தன்மையை யடைகிறான், நிச்சயம்.

**தேவலர்:—** அனேக வர்ணத்தார் கூடியதும், பதிதன், நபும்ஸகன், பைடாலன், வ்ராத்யன் (உபநயனமில்லாதவன்), திருடன் இவர்களால் நிறைந்ததும், குண்டர், கோளகர் இவர்களால் வ்யாபித்ததும், நடன், பாடுபவன் இவர்களால் நிறைந்ததும், பாஷண்டன், பாதகிகள் இவர்களுடன் சேர்ந்ததும், உச்சிஷ்டமான பாத்ரங்களில் சமைக்கப்படுவதும், ஸ்த்ரீகள் நிறைந்ததும், ஆகிய அயுத போஜனத்திலாவது ஸஹஸ்ர போஜனத்திலாவது புண்ய

## தீர்கஸத்ரபோஜநே ப்ராயஶ்சித்தம் ॥

தீர்கஸத்ரபோஜநே ப்ராயஶ்சித்தமாஹ தேவல: —

'வர்ஷத்வயம் வா வர்ஷம் வா யோ வா கோ வா த்விஜோ ஹவி । ஸங்கல்ப்ய போஜயேத்விப்ராந் தத்தீர்கம் ஸத்ரமுச்யதே ॥ விப்ரஸ்தத்ர ந புஞ்ஜீயாத் பூர்வவத்துஷ்டஸங்கத: । பக்ஷம் வா மாஸமேவ வா புக்த்வா நிஷ்க்ருதிமாசரேத் ॥ பக்ஷபுக்தௌ பராகம் ஸ்யாச்சாந்த்ரம் ஸ்யாந்மாஸபோஜநே' இதி ॥

## ஶூத்ரஸத்ரபோஜநே ப்ராயஶ்சித்தம் ॥

ஶூத்ரஸத்ரபோஜநே ப்ராயஶ்சித்தமாஹ ஸ ஏவ —

'ஶூத்ரஸத்ரே ந புஞ்ஜீத ப்ராணை: கண்டகதைரபி । புஞ்ஜந்நரகமாஸாத்ய வாயஸத்வமவாப்நுயாத் ॥ பக்ஷே மாஸ த்விமாஸாதௌ போஜநே து யதாக்ரமம் । யாவகம் தப்தக்ருச்ரம் ச

---

லோகத்தை விரும்பும் ப்ராம்ஹணன் ஒருகாலும் புஜிக்கக்கூடாது. ஸத்ரத்தில் புஜிப்பதிலும் இவ்விதமே நிஷேதம்.

## தீர்க்க ஸத்ர போஜனத்தில் ப்ராயஶ்சித்தம்.

தேவலர்:-எவனாவது ப்ராம்ஹணன் இரண்டு வர்ஷம், அல்லது ஒரு வர்ஷம் வரையில் ப்ராம்ஹணர்களுக்கு அன்னதானம் செய்வதாய் ஸங்கல்பம் செய்துகொண்டு ப்ராம்ஹணர்களைப் புஜிப்பித்தால் அது தீர்க்க ஸத்ரம் எனப்படுகிறது. ப்ராம்ஹணன் அதில் புஜிக்கக்கூடாது. முன்போல் துஷ்டர்கள் சேர்வார்களாகையால். ஒரு பக்ஷம் அல்லது ஒரு மாஸம் புஜித்தால் ப்ராயஶ்சித்தம் செய்துகொள்ளவேண்டும். ஒருபக்ஷம் புஜித்தால் பராகக்ருச்ரமும், ஒரு மாஸம் புஜித்தால் சாந்த்ராயண க்ருச்ரமும் ப்ராயஶ்சித்தம்.

## சூத்ர ஸத்ரத்தில் புஜித்தால் ப்ராயஶ்சித்தம்.

தேவலர்:— ப்ராணன்கள் கழுத்திலிருந்தாலும் சூத்ரன் அமைத்த ஸத்ரத்தில் ப்ராம்ஹணன் புஜிக்கக்கூடாது. புஜித்தவன் நரகத்தை யடைந்து காக்கையின் ஜன்மத்தை யடைவான். ஒரு பக்ஷம் வரையில் புஜித்தால் யாவகம் ப்ராயஶ்சித்தம். ஒரு மாஸமானல் தப்த க்ருச்ரம். இரண்டு மாஸமானல் ப்ராஜாபத்ய க்ருச்ரம்.

प्राजापत्यमथैकं वा ॥ कृत्वा शान्तिमवाप्नोति द्विजः पापक्षयात् कृतात्' इति ॥

### शूद्रवैश्यादिगृहे स्वयंपाकादिना भोजने प्रायश्चित्तम् ॥

शूद्रादिगृहे स्वयंपाकाद्भोजने प्रायश्चित्तमाह पराशरः—

'शूद्राणां वा वैश्याया गृहे वा तण्डुलं पचेत्। पक्त्वा भुक्त्वा स पापीयान् महान्तं नरकं व्रजेत् ॥ तद्दोषपरिहारार्थं प्रायश्चित्तमिदं स्मृतम्। परेद्युस्तद्दिनं वा वापयित्वा शिरोरुहान् ॥ स्नानं कृत्वा ततः पश्चात्तप्तकृच्छ्रं समाचरेत्। पञ्चगव्यं पिबेत् पश्चाच्छुद्धो भवति नान्यथा' इति ॥

### सङ्घातभोजने प्रायश्चित्तम् ॥

सङ्घातभोजने प्रायश्चित्तमाह गौतमः—

'सम्भूय द्विजा ये तु तीर्थयात्रापथेऽपि वा।

---

ஒரு வர்ஷமானல் சாந்த்ராயண க்ருச்ரம். இவ்விதம் செய்தால் சுத்தியை யடைகிறுன்.

## சூத்ரன், வேசிமுதலியவர்களின் வீட்டில் தானுகப் பாகம் முதலியதைச் செய்து சாப்பிடுவதில் ப்ராயஶ்சித்தம்.

**பராசரர்:**— சூத்ரனின் வீட்டிலாவது, வேசியின் வீட்டிலாவது அவர்களால் கொடுக்கப்பட்ட அரிசி முதலியதைச் சமைத்துப் புஜித்தால் அந்த மஹாபாபீ கொடிய நரகத்தை யடைவான். அந்தப் பாபத்தைப் பரிஹரிப்பதற்கு இந்த ப்ராயஶ்சித்தம் சொல்லப்பட்டுள்ளது:— மறு நாளிலாவது அன்றேயாவது கேசங்களை வபனம் செய்துகொண்டு, ஸ்நானம் செய்து, பிறகு தப்த க்ருச்ரத்தை யனுஷ்டிக்கவேண்டும். பிறகு பஞ்சகவ்ய ப்ராசனம் செய்யவேண்டும். பிறகு சுத்தனுகிறுன். மற்றப்படி சுத்தனுவதில்லை.

## கூட்டத்தாரின் போஜனத்தில் ப்ராயஶ்சித்தம்.

**கௌதமர்:**— எந்த ப்ராம்ஹணர்கள் கூட்டமாய்க்கூடி வழியிலோ தீர்த்த யாத்ரையிலேயோ தங்கள் த்ரவ்யத்தை ஒன்று

𑌸𑌹𑌸𑍍𑌰𑌭𑍋𑌜𑌨𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌪𑌕𑍍𑌵𑌾 𑌹𑍍𑌯𑍇𑌕𑍇𑌕𑍍𑌵𑍇𑌷𑌤𑌃 ॥ 𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌨𑌰𑌕𑌂 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌶𑍂𑌦𑍍𑌰𑌤𑍁𑌲𑍍𑌯𑌾 𑌨 𑌸𑌂𑌶𑌯𑌃 । 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌂 𑌮𑍁𑌨𑌿𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃 ॥ 𑌏𑌕𑌰𑌾𑌤𑍍𑌰𑍇 𑌪𑌞𑍍𑌚𑌗𑌵𑍍𑌯𑌂 𑌦𑍍𑌵𑌿𑌰𑌾𑌤𑍍𑌰𑍇 𑌯𑌾𑌵𑌕𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 । 𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌂 𑌤𑍍𑌰𑌿𑌰𑌾𑌤𑍍𑌰𑍇 𑌚 𑌪𑌕𑍍𑌷𑍇 𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍 ॥ 𑌮𑌾𑌸𑍇 𑌤𑍁 𑌶𑍂𑌦𑍍𑌰𑌤𑍁𑌲𑍍𑌯𑌾𑌸𑍍𑌸𑍍𑌯𑍁𑌃 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌣𑌾𑌮𑌰𑍍𑌧𑌂 𑌸𑌮𑍀𑌰𑌿𑌤𑌮𑍍' 𑌇𑌤𑌿 ॥

𑌕𑍍𑌰𑍀𑌤𑌾𑌨𑍍𑌨𑌭𑍋𑌜𑌨𑍇 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍍 ॥

---

𑌕𑍍𑌰𑍀𑌤𑌾𑌨𑍍𑌨𑌭𑍋𑌜𑌨𑍇 𑌨𑌿𑌨𑍍𑌦𑌾𑌮𑌾𑌹 𑌦𑍇𑌵𑌲𑌃—

'𑌦𑍇𑌵𑌾𑌲𑌯𑍇𑌷𑍁 𑌮𑌾𑌰𑍍𑌗𑍇𑌷𑍁 𑌗𑍍𑌰𑌾𑌮𑍇𑌷𑍁 𑌨𑌗𑌰𑍇𑌷𑍁 𑌚 । 𑌵𑌿𑌪𑍍𑌰𑌃 𑌕𑍍𑌰𑍀𑌤𑌾𑌨𑍍𑌨𑌭𑍋𑌕𑍍𑌤𑌾 𑌚𑍇𑌤𑍍𑌤𑌦𑌾 𑌨𑌰𑌕𑌮𑌾𑌪𑍍𑌨𑍁𑌯𑌾𑌤𑍍' 𑌇𑌤𑌿 ॥

𑌮𑌹𑌾𑌭𑌾𑌰𑌤𑍇𑌽𑌪𑌿—

'𑌕𑍍𑌰𑍀𑌤𑌾𑌨𑍍𑌨𑌂 𑌦𑍇𑌵𑌤𑌾𑌗𑌾𑌰𑍇 𑌗𑍍𑌰𑌾𑌮𑍇 𑌵𑌾 𑌪𑌤𑍍𑌤𑌨𑍇 𑌪𑌥𑌿 । 𑌯𑍋 𑌭𑍁𑌙𑍍𑌕𑍍𑌤𑍇 𑌚 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋𑌽𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑍍𑌨𑌰𑌕𑌂 𑌸 𑌸𑌮𑌾𑌪𑍍𑌨𑍁𑌯𑌾𑌤𑍍' 𑌇𑌤𑌿 ॥

---

சேர்த்துச் சமைத்து ஒரே இடத்தில் சாப்பிடுகிறார்களோ அவர்கள் எல்லோரும் நரகத்தை யடைவார்கள். அவர்கள் சூத்ரருக்கு ஸமமாவார். ஸம்சயமில்லை. அவர்களுக்குச் சுத்தியைக் கொடுக்கும் ப்ராயஶ்சித்தம் முனிவர்களால் இவ்விதம் சொல்லப்பட்டுள்ளது:— ஒரு நாள் புஜித்தால் பஞ்சகவ்ய ப்ராசனம். இரண்டு நாளானால் யாவகம். மூன்றுநாளானால் ப்ராஜாபத்ய க்ருச்ரம். ஒரு பக்ஷமானால் சாந்த்ராயண க்ருச்ரம். ஒரு மாஸம் புஜித்தால் சூத்ரனுக்கு ஸமமாவர். ஸ்த்ரீகளுக்கானால் சொல்லியதில் பாதி ப்ராயஶ்சித்தம்.

## விலைக்கு வாங்கிய அன்னத்தைப் புஜிப்பதில் ப்ராயஶ்சித்தம்.

விலைக்கு வாங்கிய அன்னத்தைப் புஜிப்பதை நிந்திக்கிறார்,

**தேவலர்:—** தேவாலயங்கள், வழிகள், க்ராமங்கள், நகரங்கள் இவைகளில் ப்ராம்ஹணன் விலைக்கு வாங்கிய அன்னத்தைப் புஜித்தால், அப்பொழுது நரகத்தை யடைவான்.

**மஹாபாரதத்திலும்:—** தேவாலயம், க்ராமம், பட்டணம், வழி இவைகளில் விலைக்கு வாங்கிய அன்னத்தை எந்த ப்ராம்ஹணன் அறியாமையால் புஜிக்கின்றானோ அவன் நரகத்தை யடைவான்.

हेमाद्रौ —

'विप्रः कण्ठगतप्राणः शूद्रान्नं भक्षयेद्यदि । ग्रामे वा नगरे तीर्थे महादेवालयेऽपि वा ॥ स गत्वा नरकं घोरं नानायोनिषु जायते । तस्मात्तस्य विशुद्ध्यर्थं प्रायश्चित्तमुदीरितम् ॥ त्रिरात्रं भोजने कार्यं पक्षे तप्तं समाचरेत् । महातप्तं तु मासे च वत्सरे चान्द्रमुच्यते ॥ अतःपरं शूद्रतुल्यो विद्वानपि न संशयः । विप्रस्त्रीणामेतदर्धं यतीनां द्विगुणं भवेत्' इति ॥

यागान्नभोजने प्रायश्चित्तम् ॥

यागान्नभोजने प्रायश्चित्तमाह कण्वः —

'यज्ञेषु पशुबन्धेषु भुङ्क्ते यस्तु द्विजः । स वै नरकमाप्नोति स शूद्रसमतो द्विजः ॥ होमात्पूर्वे

---

**ஹேமாத்ரியில்:—** ப்ராம்ஹணன் ப்ராணன் கழுத்திலிருந்தாலும க்ராமத்திலோ, நகரத்திலோ, தீர்த்தத்திலோ, சிவாலயத்திலோ விலைக்கு வாங்கிய அன்னத்தைப் புஜிப்பானாகில், அவன் கொடிய பலவித நரகத்தை யடைந்து பலவிதப் பிறப்புக்களை யடைவான். ஆகையால். அந்தப் பாபத்தைப் போக்குவதற்கு ப்ராயஶ்சித்தம் சொல்லப்பட்டுள்ளது. மூன்றுநாள் புஜித்தால், ப்ராஜாபத்ய க்ருச்ரம். ஒரு பக்ஷமானால் தப்த க்ருச்ரம். ஒரு மாஸமானால் மாஹாதப்த க்ருச்ரம். ஒரு வர்ஷமானால் சாந்த்ராயண க்ருச்ரம். ப்ராயஶ்சித்தம் என்றுசொல்லப்படுகிறது. அதற்கு மேலானால் வித்வானானாலும் சூத்ரனுக்கு ஸமனாவான். ஸம்சயமில்லை ப்ராம்ஹண ஸ்த்ரீகளுக்கானால் சொல்லிய ப்ராயஶ்சித்தத்தில் பாதி. ஸந்யாஸிகளுக்கானால், இரண்டு மடங்கு ப்ராயஶ்சித்தம்.

## யாகத்தில் அன்னத்தைப் புஜிப்பதில் ப்ராயஶ்சித்தம்.

**கண்வர்:—** ப்ராம்ஹணன் யாகங்களிலும், பசுபந்தங்களிலும் அன்னத்தைப் புஜித்தால் அவன் நரகத்தையடைவான். அவன் சூத்ரனுக்கு ஸமமாவான். அவன் யாஹோமத்திற்குமுன்பு புஜித்

யதி வபாஹோமாத் ப்ராக் பாபம் மஹதஶ்நுதே । புநஸ்தஸ்யோபநயநம் ப்ராஜாபத்யேந ஶுத்த்யதி ॥ வபாயாகாத் பரம் விப்ரோ யோ புங்க்தே தீக்ஷிதாலயே । ப்ராஜாபத்யம் விஶுத்த்யர்த்தம் முநிபி: பரிகீர்த்திதம்' இதி ॥

காத்யாயந:—

‘ருத்விஜாம் ச பரஸ்த்ரீணாம் போக்த்ரூணாம் யாகஸத்மநி । உபோஷ்ய ரஜநீமேகாம் பஞ்சகவ்யேந ஶுத்த்யதி ॥ ஸுவாஸிநீ சேத்தத்பத்யு: பிபேத் பாதோதகம் ததா । விதவா வபநம் க்ருத்வா ப்ரபிபேத் ப்ரஹ்மகூர்சகம் ॥ யதிஶ்ச ப்ரஹ்மசாரீ ச பூர்வம் யாகாந்நபக்ஷணே । சாந்த்ரம் குர்யாத் வபாஹோமாத் பரம் காயம் ஸமாசரேத்' இதி ॥

அஸ்நாத்வா போஜநே ப்ராயஶ்சித்தம் ॥

அஸ்நாத்வா போஜநே ப்ராயஶ்சித்தமாஹ கௌதம: —

‘அஸ்நாத்வா போஜநம் விப்ரோ நீரோக: குருதே யதி ।

---

தால் மஹாபாபத்தை யடைவான், அவனுக்குப் புனருபநயனம் செய்யவேண்டும். ப்ராஜாபத்ய க்ருச்ரத்தால் சுத்தனாவான். தீக்ஷிதனின் வீட்டில் வபாயாகத்திற்குப் பிறகு எந்த ப்ராம்ஹணன் புஜிக்கிறானோ, அவனுக்குப் ப்ராஜாபத்ய க்ருச்ரம் ப்ராயச்சித்தம் என்று முனிவர்களால் சொல்லப்பட்டுள்ளது.

**காத்யாயனர்:—** யாகசாலையில் புஜித்த ருத்விக்குகள், அன்ய ஸ்த்ரீகள், இவர்களுக்கு, ஒரு இரவு உபவாஸமிருந்து பிறகு பஞ்சகவ்ய ப்ராசனம் செய்வதால் சுத்தி. ஸுமங்கலியானால், தனது பர்த்தாவின் பாத தீர்த்தத்தைப் பருகவேண்டும். விதவையானால், வபனம் செய்துகொண்டு ப்ரம்ஹகூர்ச்ச பஞ்சகவ்யத்தை ப்ராசனம் செய்யவேண்டும். ஸந்யாஸியும், ப்ரம்ஹசாரியும் வபாஹோமத்திற்குமுன் யாகான்னத்தைப் புஜித்தால் சாந்த்ராயண க்ருச்ரத்தை யனுஷ்டிக்கவேண்டும். வபாஹோமத்திற்குப் பிறகு புஜித்தால் ப்ராஜாபத்ய க்ருச்ர ப்ராயச்சித்தத்தை யனுஷ்டிக்கவேண்டும்.

## ஸ்நானம் செய்யாமல் புஜித்தால் ப்ராயச்சித்தம்.

**கௌதமர்:—** ரோகமில்லாத ப்ராம்ஹணன் ஸ்நானம் செய்

ஸ மலாஶீ ஸதா ஜ்ஞேய: ஸர்வகர்மபஹிஷ்க்ருத: ॥ ஶ்ராத்தகாலே து சாந்த்ரம் ஸ்யாத் க்ரஹணே த்விகுணம் ஸ்ம்ருதம் । பஞ்சபர்வஸு தப்தம் ஸ்யாதிதரத்ர து யாவகம் ॥ த்விகுணம் விதவாநாம் து யதீநாம் ப்ரஹ்மசாரிணாம்' இதி ॥

## அஶுசிகாலபோஜநே ப்ராயஶ்சித்தம் ॥

ஶாதாதப:—

'மூத்ரோச்சாரம் த்விஜ: க்ருத்வா ஹ்யக்ருத்வா ஶௌசமாத்மந: ।
மோஹாத்புக்த்வா த்ரிராத்ரம் ஸ்யாஜ்ஜ்ஞாத்வா ஸாந்தபநம் சரேத் ॥
மூத்ரயித்வா வ்ரஜந்மார்கம் ஸ்ம்ருதிப்ரம்ஶாஜ்ஜலம் பிபேத் ।
அஹோராத்ரோஷித: ஸ்நாத்வா ஜுஹுயாத் ஸர்பிஷா ஹவி:' இதி ॥

---

யாமல் புஜிப்பானாகில், அவன் மலத்தைப் புஜிப்பவனாயும், எல்லாக் கர்மங்களுக்கும் அனர்ஹனாயுமாவான். ச்ராத்த காலத்திலானால், சாந்த்ராயண க்ருச்ரம் ப்ராயஶ்சித்தம். க்ரஹணத்திலானால், இரண்டு சாந்த்ராயண க்ருச்ரம். பஞ்சபர்வங்களிலானால், தப்த க்ருச்ரம். (சுக்ல க்ருஷ்ண பக்ஷங்களில் சதுர்தசீ, அஷ்டமீ இந்தத் திதிகளும், அமை, பூர்ணிமை, ஸங்க்ரமணம் இவைகளும் பஞ்சபர்வங்களெனப்படுகின்றன.) மற்றக் காலங்களிலானால், யாவகக்ருச்ரம். விதவைகள், ஸந்யாஸிகள், ப்ரம்ஹசாரிகள் இவர்களுக்கு முன் சொல்லிய ப்ராயஶ்சித்தத்தில் இரண்டு மடங்கு.

## அசுத்தனாயுள்ள காலத்தில் புஜிப்பதில் ப்ராயஶ்சித்தம்.

**சாதாதபர்:—** ப்ராம்ஹணன், மூத்ர விஸர்க்கத்தைச் செய்து, சௌசம் செய்துகொள்ளாமல், அறியாமையால் புஜித்தால், மூன்று நாள் க்ருச்ரத்தை யனுஷ்டிக்கவேண்டும். புத்திபூர்வமாய்ப் புஜித்தால், ஸாந்தபன க்ருச்ரத்தை யனுஷ்டிக்கவேண்டும். மூத்ரோத்ஸர்க்கம் செய்து வழியில் செல்பவன் மறதியினால் ஜலபானம் செய்தால், ஒருநாள் முழுவதும் உபவாஸமிருந்து, ஸ்நானம் செய்து, நெய்யுடன் ஹவிஸ்ஸை ஹோமம் செய்யவேண்டும்.

𑌵𑍍𑌯𑌾𑌘𑍍𑌰𑌃—

'𑌅𑌸𑍍𑌪𑍃𑌶𑍍𑌯𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌨𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌯𑌦𑌾 𑌹𑍍𑌯𑌶𑍍𑌨𑍇𑌤 𑌗𑍃𑌹𑌾𑌶𑍍𑌰𑌮𑍀 ।
𑌅𑌕𑌾𑌮𑌤𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌰𑌾𑌤𑍍𑌰𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌷𑌡𑍍𑌰𑌾𑌤𑍍𑌰𑌂 𑌕𑌾𑌮𑌤𑌶𑍍𑌚𑌰𑍇𑌤𑍍' 𑌇𑌤𑌿 ॥

𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌃—

'𑌅𑌸𑍍𑌨𑌾𑌤𑍍𑌵𑌾 𑌤𑍁 𑌯𑌦𑌾 𑌹𑍍𑌯𑌤𑍍𑌤𑍇 𑌪𑌿𑌣𑍍𑌡𑌂 𑌦𑌤𑍍𑌵𑌾 𑌪𑌿𑌤𑍁𑌰𑍍𑌵𑍍𑌰𑌤𑍀 ।
𑌸𑍍𑌪𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌶𑌵𑌮𑍁𑌦𑌕𑍍𑌯𑌾𑌂 𑌵𑌾 𑌚𑌣𑍍𑌡𑌾𑌲𑌂 𑌸𑍂𑌤𑌿𑌕𑌾𑌂 𑌤𑌥𑌾 ॥
𑌅𑌕𑌾𑌮𑌤𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌰𑌾𑌤𑍍𑌰𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾 𑌸𑌾𑌨𑍍𑌤𑌪𑌨𑌂 𑌚𑌰𑍇𑌤𑍍' 𑌇𑌤𑌿 ॥
𑌪𑌿𑌣𑍍𑌡𑌂 = 𑌪𑍍𑌰𑍇𑌤𑌪𑌿𑌣𑍍𑌡𑌮𑍍 ॥

𑌪𑌰𑍍𑌯𑍁𑌷𑌿𑌤𑌾𑌨𑍍𑌨𑌭𑍋𑌜𑌨𑍇 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍍 ॥

---

𑌪𑌰𑍍𑌯𑍁𑌷𑌿𑌤𑌾𑌨𑍍𑌨𑌭𑍋𑌜𑌨𑍇𑌽𑌪𑍍𑌯𑌾𑌹 𑌸 𑌏𑌵—

'𑌜𑌲𑍇 𑌨𑌿𑌧𑌾𑌯 𑌪𑍂𑌰𑍍𑌵𑍇𑌦𑍍𑌯𑍁𑌰𑍍𑌯𑌦𑌨𑍍𑌨𑌂 𑌵𑌿𑌨𑍍𑌦𑌤𑍇 𑌯𑍁𑌤𑌮𑍍 ।
𑌤𑌤𑍍𑌪𑌰𑍍𑌯𑍁𑌷𑌿𑌤𑌸𑌂𑌜𑍍𑌞𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌭𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌂 𑌚𑌰𑍇𑌤𑍍 ॥
𑌤𑍍𑌰𑌿𑌰𑌾𑌤𑍍𑌰𑌂 𑌪𑌞𑍍𑌚𑌰𑌾𑌤𑍍𑌰𑌂 𑌵𑌾 𑌭𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌪𑌰𑍍𑌯𑍁𑌷𑌿𑌤𑌂 𑌦𑍍𑌵𑌿𑌜𑌃 ।

---

**வ்யாக்ரர்:—** க்ருஹஸ்தன் தொடக்கூடாதவரைத் தொட்ட பிறகு ஸ்நானம் செய்யாமல் போஜனம் செய்வானாகில், அறியாமையானால், மூன்றுநாள் க்ருச்ரம் அனுஷ்டிக்கவேண்டும். புத்திபூர்வமானால், ஆறு நாள் க்ருச்ரத்தை யனுஷ்டிக்கவேண்டும்.

**ப்ரஜாபதி:—** ப்ரம்ஹசாரி பிதாவுக்கு ப்ரேதபிண்டத்தைக் கொடுத்தபிறகு ஸ்நானம் செய்யாமல் புஜித்தானாகில், அப்பொழுதும், சவத்தையாவது ரஜஸ்வலையையாவது சண்டாளனையாவது ப்ரஸவித்தவளையாவது தொட்டாலும் ஸ்நானம் செய்யாமல் புஜித்தால், அபுத்தி பூர்வமானால், மூன்றுநாள் க்ருச்ரம் அனுஷ்டிக்கவேண்டும். புத்திபூர்வமானல், ஸாந்தபன க்ருச்ரத்தை யனுஷ்டிக்கவேண்டும்.

## பழமையான அன்னத்தைப் புஜிப்பதில் ப்ராயஶ்சித்தம்.

**ப்ரஜாபதி:—** முதல் நாளில் பானையில் ஜலத்தில் போட்டு வைக்கப்பட்டுள்ள அன்னம் எதுவோ அது பர்யுஷிதம் எனப் படும். அதைப் புஜித்தால், சாந்த்ராயண க்ருச்ரம் அனுஷ்டிக்க வேண்டும். மூன்றுநாள் அல்லது ஐந்துநாள்வரையில் ப்ராம்ஹணன்

𑌤𑌸𑍍𑌯𑍋𑌪𑌨𑌯𑌨𑌂 𑌸𑌹 𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑍇𑌨𑌾𑌪𑌰𑍇𑌽𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍 ॥ 𑌹𑌿𑌙𑍍𑌗𑍁𑌜𑍀𑌰𑌕𑌸𑌂𑌮𑌿𑌶𑍍𑌰𑌂 𑌤𑌿𑌨𑍍𑌤𑍍𑌰𑌿𑌣𑍀𑌰𑌸𑌸𑌂𑌯𑍁𑌤𑌮𑍍 । 𑌦𑍁𑌰𑍍𑌗𑌨𑍍𑌧𑌰𑌹𑌿𑌤𑌂 𑌯𑌤𑍍𑌤𑍁 𑌭𑍋𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌦𑍍𑌵𑌿𑌜𑌸𑌤𑍍𑌤𑌮𑍈𑌃 ॥ 𑌦𑌧𑍍𑌨𑌾 𑌘𑍃𑌤𑍇𑌨 𑌤𑍈𑌲𑍇𑌨 𑌯𑌦𑌨𑍍𑌨𑌂 𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 । 𑌦𑍁𑌰𑍍𑌗𑌨𑍍𑌧𑌰𑌹𑌿𑌤𑌂 𑌭𑍋𑌜𑍍𑌯𑌂 𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌮𑌤𑍋𑌽𑌨𑍍𑌯𑌥𑌾' 𑌇𑌤𑌿 ॥

𑌓𑌦𑌨𑌵𑌟𑌕𑌮𑌾𑌷𑌵𑌟𑌕𑌾𑌦𑌿𑌭𑌕𑍍𑌷𑌣𑍇 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍍 ॥

---

𑌗𑌾𑌲𑌵𑌃—

𑌓𑌦𑌨𑌾𑌦𑍍𑌵𑌿𑌹𑌿𑌤𑌂 𑌵𑌸𑍍𑌤𑍁 𑌶𑍁𑌷𑍍𑌕𑍀𑌭𑍂𑌤𑌂 𑌯𑌦𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍 । 𑌅𑌭𑍋𑌜𑍍𑌯𑌂 𑌭𑌕𑍍𑌷𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌤𑌦𑍍𑌯𑌾𑌵𑌕𑌂 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 ॥ 𑌦𑍁𑌰𑍍𑌗𑌨𑍍𑌧𑌰𑌹𑌿𑌤𑌂 𑌭𑌕𑍍𑌷𑍍𑌯𑌂 𑌤𑌥𑌾 𑌪𑌰𑍍𑌯𑍁𑌷𑌿𑌤𑌂 𑌚 𑌯𑌤𑍍 । 𑌵𑌟𑌕𑌂 𑌮𑌾𑌷𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑌂 𑌶𑌷𑍍𑌕𑍁𑌲𑍍𑌯𑌾𑌦𑌿 𑌤𑌥𑍈𑌵 𑌚 ॥ 𑌤𑍈𑌲𑌾𑌦𑌿𑌪𑌾𑌕𑌹𑍀𑌨𑌂 𑌚 𑌭𑌕𑍍𑌷𑍍𑌯𑌮𑌾𑌹𑍁𑌰𑍍𑌮𑌨𑍀𑌷𑌿𑌣𑌃 । 𑌮𑌾𑌷𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑌵𑌟𑌕𑌾𑌨𑍍 𑌶𑌷𑍍𑌕𑍁𑌲𑍀𑌂 𑌚

---

பர்யுஷிதத்தைப் புஜித்தால், அவனுக்குப் புநருபநயனத்துடன் சாந்த்ராயண க்ருச்ரம் ப்ராயஸ்சித்தம். பெருங்காயம், ஜீரகம் இவைகளுடன் கூடியதும், புளியின் ரஸத்துடன் சேர்ந்ததும், துர்நாற்றமற்றதுமான அன்னம் எதுவோ அது ப்ராம்ஹணர்களால் புஜிக்கத்தகுந்தது. தயிர், நெய், எண்ணெய் இவைகளால் எந்த அன்னம் சேர்க்கப்பட்டுள்ளதோ, அது துர்நாற்றமில்லாமலிருந்தால் புஜிக்கத்தகுந்தது. அவ்விதமில்லாவிடில், சாந்த்ராயண க்ருச்ரம் அனுஷ்டிக்கவேண்டும்.

## சோற்று வடாம், உளுந்து வடாம் முதலியதைப் புஜித்தால் ப்ராயஸ்சித்தம்.

**காலவர்:**—சோற்றினால் செய்யப்பட்ட பண்டம் உலர்ந்ததாயானால், அது புஜிக்கத்தகாதது. அதைப் புஜித்தால் யாவக க்ருச்ரத்தை யனுஷ்டிக்கவேண்டும். துர்நாற்றமில்லாமலிருந்தால் புஜிக்கலாம். அவ்விதம் பர்யுஷிதமும் துர்நாற்றமில்லாமலிருந்தால் புஜிக்கத்தகுந்தது. உளுந்தால் செய்யப்பட்ட வடாம், முறுக்கு முதலியது, எண்ணெய் முதலியதில் பாகம் செய்யப்படாதது ஆகிய இவைகளை வித்வான்கள் புஜிக்கத்தகுந்தது என்கின்றனர். உளுந்தால் செய்யப்பட்ட வடாங்களையும், அவ்விதமான முறுக்கு

तथाविधाः । निष्कारणं तथा विप्रो न भुञ्जीत कदाचन ।
पित्र्यर्थं देवकार्यार्थं पक्त्वा भुक्त्वा न दोषभाक् ॥
वृथा तानीह भक्षित्वा यावकं कृच्छ्रमाचरेत्' इति ॥

पायसकृसरभक्षणे कालनियमः ॥

---

देवलः—

पायसं च कृसरं वृथा पक्त्वा द्विजोत्तमः । भुञ्जीत यदि मोहाद्वा उद्वम्य रजनीं तथा ॥ उपोष्य पञ्चगव्यं च पिबेत् शुद्धो भवति नान्यथा । रवौ धनुस्संस्थिते गृहे कन्या रजस्वला ॥ पितृदेवनिमित्तं च पायसं प्रशस्यते' इति ॥

गौतमः—

'धनुर्मासे गृहे कन्या यदि स्यात्प्रथमार्तवा । तथैव देवयात्रायां कृसरान्नं न दोषकृत् ॥ पितृ

---

முதலியவைகளையும் காரணமில்லாமல் ஒருபொழுதும் ப்ராம்ஹணன் புஜிக்கக்கூடாது. பித்ருக்களுக்காகவும், தேவர்களுக்காகவும் சமைத்துப் புஜித்தால் தோஷத்தை யடைவதில்லை. அவ்விதமில்லாமல் வீணாக அவைகளைப் புஜித்தால் யாவக க்ருச்ரத்தை யனுஷ்டிக்க வேண்டும்.

## பாயஸம், எள் சேர்ந்த பதார்த்தம் இவைகளைப் புஜிப்பதில் காலநியமம்.

**தேவலர்:**—பாயஸம், எள்ளுருண்டை இவைகளை வீணாய்ச் சமைத்து (பித்ரு தேவர்களுக்கல்லாமல்) ப்ராம்ஹணன் புஜிப்பானாகில், உடனே வாந்திசெய்து, அன்றிரவு உபவாஸமிருந்து, பிறகு பஞ்சகவ்ய ப்ராசனம் செய்யவேண்டும். பிறகு சுத்தனாவான். மற்றப்படி சுத்தனாவதில்லை. ஸூர்யன் தனூர்ராசியை யடைந்த பொழுதும் (மார்கழி மாஸத்தில்), வீட்டில் கன்யகை ரஜஸ்வலையானாலும், பித்ருதேவர்களுக்காகவும், பாயஸம் ச்லாகிக்கப்படுகிறது. (பாயஸத்தைச் சமைக்க வேண்டும்.)

**கௌதமர்:**—மார்கழி மாஸத்திலும், வீட்டில் கன்யகை முதல் தடவை ரஜஸ்வலையானாலும், தேவயாத்ரையிலும் எள்ளுடன் சேர்ந்த அன்னத்தைப் புஜிப்பது தோஷத்தைச் செய்யாது.

𑌕𑌾𑌰𑍍𑌯𑍇𑌷𑍁 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌦𑍈𑌵𑍇 𑌬𑌨𑍍𑌧𑍁𑌸𑌮𑌾𑌗𑌮𑍇 । 𑌪𑌕𑍍𑌵𑌭𑍋𑌜𑍍𑌯𑌂 𑌤𑌦𑌨𑍍𑌨𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌭𑍂𑌤𑌕𑍍𑌷𑍀𑌰𑌸𑌂𑌯𑍁𑌤𑌮𑍍 ॥ 𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑍇𑌨 𑌵𑌿𑌨𑌾 𑌭𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾𑌨𑍍𑌨𑍈𑌕𑌭𑍋𑌜𑌨𑌮𑍍 । 𑌪𑌞𑍍𑌚𑌗𑌵𑍍𑌯𑌂 𑌪𑌿𑌬𑍇𑌤𑍍𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍 𑌶𑍁𑌦𑍍𑌧𑍋 𑌭𑌵𑌤𑌿 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌮𑍍' 𑌇𑌤𑌿 ॥

𑌧𑌨𑍁𑌰𑍍𑌮𑌾𑌸𑍇 𑌚 𑌦𑍁𑌹𑌿𑌤𑌰𑌿 𑌭𑌗𑌿𑌨𑍍𑌯𑌾𑌂 𑌸𑍍𑌨𑍁𑌷𑌾𑌯𑌾𑌂 𑌚 𑌪𑍍𑌰𑌥𑌮𑌰𑍍𑌤𑍁𑌵𑌤𑍍𑌯𑌾𑌂 𑌪𑌿𑌤𑍃𑌦𑍇𑌵𑌕𑌾𑌰𑍍𑌯𑍇 𑌬𑌨𑍍𑌧𑍁𑌸𑌮𑌾𑌗𑌮𑍇 𑌚 𑌪𑌾𑌯𑌸𑌕𑍃𑌸𑌰𑌾𑌨𑍍𑌨𑌭𑍋𑌜𑌨𑍇 𑌨 𑌦𑍋𑌷𑌃 । 𑌅𑌨𑍍𑌯𑌤𑍍𑌰𑍈𑌕𑌰𑌾𑌤𑍍𑌰𑍋𑌪𑌵𑌾𑌸𑌃, 𑌪𑌞𑍍𑌚𑌗𑌵𑍍𑌯𑌪𑍍𑌰𑌾𑌶𑌨𑌂 𑌚 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑌿𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥

𑌵𑍍𑌰𑌾𑌤𑍍𑌯𑌕𑍁𑌷𑍍𑌠𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌨𑍍𑌨𑌭𑍋𑌜𑌨𑍇 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍍 ॥

---

𑌵𑍍𑌰𑌾𑌤𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌨𑍍𑌨𑌭𑍋𑌜𑌨𑍇 𑌦𑍇𑌵𑌲𑌃—

'𑌵𑍍𑌰𑌾𑌤𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌯𑌦𑌿 𑌕𑍁𑌷𑍍𑌠𑌿𑌨𑌾𑌂 𑌭𑍁𑌙𑍍𑌕𑍍𑌤𑍇 𑌵𑌿𑌪𑍍𑌰𑌃 𑌕𑍍𑌷𑍁𑌧𑌾𑌤𑍁𑌰𑌃 । 𑌏𑌕𑌾𑌦𑌶𑍍𑌯𑌾𑌂 𑌭𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑍈𑌵 𑌶𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑍈 𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌂

---

எல்லாப் பித்ருகார்யங்களிலும், தேவகார்யங்களிலும்; பந்துக்கள் வந்த காலத்திலும், அதிகமான பாலுடன் கூடிய அன்னத்தைச் சமைத்து அது புஜிக்கத்தகுந்ததாகும். காரணமில்லாமல் பாயஸ அன்னத்தைப் புஜித்தால் ஒருநாள் உபவாஸம் ப்ராயஶ்சித்தம். பிறகு பஞ்சகவ்ய ப்ராசனம் செய்யவேண்டும். பிறகு சுத்தனாகிறான். நிச்சயம்.

மார்கழி மாஸத்திலும், பெண்ணாவது, ஸஹோதரியாவது, நாட்டுப்பெண்ணாவது முதல்தடவையாய் ரஜஸ்வலையானாலும், பித்ருகார்யத்திலும், தேவகார்யத்திலும், பந்துக்கள் வந்த காலத்திலும், பாயஸம், எள்ளன்னம் இவைகளைப் புஜிப்பதில் தோஷமில்லை. மற்ற காலத்திலானால், ஒருநாள் உபவாஸமிருக்கவேண்டும். பஞ்சகவ்ய ப்ராசனமும் ப்ராயஶ்சித்தம், என்பது பொருள்.

## வ்ராத்யன், குஷ்டரோகி முதலியவரின் அன்னத்தைப் புஜித்தால் ப்ராயஶ்சித்தம்.

**தேவலர்:—** ப்ராம்ஹணன் பசியால் வருந்தியவனாய் வ்ராத்யன் (காலத்தில் உபநயன மாகாதவன்) குஷ்டரோகி இவர்களின் அன்னத்தைப் புஜித்தாலும், ஏகாதசியில் புஜித்தாலும், சுத்திக்காக, சாந்த்ராயண க்ருச்ரத்தை யனுஷ்டிக்கவேண்டும். குண்டன், கோளகன், பரிவித்தி, பரிவேத்தா இவர்களின் அன்னத்தைப்

[illegible]

'𑌅𑌗𑍍𑌨𑌿𑌹𑍋𑌤𑍍𑌰𑍀 𑌤𑌪𑌸𑍍𑌵𑍀 𑌚 𑌋𑌣𑌵𑌾𑌨𑍍 𑌮𑍍𑌰𑌿𑌯𑌤𑍇 𑌯𑌦𑌿 । 𑌅𑌗𑍍𑌨𑌿𑌹𑍋𑌤𑍍𑌰𑌂 𑌤𑌪𑌶𑍍𑌚𑍈𑌵 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌤𑌦𑍍𑌧𑌨𑌿𑌨𑌾𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍' 𑌇𑌤𑌿, 𑌤𑌦𑍇𑌤𑌦𑍍 𑌋𑌣𑌦𑍍𑌵𑍈𑌗𑍁𑌣𑍍𑌯𑌾𑌦𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌂 𑌮𑌰𑌣𑍇 𑌧𑌨𑌗𑍍𑌰𑌾𑌹𑌿𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌦𑍍𑌯𑌭𑌾𑌵𑍇 𑌚𑌾𑌵𑌗𑌨𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑍍 ॥

𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌦𑌿𑌵𑌿𑌕𑍍𑌰𑌯𑍇 𑌪𑍁𑌤𑍍𑌰𑌪𑌤𑍍𑌨𑍀𑌕𑌨𑍍𑌯𑌾𑌦𑌾𑌸𑍀𑌨𑌿𑌤𑍍𑌯𑌕𑌰𑍍𑌮𑌾𑌦𑌿𑌵𑌿𑌕𑍍𑌰𑌯𑍇 𑌚 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍍 ॥

𑌹𑍇𑌮𑌾𑌦𑍍𑌰𑍌—

'𑌪𑌾𑌪𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌪𑌾𑌪𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌂 𑌵𑌾𑌪𑌿 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌮𑍍

---

டுள்ளது. கடன்கொடுத்தவனுக்குத் தனத்தைக் கொடுத்துவிட்டு ப்ராயஶ்சித்தத்தை யனுஷ்டிக்கவேண்டும்.

"ப்ரூணஹத்யை செய்தவன் கல்பத்தின் முடிவில் பாபத்தினின்றும் விடுபடுவான். கடன் வாங்கியவன், (கடன் தீர்க்காவிடில்) ஒரு நாளும் விடுபடுவதில்லை" என்ற வசனம் ப்ராயஶ்சித்தம் செய்துகொள்ளாதவனைப்பற்றியது. ஆனால்,

**ஸம்வர்த்தர்:**—"அக்னி ஹோத்ரமுள்ளவனும், தபஸ்வியானவனும் கடனுடையவனாய் மரித்தால், அவன் செய்த அக்னி ஹோத்ரம், தபஸ் எல்லாம் கடன் கொடுத்தவனைச் சேர்ந்ததாகும்" என்று சொல்லிய வசனமோவெனில், அந்த வசனம் கடன் வாங்கிய த்ரவ்யம் இரண்டுமடங்கு ஆகியதற்குமேல் இறந்தாலும் தனத்தை க்ரஹித்தவனுக்குப் புத்ரன் முதலியவர் இல்லாவிடினும் என்றதைப் பற்றியது, என்றறியவும்.

**ப்ராம்ஹணர் முதலியவரை விற்பது, புத்ரன், பத்னீ, கந்யகை, வேலைக்காரி, நித்யகர்மம் முதலியது இவைகளை விற்பதில் ப்ராயஶ்சித்தம்**

**ஹேமாத்ரியில்:**— பாபபுத்தியுள்ள ப்ராம்ஹணன், ப்ராம்

ஜாது । வஶீக்ருத்யௌஷதைர்மந்த்ரைர்விக்ரயேத்யதி பாபதீ: ॥
பாலே சாந்த்ரம் த்விஜம் ப்ரோக்தம் பௌகண்டே த்வயம் சரேத் ।
தருணே து மஹாசாந்த்ரம் வ்ருத்தே ப்ரோக்தம் து தத்த்ரயம் ॥
அன்யவர்ணே து விக்ரீய ஸஹஸ்ரம் க்ருச்ச்ரமாசரேத் । விப்ரம்
ப: க்ஷத்ரியோ ஹ்ருத்வா விக்ரயேத்யதி பாபதீ: ॥ ப்ரஹ்மஹத்யா
வ்ரதம் க்ருத்வா ஶுத்திமாப்நோதி வைஶ்யக: । தததர்தேந
ஶுத்தஸ்யாச்சூத்ரோ விப்ரவிக்ரயே ॥ ஶூத்ரஸ்து விக்ரயே
விப்ரம் முஸல்யவதமர்ஹதி । ஜாரஜம் வாऽऽத்மஜம் வாऽபி
விக்ரீணீயாத் ஸுதம் யதி ॥ தத்தோஷபரிஹாரார்த்தம் மஹா
ஸாந்தபனம் சரேத் । பாலே ஸாந்தபனம் ப்ரோக்தம் பௌகண்டே
த்வயம் ஸ்ம்ருதம் ॥ குமாரே வ்ருத்தகாலே ச மஹாஸாந்தபன
த்ரயம் । ஸ்வபத்நீம் விக்ரயேத்யஸ்து ஸதீம் துஷ்டாமதவாऽபி வா ॥

---

ஹ்மணனையாவது, க்ஷத்ரியன், வைச்யன், சூத்ரன் இவர்களையாவது ஔஷதங்களாலும் மந்த்ரங்களாலும் வசப்படுத்தி, விற்பானுகில், விற்கப்பட்டவன் ப்ராம்ஹண பாலனுகில் சாந்த்ராயண க்ருச்ரம் ப்ராயஶ்சித்தமாகச் சொல்லப்பட்டுள்ளது. பௌகண்டனுகில், இரண்டு மடங்கு ப்ராயஶ்சித்தம். யௌவனமுள்ளவனுகில், மஹா சாந்த்ராயணம் ப்ராயஶ்சித்தம். வ்ருத்தனுகில், மூன்று மடங்கு ப்ராயஶ்சித்தம். (க்ஷத்ரியன் முதலிய) அந்யவர்ணனை விற்றால், ஸஹஸ்ரக்ருச்ரத்தை யனுஷ்டிக்கவேண்டும். பாபபுத்தியுள்ள க்ஷத்ரியன் ப்ராம்ஹணனை அபஹரித்து விற்றால், ப்ரம்ஹஹத்யா ப்ராயஶ்சித்தத்தை யனுஷ்டித்தால் முன்போல் சுத்தனுவான். வைச்யன் ப்ராம்ஹணனை விற்றால், முன்சொல்லிய ப்ராயஶ்சித்தத்தின் பாதியால் சுத்தனுவான். சூத்ரன் ப்ராம்ஹணனை விற்றால், உலக்கையினுல் கொலைக்கு அர்ஹனுவான். கள்ளபுருஷனுக்குப் பிறந்தவனுயினும் தனக்குப் பிறந்தவனுயினும் பிள்ளையை விற்றால், அந்தப்பாபத்தைப் போக்குவதற்கு மஹாஸாந்தபன க்ருச்ரத்தை யனுஷ்டிக்கவேண்டும். விற்கப்பட்டவன் பாலனுனுல், ஸாந்தபன க்ருச்ரம் சொல்லப்பட்டுள்ளது. பௌகண்டனுகில், இரண்டு மடங்கு ப்ராயஶ்சித்தம். குமாரனுனுலும், வ்ருத்தனுனுலும் மூன்று மஹாஸாந்தபன க்ருச்ரம் ப்ராயஶ்சித்தம். பதிவ்ரதையா னுலும், துஷ்டையானுலும் தனது பத்னியை எவன் விற்பானே,

ஸதீம் விக்ரீய சாந்த்ரம் ஸ்யாத் பராகம் துஷ்டசாரிணீம் | பாலிகாயாம் ஷடப்தம் ஸ்யாத்வ்ருத்தாயாம் நாஸ்தி நிஷ்க்ருதி: || ஜ்ஞாத்வா விக்ரயணே யஸ்து த்விகுணம் வ்ரதமாசரேத் | விவாஹார்த்தம் தநம் க்ருஹ்ணந் யத்கிஞ்சித்வ்யாஜமாஶ்ரித: || ஸ கந்யாவிக்ரயீ தஸ்ய ஶுத்திஶ்சாந்த்ராயணத்ரயாத் | த்விஜஸ்ஸம்பாத்ய யோ தாஸீம் க்ருஹகர்மஸுகாப்தயே || யுவதீம் விக்ரயித்வா தாம் ஷடப்தம் க்ருச்ச்ரமாசரேத் | ஸ்நாநாதி நித்யகர்மாணி இஷ்டாபூர்த்தாதிகாநி ச || உபோஷணவ்ரதாதீநி ஶ்ரௌதஸ்மார்த்தாதிகாநி ச | விக்ரீணீயாத்து யோ விப்ரோ மாகஸ்நாநம் ததைவ ச || சாந்த்ராயணத்ரயம் க்ருத்வா புநஸ்ஸம்ஸ்காரக்ருத்த்விஜ: | பஞ்சகவ்யம் தத: பீத்வா ஶுத்திமாப்நோதி நைஷ்டிகீம்' இதி ||

---

விற்கப்பட்ட அவள் பதிவ்ரதையாகில், சாந்த்ராயண க்ருச்ரமும், துஷ்டையாகில், பராகக்ருச்ரமும் ப்ராயஶ்சித்தம். விற்கப்பட்டவள் சிறியவளாகில் ஷடப்த க்ருச்ரம் ப்ராயஶ்சித்தம். வ்ருத்தையானால், ப்ராயஶ்சித்தம் இல்லை. அறிந்து விற்பானாகில், இரண்டுமடங்கு ப்ராயஶ்சித்தத்தை யனுஷ்டிக்கவேண்டும். பெண்ணின் விவாஹத்திற்காக ஏதாவது ஒரு கபடத்தை ஆச்ரயித்து, தனத்தை க்ரஹித்தால் அவன் கன்யகையை விற்றவன் எனப்படுவான். அவனுக்கு மூன்று சாந்த்ராயண க்ருச்ரத்தால் சுத்தி. வீட்டின் வேலையால் ஸுகத்தை யடைவதற்காக வேலைக்காரியை ஸம்பாதித்து எந்த க்ருஹஸ்தன் யுவதியாகிய அவளை விற்பானோ அவன் ஷடப்த க்ருச்ரத்தை ப்ராயஶ்சித்தமாக அனுஷ்டிக்கவேண்டும். ஸ்நானம் முதலிய நித்யகர்மங்கள், இஷ்டாபூர்த்தம் முதலியது, உபவாஸம், வ்ரதம் முதலியவை, ச்ரௌதம் ஸ்மார்த்தம் முதலிய கர்மங்கள், மாகஸ்நானம் இவைகளை எந்த ப்ராம்ஹணன் விற்கின்றானோ, அவன் மூன்று சாந்த்ராயண க்ருச்ரத்தை யனுஷ்டித்து, புநருபநயனத்தைச் செய்துகொள்ளவேண்டும். பிறகு பஞ்சகவ்ய ப்ராசனம் செய்தால் முன்போல் சுத்தியடைகிறான்.

𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑍍𑌮𑍃𑌤𑍍𑌯𑌾𑌦𑍇𑌃 𑌸𑌾𑌲𑌿𑌗𑍍𑌰𑌾𑌮𑌾𑌦𑍇𑌃 𑌵𑌿𑌕𑍍𑌰𑌯𑍇 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍍 ॥

𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑌃—

'𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌂 𑌧𑌰𑍍𑌮𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌪𑍁𑌰𑌾𑌣𑌂 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑌂 𑌤𑌥𑌾 । 𑌪𑍁𑌸𑍍𑌤𑌕𑌂 𑌫𑌲𑌕𑌂 𑌚𑌾𑌪𑌿 𑌤𑌤𑍍𑌸𑌾𑌧𑌨𑌯𑍋𑌰𑌪𑌿 𑌵𑌾 ॥ 𑌵𑌿𑌕𑍍𑌰𑌯𑍇𑌦𑍍𑌯𑌦𑌿 𑌲𑍋𑌭𑌾𑌤𑍍𑌤𑍁 𑌮𑌹𑌾𑌘𑌂 𑌨𑌰𑌕𑌂 𑌵𑍍𑌰𑌜𑍇𑌤𑍍 । 𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌂 𑌪𑌰𑌾𑌕𑌂 𑌚 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌵𑌾𑌪𑍍𑌨𑍁𑌯𑌾𑌤𑍍' 𑌇𑌤𑌿 ॥

𑌮𑌾𑌰𑍍𑌕𑌣𑍍𑌡𑍇𑌯𑌃—

'𑌸𑌾𑌲𑌿𑌗𑍍𑌰𑌾𑌮𑌶𑌿𑌲𑌾𑌂 𑌯𑍋 𑌵𑍈 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌚𑌕𑍍𑌰𑌾𑌙𑍍𑌕𑌿𑌤𑌾𑌂 𑌦𑍍𑌵𑌿𑌜𑌃 । 𑌶𑌿𑌵𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌚𑌕𑍍𑌰𑌪𑌾𑌣𑌿𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌾𑌂 𑌯𑌦𑌿 𑌵𑌿𑌕𑍍𑌰𑌯𑍇𑌤𑍍 ॥ 𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌂 𑌪𑍍𑌰𑌕𑍁𑌰𑍍𑌵𑍀𑌤 𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍𑌤𑌾𑌪𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 । 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌰𑌾𑌮𑌂 𑌚 𑌗𑍋𑌪𑌾𑌲𑌂 𑌶𑍍𑌰𑍀𑌧𑌰𑌂 𑌤𑌥𑌾 ॥ 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌂 𑌚𑍈𑌵 𑌦𑌧𑌿𑌵𑌾𑌮𑌨𑌮𑍇𑌵 𑌚 । 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌗𑌰𑍍𑌭𑌾𑌦𑌿𑌮𑍂𑌰𑍍𑌤𑍀𑌃 𑌪𑌾𑌪𑌾𑌪𑌹𑌾𑌰𑌿𑌣𑍀𑌃 ॥ 𑌰𑌾𑌮𑌾𑌦𑌿 𑌵𑌿𑌕𑍍𑌰𑌯𑍇 𑌵𑌿𑌪𑍍𑌰𑌶𑍍𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌤𑍍𑌰𑌯𑌮𑍍 । 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑍇 𑌚𑍈𑌵 𑌦𑍍𑌵𑌯𑌂 𑌦𑌧𑌿𑌵𑌾𑌮𑌨𑍇 ॥ 𑌮𑌹𑌾𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌕𑍁𑌰𑍍𑌵𑍀𑌤

## வேதம், ஸ்ம்ருதி முதலியவைகளையும், ஸாளிக்ராமம் முதலியவைகளையும் விற்பதில் ப்ராயஶ்சித்தம்.

**வஸிஷ்டர்:—** வேதம், ஸ்ம்ருதி, தர்மசாஸ்த்ரம், புராணம், ஜ்யோதிஷம், புஸ்தகம், பலகை, அதன் ஸாதனம், இவைகளில் எதையாவது லோபத்தால் விற்ருகில் கொடிய நரகத்தை யடைவான். சாந்த்ராயண க்ருச்ரம், பராகக்ருச்ரம் இவைகளை யனுஷ்டித்தால் சுத்தியை யடைவான்.

**மார்க்கண்டேயர்:-** அந்தந்தச் சக்ரத்துடன்கூடிய ஸாளிக்ராமச் சிலையையாவது, சிவலிங்கத்தையாவது, சக்ரபாணி ப்ரதிமையை யாவது விற்பாருகில், பிறகு பச்சாத்தாபத்துடன் கூடியவனாய், சாந்த்ராயண க்ருச்ரத்தை யனுஷ்டிக்க வேண்டும். லக்ஷ்மீந்ருஸிம்ஹன், ராமன், கோபாலன், ஸ்ரீதரன், லக்ஷ்மீநாராயணன், ததிவாமனன், ஹிரண்யகர்ப்பன் இவை முதலிய— பாபத்தைப் போக்கும் மூர்த்திகளை விற்றாலும், ராமன் முதலிய மூர்த்திகளை விற்றாலும் மூன்று சாந்த்ராயண க்ருச்ரத்தை யனுஷ்டிக்கவேண்டும். லக்ஷ்மீநாராயணனை விற்றால், இரண்டு சாந்த்ராயண க்ருச்ரம்.

लक्ष्मीनृसिंहविक्रये । पराकं देहशुद्ध्यर्थं चरेद्विप्रोऽविचारयन् ॥ लिङ्गे तु स्फाटिके चैव तथा मारकते द्विजः । मासं दीक्षामुपादाय प्रातः स्नात्वा यथाविधि ॥ सूर्योदयं समारभ्य यावदस्तमितो रविः । प्रत्यहं दशसाहस्रं जपेच्चैव षडक्षरम् ॥ फलाहारं प्रकुर्वीत यदास्तमयते रविः । स्थण्डिले शयनं कृत्वा मासान्ते शुद्धिमाप्नुयात्' इति ॥

जलाग्न्यादिषु मृत्युव्यवसितनिवृत्तस्य प्रायश्चित्तम् ॥

'चतुर्णामपि वर्णानां यः कोऽपि स्वात्मघाताय मृत्युं कयाचिद्बाधया प्राणेभ्यो निवर्तते तस्य प्रायश्चित्तं प्रश्नपूर्वकमाह पराशरः—

'जलाग्निपतने चैव प्रव्रज्यानाशकेषु च । प्रत्यावसितवर्णानां कथं शुद्धिर्विधीयते ॥ प्राजापत्यद्वये

ததிவாமனனை விற்றால், மஹாசாந்த்ராயண க்ருச்ரம் அனுஷ்டிக்க வேண்டும். லக்ஷ்மீந்ருஸிம்ஹனை விற்றால், பராகக்ருச்ரத்தை ஸந்தேஹமில்லாமல் அனுஷ்டிக்கவேண்டும். ஸ்படிகலிங்கம், மரகத லிங்கம் இவைகளை விற்றால், ஒரு மாஸம் தீக்ஷையை ஸங்கல்பித்து, காலையில் விதிப்படி ஸ்நானம்செய்து, ஸூர்யோதயம் முதல் ஸூர்யாஸ்தமயம் வரையில் ஒவ்வொருநாளிலும் பதினாயிரம்முறை ஷடக்ஷர மந்த்ரத்தை ஜபிக்கவேண்டும். ஸூர்யாஸ்தமயத்திற்குப் பிறகு பழத்தை ஆஹாரமாகக்கொள்ளவேண்டும். தரையில் படுக்க வேண்டும். இவ்விதமிருந்தால், ஒரு மாஸத்திற்குப்பிறகு சுத்தியை யடைவான்.

## ஜலம், அக்னி முதலியவைகளில் மரிப்பதற்தாக முயற்சித்துப் பிறகு திரும்பினால் ப்ராயஶ்சித்தம்.

நான்கு வர்ணத்தாருள் எவனாயினும் தன்னைக் கொல்வதற்காக முயற்சித்து, எக்காரணத்தாலாவது கொல்லுவதனின்றும் திரும்புகின்றானோ அவனுக்கு ப்ராயஶ்சித்தத்தைக் கேள்வியுடன் சொல்லுகிறார் பராசரர்:— ஜலம், நெருப்பு இவைகளில் விழுவது, ஸந்யாஸம், உண்ணாவ்ரதம் இவைகளைச் செய்வதாய் முயற்சித்து, செய்யாமல் திரும்பியவர்க்கு ப்ராயஶ்சித்தம் எப்படி விதிக்கப் படுகிறது? (எனில்):— இரண்டு ப்ராஜாபத்ய க்ருச்ரம், புண்ய

𑌚𑍈𑌵 𑌤𑍀𑌰𑍍𑌥𑌾𑌭𑌿𑌗𑌮𑌨𑍇𑌨 𑌚 । 𑌵𑍃𑌷𑍈𑌕𑌾𑌦𑌶𑌦𑌾𑌨𑍇𑌨 𑌵𑌰𑍍𑌣𑌾𑌃 𑌶𑍁𑌧𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇 𑌤𑍍𑌰𑌯𑌃 ॥ 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌵𑌨𑌂 𑌗𑌤𑍍𑌵𑌾 𑌚𑌤𑍁𑌷𑍍𑌪𑌥𑍇 । 𑌸𑌶𑌿𑌖𑌂 𑌵𑌪𑌨𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌦𑍍𑌵𑌯𑌂 𑌚𑌰𑍇𑌤𑍍 ॥ 𑌗𑍋𑌦𑍍𑌵𑌯𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌂 𑌦𑌦𑍍𑌯𑌾𑌤𑍍 𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌂 𑌪𑌾𑌰𑌾𑌶𑌰𑍋𑌽𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍 । 𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌤𑍇𑌨 𑌪𑌾𑌪𑍇𑌨 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑌂 𑌚 𑌗𑌚𑍍𑌛𑌤𑌿' 𑌇𑌤𑌿 ॥

𑌨𑌦𑍀𑌤𑌟𑌾𑌕𑌾𑌦𑌿𑌪𑍍𑌰𑌵𑍇𑌶𑌨𑌂 𑌅𑌗𑍍𑌨𑌿𑌪𑍍𑌰𑌵𑍇𑌶𑌨𑌂 𑌭𑍃𑌗𑍁𑌪𑌤𑌨𑌂 𑌮𑌹𑌾𑌪𑍍𑌰𑌸𑍍𑌥𑌾𑌨𑌗𑌮𑌨𑌂 𑌅𑌨𑌶𑌨𑌂 𑌚𑍇𑌤𑌿 𑌜𑌲𑌾𑌗𑍍𑌨𑍍𑌯𑌾𑌦𑌯𑌃 𑌪𑌞𑍍𑌚𑌮𑌰𑌣𑌹𑍇𑌤𑌵𑌃 । 𑌤𑌤𑍍𑌰 𑌜𑌲𑌾𑌦𑌿𑌮𑌰𑌣𑌂 𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌂 𑌵𑌿𑌹𑌿𑌤𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑌿𑌦𑍍𑌧𑌂 𑌚𑍇𑌤𑌿 ॥ 𑌤𑌤𑍍𑌰 𑌵𑌿𑌹𑌿𑌤𑌮𑌪𑌿 𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌮𑍍 ॥ * 𑌕𑌾𑌮𑍍𑌯𑌤𑌪𑍋𑌰𑍂𑌪𑌂 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌰𑍂𑌪𑌂 𑌚𑍇𑌤𑌿 । 𑌤𑌤𑍍𑌤𑍁 𑌕𑌲𑍌 𑌵𑌰𑍍𑌜𑌨𑍀𑌯𑌮𑍍 । 𑌯𑌥𑌾

---

தீர்த்த யாத்ரை, ஒரு வ்ருஷபத்துடன் பத்துப் பசுக்களைத் தானம் செய்வது இவைகளால் மூன்று வர்ணத்தாரும் (க்ஷத்ரிய வைச்ய சூத்ர) முறையே சுத்தியடைகின்றனர். ப்ராம்ஹணனுக்கு விதியைச் சொல்லுகிறேன். காட்டிற்குச் சென்று நாற்சந்தியில் சிகையைச் சேர்த்து க்ஷவரம் செய்துகொண்டு இரண்டு ப்ராஜாபத்ய க்ருச்ரத்தை யனுஷ்டிக்கவேண்டும். இரண்டு பசுக்களைத் தக்ஷிணையாக் கொடுக்கவேண்டும். இவ்விதம் சுத்தியைப் பாராசரர் விதித்தார். அந்தப் பாபத்தினின்றும் விடுபடுவான். ப்ராம்ஹணத் தன்மையையும் அடைவான்.

நதீ, தடாகம் முதலியதில் விழுவது, நெருப்பில் நுழைவது, மலைச்சரிவிலிருந்து விழுவது, மஹாப்ரஸ்தானம் செல்வது, உண்ணு வ்ரதம் என்று இவ்விதம் ஐந்தும் மரணத்துக்குக் காரணங்கள். அதில் ஜலம் முதலியதால் மரிப்பது என்பது இரண்டுவிதமுள்ளது— விதிக்கப்பட்டது என்றும் தடுக்கப்பட்டது என்றும். அதில் விதிக்கப்பட்டது என்பது இரண்டு விதம். காம்யதபஸ் என்றும் ப்ராயச்சித்த ரூபம் என்றும், அது கலியில் வர்ஜிக்கத்

---

* 𑌤𑌤𑍍𑌰 𑌕𑌾𑌮𑍍𑌯𑌤𑌪𑍋𑌰𑍂𑌪𑌂 𑌕𑍂𑌰𑍍𑌮𑌪𑍁𑌰𑌾𑌣𑍇 𑌨𑌰𑍍𑌮𑌦𑌾𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑍇 𑌪𑍍𑌰𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑌮𑍍— '𑌅𑌗𑍍𑌨𑌿𑌪𑍍𑌰𑌵𑍇𑌶𑌂 𑌯𑌃 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍

---

காம்ய தபோரூபமான ப்ராயச்சித்தம் கூர்ம புராணத்தில் நர்மதா மாஹாத்ம்யத்தில் சொல்லப்பட்டுள்ளது:— ஓ! அரசனே!

தரேஷ்வபி விஹிதத்வேந ந ப்ராயஶ்சித்தார்ஹம் | க்ரோதாதிநா ஜலாதிமரணம் தந்நிஷித்தம் | ததேவாத்ர பரிஶிஷ்யதே | ஜலாக்நீதி விஷபக்ஷணோத்பந்தநாத்யுபலக்ஷணம் | தத்ர

தக்கது. மற்ற யுகங்களிலும் விதிக்கப்பட்டிருப்பதால் ப்ராயஶ்சித்தத்திற்குரியது அல்ல. கோபம் முதலியதால் ஜலம் முதலியதில் விழுந்து மரிப்பது என்பது தடுக்கப்பட்டது. அதுதான் இங்கு மீதியாகிறது. ஜலம், நெருப்பு என்று சொல்லியது விஷத்தை உட்கொள்வது, சுருக்கிட்டுக்கொள்வது முதலியதையும் சொல்

ஸோமதீர்தே'க்நிப்ரவேஶம் ஜலே வா'நஶநேந வா | ஸம்த்யஜ்ய ப்ராணாந் மர்த்யோ ந மாநுஷ்யம் லபதே' இதி || தத்ரைவ ப்ரயாகமாஹாத்ம்யே — கங்காயமுநயோர்மத்யே கரீஷாக்நிம் விஶேத்து ய: | அஹீநாங்கோ ஹ்யரோகஶ்ச பஞ்சேந்த்ரியஸமந்வித: || யாவந்தி ரோமகூபாணி தஸ்ய காத்ரேஷு மாநவ: | தாவத்வர்ஷஸஹஸ்ராணி ஸ்வர்கலோகே மஹீயதே || ஜலப்ரவேஶம் ய: குர்யாத் ஸங்கமே லோகவிஶ்ருதே | ராஹுக்ரஸ்தே யதா ஸோமே விமுக்த: ஸர்வபாதகை: || ஸோமலோகமவாப்நோதி ஸோமேந ஸஹ மோததே' இதி, ததேதத் ப்ராயஶ்சித்தரூபம் மரணம் ||

எந்த மனிதன் ஸோம தீர்த்தத்தில் அக்னி ப்ரவேசத்தையாவது, ஜலப்ரவேசத்தையாவது, உபவாஸத்தையாவது செய்து மரணத்தை யடைகின்றானோ அவன் மறுபடி மனிதனாய்ப் பிறப்பதில்லை, என்று. அதிலேயே ப்ரயாக மாஹாத்ம்யத்தில் சொல்லப்பட்டுள்ளது:— எந்த மனிதன், அங்கஹானி யில்லாதவனும், ரோகமில்லாதவனும், ஐந்து இந்த்ரியங்களுடன் கூடியவனும் இருந்தும், கங்கை, யமுனை இவைகளின் நடுவில் கரீஷாக்னியில் (சாணங்களால் உண்டாகிய நெருப்பில்) ப்ரவேசிக்கின்றானோ, அவன் தனது தேஹத்தில் எவ்வளவு மயிர்க்குழிகள் உள்ளனவோ அவ்வளவு ஆயிரம் வர்ஷங்கள் வரை ஸ்வர்க்கலோகத்தில் சிறப்பை அடைவான். எவன் கங்கா யமுனா ஸங்கமத்தில் சந்த்ரக்ரஹண காலத்தில் ஜலத்தில் ப்ரவேசித்து மரிக்கின்றானோ, அவன் ஸகல பாபங்களாலும் விடப்பட்டவனாய்ச் சந்த்ரலோகத்தையடைந்து சந்த்ரனோடு கூட ஸந்தோஷிக்கின்றான். இது தான் ப்ராயஶ்சித்த ரூபமான மரணம்.

𑌉𑌦𑍍𑌯𑌮𑍍𑌯 𑌮𑍃𑌤𑌸𑍍𑌯 𑌨𑌾𑌮𑌰𑌣𑍇 𑌕𑍇𑌨𑌾𑌪𑌿 𑌨 𑌤𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌂, 𑌕𑌰𑍍𑌤𑍁𑌰𑍇𑌵𑌾𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 । 𑌯𑌸𑍍𑌤𑍂𑌦𑍍𑌯𑌮𑍍𑌯 𑌮𑌰𑌣𑌾𑌨𑍍𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌤𑍇, 𑌤𑌸𑍍𑌯 𑌮𑌰𑌣𑍋𑌦𑍍𑌯𑌮𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌮𑌿𑌦𑌂 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍍 । 𑌜𑌲𑌾𑌗𑍍𑌨𑍍𑌯𑌾𑌦𑌿𑌭𑌿𑌰𑍁𑌦𑍍𑌯𑌮𑍍𑌯 𑌤𑌤𑍋 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌃 = 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌵𑌸𑌿𑌤𑌾𑌃 । 𑌤𑌤𑍍𑌰 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌦𑍍𑌵𑌯𑌮𑍍 । 𑌵𑍈𑌶𑍍𑌯𑌸𑍍𑌯 𑌤𑍀𑌰𑍍𑌥𑌯𑌾𑌤𑍍𑌰𑌾 । 𑌶𑍂𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌵𑍃𑌷𑌭𑌸𑌹𑌿𑌤𑌗𑍋𑌦𑌶𑌕𑌦𑌾𑌨𑌮𑍍 । 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌯 𑌵𑌨𑌗𑌮𑌨𑌾𑌦𑌿𑌵𑍍𑌰𑌤𑌮𑍍 । 𑌆𑌤𑍍𑌮𑌹𑌨𑌨𑍋𑌦𑍍𑌯𑍋𑌗𑍇𑌨 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌤𑍍𑌵𑌮𑌪𑌗𑌤𑌮𑍍 । 𑌚𑌾𑌣𑍍𑌡𑌾𑌲𑌤𑍍𑌵𑌮𑌾𑌯𑌾𑌤𑌮𑍍 । 𑌪𑍁𑌨𑌰𑍍𑌵𑍍𑌰𑌤𑌚𑌰𑌣𑍇𑌨 𑌚𑌾𑌣𑍍𑌡𑌾𑌲𑌤𑍍𑌵𑍇 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑍇 𑌪𑍁𑌨𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌸𑌿𑌦𑍍𑌧𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌾𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 ॥

𑌤𑌥𑌾𑌹 𑌵𑍃𑌦𑍍𑌧𑌪𑌰𑌾𑌶𑌰𑌃—

'𑌅𑌨𑌾𑌶𑌕𑌾𑌨𑍍𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌸𑍍𑌤𑍁 𑌚𑌾𑌤𑍁𑌰𑍍𑌵𑌰𑍍𑌣𑍍𑌯𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 । 𑌚𑌣𑍍𑌡𑌾𑌲𑌸𑍍𑌸 𑌤𑍁 𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑍋 𑌵𑌰𑍍𑌜𑌨𑍀𑌯𑌃 𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑌤𑌃 ॥ 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑍇𑌨 𑌤𑍀𑌰𑍍𑌥𑌾𑌭𑌿𑌗𑌮𑌨𑍇𑌨 𑌚 । 𑌗𑌵𑌾𑌂 𑌦𑌶𑌕𑌦𑌾𑌨𑍇𑌨 𑌵𑌣𑍍𑌡𑌾

வதாகும். அதில் மரிப்பதற்கு முயற்சித்து, இறந்தவனுக்கு ஆர் மரணமாகினும் இந்த ப்ராயஶ்சித்தம் இல்லை, செய்துகொள்ளுகிற வனே இல்லாததால். எவன் முயற்சித்து மரணத்தினின்றும் திரும்புகின்றானோ, அவனுக்கு மரணத்துக்கு முயற்சித்ததற்காக இந்த ப்ராயஶ்சித்தம். மூலத்திலுள்ள "ப்ரத்யவஸிதா:" என்ற பதத்திற்கு ஜலம் நெருப்பு முதலியதால் மரிப்பதற்கு முயற்சித்து அதனின்றும் திரும்பியவர்கள் என்பது பொருள். அதில் க்ஷத்ரியனுக்கு இரண்டு ப்ராஜாபத்ய க்ருச்ரம். வைச்யனுக்குத் தீர்த்த யாத்ரை. சூத்ரனுக்கு ஒரு வ்ருஷபத்துடன் கூடிய பத்துப் பசுக்களின் தானம். ப்ராம்ஹணனுக்குக் காட்டுக்குச் செல்வது முதலிய வ்ரதம். தன்னைக் கொல்வதற்கு முயற்சித்ததால், ப்ராம்ஹணத் தன்மை போய்விட்டது. சண்டாளத் தன்மை வந்துவிட்டது. மறுபடி ப்ராயஶ்சித்தத்தை யனுஷ்டிப்பதால் சண்டாளத் தன்மை நிவ்ருத்தித்த பிறகு மறுபடி முன்னுள்ள ப்ராம்ஹணத் தன்மையை யடைகிறான். அதைச் சொல்லுகிறார்,

**வ்ருத்த பராசரர்:—** உண்ணு வ்ரதத்தினின்று திரும்பியவன் நான்கு வர்ணத்தாருள் ஒருவனாகில் சண்டாளன் என்று அறியப் படவேண்டும். அவனை அவச்யம் வர்ஜிக்கவேண்டும். ப்ராம்ஹணர் களின் அனுக்ரஹத்தாலும், தீர்த்த யாத்ரையாலும், பத்துப் பசுக்

ஶுத்⁴யந்தி தே த்ரய: ॥ ப்³ராஹ்மணஸ்ய ப்ரவக்ஷ்யாமி க³த்வாரண்யம் வதா³ம்யஹம் | ஸஶிக²ம் வபநம் க்ருத்வா த்ரிஸந்த்⁴யமவகா³ஹநம் ॥ ஸாவித்ர்யஷ்டஸஹஸ்ரம் து ஜபேதே³வ தி³நே தி³நே | முச்யதே ஸர்வபாபேப்⁴யோ ப்³ராஹ்மணத்வம் ச க³ச்ச²தி ॥ பை⁴க்ஷார்தீ² விசரேத் க்³ராமம் க்³ருஹாந் ஸப்த வநே வஸேத் | தௌ⁴தாம் பி⁴க்ஷாம் ஸமஶ்நீயாத்³ஷாண்மாஸேந விஶுத்⁴யதி' இதி ॥

அத்ரைவ வ்ரதாந்தராண்யாஹ வஸிஷ்ட²:—

'ஜீவந்நாத்மத்யாகீ³ க்ருச்ச்²ரம் வா த்³வாத³ஶராத்ரம் சரேத் | த்ரிராத்ரம் சாப்யுபவஸேந்நித்யம் ஸ்நிக்³தே⁴ந வாஸஸா ॥ ப்ராணாநாத்மநி ஸம்யம்ய த்ரி: படே²த³க⁴மர்ஷணம் | அபி வா தேந கல்பேந கா³யத்ரீம் பரிவர்தயேத் | அபி வாக்³நிம் ஸமாதா⁴ய கூஷ்மாண்டை³ர்ஜுஹுயாத்³க்⁴ருதம்' இதி ॥

---

களின் தானத்தாலும், (க்ஷத்ரியன் முதலிய) மூன்று வர்ணத்தாரும் சுத்தராகின்றனர். ப்ராம்ஹணனுக்கு ப்ராயஶ்சித்தத்தைச் சொல்லுகிறேன். அவன் அரண்யத்தையடைந்து, கார்சந்தியில் சிகையுடன் வபனம் செய்துகொண்டு மூன்று காலங்களிலும் ஸ்நானம்செய்து, ஒவ்வொரு தினத்திலும் எண்ணாயிரம்முறை காயத்ரியை ஜபிக்கவேண்டும். இவ்விதம் செய்தால் எல்லாப் பாபங்களினின்றும் விடுபடுவான். ப்ராம்ஹணத் தன்மையையுமடைவான். பிக்ஷான்னத்தை வேண்டியவனாய் க்ராமத்தில் ஸஞ்சரிக்க வேண்டும். ஏழு வீடுகளில் பிக்ஷையை அடையவேண்டும். வனத்தில் வஸிக்கவேண்டும். பிக்ஷான்னத்தை அலம்பிப் புஜிக்க வேண்டும். இவ்விதம் ஆறுமாஸம் செய்தால் சுத்தனுவான்.

இவ்விஷயத்திலேயே வேறு வ்ரதங்களைச் சொல்லுகிறார்

வஸிஷ்டர்:— தன்னைக் கொல்ல முயற்சித்துத் திரும்பிப் பிழைத்தவன் ப்ராஜாபத்ய க்ருச்ரத்தையாவது அனுஷ்டிக்கவேண்டும். அல்லது, மூன்றுநாள் முழுவதும், உபவாஸமிருக்கவேண்டும். எப்பொழுதும் ஈரமான வஸ்த்ரத்துடனிருக்கவேண்டும். ப்ராணுயாமம் செய்து மூன்றுமுறை அகமர்ஷண ஸூக்தத்தை ஜபிக்க வேண்டும். அல்லது, இதே வ்ரதத்துடன் காயத்ரியை ஜபிக்க வேண்டும். அல்லது, அக்னியைக் கல்பித்து, கூச்மாண்ட மந்த்ரங்களால் நெய்யை ஹோமம் செய்யவேண்டும்.

𑌤𑌤𑍍𑌰 𑌜𑌪𑌹𑍋𑌮𑍌 𑌵𑌿𑌦𑍍𑌵𑌦𑍍𑌵𑌿𑌷𑌯𑍇 𑌕𑌲𑍍𑌪𑌨𑍀𑌯𑍌 ; 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌰𑌾𑌤𑍍𑌰𑌤𑍍𑌰𑌿𑌰𑌾𑌤𑍍𑌰𑍌 𑌅𑌵𑌿𑌦𑍍𑌵𑌦𑍍𑌵𑌿𑌷𑌯𑍇 𑌶𑌕𑍍𑌤𑌾𑌶𑌕𑍍𑌤𑌭𑍇𑌦𑍇𑌨 𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑍀𑌯𑌾𑌵𑌿𑌤𑌿 𑌮𑌾𑌧𑌵𑍀𑌯𑍇 ॥

## 𑌪𑌾𑌰𑌿𑌵𑍍𑌰𑌾𑌜𑍍𑌯𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌚𑍍𑌯𑍁𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍍 ॥

'𑌪𑍍𑌰𑌵𑍍𑌰𑌜𑍍𑌯𑌾 𑌨𑌾𑌶𑌕𑍇𑌷𑍁 𑌚' 𑌇𑌤𑌿 𑌪𑌰𑌾𑌶𑌰𑌵𑌚𑌨𑍇 𑌯𑌃 𑌪𑍍𑌰𑌵𑍍𑌰𑌜𑍍𑌯𑌾𑌶𑌬𑍍𑌦𑌃 𑌤𑌸𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑍍𑌤𑌰𑌮𑍁𑌕𑍍𑌤𑌂 𑌤𑌤𑍍𑌰𑍈𑌵 । 𑌪𑌾𑌰𑌿𑌵𑍍𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌤𑍇𑌨 𑌵𑌿𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 । 𑌤𑌥𑌾 𑌚 𑌸𑌤𑌿 𑌪𑌾𑌰𑌿𑌵𑍍𑌰𑌾𑌜𑍍𑌯𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌚𑍍𑌯𑍁𑌤𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍁𑌕𑍍𑌤𑌂 𑌭𑌵𑌤𑌿 । 𑌤𑌦𑌿𑌦𑌂 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌲𑍋𑌃 𑌪𑍁𑌨𑌰𑍁𑌪𑌨𑌯𑌨𑌾𑌦𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌂 𑌪𑌾𑌰𑌿𑌵𑍍𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌜𑌿𑌘𑍃𑌕𑍍𑌷𑍋𑌰𑌵𑌗𑌨𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑍍 ॥

𑌮𑍋𑌹𑌾𑌦𑍍𑌵𑌿𑌚𑍍𑌯𑍁𑌤𑌸𑍍𑌯 𑌸𑌂𑌵𑌰𑍍𑌤𑌃—

'𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌦𑍁𑌰𑍍𑌮𑌤𑌿𑌃 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌾𑌪𑌤𑍍𑌤𑌿𑌂 𑌵𑍍𑌰𑌜𑍇𑌦𑍍𑌯𑌦𑌿 । 𑌸 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌮𑌶𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌃 𑌷𑌣𑍍𑌮𑌾𑌸𑌾𑌨𑍍𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌨𑌨𑍍𑌤𑌰𑌮𑍍 ॥ 𑌪𑍁𑌨𑌃 𑌪𑌾𑌰𑌿𑌵𑍍𑌰𑌜𑍇𑌦𑍍𑌵𑌿𑌪𑍍𑌰𑍋 𑌯𑌥𑌾𑌵𑌿𑌧𑌿 𑌸𑌮𑌾𑌹𑌿𑌤𑌃' 𑌇𑌤𑌿 ॥

---

அதில் ஜபம், ஹோமம் என்றது வித்வானைப் பற்றியது. பன்னிரண்டு நாள் உபவாஸம், மூன்றுநாள் உபவாஸம் என்றது, அவித்வானைப்பற்றியது என்றது. சக்தியுள்ளவன், சக்தியில்லாதவன் என்றவரைப்பற்றியதாய் வ்யவஸ்தை செய்யவேண்டும், என்று மாதவீயத்தில் உள்ளது.

## ஸந்யாஸத்திலிருந்து நழுவுவதில் ப்ராயஸ்சித்தம்.

"ப்ரவ்ரஜ்யா நாசகேஷு—ச" என்ற பராசர வசனத்தில் உள்ள "ப்ரவ்ரஜ்யா" சப்தம் எதுவோ அதற்கு வேறு ஒரு அர்த்தமும் சொல்லப்பட்டுள்ளது அதிலேயே. அந்தச் சப்தத்தால் ஸங்யாஸித் தன்மை சொல்லப்படுகிறது. அப்படியிருக்கும்பொழுது, ஸங்யாஸ ஆச்ரமத்திலிருந்து நழுவிய ப்ராம்ஹணனுக்கு ப்ராஜாபத்ய க்ருச்ரம் ப்ராயஸ்சித்தம் என்று சொல்லப்பட்டதாக ஆகிறது. ஆகையால் இது, ச்ரத்தையுள்ளவனாய் புநருபனயனம் முதலியது முதற்கொண்டு மறுபடி ஸங்யாஸத்தை க்ரஹிக்க விரும்பியவனுக்கு, என்றறியப்படவேண்டும். அறியாமையால் நழுவிய விஷயத்தில்,

**ஸம்வர்த்தர்:—** துர்ப்புத்தியாகிய ஒருவன் ஸங்யாஸம் செய்துகொண்டு அதிலிருந்து நழுவினால், அவன் ஆறுமாஸம் வரையில்,

𑌅𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌾𑌶𑌕𑍍𑌤𑌵𑌿𑌷𑌯𑍇 𑌵𑍃𑌦𑍍𑌧𑌪𑌰𑌾𑌶𑌰𑌃—

'𑌯𑌃 𑌪𑍍𑌰𑌵𑍍𑌰𑌜𑌿𑌤𑍋 𑌵𑌿𑌪𑍍𑌰𑌃 𑌪𑍍𑌰𑌵𑍍𑌰𑌜𑍍𑌯𑌾𑌤𑍋 𑌵𑌿𑌨𑌿𑌰𑍍𑌗𑌤𑌃 । 𑌅𑌨𑌾𑌶𑌕𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌶𑍍𑌚 𑌗𑌾𑌰𑍍𑌹𑌸𑍍𑌥𑍍𑌯𑌂 𑌚𑍇𑌚𑍍𑌚𑌿𑌕𑍀𑌰𑍍𑌷𑌤𑌿 ॥ 𑌚𑌰𑍇𑌤𑍍 𑌤𑍍𑌰𑍀𑌣𑌿 𑌚 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌾𑌣𑌿 𑌤𑍍𑌰𑍀𑌣𑌿 𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌾𑌨𑌿 𑌚 । 𑌜𑌾𑌤𑌕𑌰𑍍𑌮𑌾𑌦𑌿𑌭𑌿𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑍈𑌃 𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑌶𑍍𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌪𑍍𑌨𑍁𑌯𑌾𑌤𑍍' 𑌇𑌤𑌿 ॥

𑌶𑌕𑍍𑌤𑍋 𑌯𑌸𑍍𑌤𑍁 𑌪𑍁𑌨𑌃 𑌪𑌾𑌰𑌿𑌵𑍍𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌨 𑌜𑌿𑌘𑍃𑌕𑍍𑌷𑌤𑌿, 𑌤𑌸𑍍𑌯𑌾𑌮𑌰𑌣𑌾𑌨𑍍𑌤𑌂 𑌰𑌾𑌜𑌦𑌾𑌸𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌕𑌮𑍍 ॥

𑌅𑌤𑍍𑌰 𑌨𑌾𑌰𑌦𑌃—

'𑌰𑌾𑌜𑍍𑌞 𑌏𑌵 𑌤𑍁 𑌦𑌾𑌸𑌸𑍍𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌵𑍍𑌰𑌜𑍍𑌯𑌾𑌵𑌸𑌿𑌤𑍋 𑌦𑍍𑌵𑌿𑌜𑌃 । 𑌨 𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑍋𑌕𑍍𑌷𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌨 𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌕𑌥𑌞𑍍𑌚𑌨' 𑌇𑌤𑌿 ॥

𑌕𑌾𑌤𑍍𑌯𑌾𑌯𑌨𑌃—

'𑌪𑍍𑌰𑌵𑍍𑌰𑌜𑍍𑌯𑌾𑌵𑌸𑌿𑌤𑌾 𑌯𑌤𑍍𑌰 𑌤𑍍𑌰𑌯𑍋 𑌵𑌰𑍍𑌣𑌾 𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌤𑌯𑌃 । 𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌸𑌂 𑌕𑌾𑌰𑌯𑍇𑌦𑍍𑌵𑌿𑌪𑍍𑌰𑌂 𑌦𑌾𑌸𑍍𑌯𑌂 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌵𑌿𑌶𑍋𑌰𑍍𑌨𑍃𑌪𑌃' 𑌇𑌤𑌿 ॥

---

இடைவிடாது ப்ராஜாபத்ய க்ருச்ரத்தை யனுஷ்டிக்கவேண்டும். மறுபடி விதிப்படி ஸந்யாஸத்தை யடையவேண்டும்.

மிகவும் சக்தியில்லாத விஷயத்தில் வ்ருத்தபராசரர்:— எந்த ப்ராம்ஹணன் ஸந்யாஸத்திலிருந்து வெளியேறியவனோ அவனும், எவன் உண்ணா வ்ரதத்திலிருந்து வெளியேறியவனோ அவனும், க்ருஹஸ்தத் தன்மையை யடைவதற்கு விரும்பினால், மூன்று ப்ராஜாபத்ய க்ருச்ரத்தையும் மூன்று சாந்த்ராயண க்ருச்ரத்தையும் அனுஷ்டிக்கவேண்டும். அவன் ஜாதகர்மம் முதலிய எல்லா ஸம்ஸ்காரங்களையும் அனுஷ்டித்தால் சுத்தியை யடைவான்.

சக்தியுடைய எவன் மறுபடி ஸந்யாஸத்தை க்ரஹிக்க விரும்பவில்லையோ, அவனுக்கு மரணம் வரையில் அரசனுக்குத் தாஸனா யிருப்பது முதலியது ப்ராயசிஸ்த்தம். இதில்,

**நாரதர்:**— ஸந்யாஸத்திலிருந்து திரும்பிய ப்ராம்ஹணன் அரசனுக்குத் தாஸனாகவே இருக்கவேண்டும். அவனுக்குத் திரும்புவதென்பதில்லை. எவ்விதத்திலும் அவனுக்குச் சுத்தியில்லை.

**காத்யாயனர்:**— எந்த ராஜ்யத்தில் முந்திய மூன்று வர்ணத்தாரும் ஸந்யாஸத்தினின்றும் நழுவியவராயுள்ளனரோ, அந்தத் தேசத்தினின்று ப்ராம்ஹணனை வெளியேற்றவேண்டும். க்ஷத்ரிய வைச்யர்களை அரசனிடத்தில் அடிமையாக்கவேண்டும்.

𑌦𑌕𑍍𑌷𑌃—

'𑌪𑌾𑌰𑌿𑌵𑍍𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌗𑍃𑌹𑍀𑌤𑍍𑌵𑌾 𑌤𑍁 𑌯𑌃 𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑍇 𑌨 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 ।
𑌶𑍍𑌵𑌪𑌦𑍇𑌨𑌾𑌙𑍍𑌕𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌤𑌂 𑌰𑌾𑌜𑌾 𑌶𑍀𑌘𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌵𑌾𑌸𑌯𑍇𑌤𑍍' 𑌇𑌤𑌿 ॥

𑌯𑌾𑌜𑍍𑌞𑌵𑌲𑍍𑌕𑍍𑌯𑌃—

'𑌪𑍍𑌰𑌵𑍍𑌰𑌜𑍍𑌯𑌾𑌵𑌸𑌿𑌤𑍋 𑌰𑌾𑌜𑍍𑌞𑍋 𑌦𑌾𑌸𑌸𑍍𑌯𑌾𑌦𑌾𑌮𑌰𑌣𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑌃' 𑌇𑌤𑌿 ॥

𑌅𑌙𑍍𑌗𑌿𑌰𑌾𑌃

'𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌂 𑌚𑍈𑌵 𑌯𑌃 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌪𑍁𑌨𑌰𑌾𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍇 𑌦𑍍𑌵𑌿𑌜𑌃 । 𑌨 𑌤𑌸𑍍𑌯 𑌨𑌿𑌷𑍍𑌕𑍃𑌤𑌿𑌰𑍍𑌦𑍃𑌷𑍍𑌟𑌾 𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌾𑌚𑍍𑌚 𑌪𑍍𑌰𑌚𑍍𑌯𑍁𑌤𑌸𑍍𑌯 𑌚 ॥ 𑌆𑌰𑍂𑌢𑍋 𑌨𑍈𑌷𑍍𑌠𑌿𑌕𑌂 𑌧𑌰𑍍𑌮𑌂 𑌪𑍁𑌨𑌰𑌾𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 𑌯𑌦𑌿 । 𑌆𑌰𑍂𑌢𑌪𑌤𑌿𑌤𑍋 𑌜𑍍𑌞𑍇𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌬𑌹𑌿𑌷𑍍𑌕𑍃𑌤𑌃 ॥ 𑌚𑌣𑍍𑌡𑌾𑌲𑌾𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌵𑌸𑌿𑌤𑌾𑌃 𑌪𑌰𑌿𑌵𑍍𑌰𑌾𑌜𑌕𑌤𑌾𑌪𑌸𑌾𑌃 । 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌜𑌾𑌤𑌾𑌨𑍍𑌯𑌪𑌤𑍍𑌯𑌾𑌨𑌿 𑌚𑌣𑍍𑌡𑌾𑌲𑍈𑌃 𑌸𑌹 𑌵𑌾𑌸𑌯𑍇𑌤𑍍 ॥ 𑌨𑍈𑌷𑍍𑌠𑌿𑌕𑌾𑌨𑌾𑌂 𑌵𑌨𑌸𑍍𑌥𑌾𑌨𑌾𑌂 𑌯𑌤𑍀𑌨𑌾𑌂 𑌚𑌾𑌵𑌕𑍀𑌰𑍍𑌣𑌿𑌨𑌾𑌮𑍍 । 𑌶𑍁𑌦𑍍𑌧𑌾𑌨𑌾𑌮𑌪𑌿 𑌲𑍋𑌕𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌾𑌪𑌤𑍍𑌤𑌿𑌰𑍍𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇' 𑌇𑌤𑌿 ॥

---

**தக்ஷர்**:— *எவன் ஸந்யாஸத்தை க்ரஹித்து, தனது தர்மத்தில் இல்லையோ அவனை நாயின் காலினால் சூடிட்டுத் தன் தேசத்தினின்று அரசன் சீக்கிரமாக வெளியேற்றவேண்டும்.*

**யாஜ்ஞவல்க்யர்**:— *ஸந்யாஸத்தினின்று நழுவியவன் மரணம் வரையில் அரசனுக்கு அடிமையாகவேண்டும்.*

**அங்கிரஸ்**:—*எந்த ப்ராம்ஹணன் ஸந்யாஸம் செய்துகொண்டு மறுபடி க்ருஹஸ்தாச்ரமத்தை யடைகிறானோ அவனுக்கு ப்ராயஶ்சித்தம் என்பது விதிக்கப்படவில்லை. ஸ்வதர்மத்தை விட்டவனுக்கு மப்படியே. ஸந்யாஸத்தை க்ரஹித்தவன் மறுபடி கீழ் ஆச்ரமத்திற்கு இறங்கினால், அவனை ஆரூடபதிதனென்றறியவும். அவன் எல்லாக் கர்மங்களுக்கும் அர்ஹனல்லாதவன். ஸந்யாஸிகளும், வானப்ரஸ்தர்களும் தமது ஆச்ரமத்திலிருந்து நழுவினால் சண்டாளர்கள் ஆவர். அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளைச் சண்டாளர்களுடன் சேர்ந்து இருக்கச்செய்யவேண்டும். நைஷ்டிக ப்ரம்ஹசாரிகள், வானப்ரஸ்தர்கள், ஸந்யாஸிகள் இவர்கள் அவகீர்ணிகளானால் (ப்ரம்ஹசர்யத்தை இழந்தால்), அவர்கள் ப்ராயஶ்சித்தம் செய்துகொண்டாலும் இவ்வுலகில் வ்யவஹாரயோக்யதை இல்லை.*

बह्वृचपरिशिष्टे —

यस्य बुद्धिकृतं रेतःस्कन्दनं द्रव्यसंग्रहणं च । भवत्यसौ ध्रुवं भिक्षुः पतितः स भिक्षोरात्मीयं भवेत्' इति ॥

## आत्मघातिनश्शववहनादौ प्रायश्चित्तम् ॥

---

आत्महननस्यातिकष्टत्वं प्रतिपाद्य तच्छववहनादौ प्रायश्चित्तमाह पराशरः —

अतिमानादतिक्रोधात् स्नेहाद्वा यदि वा भयात् । उद्बध्नीयात् स्त्री पुमान्वा गतिरेषा विधीयते ॥ पूय-शोणितसम्पूर्णे ह्यन्धे तमसि मज्जति । षष्टिं वर्ष-सहस्राणि नरकं प्रतिपद्यते ॥ नाशौचं नोदकं नाग्निं नाश्रुपातं च कारयेत् । वोढारोऽग्निप्रदातारः पाशच्छेदकराश्च ये । तप्तकृच्छ्रेण शुध्यन्तीत्येव

---

**பஹ்வ்ருச பரிசிஷ்டத்தில்:—** எந்த ஸந்யாஸிக்குப் புத்தி பூர்வமாய் ரேதஸ்ஸ்கலனமும் பணத்தைச் சேர்ப்பதும் என்ற இவ்விரண்டும் உள்ளதோ. அந்த ஸந்யாஸீ நிச்சயமாய்ப் பதிதனாகிறான்.

## தற்கொலை செய்து கொண்டவனின் சவத்தைச் சுமப்பது முதலியதில் ப்ராயஸ்சித்தம்.

தற்கொலைக்கும் கஷ்டத்தன்மையைச் சொல்லி அவனது சவத்தை வஹிப்பது முதலியதில் ப்ராயஸ்சித்தத்தைச் சொல்லுகிறார்,

**பராசரர்:—** அதிக அஹங்காரத்தாலோ, அதிக கோபத்தாலோ, அதிஸ்நேஹத்தாலோ, அதிக பயத்தாலோ, ஸ்த்ரீயாவது புருஷனாவது சுருக்கிட்டுக்கொண்டு மரித்தால், அவனுக்கு இவ்விதம் கதி சொல்லப்படுகிறது. பூயம், ரக்தம் இவைகளால் நிறைந்த அந்ததமஸம் என்கிற கொடிய நரகத்தில் முழுகுவான். அறுபதினாயிரம் வர்ஷங்கள் நரகத்தையடைவான். அவன்விஷயத்தில் ஆசௌசம், உதக தானம், அக்னிதானம், ரோதனம் இவைகளைச் செய்யக்கூடாது. அந்தச் சவத்தைச் சுமந்தவர்கள், அக்னிதானம் செய்தவர்கள், கயிற்றை அறுத்தவர்கள் இவர்கள் தப்த க்ருச்ரத்தால் சுத்தரா

மாஹ ப்ரஜாபதி: । தப்தக்ருச்ச்ரேண ஶுத்தாஸ்தே குர்யுர்ப்ராஹ்மணபோஜநம் ॥ அநடுத்ஸஹிதாம் காம் ச தத்யுர்விப்ராய தக்ஷிணாம்’ இதி ॥ அந்தம: = தீவ்ரோ நரகவிஶேஷ: ॥

யத்து ஸ்ம்ருத்யந்தரம்—

‘ஸ்நாநாதி பதிதாநாம் து ய: கரோதி விமோஹித: । தப்தக்ருச்ச்ரத்வயேநைவ தஸ்ய ஶுத்திர்நாந்யதா’ இதி ॥ ஸ்நாநாதி = தாஹாதீநி । தேஷாம் தத்ர ப்ரக்ருதத்வாத் । தத் காமகாரவிஷயம் । ‘விஹிதம் யதகாமாநாம் காமாத்து த்விகுணம் பவேத்’ இதி ஸ்மரணாத் ॥

யத்து ப்ருஹஸ்பதிநோக்தம்—

‘விஷோத்பந்தநஶஸ்த்ரேண யஸ்யாத்மாநம் ப்ரமாபயேத் । ம்ருதோऽமேத்யேந லேப்தவ்யோ நாஸ்ய ஸம்ஸ்காரமர்ஹதி ॥ பாஶம் சேத்தா து யஸ்தஸ்ய வோடா சாக்நிப்ரதஸ்ததா । ஸோऽதிக்ருச்ச்ரேண ஶுத்த்யேத பிண்டதோ வா நராதம:’ இதி ॥

---

கின்றனர் என்றார் ப்ராஜாபதி. அவர்கள் தப்த க்ருச்ரத்தினால் சுத்தர்களான பிறகு ப்ராம்ஹணர்களுக்குப் போஜனம் செய்விக்க வேண்டும். காளையுடன்கூடிய ஒரு பசுவையும் ப்ராம்ஹணனுக்குத் தக்ஷிணையாகக் கொடுக்கவேண்டும். ஆனால்,

மற்றோர் ஸ்ம்ருதி:—பதிதர்களுக்குத் தஹனம் முதலியவைகளை எவன் அறியாமையால் செய்கிறானோ அவனுக்கு இரண்டு தப்த க்ருச்ரத்தால் சுத்தி. வேறுவிதத்தால் சுத்தியில்லை” என்று சொல்லிய வசனம், அறிந்து செய்த விஷயம். “அறியாமையால் செய்தவருக்கு விதித்துள்ள ப்ராயஶ்சித்தம் எதுவோ, அது அறிந்து செய்தவர் விஷயத்தில் இரண்டு மடங்காகும்” என்று ஸ்ம்ருதியிருப்பதால்.

ப்ருஹஸ்பதி:— விஷம், சுருக்கு, ஆயுதம், இவைகளால் எவன் தன்னைக் கொலைசெய்து கொள்ளுகிறானோ அவன் அமேத்யத்தால் பூசப்படவேண்டும். வேறு ஸம்ஸ்காரம் இல்லை. அவனது கயிற்றை யறுத்தவனும், சவத்தைச் சுமந்தவனும், அக்னிதானம் செய்தவனும், பிண்டதானம் செய்தவனும் அதிக்ருச்ரத்தால் சுத்தராவார்கள், என்று சொல்லிய வசனமும்,

यत्तु यमेनोक्तम् —

'यो ब्राह्मणं हतं दग्ध्वा मृतोद्बन्धनेन च ।
पाशं छित्त्वा तथा तस्य कृच्छ्रं सान्तपनं चरेत्' इति,
तद्देशकालादितारतम्यापेक्षयोक्तम् । देशकालादितारतम्यस्य प्रायश्चित्ततारतम्ये हेतुत्वात् ॥

तथा च व्याघ्रः —

'देशं कालं वयश्शक्तिं ज्ञानं बुद्धिकृतं तथा ।
अबुद्धिकृतमभ्यासं ज्ञात्वा निष्करणं भवेत्' इति ॥

'शक्त्यादितारतम्यवन्निमित्तादितारतम्यमपि प्रायश्चित्ततारतम्ये कारणम् ॥ अत एव प्रजापतिः स्वल्पनिमित्ते स्वल्पं प्रायश्चित्तमाह —

'तच्छवं केवलं स्पृष्ट्वा पातयित्वाऽश्रु वा तथा ।
एकरात्रं त्वनश्नीयात् त्रिरात्रं बुद्धिपूर्वकम्' इति ॥

---

**யமனால்:—** சுருக்கினால் இறந்த ப்ராம்ஹணனை எவன் தஹித்தானோ, இறந்தவனுடைய கயிற்றை எவன் அறுத்தானோ அவன் ஸாந்தபன க்ருச்ரத்தை யனுஷ்டிக்க வேண்டும், என்று சொல்லப் பட்ட வசனமும், தேசம், காலம் முதலியதின் தாரதம்யத்தை அபேக்ஷித்துச் சொல்லப்பட்டதாகும். தேசகாலதாரதம்யம் ப்ராயஶ்சித்தத்தின் தாரதம்யத்திற்குக் காரணமாவதால். அவ் விதமே.

**வ்யாக்ரர்:—** தேசம், காலம், வயஸ், சக்தி, ஜ்ஞானம், புத்தியால் செய்யப்பட்டது, அறியாமையால் செய்யப்பட்டது, அடிக்கடி செய்வது, இவைகளை அறிந்து உசிதப்படி ப்ராயஶ்சித்தம் விதிக்கப் படவேண்டும்.

சக்தி முதலியதின் தாரதம்யம்போல் காரணம் முதலியதின் தாரதம்யமும் ப்ராயஶ்சித்தத்தின் தாரதம்யத்தில் காரணமாகும். ஆகையாலேயே **ப்ரஜாபதி** தொடுவது முதலியதாகிய அல்ப காரணத்தில் ஸ்வல்பமான ப்ராயஶ்சித்தத்தைச் சொல்லுகிறார்:—

அவனின் சவத்தைத் தொட்டாலும், கண்ணீர் விட்டாலும், ஒரு நாள் முழுவதும் உபவாஸமிருக்கவேண்டும். புத்திபூர்வமாய் அவைகளைச் செய்திருந்தால் மூன்று நாள் புஜிக்கக்கூடாது.

𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌾𑌧𑌿𑌕𑍍𑌯𑍇𑌨𑌾𑌧𑌿𑌕𑌂 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑌾𑌹 𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑌃—

𑌯 𑌆𑌤𑍍𑌮𑌤𑍍𑌯𑌾𑌗𑌿𑌨𑌾𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍𑌸𑍍𑌨𑍇𑌹𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑍇𑌤𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌂 𑌦𑍍𑌵𑌿𑌜𑌃 । 𑌸 𑌤𑌪𑍍𑌤𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌸𑌹𑌿𑌤𑌂 𑌚𑌰𑍇𑌚𑍍𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌵𑍍𑌰𑌤𑌮𑍍' 𑌇𑌤𑌿 ॥

𑌪𑍍𑌰𑌾𑌮𑌾𑌦𑌿𑌕𑌮𑌰𑌣𑍇 𑌪𑌾𑌤𑌿𑌤𑍍𑌯𑌾𑌭𑌾𑌵𑌾𑌨𑍍𑌨𑍇𑌦𑌂 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍍 । 𑌤𑌚𑍍𑌚𑌾𑌶𑍌𑌚𑌕𑌾𑌣𑍍𑌡𑍇 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌿𑌤𑌮𑍍 ॥

## 𑌅𑌨𑍃𑌤𑌭𑌾𑌷𑌣𑍇 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍍 ॥

𑌅𑌨𑍃𑌤𑌭𑌾𑌷𑌣𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑌾𑌹 𑌮𑌨𑍁𑌃—

'𑌵𑌾𑌗𑍍𑌦𑍈𑌵𑌤𑍍𑌯𑍈𑌶𑍍𑌚 𑌚𑌰𑍁𑌭𑌿𑌰𑍍𑌯𑌜𑍇𑌰𑌂𑌸𑍍𑌤𑍇 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀𑌮𑍍 । 𑌅𑌨𑍃𑌤𑌸𑍍𑌯𑍈𑌨𑌸𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌕𑍁𑌰𑍍𑌵𑌾𑌣𑌾 𑌨𑌿𑌷𑍍𑌕𑍃𑌤𑌿𑌂 𑌪𑌰𑌾𑌮𑍍 ॥ 𑌕𑍂𑌷𑍍𑌮𑌾𑌣𑍍𑌡𑍈𑌰𑍍𑌵𑌾𑌪𑌿 𑌜𑍁𑌹𑍁𑌯𑌾𑌦𑍍𑌘𑍃𑌤𑌮𑌗𑍍𑌨𑍌 𑌯𑌥𑌾𑌵𑌿𑌧𑌿 । 𑌉𑌦𑌿𑌤𑍍𑌯𑍃𑌚𑌾 𑌵𑌾 𑌵𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌾 𑌤𑍃𑌚𑍇𑌨𑌾𑌬𑍍𑌦𑍈𑌵𑌤𑍇𑌨 𑌵𑌾 ॥ 𑌅𑌨𑍃𑌤𑍀 𑌹𑍋𑌮𑍈𑌃 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑍍𑌰𑌿𑌰𑌾𑌤𑍍𑌰𑌂 𑌪𑌰𑌮𑌂 𑌤𑌪𑌃 । 𑌵𑌰𑍁𑌣𑌾𑌹𑍁𑌤𑌿𑌂 𑌵𑌾 𑌜𑍁𑌹𑍁𑌯𑌾𑌤𑍍𑌸𑌪𑍍𑌤𑍍𑌯𑌾 𑌵𑍍𑌰𑌤𑍇𑌨 𑌤𑍁' 𑌇𑌤𑌿 ॥

---

*காரணங்கள் அதிகமானல் அதிக ப்ராயஶ்சித்தத்தைச் சொல்லுகிறார்,*

**வஸிஷ்டர்:—** *தற்கொலை செய்துகொண்டவருக்கு ப்ரேத க்ரியை முழுவதையும் எவன் செய்வானோ அவன் தப்த க்ருச்ரம், சாந்த்ராயண க்ருச்ரம் இவைகளை யனுஷ்டிக்கவேண்டும்.*

*கவனமின்மையால் ஏற்பட்ட மரணத்தில் பாதித்யம் இல்லாததால் இந்த ப்ராயஶ்சித்தம் இல்லை. அது கீழே சொல்லப்பட்டுள்ளது. (ஆசௌசகாண்டத்தில்)*

## பொய் சொல்லுவதில் ப்ராயஶ்சித்தம்.

**மனு:—** *அவர்கள் (பொய் சொல்லுகிறவர்கள்) அந்தப் பொய்யினாலுண்டாகிய பாபத்திற்கு ப்ராயஶ்சித்தத்தைச் செய்பவர்களாய் ஸாஸ்வதீ தேவதாகமான சருக்களால் ஸரஸ்வதியைக் குறித்து யாகம் செய்யவேண்டும். அல்லது கூச்மாண்ட மந்த்ரங்களால் அக்னியில் நெய்யை விதிப்படி ஹோமம் செய்யவேண்டும். உதுத்தமம் என்ற வருணதேவதாகமான ருக்கினாலாவது, அப்தேவதாகமான மூன்று ருக்குக்களாலாவது ஹோமம் செய்ய*

யாஜ்ஞவல்க்ய:—

'மயி தேஜ இதி ச்சாயாம் ஸ்வாம் த்ருஷ்ட்வாம்புகதாம் ஜபேத் ।
ஸாவித்ரீமஶுசௌ த்ருஷ்டே சாபல்யே சாந்ருதேऽபி ச' இதி ॥

ஏதச்ச காமகாரே த்ரஷ்டவ்யம் । அகாமக்ருதே து மநுநா தர்ஶிதம்—

'ஸுப்த்வா க்ஷுத்வா ச புக்த்வா ச நிஷ்டீவ்யோக்த்வாऽந்ருதாநி ச ।
பீத்வாऽபோऽத்யேஷ்யமாணஶ்ச ஆசாமேத் ப்ரயதோऽபி ஸந்' இதி ॥

மித்யாபிஶாபே வர்ணசதுஷ்டயவதே ப்ராயஶ்சித்தம் ॥

ஏதஸ்ய கார்யஸ்யாகரணே சதுர்வர்ணாநாமந்யதமம் ஹதவாநஸ்மீதி ஶபதம் க்ருத்வா யஸ்தத்கார்யம் ந கரோதி, தஸ்ய ப்ராயஶ்சித்தமாஹ யம:—

---

வேண்டும். ஸோமபானம் செய்தவன் பொய் சொன்னால் இவ்விதம் சிறந்த தபஸ்ஸைச் செய்யவேண்டும். அல்லது ஸப்தவதீ என்றதிருக்கினால் பூர்ணாஹுதியைச் செய்யவேண்டும்.

**யாஜ்ஞவல்க்யர்:**— ஜலத்தில் தனது நிழலைப் பார்த்தால் "மயி தேஜ:" என்ற மந்த்ரத்தை ஜபிக்கவேண்டும். அசுத்தமான வஸ்துவைப் பார்த்தாலும், வாக் முதலியதின் சாபலத்திலும் பொய் பேசினாலும் காயத்ரியை ஜபிக்கவேண்டும்.

இது புத்திபூர்வமாய்ச் செய்த விஷயத்தில் என்றறியவும். அபுத்திபூர்வமாய்ச் சொல்லப்பட்ட பொய்யில் சொல்லுகிறார்,

**மனு:**— தூங்கினாலும், தும்மினாலும், புஜித்தாலும், துப்பினாலும், பொய் பேசினாலும், ஜலத்தைப் பருகினாலும், அத்யயனம் செய்வதற்கு முன்பும், சுத்தனாயிருந்தாலும் ஆசமனம் செய்ய வேண்டும்.

## பொய்யாக நான்கு வர்ணத்தாரை வதம் செய்வதாய் ஆணையிட்டால் ப்ராயஶ்சித்தம்.

இக்கார்யத்தைச் செய்யாவிடில் நான்கு வர்ணத்தாருள் ஒருவனைக் கொன்றவனாவேன் என்று சபதம் செய்து, எவன் அக்கார்யத்தைச் செய்யவில்லையோ அவனுக்கு ப்ராயஶ்சித்தத்தைச் சொல்லுகிறார்,

'𑌵𑌿𑌪𑍍𑌰𑌸𑍍𑌯 𑌵𑌧𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌤𑍁 𑌶𑌪𑌥𑌂 𑌮𑍃𑌷𑌾 । 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌯𑌾𑌵𑌕𑌾𑌨𑍍𑌨𑍇𑌨 𑌵𑍍𑌰𑌤𑌂 𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌂 𑌚𑌰𑍇𑌤𑍍 ॥ 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌯 𑌪𑌰𑌾𑌕𑌂 𑌤𑍁 𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌂 𑌤𑌥𑌾 𑌵𑌿𑌶𑌃 । 𑌵𑍃𑌷𑌲𑌸𑍍𑌯 𑌤𑍍𑌰𑌿𑌰𑌾𑌤𑍍𑌰𑌂 𑌤𑍁 𑌵𑍍𑌰𑌤𑌂 𑌶𑍂𑌦𑍍𑌰𑌹𑌨𑌨𑌶𑍍𑌚𑌰𑍇𑌤𑍍 ॥ 𑌕𑍇𑌚𑌿𑌦𑌾𑌹𑍁𑌰𑌪𑌾𑌪𑌂 𑌤𑍁 𑌵𑍃𑌷𑌲𑌸𑍍𑌯 𑌵𑌧𑌂 𑌮𑍃𑌷𑌾 । 𑌨𑍈𑌤𑌨𑍍𑌮𑍇 𑌮𑌤𑌂 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑍇𑌨 𑌭𑌵𑌤𑍍𑌯𑌸𑍌' 𑌇𑌤𑌿 ॥

𑌪𑍍𑌰𑌤𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌯𑌾𑌨𑍃𑌤𑍋𑌕𑍍𑌤𑍌 𑌹𑌾𑌰𑍀𑌤𑌃—

'𑌪𑍍𑌰𑌤𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌯𑌾𑌨𑍃𑌤𑌂 𑌬𑍍𑌰𑍂𑌯𑌾𑌦𑍍𑌯𑌸𑍍𑌸𑌤𑍍𑌯𑌮𑌥𑌾𑌪𑌿 𑌵𑌾 । 𑌸 𑌤𑌪𑍍𑌤𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌸𑌹𑌿𑌤𑌂 𑌚𑌰𑍇𑌚𑍍𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌵𑍍𑌰𑌤𑌮𑍍' 𑌇𑌤𑌿 ॥

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌾𑌰𑍍𑌯𑌾𑌦𑌿𑌵𑌿𑌷𑌯𑍇 𑌗𑌰𑍍𑌗𑌃—

'𑌤𑍍𑌰𑌿𑌰𑌾𑌤𑍍𑌰𑌮𑍇𑌕𑌰𑌾𑌤𑍍𑌰𑌂 𑌵𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌾𑌰𑍍𑌯𑌨𑍃𑌤𑌂 𑌚𑌰𑍇𑌤𑍍 । 𑌮𑌾𑌂𑌸𑌂 𑌭𑌕𑍍𑌷𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌾𑌰𑍀 𑌪𑍁𑌨𑌸𑍍𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 ॥ 𑌅𑌭𑍍𑌯𑌾

---

**யமன்:—** *ப்ராம்ஹணன், ப்ராம்ஹணனைக் கொல்வதுடன் சேர்ந்த சபதத்தைப் பொய்யாகச் செய்தால் யவான்னத்தால் சாந்த்ராயண க்ருச்ரத்தை யனுஷ்டிக்கவேண்டும். க்ஷத்ரியனைக் கொன்ற பாபம் என்று சபதம் செய்தால் பராக க்ருச்ரம். வைச்யனைக் கொன்ற பாபம் என்று சபதம் செய்தால் ப்ராஜாபத்ய க்ருச்ரம். சூத்ரனைக் கொன்ற பாபம் என்று சபதம் செய்தால் மூன்றுநாள் வ்ரதத்தை யனுஷ்டிக்கவும். சிலர் சூத்ர விஷயத்தில் பொய்யான சபதத்தைப் பாபமில்லை என்கின்றனர். இது எனக்கு இஷ்டமில்லை. ஏனெனில், அவனால் இவன் கொல்லப்பட்டவனாகவே ஆகிறான்.*

*ப்ரதிஜ்ஞை செய்து பொய் சொன்னால் ப்ராயச்சித்தம் சொல்லுகிறார்* **ஹாரீதர்:—** *ஒருவனுக்கு வாக்களித்துப் பிறகு பொய் சொன்னாலும், உண்மை சொன்னாலும், அவன் தப்த க்ருச்ரத்துடன் கூடிய சாந்த்ராயண க்ருச்ரத்தை யனுஷ்டிக்கவேண்டும்.*

*ப்ரம்ஹசாரி முதலியவர்கள் விஷயத்தில் சொல்லுகிறார்,*

**கர்க்கர்:—** *ப்ரம்ஹசாரீ பொய் பேசினால், மூன்று நாள் அல்லது ஒரு நாள் வ்ரதத்தை யனுஷ்டிக்கவேண்டும். ப்ரம்ஹசாரீ மாம்ஸத்தைப் புஜித்தால் புநருபனயனம் செய்துகொள்ளவேண்டும். அடிக்கடி செய்த விஷயத்தில் சாந்த்ராயண க்ருச்ரத்தை*

𑌸 𑌚𑍈𑌤𑌦𑍍𑌵𑍍𑌰𑌤𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑍋 𑌨𑍈𑌷𑍍𑌠𑌿𑌕𑍋 𑌦𑍍𑌵𑌿𑌗𑍁𑌣𑌂 𑌚𑌰𑍇𑌤𑍍 ॥ 𑌵𑌨𑌸𑍍𑌥𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌗𑍁𑌣𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑍋 𑌯𑌤𑌿𑌃 𑌕𑌾𑌰𑍍𑌯𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌗𑍁𑌣𑌮𑍍 । 𑌮𑌾𑌂𑌸𑌾𑌶𑌨𑍇𑌽𑌨𑍃𑌤𑍇 𑌚𑍈𑌵 𑌶𑌵𑌨𑌿𑌰𑍍𑌹𑌰𑌣𑍇 𑌤𑌥𑌾’ 𑌇𑌤𑌿 ॥

𑌕𑍍𑌵𑌚𑌿𑌤𑍍𑌤𑍁 𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌵𑌿𑌶𑍇𑌷𑍇 𑌅𑌨𑍃𑌤𑌮𑌪𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌵𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑍍 ॥

𑌤𑌥𑌾𑌹 𑌯𑌾𑌜𑍍𑌞𑌵𑌲𑍍𑌕𑍍𑌯𑌃—

‘𑌵𑌰𑍍𑌣𑌿𑌨𑌾𑌂 𑌹𑌿 𑌵𑌧𑍋 𑌯𑌤𑍍𑌰 𑌤𑌤𑍍𑌰 𑌸𑌾𑌕𑍍𑌷𑍍𑌯𑌨𑍃𑌤𑌂 𑌵𑌦𑍇𑌤𑍍 ।
𑌤𑌤𑍍𑌪𑌾𑌵𑌨𑌾𑌯 𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌪𑍍𑌯𑌶𑍍𑌚𑌰𑍁𑌃 𑌸𑌾𑌰𑌸𑍍𑌵𑌤𑍋 𑌦𑍍𑌵𑌿𑌜𑍈𑌃’ 𑌇𑌤𑌿 ॥

𑌸𑍍𑌵𑍋𑌤𑍍𑌕𑌰𑍍𑌷𑍇𑌽𑌨𑍃𑌤𑌵𑌚𑌨𑌂 𑌮𑌨𑍁𑌨𑌾—

‘𑌅𑌨𑍃𑌤𑌂 𑌚 𑌸𑌮𑍁𑌤𑍍𑌕𑌰𑍍𑌷𑍇 𑌰𑌾𑌜𑌗𑌾𑌮𑌿 𑌚 𑌪𑍈𑌶𑍁𑌨𑌮𑍍’ 𑌇𑌤𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌹𑌤𑍍𑌯𑌾𑌸𑌮𑍇𑌷𑍁 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌪𑌠𑌿𑌤𑌮𑍍 ॥

‘𑌨𑌿𑌷𑌿𑌦𑍍𑌧𑌭𑌕𑍍𑌷𑌣𑌂 𑌜𑍈𑌹𑍍𑌮𑍍𑌯𑌮𑍁𑌤𑍍𑌕𑌰𑍍𑌷𑍇 𑌚 𑌵𑌚𑍋𑌽𑌨𑍃𑌤𑌮𑍍’ 𑌇𑌤𑌿 𑌯𑌾𑌜𑍍𑌞𑌵𑌲𑍍𑌕𑍍𑌯𑍇𑌨 𑌸𑍁𑌰𑌾𑌪𑌾𑌨𑌸𑌮𑍇𑌷𑍁 𑌪𑌠𑌿𑌤𑌮𑍍 ॥

---

யனுஷ்டிக்கவேண்டும். நைஷ்டிக ப்ரம்ஹசாரியானால் இரண்டு மடங்கு ப்ராயஶ்சித்தத்தை யனுஷ்டிக்கவேண்டும். வானப்ரஸ்தன் மூன்று மடங்கு ப்ராயஶ்சித்தத்தை யனுஷ்டிக்கவேண்டும். ஸந்யாஸியானால் நான்கு மடங்கு அனுஷ்டிக்கவேண்டும். மாம்ஸத்தைப் புஜித்தாலும், பொய் சொன்னாலும், சவத்தைக் கடத்தினாலும் அப்படியே ப்ராயஶ்சித்தம்.

சில இடத்தில் காரண விசேஷத்தை அபேக்ஷித்துப் பொய்யும் அறிந்தே சொல்லப்படவேண்டும். அதைச் சொல்லுகிறார்,

**யாஜ்ஞவல்க்யர்:—** ப்ரம்ஹசாரிகளுக்கு வதம் ஏற்படும் விஷயமானால் அதில் ஸாக்ஷி பொய் சொல்லலாம். அந்தப் பாபத்தைப் போக்குவதற்காக ஸாரஸ்வதீ தேவதாகமான சருவைச் செய்யவேண்டும்.

தன்னைச் சிறப்பிப்பதற்காகப் பொய்சொல்லுதல், மனுவினால் "தன்னைச் சிறப்பிப்பதற்காகச் சொல்லப்படும் பொய்யும், அரசனிடம் கோட் சொல்லுவதும்" என்று ப்ரம்ஹஹத்யா ஸமபாபங்களின் நடுவில் சொல்லப்பட்டுள்ளது.

"நிஷித்த வஸ்துவைப் பக்ஷிப்பதும், குடிலத் தன்மையும், தன்னைச் சிறப்பிப்பதற்காகப் பொய்வார்த்தையும்", என்று யாஜ்ஞவல்க்யரால் ஸுராபான ஸமபாபங்களில் சொல்லப்பட்டுள்ளது.

𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌨𑌾 𑌤𑍁—

'𑌅𑌨𑍃𑌤𑌵𑌚𑌨𑌮𑍁𑌤𑍍𑌕𑌰𑍍𑌷𑍇' 𑌇𑌤𑌿 𑌤𑌸𑍍𑌯𑍋𑌪𑌪𑌾𑌤𑌕𑌤𑍍𑌵𑌮𑍁𑌕𑍍𑌤𑌮𑍍 ॥

𑌅𑌤𑍍𑌰 𑌚 𑌵𑌿𑌷𑌯𑌭𑍇𑌦 𑌉𑌕𑍍𑌤𑍋 𑌮𑌾𑌧𑌵𑍀𑌯𑍇—

'𑌦𑍍𑌵𑍇𑌷𑍍𑌯𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌰𑌾𑌜𑌾𑌦𑌿𑌭𑌿𑌰𑍍𑌘𑌾𑌤𑌯𑌿𑌤𑍁𑌂 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌵𑌿𑌦𑍍𑌯𑌮𑌾𑌨𑌮𑌪𑌿 𑌮𑌹𑌾𑌨𑍍𑌤𑌮𑌪𑌰𑌾𑌧𑌮𑌾𑌰𑍋𑌪𑍍𑌯𑌾𑌨𑍃𑌤𑌂 𑌯𑍋 𑌬𑍍𑌰𑍂𑌯𑌾𑌤𑍍, 𑌤𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌹𑌤𑍍𑌯𑌾𑌸𑌮𑌂 𑌵𑌧𑌪𑌰𑍍𑌯𑌵𑌸𑌾𑌯𑌿𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌯𑌸𑍍𑌤𑍁 𑌮𑌾𑌨𑌪𑍂𑌜𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌿𑌕𑌾𑌮𑍋 𑌰𑌾𑌜𑌸𑌭𑌾𑌦𑍌 𑌸𑍍𑌵𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌵𑌿𑌦𑍍𑌯𑌮𑌾𑌨𑌮𑌪𑌿 𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑌾𑌭𑌿𑌜𑍍𑌞𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌕𑌂 𑌪𑍍𑌰𑌕𑌟𑌯𑌿𑌤𑍁𑌮𑌨𑍃𑌤𑌂 𑌬𑍍𑌰𑍂𑌤𑍇, 𑌤𑌸𑍍𑌯 𑌸𑍁𑌰𑌾𑌪𑌾𑌨𑌸𑌮𑌮𑍍, 𑌅𑌤𑌿𑌗𑌰𑍍𑌹𑌿𑌤𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌯𑌸𑍍𑌤𑍁 𑌸𑌖𑌿𑌗𑍋𑌷𑍍𑌠𑍍𑌯𑌾𑌦𑍌 𑌪𑌰𑍋𑌪𑌕𑌾𑌰𑌶𑍂𑌨𑍍𑌯𑍇𑌨 𑌵𑍃𑌥𑌾𑌽𑌨𑍃𑌤𑌂 𑌬𑍍𑌰𑍂𑌤𑍇 𑌤𑌸𑍍𑌯𑍋𑌪𑌪𑌾𑌤𑌕𑌮𑍍' 𑌇𑌤𑌿 ॥

𑌤𑌤𑍍𑌰𑌾𑌦𑍍𑌯𑌯𑍋𑌃 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌨𑍋𑌕𑍍𑌤𑌮𑍍—

'𑌸𑌮𑍁𑌤𑍍𑌕𑌰𑍍𑌷𑍇𑌽𑌨𑍃𑌤𑍇 𑌗𑍁𑌰𑍋𑌰𑌲𑍀𑌕𑌨𑌿𑌰𑍍𑌬𑌨𑍍𑌧𑍇 𑌤𑌦𑍍𑌵𑌤𑍍 𑌜𑍍𑌞𑌾𑌨𑌕𑌾𑌰𑌣𑍇 𑌚 𑌮𑌾𑌸𑌂 𑌪𑌯𑌸𑌾 𑌵𑌰𑍍𑌤𑍇𑌤' 𑌇𑌤𑌿 ॥

---

**விஷ்ணுவினுலோவெனில்,** "தன்னைச் சிறப்பிப்பதற்காகப் பொய் சொல்வது," என்று அதற்கு உபபாதகத் தன்மை சொல்லப்பட்டுள்ளது.

இவ்விடத்தில் விஷயபேதம் சொல்லப்பட்டுள்ளது,

**மாதவீயத்தில்:-**"த்வேஷிக்கப்பட்ட மனிதனை அரசன் முதலியவர்களால் கொல்லச்செய்வதற்காக அவனிடத்தில் இல்லாமலிருந்தாலும் பெரிய குற்றத்தை ஏற்றிவைத்துப் பொய்யைச் சொல்வாளுகில், அது ப்ரம்ஹஹத்யா பாபத்திற்கு ஸமமாகும், கொலையில் முடிவதால். எவன் தனலாபம், மர்யாதை, கீர்த்தி இவைகளில் ஆசையுடையவனாய் ராஜஸபை முதலிய இடத்தில் தன்னிடத்தில் இல்லாமலிருந்தாலும் நான்கு வேதங்களையும் அறிந்த தன்மை முதலியதை வெளியிடுவதற்குப் பொய்யைச் சொல்லுகின்றானோ, அவனுக்கு அந்தப் பொய் ஸுராபான பாபத்துக்கு ஸமம், மிகவும் இழிவானதால். எவன் மித்திரர்களின் கூட்டம் முதலியதில் பிறருக்கு உபகாரமில்லாமல் வீணாய்ப் பொய்யைச் சொல்லுகிறானோ, அவனுக்கு அந்தப் பொய் உபபாதகத்துக்கு ஸமம்," என்று சொல்லப்பட்டுள்ளது.

அவைகளுள் முதல் இரண்டுக்கும் ப்ராயச்சித்தம் சொல்லப்

த்ருதீயே து யாஜ்ஞவல்க்யாத்யுக்தம் த்ரஷ்டவ்யம்। 'அஶ்வாந்ருதே ஹந்தி ஶதம் ஸஹஸ்ரம் து கவாந்ருதே' இத்யாதிநா உக்தபாபதாரதம்யயுக்தே அந்ருதே உக்தப்ராயஶ்சித்தேஷு தாரதம்யம் த்ரஷ்டவ்யம்॥

## ஶ்ரௌதாக்நித்யாகே ப்ராயஶ்சித்தம்॥

ஶ்ரௌதாக்நித்யாகே ப்ராயஶ்சித்தேऽஹ விஷ்ணு:—

'அக்நித்யாகீ த்ரிஷவணஸ்நாயீ அத:ஶாயீ ஸம்வத்ஸரம் ஸக்ருத் பைக்ஷேண வர்தேத' இதி॥

வஸிஷ்ட:—

'யோऽக்நீநபவித்யேத் ஸ க்ருச்ச்ரம் த்வாதஶராத்ரம் சரித்வா புநராதாநம் காரயேத்' இதி॥

---

பட்டுள்ளது, **விஷ்ணுவினல்:**— தன்னைச் சிறப்பிப்பதற்காகப் பொய் சொல்லுவதிலும், குருவிஷயத்தில் பொய்யாக நிர்ப்பந்தம் செய்வதிலும், குருவை அவமதிப்பதிலும், ஒரு மாஸம் முழுவதும் பாலை மட்டும் பருகி ப்ராயஶ்சித்தத்தை யனுஷ்டிக்கவேண்டும்.

மூன்றுவது விஷயத்திலோவெனில், **யாஜ்ஞவல்க்யர்** முதலியவர் சொல்லிய ப்ராயஶ்சித்தத்தையறியவும், "குதிரை விஷயமாய்ப் பொய் சொன்னல், நூறு குதிரைகளைக் கொன்றவனுவான். பசு விஷயமாய்ப் பொய் சொன்னல், ஆயிரம் பசுக்களைக் கொன்றவனுவான்" என்பது முதலியதால் சொல்லப்பட்டுள்ள பாபத்தின் தாரதம்யத்துடன் கூடிய பொய்யில் சொல்லப்பட்டுள்ள ப்ராயஶ்சித்தங்களில் தாரதம்யத்தையறியவேண்டும்.

## ஶ்ரௌதாக்னியை விடுவதில் ப்ராயஶ்சித்தம்.

**விஷ்ணு:**— அக்னிகளை விட்டவன், மூன்று காலமும் ஸ்நானம் செய்பவனுய், பூமியில் படுப்பவனுய், ஒருவர்ஷம் முடியும் வரையில் ஒருவேளை பிக்ஷான்னத்தால் ஜீவிக்கவேண்டும்.

**வஸிஷ்டர்:**— எவன் அக்னிகளை விடுவானே அவன் பன்னிரண்டுநாள் ப்ராஜாபத்ய க்ருச்ரத்தை யனுஷ்டித்து மறுபடி அக்னியாதானம் செய்துகொள்ளவேண்டும்.

𑌮𑌨𑍁𑌃—

'𑌅𑌗𑍍𑌨𑌿𑌹𑍋𑌤𑍍𑌰𑍍𑌯𑌪𑌵𑌿𑌧𑍍𑌯𑌾𑌗𑍍𑌨𑍀𑌨𑍍 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌃 𑌕𑌾𑌮𑌕𑌾𑌰𑌤𑌃 । 𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌂 𑌚𑌰𑍇𑌨𑍍𑌮𑌾𑌸𑌂 𑌵𑍀𑌰𑌹𑌤𑍍𑌯𑌾𑌸𑌮𑌂 𑌹𑌿 𑌤𑌤𑍍 ॥ 𑌅𑌗𑍍𑌨𑌿𑌹𑍋𑌤𑍍𑌰𑍍𑌯𑌪𑌵𑌿𑌧𑍍𑌯𑌾𑌗𑍍𑌨𑍀𑌨𑍍𑌮𑌾𑌸𑌾𑌦𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌂 𑌤𑍁 𑌕𑌾𑌮𑌤𑌃 । 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌂 𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌂 𑌚𑍈𑌵 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑍇𑌵𑌾𑌵𑌿𑌚𑌾𑌰𑌯𑌨𑍍' 𑌇𑌤𑌿 ॥

𑌹𑌾𑌰𑍀𑌤𑌃—

'𑌸𑌂𑌵𑌤𑍍𑌸𑌰𑍋𑌤𑍍𑌸𑌨𑍍𑌨𑌾𑌗𑍍𑌨𑌿𑌸𑍍𑌤𑍁 𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌂 𑌚𑌰𑌿𑌤𑍍𑌵𑌾 𑌪𑍁𑌨𑌰𑌾𑌦𑌧𑍍𑌯𑌾𑌤𑍍 । 𑌦𑍍𑌵𑌿𑌵𑌰𑍍𑌷𑍋𑌤𑍍𑌸𑌨𑍍𑌨𑍇 𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌂 𑌸𑍋𑌮𑌾𑌯𑌨𑌂 𑌚 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 । 𑌤𑍍𑌰𑌿𑌵𑌰𑍍𑌷𑍋𑌤𑍍𑌸𑌨𑍍𑌨𑍇 𑌸𑌂𑌵𑌤𑍍𑌸𑌰𑌂 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌂 𑌚𑌰𑌿𑌤𑍍𑌵𑌾 𑌪𑍁𑌨𑌰𑌾𑌦𑌧𑍍𑌯𑌾𑌤𑍍' 𑌇𑌤𑌿 ॥

𑌶𑌙𑍍𑌖𑌃—

'𑌅𑌗𑍍𑌨𑍍𑌯𑍁𑌤𑍍𑌸𑌾𑌦𑍀 𑌸𑌂𑌵𑌤𑍍𑌸𑌰𑌂 𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌂 𑌚𑌰𑍇𑌤𑍍 𑌗𑌾𑌂 𑌚 𑌦𑌦𑍍𑌯𑌾𑌤𑍍' 𑌇𑌤𑌿 ॥

𑌭𑌰𑌦𑍍𑌵𑌾𑌜𑌃—

'𑌆𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌹𑌾𑌤𑌿𑌕𑍍𑌰𑌮𑍇 𑌤𑍍𑌰𑍍𑌯𑌹𑌮𑍁𑌪𑌵𑌾𑌸𑍋 𑌮𑌾𑌸𑌾𑌤𑌿𑌕𑍍𑌰𑌮𑍇

---

**மனு:**— *அக்னிஹோத்ரியான ப்ராம்ஹணன் அக்னிகளைப் புத்திபூர்வமாய் விட்டால், ஒரு மாஸம் வரையில் சாந்த்ராயண க்ருச்ரத்தை யனுஷ்டிக்கவேண்டும். அது வீர(புத்ர)ஹத்திக்கு ஸமமல்லவா. அக்னிஹோத்ரியானவன் புத்திபூர்வமாய் ஒரு மாஸத்துக்குமேல் அக்னிகளை விட்டிருந்தால், ஸந்தேஹமில்லாமல் சாந்த்ராயண க்ருச்ரத்தை யனுஷ்டிக்கவேண்டும்.*

**ஹாரீதர்:**—*ஒருவர்ஷம் அக்னிஹோத்ரத்தை விட்டிருந்தால், சாந்த்ராயண க்ருச்ரத்தை யனுஷ்டித்து, புனராதானம் செய்ய வேண்டும். இரண்டு வர்ஷம் விட்டிருந்தால், சாந்த்ராயண க்ருச்ரத்தையும் ஸோமாயனத்தையும் செய்யவேண்டும். மூன்று வர்ஷம் விட்டிருந்தால், ஒருவர்ஷம் ப்ராஜாபத்ய க்ருச்ரத்தை யனுஷ்டித்து, புநராதானம் செய்யவேண்டும்.*

**சங்கரும்:**— *அக்னிகளை விட்டவன் ஒருவர்ஷம் ப்ராஜாபத்ய க்ருச்ரத்தை யனுஷ்டிக்கவேண்டும். பசுவையும் கொடுக்கவேண்டும்.*

**பாரத்வாஜர்:**— *பன்னிரண்டுநாள் அக்னிஹோத்ரத்தை அதிக்*

ஆதிஶப்தவாச்யஸம்வத்ஸராதிக்ரமே மாஸோபவாஸ: பயோபக்ஷணம் ச' இதி ॥

ஏதத்ஸர்வமாலஸ்யாதிநிமித்தத்யாகவிஷயம் । யத்து பாரத்வாஜக்ருஹ்யேऽபிஹிதம்—

'ப்ராணாயாமஶதமாதஶராத்ராத் ஊர்த்வமுபவாஸ ஆ விம்ஶதிராத்ராத் தத ஊர்த்வமாஷஷ்டிராத்ராத் த்ரிராத்ரமுபவாஸஸ் தத ஊர்த்வமாஸம்வத்ஸராத் ப்ராஜாபத்யம் அத ஊர்த்வம் காலபாஹுல்யே தோஷபாஹுல்யம்' இதி தத் ப்ரமாதாதிநிமித்தத்யாகவிஷயம் ॥

யத்து ஜாதூகர்ண்ய ஆஹ—

'அதிகாலம் ச ஜுஹுயாதக்நௌ விப்ராய வா யவம் । நஷ்டேऽக்நௌ விதிவத்தத்ர க்ருத்வாऽऽதானம் புநர்த்விஜ:' இதி, ததௌபாஸநாக்நிவிஷயம் ॥

---

ரமித்தால், மூன்றுநாள் உபவாஸம். ஒரு மாஸம் அதிக்ரமித்தால், பன்னிரண்டுநாள் உபவாஸம். ஒருவர்ஷம் அதிக்ரமித்தால், ஒரு மாஸம் உபவாஸமும், க்ஷீரபானமும்.

இவையெல்லாம் சோம்பல் முதலிய காரணத்தால் அக்னிஹோத்ரத்தை விட்டதைப்பற்றியது. ஆனால்,

**பாரத்வாஜ க்ருஹ்யத்தில்:—** "பத்துநாள் வரையில் அக்னிஹோத்ரத்தை விட்டிருந்தால், நூறு ப்ராணாயாமம் ப்ராயஶ்சித்தம். இருபதுநாள் வரையில், உபவாஸம் ப்ராயஶ்சித்தம். அதற்குமேல் அறுபதுநாள் வரையில், மூன்றுநாள் உபவாஸம். அதற்குமேல் ஒரு வர்ஷம்வரையில், ப்ராஜாபத்ய க்ருச்ரத்தை யனுஷ்டிக்கவேண்டும். அதற்குமேல் அதிககாலம் ஆனால், தோஷம் அதிகம்" என்று சொல்லப்பட்டுள்ளதேயெனில், அது கவனமின்மையால் அக்னிகளை விட்டதைப்பற்றியது. ஆனால்,

**ஜாதுகர்ண்யர்:-**"அதிக்ராந்தமான காலத்தின் ஹோமத்தையும் அக்னியில் செய்யவேண்டும். அல்லது ப்ராம்ஹணனுக்கு யவத்தையாவது தானம் செய்யவேண்டும். அக்னி நஷ்டமானால், மறுபடி விதிப்படி ஆதானம் செய்துகொண்டு தானம் செய்யவேண்டும்." என்று சொல்லியுள்ளாரே யெனில், அது ஔபாஸன அக்னியைப் பற்றியது.

## नास्तिक्यप्रायश्चित्तम् ॥

नास्तिक्यप्रायश्चित्ते आह वसिष्ठः—

'नास्तिकः कृच्छ्रं द्वादशरात्रं चरित्वा विरमेन्नास्तिक्यात्' इति ॥ अयं चोपपातकनास्तिक्यविषयः ॥

पातकनास्तिक्ये तु शङ्खः—

'नास्तिको नास्तिकवृत्तिः कृतघ्नः कूटव्यवहारी मिथ्याभिशंसी चेत्येते पञ्च संवत्सरं ब्राह्मणगृहे भैक्षं चरेयुः' इति ॥

नास्तिकस्य त्रैविध्यमुक्तं माधवीये—

'नास्तिकस्त्रिविधः प्रोक्तो धर्मज्ञैस्तत्त्वदर्शिभिः । क्रियादुष्टो मनोदुष्टो वाग्दुष्टस्तथैव च ॥ उपपातकवान् वाग्दुष्टो मनोदुष्टस्तु पातकी । अभ्यासात् क्रियादुष्टो महापातक उच्यते' इति ॥

---

## நாஸ்திகத்தன்மைக்கு ப்ராயஶ்சித்தம்.

**வஸிஷ்டர்:**— நாஸ்திகன் (தெய்வமில்லை என்பவன்) பன்னிரண்டுநாள் ப்ராஜாபத்ய க்ருச்ரத்தை யனுஷ்டித்து, நாஸ்திகத் தன்மையினின்றும் விலகவேண்டும்.

இந்த வசனம் உபபாதகமான நாஸ்திக்யத்தைப் பற்றியது. பாதக நாஸ்திக்யவிஷயத்திலோ வெனில்,

**சங்கர்:**— நாஸ்திகன், நாஸ்திக்யத்தால் பிழைப்பவன், நன்றி மறந்தவன், வஞ்சனையாய் வ்யாபாரம் செய்பவன், பொய்யாக அபவாதம் சொல்பவன் என்ற இந்த ஐவரும் ஒரு வர்ஷம் வரையில் ப்ராம்ஹணரின் க்ருஹத்தில் பிக்ஷை வாங்கவேண்டும்.

நாஸ்திகன் மூன்றுவிதம் என்று சொல்லப்பட்டுள்ளது,

**மாதவீயத்தில்:**—தர்மமறிந்தவரும், உண்மையறிந்தவருமாகிய வர்களால் நாஸ்திகன் மூன்று விதமாவான் என்று சொல்லப் பட்டுள்ளது— க்ரியாதுஷ்டன், மனோதுஷ்டன், வாக்துஷ்டன் என்று. வாக்துஷ்டன் உபபாதகமுடையவன், மனோதுஷ்டன் பாதகி, அடிக்கடி நாஸ்திக்யத்தைச் செய்பவன் க்ரியாதுஷ்டன். அவன் மஹாபாதகி என்று சொல்லப்படுகிறான்.

𑌮𑌹𑌾𑌪𑌾𑌤𑌕𑌨𑌾𑌸𑍍𑌤𑌿𑌕𑍍𑌯𑍇 𑌤𑌤𑍍𑌰 𑌹𑌾𑌰𑍀𑌤𑌃—

‘𑌕𑌨𑍍𑌯𑌾𑌦𑍂𑌷𑍀 𑌸𑍋𑌮𑌵𑌿𑌕𑍍𑌰𑌯𑍀 𑌵𑍃𑌷𑌲𑍀𑌪𑌤𑌿𑌃 𑌕𑍌𑌮𑌾𑌰𑌦𑌾𑌰𑌤𑍍𑌯𑌾𑌗𑍀 𑌸𑍁𑌰𑌾𑌮𑌦𑍍𑌯𑌪𑌶𑍍𑌶𑍂𑌦𑍍𑌰𑌯𑌾𑌜𑌕𑍋 𑌗𑍁𑌰𑍋𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌹𑌨𑍍𑌤𑌾 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿𑌕𑍋 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿𑌕𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃 𑌕𑍃𑌤𑌘𑍍𑌨𑌃 𑌕𑍂𑌟𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑍀 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌮𑌿𑌤𑍍𑌰𑌘𑍍𑌨𑍋 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌭𑌿𑌶𑌂𑌸𑍀 𑌪𑌤𑌿𑌤𑌸𑌂𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑍀 𑌮𑌿𑌤𑍍𑌰𑌦𑍍𑌰𑍁𑌕𑍍 𑌶𑌰𑌣𑌾𑌗𑌤𑌘𑌾𑌤𑍀 𑌪𑍍𑌰𑌤𑌿𑌰𑍂𑌪𑌕𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑌿𑌤𑍍𑌯𑍇𑌤𑍇 𑌪𑌞𑍍𑌚𑌤𑌪𑍋𑌽𑌭𑍍𑌰𑌾𑌵𑌕𑌾𑌶𑌜𑌲𑌶𑌯𑌨𑌾𑌨𑍍𑌯𑌨𑍁𑌤𑌿𑌷𑍍𑌠𑍇𑌯𑍁𑌃 𑌕𑍍𑌰𑌮𑍇𑌣 𑌗𑍍𑌰𑍀𑌷𑍍𑌮𑌵𑌰𑍍𑌷𑌾𑌹𑍇𑌮𑌨𑍍𑌤𑍇𑌷𑍁 𑌮𑌾𑌸𑌂 𑌗𑍋𑌮𑍂𑌤𑍍𑌰𑌯𑌾𑌵𑌕𑌮𑌶𑍍𑌨𑍀𑌯𑍁𑌃’ 𑌇𑌤𑌿 ॥

𑌪𑌙𑍍𑌕𑍍𑌤𑍌 𑌵𑍈𑌷𑌮𑍍𑌯𑍇𑌣 𑌦𑌾𑌨𑍇 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍍 ॥

---

𑌪𑌙𑍍𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌂 𑌵𑌿𑌷𑌮𑌾𑌣𑌾𑌂 𑌵𑍈𑌷𑌮𑍍𑌯𑍇𑌣 𑌦𑌾𑌨𑌾𑌦𑌾𑌵𑌾𑌹 𑌯𑌮𑌃—

‘𑌨 𑌪𑌙𑍍𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌂 𑌵𑌿𑌷𑌮𑌂 𑌦𑌦𑍍𑌯𑌾𑌨𑍍𑌨 𑌯𑌾𑌚𑍇𑌨𑍍𑌨 𑌚 𑌦𑌾𑌪𑌯𑍇𑌤𑍍 ।
𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑍇𑌨 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑍇𑌣 𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌕𑌰𑍍𑌮𑌣𑌸𑍍𑌤𑌤𑌃’ 𑌇𑌤𑌿 ॥

---

மஹாபாதகமாகிய நாஸ்திக்ய விஷயத்தில்,

**ஹாரீதர்:—** கன்யகையைத் தூஷிப்பவன், ஸோமலதையை விற்பவன், வ்ருஷளீபதி, இளமையான பத்னியைத் தள்ளியவன், ஸுரை, மத்யம் இவைகளைப் பருகியவன், சூத்ரனுக்கு யாகம் செய்விப்பவன், குருவைத் தடுப்பவன், நாஸ்திகன், நாஸ்திகத்தால் பிழைப்பவன், நன்றிமறந்தவன், வஞ்சனையால் வ்யாபாரம் செய்பவன், ப்ராம்ஹணனை மித்ரனைக் கொன்றவன், பொய்யாக அபவாதம் சொல்பவன், பதிதனுடன் சேர்ந்திருப்பவன், மித்ரனுக்கு த்ரோஹம் செய்பவன், சரணமடைந்தவனைக் கொன்றவன், ப்ரதிரூபகவ்ருத்தி என்ற இவர்கள் பஞ்சாக்னிதபஸ், ஆகாசத்தை நோக்கி நிற்பது, ஜலத்தில் படுத்திருப்பது இவைகளை அனுஷ்டிக்கவேண்டும். முறையே க்ரீஷ்மருது, வர்ஷருது, ஹேமந்தருது இக்காலங்களில். ஒரு மாஸம் கோமூத்ரத்தில் பக்வமான யவான்னத்தைப் புஜிக்கவேண்டும்.

## ஒரே பங்க்தியில் பேதமாகப் பரிமாறுவதில் ப்ராயச்சித்தம்.

**யமன்:—** ஒரு பங்க்தியில் உட்கார்ந்து புஜிப்பவர்க்குப் பேதமாகப் பரிமாறக்கூடாது. புஜிப்பவன் கேட்கவும் கூடாது, பரிமாறு

𑌅𑌪𑌾𑌙𑍍𑌕𑍍𑌤𑍇𑌯𑌪𑌙𑍍𑌕𑍍𑌤𑌿𑌭𑍋𑌜𑌨𑍇 𑌪𑌤𑌿𑌤𑌾𑌦𑌿 𑌸𑌂𑌭𑌾𑌷𑌣𑍇
𑌅𑌪𑍍𑌸𑍁 𑌮𑍂𑌤𑍍𑌰𑌪𑍁𑌰𑍀𑌷𑌾𑌦𑌿 𑌕𑌰𑌣𑍇 𑌚 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍍 ॥

---

𑌅𑌪𑌾𑌙𑍍𑌕𑍍𑌤𑍇𑌯 𑌪𑌙𑍍𑌕𑍍𑌤𑌿𑌭𑍋𑌜𑌨𑍇 𑌮𑌾𑌰𑍍𑌕𑌣𑍍𑌡𑍇𑌯𑌃—

'𑌅𑌪𑌾𑌙𑍍𑌕𑍍𑌤𑍇𑌯𑌸𑍍𑌯 𑌯𑌃 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 𑌪𑌙𑍍𑌕𑍍𑌤𑍌 𑌭𑍁𑌙𑍍𑌕𑍍𑌤𑍇 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋𑌤𑍍𑌤𑌮𑌃 । 𑌅𑌹𑍋𑌰𑌾𑌤𑍍𑌰𑍋𑌷𑌿𑌤𑍋 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌪𑌞𑍍𑌚𑌗𑌵𑍍𑌯𑍇𑌨 𑌶𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌤𑌿' 𑌇𑌤𑌿 ॥

𑌪𑌤𑌿𑌤𑌾𑌦𑌿𑌸𑌂𑌭𑌾𑌷𑌣𑍇 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑌾𑌹 𑌗𑍌𑌤𑌮𑌃—

'𑌨 𑌮𑍍𑌲𑍇𑌚𑍍𑌛𑌾𑌶𑍁𑌚𑍍𑌯𑌧𑌾𑌰𑍍𑌮𑌿𑌕𑍈𑌃 𑌸𑌹 𑌸𑌂𑌭𑌾𑌷𑍇𑌤 𑌸𑌂𑌭𑌾𑌷𑍍𑌯 𑌪𑍁𑌣𑍍𑌯𑌕𑍃𑌤𑍋 𑌮𑌨𑌸𑌾 𑌧𑍍𑌯𑌾𑌯𑍇𑌤𑍍 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍇𑌨 𑌵𑌾 𑌸𑌂𑌭𑌾𑌷𑍇𑌤' 𑌇𑌤𑌿 ॥

𑌅𑌪𑍍𑌸𑍁 𑌮𑍂𑌤𑍍𑌰𑌪𑍁𑌰𑍀𑌷𑌕𑌰𑌣𑍇 𑌸𑍁𑌮𑌨𑍍𑌤𑍁𑌃—

'𑌅𑌪𑍍𑌸𑍍𑌵𑌗𑍍𑌨𑍌 𑌵𑌾 𑌮𑍇𑌹𑌤𑌸𑍍𑌤𑌪𑍍𑌤𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌮𑍍' 𑌇𑌤𑌿 ॥

---

கிறவன் கொடுக்கவும் கூடாது. அவ்விதம் பேதமாகச் செய்தால் ப்ராஜாபத்ய க்ருச்ரத்தால் அப்பாபத்தினின்றும் விடுபடுவான்.

**பங்க்திக்கு அர்ஹரல்லாதவரின் பங்க்தியில் புஜிப்பது, பதிதன் முதலியவருடன் பேசுவது, ஜலத்தில் மூத்ர மல த்யாகம் செய்வது இவைகளில் ப்ராயஶ்சித்தம்.**

**மார்க்கண்டேயர்:**—பங்க்திக்கு அர்ஹனல்லாதவனின் பங்க்தியில் எந்த நல்ல ப்ராம்ஹணன் புஜிக்கின்றானோ அவன் ஒருநாள் முழுவதும் உபவாஸமிருந்து பஞ்சகவ்ய ப்ராசனத்தால் சுத்தனுவான்.

பதிதர் முதலானவர்களுடன் பேசும் விஷயத்தில்,

**கௌதமர்:**— ம்லேச்சன், அசுத்தன், அதார்மிகன் இவர்களுடன் பேசக்கூடாது. பேசினால் புண்யம் செய்தவர்களை மனஸினால் த்யானிக்க வேண்டும். அல்லது ப்ராம்ஹணனுடன் பேச வேண்டும்.

ஜலத்தில் மூத்ர த்யாகம் செய்வதில்,

**ஸுமந்து:**— ஜலத்திலாவது அக்னியிலாவது மூத்ர த்யாகம் செய்தவனுக்குத் தப்தக்ருச்ரம் ப்ராயஶ்சித்தம்.

ஆதுரவிஷயே து மநு:—

"விநாத்³பி⁴ரப்ஸு வாப்யார்த: ஶாரீரம் ஸந்நிவேஶ்ய ச । ஸசைலோ ப³ஹிராப்லுத்ய கா³மாலப்⁴ய விஶுத்⁴யதி" இதி ॥ விநாத்³பி⁴ரித்யகாமகாரவிஷயம் ॥

காமகாரே து யம:—

"ஆபத்³க³தோ விநா தோயம் ஶாரீரம் யோ நிஷேவதே । ஏகாஹம் க்ஷபணம் க்ருத்வா ஸசைலஸ்நாநமாசரேத்" இதி ॥

**யஜ்ஞோபவீதம் விநா மலமூத்ரோத்ஸர்கா³தி³கரணே**

**அநாசம்ய பாநாதௌ³ ச ப்ராயஶ்சித்தம் ॥**

---

யஜ்ஞோபவீதம் விநா மலமூத்ரோத்ஸர்கா³தி³கரணே ப்ராயஶ்சித்தமுக்தம் ஸ்ம்ருத்யந்தரே—

"விநா யஜ்ஞோபவீதேந யத்³யுச்சிஷ்டோ ப⁴வேத்³த்³விஜ: । ப்ராயஶ்சித்தமஹோராத்ரம் கா³யத்ர்யஷ்டஶதம் து வா ॥ அகாமதஸ்து பிப³தோ மேஹதஶ்சைவ பு⁴ஞ்ஜத: । ப்ராணாயாமத்ரிகம் ஷட்கம் நக்தம் ச த்ரிதயம் க்ரமாத்" இதி ॥

---

வ்யாதியுள்ளவன் விஷயத்தில்,

**மனு:**—ஜலமில்லாமல் மூத்ரத்யாகம் செய்தாலும், வ்யாதியுள்ளவன் ஜலத்தில் மூத்ரத்யாகம் செய்தாலும் வஸ்த்ரத்துடன் கிராமத்திற்கு வெளியில் சென்று நதி முதலியதில் மூழ்கி, பசுவை ஸ்பர்சம் செய்தால் சுத்தனாவான். இது அறியாமற் செய்த விஷயத்தில்.

புத்திபூர்வமாய்ச்செய்த விஷயத்தில்,

**யமன்:**— ஆபத்திலிருப்பவன் ஜலம் கிடைக்காததால் மூத்ரத்யாகம் செய்தால், ஒரு நாள் உபவாஸமிருந்து, ஸசேலஸ்நானம் செய்யவேண்டும்.

## யஜ்ஞோபவீதமில்லாமல் மல மூத்ர விஸர்க்கம் செய்தாலும், ஆசமனம் செய்யாமல் ஜலபானம் செய்வது முதலியதிலும் ப்ராயஶ்சித்தம்.

**ஓர் ஸ்ம்ருதியில்:**— யஜ்ஞோபவீதமில்லாமல் ப்ராம்ஹணன் மல மூத்ர த்யாகம் செய்தால், ஒருநாள் உபவாஸம், அல்லது நூற்றெட்டுமுறை காயத்ரீ ஜபம் ப்ராயஶ்சித்தம். அறியாமல் ஜலத்தைக் குடிப்பவனுக்கும் மலமூத்ரவிஸர்க்கம் செய்பவனுக்கும், போஜனம் செய்பவனுக்கும் முறையே மூன்று ப்ராணாயாமங்களும், ஆறு ப்ராணாயாமங்களும், ராத்ரிஉபவாஸமும் ப்ராயஶ்சித்தம்.

𑌸𑌂𑌵𑌰𑍍𑌤𑌃—

'𑌅𑌨𑌾𑌚𑌾𑌨𑍍𑌤𑌃 𑌪𑌿𑌬𑍇𑌦𑍍𑌯𑌸𑍍𑌤𑍁 𑌅𑌪𑌿 𑌵𑌾 𑌭𑌕𑍍𑌷𑌯𑍇𑌦𑍍 𑌦𑍍𑌵𑌿𑌜𑌃 ।
𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍍𑌯𑌷𑍍𑌟𑌸𑌹𑌸𑍍𑌰𑌂 𑌤𑍁 𑌜𑌪𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌵𑌿𑌶𑍁𑌧𑍍𑌯𑌤𑌿' 𑌇𑌤𑌿 ॥

𑌪𑌲𑌾𑌶𑌦𑌾𑌰𑍁𑌣𑌾 𑌶𑌯𑌨𑌾𑌦𑌿𑌕𑌰𑌣𑍇 𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌗𑍍𑌨𑍍𑌯𑌾𑌦𑌿𑌮𑌧𑍍𑌯𑌗𑌮𑌨𑍇
𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌯 𑌰𑌣𑍇 𑌪𑍃𑌷𑍍𑌠𑌦𑌾𑌨𑍇 𑌫𑌲𑌵𑍃𑌕𑍍𑌷𑌚𑍍𑌛𑍇𑌦𑌨𑍇
𑌦𑌾𑌸𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌰𑌵𑌿𑌷𑌯𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌚 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍍 ॥

𑌶𑌙𑍍𑌖𑌃—

'𑌅𑌶𑍍𑌵𑌸𑍍𑌯 𑌶𑌯𑌨𑌂 𑌯𑌾𑌨𑌮𑌾𑌸𑌨𑌂 𑌪𑌾𑌦𑍁𑌕𑍇 𑌤𑌥𑌾 । 𑌦𑍍𑌵𑌿𑌜𑌃 𑌪𑌲𑌾𑌶𑌵𑍃𑌕𑍍𑌷𑌸𑍍𑌯 𑌤𑍍𑌰𑌿𑌰𑌾𑌤𑍍𑌰𑌂 𑌤𑍁 𑌵𑍍𑌰𑌤𑍀 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ 𑌅𑌗𑍍𑌨𑌿𑌵𑌿𑌪𑍍𑌰𑍌 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌗𑍍𑌨𑍀 𑌵𑌾 𑌦𑌮𑍍𑌪𑌤𑍀 𑌗𑍋𑌦𑍍𑌵𑌿𑌜𑍌 𑌤𑌥𑌾 । 𑌅𑌨𑍍𑌤𑌰𑍇𑌣 𑌯𑌦𑌾 𑌗𑌚𑍍𑌛𑍇𑌤𑍍 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌂 𑌸𑌾𑌨𑍍𑌤𑌪𑌨𑌂 𑌚𑌰𑍇𑌤𑍍 ॥ 𑌹𑍋𑌮𑌕𑌾𑌲𑍇 𑌤𑌥𑌾 𑌦𑍋𑌹𑍇 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑍇 𑌦𑌾𑌰𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑍇 । 𑌅𑌨𑍍𑌤𑌰𑍇𑌣 𑌯𑌦𑌾 𑌗𑌚𑍍𑌛𑍇𑌤𑍍 𑌦𑍍𑌵𑌿𑌜𑌶𑍍𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌂 𑌚𑌰𑍇𑌤𑍍 ॥ 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌤𑍁 𑌰𑌣𑍇 𑌪𑍃𑌷𑍍𑌠𑌂 𑌦𑌤𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌾𑌣𑌪𑌰𑌾𑌯𑌣𑌃 । 𑌸𑌂𑌵𑌤𑍍𑌸𑌰𑌂 𑌵𑍍𑌰𑌤𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌚𑍍𑌛𑌿𑌤𑍍𑌤𑍍𑌵𑌾 𑌵𑍃𑌕𑍍𑌷𑌂 𑌫𑌲𑌪𑍍𑌰𑌦𑌮𑍍' 𑌇𑌤𑌿 ॥

---

**ஸம்வர்த்தர்**:—எவன் ஆசமனம் செய்யாமல் ஜலபானம் செய்கிறானோ, அல்லது போஜனம் செய்கிறானோ, அவன் காயத்ரியை ஆயிரத்தெட்டுமுறை ஜபித்தால் சுத்தனாவான்.

## புரசு மரத்தின் பலகையில் படுப்பது முதலியதில் ப்ராயஶ்சித்தம்.

**சங்கர்**:-ப்ராம்ஹணன் பலாசமரத்தினால் செய்யப்பட்ட கட்டில், வண்டி, ஆஸனம், பாதுகை இவைகளில் ஏறினால், மூன்று நாள் உபவாஸமிருக்கவேண்டும். இரண்டு ப்ராம்ஹணர்கள், ப்ராம்ஹணன்-அக்னி இவர்கள் நடுவிலும், தம்பதிகள் நடுவிலும், பசு, ப்ராம்ஹணன் இவ்விருவர்கள் நடுவிலும் சென்றால், ஸாந்தபனக்ருச்ரத்தையனுஷ்டிக்கவேண்டும். ஹோம காலத்திலும், பசு கறக்கும் பொழுதும், வேதாத்யயன காலத்திலும், விவாஹ காலத்திலும் நடுவில் சென்றால், ப்ராம்ஹணன் சாந்த்ராயணத்தை யனுஷ்டிக்க வேண்டும். க்ஷத்ரியன், யுத்தத்தில் ப்ராணனைக் காப்பாற்றுவதற்காக முதுகைக் காண்பித்தால், ஒரு வர்ஷம் முழுவதும் நியமத்

𑌸 𑌏𑌵—

'𑌦𑍁𑌃𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌾𑌰𑌿𑌷𑍍𑌟𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌦𑍌 𑌸𑌰𑍍𑌪𑌿𑌰𑍍 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌂 𑌚 𑌦𑌦𑍍𑌯𑌾𑌤𑍍' 𑌇𑌤𑌿 ॥

### 𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑍇 𑌨𑌿𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌿𑌤𑌸𑍍𑌯 𑌕𑌾𑌲𑌾𑌤𑌿𑌕𑍍𑌰𑌮𑍇 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍍 ॥

𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑍇 𑌨𑌿𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌿𑌤𑌸𑍍𑌯 𑌕𑌾𑌲𑌾𑌤𑌿𑌕𑍍𑌰𑌮𑍇 𑌯𑌮 𑌆𑌹—

'𑌕𑍇𑌤𑌨𑌂 𑌕𑌾𑌰𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌤𑍁 𑌯𑍋𑌽𑌤𑌿𑌪𑌾𑌤𑌯𑌤𑍇 𑌦𑍍𑌵𑌿𑌜𑌃 । 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌹𑌤𑍍𑌯𑌾𑌮𑌵𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌶𑍂𑌦𑍍𑌰𑌯𑍋𑌨𑍌 𑌪𑍍𑌰𑌜𑌾𑌯𑌤𑍇 ॥ 𑌏𑌤𑌤𑍍 𑌪𑌾𑌪𑌮𑌨𑍁𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌨𑌿𑌯𑌤𑌵𑍍𑌰𑌤𑌃 । 𑌯𑌤𑌿𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌂 𑌤𑍀𑌰𑍍𑌤𑍍𑌵𑌾 𑌤𑌤𑌶𑍍𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌂 𑌚𑌰𑍇𑌤𑍍' 𑌇𑌤𑌿 ॥

### 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌵𑍈𑌶𑍍𑌯𑌶𑍂𑌦𑍍𑌰𑌶𑍍𑌵𑌪𑌾𑌕𑌾𑌦𑍍𑌯𑌭𑌿𑌵𑌾𑌦𑌨𑍇 𑌕𑍃𑌤𑍇 𑌨𑌿𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌿𑌤𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌭𑍋𑌜𑌨𑍇 𑌶𑍂𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌵𑍇𑌦𑌶𑍍𑌰𑌵𑌣𑌾𑌦𑍌 𑌚 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍍 ॥

𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌦𑍍𑌯𑌭𑌿𑌵𑌾𑌦𑌨𑍇 𑌹𑌾𑌰𑍀𑌤𑌃—

'𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌭𑌿𑌵𑌾𑌦𑌨𑍇 𑌽𑌹𑍋𑌰𑌾𑌤𑍍𑌰𑌮𑍁𑌪𑌵𑌸𑍇𑌤𑍍 । 𑌵𑍈𑌶𑍍𑌯

---

துடன் இருக்கவேண்டும். பழத்தைக் கொடுக்கும் மரத்தை வெட்டினலும் அப்படியே.

**ஸங்கரே:**—துஸ்வப்னம், அபசகுனம் முதலியதைப் பார்த்தால், பொன், நெய் இவைகளைத் தானம் செய்யவேண்டும்.

### ச்ராத்தத்தில் வரிக்கப்பட்டவன் காலத்தை அதிக்ரமித்தால் ப்ராயஸ்சித்தம்.

**யமன்:**—எந்த ப்ராம்ஹணன் ச்ராத்தத்தில் நிமந்த்ரணத்தை ஒப்புக்கொண்டு, காலதாமதம் செய்கிருனே அவன் ப்ராம்ஹஹத்யா தோஷத்தை யடைவான். சூத்ர ஜாதியிலும் பிறப்பான். இந்தப் பாபம் நேர்ந்தால் ப்ராம்ஹணன் நியமத்துடன் யதி சாந்த்ராயணத்தைச் செய்து பிறகு சாந்த்ராயணத்தையும் அனுஷ்டிக்கவேண்டும்.

### க்ஷத்ரியர் முதலியவரை அபிவாதனம் செய்தால் ப்ராயஸ்சித்தம்.

**ஹாரீதர்:**—க்ஷத்ரியனுக்கு அபிவாதனம் செய்தால், ஒரு நாள் முழுவதும் உபவாஸமிருக்கவேண்டும். வைச்யனுக்குச் செய்தால்,

𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌦𑍍𑌵𑌿𑌰𑌾𑌤𑍍𑌰𑌮𑍍 । 𑌶𑍂𑌦𑍍𑌰𑌸𑍍𑌯𑌾𑌭𑌿𑌵𑌾𑌦𑌨𑍇 𑌤𑍍𑌰𑌿𑌰𑌾𑌤𑍍𑌰𑍋𑌪𑌵𑌾𑌸𑌃 । 𑌤𑌥𑌾 𑌶𑌯𑍍𑌯𑌾𑌰𑍂𑌢𑌪𑌾𑌦𑍁𑌕𑍋𑌪𑌾𑌨𑌦𑌾𑌰𑍋𑌪𑌿𑌤𑌪𑌾𑌦𑍋𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌟𑌾𑌨𑍍𑌧𑌕𑌾𑌰𑌸𑍍𑌥𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌕𑍃𑌜𑍍𑌜𑌪𑌦𑍇𑌵𑌪𑍂𑌜𑌾𑌦𑌿𑌰𑌤𑌾𑌭𑌿𑌵𑌾𑌦𑌨𑍇 𑌤𑍍𑌰𑌿𑌰𑌾𑌤𑍍𑌰𑍋𑌪𑌵𑌾𑌸𑌸𑍍𑌸𑍍𑌯𑌾𑌦𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌨𑌿𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌿𑌤𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌭𑍋𑌜𑌨𑍇𑌽𑌪𑌿 𑌤𑍍𑌰𑌿𑌰𑌾𑌤𑍍𑌰𑍋𑌪𑌵𑌾𑌸𑌃' 𑌇𑌤𑌿 ॥

𑌶𑍂𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌵𑍇𑌦𑌵𑌾𑌕𑍍𑌯𑌶𑍍𑌰𑌵𑌣𑌾𑌦𑍌 𑌗𑍌𑌤𑌮𑌃—

'𑌅𑌥 𑌹𑌾𑌸𑍍𑌯𑌵𑍇𑌦𑌮𑍁𑌪𑌶𑍃𑌣𑍍𑌵𑌤𑌸𑍍𑌤𑍍𑌰𑌪𑍁𑌜𑌤𑍁𑌭𑍍𑌯𑌾𑌂 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑍂𑌰𑌣𑌮𑍁𑌦𑌾𑌹𑌰𑌣𑍇 𑌜𑌿𑌹𑍍𑌵𑌾𑌚𑍍𑌛𑍇𑌦𑍋 𑌧𑌾𑌰𑌣𑍇 𑌶𑌰𑍀𑌰𑌭𑍇𑌦𑌃' 𑌇𑌤𑌿 ॥

## 𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍍𑌰𑌹𑌵𑌿𑌚𑌾𑌰𑌃 ॥

𑌅𑌥 𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍍𑌰𑌹𑍋 𑌨𑌿𑌰𑍂𑌪𑍍𑌯𑌤𑍇—

𑌤𑌤𑍍𑌰 𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌂 𑌸𑌤𑍍𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍍𑌰𑌹𑍇 𑌨 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌾

---

இரண்டு நாள் உபவாஸம். சூத்ரனுக்குச் செய்தால், மூன்று நாள் உபவாஸம். அவ்விதம் படுக்கையிலிருப்பவன், பாதுகை, பாதரக்ஷை இவைகளில் காலை வைத்துக்கொண்டிருப்பவன், உச்சிஷ்டன் (அசுத்தன்), இருளில் இருப்பவன், ச்ராத்தம் செய்பவன், ஜபம் செய்பவன், தேவ பூஜை முதலியதைச் செய்பவன் இவர்களுக்கு அபிவாதனம் செய்தால், மூன்று நாள் உபவாஸம் ப்ராயச்சித்தம். மற்றொரிடத்தில் ச்ராத்தத்திற்கு வரிக்கப்பட்டவன் அதைவிட்டு மற்றொரிடத்தில் புஜித்தாலும் மூன்று நாள் உபவாஸம் ப்ராயச்சித்தம்.

## சூத்ரன் வேதவாக்யத்தைக் கேட்பது முதலியதில் ப்ராயச்சித்தம்.

கௌதமர்:—சூத்ரன் வேதத்தைக் கேட்டால், அவன து காதைக் காய்ச்சிய ஈயம், அரக்கு இவைகளால் நிரப்புவது ப்ராயச்சித்தம். அவன் வேதவாக்யத்தை உச்சரித்தால், நாக்கைத் துண்டிப்பதும், வேத வாக்யத்தை மனதில் தரித்தால், சரீரத்தைப் பேதிப்பதும் ப்ராயச்சித்தம்.

## ப்ரதிக்ரஹத்தைப் பற்றிய விசாரம்.

இனி ப்ரதிக்ரஹம் சொல்லப்படுகிறது. அது விஷயத்தில் ஜீவனத்திற்காக ஸாதுப்ரதிக்ரஹம் செய்தால் ப்ராயச்சித்தம்

𑌦𑌕𑍍𑌷𑌃 — '𑌵𑌿𑌦𑌿𑌤𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍃𑌹𑍍𑌣𑍀𑌯𑌾𑌤𑍍 𑌗𑍃𑌹𑌸𑍍𑌥𑌧𑌰𑍍𑌮(𑌰𑍍𑌮)𑌸𑌿𑌦𑍍𑌧𑌯𑍇 । 𑌅𑌰𑍍𑌥𑌿𑌨𑍋 𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌮𑌿𑌚𑍍𑌛𑌂𑌸𑍍𑌤𑍁 𑌗𑍃𑌹𑍍𑌣𑍀𑌯𑌾𑌤𑍍 𑌸𑌾𑌧𑍁𑌤𑌸𑍍𑌤𑌥𑌾 ॥ 𑌅𑌨𑌾𑌪𑌦𑍍𑌯𑌪𑌿 𑌧𑌰𑍍𑌮𑍇𑌣 𑌯𑌾𑌜𑍍𑌯𑌤𑌶𑍍𑌶𑌿𑌷𑍍𑌯𑌤𑌸𑍍𑌤𑌥𑌾 । 𑌗𑍃𑌹𑍍𑌣𑌨𑍍𑌤𑍁 𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍍𑌰𑌹𑌂 𑌵𑌿𑌪𑍍𑌰𑍋 𑌨 𑌧𑌰𑍍𑌮𑌾𑌤𑍍 𑌪𑌰𑌿𑌹𑍀𑌯𑌤𑍇' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌸𑍍𑌮𑍃𑌤𑍇𑌃 ॥ 𑌅𑌸𑌤𑍍𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍍𑌰𑌹𑍇 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑍍 । 𑌸 𑌚 𑌪𑌞𑍍𑌚𑌵𑌿𑌧𑌃 '𑌅𑌸𑌤𑍍𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍍𑌰𑌹𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌃 𑌕𑌾𑌲𑌤𑍋 𑌦𑍇𑌶𑌤𑌸𑍍𑌤𑌥𑌾 । 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌤𑍋 𑌜𑌾𑌤𑌿𑌤𑌶𑍍𑌚 𑌕𑌰𑍍𑌮𑌤𑌶𑍍𑌚𑍇𑌤𑌿 𑌪𑌞𑍍𑌚𑌧𑌾' 𑌇𑌤𑌿 𑌸𑍍𑌮𑌰𑌣𑌾𑌤𑍍 ॥ 𑌕𑌾𑌲𑌃 = 𑌗𑍍𑌰𑌹𑌣𑌾𑌦𑌿𑌃 । 𑌦𑍇𑌶𑌃 = 𑌕𑍁𑌰𑍁𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌾𑌦𑌿𑌃 । 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 = 𑌮𑍇𑌷𑍀𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌜𑌿𑌨𑌤𑍁𑌲𑍋𑌭𑌯𑌤𑍋𑌮𑍁𑌖𑍍𑌯𑌾𑌦𑌿𑌕𑌮𑍍 । 𑌜𑌾𑌤𑌿𑌃 = 𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌦𑌿𑌃 । 𑌕𑌰𑍍𑌮 = 𑌪𑌤𑌨𑍀𑌯𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃 ॥

𑌮𑌨𑍁𑌃 —

𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍍𑌰𑌹𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌵𑌰𑍋 𑌵𑍍𑌰𑌾𑌤𑍍𑌯𑍇 𑌵𑌿𑌪𑍍𑌰𑌸𑍍𑌯 𑌗𑌰𑍍𑌹𑌿𑌤𑌃 ।
𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍍𑌰𑌹𑍇𑌣 𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌂 𑌤𑍇𑌜𑍋 𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌤𑌿 ॥

---

வேண்டுவதில்லை. "க்ருஹஸ்த தர்மம் ஸித்திப்பதற்காக அறிந்த மனிதனிடமிருந்து வாங்கலாம். தனக்கு ஜீவனத்தை வேண்டியவன் நல்லவனிடமிருந்து ப்ரதிக்ரஹிக்கலாம். ஆபத்தில்லாத காலத்திலும், தர்மத்துடன் யாஜ்யனிடத்தினின்றும் (யாகம் செய்விக்கப்பட்டவன்), சிஷ்யனிடமிருந்தும் ப்ரதிக்ரஹத்தைப் பெற்றால் ப்ராம்ஹணன் தர்மத்தினின்றும் நழுவுவதில்லை," என்பது முதலிய ஸ்ம்ருதியிருப்பதால். அஸாதுக்களிடமிருந்து ப்ரதிக்ரஹம் செய்தால் ப்ராயஶ்சித்தம் செய்துகொள்ளவேண்டும். அது ஐந்து விதமாகும். "அஸாது (துஷ்ட) ப்ரதிக்ரஹம் என்பது காலம், தேசம், ஸ்வரூபம், ஜாதி, கர்மா என்று இந்த ஐந்தாலும் துஷ்டமாகி ஐந்துவிதமெனப்படும்," என்று ஸ்ம்ருதியிருப்பதால். காலம் = க்ரஹணம் முதலியது. தேசம் = குருக்ஷேத்ரம் முதலியது. ஸ்வரூபம் = பெண் ஆடு, மான்தோல், துலாபாரம், இருபுறம் முகம் உள்ள பசு ஆடு முதலியது (ஈன்றும் காலத்தில் கன்றின் தலை மாத்ரம் வெளியில் தெரியும் ஸமயம்). கர்மம் = பாதித்யத்தைக் கொடுக்கும் பிழைப்பு.

மனு:— "ப்ராம்ஹணன் வ்ராத்யனிடமிருந்து ப்ரதிக்ரஹம் செய்வது நிஷித்தமாகிறது. ப்ராம்ஹணர்கள் ப்ரதிக்ரஹித்தால் அவரது ப்ரம்ஹதேஜஸ் நசிக்கின்றது. ப்ரதிக்ரஹம் பெற்றவனின்

𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍃𑌹𑍀𑌤𑍁𑌰𑍍𑌯𑌚𑍍𑌚 𑌪𑍁𑌣𑍍𑌯𑌂 𑌦𑌾𑌤𑌾𑌰𑌮𑌧𑌿𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 । 𑌦𑌾𑌤𑍁𑌶𑍍𑌚𑍈𑌵 𑌹𑌿 𑌯𑌤𑍍 𑌪𑌾𑌪𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍍𑌰𑌾𑌹𑌿𑌣𑌮𑍃𑌚𑍍𑌛𑌤𑌿 ॥ 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌤𑌤𑌃 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌭𑍀𑌰𑍁𑌣𑌾 𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍𑌤𑌾𑌪𑌿𑌨𑌾 । 𑌯𑌦𑍍𑌗𑌰𑍍𑌹𑌿𑌤𑍇𑌨𑌾𑌰𑍍𑌜𑌯𑌨𑍍𑌤𑌿 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾 𑌧𑌨𑌮𑍍 ॥ 𑌤𑌸𑍍𑌯𑍋𑌤𑍍𑌸𑌰𑍍𑌗𑍇𑌣 𑌶𑍁𑌧𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌜𑌪𑍇𑌨 𑌤𑌪𑌸𑍈𑌵 𑌚' 𑌇𑌤𑌿 ॥ 𑌉𑌤𑍍𑌸𑌰𑍍𑌗𑍇𑌣 = 𑌤𑍍𑌯𑌾𑌗𑍇𑌨, 𑌜𑌪𑍇𑌨 = 𑌵𑍇𑌦𑌪𑌾𑌰𑌾𑌯𑌣𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍍𑌯𑌾𑌦𑌿𑌜𑌪𑍇𑌨, 𑌤𑌪𑌸𑌾 = 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌾𑌦𑌿𑌨𑌾 𑌚 𑌶𑍁𑌧𑍍𑌯𑌨𑍍𑌤𑍀𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥

𑌵𑍃𑌦𑍍𑌧𑌮𑌨𑍁𑌃—

'𑌕𑍃𑌷𑍇𑌸𑍍𑌤𑍁 𑌵𑌿𑌂𑌶𑌕𑌂 𑌭𑌾𑌗𑌂 𑌵𑌾𑌣𑌿𑌜𑍍𑌯𑌾𑌚𑍍𑌚 𑌷𑌷𑍍𑌠𑌾𑌂𑌶𑌕𑌮𑍍 । 𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍍𑌰𑌹𑍇 𑌤𑍁𑌰𑍀𑌯𑌾𑌂𑌶𑌂 𑌦𑌤𑍍𑌤𑍍𑌵𑌾 𑌪𑌾𑌪𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇' 𑌇𑌤𑌿 ॥

𑌵𑍍𑌯𑌾𑌸𑌃—

'𑌵𑌾𑌣𑌿𑌜𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌷𑍍𑌟𑌮𑌂 𑌭𑌾𑌗𑌂 𑌭𑌾𑌗𑌂 𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌮𑌂 𑌕𑍃𑌷𑍇𑌃 । 𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍍𑌰𑌹𑍇 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑌾𑌂𑌶𑌂 𑌦𑌤𑍍𑌤𑍍𑌵𑌾 𑌪𑌾𑌪𑍈𑌃 𑌪𑍍𑌰𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌅𑌨𑍍𑌯𑌥𑌾 𑌨𑌿𑌷𑍍𑌕𑍃𑌤𑌿𑌰𑍍𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌜𑌨𑍍𑌮𑌵𑌸𑍍𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑍇𑌷𑍍𑌵𑌪𑌿' 𑌇𑌤𑌿 ॥

---

புண்யம் எதுவோ அது கொடுப்பவனை யடைகின்றது. கொடுப்பவனின் பாபம் எதுவோ அது ப்ரதிக்ரஹம் பெற்றவனை அடைகின்றது. ஆகையால், பயந்தவன் பச்சாத்தாபமடைந்து ப்ராயச்சித்தம் செய்துகொள்ளவேண்டும். ப்ராம்ஹணர்கள் நிஷித்தமான கர்மத்தால் எந்தத் தனத்தை ஸம்பாதிக்கின்றனரோ அந்தத் தனத்தைத் தானம் செய்வதாலும், ஜபத்தாலும், தபஸாலும் சுத்தராகின்றனர்.” உத்ஸர்க்கம்=த்யாகம் (தானம்). ஜபம்=வேதபாராயணம், காயத்ரீ முதலியதின் ஜபம். தபஸ்=க்ருச்ரம், சாந்த்ராயணம் முதலியது. இவைகளால் சுத்தராகின்றனர் என்பது பொருள்.

**வ்ருத்தமனு:—** க்ருஷி (உழவு) செய்தால் இருபதில் ஒரு பாகத்தையும், வ்யாபாரம் செய்தால் ஆறில் ஒரு பாகத்தையும், ப்ரதிக்ரஹம் செய்தால் நான்கில் ஒரு பாகத்தையும் தானம் செய்தால் பாபத்தினின்றும் விடுபடுவான்.

**வ்யாஸர்:—** வ்யாபாரம் செய்தால் எட்டில் ஒரு பாகத்தையும், க்ருஷி செய்தால் இருபதில் ஒரு பாகத்தையும், ப்ரதிக்ரஹம் செய்தால் நான்கில் ஒரு பாகத்தையும் தானம் செய்தால் பாபங்

𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌮𑌤𑍇 —

'𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑌿𑌦𑍍𑌧𑍇𑌷𑍁 𑌦𑌾𑌨𑍇𑌷𑍁 𑌷𑌷𑍍𑌠𑌾𑌂𑌶𑌂 𑌵𑌿𑌨𑌿𑌯𑍋𑌜𑌯𑍇𑌤𑍍' 𑌇𑌤𑌿 ॥

𑌹𑍇𑌮𑌾𑌦𑍍𑌰𑍌 —

'𑌯𑍋 𑌵𑍈 𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍃𑌹𑍍𑌣𑌾𑌤𑌿 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌕𑌰𑍍𑌶𑌿𑌤𑌃 । 𑌦𑌶𑌾𑌂𑌶𑌮𑌰𑍍𑌜𑌿𑌤𑌾𑌰𑍍𑌥𑌸𑍍𑌯 𑌦𑍇𑌯𑌂 𑌤𑍇𑌨 𑌨 𑌹𑍀𑌯𑌤𑍇 ॥ 𑌗𑍃𑌹𑍀𑌤𑌾𑌰𑍍𑌥𑌾𑌤𑍍 𑌷𑍋𑌡𑌶𑌾𑌂𑌶𑌂 𑌤𑍁 𑌪𑌞𑍍𑌚𑌮𑌾𑌂𑌶𑌮𑌥𑌾𑌪𑌿 𑌵𑌾' 𑌇𑌤𑌿 ॥

𑌅𑌤𑍍𑌰 𑌶𑌿𑌷𑍍𑌟𑍈𑌰𑍇𑌵𑌂 𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌾 𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑌾 — 𑌪𑌞𑍍𑌚𑌦𑍋𑌷𑌦𑍁𑌷𑍍𑌟𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍍𑌰𑌹𑍇 𑌸𑌾𑌙𑍍𑌗𑌂 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌤𑍍𑌯𑌾𑌗𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 । '𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑍍𑌵𑌾 𑌮𑍋𑌹𑌾𑌦𑍍𑌵𑌾 𑌦𑍁𑌷𑍍𑌟𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍃𑌹𑍍𑌯 𑌤𑍁 । 𑌸𑌰𑍍𑌵𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌂 𑌸𑌮𑍁𑌤𑍍𑌸𑍃𑌜𑍍𑌯 𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌮𑌥𑌾𑌚𑌰𑍇𑌤𑍍' 𑌇𑌤𑌿 𑌸𑍍𑌮𑌰𑌣𑌾𑌤𑍍 ॥ 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑌂 𑌚 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣 𑌏𑌵 𑌗𑍃𑌹𑍍𑌣𑍀𑌯𑌾𑌤𑍍 । '𑌪𑍍𑌰𑌹𑍀𑌣𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌯' 𑌇𑌤𑌿 𑌸𑍍𑌮𑌰𑌣𑌾𑌤𑍍 ॥ 𑌏𑌵𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌜𑌪𑌤𑍀𑌰𑍍𑌥𑌾𑌭𑍍𑌯𑌾𑌂

---

களால் விடுபடுவான். அப்படித் தானம் செய்யாவிடில் ஜபங்களாலும், தீர்த்த ஸ்நானத்தாலும் ப்ராயச்சித்தம் என்பது இல்லை.

**சதுர்விம்சதிமதத்தில்:—** நிஷேதிக்கப்பட்ட தானங்கள் விஷயத்தில் ஆறில் ஒரு பாகத்தைத் தானம் செய்யவேண்டும்.

**ஹேமாத்ரியில்:—** ஜீவனமில்லாததால் ப்ராம்ஹணன் ப்ரதிக்ரஹம் பெற்றால், ஸம்பாதித்த பணத்திலிருந்து பத்தில் ஒரு பாகத்தைத் தானம் செய்யவேண்டும். இவ்விதம் செய்தால் அவன் குறைவை அடைவதில்லை. அல்லது பதினாறில் ஒரு பாகத்தையாவது அல்லது ஐந்தில் ஒரு பாகத்தையாவது தானம் செய்யவேண்டும்.

இவ்விஷயத்தில் சிஷ்டர்கள் இவ்விதம் வ்யவஸ்தையைக் காண்பித்துள்ளனர். ஐந்து விதமான தோஷங்களுடன் கூடிய ப்ரதிக்ரஹத்தில் அங்கங்களுடன் கூடியதாய் த்ரவ்யத்தைத் தானம் செய்யவேண்டும். "அறியாமையாலோ, மோஹத்தாலோ துஷ்ட ப்ரதிக்ரஹத்தைப் பெற்றால், அந்த த்ரவ்யம் முழுவதையும் கொடுத்து விட்டு, பிறகு சாந்த்ராயண க்ருச்ரத்தை யனுஷ்டிக்க வேண்டும்" என்று ஸ்ம்ருதியிருப்பதால். அவன் தானம் செய்த த்ரவ்யத்தையும் ப்ராம்ஹணனே வாங்கிக்கொள்ளவேண்டும். "விடப்பட்டது ப்ராம்ஹணனுடையது" என்று ஸ்ம்ருதியிருப்ப

ஶுத்தி: கார்யா । தோஷத்ரயயுக்தஸ்ய சதுர்தோஷதுஷ்டஸ்ய வா ப்ரதிக்ரஹஸ்ய சதுர்தாம்ஶத்யாக: கார்ய: । ப்ரதிக்ரஹீது: தனிகஸ்யார்தத்யாக: । 'துஷ்டப்ரதிக்ரஹே த்ரவ்யம் த்யக்த்வா பாபாத் ப்ரமுச்யதே' இதி ஸ்மரணாத் । தோஷத்வயயுக்தஸ்ய பஞ்சமாம்ஶத்யாக: । ஏகதோஷதுஷ்டஸ்ய ஷஷ்டாம்ஶத்யாக: । ப்ரதிக்ரஹீதுர்தாரித்ர்யே தஶாம்ஶத்யாக: ஷோடஶாம்ஶத்யாகோ வா கார்ய: । ஸர்வதா த்ரவ்யத்யாகானந்தரம் ஜபாதிரூபம் ப்ராயஶ்சித்தம் ச கர்தவ்யம் । க்ருஷ்ணாஜினகாலபுருஷதிலதேனூபயதோமுகீமஹிஷ்யஜாதீனாம் நிஷித்தப்ரதான த்ரவ்யாணாம் ப்ரதானத்ரவ்யம் தக்ஷிணாத்ரவ்யசதுர்தபாகம் ச த்யக்த்வா ப்ராயஶ்சித்தம் கர்தவ்யம் । அன்யே து 'ப்ரதான த்ரவ்யம் பரித்யஜ்ய தக்ஷிணாத்ரவ்யம் ஸ்வீக்ருத்ய ப்ராயஶ்சித்தம் கர்தவ்யம்' இதி ॥

…ஸரோவரம் | ஸேதுதர்சநமாத்ரேண ப்ரஹ்மஹத்யா விநச்யதி || க்ஷுத்ராணி ச பாபாநி நச்யந்தி தத்ர கா கதா' இதி ||

ஆஹிதாக்நிஸ்து புஷ்கலதக்ஷிணேந புந:ஸ்தோமேந வா யஜேத | 'யோ வா பஹு ப்ரதிக்ருஹ்ய கரகீர்ண இவ மந்யேத | புந:ஸ்தோமேந யஜேத' இதி ச்ருதே: || ('உசநஸ்தோமேந கரகீர்ணமாத்மாநம் மந்யமாநோ யஜேத' இத்யாச்வலாயநஸூத்ரம் | உசநஸ்தோமோ நாமைகாஹ: | புந:ஸ்தோம இதி சாஸ்யைவ ஸம்ஜ்ஞா | கர: = விஷம் | கரோ கீர்ணோ யேந ஸ கரகீர்ண: | யோ பஹு ப்ரதிக்ரஹாதிநா பாபாதிபயாதாத்மாநம் கரகீர்ணமிவ மந்யேத ஸ அநேந யஜேதேதி நாராயணவ்ருத்தி: ||) இதி ப்ரதிக்ரஹப்ராயச்சித்தம் ||

யத்ர ப்ருதக்வா ப்ராயச்சித்தம் நோக்தம், நோக்தம் த்ருச்யதே வா, தத்ர ஸாதாரணம் ப்ராயச்சித்தமுச்யதே ||

---

வைப் பார்ப்பதினாலேயே ப்ரம்ஹஹத்யாபாபமும் நசிக்கிறது. அதற்குக் கீழ்ப்பட்ட பாபங்கள் நசிக்கின்றன என்பதில் பேச்சென்ன?

ஆஹிதாக்னியானால் புஷ்கலமான தக்ஷிணையையுடைய புனஸ்தோமம் என்கிற யாகத்தையாவது செய்யவேண்டும். "எவன் அதிகமாக ப்ரதிக்ரஹித்துத் தன்னை விஷமருந்தியவனைப்போல் எண்ணுகின்றானோ அவன் புனஸ்தோமம் என்கிற யாகத்தைச் செய்யவேண்டும்" என்று வேதவாக்யமிருப்பதால். ("தன்னை விஷமருந்தியவனைப்போல் நினைத்தவன் உசனஸ்தோமம் என்கிற யாகத்தைச் செய்யவேண்டும்," என்று ஆச்வலாயன ஸூத்ரம் உள்ளது. உசனஸ்தோமம் என்பது ஏகாஹமான யாகம். புனஸ்தோமம் என்பதும் இதற்கே பெயர். கர: = விஷம். விஷம் எவனால் விழுங்கப்பட்டதோ அவன் கரகீர்ணன், எவன் அதிகமான ப்ரதிக்ரஹம் முதலியதால் பாபம் முதலியதினின்றும் பயத்தினால் தன்னை விஷமருந்தியவனைப்போல் நினைக்கின்றானோ அவன் இந்த யாகத்தைச் செய்யவேண்டும், என்று நாராயணீய வ்ருத்தி சொல்லுகின்றது.) ப்ரதிக்ரஹ ப்ராயச்சித்தம் முற்றிற்று.

எந்த இடத்தில் அதற்கென்றுள்ள ப்ராயச்சித்தம் சொல்லப் படவில்லையோ, அல்லது காணப்படவில்லையோ, அவ்விஷயத்தில் பொதுவான ப்ராயச்சித்தம் சொல்லப்படுகின்றது.

## अतिपातकिनां प्रायश्चित्तम् ॥

तत्रातिपातकसमपातकयोः विष्णुराह—

'अतिपातकिनस्त्वेते महापातकिनो यथा । अश्वमेधेन शुध्यन्ति तीर्थानुसरणेन वा' इति ॥

तत्राश्वमेधः सार्वभौमविषयः । 'राजा सार्वभौमोऽश्वमेधेन यजेत' इति श्रुतेः ॥ तीर्थस्नानमितरविषयम् ॥

## उपपातकिनां प्रायश्चित्तम् ॥

उपपातकप्रायश्चित्तमाह स एव—

'उपपातकिनस्त्वेते कुर्युश्चान्द्रायणं नराः ॥ पराकमथवा कुर्युर्यजेयुर्गोसवेन वा' इति ॥

याज्ञवल्क्योऽपि—

'उपपातकशुद्धिः स्यादेवं चान्द्रायणेन वा । पयसा वाऽपि मासेन पराकेणाथवा पुनः' इति ॥

## அதி பாதகிகளுக்கு ப்ராயஶ்சித்தம்.

அவ்விஷயத்தில் அதிபாதக ஸமபாதகங்களுக்கு ப்ராயஶ்சித்தத்தைச் சொல்லுகிறார்,

**விஷ்ணு:**— இந்த அதிபாதகிகள் மஹாபாதகிகளைப் போன்றவர்கள். இவர்கள் அச்வமேதத்தாலாவது தீர்த்தாடனத்தினாலாவது சுத்தராவர்.

அவைகளுள் அச்வமேதமென்பது ஸார்வபௌமனைப்பற்றியது. "ஸார்வபௌமனான அரசன் அச்வமேதம் என்கிற யாகத்தைச் செய்யவேண்டும்," என்று வேதவாக்யம் இருப்பதால். தீர்த்த ஸ்நானம் என்பது மற்றவரைப் பற்றியது.

## உபபாதகிகளுக்கு ப்ராயஶ்சித்தம்.

**விஷ்ணு:**— இந்த உபபாதகிகள் சாந்த்ராயண வ்ரதத்தைச் செய்யவேண்டும். அல்லது பராகத்தையாவது செய்யவேண்டும். கோஸவம் என்ற யாகத்தையாவது செய்யவேண்டும்.

**யாஜ்ஞவல்க்யரும்:**— இவ்விதம் செய்தால் உபபாதகிகள் சுத்தராவர். அல்லது சாந்த்ராயணத்தால், அல்லது ஒருமாஸம்

## 𑌸𑌙𑍍𑌕𑌰𑍀𑌕𑌰𑌣𑌾𑌦𑌿𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍍 ॥

𑌸𑌙𑍍𑌕𑌰𑍀𑌕𑌰𑌣𑌾𑌦𑍇𑌃 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑌾𑌹 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃—

'𑌸𑌙𑍍𑌕𑌰𑍀𑌕𑌰𑌣𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌮𑌾𑌸𑌮𑌶𑍍𑌨𑍀𑌤 𑌯𑌾𑌵𑌕𑌮𑍍 । 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌾𑌤𑌿𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌮𑌥𑌵𑌾 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌤𑍁 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 ॥ 𑌅𑌪𑌾𑌤𑍍𑌰𑍀𑌕𑌰𑌣𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌤𑌪𑍍𑌤𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑍇𑌣 𑌶𑍁𑌧𑍍𑌯𑌤𑌿 । 𑌶𑍀𑌤𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑍇𑌣 𑌵𑌾 𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌮𑌹𑌾𑌸𑌾𑌨𑍍𑌤𑌪𑌨𑍇𑌨 𑌵𑌾 ॥ 𑌮𑌲𑌿𑌨𑍀𑌕𑌰𑌣𑍀𑌯𑍇𑌷𑍁 𑌤𑌪𑍍𑌤𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌂 𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 । 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌾𑌤𑌿𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌮𑌥𑌵𑌾 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑍇' 𑌇𑌤𑌿 ॥

𑌮𑌨𑍁𑌃—

'𑌸𑌙𑍍𑌕𑌰𑌾𑌪𑌾𑌤𑍍𑌰𑌕𑍃𑌤𑍍𑌯𑌾𑌸𑍁 𑌮𑌾𑌸𑌂 𑌶𑍋𑌧𑌨𑌮𑍈𑌨𑍍𑌦𑌵𑌮𑍍 । 𑌮𑌲𑌿𑌨𑍀𑌕𑌰𑌣𑍀𑌯𑍇𑌷𑍁 𑌤𑌪𑍍𑌤𑌃 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌾𑌵𑌕𑍈𑌸𑍍𑌤𑍍𑌰𑍍𑌯𑌹𑌮𑍍' 𑌇𑌤𑌿 ॥

---

பாலமட்டில் பருகுவதாலும். அல்லது பாராக க்ருச்ரத்தால் சுத்தராவர்.

## ஸங்கரீகரணம் முதலியதற்கு ப்ராயஸ்சித்தம்.

**விஷ்ணு:**— ஸங்கரீகரண பாபத்தைச் செய்தால் ஒரு மாஸம் முழுவதும் யாவகத்தைப் புஜிக்கவேண்டும். அல்லது க்ருச்ராதி க்ருச்ரத்தையாவது ப்ராயஸ்சித்தமாக அனுஷ்டிக்கவேண்டும். அபாத்ரீகரணத்தைச் செய்தால், தப்தக்ருச்ரத்தால் சுத்தனாவான். அல்லது சீதக்ருச்ரத்தாலாவது, மஹாஸாந்தபனத்தாலாவது சுத்தி. மலினீகரணீயங்களில் தப்தக்ருச்ரம் ப்ராயஸ்சித்தமாகும். அல்லது க்ருச்ராதி க்ருச்ரம் ப்ராயஸ்சித்தம்.

**மனு:**— ஸங்கரீகரணம், அபாத்ரீகரணம் இவைகளைச் செய்தால் சாந்த்ராயண க்ருச்ரம் ஒரு மாஸம் செய்வது ப்ராயஸ்சித்தம். மலினீகரணீயங்களில் மூன்று நாள் யாவகங்களால் தப்த க்ருச்ரம் ப்ராயஸ்சித்தம்.

𑌅𑌨𑍁𑌕𑍍𑌤𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌨𑌿 ॥

𑌅𑌨𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑌾𑌹 𑌪𑌰𑌾𑌶𑌰𑌃—

‘𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌂 𑌯𑌾𑌵𑌕𑌂 𑌚 𑌤𑍁𑌲𑌾𑌪𑍁𑌰𑍁𑌷 𑌏𑌵 𑌚 । 𑌗𑌵𑌾𑌂 𑌚𑍈𑌵𑌾𑌨𑍁𑌗𑌮𑌨𑌂 𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑌪𑍍𑌰𑌣𑌾𑌶𑌨𑌮𑍍’ 𑌇𑌤𑌿 ॥ 𑌤𑍁𑌲𑌾𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 = 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌵𑌿𑌶𑍇𑌷𑌃 । 𑌪𑌾𑌪𑌗𑍌𑌰𑌵𑌲𑌾𑌘𑌵𑌾𑌨𑍁𑌸𑌾𑌰𑍇𑌣 𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌾𑌦𑍀𑌨𑍍𑌯𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌨𑌿 𑌵𑌾 𑌅𑌨𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌨𑌿 𑌵𑌾 𑌅𑌨𑍁𑌷𑍍𑌠𑍇𑌯𑌾𑌨𑌿 ॥

𑌸 𑌏𑌵—

‘𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌮𑍇𑌵 𑌪𑌾𑌪𑌾𑌨𑌾𑌂 𑌸𑌙𑍍𑌕𑌰𑍇 𑌸𑌮𑍁𑌪𑌸𑍍𑌥𑌿𑌤𑍇 । 𑌦𑌶𑌸𑌾𑌹𑌸𑍍𑌰𑌿𑌕𑌾𑌭𑍍𑌯𑌸𑍍𑌤𑌾 𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍀 𑌶𑍋𑌧𑌨𑍀 𑌪𑌰𑌮𑍍’ 𑌇𑌤𑌿 ॥

𑌶𑌙𑍍𑌖𑌲𑌿𑌖𑌿𑌤𑍌—

‘𑌕𑍍𑌰𑌯𑌵𑌿𑌕𑍍𑌰𑌯𑌦𑍁𑌷𑍍𑌟𑌭𑍋𑌜𑌨𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍍𑌰𑌹𑍇𑌷𑍍𑌵𑌨𑌾𑌦𑌿𑌷𑍍𑌟𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑍇𑌷𑍁 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌂 𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌂 𑌵𑌾’ 𑌇𑌤𑌿॥

---

## சொல்லப்படாத ஸாதாரணமான எல்லாப் பாபங்களுக்கும் ப்ராயஶ்சித்தம்.

**பராசரர்:—** சாந்த்ராயண க்ருச்ரம், யாவக க்ருச்ரம், துலா புருஷக்ருச்ரம், பசுக்களைப் பின்பற்றிச்செல்வது என்ற இவைகள் எல்லாப் பாபங்களுக்கும் ப்ராயஶ்சித்தங்கள்.

துலாபுருஷம் = ஒரு க்ருச்ர விசேஷம். பாபத்தின் அதிகத் தன்மை குறைவு என்பதை யனுஸரித்து சாந்த்ராயணம் முதலிய வைகளை அடிக்கடியாவது ஒரு முறையாவது அனுஷ்டிக்கவேண்டும்.

**பராசரரே:—** எல்லாப் பாபங்களின் சேர்க்கையும் நேர்ந்தால், பதினாயிரம் முறை ஜபிக்கப்பட்ட காயத்ரீ மந்த்ரம் சுத்தி செய்வதாகும்.

**சங்கலிகிதர்கள்:—** விலைக்கு வாங்குவது, விற்பது, தோஷமுள்ள அன்னத்தைப் புஜிப்பது, துஷ்டப்ரதிக்ரஹம் இவைகளுக்கு ப்ராயஶ்சித்தம் சொல்லப்படாமலிருந்தால், அவைகள் எல்லாவற்றிற்கும் சாந்த்ராயண க்ருச்ரமாவது, ப்ராஜாபத்ய க்ருச்ரமாவது ப்ராயஶ்சித்தமாகும்.

𑌶𑌾𑌤𑌾𑌤𑌪𑌃—

'𑌅𑌨𑍁𑌕𑍍𑌤𑍇𑌷𑍁 𑌵𑌿𑌧𑌿𑌂 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌂 𑌸𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍। 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑍇𑌷𑍁 𑌦𑍍𑌵𑌿𑌜𑌶𑍍𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌂 𑌚𑌰𑍇𑌤𑍍' 𑌇𑌤𑌿 ॥

𑌉𑌶𑌨𑌾—

'𑌯𑌤𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌯𑌤𑍍𑌰 𑌵𑌾 𑌨𑍋𑌕𑍍𑌤𑌮𑌿𑌹 𑌪𑌾𑌤𑌕𑌨𑌾𑌶𑌨𑌮𑍍। 𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑍇𑌨 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑍇𑌣 𑌶𑍁𑌧𑍍𑌯𑍇𑌤𑍇 𑌨𑌾𑌤𑍍𑌰 𑌸𑌂𑌶𑌯𑌃' 𑌇𑌤𑌿 ॥

𑌮𑌨𑍁𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌰𑌾𑌃—

'𑌅𑌨𑍁𑌕𑍍𑌤𑌨𑌿𑌷𑍍𑌕𑍃𑌤𑍀𑌨𑌾𑌂 𑌤𑍁 𑌪𑌾𑌪𑌾𑌨𑌾𑌮𑌪𑌨𑍁𑌤𑍍𑌤𑌯𑍇। 𑌶𑌕𑍍𑌤𑌿𑌂 𑌚𑌾𑌵𑍇𑌕𑍍𑌷𑍍𑌯 𑌪𑌾𑌪𑌂 𑌚 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍' 𑌇𑌤𑌿 ॥

𑌯𑌾𑌜𑍍𑌞𑌵𑌲𑍍𑌕𑍍𑌯𑌃—

'𑌦𑍇𑌶𑌂 𑌕𑌾𑌲𑌂 𑌵𑌯𑌶𑍍𑌶𑌕𑍍𑌤𑌿𑌂 𑌪𑌾𑌪𑌂 𑌚𑌾𑌵𑍇𑌕𑍍𑌷𑍍𑌯 𑌯𑌤𑍍𑌨𑌤𑌃। 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌕𑌲𑍍𑌪𑍍𑌯𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌤𑍍𑌰 𑌚𑍋𑌕𑍍𑌤𑌾 𑌨 𑌨𑌿𑌷𑍍𑌕𑍃𑌤𑌿𑌃' 𑌇𑌤𑌿 ॥

𑌸 𑌏𑌵—

'𑌯𑌤𑍍𑌰 𑌯𑌤𑍍𑌰 𑌚 𑌸𑌂𑌕𑍀𑌰𑍍𑌣𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌮𑌨𑍍𑌯𑌤𑍇 𑌦𑍍𑌵𑌿𑌜𑌃। 𑌤𑌤𑍍𑌰 𑌤𑌤𑍍𑌰 𑌤𑌿𑌲𑍈𑌰𑍍𑌹𑍋𑌮𑍋 𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍍𑌯𑌾 𑌵𑌾𑌚𑌨𑌂 𑌤𑌥𑌾' 𑌇𑌤𑌿 ॥

---

**சாதாதபர்:—** *ப்ராயஸ்சித்தம் சொல்லப்படாத விஷயங்களில் சாஸ்த்ரத்தை யறிந்து ப்ராஜாபத்ய க்ருச்ரத்தை யனுஷ்டிக்க வேண்டும். ப்ராம்ஹணன் எக்கார்யங்களிலும் எல்லாப் பாபங்களிலும் சாந்த்ராயண க்ருச்ரத்தை யனுஷ்டிக்கவேண்டும்.*

**உசனஸ்:—** *இவ்விஷயத்தில், எதற்கு ப்ராயஸ்சித்தம் சொல்லப்பட்டுள்ளதோ, எதற்கு ப்ராயஸ்சித்தம் சொல்லப்படவில்லையோ அவ்விஷயத்தில் ப்ராஜாபத்ய க்ருச்ரத்தை யனுஷ்டித்தால் சுத்தராகின்றனர். இதில் ஸம்சயமில்லை.*

**மனு, விஷ்ணு, விச்வாமித்ரர்:—** *ப்ராயஸ்சித்தம் விதிக்கப் படாத பாபங்களைப் போக்குவதற்குப் பாபியின் சக்தியையும் பாபத்தையும் ஆலோசித்து ப்ராயஸ்சித்தத்தை விதிக்கவேண்டும்.*

**யாஜ்ஞவல்க்யர்:—** *தேசம், காலம், வயது, சக்தி, பாபம் இவைகளை நன்ருக ஆராய்ந்து ப்ராயஸ்சித்தத்தை விதிக்கவேண்டும். எவ்விஷயத்தில் ப்ராயஸ்சித்தம் சொல்லப்படவில்லையோ அதிலும் இவ்விதமே.*

**யாஜ்ஞவல்க்யரே:—** *ப்ராம்ஹணன் எங்கெந்தக் கார்யங்களில்*

கௌதம:—

ஸம்வத்ஸரஷ்ஷண்மாஸாஶ்சத்வாரஸ்த்ரயோ த்வாவேகஶ்சதுர்விம்ஶத்யஹோ த்வாதஶாஹஷ்ஷடஹஸ்த்ர்யஹோऽஹோராத்ர இதி காலா ஏதாந்யநாதேஶே விகல்பேந க்ரியேரந் ஏநஸ்ஸு குருஷு குரூணி லகுஷு லகூநி க்ருச்ச்ராதிக்ருச்ச்ரௌ சாந்த்ராயணமிதி ஸர்வப்ராயஶ்சித்தம்’ இதி॥

ஸ்ம்ருத்யந்தரே—

ஸர்வஜந்மார்ஜிதாநீஹ ப்ரஹ்மஹத்யாதிகாநி வை। ஸர்வபாபாநி நஶ்யந்தி க்ருச்ச்ரைர் த்வாதஶவார்ஷிகை:॥ ஜந்மப்ரப்ருதி யத்கிஞ்சித் பாதகஞ்சோபபாதகம்। ஸர்வாகம் தத் ப்ரஹ்மஹத்யாயா ஷஷ்டாம்ஶ[illegible] [illegible]॥ [illegible] ஸக்ருத்[illegible] [illegible] ஸஹ [illegible]। [illegible] க்ருச்ச்ரேண [illegible] பாதகாத்’ இதி॥

---

தன்னை பாபத்துடன் சேர்ந்ததாக நினைக்கின்றானோ அந்தந்தக் கார்யங்களில் காயத்ரியால் திலஹோமஞ் செய்யவேண்டும், அப்படியே திலதானமும் செய்யவேண்டும்.

**கௌதமர்:—** ஒரு வர்ஷம், ஆறு மாஸம், நான்கு, மூன்று, இரண்டு, ஒன்று மாதங்கள், இருபத்துநான்கு நாட்கள், பன்னிரண்டு, ஆறு, மூன்று நாட்கள், அல்லது ஒரு நாள், இவைகளுள் சக்திக்குத் தகுந்தபடி காலத்தை அவலம்பிக்கவும். கீழே விதிக்கப்பட்ட ப்ராயஶ்சித்தாதிகள் விசேஷ விதியில்லாத விடங்களில் விகல்பமாக அனுஷ்டிக்கத்தக்கவை. ஆனால் பாபங்களின் தன்மைக்கேற்றபடி விகல்பிக்கப்படும். பாபங்கள் பெரியவையா யிருந்தால் பெரிய ப்ராயஶ்சித்தங்கள். லகுக்களானால் லகு ப்ராயஶ்சித்தங்கள். க்ருச்ரம், அதிக்ருச்ரம், சாந்த்ராயணம் என்ற ப்ராயஶ்சித்தங்கள் பொதுவாக எல்லாவற்றிற்கும் உபயோகப்படக்கூடியவை.

**ஓர் ஸ்ம்ருதியில்:—** எல்லா ஜன்மங்களிலும் செய்யப்பட்டதும் ப்ரம்ஹஹத்யா முதலியதும் ஆகிய எல்லாப் பாபங்களும் இந்த ஜன்மத்தில் பன்னிரண்டு வர்ஷம் அனுஷ்டிக்கப்பட்ட க்ருச்ரங்களால் நசிக்கின்றன. பிறவி முதற்கொண்டு செய்யப்பட்ட பாதகமும் உபபாதகமும் ப்ரம்ஹஹத்திக்குக் கீழ்ப்பட்டுள்ளது. ஆறு

𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑌤𑍍𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌾𑌃 𑌅𑌬𑍍𑌦𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌃। 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌃 𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌃। 𑌸 𑌚 𑌪𑍍𑌰𑌤𑌿𑌨𑌿𑌧𑌿𑌨𑌾 𑌕𑌾𑌰𑍍𑌯𑌃॥

### 𑌰𑌹𑌸𑍍𑌯𑌪𑌾𑌪𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍍॥

𑌅𑌥 𑌰𑌹𑌸𑍍𑌯𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌨𑍍𑌯𑌭𑌿𑌧𑍀𑌯𑌨𑍍𑌤𑍇। 𑌯𑌤𑍍𑌪𑌾𑌪𑌂 𑌕𑌰𑍍𑌤𑍃𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑌿𑌕𑍍𑌤𑍇𑌨𑌾𑌨𑍍𑌯𑍇𑌨 𑌕𑍇𑌨𑌾𑌪𑌿 𑌨 𑌜𑍍𑌞𑌾𑌤𑌮𑍍, 𑌤𑌦𑍍𑌰𑌹𑌸𑍍𑌯𑌮𑍍। 𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑌪𑌿 𑌰𑌹𑌸𑍍𑌯𑌮𑍇𑌵 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑍍॥

𑌤𑌥𑌾 𑌚 𑌯𑌮𑌹𑌾𑌰𑍀𑌤𑍌—

'𑌰𑌹𑌸𑍍𑌯𑍇 𑌰𑌹𑌸𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑍇 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌮𑍍' 𑌇𑌤𑌿॥ 𑌰𑌹𑌸𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌦𑍇𑌵 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌪𑌰𑌿𑌷𑌦𑍁𑌤𑍍𑌤𑌰𑌾𑌪𑍇𑌕𑍍𑌷𑌾॥

𑌤𑌦𑌾𑌹 𑌬𑍃𑌹𑌸𑍍𑌪𑌤𑌿𑌯𑌾𑌜𑍍𑌞𑌵𑌲𑍍𑌕𑍍𑌯𑍌—

'𑌵𑌿𑌖𑍍𑌯𑌾𑌤𑌦𑍋𑌷𑌃 𑌕𑍁𑌰𑍍𑌵𑍀𑌤 𑌪𑌰𑍍𑌷𑌦𑍋𑌽𑌨𑍁𑌮𑌤𑌂 𑌵𑍍𑌰𑌤𑌮𑍍। 𑌅𑌨𑌭𑌿𑌖𑍍𑌯𑌾𑌤𑌦𑍋𑌷𑌸𑍍𑌤𑍁 𑌰𑌹𑌸𑍍𑌯𑌂 𑌵𑍍𑌰𑌤𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍' 𑌇𑌤𑌿॥

---

அப்த (180) க்ருச்ரங்களால் நசிக்கும். நிச்சயம். ஒரு வர்ஷத்துக்குள் ஒரு தடவை புத்திபூர்வமாய்த் திருப்பி செய்யப்பட்ட ஸமபாதகம் அப்த க்ருச்ரத்தினால் (30) சுத்தமாகும்; மஹாபாதகம் தவிர.

முப்பது க்ருச்ரம் அப்த க்ருச்ரம் எனப்படும். க்ருச்ரம் என்பது ப்ராஜாபத்ய க்ருச்ரம். அதை ப்ரதிநிதியால் அனுஷ்டிக்கவேண்டும்.

### ரஹஸ்ய பாபத்திற்கு ப்ராயஸ்சித்தம்.

இனி ரஹஸ்ய ப்ராயஸ்சித்தங்கள் சொல்லப்படுகின்றன. எந்தப் பாபமானது செய்தவனைத் தவிர்த்த மற்ற எவனாலும் அறியப்படவில்லையோ அது ரஹஸ்யம் எனப்படும். அதற்கு ப்ராயஸ்சித்தமும் ரஹஸ்யத்திலேயே செய்யப்படவேண்டும். அவ்விதமே,

**யமனும், ஹாரீதரும்:—** ரஹஸ்ய பாப விஷயத்தில் ரஹஸ்ய ப்ராயஸ்சித்தம். ப்ரகாசமான பாபவிஷயத்தில் ப்ரகாச ப்ராயஸ்சித்தம்.

ரஹஸ்யமாயிருப்பதனாலேயே பரிஷத்தின் உத்தரவை அபேக்ஷிப்பதென்பது இல்லை. அதைச் சொல்லுகிறார்கள்,

**ப்ரஹஸ்பதி, யஜ்ஞவல்க்யர்:—** ப்ரஸித்தமான பாபத்தையுடையவன் பரிஷத் விதித்த ப்ராயஸ்சித்ததைச் செய்யவேண்டும்.

𑌨 𑌚 𑌵𑌿𑌨𑌾 𑌪𑌰𑌿𑌷𑌦𑌂 𑌵𑍍𑌰𑌤𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌭𑌾𑌵 𑌇𑌤𑌿 𑌶𑌙𑍍𑌕𑌨𑍀𑌯𑌮𑍍 । 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌸𑍍𑌯 𑌤𑌦𑍍𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌂𑌭𑌵𑌾𑌤𑍍 । 𑌇𑌤𑌰𑍇𑌣𑌾𑌪𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌤𑌾 𑌵𑌿𑌦𑍍𑌵𑌤𑍍𑌸𑌭𑌾𑌯𑌾𑌂 𑌕𑍇𑌨𑌚𑌿𑌦𑍍𑌵𑍍𑌯𑌾𑌜𑍇𑌨𑌾𑌵𑌗𑌨𑍍𑌤𑍁𑌂 𑌶𑌕𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌰𑌹𑌸𑍍𑌯𑌕𑍃𑌤𑌂 𑌪𑌾𑌪𑌂 𑌸𑍍𑌵𑌲𑍍𑌪𑍇𑌨𑌾𑌪𑌿 𑌜𑌪𑌾𑌦𑌿𑌨𑌾 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ॥

𑌅𑌤 𑌏𑌵 𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌵𑍍𑌰𑌤𑌾𑌨𑌾𑌂 𑌜𑌪𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌚 𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌾𑌮𑌾𑌹 𑌮𑌨𑍁𑌃—

'𑌏𑌤𑍈𑌰𑍍𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌤𑌯𑌃 𑌶𑍋𑌧𑍍𑌯𑌾 𑌵𑍍𑌰𑌤𑍈𑌰𑌾𑌵𑌿𑌷𑍍𑌕𑍃𑌤𑍈𑌨𑌸𑌃 । 𑌅𑌨𑌾𑌵𑌿𑌷𑍍𑌕𑍃𑌤𑌪𑌾𑌪𑌾𑌂𑌸𑍍𑌤𑍁 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍈𑌰𑍍𑌹𑍋𑌮𑍈𑌶𑍍𑌚 𑌶𑍋𑌧𑌯𑍇𑌤𑍍' 𑌇𑌤𑌿 ॥

## 𑌰𑌹𑌸𑍍𑌯𑌪𑌾𑌪𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍍 ॥

𑌤𑌤𑍍𑌰 𑌰𑌹𑌸𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑌾𑌹 𑌸 𑌏𑌵—
𑌵𑍇𑌦𑌾𑌭𑍍𑌯𑌾𑌸𑍋𑌽𑌨𑍍𑌵𑌹𑌂 𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌮𑌹𑌾𑌯𑌜𑍍𑌞𑌕𑍍𑌰𑌿𑌯𑌾 𑌕𑍍𑌷𑌮𑌾 । 𑌨𑌾

---

ப்ரஸித்தமில்லாத பாபத்தையுடையவன் ரஹஸ்யமான ப்ராயஶ்சித்தத்தைச் செய்துகொள்ளவேண்டும்.

பரிஷத் இல்லாவிடில் ப்ராயஶ்சித்தத்தைத் தெரிந்துகொள்ள முடியாதென்று ஸந்தேஹிக்கவேண்டாம். சாஸ்த்ரம் அறிந்தவர்க்கு ப்ராயஶ்சித்தத்தை அறிந்துகொள்வது என்பது ஸம்பவிக்குமாதலால். சாஸ்த்ரமறியாதவனும் புத்திமானுகில் வித்வான்களின் ஸபையில் ஏதாவதொரு கபடத்தால் அறிந்துகொள்ள முடியுமாகையால். ரஹஸ்யத்தில் செய்யப்பட்ட பாபம் ஸ்வல்பமான ஜபம் முதலியதால் நிவ்ருத்திக்கும்.

ஆகையாற்றான் ப்ராஜாபத்யம் முதலிய வ்ரதங்களுக்கும் ஜபம் முதலியதற்கும் வ்யவஸ்தையைச் சொல்லுகிறார்,

**மனு:—** ப்ரகாசமான பாபங்களையுடைய த்விஜர்கள் இந்த (ப்ராஜாபத்யாதி) வ்ரதங்களால் சுத்தப்படுத்தப்பட வேண்டியவர்கள். ரஹஸ்யமான பாபங்களை யுடையவர்களையோவெனில் மந்த்ரங்களாலும் ஹோமங்களாலும் சுத்தர்களாகச் செய்ய வேண்டும்.

## ரஹஸ்ய பாபங்களுக்கு ஸாதாரணமான ப்ராயஶ்சித்தம்.

**மனு:—** ப்ரதிதினம் யதாசக்தி வேதாத்யயனமும், உசிதப்படி

𑌚𑌯𑌜𑍍𑌞𑌾𑌶𑍍𑌚 𑌪𑌾𑌪𑌾𑌨𑌿 𑌘𑍍𑌨𑌨𑍍𑌤𑌿 𑌮𑌹𑌾𑌪𑌾𑌤𑌕𑌜𑌾𑌨𑍍𑌯𑌪𑌿 ॥ 𑌯𑌥𑍈𑌧𑌸𑍍𑌤𑍇𑌜𑌸𑌾 𑌵𑌹𑍍𑌨𑌿𑌃 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌂 𑌨𑌿𑌰𑍍𑌦𑌹𑌤𑌿 𑌕𑍍𑌷𑌣𑌾𑌤𑍍। 𑌤𑌥𑌾 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌗𑍍𑌨𑌿𑌨𑌾 𑌪𑌾𑌪𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌦𑌹𑌤𑌿 𑌵𑍇𑌦𑌵𑌿𑌤𑍍 ॥ 𑌸𑌵𑍍𑌯𑌾𑌹𑍃𑌤𑌿𑌪𑍍𑌰𑌣𑌵𑌕𑌾𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌯𑌾𑌮𑌾𑌸𑍍𑌤𑍁 𑌷𑍋𑌡𑌶। 𑌅𑌪𑌿 𑌭𑍍𑌰𑍂𑌣𑌹𑌨𑌂 𑌮𑌾𑌸𑌾𑌤𑍍 𑌪𑍁𑌨𑌨𑍍𑌤𑍍𑌯𑌹𑌰𑌹𑌃 𑌕𑍃𑌤𑌾𑌃' 𑌇𑌤𑌿 ॥

𑌬𑍋𑌧𑌾𑌯𑌨𑌃—

'𑌯𑌦𑍁𑌪𑌸𑍍𑌥𑌕𑍃𑌤𑌂 𑌪𑌾𑌪𑌂 𑌪𑌦𑍍𑌭𑍍𑌯𑌾𑌂 𑌵𑌾 𑌯𑌤𑍍𑌕𑍃𑌤𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍। 𑌬𑌾𑌹𑍁𑌭𑍍𑌯𑌾𑌂 𑌮𑌨𑌸𑌾 𑌵𑌾𑌚𑌾 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌤𑍍𑌵𑌗𑍍𑌘𑍍𑌰𑌾𑌣𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑌾 ॥ 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌦𑌹𑌤𑌿 𑌨𑌿𑌶𑍍𑌶𑍇𑌷𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌯𑌾𑌮𑍈𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌭𑌿𑌃 𑌕𑍃𑌤𑍈𑌃' 𑌇𑌤𑌿 ॥

𑌗𑍌𑌤𑌮𑌃—

'𑌅𑌨𑌾𑌰𑍍𑌜𑌵𑌪𑍈𑌶𑍁𑌨𑍍𑌯𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑌿𑌦𑍍𑌧𑌾𑌚𑌾𑌰𑌾𑌨𑌾𑌦𑍍𑌯𑌪𑍍𑌰𑌾𑌶𑌨𑍇𑌷𑍁 𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌯𑌾𑌂 𑌚 𑌰𑍇𑌤𑌸𑍍𑌸𑌿𑌕𑍍𑌤𑍍𑌵𑌾𑌯𑍋𑌨𑍌 𑌚 𑌦𑍋𑌷𑌵𑌤𑌿 𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑌭𑌿𑌸𑌨𑍍𑌧𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑍇𑌽𑌬𑍍𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌭𑌿𑌰𑌪 𑌉𑌪𑌸𑍍𑌪𑍃𑌶𑍇𑌦𑍍𑌵𑌾𑌰𑍁-

---

பஞ்ச மஹாயஜ்ஞங்கள் செய்வதும், என்ற இவைகள் மஹாபாதகங்களாலுண்டாகிய பாபங்களையும் சீக்ரம் நாசப்படுத்துகின்றன. எப்படி அக்னி தேஜஸ்ஸினால் தன்னை யடைந்த விறகு முதலியதை உடனே தஹிக்கின்றதோ, அப்படி வேதமறிந்தவன் ஜ்ஞானாக்னியால் பாபம் முழுவதையும் தஹிக்கின்றான். வ்யாஹ்ருதி ப்ரணவங்களுடன் கூடிய ப்ராணாயாமங்கள் ப்ரதிதினமும் பதினாறு முறை ஒரு மாஸம் வரையில் செய்யப்பட்டால் ப்ரம்ஹஹத்தி செய்தவனையும் சுத்தப்படுத்துகின்றன.

**போதாயனர்:**— உபஸ்தேந்த்ரியத்தாலோ, கால்களாலோ, கைகளாலோ, மனதினாலோ, வாக்கினாலோ, காது, தோல், மூக்கு, கண் இவைகளாலோ எந்தப் பாபம் செய்யப்பட்டதோ அதையெல்லாம் மீதியில்லாமல் மூன்று தடவை செய்யப்பட்ட ப்ராணாயாமங்களால் தஹிப்பான்.

**கௌதமர்:**— ருஜுவாயில்லாமை, கோள் சொல்லுவது, நிந்திக்கப்பட்டதைச் செய்வது, நிஷித்தமானதைச் சாப்பிடுவது, சூத்ர ஸ்த்ரீயினிடத்தில் ரேதஸ்ஸேகம் செய்வது, அயோனியில் ரேதஸ்ஸேகம் செய்வது, பாபமுள்ள கார்யத்தில் புத்திபூர்வமாக ப்ரவர்த்திப்பது என்ற இவைகளில் "ஆபோஹிஷ்டா" முதலிய மந்த்ரங்

ணீபிர்வாருணீபிர்வா பவித்ரை: ப்ரதிஷித்தவாங்மனஸாபசாரே
வ்யாஹ்ருதய: பஞ்ச ஸர்வாஸ்வேவா ''அஹஶ்ச மா ஆதி-
த்யஶ்ச புனாத்விதி ப்ராதா ராத்ரிஶ்ச மா வருணஶ்ச புனாத்விதி
ஸாயமஷ்டௌ வா ஸமிதோ 'தேவக்ருதஸ்யை'தி ஹுத்வா
ஸர்வஸ்மாதேநஸோ முச்யதே முச்யதே' இதி ॥

அநார்ஜவம் மாநஸம் கர்ம வா । பைஶுநம் = பரபரிவாத: வாசிகம் । ப்ரதிஷித்தாசார: = நியம-லோப: காயிகம் । அநாத்யப்ராஶநம் அநேகவிதவஸ்த்வப்ராஶநம் = அநாத்யப்ராஶநம் । தத்ராபி ஆபோஹிஷ்டாதிபி: வாருணீபிஶ்ச ஸ்நாநேன ஶுத்தோ பவதி । ஓம் பூர்வாபிர்வ்யாஹ்ருதிபி: ஸர்வாஸு ஸர்வபாபேஷ்வாசமேத் । ஆசமநாதேவ ஸர்வஸ்மாத் பாபாத் ப்ரமுச்யதே । ஸாயம் வா ஸமித

களால், அல்லது வருணதேவதாக மந்த்ரங்களால், அல்லது வேறு பரிசுத்த மந்த்ரங்களால் ஸ்நானம் செய்யவேண்டும். நிஷித்த விஷயத்தில் வாக்கினுலாவது மனதினுலாவது அதிக்ரமம் ஏற்பட்டால், ஐந்து வ்யாஹ்ருதிகளை ஜபிக்கவும். எல்லாப் பாப க்ரியைகளிலும் மேலே சொல்லப்படும் மந்த்ரங்களால் ஆசமனம் செய்ய வேண்டும். "அஹஶ்சமா ஆதித்யஶ்ச புநாது" என்று பகலில். "ராத்ரிஶ்சமா வருணஶ்ச புநாது" என்று இரவில். "தேவக்ருதஸ்ய" என்பது முதலிய மந்த்ரங்களால் எட்டு ஸமித்துக்களை அக்னியில் ஹோமும் செய்யவும். இவ்விதம் செய்வதாலேயே எல்லாப் பாபங்களினின்றும் விடுபடுவான்.

அனார்ஜவம்=நேராக இல்லாமலிருப்பது, மானஸிகமான கர்மம், வக்ரத்தன்மையாவது. பைசுனம்=பிறரைத் தூஷிப்பது, வாக்கின் கர்மம். ப்ரதிஷித்தாசாரம்=நியமங்களை அனுஷ்டிக்காமலிருப்பது, தேஹத்தின் கர்மம். அனாத்யப்ராசனம்=புஜிக்கக் கூடாத அநேகவித வஸ்துக்களைப் புஜிப்பது. இது முதலிய பாபமுள்ள கார்யத்திலும், ஆபோஹிஷ்ட முதலிய மந்த்ரங்களாலும் வருணதேவதாக மந்த்ரங்களாலும் ஸ்நானம் செய்தால் சுத்தனுவான். ஓங்காரத்தை முன்னுள்ள எல்லா வ்யாஹ்ருதிகளாலும் எல்லாப் பாபங்களிலும் ஆசமனம் செய்யவேண்டும். ஆசமனம் செய்வதாலேயே எல்லாப் பாபங்களினின்றும் விடுபடுவான்.

ஜுஹுயாத் | தேவக்ருதஸ்யைநஸோऽவயஜநமஸி ஸ்வாஹா | மநுஷ்யக்ருதஸ்யைநஸோऽவயஜநமஸி ஸ்வாஹா | பித்ருக்ருதஸ்யைநஸோऽவயஜநமஸி ஸ்வாஹா | ஆத்மக்ருதஸ்யைநஸோऽவயஜநமஸி ஸ்வாஹா | யத்திவா ச நக்தஞ்சைநஶ்சக்ரும தஸ்யாவயஜநமஸி ஸ்வாஹா | யத்ஸ்வபந்தஶ்ச ஜாக்ரதஶ்சைநஶ்சக்ரும தஸ்யாவயஜநமஸி ஸ்வாஹா | யத்வித்வாம்ஸஶ்சாவித்வாம்ஸஶ்சைநஶ்சக்ரும தஸ்யாவயஜநமஸி ஸ்வாஹா | ஏநஸ ஏநஸோऽவயஜநமஸி ஸ்வாஹா | இத்யஷ்டாபிர்ஹோமாத் ஸர்வபாபை: ப்ரமுச்யதே | ருதஞ்ச ஸத்யஞ்சேத்யகமர்ஷணம் த்ரிர்ஜலே படேத் | ஸர்வபாபை: ப்ரமுச்யதே | ஆயங்கௌ: ப்ருஶ்நிரக்ரமீதிதி த்ர்ய்ருசம் த்ரிர்ஜலே படேத், ஸர்வபாபை: ப்ரமுச்யதே | த்ருபதாதிவேந்முமுசாந இத்ய்ருசம் த்ரிர்ஜலே படேத் | ஸர்வபாபை: ப்ரமுச்யதே | ஹம்ஸஶ்ஶுசிஷதித்ய்ருசம் த்ரிர்ஜலே படேத் | ஸர்வபாபை: ப்ரமுச்யதே | அதவா காயத்ரீம் ஸாவித்ரீம் பச்சோऽர்தர்சஶஸ்ஸமஸ்தாமிதி த்ரிர்ஜலே படேத் | ஸர்வபாபை: ப்ரமுச்யதே | அதவா வ்யாஹ்ருதீர்வ்ய-

---

அல்லது எட்டு ஸமித்துக்களை ஹோமம் செய்யவேண்டும். “தேவக்ருதஸ்யைநஸோ + ஏநஸ ஏநஸோ zவயஜநமஸி ஸ்வாஹா” என்ற இந்த எட்டு மந்த்ரங்களால் ஹோமம் செய்தால், எல்லாப் பாபங்களினின்றும் விடுபடுவான். “ருதஞ்ச” என்பது முதலிய அகமர்ஷண மந்த்ரத்தை மூன்று முறை ஜலத்திற்குள் மூழ்கிப் படிக்கவேண்டும். எல்லாப் பாபங்களினின்றும் விடுபடுவான். “ஆzயங்கௌ:” என்ற மூன்று ருக்கை மூன்றுமுறை ஜலத்தில் மூழ்கி ஜபித்தால் எல்லாப் பாபங்களினின்றும் விடுபடுவான். “த்ருபதாதிவ” என்ற ருக்கை ஜலத்தில் மூழ்கி மூன்று முறை படித்தால் எல்லாப் பாபங்களினின்றும் விடுபடுவான். “ஹம்ஸஶ்ஶுசிஷத்” என்ற ருக்கை ஜலத்தில் மூழ்கி மூன்று முறை படித்தால் எல்லாப் பாபங்களினின்றும் விடுபடுவான். அல்லது காயத்ரியைப் பாதம் பாதமாயும், பாதி ருக்காயும், பிறகு முழுவதாயும் ஜலத்தில் மூழ்கி மூன்று தடவை ஜபித்தால் எல்லாப் பாபங்களினின்றும் விடுபடுவான். அல்லது வ்யாஹ்ருதிகளைத் தனித்தனியாகவாவது சேர்த்தா

[illegible] த்ரிரந்தர்ஜலே படேத் । ஸர்வபாபை: ப்ரமுச்யதே । அதவா ப்ரணவமேவ த்ரிரந்தர்ஜலே படேத் । ஸர்வபாபை: ப்ரமுச்யதே । பவித்ரைர்மார்ஜநம் க்ருத்வா ருத்ரைகாதஶிநீம் ஜபந் । முச்யதே ஸர்வபாபேப்யோ மஹத: பாதகாத்ருதே' இதி ॥

ஆபஸ்தம்ப:—

'அநார்யவ்ருத்தேஸூயாயாம் ப்ரதிஷித்தாசாரேஷ்வபக்ஷ்யாபோஜ்யாபேயப்ராஶநே ஶூத்ராயாம் ச ரேதஸ்ஸேகேயோநௌ ச தோஷவத்கர்மாபிஸந்திபூர்வேப்யநபிஸந்திபூர்வே வாப்லிங்காபிரப உபஸ்ப்ருஶேத் வாருணீபிரந்யைர்வா பவித்ரைர்யதா கர்மாப்யாஸ:' இதி ॥

யம:—

'விரஜா த்ரிகுணம் ஜப்த்வா தத்வதேவ விமுச்யதே । (மஹா

---

வது மூன்று முறை ஜலத்தில் மூழ்கி ஜபித்தால் எல்லாப் பாபங்களினின்றும் விடுபடுவான். அல்லது ப்ரணவத்தையே மூன்று முறை ஜலத்தில் மூழ்கிப் படித்தால் எல்லாப் பாபங்களினின்றும் விடுபடுவான். பரிசுத்தமான மந்த்ரங்களால் ப்ரோக்ஷணம் செய்துகொண்டு ருத்ரைகாதசினியை ஜபித்தால் மஹாபாதகம் தவிர்த்த எல்லாப் பாபங்களினின்றும் விடுபடுவான்.

**ஆபஸ்தம்பர்:—** ஆர்யாசாரத்திற்கு விருத்தமான செய்கை, பிறர் தோஷத்தைக் கூறுவது (கோள் சொல்லுவது), நிஷித்த ஆசாரங்களைக் கைக்கொள்வது இவைகளிலும், பக்ஷிக்கத்தகாதது, சாப்பிடக்கூடாதது, குடிக்கக்கூடாதது இவைகளை உபயோகிப்பது, சூத்ர ஸ்த்ரீயினிடமும் அயோனியிலும் ரேதஸ்ஸேகம் செய்வது, தோஷமுள்ள அபிசாராதி கர்மங்களைப் புத்திபூர்வமாகவோ, அறியாமலோ செய்வது இவைகளில் மேலே சொல்லப்படும் ப்ராயஶ்சித்தத்தைச் செய்துகொள்ளவும். ஆபோஹிஷ்டா முதலிய மந்த்ரங்களாலாவது, வருண தேவதாக மந்த்ரங்களாலாவது, வேறு பவித்ர மந்த்ரங்களாலாவது தோஷங்களின் அப்யாஸத்திற்குத் தகுந்தபடி ஸ்நான ப்ரோக்ஷணாதிகளைச் செய்துகொள்ள வேண்டும்.

**யமன்:—** விரஜா மந்த்ரங்களை இருமுறை ஜபித்தால்

देव्यं त्रिरावर्त्य तदहरेव विशुध्यति ॥) पौरुषं सूक्तमावर्त्य मुच्यते सर्वकिल्बिषात् । वृषभं शतवारं जप्त्वा तदहरेव विशुध्यति ॥ वेदमेकगुणं जप्त्वा तदहरेव विशुध्यति । रुद्रैकादशकं जप्त्वा तदहरेव विशुध्यति ॥ अस्यवामीयं पावमानीरथापि वा । कुन्तापं वालखिल्यांश्च निवित्प्रैषं वृषाकपिम् ॥ होतॄन् रुद्रान् पितॄन् जप्त्वा मुच्यते सर्वपातकैः' इति ॥

होतॄन् = चित्तिः स्रुगित्यादीन् । पितॄन् = परेयिवांसमित्यादीन् ॥

चतुर्विंशतिमते—

पावमानीस्तथा कौत्सं पौरुषं सूक्तमेव च । जप्त्वा पापैः प्रमुच्येत सपुत्रं मातृच्छन्दसम् ॥ मण्डूकब्राह्मणं रुद्रं शुक्रियं मोक्षकं तथा । वामदेव्यं बृहत्साम जप्त्वा पापैः प्रमुच्यते ॥ यज्ञा

---

அன்றைக்கே சுத்தனுவான். (வாமதேவ்ய ஸாமத்தை மூன்று முறை ஜபித்தால் அன்றே சுத்தனுவான்). புருஷ ஸூக்தத்தை ஆவ்ருத்தி செய்தால் எல்லாப் பாபத்தினின்றும் விடுபடுவான். வ்ருஷபத்தை நூறு முறை ஜபித்தால் அன்றே சுத்தனுவான். வேதத்தை ஒரு முறை ஜபித்தால் அன்றே சுத்தனுவான். ருத்ரத்தைப் பதினொரு முறை ஜபித்தால் அன்றே சுத்தனுவான். அஸ்யவாமஸ்ய என்பதையாவது, அல்லது பவமான மந்த்ரங்களை யாவது ஜபிக்கவும். குந்தாபம், வாலகில்ய மந்த்ரங்கள், நிவித்ப்ரைஷம், வ்ருஷாகபி, ஹோத்ரு மந்த்ரங்கள், ருத்ர மந்த்ரங்கள், பித்ரு மந்த்ரங்கள் இவைகளை ஜபித்தால் எல்லாப் பாபங்களாலும் விடுபடுவான்.

ஹோத்ரு மந்த்ரங்கள் = சித்தி: ஸ்ருக் முதலியவை. பித்ரு மந்த்ரங்கள் = பரேயுவாம்ஸம் முதலியவை.

**சதுர்விம்சதி மதத்தில்:—** பாவமானிகள், கௌத்ஸம், புருஷ ஸூக்தம், புத்ரவர்க்கங்களோடு கூடிய மாதுசந்தஸம் இவைகளைப் படித்தால் பாபங்களால் விடுபடுவான். மண்டூக ப்ராம்ஹணம், ருத்ரம், சுக்ரியம், மோக்ஷகம், வாமதேவ்யம், ப்ருஹத்ஸாமம்

ஜ்ஞீயமாதித்யம் ஜ்யேஷ்டஸாம ச ராஜநம் । பாருச்சேபஞ்ச ஸாமானி ஜப்த்வா முச்யேத கில்பிஷாத் ॥ அதர்வஶிரஸம் சைவ புருஷஸூக்தம் ததைவ ச । நீலருத்ராம்ஸ்ததைவைந்த்ரம் ஜப்த்வா பாபை: ப்ரமுச்யதே ॥ அதர்வணோக்தா யே கேசின் மந்த்ரா: காமவிவர்ஜிதா: । தே ஸர்வே பாபஹந்தாரோ யாஜ்ஞவல்க்யவசோ யதா ॥ அக்னேர்மன்வ இத்யனுவாகம் து ஜபேதேதமனுத்தமம் । ஸிம்ஹே மே மன்யுரித்யேத மனுவாகம் ஜபேத்த்விஜ: ॥ ஜப்த்வா பாபை: ப்ரமுச்யேத போதாயனவசோ யதா । ருக்வேதமப்யஸேத்யஸ்து யஜுஶ்ஶாகாமதாபி வா ॥ ஸாமானி ஸரஹஸ்யானி அதர்வாங்கிரஸஸ்ததா । யத்கிஞ்சித் பாதகம் க்ருத்வா ருக்திஞ்சேதமேவம் ஜபேத் । ஹம்ஸஶ்ஶுசிஷதித்யேதாம் ஜபேதாத்மவித் த்ர்யம்பகம் ॥ ப்ராஹ்மணானி ச கல்பாம்ஶ்ச ஷடங்கானி ததைவ ச । ஆக்யானானி ததான்யானி ஜப்த்வா பாபை: ப்ரமுச்யதே ॥ இதிஹாஸபுராணானி தேவதாஸ்தவனானி ச । ஜப்த்வா பாபை: ப்ரமுச்யேத [illegible]’ இதி ॥

---

இவைகளை ஜபித்தால் பாபங்களால் விடுபடுவான். யஜ்ஞாயஜ்ஞீயம், ஆதித்யம், ஜ்யேஷ்டஸாமம், ராஜனம், பாருச்சேபம் என்ற ஐந்து ஸாமங்களை ஜபித்தால் பாபத்தினின்றும் விடுபடுவான். அதர்வ சிரஸ், புருஷஸூக்தம், நீல ருத்ரங்கள், ஐந்த்ரம் இவைகளை ஜபித்தால் பாபங்களால் விடுபடுவான். அதர்வவேதத்தில் சொல்லப் பட்ட எந்த மந்த்ரங்கள் காம்ய பலத்துடன் இல்லையோ அவைகள் எல்லாம் பாபத்தைப் போக்கக்கூடியவைகள், யாஜ்ஞவல்க்யரின் வசனப்படி. அக்னேர் மந்வே என்ற சிறந்த அனுவாகத்தையும், ஸிம்ஹமேமேமன்யு: என்ற அனுவாகத்தையும் ப்ராம்ஹணன் ஜபிக்கவேண்டும். இவைகளை ஜபித்தால் பாபங்களால் விடுபடுவான், போதாயனர் வசனப்படி. எவன் ருக்வேதத்தைப் படிக்கின்றானோ, அல்லது யஜுச் சாகையைப் படிக்கின்றானோ, ரஹஸ்யங்களுடன் கூடிய ஸாமங்களையாவது, அதர்வ அங்கிர: என்ற மந்த்ரங்களையாவது படிக்கின்றானோ அவன் எல்லாப் பாபங்களாலும் விடுபடுவான். ஏதாவது பாபங்களைச் செய்தாலும் யத்கிஞ்சேதம் என்ற ருக்கை ஜபிக்கவேண்டும். ஹம்ஸஶ்ஶுசிஷத், த்ரியம்பகம், ப்ராம்ஹணங்கள், கல்பங்கள், ஆறு அங்கங்கள், ஆக்யானங்கள் இவைகளையும்

விஷ்ணு:—

அதாத: ஸர்வவேத பவித்ராணி பவந்தி। யேஷாம் ஜபைச்ச ஹோமைச்ச த்விஜாதய: பாபேப்ய: பூயந்தே। அகமர்ஷணம் தேவக்ருதம் சுத்தவத்ய: தரத்ஸமந்தீ யாவதி கூஷ்மாண்ட்ய: பாவமான்ய: துர்காஸாவித்ரீ அபீஷங்க்ய: பதஸ்தோபா வ்யாஹ்ருதயோ பாருண்டானி இந்த்ரஸாமானி புருஷவ்ரதம் சைவதம் பாஸம் பார்ஹஸ்பத்யம் வாக்ஸூக்தம் கோஸூக்தம் அச்வஸூக்தம் மத்வ்ருச: ஸாமானி இந்த்ரசுத்தம் சதருத்ரீயம் அதர்வசிர: த்ரிஸுபர்ணம் மஹாவ்ரதம் நாராயணீயம் புருஷஸூக்தம் த்ரீண்யாஜ்யதோஹானி ரதந்தரம் அக்னேர்வ்ரதம் வாமதேவ்யம் ப்ருஹச்சைதானி ஜப்தானி புனந்தி ஜந்தூன் ஜாதிஸ்மரத்வம் லபதே யதீச்சேத் இதி ॥

---

மற்றவைகளையும் ஜபித்தால் பாபங்களால் விடுபடுவான். இதிஹாஸங்கள், புராணங்கள், தேவதா ஸ்தோத்ரங்கள் இவைகளையும், மற்றத் தர்ம சாஸ்த்ர க்ரந்தங்களையும் படித்தால் பாபங்களால் விடுபடுவான்.

**விஷ்ணு:**— இனி சொல்லப்படுபவைகள் எப்பொழுதுமே சுத்திகரங்களாகும்; எவைகளை ஜபிப்பதாலும், எவைகளால் ஹோமம் செய்தாலும் ப்ராம்ஹணர்கள் பாபங்களால் விடுபடுவார்களோ. அகமர்ஷணம், தேவக்ருதம், சுத்தவதிகள், தரத்ஸமந்திதாவதி, கூச்மாண்டிகள், பாவமானிகள், துர்க்கா மந்த்ரம், ஸாவித்ரீ, அபிஷங்கீ, பதஸ்தோபங்கள், வ்யாஹ்ருதிகள், பாருண்டங்கள், இந்த்ரஸாமம், புருஷவ்ரதம், சைவதம், பாஸம், அப்லிங்கம், பார்ஹஸ்பத்யம், வாக்ஸூக்தம், கோஸூக்தம், அச்வஸூக்தம், மதுருக்குகள், ஸாமங்கள், இந்த்ரசுத்தம், சதருத்ரீயம், அதர்வசிரஸ், த்ரிஸுபர்ணம், மஹாவ்ரதம், நாராயணீயம், புருஷஸூக்தம், மூன்று ஆஜ்யஸ்தோமங்கள், ரதந்தரம், அக்னேர்வ்ரதம், வாமதேவ்யம், ப்ருஹத் என்ற இவைகளை ஜபித்தால், அவை ப்ராணிகளைச் சுத்தம் செய்கின்றன. விரும்பினால் பூர்வஜன்ம ஜ்ஞானம் உண்டாகும்.

𑌪𑍈𑌠𑍀𑌨𑌸𑌿𑌃—

‘𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑌪𑍍𑌰𑌸𑌕𑍍𑌤𑍋𑌽𑌪𑌿 𑌧𑍍𑌯𑌾𑌯𑌨𑍍𑌨𑌿𑌮𑌿𑌷𑌮𑌚𑍍𑌯𑍁𑌤𑌮𑍍 । 𑌭𑍂𑌯𑌸𑍍𑌤𑌪𑌸𑍍𑌵𑍀 𑌭𑌵𑌤𑌿 𑌪𑌙𑍍𑌕𑍍𑌤𑌿𑌪𑌾𑌵𑌨𑌪𑌾𑌵𑌨𑌃’ 𑌇𑌤𑌿 ॥

𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑌃—

‘𑌹𑌿𑌤𑍍𑌵𑌾 𑌸𑌕𑌲𑌪𑌾𑌪𑌾𑌨𑌿 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌸𑍁𑌕𑍃𑌤𑌸𑌞𑍍𑌚𑌯𑌮𑍍 । 𑌸 𑌶𑍁𑌦𑍍𑌧𑍋 𑌜𑌾𑌯𑌤𑍇 𑌧𑍀𑌮𑌾𑌨𑍍𑌹𑌰𑍇𑌰𑍍𑌨𑌾𑌮𑌾𑌨𑌿 𑌕𑍀𑌰𑍍𑌤𑌯𑌨𑍍’ 𑌇𑌤𑌿 ॥

𑌭𑍃𑌗𑍁𑌃—

‘𑌕𑍋𑌟𑌿𑌶𑍋 𑌮𑌨𑍁𑌜𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌭𑍀𑌤𑌿𑌦𑌂 𑌸𑌮𑍁𑌪𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍 । 𑌰𑌾𑌮 𑌰𑌾𑌮𑍇𑌤𑌿 𑌸𑌂𑌕𑍀𑌰𑍍𑌤𑍍𑌯 𑌤𑌨𑍍𑌨𑌾𑌶𑌯𑌤𑌿 𑌮𑌾𑌨𑌵𑌃 ॥ 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌮𑍇𑌵 𑌪𑌾𑌪𑌾𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑌿𑌦𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍 । 𑌨𑌾𑌤𑌃 𑌪𑌰𑌤𑌰𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌂 𑌤𑍍𑌰𑌿𑌷𑍁 𑌲𑍋𑌕𑍇𑌷𑍁 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇’ 𑌇𑌤𑌿 ॥

𑌯𑍋𑌗𑌯𑌾𑌜𑍍𑌞𑌵𑌲𑍍𑌕𑍍𑌯𑌃—

‘𑌨 𑌤𑌾𑌵𑌤𑍍𑌪𑌾𑌪𑌮𑌸𑍍𑌤𑍍𑌯𑍇𑌵 𑌯𑌨𑍍𑌨𑌾𑌮𑍍𑌨𑌾 𑌨 𑌹𑍃𑌤𑌂 𑌹𑌰𑍇𑌃 । 𑌅𑌤𑌿𑌰𑍇𑌕𑌭𑌯𑌾𑌦𑌾𑌹𑍁𑌃 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌨𑍍𑌤𑌰𑌂 𑌵𑍃𑌥𑌾’ 𑌇𑌤𑌿 ॥

---

**பைடீனஸி:—** எல்லாப் பாபங்களையும் செய்பவனாயினும் ஒரு நிமிஷகாலம் அச்யுதனை த்யானம் செய்தால் அவன் மறுபடி தபஸ்வியாக ஆகிறான். தனது பங்க்தியைச் சுத்தம் செய்பவர்களையும் சுத்தி செய்பவனாவான்.

**வஸிஷ்டர்:—** விஷ்ணுவின் நாமத்தைக் கீர்த்தனம் செய்கிற நற்புத்தியுடையவன் ஸகல பாபங்களையும் தொலைத்து, புண்யக் குவியலையடைந்து பரிசுத்தனாக ஆகிறான்.

**ப்ருகு:—** மனிதர்களுக்குப் பயத்தைக் கொடுக்கக்கூடியது, கோடிக் கணக்காய் ஸமீபத்திலுள்ளது. மனிதன் ராம ராம என்று சொன்னால் அதை நாசம் செய்கிறான். எல்லாப் பாபங்களுக்கும் இது ப்ராயஶ்சித்தமாகச் சொல்லப்பட்டுள்ளது. இதைக் காட்டிலும் சிறந்த புண்யத்தைக் கொடுப்பது மூவுலகிலுமில்லை.

**யோகயாஜ்ஞவல்க்யர்:—** ஹரியின் நாமோச்சாரணத்தால் போக்கப்படாத பாபம் என்பது இல்லை. ஆனால் (பாபம்) அதிகமிருக்கக்கூடும் என்ற பயத்தால் மஹர்ஷிகள் வேறு ப்ராயஶ்சித்தத்தை வீணாகச் சொல்லியுள்ளனர்.

ப்ரஹ்மகைவர்தே —

'ஸர்வபாபயுதோ வாऽபி கீர்தயன்னநிஶம் ஹரிம் ।
ஶுத்தாந்த꞉கரணோ பூத்வா ஜாயதே பங்க்திபாவன꞉' இதி ॥

ரஹஸ்யப்ரஹ்மஹத்யாதி பாபானாம்
ப்ருதகுக்தப்ராயஶ்சித்தானி ॥

அத ப்ருதகுக்தானி ॥

தத்ர வ்யாஸ꞉ —

'யோऽர்தலோபாத் த்விஜம் ஹத்வா ஸாங்கவேதமதீயுத꞉ ।
ஸ ஜலேஷு பௌருஷம் ஸூக்தம் ஜபந்த்யாயம்ஸ்து ஹரிம் ॥
ததைவ ப்ரஹ்மஹத்யாயா முச்யதே நாத்ர ஸம்ஶய꞉' இதி ॥

யம꞉ —

'ப்ரஹ்மஹத்யாஸுராபானஸ்வர்ணஸ்தேயகுருதல்பகா꞉ ।
ப்ராணாயாமை꞉ ஶ்ராந்தோऽகமர்ஷணம் ஜபேத்' இதி ॥

யாஜ்ஞவல்க்ய꞉ —

'த்ரிராத்ரோபோஷிதோ ஜப்த்வா ப்ரஹ்மஹா த்வகமர்ஷணம் ।
அந்தர்ஜலே விஶுத்யேத காம் ச தத்வா பயஸ்வினீம்' இதி ॥

---

**ப்ரம்ஹகைவர்த்தத்தில்:—** எல்லாப் பாபங்களுடனும் கூடியவனாயினும் ஈச்வரனை எப்பொழுதும் கீர்த்தனம் செய்பவன் சுத்த மனமுடையவனாக ஆகி, பங்க்தியைச் சுத்தம் செய்பவனாக ஆகிறான்.

## ரஹஸ்யத்தில் செய்த ப்ரம்ஹஹத்யை முதலிய பாபங்களுக்குத் தனியாகச் சொல்லப்பட்ட ப்ராயஶ்சித்தம்.

**வ்யாஸர்:—** எந்த மனிதன் பணத்தாசையால் அங்கத்துடன் கூடிய வேதத்தை அத்யயனம் செய்த ப்ராம்ஹணனைக் கொன்றானோ, அவன் ஜலத்திலிருந்து விஷ்ணுவைச் சிந்திப்பவனாய் புருஷஸூக்தத்தை ஜபிக்கவேண்டும். அப்பொழுதே ப்ரம்ஹஹத்யையினின்றும் விடுபடுவான். ஸம்சயமில்லை.

**யமன்:—** ப்ரம்ஹஹத்யை, ஸுராபானம், ஸ்வர்ணஸ்தேயம், குருதல்பகமனம் இவைகளைச் செய்தால் ப்ராணாயாமங்களால் ச்ராந்தனாய், அகமர்ஷண மந்த்ரத்தை ஜபிக்கவேண்டும்.

**யாஜ்ஞவல்க்யர்:—** ப்ராம்ஹஹத்யை செய்தவன் மூன்றுநாள் உபவாஸமிருந்து அகமர்ஷணத்தை ஜலத்தினுள் ஜபித்துப் பால் உள்ள பசுவையும் தானம் செய்தால் சுத்தனாவான்.

ஶங்கலிகிதாவபி—

ப்ரஹ்மஹா த்ரிராத்ரோபோஷிதோऽப்ஸு நிமக்நோऽகமர்ஷணம் த்ரிராவர்தயேத்' இதி ॥

சதுர்விம்ஶதிமதே—

'த்ரிமது த்ரிஸுபர்ணம் ச நாசிகேதத்ரயம் ததா ।
நாராயணம் ஜபேத் ஸர்வம் முச்யதே ப்ரஹ்மஹத்யயா' இதி ॥

போதாயந:—

க்ராமாத் ப்ராசீமுதீசீம் வா திஶமுபநிஷ்க்ரம்ய ஸ்நாத: ஶுசி: ஶுசிவாஸா உதகாந்தே ஸ்தண்டிலமுபலிப்ய ஸக்ருத்க்லிந்நவாஸா: ஸக்ருத்பூதேந பாணிநா ஆதித்யாபிமுகோऽகமர்ஷணம் ஸ்வாத்யாயமதீயீத । ப்ராத: ஶதம் மத்யாஹ்நே ஶதம் அபராஹ்ணே ஶதம் பரிமிதம் வா உதிதேஷு நக்ஷத்ரேஷு ப்ரஸ்ருதியாவகம் ப்ராஶ்நீயாத் । ஜ்ஞாநக்ருதேப்யோऽஜ்ஞாநக்ருதேப்யஶ்ச உபபாதகேப்ய: ஸப்தராத்ராத் ப்ரமுச்யதே ஆத்வாதஶராத்ராத் மஹாபாதகேப்யோ ப்ரஹ்மஹநநம் குருதல்பகமநம் ஸுவர்ண-

**சங்கலிகிதர்களும்:—** ப்ரம்ஹஹத்தி செய்தவன் மூன்று நாள் உபவாஸமிருந்து, ஜலத்தினுள் அகமர்ஷண மந்த்ரத்தை மூன்று முறை ஜபிக்கவேண்டும்.

**சதுர்விம்சதிமதத்தில்:—** மூன்று மதுமதீ மந்த்ரங்கள், த்ரிஸுபர்ணம், மூன்று நாசிகேதம், நாராயணம் முழுவதும் இவைகளை ஜபித்தால் ப்ரம்ஹஹத்தி தோஷத்தால் விடுபடுவான்.

**போதாயனர்:—** க்ராமத்தினின்று கிழக்கு அல்லது வடக்குத் திக்கை யடைந்து, ஸ்நானம் செய்து சுத்தனாய், சுத்த வஸ்த்ர முடையவனாய், ஜல ஸமீபத்தில் மேடையை மெழுகி, (அதில் உட்கார்ந்து) ஒரு முறை நனைந்த வஸ்த்ரமுடையவனாய், பசுவின் சாணத்தால் சுத்தமான கையுடன் ஸூர்யனுக்கு நேராக அகமர்ஷணம் என்கிற வேதத்தை ஜபிக்கவேண்டும். காலையில் நூறு முறை, மத்யாஹ்னத்தில் நூறு முறை, அபராஹ்ணத்தில் நூறு முறை அல்லது அநேக முறை. நக்ஷத்ர உதயத்திற்குப் பிறகு யவைக் கஞ்சியை ஒரு கையளவு குடிக்கவேண்டும். அறிந்து செய்ததும், அறியாமற் செய்ததுமாகிய உபபாதகங்களினின்றும் ஏழு நாட்களால் விடுபடுவான். பன்னிரண்டு நாள் செய்தால் மஹாபாதகங்

स्तेयं सुरापानमिति वर्जयित्वैकविंशतिरात्रात्तान्यपि तरति' इति ॥

बृहद्विष्णुः—

'ब्रह्महत्यां कृत्वा प्राचीमुदीचीं वा दिशमुपनिष्क्रम्य प्रभूतेन्धनेनाग्निं प्रज्वाल्याघमर्षणेनाष्टसहस्रमाज्याहुतीर्जुहुयात्तदेतस्मात् पूतो भवति' इति ॥

मनुः—

'कौत्सं जप्त्वाप इत्येतद्वासिष्ठं च प्रतीत्यृचम् । माहित्रं शुद्धवत्यश्च सुरापोऽपि विशुध्यति ॥ सकृज्जप्त्वास्यवामीयं शिवसङ्कल्पमेव च । सुवर्णमपहृत्यापि क्षणाद्भवति निर्मलः ॥ हविष्पान्तीयमभ्यस्य नतमंह इतीति च । जप्त्वा च पौरुषं सूक्तं मुच्यते गुरु

---

களினின்றும் விடுபடுவான். ப்ரம்ஹஹத்தி, குருதல்பகமனம், ஸ்வர்ணஸ்தேயம், ஸுராபானம் இவைகளைத் தவிர்த்து. இருபத்தொருநாள் செய்தால் அந்தப் பாபங்களையும் தாண்டுவான்.

**ப்ருஹந்விஷ்ணு**:— ப்ரம்ஹஹத்தி செய்தால், கிழக்கு அல்லது வடக்குத் திக்கில் சென்று, அதிகமான ஸமித்தினால் அக்னியை எரிக்கச் செய்து, அகமர்ஷண மந்த்ரத்தால் எண்ணாயிரம் முறை ஆஜ்ய ஆஹுதிகளைச் செய்யவேண்டும். அதனால் இந்தப் பாபத்தினின்றும் சுத்தனாகிறான்.

**மனு**:— கௌத்ஸம் = "அபந: சோசுசதகம்" என்ற ஸூக்தத்தையும், வாஸிஷ்டம் = "ப்ரதிஸ்தோமேபிருஷஸம்" என்ற ருக்கையும் மாஹித்ரம் = 'மஹித்ரீணாமவோஸ்து' என்ற ஸூக்தத்தையும், சுத்தவத்ய: = "ஏதோன்மிந்த்ரம்" என்ற மூன்று ருக்குகளையும், ஒரு மாஸம் முழுவதும் தினந்தோறும், பதினாறு முறை ஜபித்தால் ஸுராபானம் செய்தவனும் சுத்தனாகிறான். "அஸ்யவாமஸ்ய" என்ற ஸூக்தத்தையும், "யஜ்ஜாக்ரதோதூரம்" என்று வாஜஸநேயகத்தில் உள்ள சிவஸங்கல்பத்தையும் ஒரு மாஸம் ப்ரதி தினம் ஒரு முறை ஜபித்தால் ப்ராம்ஹண ஸ்வர்ணத்தை அபஹரித்தவனும் உடனே சுத்தனாவான். ஹவிஷ்பாந்தீயம் = "ஹவிஷ்பாந்தமஜரம்" என்ற பத்தொன்பது ருக்குகளையும், நதமம்ஹ: = "நதமம்ஹோந துரிதம்", என்பதையும் பதினாறு ருக்குகளுள்ள

[illegible]

[illegible]

புருஷ ஸூக்தத்தையும் ஒரு மாஸம் முடிய ப்ரதிதினம் பதினறு முறை ஜபித்தால் குருதல்பகமனம் செய்தவன் அப்பாபத்தினின்றும் உடனே விடுபடுவான். "தேவக்ருதஸ்ய" என்பது முதலிய சகல ஹோம மந்த்ரங்களால் ஒரு வர்ஷம் வரையில் ப்ரதிதினம் ஆஜ்ய ஹோமத்தைச் செய்தாலும், "நம இந்த்ரஶ்ச" என்ற ருக்கை ஒரு வர்ஷம் முழுவதும் ஜபித்தாலும் மஹாபாபத்தையும் ப்ராம்ஹணன் போக்குவான். மஹாபாதகத்துடன் கூடியவன் ஜிதேந்த்ரியனுய், பசுக்களைப் பின்தொடர்ந்து செல்லவேண்டும். ப்ரதிதினம் ய: பாவமானீ: என்ற மந்த்ரங்களை அடிக்கடி ஜபித்து, பிக்ஷான்னத்தை மட்டில் புஜிப்பவனுய் ஒரு வர்ஷம் வரையில் இருந்தால் அந்தப் பாபத்தினின்றும் சுத்தனுவான். மூன்று பராக க்ருச்ரங்களால் சுத்தனுகி, மந்த்ர ப்ராம்ஹண ரூபமான வேத ஸம்ஹிதையை அரண்யத்தில் சுத்தனுய் மூன்று தடவை ஜபித்தால் மஹாபாபங்களெல்லாவற்றினின்றும் சுத்தனுவான். மூன்று நாள் உபவாஸமிருக்கவேண்டும். நியமமுள்ளவனுய் ஒவ்வொரு நாளிலும் மூன்று காலங்களிலும் ஸ்நானம் செய்யவேண்டும். மூன்று கால ஸ்நானங்களிலும் ஜலத்தினுள் மூழ்கி அகமர்ஷண ஸூக்தத்தை மூன்று முறை ஜபிக்கவேண்டும். ஸகல பாபங்களாலும் விடுபடுவான்.

**யமன்:—** ஸுராபானம் செய்தவன், கழுத்தளவு ஜலத்திலிறங்கி, ஸுதஸோமம் என்கிற மந்த்ரத்தால் கையளவு ஜலத்தை எடுத்துக்கொண்டு, ஓங்காரத்தினுல் அபிமந்த்ரணம் செய்து, பானம்

𑌨𑌿𑌮𑌗𑍍𑌨𑍋 𑌮𑌾𑌨𑌸𑍍𑌤𑍋𑌕𑍀𑌯𑌂 𑌜𑌪𑍇𑌤𑍍 । 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌸𑍁𑌵𑌰𑍍𑌣𑌸𑍍𑌤𑍇𑌯𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌶𑌾𑌲𑌾𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌯𑌾𑌪𑍍𑌸𑍁 𑌨𑌿𑌷𑍍𑌣𑌾𑌤𑍋 𑌸𑍍𑌰𑍁𑌵𑌮𑌾𑌤𑍍𑌰 𑌉𑌦𑌕𑍇 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌵𑌰𑍍𑌣𑌾𑌭𑌿𑌶𑍍𑌚𑌤𑌸𑍃𑌭𑌿𑌰𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌸𑌂𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌷𑍍𑌯 𑌤𑍍𑌰𑍀𑌨𑍍 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌯𑌾𑌮𑌾𑌨𑍍 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌪𑌾𑌪𑌾𑌤𑍍 𑌪𑍂𑌤𑍋 𑌭𑌵𑌤𑌿 । 𑌗𑍁𑌰𑍁𑌤𑌲𑍍𑌪𑌗𑌮𑌨𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾𑌽𑌘𑌮𑌰𑍍𑌷𑌣𑌂 𑌨𑌿𑌮𑌜𑍍𑌜𑍍𑌯 𑌤𑍍𑌰𑌿𑌰𑌾𑌵𑌰𑍍𑌤𑍍𑌯 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌪𑌾𑌪𑌾𑌤𑍍 𑌪𑍂𑌤𑍋 𑌭𑌵𑌤𑌿' 𑌇𑌤𑌿 ॥

### 𑌰𑌹𑌸𑍍𑌯𑌸𑍁𑌰𑌾𑌪𑌾𑌨𑌾𑌦𑌿𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍍 ॥

---

𑌸𑍁𑌰𑌾𑌪𑌾𑌨𑌾𑌦𑍌 𑌯𑌾𑌜𑍍𑌞𑌵𑌲𑍍𑌕𑍍𑌯𑌃—

'𑌤𑍍𑌰𑌿𑌰𑌾𑌤𑍍𑌰𑍋𑌪𑍋𑌷𑌿𑌤𑍋 𑌹𑍁𑌤𑍍𑌵𑌾 𑌕𑍂𑌷𑍍𑌮𑌾𑌣𑍍𑌡𑍀𑌭𑌿𑌰𑍍𑌘𑍃𑌤𑌂 𑌶𑍁𑌚𑌿𑌃 । 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌵𑌰𑍍𑌣𑌹𑌾𑌰𑍀 𑌤𑍁 𑌰𑍁𑌦𑍍𑌰𑌜𑌾𑌪𑍀 𑌜𑌲𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ॥ 𑌸𑌹𑌸𑍍𑌰𑌶𑍀𑌰𑍍𑌷𑌾𑌜𑌾𑌪𑍀 𑌤𑍁 𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌗𑍁𑌰𑍁𑌤𑌲𑍍𑌪𑌗𑌃 । 𑌗𑍌𑌰𑍍𑌦𑍇𑌯𑌾 𑌕𑌰𑍍𑌮𑌣𑍋𑌽𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑍇 𑌪𑍃𑌥𑌗𑍇𑌭𑌿𑌃 𑌪𑌯𑌸𑍍𑌵𑌿𑌨𑍀' 𑌇𑌤𑌿 ।

---

செய்யவேண்டும். பிறகு ஜலத்தினுள் மூழ்கி "மானஸ்தோகே" என்ற ருக்கை ஜபிக்கவேண்டும். ப்ராம்ஹணனின் ஸ்வர்ணத்தைத் திருடினல், ஸ்வர்ணசாலையில் அதைப் போட்டு ஜலத்திலிறங்கி ஸ்நானம் செய்து, "ஹிரண்யவர்ணு:" என்ற நான்கு ருக்குகளால் தன்னை ப்ரோக்ஷித்துக்கொண்டு, மூன்று ப்ராணுயாமங்கள் செய்தால் அந்தப் பாபத்தினின்றும் சுத்தனுவான். குருதல்பகமனம் செய்தால் அகமர்ஷண ஸூக்தத்தை ஜலத்தில் மூழ்கி மூன்று தடவை ஜபித்தால் அந்தப் பாபத்தினின்றும் சுத்தனுவான்.

### ரஹஸ்ய ஸுராபானம் முதலியவைகளில் ப்ராயச்சித்தம்.

**யாஜ்ஞவல்க்யர்:—** மூன்று நாள் உபவாஸமிருந்து சுத்தனுய், கூச்மாண்ட மந்த்ரங்களால் ஆஜ்யஹோமம் செய்தால் (ஸுராபான பாபத்திலிருந்து விடுபடுவான்) ஜலத்தில் நின்று ருத்ரத்தை ஜபித்தால் ப்ராம்ஹணனின் ஸ்வர்ணத்தை அபஹரித்தவன் பாபத்தினின்றும் விடுபடுவான். குருதல்பகமனம் செய்தவன் ஸஹஸ்ர சீர்ஷா என்ற புருஷஸூக்தத்தை ஜபித்தால் அந்தப் பாபத்தினின்றும் விடுபடுவான். இந்த ப்ராயச்சித்த கர்மம் முடிந்த பிறகு இந்தப் பாபிகள் தனித்தனியே பால் உள்ள பசுவைத் தானம் செய்யவேண்டும்.

𑌶𑌾𑌤𑌾𑌤𑌪𑌃—

‘𑌸𑍁𑌰𑌾𑌂 𑌪𑍀𑌤𑍍𑌵𑌾 𑌗𑍁𑌰𑍁𑌦𑌾𑌰𑌾𑌂𑌶𑍍𑌚 𑌗𑌤𑍍𑌵𑌾 𑌸𑍍𑌤𑍇𑌯𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌹𑌤𑍍𑌯𑌾𑌂 𑌚 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 । 𑌭𑌸𑍍𑌮𑌚𑍍𑌛𑌨𑍍𑌨𑍋 𑌭𑌸𑍍𑌮𑌶𑌯𑍍𑌯𑌾𑌶𑌯𑌾𑌨𑍋 𑌰𑍁𑌦𑍍𑌰𑌜𑌾𑌪𑍍𑌯𑌾𑌯𑍀 𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑍈𑌃’ 𑌇𑌤𑌿 ॥ 𑌜𑌪𑌶𑍍𑌚𑍈𑌕𑌾𑌦𑌶𑌕𑍃𑌤𑍍𑌵𑌃 𑌕𑌾𑌰𑍍𑌯𑌃 ॥

𑌅𑌤𑍍𑌰𑌿𑌃—

‘𑌏𑌕𑌾𑌦𑌶 𑌗𑍁𑌣𑌾𑌨𑍍𑌵𑌾𑌪𑌿 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌨𑌾𑌵𑌰𑍍𑌤𑍍𑌯 𑌧𑌰𑍍𑌮𑌵𑌿𑌤𑍍 ।
𑌮𑌹𑌾𑌪𑌾𑌪𑍈𑌰𑌪𑌿 𑌸𑍍𑌪𑍃𑌷𑍍𑌟𑍋 𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌨𑌾𑌤𑍍𑌰 𑌸𑌂𑌶𑌯𑌃’ 𑌇𑌤𑌿 ॥

𑌬𑍋𑌧𑌾𑌯𑌨𑌃—

‘𑌅𑌘𑌮𑌰𑍍𑌷𑌣𑌂 𑌦𑍇𑌵𑌕𑍃𑌤𑌂 𑌶𑍁𑌦𑍍𑌧𑌵𑌤𑍍𑌯𑌸𑍍𑌤𑌰𑌤𑍍𑌸𑌮𑌾𑌃 । 𑌕𑍂𑌷𑍍𑌮𑌾𑌣𑍍𑌡𑍍𑌯𑌃 𑌪𑌾𑌵𑌮𑌾𑌨𑍍𑌯𑌶𑍍𑌚 𑌵𑌿𑌰𑌜𑌾 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌲𑌾𑌙𑍍𑌗𑌲𑌮𑍍 ॥ 𑌦𑍁𑌰𑍍𑌗𑌾 𑌵𑍍𑌯𑌾𑌹𑍃𑌤𑌯𑍋 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾 𑌮𑌹𑌾𑌪𑌾𑌤𑌕𑌨𑌾𑌶𑌨𑌾𑌃’ 𑌇𑌤𑌿 ॥

𑌆𑌶𑍍𑌵𑌲𑌾𑌯𑌨𑌃—

‘𑌕𑍁𑌨𑍍𑌤𑌾𑌪𑌂 𑌵𑌾𑌲𑌖𑌿𑌲𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌜𑌪𑌨𑍍 𑌪𑌾𑌪𑍈𑌃 𑌪𑍍𑌰𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌹𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌪𑌾𑌪𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑌾𑌵𑌮𑌾𑌨𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇’ 𑌇𑌤𑌿 ॥

---

**சாதாதபர்:—** ஸுராபானம் செய்தாலும், குருதல்பகமனம் செய்தாலும், ஸ்வர்ணஸ்தேயம் செய்தாலும், ப்ரம்ஹஹத்யை செய்தாலும் விபூதியினால் மூடப்பட்டு, விபூதிப் படுக்கையில் படுத்தவனாய், பதினொரு முறை ருத்ரத்தை ஜபிப்பவன் எல்லாப் பாபங்களாலும் விடுபடுவான்.

ருத்ர ஜபத்தைப் பதினொரு முறை செய்யவேண்டும். அதைச் சொல்லுகிறார், **அத்ரி:—** தர்மத்தை யறிந்தவன் ருத்ர மந்த்ரங்களைப் பதினொரு முறை ஆவ்ருத்தி செய்தாலாவது மஹா பாபங்களாலும் விடுபடுவான். இதில் ஸம்சயமில்லை.

**போதாயனர்:—** அகமர்ஷண மந்த்ரம், தேவக்ருதஸ்ய என்பது முதலிய மந்த்ரங்கள், சுத்தவதீ ருக்குகள், தரத்ஸமா: என்ற ருக்குகள், கூச்மாண்ட ஹோம மந்த்ரங்கள், பாவமானீ மந்த்ரங்கள், விரஜா மந்த்ரங்கள், ம்ருத்யுலாங்கலம், துர்க்கா மந்த்ரங்கள், வ்யாஹ்ருதிகள், ருத்ர மந்த்ரங்கள் இவைகள் மஹாபாதகங்களையும் போக்கக்கூடியவைகள்.

**ஆச்வலாயனர்:—** குந்தாபம், வாலகில்யங்கள், இவைகளை

𑌸𑌂𑌵𑌰𑍍𑌤𑌃—

'𑌷𑌣𑍍𑌮𑌾𑌸𑌂 𑌪𑌞𑍍𑌚𑌮𑌾𑌸𑌂 𑌵𑌾 𑌨𑌿𑌯𑌤𑍋 𑌨𑌿𑌯𑌤𑌾𑌶𑌨𑌃 । 𑌜𑌪𑍍𑌤𑍍𑌵𑌾 𑌤𑍁 𑌪𑍌𑌰𑍁𑌷𑌂 𑌸𑍂𑌕𑍍𑌤𑌂 𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌤𑌕𑍈𑌃' 𑌇𑌤𑌿 ॥

𑌬𑍋𑌧𑌾𑌯𑌨𑌃—

'𑌮𑌾𑌤𑍃 𑌦𑍁𑌹𑌿𑌤𑍃 𑌸𑍍𑌨𑍁𑌷𑌾 𑌸𑍍𑌵𑌸𑍃 𑌸𑌵𑌰𑍍𑌣𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌵𑌿𑌧𑌵𑌾𑌗𑌮𑌨𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌯𑌃 𑌪𑍌𑌰𑍁𑌷𑌸𑍂𑌕𑍍𑌤𑌂 𑌤𑍍𑌰𑌿𑌰𑌾𑌵𑌰𑍍𑌤𑌯𑍇𑌤𑍍 𑌤𑌦𑌾𑌨𑍀𑌮𑍇𑌵 𑌪𑍂𑌤𑍋 𑌭𑌵𑌤𑌿' 𑌇𑌤𑌿 ॥

𑌕𑍂𑌰𑍍𑌮𑌪𑍁𑌰𑌾𑌣𑍇—

'𑌜𑌪𑌸𑍍𑌤𑌪𑌸𑍍𑌤𑍀𑌰𑍍𑌥𑌸𑍇𑌵𑌾 𑌦𑍇𑌵𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌪𑍂𑌜𑌨𑌮𑍍 । 𑌗𑍍𑌰𑌹𑌣𑌾𑌦𑌿𑌷𑍁 𑌕𑌾𑌲𑍇𑌷𑍁 𑌮𑌹𑌾𑌪𑌾𑌤𑌕𑌶𑍋𑌧𑌨𑌮𑍍 ॥ 𑌉𑌪𑍋𑌷𑌿𑌤𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌶𑍍𑌯𑌾𑌂 𑌕𑍃𑌷𑍍𑌣𑌪𑌕𑍍𑌷𑍇 𑌸𑌮𑌾𑌹𑌿𑌤𑌃 । 𑌯𑌮𑌾𑌯 𑌧𑌰𑍍𑌮𑌰𑌾𑌜𑌾𑌯 𑌮𑍃𑌤𑍍𑌯𑌵𑍇 𑌚𑌾𑌨𑍍𑌤𑌕𑌾𑌯 𑌚 ॥ 𑌵𑍈𑌵𑌸𑍍𑌵𑌤𑌾𑌯 𑌕𑌾𑌲𑌾𑌯 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌕𑍍𑌷𑌯𑌾𑌯 𑌚 । 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍇𑌕𑌂 𑌤𑌿𑌲𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑍍 𑌦𑌦𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑌪𑍍𑌤𑍋𑌦𑌕𑌾𑌞𑍍𑌜𑌲𑍀𑌨𑍍 ॥ 𑌸𑍍𑌨𑌾𑌤𑍍𑌵𑌾 𑌨𑌦𑍍𑌯𑌾𑌂 𑌤𑍁 𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌹𑍍𑌣𑍇 𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌤𑌕𑍈𑌃' 𑌇𑌤𑌿 ॥

---

ஜபித்தால் பாபங்களால் விடுபடுவான். பாவமானீ மந்த்ரங்களை ஜபித்தால் ப்ரம்ஹஹத்யாதி பாபங்களினின்றும் விடுபடுவான்.

**ஸம்வர்த்தர்:—** ஆறு மாஸம் அல்லது ஐந்து மாஸம் வரையில் நியமமுடையவனாய், ஆஹார நியமமுடையவனாய், புருஷஸூக்தத்தை ஜபித்து வந்தால் எல்லாப் பாபங்களாலும் விடுபடுவான்.

**போதாயனர்:—** மாதா, பெண், நாட்டுப்பெண், ஸஹோதரீ, ஸவர்ணஸ்த்ரீ, விதவை இவர்களைச் சேர்ந்தாலும் எவன் புருஷஸூக்தத்தை மூன்று முறை ஜபிப்பானோ அவன் அப்பொழுதே சுத்தனாகிறான்.

**கூர்மபுராணத்தில்:—** க்ரஹணம் முதலிய புண்ய காலங்களில் செய்யப்படும் ஜபம், தபஸ், தீர்த்தஸேவை, தேவ ப்ராம்ஹணர்களைப் பூஜிப்பது இவை மஹாபாதகங்களையும் போக்குவதாகும். க்ருஷ்ண பக்ஷத்தில் சதுர்த்தசியில் உபவாஸமிருந்து நியமமுடையவனாய், பகலின் முன் பாகத்தில் நதியில் ஸ்நானம் செய்து யமன் முதல் ஸர்வபூதக்ஷயன் வரையுள்ள ஏழு நாமங்களால் யமனுக்குத் தனித்தனியே திலதர்ப்பணம் செய்யவேண்டும். ஸர்வ பாபங்களாலும் விடுபடுவான்.

अत्र ज्ञानाज्ञानाभ्यासानभ्यासैर्व्यवस्था द्रष्टव्या । संसर्गी तु तस्यैव प्रायश्चित्तं कुर्यात्, 'स तस्यैव व्रतं कुर्यात्' इति वचनैरेवोक्तत्वात् ॥

उपपातकरहस्यप्रायश्चित्तम् ॥

उपपातकरहस्यप्रायश्चित्ते आह याज्ञवल्क्यः—

'प्राणायामशतं कार्यं सर्वपापापनुत्तये ।
उपपातकजातानामनादिष्टस्य चैव हि' इति ॥

स्मृत्यन्तरे—

'दशप्रणवसंयुक्तैः प्राणायामैश्चतुश्शतैः ।
मुच्यते ब्रह्महत्यायाः किं पुनश्शेषपातकैः' इति ॥

प्राजापत्यकृच्छ्रलक्षणम् ॥

अथ कृच्छ्राणां लक्षणमुच्यते ॥

तत्र प्राजापत्यकृच्छ्रलक्षणमाह बोधायनः—

---

இந்த ப்ராயஶ்சித்தங்களில், அறிந்து செய்வது, அறியாமல் செய்வது, ஒரு முறை செய்வது, பலமுறை செய்வது என்பவைகளை அனுஸரித்து தகுந்தபடி வ்யவஸ்தையை அறியவேண்டும். பாபியுடன் ஸம்ஸர்க்கம் செய்தவன் பாபியின் ப்ராயஶ்சித்தத்தையே அனுஷ்டிக்கவேண்டும். இவ்விஷயம் முன்பே சொல்லப்பட்டிருப்பதால்.

**உபபாதகங்களில் ரஹஸ்ய விஷய ப்ராயஶ்சித்தம்.**

**யாஜ்ஞவல்க்யர்:—** எல்லாப் பாபங்களையும் போக்குவதற்கும், உபபாதகங்களுக்கும், ப்ராயஶ்சித்தம் சொல்லப்படாத பாபத்திற்கும், நூறு தடவை ப்ராணாயாமத்தைச் செய்யவேண்டும்.

**ஓர் ஸ்ம்ருதியில்:—** பத்து ப்ரணவங்களுடன்கூடிய நானூறு ப்ராணாயாமங்களால் ப்ரம்ஹஹத்யா பாபத்தினின்றும் விடுபடுவான். மற்றப் பாபங்களால் விடுபடுவான் என்பதைச் சொல்வதேன்?

**ப்ராஜாபத்ய க்ருச்ர லக்ஷணம்.**

இனி க்ருச்ரங்களுக்கு லக்ஷணம் சொல்லப்படுகிறது. ப்ராஜாபத்ய க்ருச்ர லக்ஷணத்தைச் சொல்லுகிறார்,

'ப்ராஜாபத்யோ ஹ்யேஷ க்ருச்ச்ரோ திவாராத்ராவயாசிதம் |
க்ரமஶோ வாயுபக்ஷஶ்ச த்வாதஶாஹம் த்ர்யஹம் த்ர்யஹம்' இதி ||

ஆபஸ்தம்ப:—

'த்ர்யஹமநக்தாஶீ திவாஶீ ததஸ்த்ர்யஹம் த்ர்யஹமயாசிதவ்ரதஸ்த்ர்யஹம் நாஶ்நாதி கிஞ்சநேதி க்ருச்ச்ர த்வாதஶராத்ரஸ்ய விதி:' இதி ||

மநு:—

'த்ர்யஹம் ப்ராதஸ்த்ர்யஹம் ஸாயம் த்ர்யஹமத்யாதயாசிதம் |
த்ர்யஹம் பரம் ச நாஶ்நீயாத் ப்ராஜாபத்யம் சரந் த்விஜ:' இதி ||

அஸ்யைவாதிகாரிபேதேந ப்ரயோகாந்தரமாஹ வஸிஷ்ட:—

'அஹ: ப்ராதரஹர்நக்தமஹரேகமயாசிதம் | அஹ: பராகம் தத்ரைகமேவம் சதுரஹௌ பரௌ || அநுக்ரஹார்தம் விப்ராணாம் மநுர்தர்மப்ருதாம் வர: | பாலவ்ருத்தாதுராணாம் ச ஶிஶுக்ருச்ச்ரமுவாச ஹ' இதி ||

---

**போதாயனர்:—** மூன்று நாள் பகலில் மட்டும், மூன்று நாள் இரவில் மட்டும் புஜிப்பது, மூன்று நாள் யாசிக்காமல் கிடைத்ததை மட்டில் புஜிப்பது, மூன்று நாள் காற்றை மட்டில் புஜிப்பது, என்று முறையே பன்னிரண்டுநாள் இருப்பது ப்ராஜாபத்ய க்ருச்ரம்.

**ஆபஸ்தம்பர்:—** மூன்று நாள் பகலில் மட்டில் புஜிப்பவனும், மூன்று நாள் இரவில் மட்டில் புஜிப்பவனும், மூன்று நாள் யாசிக்காமல் கிடைத்ததை மட்டில் புஜிப்பவனும், மூன்று நாள் ஒன்றும் புஜிக்காதவனும் இருந்தால், என்பது பன்னிரண்டு நாள் அனுஷ்டிக்கவேண்டிய ப்ராஜாபத்ய க்ருச்ரத்தின் விதி.

**மனு:—** ப்ராஜாபத்ய க்ருச்ரத்தை யனுஷ்டிக்கும் ப்ராம்ஹணன், மூன்று நாள் பகலிலும், மூன்று நாள் இரவிலும், மூன்று நாள் யாசிக்கப்படாததையும் புஜித்து, மூன்று நாள் ஒன்றையும் புஜிக்காமலிருக்கவேண்டும்.

இந்த க்ரச்ருத்திற்கே அதிகாரிக்குத் தகுந்தபடி வேறு ப்ரயோகத்தைச் சொல்லுகிறார்,

**வஸிஷ்டர்:—** ஒரு நாள் பகலிலும், ஒரு நாள் இரவிலும், ஒரு நாள் யாசிக்காமல் கிடைத்ததையும் புஜிக்கவும். ஒரு நாள் உபவாஸம் இருக்கவேண்டும். இவ்விதம் மற்ற இரண்டு நான்கு நாட்களிலும் அனுஷ்டிக்கவும். இவ்விதம் க்ருச்ரத்தை-பாலர், வ்ருத்தர் வ்யாதிஸ்தர்கள் முதலிய ப்ராம்ஹணர்களுக்கு அனுக்ரஹத்துக்காகச் சிசுக்ருச்ரத்தை மஹாதர்மிஷ்டரான மனு விதித்தார்.

𑌬𑍌𑌧𑌾𑌯𑌨𑍋𑌽𑌪𑌿—

"𑌅𑌹𑌰𑍇𑌕𑌂 𑌤𑌥𑌾 𑌨𑌕𑍍𑌤𑌮𑌜𑍍𑌞𑌾𑌤𑌂 𑌵𑌾𑌯𑍁𑌭𑌕𑍍𑌷𑌤𑌾 । 𑌤𑍍𑌰𑌿𑌵𑍃𑌦𑍇𑌷 𑌪𑌰𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑍋 𑌬𑌾𑌲𑌾𑌨𑌾𑌂 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇" 𑌇𑌤𑌿 ॥

𑌏𑌤𑌦𑍍𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌮𑌪𑌿 𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌮𑌾𑌹 𑌯𑌾𑌜𑍍𑌞𑌵𑌲𑍍𑌕𑍍𑌯𑌃—

"𑌏𑌕𑌭𑌕𑍍𑌤𑍇𑌨 𑌨𑌕𑍍𑌤𑍇𑌨 𑌤𑌥𑍈𑌵𑌾𑌯𑌾𑌚𑌿𑌤𑍇𑌨 𑌚 । 𑌉𑌪𑌵𑌾𑌸𑍇𑌨 𑌚𑍈𑌕𑍇𑌨 𑌪𑌾𑌦𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌃 𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌃 ॥ 𑌯𑌥𑌾𑌕𑌥𑌞𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑍍𑌰𑌿𑌗𑍁𑌣𑌃 𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑍋𑌽𑌯𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇" 𑌇𑌤𑌿 ॥

𑌏𑌕𑌭𑌕𑍍𑌤𑍇𑌨 = 𑌦𑌿𑌵𑍈𑌵 𑌸𑌕𑍃𑌦𑍍𑌭𑍋𑌜𑌨𑍇𑌨, 𑌨𑌕𑍍𑌤𑍇𑌨 = 𑌰𑌾𑌤𑍍𑌰𑍌 𑌸𑌕𑍃𑌦𑍍𑌭𑍋𑌜𑌨𑍇𑌨, 𑌅𑌯𑌾𑌚𑌿𑌤𑍇𑌨 = 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌯𑌾𑌚𑌿𑌤𑌂 𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌭𑍋𑌜𑌨𑍇, 𑌤𑌦𑌯𑌾𑌚𑌿𑌤𑌮𑍍, 𑌤𑍇𑌨𑌾𑌤𑍍𑌰 𑌕𑌾𑌲𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌪𑍍𑌰𑌤𑍀𑌤𑍇𑌰𑍍𑌦𑌿𑌵𑌾 𑌰𑌾𑌤𑍍𑌰𑍌 𑌵𑌾 𑌸𑌕𑍃𑌦𑍍𑌭𑍋𑌜𑌨𑍇𑌨 । 𑌉𑌪𑌵𑌾𑌸𑍇𑌨 𑌚𑍈𑌕𑍇𑌨 = 𑌏𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌦𑌿𑌨𑍇 𑌅𑌨𑌶𑌨𑍇𑌨 𑌚, 𑌪𑌾𑌦𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑍋 𑌭𑌵𑌤𑌿 । 𑌅𑌯𑌮𑍇𑌵 𑌪𑌾𑌦𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌃 𑌸𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌾 𑌸𑍍𑌵𑌸𑍍𑌥𑌾𑌨𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌾

---

**போதாயனரும்:—** ஒரு நாள் பகலிலும், ஒரு நாள் இரவிலும் ஒரு நாள் யாசிக்காமலும் புஜித்து, ஒரு நாள் வாயுவை மட்டில் புஜித்து, இவ்விதம் மூன்று தடவை செய்வது, பாலர்களுக்கு க்ருச்ரம் (சிசுக்ருச்ரம்) எனப்படுகிறது.

இவ்விதம் உள்ள இரண்டு விதமான ப்ராஜாபத்ய க்ருச்ரத்தையும் சொல்லுகிறார், **யாஜ்ஞவல்க்யர்:—** ஒரு நாள் பகலில் புஜிப்பதும், ஒரு நாள் இரவில் புஜிப்பதும், ஒரு நாள் யாசிக்காமல் கிடைத்ததைப் புஜிப்பதும், ஒரு நாள் உபவாஸமிருப்பதும், என்ற இது பாத க்ருச்ரம் எனப்படுகிறது. எவ்விதத்தாலாவது இதை மூன்று தடவை செய்தால் இது ப்ராஜாபத்ய க்ருச்ரமெனப் படுகிறது.

ஏகபக்தேந = பகலில் மட்டில் ஒரு முறை புஜிப்பதால். நக்தேந = இரவில் மட்டில் ஒரு முறை புஜிப்பதால். அயாசிதேந = யாசிப்பதென்பதில்லாத போஜனத்தால். இதில் காலவிசேஷம் அறியப்படாததால் பகலிலாவது ராத்ரியிலாவது ஒரு முறை புஜிப்பதால். உபவாஸேந சைகேந = ஒரு நாள் முழுவதும் புஜிக்காமலிருப்பதாலும் பாத க்ருச்ரமாகிறது. இந்தப் பாத

वा यथाकथञ्चित् त्रिरभ्यस्तः प्राजापत्य इत्यु-
च्यते इत्यर्थः ॥

एकभक्तादिषु ग्राससंख्या ग्रासप्रमाणं चाप-
स्तम्बेन दर्शितम् —

'सायं द्वाविंशतिर्ग्रासाः प्रातः षड्विंशतिः स्मृताः।
चतुर्विंशतिरायाच्याः परं निरशनं स्मृतम्॥ कुक्कु-
टाण्डप्रमाणः स्याद्यावान्वास्यं विशेत्सुखम्' इति॥
चतुर्विंशतिमते प्रकारान्तरेण संख्या प्रदर्शिता —

'प्रातस्तु द्वादश ग्रासाः सायं पञ्चदशैव तु।
अयाचितेन द्वाषोडश त्र्यहं मारुताशनः' इति॥ शक्त्य-
पेक्षया व्यवस्था द्रष्टव्या॥

---

க்ருச்ரமே அதைத் திருப்புவதாலாவது, தன்னுடைய ஸ்தானத்தின் வ்ருத்தியாலாவது, மூன்று முறை ஆவ்ருத்தி செய்யப்பட்டால் ப்ராஜாபத்யம் என்று சொல்லப்படுகிறது, என்று பொருள்.

ஒரு வேளை புஜிப்பது முதலியதில், கபளத்தின் கணக்கும், கபளத்தின் அளவும் சொல்லப்பட்டுள்ளது,

**ஆபஸ்தம்பரால்:—** இரவில் இருபத்திரண்டு கபளங்கள், பகலில் இருபத்தாறு கபளங்கள், விதிக்கப்பட்டுள்ளன. யாசிக்கப் படாமல் புஜிப்பதில் இருபத்துநான்கு கபளங்கள். பிறகு உபவாஸம் விதிக்கப்பட்டுள்ளது. கோழி முட்டையின் அளவுள்ளது, அல்லது தானுக வாய்க்குள் எப்படி நுழையுமோ அவ்வளவு உள்ளது (ஒரு கபளம்.)

**சதுர்விம்சதிமதத்தில்:—** மற்றொரு ப்ரகாரமாய்க் கணக்குச் சொல்லப்படுகிறது. பகலில் பன்னிரண்டு கபளங்கள். இரவில் பதினைந்து கபளங்களே. யாசிக்கப்படாமல் புஜிப்பதில் பதினாறு கபளங்கள். மூன்று நாள் வாயுவே ஆஹாரம். இவ்விஷயத்தில் அவரவர் சக்தியை அபேக்ஷித்து வ்யவஸ்தையை அறியவும்.

पादकृच्छ्राणां वर्णभेदेन व्यवस्था ॥

आपस्तम्बस्तु चतुर्विधान् पादकृच्छ्रानुक्त्वा तेषां वर्णभेदेन व्यवस्थामाह—

'त्र्यहं निरशनं पादः पादश्चायाचितं त्र्यहम् । सायं त्र्यहं तथा पादः प्रातः पादस्तथा त्र्यहम् ॥ प्रातः पादं चरेच्छूद्रः सायं वैश्यस्य दापयेत् । अयाचितं तु राजन्ये त्रिरात्रं ब्राह्मणे स्मृतम्' इति ॥

अर्धकृच्छ्रं पादोनकृच्छ्रं च ॥

अर्धकृच्छ्रपादोनकृच्छ्रयोरपि स एवाह स एव—

'सायं प्रातर्विनाऽर्धं स्यात् पादोनं नक्तवर्जितम्' इति ॥

### பாத க்ருச்ரங்களுக்கு வர்ண பேதத்தைக்கொண்டு வ்யவஸ்தை.

**ஆபஸ்தம்பரோவெனில்** நான்குவிதமான பாத க்ருச்ரங்களைச் சொல்லி, அவைகளுக்கு வர்ண பேதத்தால் வ்யவஸ்தையைச் சொல்லுகிறார்:— மூன்று நாள் உபவாஸம் ஒரு பாதம். மூன்று நாள் யாசிக்காமல் கிடைத்ததைப் புஜிப்பது ஒரு பாதம். மூன்று நாள் இரவில் மட்டில் புஜிப்பது ஒரு பாதம். மூன்று நாள் பகலில் மட்டில் புஜிப்பது ஒரு பாதம். பகலில் புஜிப்பது என்ற பாத க்ருச்ரத்தைச் சூத்ரன் அனுஷ்டிக்கவேண்டும். இரவில் மட்டில் புஜிப்பது என்ற பாத க்ருச்ரத்தை வைச்யன் அனுஷ்டிக்க வேண்டும். யாசிக்காமல் கிடைத்ததைப் புஜிப்பது என்ற பாத க்ருச்ரத்தை க்ஷத்ரியன் அனுஷ்டிக்கவேண்டும். மூன்று நாள் உபவாஸம் என்ற பாத க்ருச்ரம் ப்ராம்ஹணனுக்கு விதிக்கப் பட்டுள்ளது.

### பாதி க்ருச்ரமும், முக்கால் க்ருச்ரமும்.

**ஆபஸ்தம்பர்:—** பகலிலும் இரவிலும் புஜிப்பதென்பதை விட்டால் மற்ற இரண்டையும் அனுஷ்டித்தால் அது அர்த்த க்ருச்ரம். இரவில் புஜிப்பதென்பதைத் தள்ளினால் அது முக்கால் க்ருச்ரம்.

யம:— 'அயாசிதோபவாஸத்ர்யஹாப்யாம் அநுஷ்டிதேந அர்த்தக்ருச்ச்ரோ பவதி। நக்தத்ர்யவர்ஜிதத்ர்யஹத்ரயாநுஷ்டாநேந பாதோநக்ருச்ச்ரோ பவதி' இதி ॥

அர்த்தக்ருச்ச்ர: ப்ரகாராந்தரேணாபி தர்ஶித:—

'ஸாயம் ப்ராதஸ்ததைகைகம் திநத்வயமயாசிதம்। திநத்வயம் ச நாஶ்நீயாத் க்ருச்ச்ரார்த்தம் தத்விதீயதே' இதி ॥

யத்து ஜபஹோமாதிபஹ்வங்கஸஹிதம் ப்ராஜாபத்யக்ருச்ச்ரம் கௌதமேநாபிஹிதம்—

'ஹவிஷ்யாந் ப்ராதராஶாந் புக்த்வா திஸ்ரோ ராத்ரீர்நாஶ்நீயாத் அதாபரம் த்ர்யஹம் நக்தம் புஞ்ஜீத அதாபரம் த்ர்யஹம் ந கஞ்சந யாசேத அதாபரம் த்ர்யஹமுபவஸேத்। திஷ்டேதஹநி ராத்ராவாஸீத க்ஷிப்ரகாமோ

இதன் பொருள்:— அயாசிதம், உபவாஸம் இவ்விரண்டையும் மும்மூன்று நாட்கள் அனுஷ்டித்தால் அர்த்த க்ருச்ரமாகிறது. மூன்று நாள் இரவு போஜனம் என்பதைத் தவிர்த்து மற்ற மூன்றையும் மும்மூன்று நாட்கள் அனுஷ்டிப்பதால் முக்கால் க்ருச்ரமாகிறது.

பாதி க்ருச்ரமானது வேறு ப்ரகாரமாயும் சொல்லப்பட்டுள்ளது,

**ஆபஸ்தம்பராலேயே**:— ஒரு நாள் இரவில் மட்டும், ஒரு நாள் பகலில் மட்டும், இரண்டு நாள் யாசிக்காமல் கிடைத்ததை மட்டும் புஜிப்பது, இரண்டு நாள் புஜிக்காமலேயிருப்பது என்பது, அர்த்த க்ருச்ரம் என்று சொல்லப்பட்டுள்ளது.

ஆனால் கௌதமரால் ஜபம் ஹோமம் முதலிய அநேக அங்கங்களுடன் கூடிய ப்ராஜாபத்ய க்ருச்ரம் சொல்லப்பட்டுள்ளது:— அதாவது, மூன்று நாள் பகலில் மட்டில் ஹவிரன்னங்களைப் புஜித்து, அந்த மூன்று இரவிலும் புஜிக்கக்கூடாது. பிறகு மூன்று நாள் இரவில் மட்டில் புஜிக்கவேண்டும். பிறகு மூன்று நாள் ஒருவரையும் யாசிக்கக்கூடாது. பிறகு மூன்று நாள் உபவாஸமிருக்கவேண்டும். பகலில் நிற்கவேண்டும். இரவில் உட்கார்ந்திருக்க

ஸத்யம் வதேத் அநார்யைர் ந ஸம்பாஷேத ரௌரவயௌதாஜயே
நித்யம் ப்ரயுஞ்ஜாநோऽநுஸவநமுதகோபஸ்பர்ஶநம் ஆபோ
ஹிஷ்டேதி திஸ்ருபி: பவித்ரவதீபிர்மார்ஜயீத ஹிரண்யவர்ணா:
ஶுசய: பாவகா இத்யஷ்டாபி:, அதோதகதர்பணம் நமோ ஹமாய மோ
ஹமாய ஸம்ஹமாய துந்வதே தாபஸாய புநர்வஸவே நமோ
மௌஞ்ஜ்யாயோர்ம்யாய ஸௌம்யாய ஶம்யாய ஶிவாய வஸுவிந்தாய
ஸர்வவிந்தாய நமோ நம: பாராய ஸுபாராய மஹாபாராய
பாரயிஷ்ணவே நமோ நமோ ருத்ராய பஶுபதயே மஹதே
தேவாய த்ர்யம்பகாயைகசராயாதிபதயே ஹராய ஶர்வா
யேஶாநாயோக்ராய வஜ்ரிணே க்ருணிநே கபர்திநே நமோ நம:
ஸூர்யாயாதித்யாய நமோ நமோ நீலக்ரீவாய ஶிதிகண்டாய
நமோ நம: க்ருஷ்ணாய பிங்கலாய நமோ நமோ ஜ்யேஷ்டாய ஶ்ரே
ஷ்டாய வ்ருத்தாயேந்த்ராய ஹரிகேஶாயோர்த்வரேதஸே நமோ
நம: ஸத்யாய பாவகாய பாவகவர்ணாய காமாய காமரூபிணே
நமோ நமோ தீப்தாய தீப்தரூபிணே நமோ நமஸ்தீக்ஷ்ணாய தீக்ஷ்ண
ரூபிணே நமோ நம: ஸௌம்யாய ஸுபுருஷாய மஹாபு
ருஷாய மத்யமபுருஷாயோத்தமபுருஷாய ப்ரஹ்மசாரிணே
நமோ நமஶ்சந்த்ரலலாடாய க்ருத்திவாஸஸே நம இதி । ஏததே
வாதித்யோபஸ்தாநம் । ஏதா ஏவாஜ்யாஹுதய: । த்வாதஶரா
த்ரஸ்யாந்தே சரும் ஶ்ரபயித்வைதாப்யோ தேவதாப்யோ
ஜுஹுயாத் । அக்நயே ஸ்வாஹா ஸோமாய ஸ்வாஹாऽக்நீஷோமா

வேண்டும். சீக்ரம் பாப நிவ்ருத்தியை அபேக்ஷிப்பவன். உண்மையே பேசவேண்டும். ஆர்யர் அல்லாதவருடன் ஸம்பாஷிக்கக் கூடாது. ரௌரவம், யௌதாஜயம் என்ற ஸாமங்களைப் ப்ரதி தினமும் கானம் செய்யவேண்டும். மூன்று காலங்களிலும் ஸ்நானம் செய்யவேண்டும். ஆபோஹிஷ்ட என்ற மூன்று ருக்குகளாலும், பவித்ரவதிகளாலும், ஹிரண்யவர்ணா:ஶுசய: என்ற எட்டு ருக்குகளாலும் ப்ரோக்ஷித்துக்கொள்ள வேண்டும். இனி ஜலதர்ப்பணம் சொல்லப்படுகிறது. "நமோ ஹமாய" என்பது முதல் "க்ருத்தி வாஸஸே" என்பது வரையில் உள்ள மந்த்ரங்களால் ஜலதர்ப்பணம் செய்யவும். இவையே ஸூர்யனுக்கு உபஸ்தான மந்த்ரங்கள். இந்த மந்த்ரங்களே ஆஜ்யாஹுதிக்கு மந்த்ரங்கள். பன்னிரண்டு நாட்

𑌭𑍍𑌯𑌾𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌗𑍍𑌨𑌿𑌭𑍍𑌯𑌾𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯 𑌵𑌿𑌶𑍍𑌵𑍇𑌭𑍍𑌯𑍋 𑌦𑍇𑌵𑍇𑌭𑍍𑌯𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌯𑍇𑌽𑌗𑍍𑌨𑌯𑍇 𑌸𑍍𑌵𑌿𑌷𑍍𑌟𑌕𑍃𑌤 𑌇𑌤𑌿 ॥ 𑌤𑌤𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌨𑍍𑌭𑍋𑌜𑌯𑍇𑌤𑍍 𑌇𑌤𑌿 ॥

𑌹𑌵𑌿𑌷𑍍𑌯𑌾𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑍁𑌪𑌵𑌸𑍇𑌦𑌿𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑍇𑌨 𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑍁𑌕𑍍𑌤𑌮𑍍 । 𑌤𑌿𑌷𑍍𑌠𑍇𑌦𑌿𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍇𑌵 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑍇 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌤𑍋𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌕𑌾𑌮𑌃 = 𑌶𑍀𑌘𑍍𑌰𑌂 𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌕𑌾𑌮𑌃, 𑌭𑍋𑌜𑌨𑌾𑌦𑍍𑌯𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌕𑌾𑌲𑍇𑌷𑍍𑌵𑌹𑌨𑌿 𑌤𑌿𑌷𑍍𑌠𑍇𑌤𑍍, 𑌰𑌾𑌤𑍍𑌰𑍌 𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌮𑌾𑌸𑍀𑌨 𑌏𑌵 𑌸𑍇𑌵𑍇𑌤, 𑌏𑌵𑌂 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌵𑌦𑍇𑌦𑌿𑌤𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌙𑍍𑌗𑍇𑌷𑍍𑌵𑌪𑌿 𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌕𑌾𑌮 𑌇𑌤𑍍𑌯𑌧𑌿𑌕𑌾𑌰𑌿𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑌮𑌨𑍁𑌷𑌞𑍍𑌜𑌨𑍀𑌯𑌮𑍍 । 𑌯𑌃 𑌶𑌨𑍈𑌃 𑌶𑌨𑍈𑌃 𑌶𑍁𑌦𑍍𑌧𑍋 𑌭𑌵𑌾𑌮𑍀𑌤𑌿 𑌮𑌨𑍍𑌯𑌤𑍇 𑌤𑌸𑍍𑌯 𑌨𑌾𑌯𑌂 𑌨𑌿𑌯𑌮 𑌇𑌤𑌿 𑌗𑌮𑍍𑌯𑌤𑍇 । 𑌰𑍌𑌰𑌵𑌯𑍌𑌧𑌾𑌜𑌯𑍇 = 𑌸𑌾𑌮𑌨𑍀 । 𑌨𑌮𑍋 𑌹𑌮𑌾𑌯𑍇𑌤𑍍𑌯𑌾𑌦𑌯𑌸𑍍𑌤𑍍𑌰𑌯𑍋𑌦𑌶 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌸𑍍𑌤𑌰𑍍𑌪𑌣𑌸𑍂𑌰𑍍𑌯𑍋𑌪𑌸𑍍𑌥𑌾𑌨𑌾𑌜𑍍𑌯𑌹𑍋𑌮𑍇𑌷𑍁 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌾𑌃 । 𑌅𑌥𑌵𑌾 𑌸𑌮𑍍𑌪𑍍𑌰𑌦𑌾𑌨𑌵𑌿𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌾𑌃 𑌷𑌟𑍍𑌪𑌞𑍍𑌚𑌾𑌶𑌨𑍍𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌾 𑌇𑌤𑌿 ॥

---

களுக்குப் பிறகு சருவைப் பாகம் செய்து, அக்னயே ஸ்வாஹா என்பது முதல் அக்நயே ஸ்விஷ்டக்ருதே என்பது வரையில் உள்ள தேவதைகளுக்கு ஹோமம் செய்யவும். பிறகு ப்ராம்ஹணர்களுக்குப் போஜனம் செய்விக்கவும்.

"ஹவிஷ்யான்" என்பது முதல் "உபவஸேத்" என்பது வரையில் உள்ள ஸூத்ரத்தால் ப்ராஜாபத்ய க்ருச்ரஸ்வரூபம் சொல்லப்பட்டுள்ளது. "திஷ்டேத்" என்பது முதலியதால் அந்த க்ருச்ரத்திலேயே செய்யவேண்டிய ப்ரகாரம் சொல்லப்பட்டுள்ளது. க்ஷிப்ரகாம: = சீக்ரம் சுத்தியை விரும்புகிறவன். போஜனம் முதலியதற்கு விரோதமில்லாத காலங்களில் பகலில் நிற்கவேண்டும். இரவில் நித்ரையையும் உட்கார்ந்தே செய்யவேண்டும். இவ்விதம் உண்மை பேசவேண்டும் என்பது முதலிய அங்கங்களிலும் சீக்ரம் சுத்தியை விரும்பியவன் என்ற விசேஷணத்தைச் சேர்க்கவேண்டும். இதனால் எவன் மெல்ல மெல்லச் சுத்தனாகிறேன் என்று எண்ணுகிறானோ அவனுக்கு இந்த நியமம் இல்லை, என்று எண்ணப்படுகிறது. ரௌரவம், யௌதாஜயம் = ஸாமங்கள். "நமோஹமாய" என்பது முதல் பதின்மூன்று மந்த்ரங்கள், தர்ப்பணம், ஸூர்யோபஸ்தானம், ஆஜ்யஹோமம் இவைகளில் என்று அறியவேண்டும். அல்லது, நான்காவது வேற்றுமையை முடிவில் உள்ள ஐம்பத்தாறு மந்த்ரங்கள் என்று கணக்கு.

𑌏𑌤𑌦𑍍𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌹𑌸𑌾𑌧𑍍𑌯𑌜𑌪𑌹𑍋𑌮𑌾𑌦𑍍𑌯𑌙𑍍𑌗𑌰𑌹𑌿𑌤 𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌦𑍍𑌵𑌯𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌵𑍇𑌦𑌿𑌤𑌵𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌮𑌾𑌧𑌵𑍀𑌯𑍇 ॥

## 𑌅𑌤𑌿𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

𑌅𑌤𑌿𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌸𑍍𑌯 𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑌾𑌹 𑌮𑌨𑍁𑌃—

'𑌏𑌕𑍈𑌕𑌂 𑌗𑍍𑌰𑌾𑌸𑌮𑌶𑍍𑌨𑍀𑌯𑌾𑌤𑍍𑌤𑍍𑌰𑍍𑌯𑌹𑌾𑌣𑌿 𑌤𑍍𑌰𑍀𑌣𑌿 𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑌤𑍍 । 𑌤𑍍𑌰𑍍𑌯𑌹𑌂 𑌚𑍋𑌪𑌵𑌸𑍇𑌦𑌨𑍍𑌤𑍍𑌯𑌮𑌤𑌿𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌂 𑌚𑌰𑌨𑍍 𑌦𑍍𑌵𑌿𑌜𑌃' 𑌇𑌤𑌿 ॥ 𑌏𑌕𑌭𑌕𑍍𑌤𑌨𑌕𑍍𑌤𑌾𑌯𑌾𑌚𑌿𑌤𑌵𑌿𑌷𑌯𑍇𑌷𑍁 𑌨𑌵𑌸𑍍𑌵𑍇𑌕𑍈𑌕𑌗𑍍𑌰𑌾𑌸𑌮𑌶𑍍𑌨𑍀𑌯𑌾𑌤𑍍 𑌤𑍍𑌰𑍍𑌯𑌹𑌂 𑌚𑍋𑌪𑌵𑌸𑍇𑌤𑍍 । 𑌅𑌯𑌮𑌤𑌿𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑍋 𑌭𑌵𑌤𑍀𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥

𑌯𑌮𑌃—

'𑌏𑌕𑍈𑌕𑌂 𑌪𑌿𑌣𑍍𑌡𑌮𑌶𑍍𑌨𑍀𑌯𑌾𑌤𑍍𑌤𑍍𑌰𑍍𑌯𑌹𑌂 𑌕𑌾𑌲𑍇 𑌤𑍍𑌰𑍍𑌯𑌹𑌂 𑌨𑌿𑌶𑌿 । 𑌅𑌯𑌾𑌚𑌿𑌤𑌂 𑌤𑍍𑌰𑍍𑌯𑌹𑌂 𑌚𑍈𑌵 𑌵𑌾𑌯𑍁𑌭𑌕𑍍𑌷𑌃 𑌪𑌰𑌂 𑌤𑍍𑌰𑍍𑌯𑌹𑌮𑍍 ॥ 𑌅𑌤𑌿𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌂 𑌚𑌰𑍇𑌦𑍇𑌤𑌤𑍍 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌂 𑌪𑌾𑌪𑌨𑌾𑌶𑌨𑌮𑍍' 𑌇𑌤𑌿 ॥

---

இது, மன்வாதிகள் சொல்லியதும், ஜபஹோமம் முதலிய அங்கங்கள் இல்லாததுமாகிய இரண்டுவித ப்ராஜாபத்ய க்ருச்ரங்களின் ஸ்தானத்தில் அறியத்தகுந்தது, என்று மாதவீயத்தில் உள்ளது.

## அதிக்ருச்ர லக்ஷணம்.

**மனு:**— அதிக்ருச்ரத்தை யனுஷ்டிக்கும் ப்ராம்ஹணன் மூன்று நாட்களில் பகலில் மட்டில் ஒவ்வொரு கபளத்தைப் புஜிக்க வேண்டும். மறு மூன்று நாளில் இரவில் மட்டில் ஒவ்வொரு கபளத்தையும், மறு மூன்று நாளில் யாசிக்காமல் கிடைத்தால் ஒவ்வொரு கபளத்தையும் புஜிக்கவேண்டும். மறு மூன்று நாளில் உபவாஸமிருக்கவேண்டும்.

**யமன்:**— மூன்று நாள் பகலில் ஒவ்வொரு கபளத்தைப் புஜிக்க வேண்டும். மூன்று நாள் இரவில் ஒவ்வொரு கபளத்தைப் புஜிக்க வேண்டும். மூன்று நாள் யாசிக்காமல் கிடைத்தால் ஒவ்வொரு கபளத்தைப் புஜிக்கவேண்டும். பிறகு மூன்று நாள் வாயுவை மட்டில் பக்ஷிப்பவனாயிருக்கவேண்டும். இவ்விதம் பரிசுத்தமாயும் பாபத்தைப் போக்குவதுமாகிய அதிக்ருச்ரத்தை யனுஷ்டிக்க வேண்டும்.

போதாயநோऽபி —

"ஏகைகம் க்ராஸமச்நீயாத் பூர்வோக்தேந த்ர்யஹம் த்ர்யஹம் । வாயுபக்ஷஸ்த்ர்யஹம் சாந்யத் அதிக்ருச்ச்ர: ஸ பாவந:" இதி ॥

யத்து யாஜ்ஞவல்க்யேநோக்தம் —

"அயமேவாதிக்ருச்ச்ரஸ்ஸ்யாத் பாணிபூராந்நபோஜந:" இதி ॥

அயமேவ ப்ராஜாபத்யக்ருச்ச்ர: ஸகலோக்தநக்தாயாசிதவிசேஷேஷு நவஸு பாணிபூராந்நபோஜநயுக்தோऽதிக்ருச்ச்ரோ பவதீத்யர்த்த: ॥

ததா ச பராசர: —

"நவாஹமதிக்ருச்ச்ரஸ்ஸ்யாத் பாணிபூராந்நபோஜந: । த்ரிராத்ரமுபவாஸீ ஸ்யாத் அதிக்ருச்ச்ரஸ்ஸ உச்யதே" இதி ॥

தச்ச தச்சக்தவிஷயம், பாணிபூராந்நஸ்ய க்ராஸபரிமிதாந்நாதிகபரிமாணகத்வாத் ॥

---

**போதாயனரும்:—** முன் சொல்லியபடி ஒவ்வொரு மும்மூன்று நாட்களிலும் ஒவ்வொரு கபளத்தைப் புஜிக்கவேண்டும். மூன்று நாள் வாயுவை மட்டில் புஜிக்கவேண்டும். இது பாபத்தைப் போக்கும் அதிக்ருச்ரம். ஆனல்,

**யாஜ்ஞவல்க்யரால்** சொல்லப்பட்ட "இதுவே அதிக்ருச்ரமாகும். கை நிறைந்த அன்னத்தைப் புஜிப்பதை யுடையது" என்ற விதி, இந்த ப்ராஜாபத்ய க்ருச்ரமே முதலில் உள்ள பகலில் மட்டும், இரவில் மட்டும் யாசிக்காமல் கிடைத்ததை மட்டும் என்று சொல்லிய ஒன்பது நாட்களிலும் கை நிறைந்துள்ள அன்னத்தைப் புஜிப்பதானுல் அதிக்ருச்ரம் என்றாகிறது, என்பது பொருள். அவ்விதமே,

**பராசரர்:—** ஒன்பது நாள் கை நிறைவுள்ள அன்னத்தைப் புஜிப்பதென்பது அதிக்ருச்ரமாகும். மூன்று நாள் உபவாஸமுள்ளவனு யிருக்கவேண்டும். அது அதிக்ருச்ர மெனப்படுகிறது.

இந்த வசனம் சக்தியற்றவனைப்பற்றியது. கை நிறைந்துள்ள அன்னம் கபள அன்னத்திற்குமேல் அதிக அளவுள்ளதாகையால்.

## 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌾𑌤𑌿𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌾𑌤𑌿𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌸𑍍𑌯 𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑌾𑌹 𑌬𑍋𑌧𑌾𑌯𑌨𑌃—

'𑌅𑌬𑍍𑌭𑌕𑍍𑌷𑌸𑍍𑌤𑍍𑌰𑍍𑌯𑌹𑌮𑌾𑌨𑍇𑌤𑌾𑌨𑍁 𑌵𑌾𑌯𑍁𑌭𑌕𑍍𑌷𑌸𑍍𑌤𑌤𑌃 𑌪𑌰𑌮𑍍 । 𑌏𑌷 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌾𑌤𑌿𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌸𑍍𑌤𑍁 𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑌶𑍍𑌶𑍋𑌽𑌤𑌿𑌪𑌾𑌵𑌨𑌃' 𑌇𑌤𑌿 ॥

𑌏𑌕𑌭𑌕𑍍𑌤𑌨𑌕𑍍𑌤𑌾𑌯𑌾𑌚𑌿𑌤𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌣 𑌯𑍇 𑌭𑍋𑌜𑌨𑌕𑌾𑌲𑌾𑌃, 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍇𑌵𑌕𑌾𑌲𑍇 𑌕𑍇𑌵𑌲𑌮𑍁𑌦𑌕𑍇𑌨𑍈𑌵 𑌵𑌰𑍍𑌤𑌨𑌂 𑌤𑍍𑌰𑌿𑌰𑌾𑌤𑍍𑌰𑍋𑌪𑌵𑌾𑌸𑌶𑍍𑌚 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌾𑌤𑌿𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥

𑌯𑌤𑍍𑌤𑍁 𑌏𑌕𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌦𑌿𑌨𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌕𑍍𑌷𑍀𑌰𑍇𑌣 𑌵𑌰𑍍𑌤𑌨𑌮𑍁𑌕𑍍𑌤𑌂 𑌯𑌾𑌜𑍍𑌞𑌵𑌲𑍍𑌕𑍍𑌯𑍇𑌨—

'𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌾𑌤𑌿𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌃 𑌪𑌯𑌸𑌾 𑌦𑌿𑌵𑌸𑌾𑌨𑍇𑌕𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌮𑍍' 𑌇𑌤𑌿, 𑌤𑌦𑌶𑌕𑍍𑌤𑌵𑌿𑌷𑌯𑌮𑍍 ॥

## 𑌤𑌪𑍍𑌤𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

𑌤𑌪𑍍𑌤𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑌾𑌹 𑌮𑌨𑍁𑌃—

'𑌤𑌪𑍍𑌤𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌂 𑌚𑌰𑌨𑍍𑌵𑌿𑌪𑍍𑌰𑌃 𑌜𑌲𑌕𑍍𑌷𑍀𑌰𑌘𑍃𑌤𑌾𑌨𑌿𑌲𑌾𑌨𑍍 । 𑌪𑍍𑌰𑌤𑌿𑌤𑍍𑌰𑍍𑌯𑌹𑌂 𑌪𑌿𑌬𑍇𑌦𑍁𑌷𑍍𑌣𑌾𑌨𑍍𑌸𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌾𑌯𑍀 𑌸𑌮𑌾𑌹𑌿𑌤𑌃' 𑌇𑌤𑌿 ॥

---

### க்ருச்ராதி க்ருச்ரத்தின் லக்ஷணம்.

**போதாயனர்:**-மூன்று மூன்று நாட்களில் ஜலத்தைப் பக்ஷிப்பவனையும், பிறகு மூன்று நாட்களில் வாயுவை மட்டில் பக்ஷிப்பவனையும் இருக்கவேண்டும். இது மிகப் பரிசுத்திகரமான க்ருச்ராதி க்ருச்ரமென்று அறியப்படவேண்டும்.

பகலில் மட்டில், இரவில் மட்டில், யாசிக்காமல் கிடைத்ததை மட்டில் புஜிப்பது என்ற மூன்று காலங்களிலும் ஜலத்தை மட்டில் பருகியிருப்பதுடன் மூன்று நாள் உபவாஸமுமிருப்பது க்ருச்ராதி க்ருச்ரம், என்பது பொருள்.

ஆனால், இருபத்தொரு நாள் வரையில் பாலே மட்டில் பருகியிருப்பது என்று யாஜ்ஞவல்க்யரால் சொல்லப்பட்டுள்ளது:—

"பாலே மட்டில் இருபத்தொரு நாள் பருகியிருப்பது க்ருச்ராதி க்ருச்ரம்" என்பது அசக்தனைப்பற்றியது.

### தப்த க்ருச்ர லக்ஷணம்.

**மனு:**— தப்த க்ருச்ரத்தை யனுஷ்டிக்கும் ப்ராம்ஹணன்,

बोधायनः—

'त्र्यहं त्र्यहं पिबेदुष्णं पयस्सर्पिः कुशोदकम्। वायुभक्षस्त्र्यहं चान्यत्तप्तकृच्छ्रस्स उच्यते' इति॥

सान्तपनकृच्छ्रलक्षणम्॥

---

सान्तपनकृच्छ्रस्य लक्षणमाह मनुबोधायनौ—

'गोमूत्रं गोमयं क्षीरं दधि सर्पिः कुशोदकम्। एकरात्रोपवासश्च कृच्छ्रं सान्तपनं स्मृतम्' इति॥

एतस्य द्विरात्रानुष्ठानमाह याज्ञवल्क्यः—

'गोमूत्रं गोमयं क्षीरं दधि सर्पिः कुशोदकम्। जग्ध्वा परेऽह्न्युपवसेत्कृच्छ्रं सान्तपनं चरन्' इति॥

---

ஒவ்வொரு மும்மூன்று நாட்களிலும் முறையே ஜலம், பால், நெய், காற்று இவைகளை உஷ்ணமாய்ப் பருகவேண்டும். ப்ரதிதினம் ஒரு முறை ஸ்நானம் செய்பவனாயும் நியமமுடையவனாயுமிருக்க வேண்டும்.

**போதாயனர்:—** ஒவ்வொரு மும்மூன்று நாட்களிலும் உஷ்ணமான பால், நெய், தர்ப்பை ஜலம் இவைகளைப் பருகவேண்டும். மூன்று நாள் வாயு பக்ஷனாயிருக்கவேண்டும். அது தப்த க்ருச்ர மெனப்படுகிறது.

## ஸாந்தபன க்ருச்ர லக்ஷணம்.

**மனு, போதாயனர்:—** கோமூத்ரம், கோமயம், பால், தயிர், நெய், தர்ப்பை ஜலம் இவைகளை முறையே ஒவ்வொரு நாளிலும் பருகி ஏழாவது நாளில் உபவாஸமிருப்பது ஸாந்தபன க்ருச்ர மெனப்பட்டுள்ளது.

இதற்கே இரண்டு நாள் அனுஷ்டானத்தைச் சொல்லுகிறார்,

**யாஜ்ஞவல்க்யர்:—** ஸாந்தபன க்ருச்ரத்தை யனுஷ்டிப்பவன் கோமூத்ரம், கோமயம், பால், தயிர், நெய், தர்ப்பையின் ஜலம் இவைகளை ஒரு நாளில் பருகி, மறுநாளில் உபவாஸமிருக்க வேண்டும்.

## 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌮𑌹𑌾𑌸𑌾𑌨𑍍𑌤𑌪𑌨𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

𑌮𑌹𑌾𑌸𑌾𑌨𑍍𑌤𑌪𑌨𑌂 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌮𑍍, 𑌸𑌪𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌰𑌂 𑌪𑌞𑍍𑌚𑌦𑌶𑌰𑌾𑌤𑍍𑌰𑌂 𑌏𑌕𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌰𑌾𑌤𑍍𑌰𑌂 𑌚𑍇𑌤𑌿 ॥

𑌤𑌤𑍍𑌰 𑌸𑌪𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑌾𑌹 𑌯𑌾𑌜𑍍𑌞𑌵𑌲𑍍𑌕𑍍𑌯𑌃—

'𑌪𑍃𑌥𑌕𑍍 𑌸𑌾𑌨𑍍𑌤𑌪𑌨𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑍈𑌷𑍍𑌷𑌡𑌹𑌸𑍍𑌸𑍋𑌪𑌵𑌾𑌸𑌕𑌃 । 𑌸𑌪𑍍𑌤𑌾𑌹𑍇𑌨 𑌤𑍁 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑍋𑌽𑌯𑌂 𑌮𑌹𑌾𑌸𑌾𑌨𑍍𑌤𑌪𑌨𑌸𑍍𑌸𑍍𑌮𑍃𑌤𑌃' 𑌇𑌤𑌿 ॥

𑌯𑌮𑍇𑌨 𑌪𑌞𑍍𑌚𑌦𑌶𑌾𑌹𑌸𑌂𑌪𑌾𑌦𑍍𑌯𑍋 𑌮𑌹𑌾𑌸𑌾𑌨𑍍𑌤𑌪𑌨𑍋𑌽𑌭𑌿𑌹𑌿𑌤𑌃—

'𑌤𑍍𑌰𑍍𑌯𑌹𑌂 𑌪𑌿𑌬𑍇𑌤𑍍𑌤𑍁 𑌗𑍋𑌮𑍂𑌤𑍍𑌰𑌂 𑌤𑍍𑌰𑍍𑌯𑌹𑌂 𑌵𑍈 𑌗𑍋𑌮𑌯𑌂 𑌪𑌿𑌬𑍇𑌤𑍍 । 𑌤𑍍𑌰𑍍𑌯𑌹𑌂 𑌦𑌧𑌿 𑌤𑍍𑌰𑍍𑌯𑌹𑌂 𑌕𑍍𑌷𑍀𑌰𑌂 𑌤𑍍𑌰𑍍𑌯𑌹𑌂 𑌸𑌰𑍍𑌪𑌿𑌸𑍍𑌤𑌤𑌶𑍍𑌶𑍁𑌚𑌿𑌃 ॥ 𑌮𑌹𑌾𑌸𑌾𑌨𑍍𑌤𑌪𑌨𑌂 𑌹𑍍𑌯𑍇𑌤𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑌪𑍍𑌰𑌣𑌾𑌶𑌨𑌮𑍍' 𑌇𑌤𑌿 ॥

---

## மூன்றுவிதமான மஹாஸாந்தபன க்ருச்ரத்தின் லக்ஷணம்.

மஹாஸாந்தபன க்ருச்ரம் என்பது மூன்றுவிதமாகும்— ஏழு நாள் உள்ளது, பதினைந்து நாள் உள்ளது, இருபத்தொருநாள் உள்ளது என்று. அவைகளுள், ஏழு நாள் உள்ள க்ருச்ரத்தின் ஸ்வரூபத்தைச் சொல்லுகிறார்,

**யாஜ்ஞவல்க்யர்**:- ஸாந்தபன க்ருச்ரத்தில் சொல்லிய த்ரவ்யங்களைத் தனித்தனி ஆறு நாட்களில் உட்கொண்டு, ஏழாவது நாள் உபவாஸமிருப்பது, என்ற இது மஹாஸாந்தபனம் என்கிற க்ருச்ரமாகும்.

**யமனால்** பதினைந்து நாட்களால் செய்யக்கூடிய மஹாஸாந்தபன க்ருச்ரம் சொல்லப்பட்டுள்ளது:- மூன்று நாள் கோமூத்ரத்தையும், மூன்று நாள் கோமயத்தையும், மூன்று நாள் தயிரையும், மூன்று நாள் பாலையும், மூன்று நாள் நெய்யையும் பருகினால் பிறகு சுத்தனாகிறான். இது எல்லாப் பாபங்களையும் போக்கும் மஹாஸாந்தபனமாகும்.

𑌜𑌾𑌬𑌾𑌲𑍇𑌨 𑌤𑍁 𑌏𑌕𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌰𑌾𑌤𑍍𑌰𑌨𑌿𑌰𑍍𑌵𑌰𑍍𑌤𑍍𑌯𑌂 𑌮𑌹𑌾𑌸𑌾𑌨𑍍𑌤𑌪𑌨 𑌉𑌕𑍍𑌤𑌃 —

'𑌷𑌣𑍍𑌣𑌾𑌮𑍇𑌕𑍈𑌕𑌮𑍇𑌤𑍇𑌷𑌾𑌂 𑌤𑍍𑌰𑌿𑌰𑌾𑌤𑍍𑌰𑌮𑍁𑌪𑌯𑍋𑌜𑌯𑍇𑌤𑍍 | 𑌤𑍍𑌰𑍍𑌯𑌹𑌂𑌚𑍋𑌪𑌵𑌸𑍇𑌦𑌨𑍍𑌤𑍍𑌯𑌂 𑌮𑌹𑌾𑌸𑌾𑌨𑍍𑌤𑌪𑌨𑌂 𑌵𑌿𑌦𑍁𑌃' 𑌇𑌤𑌿 || 𑌏𑌤𑌤𑍍𑌤𑍍𑌰𑌯𑌂 𑌪𑌾𑌪𑌤𑌾𑌰𑌤𑌮𑍍𑌯𑌵𑌿𑌷𑌯𑌂 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌮𑍍 ||

𑌪𑌰𑌾𑌕𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ||

𑌪𑌰𑌾𑌕𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑌾𑌹 𑌮𑌨𑍁𑌃 —

'𑌯𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑍋𑌽𑌪𑍍𑌰𑌮𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌹𑌮𑌭𑍋𑌜𑌨𑌮𑍍 | 𑌪𑌰𑌾𑌕𑍋 𑌨𑌾𑌮 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑍋𑌽𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑌾𑌪𑌨𑍋𑌦𑌨𑌃' 𑌇𑌤𑌿 ||

𑌯𑌮𑍋𑌽𑌪𑌿 —

'𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌹𑌂 𑌨𑌿𑌰𑌾𑌹𑌾𑌰𑍋 𑌯𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌸𑌂𑌶𑌿𑌤𑌵𑍍𑌰𑌤𑌃 | 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌃 𑌪𑌰𑌾𑌕 𑌨𑌾𑌮𑍈𑌷 𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑌪𑍍𑌰𑌣𑌾𑌶𑌨𑌃' 𑌇𑌤𑌿 ||

𑌪𑌰𑍍𑌣𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ||

𑌪𑌰𑍍𑌣𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑌾𑌹 𑌯𑌾𑌜𑍍𑌞𑌵𑌲𑍍𑌕𑍍𑌯𑌃 —

'𑌪𑌰𑍍𑌣𑍋𑌦𑍁𑌮𑍍𑌬𑌰𑌰𑌾𑌜𑍀𑌵𑌬𑌿𑌲𑍍𑌵𑌪𑌤𑍍𑌰𑌕𑍁𑌶𑍋𑌦𑌕𑍈𑌃 |

---

**ஜாபாலரால்** இருபத்தொரு நாட்களால் முடிக்கக்கூடிய மஹாஸாந்தபனம் சொல்லப்பட்டுள்ளது:— முன் சொல்லிய ஆறு த்ரவ்யங்களையும் மும்மூன்று நாட்களில் முறையே உபயோகிக்க வேண்டும். கடைசியில் மூன்று நாள் உபவாஸமிருக்கவேண்டும். இது மஹாஸாந்தபனம் என்கின்றனர். இம்மூன்றும் பாபத்தின் தாரதம்யத்தை அபேக்ஷித்துள்ளதென்றறியவும்.

### பராக க்ருச்ர லக்ஷணம்.

**மனு:**— ஜிதேந்த்ரியனாய், கவனமுள்ளவனாய் இருப்பவன் பன்னிரண்டுநாள் உபவாஸம் இருப்பது எல்லாப் பாபங்களையும் போக்கும் பராகம் எனும் க்ருச்ரமாம்.

**யமனும்:**— ஜிதேந்த்ரியனாய், நல்ல வ்ரதமுடையவனாய் பன்னிரண்டு நாள் ஆஹாரம் இல்லாமலிருந்தால் இது எல்லாப் பாபங்களையும் போக்கும் பராகம் எனும் க்ருச்ரம்.

### பர்ண க்ருச்ர லக்ஷணம்.

**யாஜ்ஞவல்க்யர்:**— புரசு, அத்தி, தாமரை, பில்வம் இவை

𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍇𑌕𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌹𑌂 𑌪𑍀𑌤𑍈𑌃 𑌪𑌰𑍍𑌣𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰 𑌉𑌦𑌾𑌹𑍃𑌤𑌃' 𑌇𑌤𑌿 ॥ 𑌪𑌲𑌾𑌶𑍋𑌦𑍁𑌮𑍍𑌬𑌰𑌾𑌰𑌵𑌿𑌨𑍍𑌦𑌬𑌿𑌲𑍍𑌵𑌪𑌰𑍍𑌣𑌾𑌨𑌾𑌮𑍇𑌕𑍈𑌕𑍇𑌨 𑌕𑍍𑌵𑌥𑌿𑌤𑍋𑌦𑌕𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌹𑌂 𑌪𑌿𑌬𑍇𑌤𑍍 । 𑌕𑍁𑌶𑍋𑌦𑌕𑌂 𑌪𑌞𑍍𑌚𑌮𑍇𑌽𑌹𑌨𑍀𑌤𑌿 𑌪𑌞𑍍𑌚𑌾𑌹𑌸𑌾𑌧𑍍𑌯𑌃 𑌪𑌰𑍍𑌣𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌃 ॥

𑌪𑌰𑍍𑌣𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌸𑍍𑌯 𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌨𑍍𑌤𑌰𑌮𑌾𑌹 𑌯𑌮𑌃—

'𑌏𑌤𑌾𑌨𑍍𑌯𑍇𑌵 𑌸𑌮𑌸𑍍𑌤𑌾𑌨𑌿 𑌤𑍍𑌰𑌿𑌰𑌾𑌤𑍍𑌰𑍋𑌪𑍋𑌷𑌿𑌤𑌃 𑌶𑍁𑌚𑌿𑌃 । 𑌕𑍍𑌵𑌾𑌥𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌪𑌿𑌬𑍇𑌦𑌦𑍍𑌭𑌿𑌃 𑌪𑌰𑍍𑌣𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌸𑍍𑌯 𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍' 𑌇𑌤𑌿 ॥ 𑌪𑌲𑌾𑌶𑌾𑌦𑌿𑌪𑌤𑍍𑌰𑌾𑌣𑍍𑌯𑍇𑌕𑍀𑌕𑍃𑌤𑍍𑌯𑌾𑌮𑍍𑌭𑌸𑌾 𑌕𑍍𑌵𑌾𑌥𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌤𑍍𑌰𑌿𑌰𑌾𑌤𑍍𑌰𑍋𑌪𑌵𑌾𑌸𑌾𑌨𑍍𑌤𑍇 𑌕𑍍𑌵𑌥𑌿𑌤𑌂 𑌤𑌤𑍍 𑌪𑌿𑌬𑍇𑌤𑍍 । 𑌅𑌯𑌂 𑌪𑌰𑍍𑌣𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑍋 𑌭𑌵𑌤𑍀𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥

𑌫𑌲𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌾𑌦𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

---

𑌫𑌲𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑌾𑌹 𑌮𑌾𑌰𑍍𑌕𑌣𑍍𑌡𑍇𑌯𑌃—

'𑌫𑌲𑍈𑌰𑍍𑌮𑌾𑌸𑍇𑌨 𑌕𑌥𑌿𑌤𑌃 𑌫𑌲𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑍋 𑌮𑌨𑍀𑌷𑌿𑌭𑌿𑌃 ।

---

களின் இலைகளைத் தனித்தனியே ஜலத்துடன் காய்ச்சி, அந்த ஜலத்தை மட்டில் முறையே நான்கு நாட்களில் ஒவ்வொரு நாளிலும் பருகி ஐந்தாவது நாளில் தர்ப்பத்தின் ஜலத்தைப் பருகியிருப்பது ஐந்து நாட்களில் செய்யக்கூடிய பர்ண க்ருச்ரமெனப்படும்.

இதற்கே வேறொரு லக்ஷணத்தைச் சொல்லுகிறார்,

**யமன்:—** இந்த எல்லா இலைகளையும் சேர்த்துக் காய்ச்சப்பட்ட ஜலத்தை மூன்று நாள் உபவாஸத்திற்குப் பிறகு ஒரு நாளில் பருக வேண்டியது. இது பர்ண க்ருச்ரத்தின் லக்ஷணம். பலாசம் முதலிய இலைகளைச் சேர்த்து ஜலத்தால் காய்ச்சி, மூன்று நாள் உபவாஸத்தின் முடிவில், காய்ச்சின ஜலத்தைப் பருகவேண்டும். இது பர்ண க்ருச்ரமாக ஆகும் என்பது பொருள்.

## பல க்ருச்ரம் முதலியதின் லக்ஷணம்.

பல க்ருச்ரம் முதலியதின் ஸ்வரூபத்தைச் சொல்லுகிறார்,

**மார்க்கண்டேயர்:—** ஒரு மாஸம் முழுவதும் பழங்களால் இருப்பது வித்வான்களால் பல க்ருச்ரம் எனப்படுகிறது. பில்வப்

ஸ்ரீக்ருச்ச்ர: ஸ்ரீபலை: ப்ரோக்த: பத்மாக்ஷைரபரஸ்ததா || ஆமலகைரேவம் ஸ்ரீக்ருச்ச்ர: பர: ஸ்ம்ருத: | பத்ரைஸ்து பத்ரக்ருச்ச்ர: புஷ்பைஸ்ச க்ருச்ச்ர உச்யதே || மூலக்ருச்ச்ர: ஸ்ம்ருதோ மூலைஸ்தோயக்ருச்ச்ரோ ஜலேந து' இதி ||

யதா பில்வாதிபலாந்யம்பஸா க்வாதயித்வா மாஸமேகம் தத³ஹ: பிபதி, ததா பலக்ருச்ச்ரோ பவதி | யதா பில்வபத்மாக்ஷாமலகாநாமந்யதமஸ்ய க்வாதம் க்ருத்வா மாஸமேகம் பிபேத், ததா ஸ்ரீக்ருச்ச்ரோ பவதி | யதா தேஷாம் பத்ரபுஷ்பமூலாநாம் க்வாதம் பிபேத் ததா பத்ரபுஷ்பமூலக்ருச்ச்ராணி பவந்தி இத்யர்த: ||

வாருணஸ்த்ரீஸௌம்யக்ருச்ச்ரலக்ஷணம் ||

---

வாருணஸ்த்ரீக்ருச்ச்ரயோர்லக்ஷணமாஹ யம:—

ப்ரஹ்மசாரீ ஜிதக்ரோதோ மாஸேநார்தகம்ஸஸக்தூந் |

---

பழங்களால் இருப்பது ஸ்ரீ க்ருச்ரம் எனப்படுகிறது. தாமரை விதைகளால் இருப்பது பத்மாக்ஷ க்ருச்ரம். நெல்லிக்கனிகளால் இவ்விதம் ஒரு மாஸம் இருப்பது சிறந்த ஸ்ரீ க்ருச்ரம் எனப்படுகிறது. இலைகளால் இருப்பது பத்ர க்ருச்ரம். புஷ்பங்களால் இருப்பது புஷ்ப க்ருச்ரம். வேர்களால் இருப்பது மூல க்ருச்ரம். ஜலத்தால் இருப்பது தோய க்ருச்ரம்.

எப்பொழுது பில்வம் முதலியதின் பழங்களை ஜலத்துடன் காய்ச்சி ஒரு மாஸம் முழுவதும் அந்த ஜலத்தைக் குடிக்கின்றானோ, அப்பொழுது பல க்ருச்ரம் எனப்படுகிறது. எப்பொழுது பில்வம், தாமரை விதை, நெல்லிக்கனி இவைகளுள் ஒன்றை ஜலத்துடன் காய்ச்சி ஒரு மாஸம் முழுவதும் அந்த ஜலத்தைப் பருகுகின்றானோ அப்பொழுது அது ஸ்ரீ க்ருச்ரம் எனப்படுகிறது. எப்பொழுது இவைகளின் இலை, புஷ்பம், வேர் இவைகளுள் ஒன்றைத் தனித்தனியே ஜலத்தில் காய்ச்சி அந்த ஜலத்தைப் பருகுகிறானோ அப்பொழுது அது முறையே பத்ர க்ருச்ரம், புஷ்ப க்ருச்ரம், மூல க்ருச்ரம் என்றாகின்றன, என்பது பொருள்.

**வாருண, ஸ்த்ரீ, ஸௌம்ய க்ருச்ரங்களின் லக்ஷணம்.**

**யமன்:—** ப்ரம்ஹசர்ய வ்ரதமுடையவனாயும், கோபத்தை

𑌪𑍀𑌤𑍍𑌵𑌾 𑌨𑌿𑌯𑌤𑌾𑌹𑌾𑌰𑌃 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌂 𑌵𑌾𑌰𑍁𑌣𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ 𑌤𑍍𑌰𑍍𑌯𑌹𑌂 𑌪𑌿𑌬𑍇𑌤𑍍𑌤𑍁 𑌗𑍋𑌮𑍂𑌤𑍍𑌰𑌂 𑌤𑍍𑌰𑍍𑌯𑌹𑌂 𑌵𑍈 𑌗𑍋𑌮𑌯𑌂 𑌪𑌿𑌬𑍇𑌤𑍍 । 𑌤𑍍𑌰𑍍𑌯𑌹𑌂 𑌵𑍈 𑌯𑌾𑌵𑌕𑍇𑌨𑍈𑌵 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌂 𑌹𑍍𑌯𑍇𑌤𑌦𑍁𑌚𑍍𑌯𑌤𑍇' 𑌇𑌤𑌿 ॥

𑌸𑍌𑌮𑍍𑌯𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑌾𑌹 𑌯𑌾𑌜𑍍𑌞𑌵𑌲𑍍𑌕𑍍𑌯𑌃—

'𑌪𑌿𑌣𑍍𑌯𑌾𑌕𑌾𑌚𑌾𑌮𑌤𑌕𑍍𑌰𑌾𑌮𑍍𑌬𑍁 𑌸𑌕𑍍𑌤𑍂𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌵𑌾𑌸𑌰𑌮𑍍 । 𑌏𑌕𑌰𑌾𑌤𑍍𑌰𑍋𑌪𑌵𑌾𑌸𑌶𑍍𑌚 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌃 𑌸𑍌𑌮𑍍𑌯𑍋𑌽𑌯𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇' 𑌇𑌤𑌿 ॥ 𑌆𑌚𑌾𑌮𑌃 = 𑌓𑌦𑌨𑌨𑌿𑌃𑌸𑍍𑌰𑌾𑌵𑌃 । 𑌪𑌿𑌣𑍍𑌯𑌾𑌕𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌪𑌞𑍍𑌚𑌾𑌨𑌾𑌮𑍇𑌕𑍈𑌕𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌦𑌿𑌨𑌮𑌭𑍍𑌯𑌸𑍍𑌯 𑌷𑌷𑍍𑌠𑍇𑌽𑌹𑌨𑍍𑌯𑍁𑌪𑌵𑌸𑍇𑌤𑍍 । 𑌸 𑌏𑌷𑌃 𑌸𑍌𑌮𑍍𑌯𑌃 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌃 ॥

𑌯𑌤𑍍𑌤𑍁 𑌜𑌾𑌬𑌾𑌲𑍇𑌨 𑌚𑌤𑍁𑌰𑌾𑌤𑍍𑌰𑌵𑍍𑌯𑌾𑌪𑍀 𑌸𑍌𑌮𑍍𑌯𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰 𑌉𑌕𑍍𑌤𑌃-

'𑌪𑌿𑌣𑍍𑌯𑌾𑌕𑌂 𑌸𑌕𑍍𑌤𑌵𑌸𑍍𑌤𑌕𑍍𑌰𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑍇𑌽𑌹𑌨𑍍𑌯𑌭𑍋𑌜𑌨𑌮𑍍 । 𑌵𑌾𑌸𑍋 𑌵𑍈 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌂 𑌦𑌦𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑍌𑌮𑍍𑌯𑍋𑌽𑌯𑌂 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇' 𑌇𑌤𑌿, 𑌤𑌦𑍇𑌤𑌦𑌶𑌕𑍍𑌤𑌵𑌿𑌷𑌯𑌮𑍍 ॥

---

விட்டவனுயும், ஒரு மாஸம் வரையில் ஜலத்துடன் சேர்ந்த மாவுகளை ஆஹார நியமமுடையவனாய்க் குடித்தால் அது வாருண க்ருச்ரம் எனப்படுகிறது. மூன்று நாள் கோமூத்ரத்தை மட்டிலும், மூன்று நாள் கோமயத்தை மட்டிலும், மூன்று நாள் யவைக்கஞ்சியை மட்டிலும் பருகினால் அது ஸ்த்ரீ க்ருச்ரம் எனப்படுகிறது.

**யாஜ்ஞவல்க்யர்**:— பிண்ணாக்கு, வடிகஞ்சி, மோர், நீர், மாவு, இவைகளை ஒவ்வொரு நாளிலும் முறையே பருகவேண்டும். ஒரு நாள் உபவாஸம். இது ஸௌம்ய க்ருச்ரமெனப்படுகிறது. பிண்ணாக்கு முதலிய ஐந்துகளை ஒவ்வொன்றை முறையே ஒவ்வொரு நாளிலும் உட்கொண்டு, ஆறுவது நாளில் உபவாஸமிருக்க வேண்டும். இது ஸௌம்ய க்ருச்ரம்.

ஆனால், **ஜாபாலரால்** நான்கு நாட்களில் செய்யக்கூடிய ஸௌம்ய க்ருச்ரம் "பிண்ணாக்கு, மாவு, மோர், இவைகளை மூன்று நாள் பருகி, நான்காவது நாளில் உபவாஸம். பிறகு வஸ்த்ரத்தைத் தக்ஷிணையாய்க் கொடுக்கவேண்டும். இது ஸௌம்யக்ருச்ரம் எனப்படுகிறது," என்று சொல்லப்பட்டுள்ளதே எனில், அது சக்தியற்றவனைப்பற்றியது.

## 𑌤𑍁𑌲𑌾𑌪𑍁𑌰𑍁𑌷𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

𑌅𑌥 𑌤𑍁𑌲𑌾𑌪𑍁𑌰𑍁𑌷𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌮𑌾𑌹 𑌜𑌾𑌬𑌾𑌲𑌿𑌃—

'𑌪𑌿𑌣𑍍𑌯𑌾𑌕𑌂 𑌚 𑌤𑌥𑌾𑌽𑌽𑌚𑌾𑌮𑌂 𑌤𑌕𑍍𑌰𑌂 𑌚𑍋𑌦𑌕𑌸𑌕𑍍𑌤𑌵𑌃 । 𑌤𑍍𑌰𑌿𑌰𑌾𑌤𑍍𑌰𑌮𑍁𑌪𑌵𑌾𑌸𑌶𑍍𑌚 𑌤𑍁𑌲𑌾𑌪𑍁𑌰𑍁𑌷 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇' 𑌇𑌤𑌿 ॥ 𑌸𑍋𑌽𑌯𑌮𑌷𑍍𑌟𑌦𑌿𑌵𑌸𑌸𑌾𑌧𑍍𑌯𑌃 ॥

𑌯𑌾𑌜𑍍𑌞𑌵𑌲𑍍𑌕𑍍𑌯𑌸𑍍𑌤𑍁 𑌪𑌞𑍍𑌚𑌦𑌶𑌦𑌿𑌨𑌸𑌾𑌧𑍍𑌯𑌮𑌾𑌹—

'𑌏𑌷𑌾𑌂 𑌤𑍍𑌰𑌿𑌰𑌾𑌤𑍍𑌰𑌮𑌭𑍍𑌯𑌾𑌸𑌾𑌦𑍇𑌕𑍈𑌕𑌸𑍍𑌯 𑌯𑌥𑌾𑌕𑍍𑌰𑌮𑌮𑍍 । 𑌤𑍁𑌲𑌾𑌪𑍁𑌰𑍁𑌷 𑌇𑌤𑍍𑌯𑍇𑌷 𑌜𑍍𑌞𑍇𑌯𑌃 𑌪𑌞𑍍𑌚𑌦𑌶𑌾𑌹𑌿𑌕𑌃' 𑌇𑌤𑌿 ॥ 𑌏𑌷𑌾𑌂 = 𑌪𑌿𑌣𑍍𑌯𑌾𑌕𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌪𑌞𑍍𑌚𑌾𑌨𑌾𑌮𑍍 ॥

𑌯𑌮𑌸𑍍𑌤𑍍𑌵𑍇𑌕𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌦𑌿𑌵𑌸𑌸𑌾𑌧𑍍𑌯𑌮𑌾𑌹—

'𑌆𑌚𑌾𑌮𑌮𑌥 𑌪𑌿𑌣𑍍𑌯𑌾𑌕𑌂 𑌤𑌕𑍍𑌰𑌂 𑌚𑍋𑌦𑌕𑌸𑌕𑍍𑌤𑍁𑌕𑌾𑌨𑍍 । 𑌤𑍍𑌰𑍍𑌯𑌹𑌂 𑌤𑍍𑌰𑍍𑌯𑌹𑌂 𑌪𑍍𑌰𑌯𑍁𑌞𑍍𑌜𑌾𑌨𑍋 𑌵𑌾𑌯𑍁𑌭𑌕𑍍𑌷𑌸𑍍𑌤𑍍𑌰𑍍𑌯𑌹𑌂 𑌨𑌯𑍇𑌤𑍍 ॥ 𑌏𑌕𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌰𑌾𑌤𑍍𑌰𑌸𑍍𑌤𑍁 𑌤𑍁𑌲𑌾𑌪𑍁𑌰𑍁𑌷 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇' 𑌇𑌤𑌿 ॥ 𑌤𑍍𑌰𑌿𑌤𑌯𑌮𑍇𑌤𑌤𑍍 𑌪𑌾𑌪𑌤𑌾𑌰𑌤𑌮𑍍𑌯𑌵𑌿𑌷𑌯𑌤𑌯𑌾 𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑍀𑌯𑌮𑍍 ॥

---

## துலாபுருஷ க்ருச்ர லக்ஷணம்.

**ஜாபாலி:**— பிண்ணாக்கு, கஞ்சி, மோர், ஜலம், மாவு, மூன்று நாள் உபவாஸம் இது துலாபுருஷ க்ருச்ரம் எனப்படுகிறது.

இந்த க்ருச்ரம் எட்டுநாளில் ஸாதிக்கக்கூடியது.

**யாஜ்ஞவல்க்யரோ**வெனில் பதினைந்து நாட்களில் ஸாதிக்கக் கூடியதைச் சொல்லுகிறார்:—பிண்ணாக்கு முதலிய ஐந்து த்ரவ்யங்களையும் முறையே ஒவ்வொன்றையும் மும்மூன்று நாட்களில் உபயோகிப்பதால் இது பதினைந்து நாட்களில் முடிக்கக்கூடிய துலாபுருஷ க்ருச்ரம் என்று சொல்லப்படுகிறது.

**யமனோ**வெனில் இருபத்தொரு நாட்களில் ஸாதிக்கக்கூடியதாய்ச் சொல்லுகிறார்:— கஞ்சி, பிண்ணாக்கு, மோர், ஜலம், மாவு, இவ்வைந்தையும் முறையே ஒவ்வொரு மும்மூன்று நாட்களிலும் உபயோகித்து, பிறகு ஆறு நாட்கள் வாயுவைப் பக்ஷித்திருந்தால் அது இருபத்தொரு நாட்களில் ஸாதிக்கக்கூடிய துலாபுருஷ க்ருச்ரமெனப்படுகிறது. இம் மூன்றும் பாபத்தின் தாரதம்யத்தை அனுஸரித்தது, என்று வ்யவஸ்தையை யறியவும்.

## 𑌅𑌘𑌮𑌰𑍍𑌷𑌣𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

𑌅𑌘𑌮𑌰𑍍𑌷𑌣𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌮𑌾𑌹 𑌶𑌙𑍍𑌖𑌃—

'𑌤𑍍𑌰𑍍𑌯𑌹𑌂 𑌤𑍍𑌰𑌿𑌷𑌵𑌣𑌸𑍍𑌨𑌾𑌯𑍀 𑌮𑍌𑌨𑍀 𑌸𑍍𑌨𑌾𑌤𑍍𑌵𑌾𑌽𑌘𑌮𑌰𑍍𑌷𑌣𑌮𑍍 ।
𑌮𑌨𑌸𑌾 𑌤𑍍𑌰𑌿𑌃 𑌪𑌠𑍇𑌦𑌪𑍍𑌸𑍁 𑌨 𑌚𑌾𑌶𑍍𑌨𑍀𑌤 𑌦𑌿𑌨𑌤𑍍𑌰𑌯𑌮𑍍 ॥ 𑌅𑌘𑌮𑌰𑍍𑌷𑌣
𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑌦𑍍𑌵𑍍𑌰𑌤𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌘𑌨𑌾𑌶𑌨𑌮𑍍' 𑌇𑌤𑌿 ॥

𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌾𑌨𑍍𑌤𑌰𑌮𑌾𑌹 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃—

'𑌤𑍍𑌰𑍍𑌯𑌹𑌂 𑌨𑌾𑌶𑍍𑌨𑍀𑌯𑌾𑌤𑍍𑌤𑍍𑌰𑍍𑌯𑌹𑌂 𑌤𑍍𑌰𑌿𑌷𑌵𑌣𑌸𑍍𑌨𑌾𑌨 𑌮𑌗𑍍𑌨𑍋𑌽𑌪𑍍 ।
𑌸𑍁 𑌤𑍍𑌰𑌿𑌰𑌘𑌮𑌰𑍍𑌷𑌣𑌂 𑌜𑌪𑍇𑌦𑍍𑌦𑌿𑌵𑌾 𑌤𑌿𑌷𑍍𑌠𑍇𑌦𑍍𑌰𑌾𑌤𑍍𑌰𑌾𑌵𑌾𑌸𑍀𑌤 ।
𑌕𑌰𑍍𑌮𑌣𑍋𑌽𑌨𑍍𑌤𑍇 𑌪𑌯𑌸𑍍𑌵𑌿𑌨𑍀𑌂 𑌗𑌾𑌂 𑌦𑌦𑍍𑌯𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌘𑌮𑌰𑍍𑌷𑌣𑌮𑍍' 𑌇𑌤𑌿 ॥

## 𑌦𑍈𑌵𑌤𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

𑌦𑍈𑌵𑌤𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌮𑌾𑌹 𑌯𑌮𑌃—

'𑌯𑌵𑌾𑌗𑍂𑌂 𑌯𑌾𑌵𑌕𑌂 𑌶𑌾𑌕𑌂 𑌕𑍍𑌷𑍀𑌰𑌂 𑌦𑌧𑌿 𑌘𑍃𑌤𑌂 𑌤𑌥𑌾 ।
𑌤𑍍𑌰𑍍𑌯𑌹𑌂 𑌤𑍍𑌰𑍍𑌯𑌹𑌂 𑌤𑍁 𑌪𑍍𑌰𑌾𑌶𑍍𑌨𑍀𑌯𑌾𑌦𑍍𑌵𑌾𑌯𑍁𑌭𑌕𑍍𑌷𑌃 𑌪𑌰𑌂 𑌤𑍍𑌰𑍍𑌯𑌹𑌮𑍍 ।
𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌂 𑌦𑍈𑌵𑌕𑍃𑌤𑌂 𑌨𑌾𑌮 𑌸𑌰𑍍𑌵𑌕𑌿𑌲𑍍𑌬𑌿𑌷𑌨𑌾𑌶𑌨𑌮𑍍' 𑌇𑌤𑌿 ॥

---

## அகமர்ஷண க்ருச்ர லக்ஷணம்.

**சங்கர்:**—மூன்றுநாள் மூன்று காலங்களிலும் ஸ்நானம் செய்பவனாய், மௌனியாய் இருக்கவேண்டும். ஜலத்தில் மூழ்கி அகமர்ஷண மந்த்ரத்தை மனதினால் மூன்று முறை ஜபிக்கவேண்டும். மூன்றுநாள் உபவாஸம் இருக்கவேண்டும். இது எல்லாப் பாபங்களையும் போக்குவதான அகமர்ஷண க்ருச்ரமெனப்படும்.

வேறு ப்ரகாரத்தைச் சொல்லுகிறார் **விஷ்ணு:**— மூன்றுநாள் புஜிக்கக்கூடாது. மூன்று நாள் மூன்று காலங்களிலும் ஸ்நானம் செய்யவேண்டும். ஜலத்தில் மூழ்கி அகமர்ஷண மந்த்ரத்தை மூன்று முறை ஜபிக்கவேண்டும். பகலில் நிற்கவேண்டும். இரவில் உட்கார்ந்திருக்கவேண்டும். வ்ரதம் முடிந்த பிறகு பால் உள்ள பசுவைத் தானம் செய்யவேண்டும். இவ்விதம் செய்வது அகமர்ஷண க்ருச்ரம்.

## தைவத க்ருச்ர லக்ஷணம்.

**யமன்:**—கஞ்சி, யவைக்கஞ்சி, கீரை, பால், தயிர், நெய், இவைகளையே முறையே மும்மூன்று நாட்கள் உட்கொள்ளவேண்டும்.

यज्ञकृच्छ्रमाहाङ्गिराः—

'यावकस्त्रिषवणं स्नायी संयतो मौनमास्थितः। प्रातःस्नानं समारभ्य कृच्छ्रजप्यं च नित्यशः॥ सावित्रीं व्याहृतिं चैव जपेदष्टसहस्रकम्। ओङ्कारमादितः कृत्वा जपे जपे तथाऽन्ततः। भूमौ वीरासने युक्तः कृच्छ्रजप्यं तु संयतः॥ आसीनश्च स्थितो वाऽपि पिबेद्गव्यं पयः सकृत्॥ गव्यस्य पयसोऽलाभे गव्यमेव दध्यपि। दध्नोऽलाभे भवेत्तक्रं तक्रालाभे तु यावकम्॥ एषामन्यतमं यत्तु उपपद्येत तद्भवेत्। गोमूत्रेण समायुक्तं यावकं चोपयोजयेत्॥ एकाहेन तु कृच्छ्रोऽयमङ्गिरसा स्वयम्। सर्वपापहरो दिव्यो नाम्ना यज्ञ इति स्मृतः॥ एतत्तु पातकानां तथाऽप्युपपातकैः। महद्भिश्चापि पातकानां प्रायश्चित्तमिदं शुभम्' इति॥

---

பிறகு மூன்றுநாள் வாயுவைப் பக்ஷிக்கவேண்டும். இது எல்லாப் பாபங்களையும் போக்குவதான தைவத க்ருச்ர மெனப்படும்.

யஜ்ஞ க்ருச்ரத்தைச் சொல்லுகிறார் அங்கிரஸ்:—நியமமுடையவனாய், மூன்று காலங்களிலும் ஸ்நானம் செய்பவனாய், ஜிதேந்த்ரியனாய், மௌனியாய் இருக்கவேண்டும். ப்ரதி தினம் ப்ராத:ஸ்நானம் முதற்கொண்டு ஜபத்தைச் செய்யவேண்டும். காயத்ரியையும், வ்யாஹ்ருதியையும் எண்ணாயிரம் தடவை ஜபிக்கவேண்டும். ஒவ்வொரு தடவையிலும் ஆரம்பத்திலும் முடிவிலும் ஓங்காரத்தைச் சேர்த்து ஜபிக்கவேண்டும். பூமியில் வீராஸனத்தில் இருந்து ஜபம் செய்யவேண்டும். உட்கார்ந்தாவது நின்றாவது ஜபிக்கவேண்டும். பசுவின் பாலை ஒரு முறை பருகவேண்டும். பசுவின் பால் கிடைக்காவிடில் பசுவின் தயிரை உபயோகிக்கவும். தயிர் கிடைக்காவிடில் மோரை உபயோகிக்கவும். மோர் கிடைக்காவிடில் யவைக்கஞ்சியைப் பருகவும். இவைகளுள் எது கிடைக்குமோ அதை உபயோகிக்கவும். கோமூத்ரத்துடன் கூடின யவைக்கஞ்சியையும் உபயோகிக்கலாம். இவ்விதம் ஒரு நாள் செய்வது க்ருச்ரம் என்று அங்கிரஸ்ஸால் சொல்லப்பட்டுள்ளது. இது எல்லாப் பாபங்களையும் அபஹரிப்பது, இது யஜ்ஞக்ருச்ரம் என்று சொல்லப்பட்டுள்ளது. இது பாபங்களுடன் கூடியவர்க்கும், உபபாதகங்

## 𑌯𑌾𑌵𑌕𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

𑌯𑌾𑌵𑌕𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌮𑌾𑌹 𑌦𑍇𑌵𑌲𑌃—

'𑌯𑌵𑌾𑌨𑌾𑌮𑍇𑌵 𑌸𑌾𑌧𑌿𑌤𑌾𑌨𑌾𑌂 𑌸𑌪𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌰𑌂 𑌪𑌕𑍍𑌷𑌂 𑌮𑌾𑌸𑌂 𑌵𑌾 𑌪𑍍𑌰𑌾𑌶𑌨𑌂 𑌯𑌾𑌵𑌕𑌮𑍍 । 𑌅𑌨𑍇𑌨 𑌯𑌾𑌵𑌕𑌪𑌾𑌯𑌸𑍋𑌦𑌕[𑌪𑌾𑌕]𑌾𑌨𑌿 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌾𑌨𑌿' 𑌇𑌤𑌿 ॥

𑌶𑌙𑍍𑌖𑌃—

'𑌗𑍋𑌪𑍁𑌰𑍀𑌷𑌂 𑌯𑌵𑌾𑌹𑌾𑌰𑍋 𑌮𑌾𑌸𑌮𑍇𑌕𑌂 𑌸𑌮𑌾𑌹𑌿𑌤𑌃 । 𑌵𑍍𑌰𑌤𑌂 𑌤𑍁 𑌯𑌾𑌵𑌕𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑌾𑌪𑌨𑍁𑌤𑍍𑌤𑌯𑍇' 𑌇𑌤𑌿 ॥

## 𑌪𑍍𑌰𑌸𑍃𑌤𑌿𑌯𑌾𑌵𑌕𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

𑌪𑍍𑌰𑌸𑍃𑌤𑌿𑌯𑌾𑌵𑌕𑌮𑌾𑌹 𑌹𑌾𑌰𑍀𑌤𑌃—

'𑌯 𑌆𑌤𑍍𑌮𑌕𑍃𑌤𑍈𑌃 𑌕𑌰𑍍𑌮𑌭𑌿𑌰𑍍𑌗𑍁𑌰𑍁𑌪𑌾𑌪𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌮𑌨𑍍𑌯𑍇𑌤𑌾𑌤𑍍𑌮𑌾𑌰𑍍𑌥𑌂 𑌪𑍍𑌰𑌸𑍃𑌤𑌿𑌯𑌾𑌵𑌕𑌂 𑌶𑍍𑌰𑌪𑌯𑍇𑌤𑍍 । 𑌤𑌦𑌗𑍍𑌨𑍌 𑌜𑍁𑌹𑍁𑌯𑌾𑌤𑍍 । 𑌤𑍇𑌨 𑌦𑍈𑌵𑌂 𑌬𑌲𑌿𑌕𑌰𑍍𑌮 । 𑌶𑍃𑌤𑌮𑌭𑌿𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌯𑍇𑌤— 𑌯𑌵𑍋𑌽𑌸𑌿

---

களுடன் கூடியவர்க்கும், மஹாபாதகங்களுடன் கூடியவர்க்கும் சிறந்த ப்ராயஶ்சித்தமாகும்.

### யாவக க்ருச்ர லக்ஷணம்.

**தேவலர்:**—யவைகளை ஜலத்தில் சேர்த்துப் பாகம் செய்து, ஏழு நாள், அல்லது பதினைந்து நாள், அல்லது ஒரு மாஸம், புஜிப்பது யாவக க்ருச்ர மெனப்படுகிறது. இதனால் யாவகம், பாயஸம், ஜலம் இவைகள் விவரிக்கப்பட்டுள்ளன.

**சங்கர்:**— நியதனாய் ஒரு மாஸம் முழுவதும் கோமயத்துடன் யவையைப்புஜித்து எல்லாப் பாபங்களையும் போக்குவதற்கு யாவக வ்ரதத்தை அனுஷ்டிக்கவும்.

### ப்ரஸ்ருதி யாவக க்ருச்ர லக்ஷணம்.

**ஹாரீதர்:**— எவன் தான் செய்த கர்மங்களால் தன்னைப் பாபமுடையவனாய் நினைக்கின்றானோ அவன் தனக்காக ப்ரஸ்ருதி (ஒரு சேரை யளவுள்ள) யவையைப் பாகம் செய்யவேண்டும். அதிலிருந்து அக்னியில் ஹோமம் செய்யவேண்டும். அதனால் தைவகர்மம் பலிகர்மம் இவைகளைச் செய்யவும். பக்குவமாகிய

धान्यराजोऽसि वारुणो मधुसंयुतः । निर्णोदः
सर्वपापानां पवित्रमृषिभिः स्मृतः ॥ घृतं यवा
मधु यवा आपो वा अमृतं यवाः । सर्वं पुनन्तु मे
पापं यन्मया दुष्कृतं कृतम् ॥ वाचा कृतं कर्मकृतं
मनसा दुर्विचिन्तितम् । अलक्ष्मीं कालकर्णीं च सर्वं पु-
नीत मे यवाः ॥ मातापित्रोरशुश्रूषां वयसा कारि-
तं तथा । श्वसूकरावलीढं च उच्छिष्टोपहतं च यत् ॥
सुवर्णस्तेयं व्रात्यत्वं अयाज्ययाजनं तथा ।
ब्राह्मणानां परीवादं सर्वं पुनीत मे यवाः ॥ श्रप्य-
माणं रक्षां कुर्यात् नमो रुद्राय गायत्र्यैव तथै
[च] मानस्तोकेति । पात्रे त्रिर्निषिच्य ये
देवा मनोजाता मनोयुजस्सुदक्षा दक्षपितारस्ते नः
पान्तु ते नोऽवन्तु तेभ्यो नमस्तेभ्यस्स्वाहेत्यात्मनि
जुहुयात् । त्रिरात्रं पीत्वातिपातकृत् षड्रात्रं
पीत्वा पूतो भवति सप्तरात्रं च महापातकी द्वादश-
रात्रं पीत्वा सर्वं पापकृतं पापं निर्णुदति ।
निर्वृत्तानां यवानामेकविंशतिरात्रं पीत्वा गणान्
पश्यति गणाधिपतिं पश्यति विद्यां पश्यति विद्याधि-
पतिं पश्यति [illegible]

அதைப் பார்த்து ஜபிக்கவேண்டும். "யவோஸி" என்பது முதல் "ப்ராம்ஹணும் பரீவாதம் ஸர்வம் புனீதமேயவா:" என்பது முடிய மந்த்ரங்களை ஜபிக்கவேண்டும். பாகமாகும்பொழுது 'நமோருத்ராய, காயத்ரீ, மானஸ்தோகே' என்ற மந்த்ரங்களால் ரக்ஷை செய்யவும். பாத்ரத்தில் மூன்று தடவை சேர்த்து, 'யேதேவா:,' முதல் "தேப்ய:ஸ்வாஹா" வரையில் உள்ள மந்த்ரங்களால் தன்னிடத்திலே ஹோமம் செய்யவும். மூன்றுநாள் வரையில் அதிபாதகம் செய்தவன் செய்தால் சுத்தனாகிறான். அல்லது ஆறுநாள் பானம் செய்தால் சுத்தனாகிறான். மஹாபாதகியானால் ஏழு நாள் பானம் செய்தால் சுத்தனாகிறான். பன்னிரண்டு நாள் பானம் செய்தால், செய்த பாபங்கள் எல்லாவற்றையும் போக்குகிறான். இவ்விதம் யாவகத்தை இருபத்தொருநாள் பருகினால் கணங்கள், கணாதிபதிகள், வித்யை, வித்யாதிபதி இவர்களைத்

दधिक्षीरसर्पिःषु प्राश्नीयात् सोंऽहसः क्षणात् मुच्यते भगवान् मैत्रायणिः इति ॥

## अथ चान्द्रायणकृच्छ्रलक्षणम् ॥

### अथ चान्द्रायणम् ॥

तच्च द्विविधम् । पिपीलिकामध्यं यवमध्यं चेति । यथा पिपीलिकायाः शिरःपृष्ठभागौ स्थूलौ मध्यं सूक्ष्मं तथैवास्य चान्द्रायणस्य मध्ये अमावास्यादिने सर्वग्रासह्रासः । तस्य मध्यह्रासत्वात् पिपीलिकामध्यम् ॥ यथा हि कृष्णप्रतिपदि व्रतं सङ्कल्प्य चतुर्दश ग्रासान् भुञ्जीत । ततो द्वितीयारभ्य प्रतिदिनमेकैकस्य ग्रासस्य ह्रासे सति अमावास्यायामुपवासः संपद्यते । पुनश्शुक्लप्रतिपदि ग्रासमेकमारभ्य प्रतिदिनमेकैकग्रासवृद्ध्या पूर्णिमायां पञ्चदश ग्रासाः सं

---

தர்சனம் செய்வான். எவன் கோமூத்ரத்திலாவது அல்லது தயிர், பால், நெய் இவைகளில் பக்வமான யாவகத்தை அடிக்கடி பருகுவானோ அவன் பாபத்தினின்றும் உடனே விடுபடுவான், என்றார் பகவானாகிய மைத்ராயணி என்பவர்.

## சாந்த்ராயண க்ருச்ர லக்ஷணம்.

இனி சாந்த்ராயண க்ருச்ரம் சொல்லப்படுகிறது. அது இரு விதமாகும் – பிபீலிகா மத்யம் என்றும், யவமத்யம் என்றும். எப்படி எறும்பினுடைய தலையும் பின்பாகமும் பருத்துள்ளனவோ, நடுப்பாகம் மெலிந்துள்ளதோ, அவ்விதமே இந்தச் சாந்த்ராயண க்ருச்ரத்திற்கு நடுவில் அமாவாஸ்யா தினத்தில் கபளங்கள் எல்லாவற்றிற்கும் குறைவு. அந்த க்ருச்ரம் நடுவில் ஸூக்ஷ்மமாக இருப்பதால் பிபீலிகாமத்யம் என்ற தன்மை. உதாஹரணம்:— க்ருஷ்ணபக்ஷ ப்ரதமையில் க்ருச்ரத்தை ஸங்கல்பித்துக்கொண்டு, பதினான்கு கபளங்கள் புஜிக்கவேண்டும். பிறகு த்விதீயையிலிருந்து ஒவ்வொரு தினத்திலும் ஒவ்வொரு கபளம் குறைவு செய்யும் பொழுது அமாவாஸ்யையில் உபவாஸம் ஏற்படுகிறது. மறுபடி சுக்லபக்ஷ ப்ரதமையில் ஒரு கபளத்தை யாரம்பித்து ஒவ்வொரு தினமும் ஒவ்வொரு கபளத்தை வ்ருத்தி செய்வதால் பூர்ணிமையில் பதினைந்து கபளங்கள் ஆகின்றன. சொல்லிய இது பிபீலிகாமத்ய

𑌵𑌰𑍍𑌧𑌤𑍇 । 𑌸 𑌏𑌷 𑌪𑌿𑌪𑍀𑌲𑌿𑌕𑌾𑌮𑌧𑍍𑌯𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌸𑍍𑌯𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌃 । 𑌤𑌥𑌾 𑌯𑌵𑌂 𑌮𑌧𑍍𑌯𑌸𑍍𑌥𑍂𑌲𑌮𑍁𑌭𑌯𑌕𑍋𑌟𑍀 𑌕𑍃𑌶𑍇 । 𑌤𑌥𑌾𑌽𑌤𑍍𑌰 𑌶𑍁𑌕𑍍𑌲𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑌾𑌰𑌭𑍍𑌯 𑌪𑍍𑌰𑌤𑌿𑌦𑌿𑌨𑌮𑍇𑌕𑍈𑌕𑌗𑍍𑌰𑌾𑌸𑌵𑍃𑌦𑍍𑌧𑍍𑌯𑌾 𑌪𑍌𑌰𑍍𑌣𑌮𑌾𑌸𑍍𑌯𑌾𑌂 𑌪𑌞𑍍𑌚𑌦𑌶 𑌗𑍍𑌰𑌾𑌸𑌾𑌸𑍍𑌸𑌮𑍍𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 । 𑌕𑍃𑌷𑍍𑌣𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑌾𑌰𑌭𑍍𑌯 𑌪𑍍𑌰𑌤𑌿𑌦𑌿𑌨𑌮𑍇𑌕𑍈𑌕𑌗𑍍𑌰𑌾𑌸𑌹𑍍𑌰𑌾𑌸𑍇 𑌸𑌤𑌿 𑌅𑌮𑌾𑌵𑌾𑌸𑍍𑌯𑌾𑌯𑌾𑌮𑍁𑌪𑌵𑌾𑌸 𑌇𑌤𑌿 𑌮𑌧𑍍𑌯𑌸𑍍𑌥𑍌𑌲𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌵𑌮𑌧𑍍𑌯𑌤𑍍𑌵𑌮𑍍 ॥

𑌤𑌤𑍍𑌰 𑌪𑌿𑌪𑍀𑌲𑌿𑌕𑌾𑌮𑌧𑍍𑌯𑌮𑌾𑌹 𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑌃—

'𑌮𑌾𑌸𑌸𑍍𑌯 𑌕𑍃𑌷𑍍𑌣𑌪𑌕𑍍𑌷𑌾𑌦𑍌 𑌗𑍍𑌰𑌾𑌸𑌾𑌨𑌦𑍍𑌯𑌾𑌚𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌶 । 𑌗𑍍𑌰𑌾𑌸𑌾𑌪𑌚𑌯𑌭𑍋𑌜𑍀 𑌸𑌨𑍍 𑌪𑌕𑍍𑌷𑌶𑍇𑌷𑌂 𑌸𑌮𑌾𑌪𑌯𑍇𑌤𑍍 ॥ 𑌤𑌥𑍈𑌵 𑌶𑍁𑌕𑍍𑌲𑌪𑌕𑍍𑌷𑌾𑌦𑍌 𑌗𑍍𑌰𑌾𑌸𑌂 𑌭𑍁𑌞𑍍𑌜𑍀𑌤 𑌚𑌾𑌪𑌰𑌮𑍍 । 𑌗𑍍𑌰𑌾𑌸𑍋𑌪𑌚𑌯𑌭𑍋𑌜𑍀 𑌸𑌨𑍍 𑌪𑌕𑍍𑌷𑌶𑍇𑌷𑌂 𑌸𑌮𑌾𑌪𑌯𑍇𑌤𑍍' 𑌇𑌤𑌿 ॥

𑌪𑌰𑌾𑌶𑌰𑍋𑌽𑌪𑌿—

'𑌏𑌕𑍈𑌕𑌂 𑌹𑍍𑌰𑌾𑌸𑌯𑍇𑌦𑍍𑌗𑍍𑌰𑌾𑌸𑌂 𑌕𑍃𑌷𑍍𑌣𑍇 𑌶𑍁𑌕𑍍𑌲𑍇 𑌚 𑌵𑌰𑍍𑌧𑌯𑍇𑌤𑍍 । 𑌅𑌮𑌾𑌵𑌾𑌸𑍍𑌯𑌾𑌂 𑌨 𑌭𑍁𑌞𑍍𑌜𑍀𑌤 𑌹𑍍𑌯𑍇𑌷 𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑍋 𑌵𑌿𑌧𑌿𑌃' 𑌇𑌤𑌿 ॥

---

சாந்த்ராயணத்தின் அனுஷ்டான ப்ரகாரம் ஆகும். அப்படியே, யவதான்யமானது நடுவில் பருத்துள்ளது. இரு கோடிகளும் மெலிந்துள்ளன. உதாஹரணம்:— சுக்லபக்ஷ ப்ரதமையில் ஆரம்பித்து, ஒவ்வொருநாளும் ஒவ்வொரு கபளம்வீதம் வ்ருத்திசெய்வதால் பூர்ணிமையில் பதினைந்து கபளங்கள் ஆகின்றன. க்ருஷ்ணபக்ஷ ப்ரதமை முதற்கொண்டு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கபளம் வீதம் குறைந்தால் அமாவாஸ்யையில் உபவாஸம் ஏற்படுகிறது, என்று. நடுப்பாகம் பருத்திருப்பதால் இதற்கு யவமத்யம் என்ற தன்மை.

அவைகளுள் பிபீலிகாமத்யத்தைச் சொல்லுகிறார், **வஸிஷ்டர்**:- மாஸத்தின் க்ருஷ்ணபக்ஷ ப்ரதமையில் பதினான்கு கபளங்களைப் புஜிக்கவேண்டும். இவ்விதம் கபளங்களைப் குறைத்துப் புஜிப்பவனாயிருந்து பக்ஷத்தின் மீதியை முடிக்கவேண்டும். அவ்விதமே சுக்லபக்ஷத்தின் ப்ரதமையில் ஒரு கபளத்தைப் புஜிக்கவேண்டும். இவ்விதம் கபளங்களை வ்ருத்தி செய்து புஜிப்பவனாயிருந்து பக்ஷம் மீதியை முடிக்கவேண்டும்.

**பராசரரும்**:— க்ருஷ்ணபக்ஷத்தில் ஒவ்வொரு கபளத்தைக்

𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌦𑍍𑌵𑍈𑌵𑌿𑌧𑍍𑌯𑌮𑌾𑌹 𑌦𑍇𑌵𑌲𑌃—

'𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌂 𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌂 𑌯𑌵𑌮𑌧𑍍𑌯𑌂 𑌪𑌿𑌪𑍀𑌲𑌿𑌕𑌾𑌮𑌧𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 । 𑌏𑌕𑌗𑍍𑌰𑌾𑌸𑌮𑌮𑌾𑌵𑌾𑌸𑍍𑌯𑌾𑌦𑌿 𑌯𑌵𑌮𑌧𑍍𑌯𑌂, 𑌪𑌞𑍍𑌚𑌦𑌶𑌗𑍍𑌰𑌾𑌸𑌂 𑌪𑍌𑌰𑍍𑌣𑌮𑌾𑌸𑍍𑌯𑌾𑌦𑌿 𑌪𑌿𑌪𑍀𑌲𑌿𑌕𑌾𑌮𑌧𑍍𑌯𑌂' 𑌇𑌤𑌿 ॥

𑌮𑌨𑍁𑌰𑌪𑌿—

'𑌏𑌕𑍈𑌕𑌂 𑌹𑍍𑌰𑌾𑌸𑌯𑍇𑌤𑍍𑌪𑌿𑌣𑍍𑌡𑌂 𑌕𑍃𑌷𑍍𑌣𑍇 𑌶𑍁𑌕𑍍𑌲𑍇 𑌚 𑌵𑌰𑍍𑌧𑌯𑍇𑌤𑍍 । 𑌉𑌪𑌸𑍍𑌪𑍃𑌶𑌂𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌷𑌵𑌣𑌮𑍇𑌤𑌚𑍍𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍 । 𑌏𑌤𑌮𑍇𑌵 𑌵𑌿𑌧𑌿𑌂 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌮𑌾𑌚𑌰𑍇𑌦𑍍𑌯𑌵𑌮𑌧𑍍𑌯𑌮𑍇 । 𑌶𑍁𑌕𑍍𑌲𑌪𑌕𑍍𑌷𑌾𑌦𑌿𑌨𑌿𑌯𑌤𑌶𑍍𑌚𑌰𑌂𑌶𑍍𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌂 𑌵𑍍𑌰𑌤𑌮𑍍' 𑌇𑌤𑌿 ॥

𑌵𑌪𑌨𑌾𑌦𑍀𑌤𑌿𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌤𑌾𑌕𑍍𑌰𑌮𑌃 ॥

---

𑌵𑌪𑌨𑌾𑌦𑍍𑌯𑌙𑍍𑌗𑌸𑍍𑌯𑍇𑌤𑌿 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌤𑌾𑌮𑌾𑌹 𑌗𑍌𑌤𑌮𑌃—

'𑌵𑌪𑌨𑌂 𑌵𑍍𑌰𑌤𑌂 𑌚𑌰𑍇𑌚𑍍𑌛𑍍𑌵𑍋𑌭𑍂𑌤𑌾𑌂 𑌪𑍌𑌰𑍍𑌣𑌮𑌾𑌸𑍀𑌮𑍁𑌪𑌵𑌸𑍇𑌦𑌾𑌪𑍍𑌯𑌾𑌯𑌸𑍍𑌵 𑌸𑌂𑌤𑍇𑌪𑌯𑌾𑌂𑌸𑌿 𑌨𑌵𑍋 𑌨𑌵 𑌇𑌤𑌿 𑌚𑍈

---

குறைக்கவேண்டும். சுக்ல பக்ஷத்தில் வ்ருத்தி செய்யவேண்டும். அமாவாஸ்யையில் புஜிக்கக்கூடாது. இது சாந்த்ராயண க்ருச்ரத்தின் விதி.

இரு வித சாந்த்ராயணங்களையும் சொல்லுகிறார்,

**தேவலர்:**— சாந்த்ராயணம் இருவிதமாகும்— யவமத்யம், பிபீலிகாமத்யம் என்று. அமாவாஸ்யை முதல் ஒவ்வொரு கபளத்தை அதிகரித்துப் புஜிப்பது யவமத்யம். பூர்ணிமை முதல் பதினைந்து க்ராஸமாய் புஜிப்பது பிபீலிகாமத்யம்.

**மனுவும்:**— க்ருஷ்ணபக்ஷத்தில் ஒவ்வொரு கபளத்தைக் குறைக்கவேண்டும். சுக்லபக்ஷத்தில் ஒவ்வொரு கபளத்தை வ்ருத்தி செய்யவேண்டும். மூன்று காலங்களிலும் ஸ்நானம் செய்ய வேண்டும். இது சாந்த்ராயண வ்ரதம் எனப்படுகிறது. சாந்த்ராயண வ்ரதத்தை யனுஷ்டிப்பவன் யவமத்யம சாந்த்ராயணத்தில் இந்த விதியையே சுக்லபக்ஷம் முதல் நியமமுடையவனாய் அனுஷ்டிக்க வேண்டும்.

## வபனம் முதலிய நியமங்களின் க்ரமம்.

**கௌதமர்:**— சாந்த்ராயணத்தில் வபனமும் ப்ராயச்சித்த வ்ரதமாகச் செய்யவேண்டியது. மறுநாள் பூர்ணிமை இருக்கும்

𑌤𑌾𑌭𑌿𑌸𑍍𑌤𑌰𑍍𑌪𑌣𑌾𑌜𑍍𑌯𑌹𑍋𑌮𑍌 𑌹𑌵𑌿𑌷𑍍𑌯𑌾𑌨𑍍𑌨𑌾𑌨𑍁𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌣𑍋𑌪𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌸𑌃 𑌯𑌦𑍍𑌦𑍇𑌵𑌾 𑌦𑍇𑌵𑌹𑍇𑌳𑌨𑌮𑌿𑌤𑌿 𑌚𑌤𑌸𑍃𑌭𑌿𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌜𑍁𑌹𑍁𑌯𑌾𑌤𑍍 । 𑌦𑍇𑌵𑌕𑍃𑌤𑌸𑍍𑌯𑍇𑌤𑌿 𑌚𑌾𑌨𑍍𑌤𑍇 𑌸𑌮𑌿𑌦𑍍𑌧𑍋𑌮𑌃 𑍐𑌭𑍂𑌰𑍍𑌭𑍁𑌵𑌸𑍍𑌸𑍁𑌵𑌰𑍍𑌮𑌹𑌰𑍍𑌜𑌨𑌸𑍍𑌤𑌪𑌸𑍍𑌸𑌤𑍍𑌯𑌂 𑌯𑌶𑌃 𑌶𑍍𑌰𑍀𑌰𑍂𑌰𑍍𑌗𑌿𑌡𑍌𑌜𑌾𑌸𑍍𑌤𑍇𑌜𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌧𑌰𑍍𑌮𑌶𑍍𑌶𑌿𑌵 𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑍈𑌰𑍍𑌗𑍍𑌰𑌾𑌸𑌾𑌨𑍁𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌂 𑌮𑌨𑌸𑌾 𑌨𑌮𑌃 𑌸𑍍𑌵𑌾𑌹𑍇𑌤𑌿 𑌨𑌮𑌃 𑌸𑍍𑌵𑌾𑌹𑍇𑌤𑌿 𑌵𑌾 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍇𑌤𑌰𑍇𑌵 𑌗𑍍𑌰𑌾𑌸𑌾𑌨𑌨𑍁𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍀𑌤 𑌗𑍍𑌰𑌾𑌸𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌮𑌾𑌸𑍍𑌯𑌾𑌵𑌿𑌕𑌾𑌰𑍇𑌣 𑌚𑌰𑍁𑌭𑍈𑌕𑍍𑌷𑌸𑌕𑍍𑌤𑍁𑌕𑌣𑌯𑌾𑌵𑌕𑌶𑌾𑌕𑌪𑌯𑍋𑌦𑌧𑌿𑌘𑍃𑌤𑌮𑍂𑌲𑌫𑌲𑍋𑌦𑌕𑌾𑌨𑌿 𑌹𑌵𑍀𑌂𑌷𑍍𑌯𑍁𑌤𑍍𑌤𑌰𑍋𑌤𑍍𑌤𑌰𑌂 𑌪𑍍𑌰𑌶𑌸𑍍𑌤𑌾𑌨𑌿 𑌪𑍂𑌰𑍍𑌣𑌮𑌾𑌸𑍍𑌯𑌾𑌂 𑌪𑌞𑍍𑌚𑌦𑌶 𑌗𑍍𑌰𑌾𑌸𑌾𑌨𑍍 𑌭𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑍈𑌕𑍈𑌕𑌾𑌪𑌚𑌯𑍇𑌨𑌾𑌪𑌰𑌪𑌕𑍍𑌷𑌮𑌶𑍍𑌨𑍀𑌯𑌾𑌤𑍍 । 𑌅𑌮𑌾𑌵𑌾𑌸𑍍𑌯𑌾𑌯𑌾𑌮𑍁𑌪𑍋𑌷𑍍𑌯 𑌏𑌕𑍈𑌕𑍋𑌪𑌚𑌯𑍇𑌨 𑌪𑍂𑌰𑍍𑌵𑌪𑌕𑍍𑌷𑌂 । 𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌮𑍇𑌕𑍇𑌷𑌾𑌮𑍇𑌷 𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑍋 𑌮𑌾𑌸𑌃' 𑌇𑌤𑌿 ॥

---

பொழுது முதல் நாள் சதுர்த்தசியில் உபவாஸமிருக்கவேண்டும். 'ஆப்யாயஸ்வ', 'ஸங்தேபயாம்ஸி', 'நவோநவ:', என்ற இந்த ருக்குகளால் தர்ப்பணம், ஆஜ்யஹோமம், ஹவிஸ்ஸின் அனுமந்த்ரணம், சந்த்ரனுக்கு உபஸ்தானம் இவைகளைச் செய்யவும். "யத்தேவா தேவாஹேளனம்" என்ற நான்கு மந்த்ரங்களால் ஆஜ்யஹோமம் செய்யவேண்டும். கடைசியில் "தேவக்ருதஸ்ய" என்ற மந்த்ரங்களால் ஸமித்ஹோமம். ஓம்பூ:, புவ:, ஸுவ:, மஹ:, ஜந:, தப:, ஸத்யம், யச:, ஶ்ரீ:, ஊர்க், பிடௌஜா:, தேஜ:, புருஷ:, தர்ம:, சிவ: இந்த மந்த்ரங்களால் கபளங்களை அனுமந்த்ரிக்கவும். அல்லது "நம: ஸ்வாஹா" என்ற மந்த்ரத்தால் எல்லாக் கபளங்களையும் அனுமந்த்ரிக்கவும். கபளத்தின் ப்ரமாணம் வாயை விஸ்தரித்துக்கொள்ளாமல் ஸ்வபாவ நிலைமையில் உள்ளபடி வாய் கொண்ட அளவு. சரு, பிக்ஷான்னம், மாவு, நொய், யவைக்கஞ்சி, காய்கள், பால், தயிர், நெய், கிழங்கு, பழம், தீர்த்தம், இவை பன்னிரண்டில் மேல்மேல் உள்ளது ப்ரசஸ்தம் (உயர்ந்தது). இவ்வாறு (சதுர்த்தசியில் உபவாஸமிருந்து) பூர்ணிமையில் பதினைந்து கபளங்கள் புஜித்து, ப்ரதமைமுதல் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கபளம் குறைவாக க்ருஷ்ணபக்ஷம் முடிய புஜிக்கவும். அமாவாஸ்யையில் உபவாஸமிருந்து, ப்ரதமை முதல் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கபளம் அதிகமாக வ்ருத்தி செய்து, சுக்ல பக்ஷத்தில் புஜிக்கவும். இதையே மாற்றிச் செய்வது என்பது சிலருடைய மதத்தில். இவ்வாறு ஒரு மாஸம் செய்வது சாந்த்ராயண க்ருச்ரம்.

𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌾𑌨𑍍𑌤𑌰𑍇𑌣 𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌸𑍍𑌯 𑌤𑍍𑌰𑍈𑌵𑌿𑌧𑍍𑌯𑌮𑍍 ॥

𑌮𑌨𑍁𑌰𑌪𑌿 𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌾𑌨𑍍𑌤𑌰𑍇𑌣 𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌂 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌮𑍍, 𑌋𑌷𑌿𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌂 𑌶𑌿𑌶𑍁𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌂 𑌯𑌤𑌿𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌂𑌚𑍇𑌤𑌿 ॥

𑌤𑍇𑌷𑌾𑌂 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑌾𑌹 𑌯𑌮𑌃—

'𑌤𑍍𑌰𑍀𑌂𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌨𑍍 𑌪𑌿𑌣𑍍𑌡𑌾𑌨𑍍 𑌸𑌮𑌶𑍍𑌨𑍀𑌯𑌾𑌨𑍍𑌨𑌿𑌯𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌦𑍃𑌢𑌵𑍍𑌰𑌤𑌃 । 𑌹𑌵𑌿𑌷𑍍𑌯𑌾𑌨𑍍𑌨𑌸𑍍𑌯 𑌵𑍈 𑌮𑌾𑌸𑌮𑍃𑌷𑌿𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍 ॥ 𑌚𑌤𑍁𑌰𑌃 𑌪𑍍𑌰𑌾𑌤𑌰𑌶𑍍𑌨𑍀𑌯𑌾𑌚𑍍𑌚𑌤𑍁𑌰𑌸𑍍𑌸𑌾𑌯𑌮𑍇𑌵 𑌚 । 𑌪𑌿𑌣𑍍𑌡𑌾𑌨𑍇𑌤𑌦𑍍𑌧𑌿 𑌬𑌾𑌲𑌾𑌨𑌾𑌂 𑌶𑌿𑌶𑍁𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍 ॥ 𑌪𑌿𑌣𑍍𑌡𑌾𑌨𑌷𑍍𑌟𑍌 𑌸𑌮𑌶𑍍𑌨𑍀𑌯𑌾𑌨𑍍𑌮𑌾𑌸𑌂 𑌮𑌧𑍍𑌯𑌨𑍍𑌦𑌿𑌨𑍇 𑌰𑌵𑍌 । 𑌯𑌤𑌿𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌂 𑌹𑍍𑌯𑍇𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌕𑌲𑍍𑌮𑌷𑌨𑌾𑌶𑌨𑌮𑍍' 𑌇𑌤𑌿 ॥

𑌪𑌞𑍍𑌚𑌵𑌿𑌧𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌨𑌿𑌰𑍂𑌪𑌣𑌮𑍍 ॥

𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌪𑌞𑍍𑌚𑌵𑌿𑌧𑌂 𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌮𑌾𑌹—

'𑌅𑌥𑌾𑌤𑌶𑍍𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌂 𑌗𑍍𑌰𑌾𑌸𑌾𑌨𑌾𑌸𑍍𑌯𑌾𑌵𑌿𑌕𑌾𑌰𑍇𑌣𑌾𑌶𑍍𑌨𑍀𑌯𑌾𑌤𑍍 𑌤𑌾𑌂𑌶𑍍𑌚 𑌶𑍁𑌕𑍍𑌲𑌪𑌕𑍍𑌷𑍇 𑌵𑌰𑍍𑌧𑌯𑍇𑌤𑍍 । 𑌹𑌾𑌨𑍌 𑌚 𑌹𑍍𑌰𑌾𑌸𑌯𑍇𑌤𑍍 ॥ 𑌅𑌮𑌾𑌵𑌾𑌸𑍍𑌯𑌾𑌯𑌾𑌂 𑌚 𑌨𑌾𑌶𑍍𑌨𑍀𑌯𑌾𑌤𑍍 । 𑌏𑌷 𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑍋 𑌯𑌵𑌮𑌧𑍍𑌯𑌃

## வேறுவிதமாய் சாந்த்ராயணம் மூன்று விதம்.

மறுபடியும் வேறுவிதமாய், சாந்த்ராயணம் மூன்று விதமாகும்:— ருஷி சாந்த்ராயணம், சிசு சாந்த்ராயணம், யதி சாந்த்ராயணம் என்று. அவைகளின் ஸ்வரூபத்தைச் சொல்லுகிறார்,

**யமன்:**—ஒரு மாஸம் முழுவதும் ப்ரதிதினம் மூன்று கபளங்களை மட்டில் நியமமுடையவனாய், த்ருடவ்ருதனாய் ஹவிஸ் அன்னத்தைப் புஜிக்கவேண்டும். இது ருஷி சாந்த்ராயணம் எனப்பட்டுள்ளது. பகலில் நான்கு கபளங்களையும், இரவில் நான்கு கபளங்களையும் மட்டில் (புஜிக்கவும்). இது பாலர்களுக்கு, சிசு சாந்த்ராயணம் எனப்படும். ஒரு மாஸம் முழுவதும் மத்யாஹ்ன காலத்தில் எட்டுக்கபளங்களைப் புஜிக்கவும். இது எல்லாப் பாபங்களையும் போக்குவதான யதி சாந்த்ராயண மெனப்படும்.

## ஐந்து விதமான சாந்த்ராயணங்கள்.

**விஷ்ணு:**—சாந்த்ராயணத்தை ஐந்து விதமாகச் சொல்லுகிறார்:— இனி, சாந்த்ராயணம் சொல்லப்படுகிறது. கபளங்களை வாய்கொண்ட அளவு புஜிக்கவேண்டும். அந்தக் கபளங்களைச் சுக்லபக்ஷத்தில் க்ரமமாய் வ்ருத்தி செய்யவேண்டும். க்ருஷ்ணபக்ஷத்தில் குறைக்கவேண்

𑌪𑌿𑌪𑍀𑌲𑌿𑌕𑌾𑌮𑌧𑍍𑌯𑍋 𑌵𑌾 । 𑌯𑌸𑍍𑌯𑌾𑌮𑌾𑌵𑌾𑌸𑍍𑌯𑌾 𑌮𑌧𑍍𑌯𑌾 𑌭𑌵𑌤𑌿, 𑌸 𑌪𑌿𑌪𑍀𑌲𑌿𑌕𑌾𑌮𑌧𑍍𑌯𑌃 । 𑌯𑌸𑍍𑌯 𑌪𑍌𑌰𑍍𑌣𑌮𑌾𑌸𑍀 𑌸 𑌯𑌵𑌮𑌧𑍍𑌯𑌃 । 𑌅𑌷𑍍𑌟𑍌 𑌗𑍍𑌰𑌾𑌸𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌤𑌿𑌦𑌿𑌨𑌮𑌶𑍍𑌨𑍀𑌯𑌾𑌤𑍍 𑌸 𑌯𑌤𑌿𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌃 । 𑌸𑌾𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌤𑌶𑍍𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑌶𑍍𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑌶𑍍𑌚 𑌶𑌿𑌶𑍁𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌃 । 𑌯𑌥𑌾𑌕𑌥𑌞𑍍𑌚𑌿𑌤𑍍𑌪𑌿𑌣𑍍𑌡𑌾𑌨𑌾𑌂 𑌤𑌿𑌸𑍍𑌰𑍋𑌽𑌶𑍀𑌤𑍀𑌰𑍍𑌽𑌶𑍍𑌨𑍀𑌯𑌾𑌤𑍍 𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌃’ 𑌇𑌤𑌿 ॥

### 𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑍇 𑌗𑍍𑌰𑌾𑌸𑌪𑌰𑌿𑌮𑌾𑌣𑌮𑍍 ॥

𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑍇 𑌵𑌿𑌹𑌿𑌤𑌸𑍍𑌯 𑌪𑌿𑌣𑍍𑌡𑌸𑍍𑌯 𑌪𑌰𑌿𑌮𑌾𑌣𑌮𑌾𑌹 𑌪𑌰𑌾𑌶𑌰𑌃—

‘𑌕𑍁𑌕𑍍𑌕𑍁𑌟𑌾𑌣𑍍𑌡𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂 𑌤𑍁 𑌗𑍍𑌰𑌾𑌸𑌂 𑌵𑍈 𑌪𑌰𑌿𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 ।
𑌅𑌨𑍍𑌯𑌥𑌾 𑌭𑌾𑌵𑌦𑍋𑌷𑍇𑌣 𑌨 𑌧𑌰𑍍𑌮𑍋 𑌨 𑌚 𑌶𑍁𑌧𑍍𑌯𑌤𑌿’ 𑌇𑌤𑌿 ॥

### 𑌵𑍍𑌰𑌤𑌪𑌾𑌰𑌣𑌾𑌨𑌨𑍍𑌤𑌰𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑍍 ॥

𑌵𑍍𑌰𑌤𑌪𑌾𑌰𑌣𑌾𑌨𑌨𑍍𑌤𑌰𑌂 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑌾𑌹 𑌸 𑌏𑌵—

‘𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑍇 𑌤𑌤𑌶𑍍𑌚𑍀𑌰𑍍𑌣𑍇 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑍍𑌬𑍍𑌰𑌾𑌹𑌣𑌭𑍋𑌜𑌨𑌮𑍍 । 𑌗𑍋𑌦𑍍𑌵𑌯𑌂 𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌯𑍁𑌗𑍍𑌮𑌂 𑌚 𑌦𑌦𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌯 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌮𑍍’ 𑌇𑌤𑌿 ॥

---

டும். அமாவாஸ்யையில் புஜிக்கக்கூடாது. இது யவமத்யம், பிபீலிகா மத்யம் என்று. எதற்கு அமாவாஸ்யை நடுவில் வருகிறதோ அது பிபீலிகா மத்யம். எதற்குப் பூர்ணிமை நடுவில் வருகிறதோ அதற்கு யவமத்யம். ஒவ்வொரு நாளிலும் எட்டுக்கபளங்களைப் புஜிக்கவேண்டும். இது யதிசாந்த்ராயணம். இரவிலும் பகலிலும் நான்கு நான்கு கபளங்களைப் புஜிக்கவேண்டும். இது சிசுசாந்த்ராயணம். எந்த விதத்திலாலாவது இருநூற்று நாற்பது கபளங்களை ஒரு மாஸத்தில்புஜிக்கவேண்டும். இது ஸாமான்ய சாந்த்ராயணம் எனப்படும், என்று.

### சாந்த்ராயணத்தில் கபளத்தின் பரிமாணம்.

சாந்த்ராயணத்தில் சொல்லப்பட்டுள்ள கபளத்தின் பரிமாணத்தைச் சொல்லுகிறார்,

**பராசரர்:—** கபளத்தைக் கோழியின் முட்டையளவுள்ளதாகச் செய்யவேண்டும். வேறு விதமாகச் செய்தால் புண்யமில்லை. வ்ரதமும் ஸித்திப்பதில்லை.

### வ்ரதம் அனுஷ்டித்த பிறகு செய்யவேண்டியது.

**பராசரர்:—** ப்ராயஸ்சித்தம் அனுஷ்டிக்கப்பட்ட பிறகு ப்ராம

सङ्ख्याविशेषानभिधानाच्छक्त्यनुसारेण ब्राह्मणभोजनं वेदितव्यम् ॥

चान्द्रायणस्य फलनिरूपणम् ॥

चान्द्रायणस्य फलं दर्शयति यमः—
'यत्किञ्चित्कुरुते पापं कर्मणा मनसा गिरा ।
विप्रश्चान्द्रायणं कृत्वा तस्मात् पापात् प्रमुच्यते ॥
षण्मासान् विधिवत्कृत्वा हविष्याशी समाहितः ।
व्यपेतकल्मषो विप्रश्चन्द्रस्यैति सलोकताम्' इति ॥

व्रतग्रहणप्रकारः ॥

व्रतग्रहणप्रकारमाह विष्णुः—
'सर्वपापेषु सर्वेषां व्रतानां विधिपूर्वकम् । ग्रहणं सम्प्रवक्ष्यामि प्रायश्चित्ते चिकीर्षिते ॥
दिनान्ते नखरोमादीन् प्रवाप्य स्नानमाचरेत् । भस्मगो

---

ஹ்மணர்களைப் புஜிப்பிக்கவேண்டும். இரண்டு பசுக்களையும், இரண்டு வஸ்த்ரங்களையும் ப்ராம்ஹணனுக்குத் தக்ஷிணையாகக் கொடுக்க வேண்டும்.

கணக்கைச் சொல்லாததால் சக்தியை யனுஸரித்து ப்ராம்ஹண போஜனத்தை யறியவும்.

**சாந்த்ராயண பலத்தின் நிரூபணம்.**

**யமன்:**—ப்ராம்ஹணன் தேஹத்தாலும், மனஸாலும், வாக்கினாலும் எந்தப் பாபத்தைச் செய்கிறானோ அந்தப் பாபத்தினின்றும் சாந்த்ராயணம் செய்தால் விடுபடுவான். ப்ராம்ஹணன் ஆறுமாஸம் வரையில் ஹவிஸ்ஸைப் புஜிப்பவனாய் இவைகளைச் செய்தால், பாபம் நீங்கியவனாய், சந்த்ரனின் ஸாலோக்யத்தை யடைகிறான்.

**வ்ரதத்தை ஆரம்பிக்கும் ப்ரகாரம்.**

**விஷ்ணு:**— எல்லாப் பாபங்களுக்கும் செய்யப்படும் எல்லா வ்ரதங்களிலும் விதியுடன் ஆரம்பத்தைச் சொல்லுகிறேன். ப்ராயச்சித்தத்தைச் செய்ய விரும்பியிருக்கும்பொழுது, ஸாயங்காலத்தில் நகம், ரோமம் முதலியவைகளை வபனம் செய்துகொண்டு, ஸ்நானம் செய்யவேண்டும். விபூதி, கோமயம், மண், தீர்த்தம், பஞ்ச

उपप्राश्यापि पञ्चगव्यादिभिर्व्रतैः ॥ मलापकर्षणं कार्यं बाह्यशौचोपसिद्धये' इति ॥

जाबालिः—

'कृच्छ्रादौ सर्वकृच्छ्राणां समाप्तौ च विशेषतः ।
आज्येनैव हि शालाग्नौ जुहुयाद्व्याहृतीः पृथक् ॥
गात्राभ्यङ्गं शिरोभ्यङ्गं ताम्बूलमनुलेपनम् । व्रतस्थो वर्जयेत्सर्वं यच्चान्यद्बलरागकृत्' इति ॥

सङ्कल्पितस्य व्रतस्यानाचरणे प्रत्यवायः ॥

सङ्कल्पितस्य व्रतस्यानाचरणे प्रत्यवायमाह शाकलेयः—

'पूर्वं व्रतं गृहीत्वा तु नाचरेत्कामतो हि यः । जीवन्भवति चण्डालो मृतः श्वा चाभिजायते' इति ॥

ब्रह्मकूर्चस्वरूपं तत्प्रमाणं च ॥

ब्रह्मकूर्चस्वरूपमाह पराशरः—

'गोमूत्रं गोमयं क्षीरं दधि सर्पिः कुशोद

---

கவ்யம் முதலியதால் தேகம் சுத்தமாவதற்காக மலாபகர்ஷணம் செய்யவேண்டும்.

**ஜாபாலி:—** எல்லா க்ருச்ரங்களின் ஆரம்பத்திலும், ஸமாப்தியிலும், அவச்யம் சாலாக்னியில் தனித்தனி வ்யாஹ்ருதிகளால் நெய்யினால் ஹோமம் செய்யவேண்டும். தேஹத்தில் எண்ணெயைத் தடவுதல், தலையில் எண்ணெயைத் தடவுதல், தாம்பூலம், சந்தனம் பூசிக்கொள்ளல், இவைகளை எல்லாம் க்ருச்ரம் அனுஷ்டிப்பவன் வர்ஜிக்கவேண்டும். இதைத் தவிர்த்து வலிமையையும் காமத்தையும் செய்யக்கூடியது எதுவோ அதையும் விடவேண்டும்.

## ஸங்கல்பிக்கப்பட்ட நியமத்தை அனுஷ்டிக்காவிடில் பாபம்.

**சாகலேயர்:—** எவன் முதலில் நியமத்தை ஸங்கல்பித்துப் பிறகு ஸ்வேச்சையாய் அனுஷ்டிக்காமலிருக்கின்றானோ அவன் பிழைத்திருக்கும்போதே சண்டாளனாகிறான். இறந்த பிறகு நாயாகப் பிறக்கிறான்.

## ப்ரம்ஹ கூர்ச்சத்தின் ஸ்வரூபமும் அதன் ப்ரமாணமும்.

**பராசரர்:—** கோமூத்ரம், கோமயம், பால், தயிர், நெய், தர்ப்ப

𑌕𑌂 𑌚 । 𑌨𑌿𑌰𑍍𑌦𑌿𑌷𑍍𑌟𑌂 𑌪𑌞𑍍𑌚𑌗𑌵𑍍𑌯𑌂 𑌤𑍁 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌂 𑌪𑌾𑌪𑌶𑍋𑌧𑌨𑌮𑍍 ॥
𑌗𑍋𑌮𑍂𑌤𑍍𑌰𑌂 𑌕𑍃𑌷𑍍𑌣𑌵𑌰𑍍𑌣𑌾𑌯𑌾𑌃 𑌶𑍍𑌵𑍇𑌤𑌾𑌯𑌾𑌶𑍍𑌚𑍈𑌵 𑌗𑍋𑌮𑌯𑌮𑍍 ।
𑌪𑌯𑌶𑍍𑌚 𑌤𑌾𑌮𑍍𑌰𑌵𑌰𑍍𑌣𑌾𑌯𑌾 𑌰𑌕𑍍𑌤𑌾𑌯𑌾 𑌗𑍃𑌹𑍍𑌯𑌤𑍇 𑌦𑌧𑌿 ॥ 𑌕𑌪𑌿𑌲𑌾𑌯𑌾
𑌘𑍃𑌤𑌂 𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌕𑌾𑌪𑌿𑌲𑌮𑍇𑌵 𑌵𑌾 । 𑌮𑍂𑌤𑍍𑌰𑌮𑍇𑌕𑌪𑌲𑌂
𑌦𑌦𑍍𑌯𑌾𑌦𑌙𑍍𑌗𑍁𑌷𑍍𑌠𑌾𑌰𑍍𑌧𑌂 𑌤𑍁 𑌗𑍋𑌮𑌯𑌮𑍍 ॥ 𑌕𑍍𑌷𑍀𑌰𑌂 𑌸𑌪𑍍𑌤𑌪𑌲𑌂 𑌦𑌦𑍍𑌯𑌾𑌦𑍍𑌦𑌧𑌿
𑌤𑍍𑌰𑌿𑌪𑌲𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌘𑍃𑌤𑌮𑍇𑌕𑌪𑌲𑌂 𑌦𑌦𑍍𑌯𑌾𑌤𑍍 𑌪𑌲𑌮𑍇𑌕𑌂 𑌕𑍁𑌶𑍋
𑌦𑌕𑌮𑍍 ॥ 𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍍𑌯𑌾𑌽𑌽𑌦𑌾𑌯 𑌗𑍋𑌮𑍂𑌤𑍍𑌰𑌂 𑌗𑌨𑍍𑌧𑌦𑍍𑌵𑌾𑌰𑍇𑌤𑌿 𑌗𑍋𑌮𑌯𑌮𑍍 ।
𑌆𑌪𑍍𑌯𑌾𑌯𑌸𑍍𑌵𑍇𑌤𑌿 𑌚 𑌕𑍍𑌷𑍀𑌰𑌂 𑌦𑌧𑌿𑌕𑍍𑌰𑌾𑌵𑍍𑌣𑍍𑌣𑌸𑍍𑌤𑌥𑌾 𑌦𑌧𑌿 ॥ 𑌤𑌥𑌾 𑌶𑍁𑌕𑍍𑌰
𑌮𑌸𑍀𑌤𑍍𑌯𑌾𑌜𑍍𑌯𑌂 𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌤𑍍𑌵𑌾 𑌕𑍁𑌶𑍋𑌦𑌕𑌮𑍍 । 𑌪𑌞𑍍𑌚𑌗𑌵𑍍𑌯𑌮𑍃𑌚𑌾
𑌪𑍂𑌤𑌂 𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑍇𑌦𑌗𑍍𑌨𑌿𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑍌 ॥ 𑌆𑌪𑍋𑌹𑌿𑌷𑍍𑌠𑍇𑌤𑍍𑌯𑍃𑌚𑌾𑌽𑌽
𑌲𑍋𑌡𑍍𑌯 𑌮𑌾𑌨𑌸𑍍𑌤𑍋𑌕𑍇𑌤𑌿 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌯𑍇𑌤𑍍 । 𑌸𑌪𑍍𑌤𑌾𑌵𑌰𑌾𑌸𑍍𑌤𑍇 𑌚 𑌦𑌰𑍍𑌭𑌾
𑌅𑌚𑍍𑌛𑌿𑌨𑍍𑌨𑌾𑌗𑍍𑌰𑌾𑌃 𑌶𑍁𑌕𑌤𑍍𑌵𑌿𑌷𑌃 ॥ 𑌏𑌤𑍈𑌰𑍁𑌦𑍍𑌧𑍃𑌤𑍍𑌯 𑌹𑍋𑌤𑌵𑍍𑌯𑌂
𑌪𑌞𑍍𑌚𑌗𑌵𑍍𑌯𑌂 𑌯𑌥𑌾𑌵𑌿𑌧𑌿 । 𑌇𑌰𑌾𑌵𑌤𑍀 𑌇𑌦𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍍𑌮𑌾𑌨𑌸𑍍𑌤𑍋𑌕𑍇 𑌚

---

ஜலம் இவை பஞ்சகவ்யம் எனப்படுகிறது. இது சுத்திகாம். பாபத்தைப் போக்கக்கூடியது. கறுப்புப் பசுவின் மூத்ரமும், வெள்ளைப் பசுவின் கோமயமும், தாம்ரவர்ணப் பசுவின் பாலும், சிவப்புப் பசுவின் தயிரும், கபிலப் பசுவின் (காராம்பசு) நெய்யும் க்ரஹிக்கப்படவேண்டும். அல்லது கபிலப் பசுவினின்றே எல்லாவற்றையும், க்ரஹிக்கலாம். ஒரு பலம் மூத்ரம், அரைக் கட்டைவிரலளவு கோமயம், ஏழு பலம் பால், மூன்று பலம் தயிர், ஒரு பலம் நெய், ஒரு பலம் தர்ப்பை ஜலம் என்று சேர்க்கவும். காயத்ரியால் கோமூத்ரமும், கந்தத்வாராம் என்ற மந்த்ரத்தால் கோமயமும், ஆப்யாயஸ்வ என்ற மந்த்ரத்தால் பாலும், ததிக்ராவிண்ண: என்ற மந்த்ரத்தால் தயிரும், சுக்ரமஸி என்ற மந்த்ரத்தால் நெய்யும், தேவஸ்யத்வா என்ற மந்த்ரத்தால் தர்ப்ப ஜலமும் சேர்க்கப்படவேண்டும். இவ்விதம் மந்த்ரத்தால் சுத்தமான பஞ்சகவ்யத்தை அக்னியின் எதிரில் வைக்கவேண்டும். ஆபோஹிஷ்ட என்ற மந்த்ரத்தால் கலக்கி, மானஸ்தோகே என்ற மந்த்ரத்தை ஜபிக்கவும். ஏழுக்குக் குறையாமலுள்ளதும், நுனியுள்ளதும், கிளிபோல் பச்சை நிறமுள்ளதுமாகிய தர்ப்பங்களால் பஞ்சகவ்யத்தை எடுத்து விதிப்படி ஹோமம் செய்யவேண்டும். இராவதீ, இதம் விஷ்ணு:, மானஸ்தோகே, சம்வதீ என்ற மந்த்ரங்களால் ஹோமம் செய்ய வேண்டும். இப்படி ஹோமம் செய்து, பிறகு மீதியுள்ளதை ப்ராம

ஶாவதீ ॥ ஸ தாவதேவ ஹோதவ்யம் ஹுதஶேஷம் பிபேத் த்விஜ꞉ । ஆலோட்ய ப்ரணவேநைவ அபிமந்த்ர்ய ப்ரணவேந து । உத்த்ருத்ய ப்ரணவேநைவ பிபேச்ச ப்ரணவேந து ॥ மத்யமேந பலாஶஸ்ய பத்மபத்ரேண வா பிபேத் । ஸ்வர்ணபாத்ரேண ரௌப்யேண ப்ரஹ்மதீர்த்தேந வா புந꞉ ॥ யத்த்வகஸ்திகதம் பாபம் தேஹே திஷ்டதி தேஹிநாம் । ப்ரஹ்மகூர்ச்சோ தஹேத் ஸர்வம் ப்ரதீப்தோக்நிரிவேந்தநம் ॥ பவித்ரம் த்ரிஷு லோகேஷு தேவதாபிரதிஷ்டிதம் । வருணஶ்சைவ கோமூத்ரே கோமயே ஹவ்யவாஹந꞉ ॥ தத்நி வாயு꞉ ஸமுத்திஷ்ட꞉ ஸோம꞉ க்ஷீரே க்ருதே ரவி꞉' இதி ॥

யதோக்தபரிமாணாநி த்ரவ்யாணி பலாஶாதிபத்ரே காயத்ர்யாதிபி꞉ ஸம்யோஜ்ய ஆபோஹிஷ்டேதி த்ருசேந ஆலோட்ய மாநஸ்தோகேத்யநயா அபிமந்த்ர்ய ஸப்தாவரை꞉ அச்சிந்நாக்ரை꞉ ஹரிதைர்த்தர்பை꞉ உத்த்ருத்ய இராவதீ இதம் விஷ்ணுரிதி

ஹுணன் பானம் செய்யவேண்டும். ப்ரணவத்தால் கலக்கி, ப்ரணவத்தால் அபிமந்த்ரித்து, ப்ரணவத்தாலேயே எடுத்து, ப்ரவணத்தாலேயே பருகவேண்டும். பலாச வ்ருக்ஷத்தின் நடு இலையாலாவது தாமரை இலையாலாவது பானம் செய்யவேண்டும். அல்லது ஸ்வர்ண பாத்ரம், வெள்ளிப் பாத்ரம், ப்ரம்ஹதீர்த்தம் இவைகளில் ஒன்றினுல் பருகலாம். ப்ராணிகளுக்குத் தேஹத்தில் தோல், எலும்பு, இவைகளில் எந்தப் பாபம் இருக்குமோ அப்பாபம் எல்லாவற்றையும் ப்ரம்ஹகூர்ச்ச பஞ்சகவ்யம், ஜ்வலிக்கின்ற நெருப்பு விறகை எரிப்பதுபோல் எரிக்கும். மூவ்வுலகங்களுள் பரிசுத்தமாகியது. தேவதைகளால் வஸிக்கப்பட்டது இது. கோமூத்ரத்தில் வருணனும், கோமயத்தில் அக்னியும், தயிரில் வாயுவும், பாலில் சந்த்ரனும், நெய்யில் ஸூர்யனும் வஸிக்கின்றூர்கள், என்று சொல்லப் படுகிறது.

முன் சொல்லப்பட்ட அளவுள்ள த்ரவ்யங்களைப் புரசு முதலிய இலையில் காயத்ரீ முதலிய மந்த்ரங்களால் ஒன்றுசேர்த்து வைத்து, ஆபோஹிஷ்ட என்ற மூன்று ருக்குகளால் கலக்கி, மானஸ்தோகே என்ற மந்த்ரத்தால் அபிமந்த்ரித்து, ஏழுக்குக் குறையாத பச்சை நிறமுள்ள தர்ப்பங்களால் எடுத்து, இராவதீ, இதம்விஷ்ணு:,

स्तोके शंनो देवीरभिष्टय इति चतसृभिरग्नये स्वाहा सोमाय स्वाहा सवित्रे स्वाहा ओं स्वाहा अग्नये स्विष्टकृते स्वाहेति प्राजापत्यैर्मन्त्रैश्च पलाशपत्रेण हुत्वा हुतशेषं हस्तेन काष्ठेन वा निर्मथ्य पिबेत् ॥

## गोमूत्रादीनां प्रमाणान्तरम्

गोमूत्रादीनां परिमाणान्तरमाह प्रजापतिः —

'गोमयाद्द्विगुणं मूत्रं सर्पिर्दद्याच्चतुर्गुणम् । क्षीरमष्टगुणं देयं दधि पञ्चगुणं तथा' इति ॥

अत्र गोमयस्य परिमाणविशेषानभिधानाद्वचनान्तरेणाङ्गुष्ठार्धपरिमितं गोमयं ग्राह्यम् । पर्वद्वयोपेतमङ्गुष्ठम् । तस्योपरितनपर्वणा समानपरिमाणं गोमयं स्वीकृत्य यथोक्तोत्तराभिवृद्ध्या गोमूत्रादीनि योजयेत् । एतस्य पूर्वोक्तपरिमाणेन सह विकल्प्येत ॥

---

மானஸ்தோகே, சந்நோதேவீ: என்ற நான்கு மந்த்ரங்களாலும், அக்நயே ஸ்வாஹா, ஸோமாய ஸ்வாஹா, ஸவித்ரே ஸ்வாஹா, ஓம் ஸ்வாஹா, அக்னயேஸ்விஷ்டக்ருதே ஸ்வாஹா என்று ப்ராஜாபதியினால் சொல்லப்பட்ட மந்த்ரங்களாலும் புரசு இலையால் ஹோமம் செய்து, ஹோமம் செய்த மீதியை கையாலாவது, ஸமித்தாலாவது கலக்கிக் குடிக்கவேண்டும்.

## கோமூத்ரம் முதலியவைக்கு மற்றொரு அளவு.

**ப்ரஜாபதி:**-கோமயத்தைவிட இரண்டு மடங்கு கோமூத்ரமும், அதைவிட நான்கு மடங்கு நெய், அதைவிட எட்டு மடங்கு பால், அதைவிட ஐந்து மடங்கு தயிர் (என்று சேர்க்கப்படவேண்டும்).

இந்த வசனத்தில் கோமயத்திற்கு அளவு சொல்லாததால், மற்றொரு வசனத்தால் அரைக் கட்டைவிரலளவு கோமயம் எடுத்துக் கொள்ளப்படவேண்டும். இரண்டு கணு உள்ளது அங்குஷ்டம் என்பது. அந்த அங்குஷ்டத்தில் மேலுள்ள கணுவுடன் ஸரி அளவுள்ள கோமயத்தை க்ரஹித்து, முன் சொல்லியபடி மேல்

स आह —

"पालाशं पद्मपत्रं वा ताम्रं वाऽथ हिरण्मयम् । गृहीत्वा साधयित्वाऽथ ततः कूर्चं समाहरेत् ॥ साधयित्वाथ दर्भेषु पालाशैः पत्रकैरथ । ततस्संस्तृत्य होतव्यं देवताभ्यो यथाक्रमम् ॥ अग्नये चैव सोमाय सवित्रे च तथैव च । प्रणवेन तथा हुत्वा स्विष्टकृच्च तथैव च" इति ॥

ब्रह्मकूर्चविधौ कालविशेषदेशविशेषौ ॥

ब्रह्मकूर्चस्य कालविशेषमाह स एव —

"चतुर्दश्यामुपोष्याथ पौर्णमास्यां समाचरेत्" इति ॥

जाबालिरपि —

"एकरात्रोषितो भूत्वा पौर्णमास्यां विशेषतः । पञ्चगव्यं पिबेत्प्रातर्ब्रह्मकूर्चविधिः स्मृतः" इति ॥

---

மேல் வ்ருத்தியுடன் கோமூத்ரம் முதலியவைகளைச் சேர்க்க வேண்டும். இது முன் சொல்லிய அளவுடன் விகல்பிக்கப்படுகிறது. (இஷ்டப்படி ஏதாவது ஒரு அளவை க்ரஹிக்கலாம்).

**ப்ரஜாபதி:**—பாலாசவ்ருக்ஷத்தின் இலை, தாமரை இலை, தாம்ர பாத்ரம், தங்கப்பாத்ரம் இவைகளில் ஒன்று எடுத்து வைத்து, பிறகு கர்மாவை ஆரம்பிக்கவேண்டும். தர்ப்பங்களில் வைத்து, புரசு இலைகளால் அதை யெடுத்து, மேற்சொல்லப்படும் தேவதை களுக்கு க்ரமப்படி ஹோமம் செய்யவேண்டும். அக்னி, ஸோமன், ஸவிதா, இவர்களுக்கும் ப்ரணவத்துடன் ஹோமம் செய்து, ஸ்விஷ்டக்ருத்து ஹோமம் செய்யவேண்டும்.

## ப்ரம்ஹ கூர்ச்சவிதியில் கால விசேஷமும் தேச விசேஷமும்.

**ப்ரஜாபதி:**— சதுர்த்தசியில் உபவாஸமிருந்து, பூர்ணிமையில் செய்யவேண்டும்.

**ஜாபாலியும்:**— ஒரு நாள் உபவாஸமிருந்து பூர்ணிமையில் காலையில் பிரம்ஹகூர்ச்சம் என்கிற பஞ்சகவ்யத்தைப் பானம் செய்யவேண்டும்.

𑌦𑍇𑌶𑌵𑌿𑌶𑍇𑌷𑌮𑌾𑌹 𑌶𑌾𑌤𑌾𑌤𑌪𑌃—

'𑌨𑌦𑍀𑌤𑍀𑌰𑍇𑌷𑍁 𑌗𑍋𑌷𑍍𑌠𑍇𑌷𑍁 𑌪𑍁𑌣𑍍𑌯𑍇𑌷𑍍𑌵𑌾𑌯𑌤𑌨𑍇𑌷𑍁 𑌵𑌾 । 𑌤𑌤𑍍𑌰 𑌗𑌤𑍍𑌵𑌾 𑌶𑍁𑌚𑍌 𑌦𑍇𑌶𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌕𑍂𑌰𑍍𑌚𑌂 𑌸𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍' 𑌇𑌤𑌿 ॥

## 𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌾𑌮𑍍𑌨𑌾𑌯𑌨𑌿𑌰𑍂𑌪𑌣𑌮𑍍 ॥

𑌅𑌥 𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌕𑍇𑌨𑌚𑌿𑌨𑍍𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑍇𑌨 𑌅𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌾𑌶𑌕𑍍𑌤𑍌 𑌯𑌥𑌾𑌯𑍋𑌗𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌾𑌮𑍍𑌨𑌾𑌯𑌾 𑌉𑌚𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 ॥

𑌤𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌾𑌮𑍍𑌨𑌾𑌯𑌾𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌮𑌤𑍇 𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑌾𑌃—

'𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑍋𑌽𑌯𑍁𑌤𑌂 𑌚 𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍍𑌯𑌾 𑌉𑌦𑌵𑌾𑌸𑌸𑍍𑌤𑌥𑍈𑌵 𑌚 । 𑌧𑍇𑌨𑍁𑌪𑍍𑌰𑌦𑌾𑌨𑌂 𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌯 𑌸𑌮𑌮𑍇𑌤𑌚𑍍𑌚𑌤𑍁𑌷𑍍𑌟𑌯𑌮𑍍 ॥ 𑌤𑌿𑌲𑌹𑍋𑌮𑌸𑌹𑌸𑍍𑌰𑌂 𑌤𑍁 𑌵𑍇𑌦𑌪𑌾𑌰𑌾𑌯𑌣𑌂 𑌤𑌥𑌾 । 𑌵𑌿𑌪𑍍𑌰𑌾 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶 𑌵𑌾 𑌭𑍋𑌜𑍍𑌯𑌾𑌃 𑌪𑌾𑌵𑌕𑍇𑌷𑍍𑌟𑌿𑌸𑍍𑌤𑌥𑍈𑌵 𑌚 ॥ 𑌅𑌥 𑌵𑌾 𑌪𑌾𑌵𑌮𑌾𑌨𑍇𑌷𑍍𑌟𑌿𑌃 𑌸𑌮𑌾𑌨𑍍𑌯𑌾𑌹𑍁𑌰𑍍𑌮𑌨𑍀𑌷𑌿𑌣𑌃' 𑌇𑌤𑌿 ॥ 𑌤𑌿𑌲𑌹𑍋𑌮𑌸𑌹𑌸𑍍𑌰𑌂 𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍍𑌯𑌾 ॥

---

**சாதாதபர்:—** நதீதீரம், மாட்டுக்கொட்டில், புண்யமான தேவாலயங்கள், இவைகளில் ஒன்றை யடைந்து, சுத்தமான ப்ரதேசத்தில் ப்ரம்ஹகூர்ச்சத்தைச் செய்யவேண்டும்.

## ப்ராஜாபத்ய க்ருச்ரம் முதலியதற்குச் சமமாயுள்ளவை.

இனி முன்சொல்லப்பட்ட க்ருச்ரங்களை எக்காரணத்தாலாவது அனுஷ்டிக்கச் சக்தியில்லாவிடில், சாஸ்த்ரப்படி ப்ரத்யாம்நாயம் (ஸமமானது) சொல்லப்படுகிறது. அதில் ப்ராஜாபத்ய க்ருச்ரத்திற்கு ஸமமானவைகள் சொல்லப்பட்டுள்ளன.

**சதுர்விம்சதிமதத்தில்:—** ப்ராஜாபத்யக்ருச்ரம், காயத்ரியின் பதினாயிரம் ஜபம், ஜலத்தில் வஸிப்பது, ப்ராம்ஹணனுக்குக் கோதானம் செய்வது, என்ற இந்நான்கும் ஸமமாகும். ஆயிரம் முறை திலஹோமம், வேதபாராயணம், பன்னிரண்டு ப்ராம்ஹணர்களுக்குப் போஜனம், பாவகேஷ்டி, அல்லது பாவமானேஷ்டி இவை ஸமம் என்கிறார்கள் வித்வான்கள். ஸஹஸ்ரதிலஹோமம் என்பது காயத்ரியினால் செய்யவேண்டியது.

𑌪𑌰𑌾𑌶𑌰𑌃—

'𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑍋 𑌦𑍇𑌵𑍍𑌯𑌯𑍁𑌤𑌂 𑌚𑍈𑌵 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌯𑌾𑌮𑌶𑌤𑌦𑍍𑌵𑌯𑌮𑍍 ।
𑌪𑍁𑌣𑍍𑌯𑌤𑍀𑌰𑍍𑌥𑍇𑌽𑌨𑌾𑌰𑍍𑌦𑍍𑌰𑌶𑌿𑌰𑌃𑌸𑍍𑌨𑌾𑌨𑌂 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌸𑌙𑍍𑌖𑍍𑌯𑌯𑌾 ॥
𑌦𑍍𑌵𑌿𑌯𑍋𑌜𑌨𑌂 𑌤𑍀𑌰𑍍𑌥𑌯𑌾𑌤𑍍𑌰𑌾 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌮𑍇𑌕𑌂 𑌪𑍍𑌰𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌮𑍍' 𑌇𑌤𑌿 ॥

𑌅𑌨𑌾𑌰𑍍𑌦𑍍𑌰𑌂 𑌶𑌿𑌰𑍋 𑌯𑌸𑍍𑌯 𑌸𑌅𑌨𑌾𑌰𑍍𑌦𑍍𑌰𑌶𑌿𑌰𑌾𑌃 । 𑌤𑌸𑍍𑌯 𑌸𑍍𑌨𑌾𑌨𑌮𑌨𑌾𑌰𑍍𑌦𑍍𑌰𑌶𑌿𑌰𑌃𑌸𑍍𑌨𑌾𑌨𑌮𑍍 । 𑌸𑌕𑍃𑌤𑍍 𑌸𑍍𑌨𑌾𑌤𑍍𑌵𑌾 𑌤𑌦𑌙𑍍𑌗𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌂 𑌚 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌕𑍇𑌶𑌾𑌨𑍍 𑌶𑍋𑌷𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌤𑌤𑍋 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌸𑍍𑌨𑌾𑌨𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 । 𑌏𑌵𑌂𑌵𑌿𑌧𑌸𑍍𑌨𑌾𑌨𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌕𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌤𑍀𑌰𑍍𑌥𑌕𑍃𑌤𑌮𑌿𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥

𑌹𑍇𑌮𑌾𑌦𑍍𑌰𑍌—

'𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑍋𑌽𑌯𑍁𑌤𑌂 𑌚 𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍍𑌯𑌾𑌃 𑌵𑌿𑌪𑍍𑌰𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌭𑍋𑌜𑌨𑌮𑍍 ।
𑌤𑌿𑌲𑌹𑍋𑌮𑌸𑌹𑌸𑍍𑌰𑌂 𑌵𑌾 𑌸𑌮𑌮𑍇𑌤𑌚𑍍𑌚𑌤𑍁𑌷𑍍𑌟𑌯𑌮𑍍' 𑌇𑌤𑌿 ॥

𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌭𑍋𑌜𑌨𑌂 𑌨𑌿𑌰𑍍𑌧𑌨𑌵𑌿𑌷𑌯𑌮𑍍 । 𑌧𑌨𑌿𑌕𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌤𑌿𑌦𑌿𑌨𑌂 𑌪𑌞𑍍𑌚 𑌪𑌞𑍍𑌚𑍇𑌤𑌿 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌸𑍁 𑌦𑌿𑌵𑌸𑍇𑌷𑍁 𑌷𑌷𑍍𑌟𑌿𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌃 𑌭𑍋𑌜𑌨𑍀𑌯𑌾𑌃 ॥

---

**பராசரர்:**— ப்ராஜாபத்ய க்ருச்ரம், பதினாயிரம் காயத்ரீஜபம், இருநூறு ப்ராணாயாமம், புண்ய தீர்த்தத்தில் பன்னிரண்டுமுறை காய்ந்த தலையுடன் ஸ்நானம், இரண்டு யோஜனை தூரத்திலுள்ள தீர்த்தத்திற்கு யாத்ரை செய்வது, இவை ஒரு க்ருச்ரம் எனப்படுகிறது.

காய்ந்த தலை உள்ளவன் அனார்த்ரசிரஸ் எனப்படுவான். அவன் செய்யும் ஸ்நானம் அனார்த்ரசிரஸ்நானம். ஒரு முறை ஸ்நானம் செய்து, ஸ்நான அங்கங்களையும் அனுஷ்டித்து, மயிர்களை உலர்த்தி, பிறகு இரண்டாவது முறை ஸ்நானம் செய்யவேண்டும். இவ்விதமாகப் பன்னிரண்டு ஸ்நானம் புண்ய தீர்த்தத்தில் செய்யப்பட்டது. என்று பொருள்.

**ஹேமாத்ரியில்:**— ப்ராஜாபத்ய க்ருச்ரம், பதினாயிரம் காயத்ரீ ஜபம், பன்னிரண்டு ப்ராம்ஹணர்களைப் பூஜிப்பிப்பது, ஆயிரம் திலஹோமம், இவை நான்கும் ஸமம்.

பன்னிரண்டு ப்ராம்ஹணர்களுக்குப் போஜனம் என்றது பணமில்லாதவனைப்பற்றியது. பணமுள்ளவனுக்கு ஒவ்வொரு தினத்திலும் ஐந்து ப்ராம்ஹணர்கள் என்று பன்னிரண்டு நாட்களில் அறுபது ப்ராம்ஹணர்கள் பூஜிப்பிக்கப்படவேண்டும் ஆகையால்,

𑌅𑌥 𑌚 𑌸𑍍𑌮𑍃𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑍇—

‘𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌂 𑌚𑌰𑍇𑌤𑍍 𑌵𑌿𑌪𑍍𑌰𑍋 𑌯𑌦𑍍𑌯𑌶𑌕𑍍𑌤𑌃 𑌕𑌥𑌞𑍍𑌚𑌨 । 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌹𑌂 𑌪𑌞𑍍𑌚 𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌗𑍍𑌰𑍍𑌯𑌾𑌨𑍍 𑌭𑍋𑌜𑌯𑍇𑌤𑍍 𑌸𑍍𑌵𑍇𑌪𑍍𑌸𑌿𑌤𑌾𑌨𑍍’ 𑌇𑌤𑌿 ॥

𑌅𑌨𑍍𑌯𑌤𑍍𑌰𑌾𑌪𑌿 —

‘𑌷𑌷𑍍𑌟𑌿𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌰𑍍𑌵𑌾 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶 𑌵𑌾 𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌃 । 𑌤𑌾𑌵𑌦𑍍𑌭𑍋𑌜𑌨𑌪𑌰𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌂 𑌧𑌾𑌨𑍍𑌯𑌂 𑌤𑌨𑍍𑌮𑍂𑌲𑍍𑌯𑌮𑍇𑌵 𑌵𑌾 ॥ 𑌤𑌤𑍍𑌸𑍍𑌵𑌲𑍍𑌪𑌾𑌧𑌿𑌕𑍍𑌯𑌂 𑌸𑌂𑌪𑌦𑍍𑌵𑍈𑌷𑌮𑍍𑌯𑌕𑌾𑌰𑌣𑌮𑍍’ 𑌇𑌤𑌿 ॥

𑌮𑌾𑌧𑌵𑍀𑌯𑍇—

‘𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌶𑌕𑍍𑌤𑍌 𑌧𑍇𑌨𑍁𑌂 𑌦𑌦𑍍𑌯𑌾𑌦𑍍𑌦𑍍𑌵𑌿𑌜𑍋𑌤𑍍𑌤𑌮𑌃 । 𑌧𑍇𑌨𑍍𑌵𑌭𑌾𑌵𑍇 𑌪𑍍𑌰𑌦𑌾𑌤𑌵𑍍𑌯𑌂 𑌤𑌨𑍍𑌮𑍂𑌲𑍍𑌯𑌂 𑌵𑌾 𑌨 𑌸𑌂𑌶𑌯𑌃’ 𑌇𑌤𑌿 ॥

𑌮𑍂𑌲𑍍𑌯𑌂 𑌚 𑌯𑌥𑌾𑌶𑌕𑍍𑌤𑌿 𑌦𑍇𑌯𑌮𑍍, ‘𑌗𑌵𑌾𑌮𑌭𑌾𑌵𑍇 𑌨𑌿𑌷𑍍𑌕𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑌦𑌰𑍍𑌧𑌂 𑌪𑌾𑌦𑌮𑍇𑌵 𑌵𑌾 । 𑌪𑌾𑌦𑌹𑍀𑌨𑌂 𑌨 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌶𑌾𑌤𑌾𑌤𑌪𑍋𑌽𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍’ 𑌇𑌤𑌿 𑌸𑍍𑌮𑌰𑌣𑌾𑌤𑍍 ॥

---

**ஓர் ஸ்ம்ருதி:—** *ப்ராஜாபத்ய க்ருச்ரத்தை யனுஷ்டிக்கும் ப்ராம்ஹணன் எவ்விதத்தாலாவது சக்தியற்றவனுகில், ஒவ்வொரு நாளும் விரும்பியவர்களாகிய சிறந்த ஐந்து ப்ராம்ஹணர்களை நன்ருகப் புஜிப்பிக்கவேண்டும், என்று.*

**மற்றோர் ஸ்ம்ருதியில்:—** *அறுபது, அல்லது இருபத்துநான்கு, அல்லது பன்னிரண்டு ப்ராம்ஹணர்களைப் புஜிப்பிக்கவேண்டும். அல்லது அவ்வளவு போஜனத்திற்குப் போதுமான தான்யமாவது, தான்யத்தின் மூல்யமாவது கொடுக்கப்படவேண்டும். அவ் விஷயத்தில் கணக்கில் உயர்வு குறைவு சொல்லியது அதிகாரியின் பணத்தின் நிறைவு குறைவுகளை அனுஸரித்துள்ளது.*

**மாதவீயத்தில்:—** *ப்ராஜாபத்ய க்ருச்ரத்தை யனுஷ்டிக்கச் சக்தியில்லாவிடில், ப்ராம்ஹணன் பசுவைத் தானம் செய்யவேண்டும். பசு இல்லாவிடில், பசுவின் மூல்யமாவது கொடுக்கப்படவேண்டும். ஸம்சயமில்லை.*

*மூல்யம் என்பது சக்திக்குத் தகுந்தபடி கொடுக்கப்படவேண்டும். “பசுக்களில்லாவிடில், ஒரு நிஷ்கத்தைக் கொடுக்கவேண்டும். அல்லது நிஷ்கத்தின் பாதியாவது, கால் பாகமாவது கொடுக்கப்படவேண்டும். கால் பாகத்திற்குக் குறைந்து கொடுக்கக் கூடாது, என்றார் சாதாதபர்” என்று ஸ்ம்ருதி இருப்பதால்.*

ஸ்ம்ருத்யந்தரே —

'ப்ராஜாபத்யம் து காயத்ர்யா அயுதம் ஜலவாஸஶ்சைவ ச ஸமுத்ரகாநதீஸ்நாநம் ஸமமேதச்சதுஷ்டயம்' இதி ॥ நதீஸ்நாநம் = ம்ருத்திகாஸ்நாநம் ॥

சாந்த்ராயணாதிஸமாநாநி ॥

சாந்த்ராயணாதீநாம் ஸமாநாநி சதுர்விம்ஶதிமதே தர்ஶிதாநி —

'சாந்த்ராயணம் ம்ருகாரேஷ்டி: பவித்ரேஷ்டிஸ்ததைவ ச । மித்ரவிந்தா பஶுஶ்சைவ க்ருச்ச்ரம் மாஸத்ரயம் ததா ॥ திலஹோமாயுதம் சைவ பராகத்வயமேவ ச । காயத்ர்யா லக்ஷஜப்யம் ச ஸமாந்யாஹுர்ப்ருஹஸ்பதி: ॥ நித்யநைமித்திகாநாம் ச காம்யாநாம் சைவ கர்மணாம் । இஷ்டீநாம் பஶுபந்தாநாம் அஶக்தௌ சரவ: ஸ்ம்ருதா: ॥ பராகதப்தக்ருச்ச்ராணாம் ஸ்தாநே க்ருச்ச்ரத்ரயம் சரேத் । வ்ரதஹோமாதிகம் பூர்வம் கல்பேஷு ப்ரயோகவச்ச' இதி ॥

---

ஓர் ஸ்ம்ருதியில்:— ப்ராஜாபத்ய க்ருச்ரம், பதினாயிரம் காயத்ரீ ஜபம், ஜலவாஸம், ஸமுத்ரத்தை யடையும் நதியில் ஸ்நானம் இந் நான்கும் ஸமமாகும்.

நதீஸ்நானம் என்றது ம்ருத்திகா ஸ்நான விதியுடன் செய்யும் ஸ்நானம்.

## சாந்த்ராயணம் முதலியதற்கு ஸமமானவைகள்.

சதுர்விம்சதிமதத்தில்:— சாந்த்ராயண க்ருச்ரம், ம்ருகாரேஷ்டி, பவித்ரேஷ்டி, மித்ரவிந்தா பசு, மூன்று மாஸங்களில் அனுஷ்டிக்கும் க்ருச்ரம், பதினாயிரம் திலஹோமம், இரண்டு பராக க்ருச்ரம், லக்ஷம் காயத்ரீஜபம் இவைகளை ஸமம் என்றார் ப்ருஹஸ்பதி. நித்யம், நைமித்திகம், காம்யம் என்ற கர்மங்கள், இஷ்டிகள், பசு பந்தங்கள் இவைகளைச் செய்ய முடியாவிடில், சருக்கள் விதிக்கப் பட்டுள்ளன. பராகம், தப்த க்ருச்ரம் இவைகளின் ஸ்தானத்தில் மூன்று க்ருச்ரங்களை யனுஷ்டிக்கவேண்டும். வ்ரதம், ஹோமம் முதலியதையாவது முன்சொல்லிய ப்ரயோகப்படி அனுஷ்டிக்க வேண்டும்.

𑌸𑍍𑌮𑍃𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑍇—

'𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌂 𑌤𑍍𑌰𑌯𑌃 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌾 𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍍𑌯𑌾 𑌅𑌯𑍁𑌤𑌤𑍍𑌰𑌯𑌮𑍍 । 𑌤𑌥𑌾 𑌮𑌹𑌾𑌨𑌦𑍀𑌸𑍍𑌨𑌾𑌨𑌂 𑌸𑌮𑌮𑍇𑌤𑌚𑍍𑌚𑌤𑍁𑌷𑍍𑌟𑌯𑌮𑍍' 𑌇𑌤𑌿 ॥

𑌮𑌹𑌾𑌨𑌦𑍀𑌪𑌰𑌿𑌗𑌣𑌨𑌮𑍍 ॥

𑌮𑌹𑌾𑌨𑌦𑍍𑌯𑌃 𑌪𑌰𑌿𑌗𑌣𑌿𑌤𑌾 𑌦𑍇𑌵𑌲𑍇𑌨—

'𑌗𑌙𑍍𑌗𑌾 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀 𑌯𑌮𑍁𑌨𑌾 𑌨𑌰𑍍𑌮𑌦𑌾 𑌵𑌿𑌪𑌾𑌶𑌾 𑌵𑌿𑌤𑌸𑍍𑌤𑌾 𑌕𑍌𑌶𑌿𑌕𑍀 𑌨𑌨𑍍𑌦𑌾 𑌵𑌿𑌰𑌜𑌾 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌭𑌾𑌗𑌾 𑌸𑌰𑌯𑍂𑌶𑍍𑌚𑌰𑌾𑌵𑌤𑍀 𑌸𑌿𑌨𑍍𑌧𑍁𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣𑌵𑍇𑌣𑍀 𑌶𑍋𑌣𑌾 𑌤𑌾𑌪𑌿𑌨𑍀 𑌪𑌾𑌷𑌾𑌣𑌕𑌾 𑌗𑍋𑌮𑌤𑍀 𑌗𑌣𑍍𑌡𑌕𑍀 𑌬𑌾𑌹𑍁𑌦𑌾 𑌪𑌮𑍍𑌪𑌾 𑌦𑍇𑌵𑌿𑌕𑌾 𑌕𑌾𑌵𑍇𑌰𑍀 𑌤𑌾𑌮𑍍𑌰𑌪𑌰𑍍𑌣𑍀 𑌚𑌰𑍍𑌮𑌣𑍍𑌵𑌤𑍀 𑌵𑍇𑌤𑍍𑌰𑌵𑌤𑍀 𑌗𑍋𑌦𑌾𑌵𑌰𑍀 𑌤𑍁𑌙𑍍𑌗𑌭𑌦𑍍𑌰𑌾 𑌸𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑌾𑌰𑍁𑌣𑌾 𑌚𑍇𑌤𑌿 𑌮𑌹𑌾𑌨𑌦𑍍𑌯𑌃 𑌪𑍁𑌣𑍍𑌯𑌤𑌮𑌾𑌃' 𑌇𑌤𑌿 ॥

𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌮𑌤𑍇—

'𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑍇 𑌤𑍁 𑌗𑌾𑌮𑍇𑌕𑌾𑌂 𑌦𑌦𑍍𑌯𑌾𑌤𑍍𑌸𑌾𑌨𑍍𑌤𑌪𑌨𑍇 𑌦𑍍𑌵𑌯𑌮𑍍 । 𑌪𑌰𑌾𑌕𑌤𑌪𑍍𑌤𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑍇𑌷𑍁 𑌤𑍍𑌰𑌿𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌰𑍍𑌗𑌾𑌵𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌾𑌃 ॥ 𑌅𑌷𑍍𑌟𑍌 𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑍇 𑌦𑍇𑌯𑌾𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌾𑌮𑍍𑌨𑌾𑌯𑌵𑌿𑌧𑍌 𑌸𑌦𑌾 । 𑌯𑌥𑌾 𑌵𑌿𑌤𑍍𑌤𑌾𑌨𑍁𑌸𑌾𑌰𑍇𑌣 𑌦𑌾𑌨𑌂 𑌦𑌦𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌯𑍇' 𑌇𑌤𑌿 ॥

---

**ஓர் ஸ்ம்ருதியில்:—** சாந்த்ராயணம், மூன்று ப்ராஜாபத்ய க்ருச்ரங்கள், முப்பதினாயிரம் காயத்ரீஜபம், மஹாநதியில் ஸ்நானம் இந்நான்கும் ஸமமாகும்.

### மஹாநதிகளின் எண்ணிக்கை.

**தேவலர்:—** கங்கை, ஸரஸ்வதீ, யமுனா, நர்மதா, விபாசா, விதஸ்தா, கௌசிகீ, நந்தா, விரஜா, சந்த்ரபாகா, ஸரயூ, சராவதீ, ஸிந்து, க்ருஷ்ணவேணீ, சோணா, தாபினீ, பாஷாணகா, கோமதீ, கண்டகீ, பாஹுதா, பம்பா, தேவிகா, காவேரீ, தாம்ரபர்ணீ, சர்மண்வதீ, வேத்ரவதீ, கோதாவரீ, துங்கபத்ரா, ஸசக்ஷு, அருணா இவைகள் அதிக புண்யமுள்ள மஹாநதிகளாம்.

**சதுர்விம்சதிமதத்தில்:—** ப்ரத்யாம்நாயம் செய்யும் விஷயத்தில் ப்ராஜாபத்ய க்ருச்ரத்தில் ஒரு பசுவைக் கொடுக்கவேண்டும். ஸாந்தபன க்ருச்ரத்தில் இரண்டு பசுவைக் கொடுக்கவேண்டும். பராக க்ருச்ரம் தப்தக்ருச்ரம் இவைகளில் மும்மூன்று பசுக்கள் விதிக்கப்பட்டுள்ளன. சாந்த்ராயண க்ருச்ரத்தில் எட்டுப் பசுக்கள் கொடுக்கப்படவேண்டும். சுத்தியின்பொருட்டு தனது தனத்துக்குத் தகுந்தபடி தானத்தைக் கொடுக்கவேண்டும். ஆனால்,

यत्तु स्मृत्यन्तरे चान्द्रायणस्य गोदानत्रयमभिहितम्—

'प्राजापत्ये तु गामेकामतिकृच्छ्रे द्वयं स्मृतम्। चान्द्रायणे पराके च तिस्रस्ता दक्षिणास्स्मृताः' इति, तदधनविषयम् ॥

गोदानाद्यशक्तौ गोभ्यस्तृणं दद्यात्। तथाह कण्वः—

'वेदाध्ययनं कार्यं प्राजापत्यमथापि वा। दद्याद्घासस्य साहस्रं गवां षष्टिविलक्षणः' इति ॥

चतुर्विंशतिमते—

'कृच्छ्रे पञ्चातिकृच्छ्रे त्रिगुणमहरहस्त्रिंशदेवं तृतीये चत्वारिंशत्तु तप्ते त्रिगुणनगुणिता विंशतिः स्यात् पराके। कृच्छ्रे सान्तापनाख्ये भवति षडधिका विंशतिश्चैव हीना आद्यं चान्द्रायणे स्यात्तदपि

---

ஓர் ஸ்ம்ருதியில் சாந்த்ராயணத்திற்கு மூன்று பசுக்களின் தானம்:– "ப்ராஜாபத்ய க்ருச்ரத்தில் ஒரு பசுவைக் கொடுக்கவும், அதிக்ருச்ரத்தில் இரண்டு பசுக்களின் தானம், சாந்த்ராயணம், பராகம் இவைகளில் மூன்று பசுக்கள் தக்ஷிணை" என்று விதிக்கப் பட்டிருப்பது, தனமில்லாதவனைப்பற்றியது.

கோதானம் முதலியதில் சக்தியில்லாதவன் பசுக்களுக்குப் புல்லைக்கொடுக்கவேண்டும். அதைச் சொல்லுகிறார்,

**கண்வர்:**— வேதாத்யயனம் ஒரு முறையாவது செய்ய வேண்டும். அல்லது ப்ராஜாபத்ய க்ருச்ரத்தை யனுஷ்டிக்கவேண்டும். அல்லது பன்னிரண்டாயிரம் முஷ்டி புற்களைப் பசுக்களுக்குக் கொடுக்கவேண்டும்.

**சதுர்விம்சதிமதத்தில்:**— ப்ராஜாபத்ய க்ருச்ரத்தில் ஒவ்வொரு நாளிலும் ஐந்து ப்ராம்ஹணர்களைப் புஜிப்பிக்கவும். அதிக்ருச்ரத்தில் பதினைந்து ப்ராம்ஹணர்களையும் மூன்றாவதாகிய க்ருச்ராதிக்ருச்ரத்தில் முப்பது ப்ராம்ஹணர்களையும், தப்த க்ருச்ரத்தில் நாற்பது ப்ராம்ஹணர்களையும், பராக க்ருச்ரத்தில் அறுபது ப்ராம்ஹணர்களையும், ஸாந்தபன க்ருச்ரத்தில் இருபத்தாறு ப்ராம்ஹணர்களை

कृच्छ्रवेदो होमजपैश्च भूयात्' इति ॥ सहस्राहुति सशक्तु सम्पश्यते ॥ तृतीयः = कृच्छ्रातिकृच्छ्रः ॥

अध्ययनादेः पुरुषविशेषेण व्यवस्था ।

अध्ययनजपादीनां पुरुषविशेषेण व्यवस्था तत्रैव दर्शिता—

'ये धर्मनिष्ठास्तपोनिष्ठाः कदाचित् पापमागताः । जपहोमादिकं तेभ्यो विशेषेण विधीयते ॥ नामधारकविप्रा ये धर्मविद्याविवर्जिताः । कृच्छ्रचान्द्रायणादीनि तेभ्यो दद्याद्विशेषतः ॥ धनिना दक्षिणा देया प्रायश्चित्तविहिता तु या । एवं नरविशेषेण प्रायश्चित्तानि दापयेत्' इति ॥

यत्र यावत्सङ्ख्याः प्राजापत्यान्यावर्तनीयानि भवन्ति, तत्र तावत्सङ्ख्या गोदानान्यावर்तनीयानि ॥

---

யும், சாந்த்ராயணத்தில் இருபத்து நான்கு ப்ராம்ஹணர்களையும், க்ருச்ரத்தையனுஷ்டிக்கச் சக்தியில்லாதவன் புஜிக்கச் செய்ய வேண்டும். ஒவ்வொரு நாளிலும் என்றதை எல்லாவற்றிலும் சேர்க்கவேண்டும்.

## வேதபாராயணம் முதலியதற்குப் புருஷர்களை அனுஸரித்து வ்யவஸ்தை.

வேதபாராயணம், காயத்ரீஜபம் முதலியதற்குப் புருஷபேதத்தால் வ்யவஸ்தை அங்கேயே (சதுர்விம்சதிமதத்தில்) சொல்லப்பட்டுள்ளது. தர்மநிஷ்டர்களாயும், தபோநிஷ்டர்களாயும் உள்ளவர்கள் ஒரு ஸமயத்தில் பாபத்தையடைந்தால் அவர்களுக்கு ஜபம் ஹோமம் முதலியவை விசேஷமாய் விதிக்கப்படுகின்றன. தர்மமில்லாதவரும், வித்யையில்லாதவரும் ப்ராம்ஹணன் என்ற பெயரை மட்டில் தரித்தவரான ப்ராம்ஹணர்கள் எவரோ, அவர்களுக்கு க்ருச்ரம் சாந்த்ராயணம் முதலியவைகளை அவச்யம் விதிக்க வேண்டும். பணம் உள்ளவன் சாஸ்த்ரத்தால் விதிக்கப்பட்ட தக்ஷிணையைக் கொடுக்கவேண்டும். இவ்விதம் மனுஷ்யர்களை அனுஸரித்து ப்ராயஸ்சித்தத்தை விதிக்கவேண்டும்.

எந்த ப்ராயஸ்சித்தத்தில் ப்ராஜாபத்ய க்ருச்ரங்கள் அடிக்கடி செய்யவேண்டியவைகளோ, அவ்விடத்தில் ப்ராஜாபத்ய க்ருச்ரத்

तथैव चतुर्विंशतिमते उक्तम्—

जन्मप्रभृति पापानि बहूनि विविधानि च । ब्रह्म-
हत्याधस्तात् षडब्दं ब्राह्मणहत्यायाष्टशतं कृच्छ्रमाचरेत् ॥ प्रत्या-
म्नाये गवां देयं साशीति धनिना शतम् । तदशक्तोऽष्टा-
दशलक्षाणि गायत्र्या वा जपेद्बुधः इति ॥

प्रायश्चित्तकाण्डः समाप्तः ॥

---

इति श्रीवाधूलवंशमुक्ताफलेन श्रीवैद्यनाथदीक्षितेन
विरचिते स्मृतिमुक्ताफलाख्ये धर्मशास्त्रे
प्रायश्चित्तनिरूपणं नाम षष्ठः परिच्छेदः ॥

---

தின் கணக்கின்படி கோதானம் முதலியவைகள் ஆவர்த்தி செய்யப் பட வேண்டும்.

அதுவும் சொல்லப்பட்டுள்ளது, **சதுர்விம்சதிமதத்தில்:—** பிறந்ததுமுதல் பலவிதமான பாபங்களைச் செய்தால் ப்ரம்ஹ ஹத்திக்குக் கீழ்ப்பட்டுள்ள அவைகளுக்கு 'ஆறு அப்தம்' நூற்றெண்பது ப்ராஜாபத்ய க்ருச்ரங்களை யனுஷ்டிக்க வேண்டும். ப்ரத்யாம்நாயம் செய்யும் விஷயத்தில், பணமுள்ளவன் நூற்றெண்பது பசுக்களைத் தானம் செய்யவேண்டும். அல்லது, அறிந்தவன் பதினெட்டுலக்ஷம் முறை காயத்ரீ ஜபத்தைச் செய்யவேண்டும்.

ப்ராயஶ்சித்த காண்டம் முற்றிற்று.

---

ஸ்ரீ வாதூல வம்சத்திற்கு ரத்னமாகிய

**ஸ்ரீ வைத்யநாத தீக்ஷிதர் அவர்களால் இயற்றப்பட்ட**

ஸ்ம்ருதிமுக்தாபலம் எனும் தர்ம சாஸ்த்ரத்தில் ப்ராயஶ்சித்த நிரூபணம் என்கிற ஆறுவது காண்டம் முற்றிற்று.